பெரியார் பயிற்சி பட்டறை

மணிவிழுந்தான் வடக்கு, ஆத்தூர் வட்டம்,

சேலம் மாவட்டம்–636 112.

இந்திய வரலாறு



தமிழ்நாடு அரசு புதிய பாடத்திட்டத்திலிருந்து 6–ஆம் வகுப்பு முதல் 12 –ஆம் வகுப்பு வரையில் உள்ள வரலாற்று பாடங்கள் அரசுத் தேர்வுகளுக்கான பாடத்திட்டத்தின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது.

"சலிப்பும், ஓய்வும்,
தற்கொலைக்கு சமம்".
–பெரியார்

ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு–II

நேர்முகத்தேர்வு பதவிகள் மற்றும் நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்

பொது அறிவு (முதல் நிலை தேர்வு)

1. **இந்தியாவின் வரலாறும் பண்பாடும்**
   - சிந்துவெளி நாகரிகம் – குப்தர்கள் – தில்லி சுல்தான்கள் – முகலாயர்கள் மற்றும் பாமினி அரசுகளிகன் காலம் – தென்னிந்திய வரலாறு.
   - இந்திய சமூகப் பண்பாட்டு வரலாற்றில் மாற்றங்களும் தொடர்ச்சியும்.
   - இந்தியப் பண்பாட்டின் இயல்புகள் , வேற்றுமையில் ஒற்றுமை – இனம், மொழி, வழக்காறு
   - இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு, சமூக நல்லிணக்கம்

2. **இந்திய தேசிய இயக்கம்**
   - தேசிய மறுமலர்ச்சி – ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான தொடக்க கால எழுச்சிகள் – இந்திய தேசிய காங்கிரஸ்– தலைவர்கள் உருவாதல்– பி.ஆர். அப்பேத்கர், பகத்சிங், வ.உ. சிதம்பரனார்,ஜவஹர்லால் நேரு,காமராசர்,மகாத்மா காந்தி, மௌலான அபுல்கலாம் ஆசாத்,தந்தை பெரியார், இராஜாஜி, சுபாஷ் சந்திர போஸ் மற்றும் பலர்
   - விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு நிலைகள் : அகிம்சை முறையின் வளர்ச்சி மற்றும் புரட்சிகர இயக்கங்கள்
   - வகுப்புவாதம் மற்றும் தேசப்பிரிவினை.

3. **தமிழ்நாட்டின் வரலாறு, மரபு, பண்பாடு மற்றும் சமூக–அரசியல் இயக்கங்கள்**
   - தமிழ் சமுதாய வரலாறு, அது தொடர்பான தொல்லியல் கண்டுபிடிப்புகள், சங்க காலம் முதல் இக்காலம் வரையிலான தமிழ் இலக்கிய வரலாறு.
   - திருக்குறள்
     - மதச் சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம்
     - அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை
     - மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம்
     - திருக்குறளும் மாறாத விழுமியங்களும் – சமத்துவம் – மனித நேயம் முதலானவை
     - சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு
     - திருக்குறளில் தத்துவக் கோட்பாடுகள்
   - விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு – ஆங்கிலேயருக்கு எதிரான தொடக்க கால கிளர்ச்சிகள் – விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு
   - பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் சமூக – அரசியல் இயக்கங்களின் பரிணாம வளர்ச்சி – நீதிக்கட்சி, பகுத்தறிவு வாதத்தின் வளர்ச்சி – சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்கம் மற்றும் இவ்வியக்கங்களுக்கான அடிப்படை கொள்ளைகள், தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணாவின் பங்களிப்புகள்.

" Education is the most powerful weapon which you can use to change the world"

_Nelson mandela

சிந்து சமவெளி நாகரிகம்

- இந்தியாவின் முதற்கட்ட நகரமய மாக்கத்தின் சின்னம் சிந்து நாகரிகமாகும். இந்தியாவின் வடமேற்குப்பகுதியிலும் பாகிஸ்தானிலும் பொ.ஆ.மு.3000 கால அளவில் தோன்றிய நாகரிகங்களும் பண்பாடுகளும் மொத்தமாக சிந்து நாகரிகம் எனப்படும். இந்நாகரிகம் அடையாளம் காணப்பட்ட இடம் ஹரப்பா என்பதால் **ஹரப்பா நாகரிகம்** எனவும் அழைக்கப்படுகிறது. ஹரப்பா நாகரிகம் பல்வேறு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	படிநிலை	ஆண்டு (பொ.ஆ.மு)
1	தொடக்க கால ஹரப்பா	3000–2600
2	முதிர்ச்சி அடைந்த ஹரப்பா	2600–1900
3	பிற்கால ஹரப்பா	1900–1700

- ஹரப்பாவுக்கு முதன்முதலில்1826 இல் வருகை தந்தவர் சார்லஸ் மேசன் எனும் இங்கிலாந்து நாட்டவர். 1831 இல் அம்ரி என்னும் ஹரப்பா பன்பாட்டோடு தொடர்புடைய இடத்திற்கு அலெக்ஸாண்டர் பர்ன்ஸ் வருகை தந்தார். லாகூரிலிருந்து முல்தானுக்கு இரயில்பாதை அமைப்பதற்காக ஹரப்பா அழிக்கப்பட்டது. இப்பகுதியிலிருந்து ஒரு முத்திரை இந்தியத் தொல்லியல்துறை அளவையரான அலெஸ்சான்டருக்கு கிடைத்தது. 1853 இலும் 1856இலும் 1857 இலும் அவர் ஹரப்பாவை பார்வையிட்டார்.
- 1861 ஆம் ஆண்டு அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம் என்ற நிலஅளவையாளர் உதவியுடன் இந்திய தொல்லியல் கழகம் நிறுவப்பட்டது. இதன் தலைமையகம் புது தில்லியில் உள்ளது.
- ஹரப்பாவின் முக்கியத்துவத்தையும் அதன் நாகரிகத்தையும் உணர்ந்து அங்கு ஆய்வு நடத்தக் காரணம்மாக இருந்தவர் சர் ஜான் மார்ஷல் ஆவார். இவர் இந்திய தொல்லியல் துறையின் இயக்குனராக பொறுப்பேற்ற நிகழ்வு இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனை எனலாம்.
- பிற்காலத்தில் 1940களில் ஆர்.இ.எம் வீலர் ஹரப்பாவில் அகழாய்வுகள் நடத்தினார். இந்தியாவின் பிரிவினைக்கு பிறகு ஹரப்பா நாகரிகத்தின் பகுதியில் பெரும்பாலான இடங்கள் பாகிஸ்தானுக்கு உரியதாகிவிட்டன. சிந்து சமவெளி நாகரிகத்தின் மொத்த பரபப்ளவு 1.5 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளன.

வ. எண்	பகுதி	எல்லை
1	மேற்கு	பாகிஸ்தான்–ஈரான்(சட்காஜெண்டர் குடியிருப்புகள்)
2	வடக்கு	ஷார்ட்டுகை (ஆப்கானிஸ்தான்)
3	கிழக்கு	ஆலம்கிர்புர் (உத்திரபிரதேசம்)
4	தெற்கில்	தைமாபாத் (மகாராஷ்டிரம்)

- இதன் மையப்பகுதிகள் பாகிஸ்தானிலும் இந்தியாவில் குஜராத், ராஜஸ்தான், ஹரியானா ஆகிய மாநிலங்களிலும் உள்ளன.

வ. எண்	பகுதி	மாநிலம்
1	ஹரப்பா	பஞ்சாப் (பாகிஸ்தான்)
2	மொகஞ்சதாரோ	சிந்து (பாகிஸ்தான்)

3	டோலாவிரா சர்கோட்டா லோத்தல்	குஜராத்
4	பனாவலி ராக்கிகார்ஹி	ஹரியானா
5	காலிபங்கன்	ராஜஸ்தான்

- அரண்களால் பாதுகாக்கப்படும் தன்மை நன்கு திட்டமிடப்பட்ட தெருக்கள், சந்துகள் , கழிவுநீர் வசதி ஆகியவை ஹரப்பா நகரங்களின் குறிப்பிடத்தக்க கூறுகள். தகுந்த குடிமை கதிகாரிகளின் கீழ் இத்தகைய திட்டமிடல் நிகழ்ந்திருக்கக்கூடும். உறரப்பா மக்கள் கட்டுமானத்துக்குச் சுட்ட, சுடாத செங்கற்களையும் கற்களையும் பயன்படுத்தினர். நகரங்கள் சட்டக வடிமைப்பைக் கொண்டிருந்தன. கழிவுநீர் வடிகால்கைள் திட்டவட்டமான ஒழுங்குடன் கட்டப்பட்டன. வீடுகள் சேற்று மண்ணாலபான செங்கற்களாலும் கழிவுநீர் வடிகால்கள் சுட்ட செங்கற்களாலும் கட்டப்பட்டன. வீடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட தளங்களை கொண்டிருந்தன.
- மொகஞ்சதாரோ ஓர் உயர்ந்த மேடை மீது நன்கு திட்டமிட்டுக் கட்டப்ப்பட்ட நகரம். அது கோட்டைப்பகுதியாகவும் தாழ்வான நகராமகவும் இரு வேறுபட்ட பகுதிகளைக் கொண்டிருந்தது. வீடுகளில் சுட்ட செங்கற்களால் தளம் அமைக்கப்ட்ட குளியலறையும் சரியான கழிவுநீர் வடிகாலும் இருந்தன. மேல்களம் இருந்ததை உணர்த்தும்வகையில் சில வீடுகள் படிக்கட்டுகளைக் கொண்டுள்ளன. வீடுகளில் பல அறைகள் இருந்தன. பல வீடுகளில் சுற்றிலும் அறைகளுடன் கூடிய முற்றம் அமைந்திருந்தது.
- மொகஞ்சதாரோவில் உள்ள ஒரு கட்டிடம் சேமிப்புக்கிடங்காக அடையாளம் காணப்படுகிறது. பெரும்குளம் என்பது முற்றத்துடன் கூடிய ஒரு பெரிய குளமாகும். குளத்தின் நான்கு பக்கங்களிலும் உள்ள நடைபாதை வடக்குப்பக்கத்திலும் தெற்குப்பக்கத்திலும் படிக்கட்டுகளுடன் அமைந்துள்ளது. நடைபாதையின் அருகே பல அறைகளும் உண்டு. சில கட்டுமான அமைப்புகள் தானியங்கிடங்குகளாக அடையாளம் காணப்படுகிறது. சுவர்கள் ஜிப்சம் செறிந்த சுண்ணச்சாந்தால் பூசப்பட்டு, நீர் புகாதபடி இருக்கின்றன. அக்கட்டுமானத்தில் கழிவுநீர் வடிகால் வசதி இருந்தது. பெருங்குளம் சடங்குகளுடன் தொடர்புடைய நீராடல் நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

வாழ்வாதாரமும் பொருளாதார உற்பத்தியும்

- ஹரப்பா மக்கள் நிலையாக வாழ்வதற்கு வேளாண்மை முக்கிய ஆதாரமாக விளங்கியது. கோதுமை, பார்லி, அவரை வகைகள், கொண்டைக்கடலை, எள், வெவ்வேறு தினை வகைகள் உள்ளிட்ட பல்வேறு பயிர்களைப் பயிரிட்டார்கள். வேளாண்மையில் கிடைத்த உபரி வருவாய் முக்கியமான பல செயல்பாடுகளுக்கு ஆதாரமாக விளங்கியது. ஹரப்பா மக்கள் இரட்டைப் பயிரிடல் முறையைப் பின்பற்றினார்கள்.
- ஹரப்பா மக்கள் உழவுக்குக் கலப்பையைப் பயன்படுத்தினார்கள். நிலத்தை உழுது, விதைக்கும் வழக்கத்தை அவர்கள் கொண்டிருந்திருக்கலாம். **உழுத நிலங்களை** காலிபங்கனில் காண முடிகிறது. அவர்கள் பாசனத்துக்குக் கால்வாய்களையும் கிணறுகளையும் பயன்படுத்தினார்கள்.

தொல்தாவரவியலாளர்கள் (Palaeobotanists) பழமையான வேளாண்மையையும் மனிதருக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான உறவையும் குறித்து ஆய்வு செய்கிறார்கள்

விலங்குகளைப் பழக்கப்படுத்தல்

- ஹரப்பா மக்களுக்க மேய்ச்சலும் ஒரு முக்கியமான தொழிலாக இருந்தது. செம்மறியாடு, வெள்ளாடு, கோழி உள்ளிட்ட பறவைகளை வளர்த்தார்கள். எருமை, பன்றி, யானை போன்ற விலங்குகள் குறித்த அறிவும் அவர்களுக்கு இருந்தது. ஆனால் ஹரப்பா பண்பாட்டில் குதிரை இல்லை. ஹரப்பாவில் மாடுகள் **செபு** எனப்பட்டன. பெரிய உடலமைப்பைக் கொண்ட இவ்வகை மாடுகள் அவர்களின் பல முத்திரைகளில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

- ஹரப்பா மக்களின் உணவில் மீன், பறவை இறைச்சி ஆகியவையும் இருந்தன. காட்டுப் பன்றி, மான், முதலை ஆகியவற்றுக்கான சான்றுகளும் ஹரப்பாவில் கிடைத்துள்ளன.

கைவினைத் தயாரிப்பு

- ஹரப்பா மக்களுக்கு மணிகள் மற்றும் அணிகலன் செய்தல், சங்கு வளையல் செய்தல், உலோக வேலைகள் ஆகியவை கைவினைச் செயல்பாடுகளாக இருந்தன. செம்பு, வெண்கலம், தங்கம் ஆகிய உலோகங்களிலும் சங்கு, பீங்கான், சுடுமண், ஆகியவற்றிலும் அணிகலன்களைச் செய்தார்கள். இவை மெசபடோமியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

வ. எண்	ஆபரணம்	பெயர்
1	மணி	கார்னிலியன்
2	படிகக்கல்	ஜாஸ்பர், கிரிஸ்டல்
3	ஸ்டீடைட்	நுரைக்கல்

- ஹரப்பா நாகரிகப் பகுதிகள் சில குறிப்பிட்ட கைவினைப்பொருள் தயாரிப்பில் தேர்ச்சி பெற்றதாக உள்ளன.

வ. எண்	பொருள்	நகரம்
1	சங்கு	நாகேஷ்வர், பாலகோட்
2	வைடூரியம்	ஷார்டுகை
3	கார்னிலியன் (மணி)	லோத்தல்
4	ஸ்டீட்டைட் (நுரைக்கல்)	தெற்கு ராஜஸ்தான்
5	செம்பு	ராஜஸ்தான்

- ஹரப்பா மக்கள் பயன்படுத்திய மண்பாண்டங்கள் அடர் சிவப்பும் கறுப்பும் கலந்த வண்ணம் பூசப்பட்டிருந்தன. அவற்றில் வரையப்பட்ட ஓவியங்களில் இலைகள்,மீன் செதில், ஒன்றையொன்று வெட்டிக்கொள்ளும் வட்டங்கள், கோணல்மாணலான கோடுகள், பக்கவாட்டில் உள்ள பட்டைகள், வடிவிலான கூறுகள், தாவரங்கள், விலங்குகள் ஆகியவை பதிவு செய்யப்பட்டுள்ளன. ஹரப்பா நாகரிகத்தைச் சேர்ந்த மட்பாண்டங்கள் நன்கு சுடப்பட்டதாகவும் நுட்பமான வேலைப்பாடு கொண்டதாகவும் இருக்கின்றன.

உலேகங்களும் கருவிகளும் ஆயுதங்களும்

- ஹரப்பா நாகரிகம் **வெண்கலம் (செம்பு)** நாகரிகமாகும். செம்பு வெண்கல கருவிகள் செய்ய அறிந்தவர்கள். வேளாண்மைக்கும் கைவினைப்பொருள்கள் உற்பத்திக்கும் பலவகைப்பட்ட கருவிகள் அவர்களுக்கு தேவைப்பட்டன. ஒருவகைப் படிகக்கல்லில் செய்யுப்பட்ட கத்திகளும் செம்புப்பொருள்களும் எலும்பு மற்றும் தந்தத்தில் ஆன கருவிகளும் பயன்படுத்தப்பட்டன. கூர்முனைக் கருவிகள், உளிகள், ஊசிகள்,தராசுத் தட்டுகள், கண்ணாடிகள், அஞ்சனக் கோல்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டன. ரோரிசெட் எனப்படும் படிகக்கல்லில் செய்யப்பட்ட கத்திகளை ஹரப்பா மக்கள் பயன்படுத்தினார்கள். அம்பி, ஈட்டி, கோடாரி, மழுங்கள் முனைக் கோடாரி ஆகியவை அவர்களின் ஆயுதங்களாக இருந்தன. ஹரப்பா மக்கள் **இரும்பை** அறிந்திருக்கவில்லை.

ரோரிசெட்: இந்தப் படிவுப்பாறை பாகிஸ்தானில் உள்ள ரோரி பகுதிகளில் காணப்படுகிறது. ஹரப்பா மக்கள் கத்திகளும் பிற கருவிகளும் செய்வதற்கு இது பயன்பட்டது.

- ஹரப்பா மக்கள் துணியாலான ஆடைகளை அணிந்தார்கள். கல்லாலும் உலோகங்களாலுமான அணிகலன்களைப் பயன்படுத்தினார்கள். அவர்களுக்குப் பருத்தி, பட்டு ஆகியவை குறித்த அறிவு இருந்தது. ஒரு சுடுமண் பொம்மையில் மதகுரு போல் தோற்றமளிக்கும் உருவம் கொண்ட மேலாடையை அணிந்துள்ளதைக் காண்கிறோம். மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட நடனமாடும் பெண் சிலையின், முழங்கையின் மேல்பகுதி வரை வளையல்கள் காணப்படுகின்றன.
- சுமேரிய நாகரிகம் நிலவிய ஓமன், பஹ்ரைன், ஈராக்,ஈரான் ஆகிய இடங்களில் ஹரப்பாவைச் சேர்ந்த முத்திரைகளும் பொருள்களும் கிடைத்துள்ளன. க்யூனிபார்ம் கல்வெட்டுக் குறிப்புகள் மெசபடோமியாவுக்கு ஹரப்பாவுக்கு இடையேயான வணிகத் தொடர்புகளைக் குறிப்பிடுகின்றன. அவற்றில் காணப்படும் **மெலுகா** என்னும் சொல் சிந்து பகுதியைக் குறிக்கிறது. ஹரப்பாவில் செய்யப்பட்ட ஜாடி ஓமனில் கண்டெகப்பட்டுள்ளது. ஹரப்பாவைச் சேர்ந்த முத்திரைகள்,எடைக்கற்கள், தாயக்கட்டைகள், மணிகள் மெசபடோமியாவில் கண்டெடுக்கப்பட்டன.

எடைக்கற்களும் அளவீடுகளும்

- ஹரப்பாவில் சரியான எடைக்கற்களும் அளவீடுகளும் பயன்படுத்தப்பட்டன. ஹரப்பா நாகரிகப்பகுதிகளிலிருந்து படிகக்கல்லாலான கனசதுர வடிவ எடைக்கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எடைக்கற்கள் இருமமுறையை உணர்த்துகின்றன. எடையின் விகிதம் இருமடங்காகும் உணர்த்துகின்றன. 1:2:4:8:16:32:16 –இன் விகிதம் கொண்ட சிறிய எடை அளவீடு இன்றைய அளவீட்டில் 13:63 கிராம் கொள்தக்கதாக உள்ளது. ஹரப்பா மக்கள் இன்றைய அளவீட்டில் ஒரு இஞ்ச் 1.75 செ.மீ ஆகக் கொள்ளும் விதத்தில் அளவுகோலையும் பயன்படுத்தினர்.
- **முத்திரைகள்**: ஸ்டீட்டைட், செம்பு, சுடுமண், தந்தம் போன்றவற்றலான முத்திரைகள் ஹரப்பா நாகரிகப் பகுதிகளில் அதிகளவில் கண்டுக்கப்பட்டுள்ளன. ஹரப்பாவில் 5000 க்கும் மேற்பட்ட எழுத்துத் தொடர்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இதில் மிக நீளமானதாக கருதப்படும் எழுத்துத் தொடர் 26 குறியீடுகளைக் கொண்டுள்ளது. ஆனால் ஹராப்பா நாகரிக் எழுத்து முறைகளை இதுவரையில் விளங்கிக்கொள்ள முடியவில்லை
- சிந்து சமவெளி மக்கள் ஆபரணம் செய்ய சிவப்ப நிற கற்கலை பயன்படுத்தினர்.
- **கலையும் பொழுதுபோக்கும்:** ஸ்டீட்டைட் கல்லில் அமைந்த **மத குரு,** செம்பிலான **நடனமாடும் பெண்** (இவை இரண்டும் மொகஞ்சதோரவில் கிடைக்கப்பெற்றுள்ளன.) பொம்மை வண்டிகள், கிலுகிலுப்பைகள், சக்கரங்கள், பம்பரங்கள், சதுரங்க விளையாட்டில் பயன்படுத்தப்படுவதைப் போன்ற காய்கள், கட்டங்கள் வரையப்பட்ட பலகைகள் ஆகியவை ஹரப்பா மக்களின் பொழுதுபோக்கு விளையாட்டுகளுக்கு சான்றாகும்.
- **நம்பிக்கைகள்**: சிந்து சமவெளி மக்கள் இயற்கையை வழிபட்டார்கள். அரச மரங்கள் வழிபாட்டிற்குரியதாக இருந்திருக்காலம். சில சுடுமண் உருவங்கள் தாய்த்தெங்கவத்தைப் போல் உள்ளன. காலிபங்கனில் சில வேள்வி பீடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஹரப்பா மக்கள் இறந்தோரைப் புதைத்தனர். புதைப்பதற்கான நடைமுறைகள் விரிவாக இருந்தன. ஹரப்பா புதைக்குழிகளில் மட்பாண்டங்கள், அணிலன்கள், தாமிரக்கண்ணாடி மணிகள் ஆகியவை கிடைத்துள்ளன. ஹரப்பா மக்கள் நாகரிக வீழ்ச்சிக்கு பின் கிழக்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் இடம்பெயர்ந்ததாக தொல்லியல் சான்றுகள் தெரிவிக்கின்றன.
- **சிந்து நாகரிகமும் தமிழ் நாகரிகமும்:** பழந்தமிழகத்தை சேர்ந்த ஊர்களான அரிக்கமேடு,கீழடி,உறையூர் போன்றவை இந்தியாவில் நடந்த இரண்டாம் நகரமயமாக்கத்தின் பகுதிகள் ஆகும். இந்த ஊர்கள் சிந்து நகரங்களிலிருந்து மிகவும் வேறுபட்டதாக உள்ளன.
- **வீழ்ச்சி**: ஏறத்தாழ பொ.ஆ.மு.1900 இல் சிந்து சமவெளி நாகரிகம் வீழ்ச்சி அடைந்தது. காலநிலை மாற்றம், மெசபடோமியாவுடான வணிகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, தொடர்வறட்சியின் காரணமாக ஆறுகள் மற்றும் நீர் நிலைகள் காய்ந்து வற்றிப்போதல் ஆகியவை வீழ்ச்சிக்கான காரணங்களாக வரலாற்றாசிரியர்களால் கணிக்கப்படுகின்றன.

குப்தர்கள்

- மௌரியப் பேரரசிற்குப் பின்னர், பல சிறு அரசுகள் தோன்றியவாறும் வீழ்ந்தவாறும் இருந்தன. குப்தர் அரசுதான் ஒரு பெரும் சக்தியாக உருவாகி, துணைக்கண்டத்தின் பெரிய பகுதியை அரசியல்ரீதியாக ஒன்றிணைத்தது. மத்தியில் ஒரு வலுவான அரசாக வலுப்பெற்றதால், பல அரசுகள் அதன் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன. இக்காலகட்டத்தில் சமஸ்கிருதத்தில் பல பெரிய படைப்புகள் தோன்றின. நுண்கலை, சிற்பம், கட்டிடக்கலை ஆகியவற்றில் பண்பாட்டு முதிர்ச்சி காணப்பட்டது. **குப்தர்காலம் பொற்காலம்** இந்தியா வரலாற்றில் பொற்காலம் என வர்ணிக்கப்படுகிறது.
- **இலக்கியச் சான்றுகள்:** நாரதர், விஷ்னு, பிருகஸ்பதி, காத்யாயனர் ஸ்மிருதிகள். அரசருக்குக் கூறுவது போன்று எழுதப்பட்டுள்ள காமந்தகாரின் **நீதிசாரம்** என்ற தரும சாத்திரம் (பொ.ஆ.400). விசாகதத்தரின் தேவிசந்திரகுப்தம்,முத்ராராட்சகம் ஆகியவை குப்தரின் எழுச்சி குறித்த விவரங்களை அளிக்கின்றன. காளிதாசரின் படைப்புகள், இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த சீனப் பயணி பாஹியான் குறிப்புகள்.
- **கல்வெட்டுச் சான்றுகள்:** மெஹ்ரோலி இரும்புத் தூண் கல்வெட்டு– முதலாம் சந்திரகுப்தரின் சாதனைகளை குறிக்கிறது. **அலகபாத்தூண் கல்வெட்டு:** சமுத்திரகுப்தரின் ஆட்சி அவரது ஆளுமை, சாதனைகள் ஆகியவற்றை இது விளக்குகிறது. இதனைப் பொறித்தவர் ஹரிசேனர். இது 33 வரிகளில் நாகரி வரிவடிவத்தில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளது.**நாணய ஆதாரங்கள்:** குப்த அரசர்கள் வெளியிட்ட நாணயங்களில் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த நாணயங்கள் குப்த அரசர்களின் பட்டங்கள் குறித்தும் அவர்கள் நடத்திய சடங்குகள் குறித்தும் தெரிவிக்கின்றன.
- **தோற்றம்:** குப்த வம்சத்தின் மூன்றாவது ஆட்சியாளரான முதலாம் சந்திர குப்தர் குமாரதேவி என்ற லிச்சாவி இளவரசியை மணந்தார். லிச்சாவி என்பது வடக்கு பீகாரில் இருந்த பழமையான கணசங்கமாகும். அது கங்கைக்கும் நேபாள தெராய்க்கும் இடைப்பட்ட பகுதியாகும். சந்திர குப்தரின் ஒப்பற்ற புதல்வரான் சமுத்திரகுப்தரின் பிரயாகை (அலகாபாத்) தூண் கல்வெட்டின்படி, அவர் பிரயாகைக்கு மேற்கே மதுரா வரையுள்ள செழிப்பான நிலங்கள் முழுவதையும் கைப்பற்றினார். கலிங்கம் வழியாகத் தெற்கே, பல்லவர்களின் தலைநகரமான காஞ்சிபுரம் வரை வெற்றிகரமான படையெடுப்பை நடத்தினார். மகதம், அலகாபாத், அவுத் ஆகியவற்றை குப்தர்களின் பகுதிகளாகப் புராணங்கள் குறிப்பிடுகின்றன.
- குப்த வம்சத்தின் முதல் அரசர் ஸ்ரீகுப்தர் (பொ.ஆ. 240–280). இவரைத் தொடர்ந்து இவரது புதல்வர் கடோத்கஜர் (பொ.ஆ.280–319) ஆட்சிக்கு வந்தார். கல்வெட்டுகளில் ஸ்ரீகுப்தர், கடோத்கஜர் ஆகிய இருவரும் மகாராஜா என்று குறிக்கப்படுகிறார்கள். கடோத்கஜரின் புதல்வரான முதலாம் சந்திரகுப்தர் பொ.ஆ. 319 முதல் 335 வரை ஆட்சிபுரிந்தார். இவர் குப்த பேரரசின் முதல் பேரரராகக் கருதப்படுகிறார். சந்திரப்குப்தர் **மகாராஜா–ஆதிராஜா** என்ற பட்டத்தை ஏற்றார்.

சமுத்திரகுப்தர்

- சமுத்திரகுப்தர் (பொ.ஆ 335 முதல் 375 (380)) : பொ.ஆ. 335 இல் முதலாம் சந்திரகுப்தர் தனது புதல்வர் சமுத்திரகுப்தரைத் தனது வாரிசாக நியமித்தார். இவரது வெற்றிகளைப் பற்றி அசோகரின் தூண் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளது. இவரது படையெடுப்பு கிழக்குக் கடற்கரையோரம் காஞ்சிபுரம் வரை நீண்டதாகத் தெரிகிறது. கங்கை சமவெளியின் மேற்குப் பகுதியில் ஒன்பது அரசர்களைப் படை பலத்தால் வென்றார்.
- காட்டு ராஜாக்களும் (மத்திய இந்தியா மற்றும் தக்காணத்தின் பழங்குடியினத் தலைவர்கள்), அஸ்ஸாம், வங்கம் போன்ற கிழக்குப் பகுதிகளின் அரசர்களும், நேபாளம், பஞ்சாப் போன்ற பகுதிகளின் அரசர்களும், வங்கம் போன்ற பகுதிகளில் சிற்றரசர்களும் கப்பம் கட்டக் கட்டாயப்படுத்தப்பட்டனர். மாளவர்கள், யுதேய்ர்கள் உள்ளிட்ட இராஜஸ்தான் பகுதியின் ஒன்பது குடியரசுகள் குப்தர்களின் ஏகாதிபத்தியத்தை ஏற்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டன.
- தென்னிந்தியாவைச் சேர்ந்த 12 அரசர்களை தனக்குத் கட்டுப்பட்ட சிற்றரசர்களாக்கி அவர்களைக் கப்பம் கட்டச் செய்தார்.
- இதோடு தெய்வபுத்திர சகானுசாகி (ஒரு குஷாண பட்டம்), சாகர் அரசு, இலங்கை அரச போன்ற வெளிநாட்டு அரசுகளும் கப்பம் கட்டியதாக அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. *வரலாற்றறிஞர்கள் சமுத்திரகுப்தரை **இந்திய நெப்போலியன்*** என அழைக்கின்றனர். மேற்கு இந்தியாவில் சாக அரசர்களைத் தோற்கடிக்க முடியவில்லை என்பதால், நேரடி அதிகாரம் கங்கைச் சமவெளி வரையிலும்தான் இருந்துள்ளது. இராஜஸ்தானின் பழங்குடியினர் கப்பம் கட்டினர். ஆனால் பஞ்சாப் சமுத்திரகுப்தரின் அதிகாரத்திற்கு வெளியே இருந்தது. சமுத்திரகுப்தரின் படையெடுப்பு

இப்பகுதியின் பழங்குடி குடியரசுகள் அதிகாரத்தைக் குறைத்ததால், இங்கு ஹீணர்களின் ஊடுருவல் அடிக்கடி நிகழ்ந்தது,

- குஷாணர்களுடனாக உறவு குறித்து உறுதியாகத் தெரியவில்லை. ஆனால் இலங்கையைப் பொருத்துவரை இலங்கை அரசர் மேகவர்மன் பரிசுகளை அனுப்பி, கயாவில் ஒரு பௌத்த மடம் ஆட்சிக்கால நாற்பதாண்டுகள் நீடித்ததால், இது போன்ற படையெடுப்புகளைத் திட்டமிட்டு நடத்த அவருக்குக்ப போதுமான கால அவகாசம் இருந்தது. தனது ரானுவ வெற்றிகளைப் பரிகடனம் செய்ய அவர் அசுவமேத யாகம் நடத்தினார்.
- சமுத்திரகுப்தர் அறிஞர்களையும், ஹரிசேனர் போன்ற கவிஞர்களையும் ஆதரித்தார். இதன் மூலம் சமஸ்கிருத இலக்கியத்தை வளர்ப்பதில் பங்காற்றினார். வைணவத்தை தீவிரமாக பின்பற்றினார். ஆனாலும் வசுபந்து என்ற மாபெரும் பௌத்த அறிஞரையும் ஆதரித்தார்.
- கவிதை, இசைப் பிரியரான இவருக்குக் **கவிராஜா** என்ற பட்டம் வழங்கப்பட்டது. நாணயங்கள் முறையை அறிமுகப்படுத்தியதோடு குப்தர் நாணயங்களில் அவர் வீணை வாசிப்பது போன்ற சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.
- இலங்கையைச் சேர்ந்த ஸ்ரீ மேவர்மன் எனும் பௌத்த அரசன் சமுத்திரகுப்தரின் சமகாலத்தவராவர்.
- காளிதாசர்,அமரசிம்மர்,விசாகதத்தர், தன்வந்திரி போன்ற நவரத்தினங்கள் இவரது அவையை அலங்கரித்ததாகப் பரவலாக நம்பப்படுகிறது.

இரண்டாம் சந்திரகுப்தர்

- மிகத் திறமையான அரசர். இவரது ஆட்சிகாலம் பொ.ஆ 375 முதல் 415 வரை 40 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார். தனது சகோததரரான ராமகுப்தருடன் (370–375) வாரிசுரிமைக்குப் போராடி ஆட்சிக்கு வந்தார். **விக்ரமாதித்யன்** என அழைக்கப்பட்டார்.
- இவரது வேறு பெயர்களாக நாணயங்களில் கீழ்கண்டவாறு குறிக்கப்பட்டுள்ளது.
- **பாடாலிபுத்திரத்தை** தலைநகரமாக கொண்ட இரண்டாம் சந்திரகுப்தர் தனது அரசின் எல்லைகளை போர்கள் மற்றும் திருமண உறவுகள் மூலம் விரிவுபடுத்தினார். ரானுவ முக்கியத்துவம் வாய்ந்த தக்காணப் பகுதியை ஆண்ட வாகடக இளவரசருக்குத் தன் மகள் பிரபாவதியைத் திருமணம் செய்து கொடுத்தார். மேற்கு மாளவம், குஜராத் ஆகிய பகுதிகளை 400 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த சாக அரசர்களை இரண்டாம் சந்திரகுப்தர் வென்றார்.
- இரண்டாம் சந்திரகுப்தர் ஆட்சி காலத்தில் **பாஹியான்** என்ற சீன பௌத்த துறவி குப்த பேரரசின் வளம் குறித்து பதிவு செய்திருக்கிறார்.

அரசர்கள்	சிறப்பு பெயர்கள்
இரண்டாம் சந்திரகுப்தர்	❖ விக்ரமாதித்யன் ❖ விக்ரமன் ❖ தேவகுப்தன் ❖ தேவராஜன் ❖ சிம்ஹவிக்ரமன் ❖ சகாரி ❖ நரேந்திர சிம்மர் ❖ தேவஸ்ரீ
முதலாம் குமாரகுப்தர்	❖ சக்ராதித்யர்
சமுத்திரகுப்தர்	❖ இந்தியாவின் நெப்போலியன் ❖ புருஷா ❖ கவிராஜா
முதலாம் சந்திரகுப்தர்	❖ மகாராஜா ❖ ஆதிராஜா

- கலை, இலக்கியம், அறிவியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கிய **நவரத்தினங்கள்** எனப்பட்ட ஒன்பது அறிஞர்கள் இவரது அவையில் இருந்தனர். இவர்களில் மாபெரும் சமஸ்கிருத கவிஞர் காளிதாசர், சமஸ்கிருதப் புலவர் ஹரிசேனர், அகராதியை உருவாக்கிய அமரசிம்மர், மருத்துவர் தன்வந்திரி ஆகியோர் அடங்குவார்.

விக்கிரமாதித்யரின் அவையிலிருந்த நவரத்தினங்கள்	
காளிதாசர்	**சமஸ்கிருத புலவர்**
ஹரிசேனர்	**சமஸ்கிருத புலவர்**
அமர சிம்ஹர்	**அகராதியியல் ஆசிரியர்**
தன்வந்திரி	**மருத்துவர்**
காகபானகர்	**சோதிடர்**
சன்கு	**கட்டடக்கலை நிபுணர்**
வராகமிகிரர்	**வானியல் அறிஞர்**
வராச்சி	**இலக்கண ஆசிரியர் மற்றும் சமஸ்கிருதப் புலவர்**
விட்டல் பட்டர்	**மாயவித்தைக்காரர்**

- ரோமாணிய பேரரசுடனான வணிகத்தால் அரசின் வளம் பெருகியது. கிழக்கு மற்றும் மேற்கு இந்தியாவை வென்ற பின்னர் இரண்டாம் சந்திரகுப்தர் ஹூணர், காம்போஜர், கிராதர் போன்ற வட நாட்டு அரசுகளை வென்றார். அவர் மிகப்பெரிய வெற்றிவீரராக மட்டுமின்றி,சிறந்த நிர்வாகியாகவும் திகழ்ந்தார்.
- **வெள்ளி நாணயங்களை** வெளியிட்ட முதல் குப்த அரசர் இரண்டாம் சந்திரகுப்தரே. இவரின் ஆட்சிகாலத்தில்தான் பேரரசின் விரிவாக்கம் உச்சத்தை எட்டியது.

முதலாம் குமாரகுப்தர்

- இரண்டாம் சந்திரகுப்தரக்குப் பின்னர் அவரது புதல்வர் முதலாம் குமாரகுப்தர் பொ.ஆ.455 வரை ஆட்சி செய்தார். முதலாம் குமாரகுப்தர் **நாளாந்த பல்கலைக்கழகத்தைத்** தோற்றுவித்தார். **சக்ராதித்யர்** என்றும் அழைக்கப்பட்டார்.
- குப்த பேரரசின் கடைசிப் பேரரசரான ஸ்கந்தகுப்தர் முதலாம் குமாரகுப்தரின் புதல்ராவார். இவர் ஹூணரின் படையெடுப்பை தடுத்தார். ஆனால் ஹூணர் மீண்டும் படையெடுத்தால் அரசு கருவூலம் காலியானது.
- பொ.ஆ.467இல் ஸ்கந்தகுப்தரின் இறப்பிற்குப் பின்னர் குப்தப் பேரரசு வீழ்ச்சி அடைந்தது.
- குப்த பேரரசின் கடைசி அரசர் விஷ்னுகுப்தர். (பொ.ஆ.540 முதல் 550 வரை)
- **குப்தரின் நிர்வாக முறை:** குப்தர்களின் ஆட்சியில் அரசியல் அதிகாரப் படிநிலைகள் காணப்பட்டன. அரசர்கள் மகாராஜாதிராஜ, பரம–பட்டராக, பரமேஸ்வர போன்ற பட்டங்களை ஏற்றார்கள். பரம–தைவத (கடவுளின் பரமபக்தன்), பரம–பாகவத (வாசுதேவ கிருஷ்ணனின் பரமபக்தன்) போன்ற அடைமொழிகளால் தம்மை கடவுளால் இணைத்துக்கொண்டனர். அலகாபாத் கல்வெட்டுகளில் சமுத்திரகுப்தர் **புருஷா (**அனைவருக்கும் மேலானவர்) என்ற கடவுளுடன் ஒப்பிடப்படுகிறார்.
- **அமைச்சர்கள் மற்றம் அதிகாரிகள்:** குமாரமாத்திய என்ற சொல் ஆறு வைசாலி முத்திரைகளில் இடம்பெற்றுள்ளது, இந்த பதவி தனக்கென தனியாக அலுவலகம் உள்ள ஒரு உயரதிகாரியைக் குறிப்பிடுவது போல் உள்ளது. அமாத்யா என்ற பல முத்திரைகளில் காணப்படுகிறது. குமாரமாத்திய என்பது அமாத்யாக்களில் மிக முக்கியமான பதவியாக அரசகுல இளவரசர்களின் தகுதிக்குச் சமமானதாக இருக்கும் போல் தெரிகிறது.
- குமாரமாத்யா பொறுப்பில் உள்ளவர்கள் சில சமயங்களில் கூடுதல் பொறுப்புகளையும் பதவிப் பெயர்களையும் கொண்டிருந்தனர். எடுத்துகாட்டாக அலகாபாத் பிரசஸ்தியை (மெய்கீர்த்தி அல்லது புகழுரைக் கல்வெட்டு) எழுதிய ஹரிசேனர் ஒரு குமாரமாத்யா, சந்திவிக்ரஹிகா, மஹாதண்டநாயகா ஆகிய பட்டங்களை கொண்டவராக இருந்துள்ளார். அவர் மஹாதண்டநாயகா துருவபூதியின் புதல்வர் ஆவார்.
- **அமைச்சர்குழு:** குப்த அரசர்களுக்கு ஒரு அமைச்சர் குழு உதவி புரிந்தது. அலகாபாத் கல்வெட்டு **சபா** என்றஒரு குழு குறித்து கூறுகிறது. இது அமைச்சர் குழுவாக இருக்கலாம். மஹாசந்திவிக்ரஹா என்பவர் அமைச்சர்களில் உயர் நிலையில் இருந்துள்ளார். இவர் அமைதி மற்றும் போருக்கான அமைச்சர், இவர்தான் போர் தொடுத்தல், உடன்பாடு காணுதல், ஒப்பந்தங்கள் மேற்கொள்ளுதல் என்று பிற நாடுகளுடன் தொடர்புகளுக்குப் பொறுப்பானவர்.
- நீதித்துறை ராணுவம் ஆகியவற்றின் பொறுப்பு வகித்தவர் **தண்டநாயகா** அல்லது **மஹாதண்டநாயகா** என்றழைக்கப்பட்டனர். ஒரு முத்திரை அக்கினிகுப்தர் என்ற மஹாதண்டநாயகா குறித்துப் பேசுகிறது. அலகாபாத் கல்வெட்டு மூன்று மஹாதண்டநாயாக்களைக் குறித்து கூறுகிறது. **மஹாஅஸ்பவதி** என்ற பதவி குதிரைப்படைத் தலைவரை குறிக்கிறது.

- **பேரரசின் பிரிவுகள்:** குப்தர்களின் பேரரசு **தேசம்** அல்லது **புக்தி** எனப்படும் மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. **உபாரிகா** என்றழைக்கப்பட்ட ஆளுநர்களால் இவை நிர்வகிக்கப்பட்டன. உபாரிகாக்கள் மாவட்ட தலைமை நிர்வாக அதிகாரிகளையும் வாரிய அதிகாரிகளையும் நியமித்தனர். உபாரிகாக்கள் நிர்வாக அதிகாரத்தோடு, யானைகள், குதிரைகள், வீரர்கள் என்று ராணுவ நிர்வாகத்தையும் கையில் வைத்திருத்திருந்தனர்.
- **தாமோதர்பூர்** செப்பேடுகளில் மூன்று உபாரிகாக்களுக்கு மாகராஜா என்ற பட்டம் இருந்ததாகக் குறிப்பிடப்படுவதன் மூலம் நிர்வாகத்தில் இவர்களுக்கு இருந்த உயர்நிலை தெரிகிறது. குப்த ஆண்டு 165 என்று தேதியிடப்பட்டுள்ள புத்தகுப்தரின் ஈரன் தூண் கல்வெட்டு காளிந்தி மற்றும் நர்மதை நதிகளுக்கிடையிலான நிலங்களை ஆட்சிசெய்த லோகாபாலா என்று மகாராஜா சுரஷ்மிசந்திரா என்பவரைக் குறிப்பிடுகிறது. இங்கு லோகபாலா என்பது மாநில ஆளுநரைக் குறிப்பிடுதாகலாம்.
- குப்தப்பேரரசின் மாநிலங்கள் விஷ்யபதி என்ற அதிகாரியின் கீழ் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. இவை **விஷ்யா** என அழைக்கப்பட்டன விஷ்யபதிகள் பொதுவாக மாநில ஆளுநரால் நியமிக்கப்பட்டதாகத் தெரிகிறது.
- மாவட்ட மட்டத்திற்குக் கீழ் விதி,பூமி, பதகா, பீடா என்று பல்வேறு விதமான நிர்வாக அலகுகள் இருந்தன. ஆயுக்தா, விதி–மஹாதரா எனப்படும் அதிகாரிகள் குறித்த குறிப்புகளும் காணப்படுகின்றன. கிராம மட்டத்தில் கிராமிகா, கிராம் அத்யக்ஷா போன்ற அதிகாரிகள் இருந்துள்ளனர். இவர்களை கிராம மக்களே தேர்ந்தெடுத்தனர்.
- புத்தகுப்தர் காலத்து தாமோதர்பூர் செப்பேடு மஹாதாரா என்பவர் தலைமையிலான அஷ்டகுல–அதிகாரனா (எட்டு உறுப்பினர் கொண்ட குழு) குறித்து குறிப்பிடுகிறது. மஹாதாரா என்பதற்கு கிராமப் பெரியவர், கிராமத் தலைவர், குடும்பத் தலைவர் என்று பல பொருள் உண்டு. இரண்டாம் சந்திரகுப்தர் காலத்து சாஞ்சி கல்வெட்டு பஞ்சமண்டலி என்பதை குறிப்பிடுகிறது.
- **இராணுவம்:** முத்திரைகள், கல்வெட்டுகள் ஆகியன பாலாதிகிருத்யா, மஹாபாலாதிகிருத்யா (காலாட்படை மற்றும் குதிரைப்படை தளபதி) போன்ற ராணுவப் பதவிகளைக் குறிப்பிடுகின்ற. வழக்கமாகப் பயன்படுத்தப்படும் சேனாபதி என்ற சொல் குப்தர் கல்வெட்டுகளில் காணப்படவில்லை. ஆனால் சில வாகடக கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.
- ஒரு வைசாலி முத்திரை ராணுவக்கிடங்கின் அலுவலகமான ரணபந்தகர் அதிகாரனாவைக் குறிப்பிடுகிறது. மற்றொரு வைசாலி முத்திரை, தண்டபாஷிகா என்ற அதிகாரியின் அலுவலகத்தைக் குறிப்பிடுகிறது. இது மாவட்ட அளவிலான காவல்துறை அலுவலகமாக இருக்கலாம்.
    - **மஹாபிரதிஹரா** – அரண்மனைக் காவலர்கள் தலைவர்
    - **கத்யதபகிதா** – அரச சமையலறைக் கண்காணிப்பாளர் போன்ற அரண்மனையுடன்
- நிர்வாக அமைப்பின் குறித்துக் குறிப்பிடுகிறது. நிர்வாக அமைப்பின் மேல்மட்டத்தில் அமாத்தியா, சச்சிவா ஆகியோர் இருந்தார்கள். இவர்கள் பல்வேறு துறைகளுக்குப் பொறுப்பாக இருந்த நிர்வாக அதிகாரிகளாவர். **துடாக** என்றழைக்கப்பட்ட ஒற்றர்கள் கொண்ட உளவு அமைப்பும் இருந்தது. **ஆயுக்தா** என்பது மற்றொரு உயர்மட்ட அதிகாரப் பதவியாகும்.
- **பொருளாதார நிலைகள்:** குப்தர் காலத்தில் காமாந்தகா எழுதியது நீதிசாரா என்ற நூல் ஆகும். இந்நூல் அரசு கருவூலத்தின் முக்கிய வருவாய்க்கான பல்வேறு மூலவளங்கள் பற்றிக் குறிப்பிடுகிறது.
- அரசு ஆவணங்களை **அஸ்பதலதிக்கிருதா** என்ற அதிகாரி பராமரித்தார். குப்தர் கல்வெட்டுகள் கிலிப்தா,பலி,உத்ரங்கா, உபரிகரா, இரண்யவெஷ்தி போன்ற சொற்களைக் குறிப்பிடுகின்றன. **இரண்யவெஷ்தி** என்றால் **கட்டாய உழைப்பு** என்று பொருள்.
- **வேளாண்மையும் வேளாண் அமைப்பும்:** காளிதாசர் மூலம் தென்பகுதியானது மிளகு,ஏலம் ஆகியவற்றிற்குப் புகழ்பெற்றிருந்தது தெரியவருகிறது. பழ மரங்கள் வளர்ப்பது குறித்து வராகமிகிரர் விரிவான அறிவுரைகளைத் தந்துள்ளார். பஹார்பூர் செப்பேடு அரசர்தான் நிலத்தின் ஒரே உரிமையாளர் என்று காட்டுகிறது. பஹார்பூர் செப்பேடுகளின்படி உஸ்தபாலா என்ற அதிகாரி மாவட்டத்தின் நிலப்ப பரிமாற்றம் தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் பாதுகாத்தார். குப்தர் காலத்தில் நிலம் கீழ்வருமாறு வகைப்படுத்தப்பட்டிருந்தன.

க்ஷேத்ரா	பயிரிடக்கூடிய நிலம்
கிலா	தரிசு நிலம்
அப்ரஹதா	காடு அல்லது தரிச நிலம்
வாஸ்தி	குடியிருக்கத் தகுந்த நிலம்
கபடசஹாரா	மேய்ச்சல் நிலம்

பல்வேறுவகையான நிலகுத்தகை முறை

நிலகுத்தகை வகை	உமையின் தன்மை
நிவி தர்மா	அறக்கட்டளை போன்ற அமைப்பின் மூலம் நில மானியம் – இம்முறை வடக்கு, மத்திய இந்தியா மற்றும் வங்கத்தில் நிலவியது
நிவி தர்ம அக்சயனா	நிரந்தரமான அறக்கட்டளை – பெற்றவர் அதிலிருந்து வரும் வருவாயைப் பயன்படுத்திக் கொள்ளலாம்
அப்ரதா தர்மா	வருவாயைப் பயன்படுத்தாலம். ஆனால் அதை பிறருக்குத் தானம் செய்யமுடியாது நிர்வாக உரிமையும் இல்லை.

ஏனைய நிலக்கொடைகள்

அக்ரஹாரா மானியம்	பிராமணர்களுக்குத் தரப்படுவது. இது நிரந்தரமானது. பரம்பரையாக வரக்கூடியது. வரிகிடையாது
தேவக்கிரஹார மானியம்	கோயில் மராமத்து,வழிபாடு ஆகிய பணிகளுக்காகப் பிராமணர்கள், வணிகர்கள் ஆகியோருக்கு அளிக்கப்படும நில மானியம்.
சமயச் சார்பற்ற மானியம்	குப்தர்களுக்குக் கீழிருந்த நிலப்பிரபுக்களுக்குத் தரப்பட்ட மானியம்

- **பாசனம்:** நாரதஸ்மிருதி என்ற நூலில், வயல்களை வெள்ளங்களிலிருந்து பாதுகாத்த **பந்தியா,** பாசனத்திற்கு உதவிய **கரா,** என்ற இருவகை அணைக்கரைகள் குறிப்பிடப்படுகின்றன. தண்ணீர் தேங்குவதைத் தடுக்க **ஜலநிர்கமா** என்ற வடிகால்கள் இருந்ததாக அமரசிம்மர் குறிப்பிடுகிறார். குஜராத்தின் கிர்னார் மலையின் அடிவாரத்தில் இருந்த சுதர்சனா ஏரி மிகவும் புகழ்பெற்றதாகும்.

பல்வேறு வரிகளின் பட்டியல்

வரி	அதன் தன்மை
பாகா	விளைச்சலில் அரசன் பெறும் வழக்கமான ஆறில் ஒரு பங்காகும்.
போகா	அரசருக்கு கிராமங்கள் அவ்வப்போது வழங்க வேண்டிய பழங்கள்,விறகு, பூக்கள்,போன்றவை.
சுரா	கிராமத்தினர் மீது குறிப்பிட்ட கால இடைவெளியில் விதிக்கப்படும் ஒரு வரி (இது வருடாந்திர நிலவரியின் ஒரு பகுதியல்ல)
பலி	ஆரம்பத்தில் விருப்பப்பட்டு வழங்கப்பட்ட வரியாக இருந்த பின்னர் கட்டாய வரியாக மாற்றப்பட்டது. இது ஒரு ஒடுக்குமுறை வரி.
உதியங்கா	காவல் நிலையங்களின் பராமரிப்பிற்காக விதிக்கப்பட்ட காவல் வரியாக இருக்கலாம். அல்லது நீர் வரியாகவும் இருக்கலாம். எனினும், இது ஒரு கூடுதல் வரிதான்.
உபரிகரா	இதுவும் ஒரு கூடுதல் வரிதான். இது எதற்காக வசூலிக்கப்பட்டது என்பது குறித்து அறிஞர்கள் மாறுபட்ட விளக்கங்களைத் தருகின்றனர்.
ஹிரண்யா	தங்க நாணயங்கள் மீது விதிக்கப்படும் வரி என்பது நேரடிப் பொருள், நடைமுறையில் இது சில குறிப்பிட்ட தானியங்களின் விளைச்சலில் ஒரு பங்கினை, அரசின் பங்காகப் பொருளாகவே அளிப்பதாகும்.
வாத–பூதா	காற்றுக்கும் ஆவிகளுக்கும் செய்ய வேண்டிய சடங்களுக்காக விதிக்கப்பட்ட பல்வேறு வரிகள்

ஹலிகவகரா	கலப்பை வைத்திருக்கும் ஒவ்வொரு உழவரும் கட்ட வேண்டிய கலப்பை வரி
சுல்கா	வர்த்தகர்கள் நகரத்திற்கோ துறைமுகத்திற்கோ கொண்டுவரும் வணிகச் சரக்குகளில் அரசருக்கான பங்கு இதைச் சுங்க, நுழைவு வரிகளுக்கு ஒப்பிடலாம்.
கிளிப்தா,உபகிளிப்தா	நிலப்பதிவின் போது விதிக்கப்படும் விற்பனை வரி

- **சுரங்கமும் உலோகவியலும்:** குப்தர் காலத்தில் மிகவும் செழித்த தொழில்கள் சுரங்கத் தொழில், உலோகவியல் ஆகியன ஆகும். சுரங்கங்கள் இருந்தது குறித்து அமரசிம்மர், வராஹமிகிரர், காளிதாசர் ஆகியோர் அடிக்கடி குறிப்பிடுகிறார்கள்.
- தில்லி குதுப்மினார் வளாகத்தில் காணப்படும் மெஹ்ரோலி இரும்புதூண் சான்றாகக் காட்டப்படுகிறது. இது இரண்டாம் சந்திரகுப்தருடன் அடையாளம் காணப்படுகிறது.
- **வணிகமும் வர்த்தகமும்: சிரேஷ்டி, சார்த்தவஹா** என்ற இருவேறுபட்ட வகைகளைச் சேர்ந்த வணிகர்கள் இருந்தனர். **சிரேஷ்டி** என்பவர் பொதுவாக ஒரே இடத்தில் தங்கியிருப்பவர். **சார்த்தவஹா** என்பவர் இலாபத்திற்காக ஊர் ஊராகச் சென்று வணிகம் செய்தவர்.
- நாரத ஸ்மிருதி, பிருகஸ்பதி ஸ்மிருதி ஆகியவை வணிகக் குழுக்களின் அமைப்பு, செயல்பாடு குறித்து விவரிக்கின்றன. ஒரு குழுத் தலைவர், இரண்டு, மூன்று அல்லது ஐந்து நிர்வாக அதிகாரிகள் இருந்ததாக இவை குறிப்பிடுகின்றன.
- குப்தர் காலத்தில் மேற்குக் கரையில் கல்யாண், கால்–போர்ட் ஆகிய வணிகத் துறைமுகங்களும், மலபார், மங்களூர் சலோபடானா, நயோபடான, பந்தேபடானா ஆகிய வணிக சந்தைகளும் இயங்கியுள்ளன. வங்கத்தின் தாமிரலிப்தி கிழக்குக் கடற்கரையின் முக்கயிமான வணிக மையம் என பாஹியான் குறிப்பிடுகிறார். குப்தர்கள் வெள்ளி நாணயங்களை விட தங்க நாணயங்களை அதிகமாக வெளியிட்டனர்.
- **கட்டடக் கலை:** திராவிட பாணியிலான கலைகள் வளர்ந்தன. பாறைகளைக் குடைந்து கட்டப்படும் குடைவரைக் கோயில்கள் பெரும்பாலும பழைய அமைப்புகளையேத் தொடர்ந்தன. எனினும் முகப்புப் பகுதியின் அலங்காரத்திலும், உள்பக்க தூண்களில் வடிவமைப்பிலும் விரிவான புதிய மாற்றங்களைக் கொண்டவந்ததன் மூலம் புதுமை செய்தன. குறிப்பிடதக்க குடைவரைக் கோயில்கள் அஜந்தா,எல்லோரா (மஹாராஷ்டிரம்) மற்றம் பாக் (மத்தியப்பிரதேசம்) ஆகிய இடங்களில் காண்படுகின்றன. உதயகிரி குகைகளும் (ஒடிசா) இவ்வகையைச் சேர்ந்தவைதான்.
- **ஸ்தூபிகள்:** மிகச்சிறந்த ஸ்தூபிகள் சமத் (உத்திரபிரதேசம்), ரத்தினகிரி (ஒடிசா), மிர்பூர்கான் (சிந்து) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.
- **சிற்பங்கள்** – கல்சிற்பக் கலைக்கு சிறந்த சான்று சாரநாத்தில் காணப்படும் நிற்கும் நிலையிலுள்ள புத்தர் சிலை. புராணச் சிற்பங்களில் மிக அழகானது உதயகிரி குகையின் நுழைவாயிலில் இருக்கும் வராஹ அவதாரச் சிலை.
- **உலோகச் சிலை–**பீகாரின் நாளாந்த பல்கலைகழகத்தில் உள்ள பதினெட்டடி செம்புச் சிலை, சுல்தான்கஞ்சியில் உள்ள ஏழரையடி புத்தர் சிலை ஆகிய இரண்டும் குப்தர் காலத்து உலோகச் சிற்பங்களுக்கு மிகச் சிறந்த எடுத்துகாட்டுகளாகும்.
- **ஓவியங்கள்–** குப்தரின் சுவரோவியங்கள் அஜந்தா,பாக், பாதாமி ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.
- **சுடுமண் சிற்பங்களும் மட்பாண்டக் கலையும்–** அச்சிசத்திரா,ராய்கார், ஹஸ்தினாபூர்,பஷார் ஆகிய இடங்களில் கிடைதுள்ள குப்தர் காலத்து மட்பாண்டங்கள் மட்பாண்டக் கலையின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. இக்காலகட்டத்து மட்பாண்டங்களின் தனிப்பட்ட சிறப்பம்சம் **சிவப்பு மட்பாண்டங்கள்** ஆகும்.
- **சமஸ்கிருத இலக்கியம் –** குப்தர் சமஸ்கிருதத்தை அலுவல் மொழியாக்கினார்கள், அவர்களின் அனைத்து கல்வெட்டுகளும் பட்டயங்களும் அம்மொழிதான் எழுதப்பட்டன. இக்காலகட்டம்தான் சமஸ்கிருத இலக்கியத்தின் உச்சகட்டமாகும்.

➢ **சமஸ்கிருத இலக்கணங்கள்**

வ. எண்	ஆசிரியர்	நூல்
1.	பாணினி	அஷ்டத்யாயி
2.	பதஞ்சலி	மஹாபாஷ்யா
3.	அமரசிம்மர்	அமரகோஷம்
4.	சந்திரகோமியர்	சந்திரவியாகரணம்
5.	காமகாந்தரின்	நீதிசாரம்
6.	விசாகத்தரின்	✓ தேவிசந்திரகுப்தம் ✓ முத்ராராட்சசம்
7.	வசுபந்து	தர்க்க அறிவியல் சார்ந்த முதலாவது பௌத்த நூல்
8.	விமலா	சமணராமயணம்
9.	சித்தசேனதிவாகரா	தர்க்க சாஸ்திரம்
10.	காளிதாசர்	✓ சாகுந்தலம் ✓ மாளவிகாக்னிமித்ரம் ✓ விக்கிரமோர்வசியம்
11.	சூத்ரகர்	மிருச்சகடிகம்
12.	ஆரியப்பட்டா	✓ சூரிய சித்தாந்தா ✓ ஆரியபட்டியம்
13.	வராகமிகிரரின்	✓ பிருஹத் சம்ஹிதா ✓ பஞ்ச சித்தாந்திகா ✓ பிருஹத் ஜாதாகா
14.	பிரம்மகுப்தர்	✓ பிரும்மஸ்புத–சித்தாந்தா ✓ கண்டகாத்யகா
15.	பாலகாப்பியா	ஹஸ்த்யாயுர்வேதா

➢ **புராணங்களும் இதிகாசங்களும்–** குப்தர் காலத்தில் இராமயணமும், மகாபாரதமும் மெருகேறிச் செம்மையடைந்து தமது இறுதி வடிவினைப் பெற்றன. பதினெட்டு வகையான முக்கிய புராணங்கள் பட்டியலிடப்பட்டன.

வ.எண்	புராணங்கள்
1.	பிரம்மபுராணம்
2.	பத்மபுராணம்
3.	விஷ்ணுபுராணம்
4.	ஸ்கந்த புராணம்
5.	சிவமாகபுராணம்
6.	மார்கண்டேயபுராணம்
7.	அக்னிபுராணம்

8.	பவிஷ்யபுராணம்
9.	மத்ஸ்யபுராணம்
10.	ஸ்ரீமத்பகவத்

- **நாளந்தா பல்கலைக்கழகம்– மஹாவிஹாரா** என்று பெயர் பெற்ற நாளந்தா இந்தியாவின் பண்டைய மகதப் பேரரசின் (இன்றை பீகார்) இருந்த மிகப்பெரிய பௌத்த மடாலயமாகும். இது பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டிருந்து 1200 வரை புகழ்பெற்ற கல்விச்சாலையாக இருந்தது. இது யுனெஸ்கோவால் பாதுகாக்கப்படும் உலகின் தொன்மை சின்னமாகும்.
- ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில் நாளந்தா பல்கலைகழகம் குப்தப் பேரரசின் ஆதரவிலும் பின்னர் கன்னோசியின் பேரரசரான ஹர்ஷரின் ஆதரவிலும் செழித்தது. இப்பல்கலைகழகத்தில் திபேத், சீனா,கொரியா, மத்திய ஆசியா போன்ற இடங்களிலிருந்தெல்லாம் மாணவர்கள் வந்தனர். இங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் மூலம் இப்பல்கலைக்கழகத்திற்கு இந்தோனேஷியாவின் சைலேந்திரா வம்சத்தோடு தொடர்பு இருந்தது தெரிய வருகின்றது.. இவ்வம்சத்தின் அரசர் ஒருவர் இவ்வளாகத்தில் மடாலயத்தைச் கட்டியுள்ளார்.
- பொது.ஆ. 1200 இல் தில்லி சுல்தானிய மம்லூக் வம்சத்தின் பக்தியார் கில்ஜியின் படைகளால் நாளந்தா சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டது. இந்தியா தொல்லியல் துறை முறையான ஆய்வை 1915இல் ஆரம்பித்தது. அப்போது 12ஹெக்டேர் பரப்பில் (30 ஏக்கர்) அமைந்திருந்த பதினோரு மடாலயங்களும், ஆறு செங்கல் கோயில்களும் கண்டபிடிக்கப்பட்டன.
- **குப்தர் கால அறிவியல் (கணிதமும்,வானவியலும்)** –சூழியம் என்ற கருத்தாக்கத்தைக் கண்டுபிடித்தது, அதன் விளைவுவாக பதின்ம இலக்க முறை கண்டுபிடித்தது ஆகிய பெருமைகளை இக்காலகட்டத்தின் அறிவியலாளர்களையேச் சாரும. சூரிய சித்தாந்த என்ற நூலில் ஆரியபட்டர் (பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி முதல் ஆறாம் நூற்றாண்டின் துவக்கம் வரை) சூரிய கிரகணங்களின் உண்மையான காரணங்களை ஆராய்ந்தார். பூமியின் சுற்றளவு குறித்த கணக்கீட்டில் ஆரியபட்டர் கணிப்பு நவீன மதிப்பீட்டிற்கு மிக நெருக்கமாக உள்ளது. பூமி ஒரு அச்சில் தன்னைத் தானே சுற்றுகிறது என்பதைக் கண்டுபிடித்த முதல் வானவியலாளர் அவர்தான். கணிதம், கோணவியல், இயற்கணிதம் ஆகியவற்றைப் பேசும் ஆரியபட்டீயம் என்ற நூலை அவர் எழுதினார்.
- வராகமிகிரரின் (ஆறாம் நூற்றாண்டு) பிருஹத் சம்ஹிதா என்ற நூல் வானவியல், புவியியல், தாவரவியல், இயற்கை வரலாறு ஆகியவற்றிற்கான கலைக்களஞ்சியமாகும். பஞ்ச சித்தாந்திகா,பிருஹத் ஜாதகா ஆகியவை இவரது மற்ற படைப்புகளாகும், பிரம்மகுப்தர் (ஆறாம் நூற்றாண்டின் இறுதி, ஏழாம் நூற்றாண்டின் துவக்கம்) கணிதம் மற்றும் வானவியலுக்கான முக்கிய நூல்களான பிரும்மஸ்புத–சித்தாந்தா, கண்டகாத்யாகா ஆகிய நூல்களை ஏழுதியுள்ளார்.
- **மருத்துவ அறிவியல்–** மருந்துகள் தயாரிப்பதற்கு உலோகங்களைப் பயன்படுத்துதல், பாதரசம் மற்றும் இரும்பு ஆகியவற்றின் பயன்பாடு குறித்து வராஹமிகிரரும் பிறரும் எழுதியிருப்பதைப் பார்க்கும்போது குப்தர் ஆட்சிக் காலகட்டத்தில் வேதியியலில் பெரும் முன்னேற்றம் நிகழ்ந்திருப்பது தெரிகிறது. நவனிதகம் என்ற மருத்துவ நூல் நோய்களுக்கான மருந்துகள், மருந்துகள் தயாரிக்கும் முறை ஆகியவற்றைக் கூறுகிறது. பாலகாப்பியா எழுதிய ஹஸ்த்யாயுர்வேதா என்ற நூல் விலங்குகளுக்கான மருத்துவ நூலாகும்.
- **குப்தப் பேரரசின் வீழ்ச்சி–** மிகச் சிறந்த குப்தப் பேரரசர்களில் கடைசிப் பேரரசரான பாலாதித்யர் முதலாம் நரசிம்மகுப்தர் என்ற பெயரில் அரியணையில் ஏறினார். இவர் மிகிரகுலருக்கு கப்பம் கட்டி வந்தார். ஆனால் மிகிரகுலர் பௌத்தத்தைப் பகைமையோடு பார்த்ததால் மனவேதனை அடைந்து கப்பம் கட்டுவதை நிறுத்தினர். மிகிரகுலரைக் கைது செய்து செய்து சிறையில் அடைப்பதில் பாலாதித்யா வெற்றி பெற்றாலும் வஞ்சகமாக பாலாதித்யரை மகதத்திலிருந்து வெளியேற்றினார்.
- குப்த வம்சத்தின் கடைசி அரசராக அறியப்படுபவர் விஷ்ணுகுப்தர். இவர் பொ.ஆ 540 முதல் 550 வரை ஆட்சி செய்தார். புத்த குப்தர் என்ற குப்த அரசர் ஆட்சிக்காலத்தில் மேற்கு தக்காணத்தின் வாகடக அரசரான நரேந்திரசேனா மால்வா, மேகால மற்றும் கோசலா மீது படையெடுத்தார். பின்னர் மற்றொருமொரு வாகடக அரசரான ஹரிசேணர் மாளவத்தையும் குஜராத்தையும் குப்தர்களிடமிருந்து கைப்பற்றினார்.
- இரண்டாம் சந்திரகுப்தரின் பேரரான ஸ்கந்தகுப்தரின் ஆட்சியின்போது ஹீணர்களின் படையெடுப்பில் வெற்றிபெற்றாலும் பேரரசின் நிதி நிலையை நலிவுறச் செய்தது. ஆறாம் நூற்றாண்டில் ஹீணர்கள் மாளவம், குஜராத், பஞ்சாப் காந்தாரா ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

- ஹீணர் படையெடுப்பால், நாட்டின் மீது குப்தர்கள் பிடி தளர்ந்தது. மாளவத்தின் யசோதர்மன், உத்திரபிரதேசன்தின் முகாரிகள், சௌராஷ்டிரத்தின் மைத்ராகாக்கள் போன்று பல சிற்றரசர்கள் உருவாக ஆரமபித்தனர். பொளத்தத்தை கடைப்பிடித்ததும இவர்கள் பேரரசை விரிவுபடுத்துவதிலோ, ராணுவப் படையெடுர்புகளிலோ கவனம் செலுத்தாததும் பேரரசைப் பலவீனப்படுத்தியது. ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பேரரச சிதைந்து பிராந்தியக் தலைவர்களர்ல் ஆளப்பட்ட சிறுசிறு பகுதியானது.

அரபியர், துருக்கியரின் வருகை

- பதின்மூன்று முதல் பதினாறாம் நூற்றாண்டு முற்பகுதி வரையான காலத்தில் (1200–1550) இஸ்லாமிய அரசு (தில்லி சுல்தானியம்) நிறுவப்பட்டது. அரபியர் தென்னிந்தியாவின் மேற்கு (மலபார்), கிழக்குக் (கோரமண்டலம்/சோழமண்டலம்) கடற்கரைகளில் குடியேறினர். மலபார் பெண்களைத் திருமணம் செய்துகொண்டு அங்கேயே குடியமர்ந்த அரபியர், **மாப்பிள்ளை** என்று அழைக்கப்பட்டனர்.
- 1206–1526 வரை தில்லி சுல்தானிய ஆட்சியில் ஒரே மரபைச் சேர்ந்த ஆட்சியாளர்களால் ஆளப்படவில்லை. அதன் ஆட்சியாளர்கள் ஐந்து வெவ்வேறு வம்சங்களைச் சேர்ந்தவர்கள்

1. **அ**டிமை வம்சம் – (1206–1290)
2. **கி**ல்ஜி வம்சம் – (1290–1320)
3. **து**க்ளக் வம்சம் – (1320–1414)
4. **சை**யது வம்சம் – (1414–1451)
5. **லோ**டி வம்சம் – (1451–1526)

சான்றுகள்

வ. எண்	ஆசிரியர்	நூல்	குறிப்புகள்
1	அல்பெருணி	❖ தாரிக்–அல்–ஹிந்த் ❖ கிதாப்–உல்–ஹிந்த்	அரபு மொழியில் எழுதப்பட்ட இந்திய தத்துவஞானமும் மதமும்
2	மின்ஹஜ் உஸ் சிராஜ்	தபகத்–இ–நசிரி	1260–அரபு மொழியில் எழுதப்பட்ட உலக இஸ்லாமிய வரலாறு
3	ஜியாவுத்தின் பாரனி	தாரிக்–இ–பெரோஸ் ஷாஹி	1357–பெரோஸ் துக்ளக் வரையிலான தில்லி சுல்தான்கள் வரலாறு
4	அமர்குஸ்ரு	❖ மிப்தா உல் புதூா ❖ கஜைன் உல் புதூா ❖ ஒன்பது வானங்கள்	ஜலாலுதின் கில்ஜியின் வெற்றிகள் அலாவுதீன் கில்ஜியின் வெற்றிகள்–பாரசீக மொழியில்
5		துக்ளக் நாமா	பாரசீக மொழியில் துக்ளக் வம்ச வரலாறு
6	பாரனியின்	❖ சம்ஸ்–இ–சிராஜ் அஃபிஃப்:தாரிக் இஃபெரோஜ் ஷாஹி ❖ ஃபுதூா உஸ் சலாதின்	தில்லி சுல்தானியம் பற்றிப் பாரசீக மொழியிலுள்ள பாரனின் குறிப்புகள்.
7	முபாராக்ஷா	குலாம் யாஹ்யா பின் அஹ்மத்: தாரிக்–இ–முபாரக் ஷாஹி	சையது ஆட்சியாளர் முபாரக் ஷாவின் ஆட்சியில் பாரசீக மொழியில் எழுதப்பட்டது.
8		ஃபெரிஷ்டா:இந்தியாவின் இஸ்லாமிய ஆட்சியின் வரலாறு	பாரசீக மொழி
9	யாஹியா–பின்–அஹ்மத்	தாரிக்–இ–முபாரக்–சாஹி	சையது வம்சத்தை பற்றியது
10	நிசாமுதீன் அவுலியாவின்	ஃபவாய் துல் ஃபவாத்	அமர்ஹாசன் தொகுத்தார்.

11	பக்ருதின் கவ்வாஸ்	ஃபரங்–இ–கவாஸ்	பாரசீக சொற்களுக்கு நிகரான ஹிந்தாவி சொற்களைக் கொண்ட அகராதிகள்
12	முகம்மத் ஷாதியாபடி	மிஃப்தஹீ I ஃபுவாஜலா	பாரசீக சொற்களுக்கு நிகரான ஹிந்தாவி சொற்களைக் கொண்ட அகராதிகள்
13	ஜியா நக்ஷபி	கிளிநூல் எனும் துதிநமஹ	பாரசீக மொழியில் மொழிபெயர்த்த சமஸ்கிருத கதைகளின் தொகப்பாகும்.
14	ஸ்ரீவரா	கதகௌடுக	யூசுப் ஜீலைகாவின் கதையை ஒரு சமஸ்கிருதக் காதல் பாடலாகச் சேர்த்திருக்கிறார்.
15	பட்டவதார	ஜைனவிலாஸ்	ஷாநாமா என்ற பீர்தௌசியின் நூலை அடிப்படையாக கொண்டது

சிந்து மீது அரபுப் படையெடுப்பு:

- ஈராக்கின் அரபு ஆளுநர் ஹஜ்ஜ்–பின்–யூசுப் கடற்கொள்ளையருக்கு எதிரான நடவடிக்கை என்ற காரணம் காட்டி, சிந்து அரசர் தாகிரை எதிர்த்து, தரைவழி, கடல்வழி என இது தனித்தனி இரண்டு படைப்பிரிவுகளும் தோற்றன. அவற்றின் தளபதிகளும் கொள்ளப்பட்டனர். 17 வயது நிரம்பிய முகமது பின் காசிம் தலைமையில் 6000 குதிரைகளை கொண்ட வலிமையான குதிரைப்படை,ஒட்டகப் படை ஆகியவை அடங்கிய ஒரு முழுமையான இராணுவத்தை அமைச்சரின் துரோகத்தால் எளிதில் வீழ்ந்தார். பின்பு ரோக்கிரி நகரில் நடந்த ஒரு மோதலில் தாகிரை காசிம் கொன்றார்.
- **கஜினி மாமுது–**அரேபிய பேரரசு சிதைந்த பின் சாமானித் பேரரசும் உடைந்தது. சாமானித் பேரரசில் குரசன் ஆளுநராக இருந்த துருக்கிய அடிமை அல்ப்டிஜின் 963 இல் கிழக்கு ஆப்கானிஸ்தானிலிருந்த கஜினி நகரைக் கைப்பற்றி ஒரு சுதந்திர அரசை நிறுவினார். இவரது வாரிசுகளின் தோல்வியால் உயர்குடிமகள் சபுக்தஜின்னுக்கு முடிசூட்டினர். இந்தியாவில் இஸ்லாமிய அரசை தெற்கு நோக்கி விரிவுபடுத்தும் நடவடிக்கைகளை சபுக்ஜின் தொடங்கிவைத்தார். ஆப்கானிஸ்தான் ஷாஹி அரசர் ஜெயபாலரைத் தோற்கடித்து, அம்மாகாணத்தில் தனது மூத்த மகன் மாமுதை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தினார். 997 இல் சபுக்தஜனின் இறந்தபோது, கஜினி மாமுது குரசனில் இருந்தார். இதனால் சபுக்தஜன் இளைய மகன் இஸ்மாயில் வாரிசாக அறிவிக்கப்பட்டார். பிறகு தனது சகோதரன் இஸ்மாயிலை தோற்கடித்து இருபத்தேழு வயது கஜினி மாமுது ஆட்சியில் அமர்ந்தார். இதனை**யாமினி –உத்–தவுலா (பேரரசின் வலது கை)** என்ற பட்டத்தை வழங்கியும் கலிபா அவரை அங்கீகரித்தார்.
- **32** ஆண்டுகள் ஆட்சி புரிந்த கஜினி மாமுது, பதினேழு முறை இந்தியா மீது தாக்குதல்களை நடத்தினார். ஷாஹி அரசன் அனந்தபாலரைத் தோற்கடித்த கஜினி மாமுது, பிறகு பஞ்சாபைப் கடந்து கங்கைச் சமவெளிக்குள் நெடுந்தொலைவு உள்ளே வந்தார். கன்னோசி சென்றடைவதற்கு முன்னர் மதுராவைச் சூறையாடினார்.
- தொடர்ந்து கஜினி மாமுது 1025இல் குஜராத் கடற்கரையில் உள்ள சோம்நாதபுரத்தின் மீது படையெடுத்து கொள்ளையடித்தார். வரலாற்றிஞர் ரோமிலா தாப்பர், *சோமநாதபுரம் படையெடுப்பு குறித்த தகவல்கள் 13 ஆம் நூற்றாண்டிலிருந்து அரபு மரபுவழிப் பதிவுகளில் காணப்படுகின்றன. ஆனால் இதன் சமகால சமண மதச் சான்றுகள் இதனை உறுதிபடுத்தவில்லை என்கிறார். இத்தகைய இராணுவத் தாக்குதல்களும் கொள்ளையடிப்புகளும் பொருளாதார மற்றும் மத உருவ எதிர்ப்புத் தன்மை கொண்டதே தவிர வகுப்புவாதத் தன்மை கொண்டதல்ல சமகாலப் போர்முறையிலிருந்து பிரிக்க முடியாத அழிவுகளையும் மத்திய கால அரசர்களின் வழக்கமான கொள்கையிடும் தன்மையையுமே அவை வெளிப்படுத்துகின்றன* என்கிறார்.
- கணிதவியலாளரும் தத்துவதஞானியும் வானியலாளரும் வரலாற்று ஆசிரியருமான அல்–பெருணி, கஜினி மாமுதுடன் இந்தியா வந்தார். கிதாப்–உல்–ஹிந்த் என்ற தனது நூலை இயற்றுவதற்கு முன்பு அவர் சமஸ்கிருத கற்றுக்கொண்டார்.யூக்ளிடின் கிரேக்க நூலைக்கூட அவர் சமஸ்கிருததத்தில் மொழிபெயர்த்தார். ஆரியபட்டரின் முக்கியநூலான ஆர்யபட்டியம் (புவி, அதன் அச்சில் சுழல்வது இரவு பகலை ஏற்படுத்துகிறது போன்ற செய்திகளை உள்ளடக்கிய நூல்) என்பதை அவர் மேலை நாடுகளுக்குத் தெரியப்படுத்தினார். இந்தியாவுக்கும் பிற உலக நாடுகளுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்தார்.

- **1186**இல் கோரி அரசர் மொசுதின் முகமது என்கிற கோரி முகமது, பஞ்சாப் மீது படையெடுத்து லாகூரைக் கைப்பற்றினார். கஜினி வம்சத்தின் கடைசி அரசர் குரவ் ஷா, 1192 இல் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். அவரது மரணத்துடன் கஜினி அரசு முடிவுக்கு வந்ததது.
- **கோரி முகமது–** கஜினியின் படையெடுப்புகள் கொள்ளையடிக்கும் நோக்கம் கொண்டவை. இதனை விரிவுபடுத்திக் கொள்ளையடித்த செல்வமும், திறையும் தொடர்ந்து சீராக வந்து சேர்வதை உறுதி செய்துகொள்ள படையான் நகரங்களை கோரிகள் அமைத்தனர்.
- **1180** களிலும் 1190 களிலும் நவீன பஞ்சாப், சிந்து, ஹரியானா மாகாணங்களில் அவர் காவல் அரண்களை அமைத்தார். 1190 இலிருந்து சுல்தானின் தெரிவு செய்யப்பட்டனர். போர் முறையிலும் நிர்வாகத்திலும் சிறப்புப் பயிற்சி பெற்ற அடிமைகள், நிலத்தோடும் விவசாய உழைப்போடும் வீட்டு வேலைகளோடும் தொடர்புடைய அடிமைகளிலிருந்து மாறுபட்டவர்கள், தொடக்கத்தில், உச் (லாகூர்), முல்தான் ஆகியன குறிப்பிடத்தக்க அதிகார மையங்களாகக் கருதப்பட்டன.
- **1175** இல் முல்தான் மீது படையெடுத்த கோரி முகமது, அதை அதன் இஸ்மாயிலி வம்ச ஆட்சியாளர்களிடமிருந்து கைப்பற்றினார். தொடர்ந்து உச் கோட்டையும் தாக்குதல் இன்றியே பணிந்தது. எனினும் குஜராத்தின் சாளுக்கியர்அபு மலையில் கோரி முகமதுவுக்கு ஒரு பங்கரத் தோல்வியைக் கொடுத்தனர் **(1179)** இந்தத் தோல்விக்குப் பிறகு கோரி முகமது, தமது படையெடுப்பின் போக்கை மாற்றிக்கொண்டு சிந்துவிலும் பஞ்சாபிலும் தமது நிலையை உறுதிப்படுதிக்கொண்டார்.
- **பிருத்விராஜ் சௌகான்:** ஆஜ்மீர் சௌகான்களின் இராணுவ முக்கியத்துவத்துவம் வாய்ந்த தபர்ஹிந்தா(பட்டிண்டா) கோட்டையை முகமது கோரி தாக்கினார். ஆஜ்மீர் அரசர் பிருத்திவிராஜ் சௌகான், தபர்ஹிந்தாவுக்கு அணிவகுத்துச் சென்று 1991இல் **முதலாவது தரெய்ன் போரை** நிகழ்த்தினார். இந்தப் போரில் ஒரு முழுமையான வெற்றியை பிருத்விராஜ் பெற்றார். இப்போரில் முகமது கோரி காயமடைந்தார்.
- 1992 இல் **இரண்டாவது தரெய்ன் போரில்** கோரியின்ஆற்றலைப் பிருத்விராஜ் குறைத்து மதிப்பிட்டார். கோரிக்கு எதிராக ஒரு சிறிய படைக் குழுவுக்கு தலைமையேற்றுச் சென்றதனால் தோல்வியடைந்து சிறைபிடிக்கபட்டார். இந்திய வரலாற்றின் திருப்புமுனைகளுள் ஒன்றாக இந்தப்போர் அமைந்தது. ஆஜ்மீரின் ஆட்சியை மீண்டும் பிருத்விராஜிடம் ஒப்படைத்தார். பின்பு இராஜதுரோகக் குற்றம் சாட்டி, அவரைக் கொன்றார். தனது நம்பிக்கைகுரிய தளபதியான குத்புதீன் ஐபக்கை இந்தியப் பகுதிக்கான தனது துணை ஆட்சியாளராக நியமித்தார்.
- **கன்னோசி அரசர் ஜெயசந்திரர்–** கன்னோசி அரசர் ஜெயசந்திரரை எதிர்த்துப் போர்புரிய மீண்டும் விரைவிலேயே முகமது கோரி இந்தியா வந்தார். கோரியை எதிர்த்த போரில் ராஜபுத்திரத் தலைவர்கள் யாரும் ஜெயச்சந்திரனை ஆரிக்கவில்லை. அவர்கள் பிருதிவிராஜ் பக்கம் நின்றனர். இதனால் தனிமைப்பட்டு நின்ற ஜெயசந்திராவை எளிதாக வென்ற முகமது கோரி, ஏராளமான கொள்ளைச் செல்வத்துடன் திரும்பினார். திரும்பும் வழியில், சிந்து நதிக் கரையில் தங்கியிருந்தபோது, அடையாளம் தெரியாதவர்களால் கொல்லப்பட்டார்.
- **ராஜபுத்திர அரசுகள்** – பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ராஜபுத்திர அரசான கூர்ஜர பிரதிகார் மற்றும் ராஷ்டிரகூடர் ஆகிய வலுவான இரண்டு அரசுகள் தங்கள் அதிகாரத்தை இழந்தன. முதன்மையான இரு சௌகான் அரசர்களான விக்ராஜ்,பிருத்விராஜ்,பரமர், வம்சத்தின் போஜர், கடவாலா அரசன் ஜெயசந்திரா, சந்தேலரான யசோதவர்மன், கீர்த்தி வர்மன் ஆகிய அனைவரும் வலுவாக இருந்தனர்.
    - டோமர் – தில்லி
    - சௌகான் – ராஜஸ்தான்
    - சோலங்கி – குஜராத்
    - பரமர் – மால்வா
    - கடவாலா – கன்னோசி
    - சந்தேலர் – பந்தேல்கண்ட்
- ராஜபுத்திரர்கள் போர்ப் பாரமபரியம் கொண்டவர்கள். துருக்கியரும் ராஜபுத்திரும ஒரே மாதிரியான ஆயுதங்களையே பயன்படுத்தினர். எனினும் படை ஒழுங்கிலும் பயிற்சியிலும் ராஜபுத்திரர்கள் கவனமின்றியிருந்தனர். உலகப் புகழ்பெற்ற கஜீராஹோவிலிருந்து ஆட்சிபுரிந்த பந்தேல்கண்ட் சந்தேலர்களால் கட்டப்பட்டது.

- **தில்லி சுல்தானிய பேரரசு: (1206–1526)**

மம்லக் ஆட்சி 1210–1290	கில்ஜி ஆட்சி 1290–1320	துக்ளக் ஆட்சி 1320–1414	சையது வம்சம் 1414–1415	லோடி வம்சம் 1451–1526
குத்புதீன் ஐபக் 1206–1210				
சம்சுதீன் இல்துமிஷ் 1210–1236	ஜலாலுதீன் கில்ஜி 1290–1296	கியாசுதீன் துக்ளக் 1320–1421	கிசர்கான் 1414–1421	பஹ்லுல் லோடி 1451–1489
நசிர் அல்–தின் முகமது II 1246-1266	அலாவுதீன் கில்ஜி 1296–1316	முகமது–பின்–துக்ளக் 1324–1351		சிக்கந்தர் லோடி 1489–1517
கியாசுதீன் பால்பன் 1266–1287	முபாரக் ஷா கில்ஜி 1316–1320	பெரோஸ் துக்ளக் 1351–1388		இப்ராஹிம் லோடி 1517–1526

அடிமை வம்சம்

- முகமது கோரி இறந்த பிறகு குத்புதின் ஐபக் அரியணை ஏறினார். ஆனால் அவரது மாமனார் இல்திஸ் ஆட்சிக்கு ஓர் அச்சுறுத்தலாகவே இருந்தார். இந்த வம்சத்தின் மூன்று முக்கியமான ஆட்சியாளர்கள்:
  - குத்புதீன் ஐபக்,
  - இல்துமிஷ்,
  - பால்பன்.
- அடிமை வம்சத்தை **மம்லக்** வம்சம் என்றும் கூறுவர். மம்லக் என்பதற்கு உடைமை என்று பொருளாகும். இது **ஓர் அடிமை** எனபதற்கான அரபுப் தகுதிப் பெயருமாகும்.

குத்புதீன் ஐபக் (1206–1210)

- குத்புதீன் ஐபக், சிறுவனாக இருந்த போதே கஜினியில் ஓர் அடிமையாக சுல்தான் முகமது கோரிக்கு விற்கப்பட்டார். அவரது திறமையையும் விசுவாசத்தையும் கண்ட முகமது கோரி, இந்தியாவில் தான் வெற்றிபெற்ற ஒரு மாகாணத்திற்கு பொறுப்பு ஆளுநராக அவரை நியமித்தார்.
- பீகாரையும் வங்கத்தையும் கைப்பற்றுவதற்கு ஆப்காஸ்தானிலிருந்து வந்த முகமது–பின்–பக்தியார் கில்ஜி என்ற ஒரு துருக்கியத் தளபதி குத்புதீன் ஐபக்–கிற்கு உதவினார். குத்புதீன் ஐபக் நான்கு ஆண்டுகள் (1206–1210) ஆட்சி புரிந்தார். அவர் புத்திசாலி என்றும் நேர்மையான நிர்வாகி என்றும் பெயரெடுத்தார்.
- புகழ்பெற்ற நாளந்த பௌத்த பல்கலைக்கழகத்தை அழித்தவர் பக்தியார் கில்ஜி என்று கருதப்படுகிறது. சீனா பயணி யுவாண் சுவாங் தனத பயணக் குறிப்புகளில் நாளந்தா குறித்து விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். நாளந்த நூலகத்தில் இருந்த இலக்கணம்,இலக்கியம்,தர்க்கம், வானியல், மருத்துவம் குறித்த நூறாயிரக்கணக்கான கையெழுத்துப் பிரதிகளும் நூல்களும் துருக்கியச் சூறையாடலில் அழிந்தன.
- 1210 இல் லாகூரில் செளகான் (குதிரை போலோ) எனும் விளையாட்டின் போது நிகழ்ந்த ஒரு விபத்தில் இறந்தார்.

இல்துமிஷ் (1210–1236)

- சம்சுதீன் இல்துமிஷ் (1210–1236) துருக்கிய இனத்தை சார்ந்த குப்புதீன் ஐபக்கின் அடிமை, இல்துமிஷ்–இன் மேல்தட்டு அடிமைகளின் பலரும், துருக்கிய, மங்கோலிய வழித்தோன்றல்கள், அவர்களை புக்காரா, சாமர்கண்ட், பாக்தாத் போன்ற வணிக மையங்களிலிருந்து வணிகர்கள் தில்லிக்கு அழைத்துவந்தனர். மற்ற இனங்களைச் சேர்ந்த (குறிப்பாக மைய இந்தியாவின் மிஹிரிலிருந்து சிறைப்பிடிக்கப்பட்ட ஹிந்து கான் போன்ற) சில அடிமைகளும் இருந்தனர். எனினும் இவர்கள் அனைவருக்குமே துருக்கியப் பட்டங்களை சம்சுதீன் இல்துமிஷ், கொடுத்தார். தனது மேல்தட்டு நம்பியிருந்தார். தொலையிலுள்ள இடங்களில் அவர்களையே ஆளுநர்களாகவும் தளபதிகளாகவும் நியமிக்கிற வழக்கத்தையும் கைக்கொண்டார்.

- பண்டகன் என்பது பண்ட என்பதன் பன்மையாகும். இச்சொல்லுக்கு படை அடிமை என்று பொருள். வட இந்தியாவில் குரித் பண்டகன் மொய்சுதீன் கோரியின் அடிமைகளாவர். இவர்களுக்கு எஜமானர்கள் **நிஸ்பா** என்ற பெயர்களை சூட்டினர். மொய்சுதீன் அடிமை, மொய்சு எனும் நிஸ்பாவை கொண்டிருப்பார். சம்சுதீன் இல்துமிஷின் அடிமை, ஷம்ஸி பண்டகன் என்று குறிப்பிடுவார்.
- குத்புதீனின் அடிமையும் மருமகனுமான சம்சுதீன் இல்துமிஷ், குத்புதீன் ஐபக்கின் மகன் ஆரம் ஷா ஆட்சிக்கு வருவதைத் தடுத்து, தானே தில்லியின் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தார். தனது ஆட்சிக் காலத்தில் அவர் குவாலியர்,ரான்தம்பூர்,அஜ்மீர்,ஜலோர் ஆகிய இடங்களில் ராஜபுத்திரர்களுக்கிடையே நிலவிய குழப்பங்களை முடித்துவைத்தார்.
- லாகூரிலும் முல்தானிலும் நசுருதீன் குபச்சாவின் படையை எதிர்த்து வெற்றிபெற்றார். வங்க ஆளுநர் அலிவர்தனின் சதியையும் முறியடித்தார். மங்கோலிய செங்கிஸ்கானுக்கும் மத்திய ஆசியாவின் காரிஸ்மி ஷா ஜலாலுதீனுக்கும் இடையே போர்ப்பகை இருந்தது. இல்துமிஷ்டம் ஜலாலுதீன் ஆதரவு கேட்டார். இல்துமிஸ் ஆதரவு தர மறுத்துவிட்டார்.
- ஜலாலுதீனை அவர், ஆதரித்திருந்தால் இந்திய வரலாறு பெரிதும் மாறி இருந்திருக்கும். மங்கோலியர்கள் இந்தியாவை எளிதில் நாசம் செய்திருப்பார்கள். இல்துமிஷ் இன் ஆட்சி தில்லியில் 243 அடி உயரமுள்ள குதுப் மினார் என்ற ஒரு வெற்றித்தூணைக் கட்டிமுடித்ததற்கும் சுல்தான்கள் ஆட்சி காலத்தின் இரண்டு அடிப்படை நாணயங்களான செப்பு, வெள்ளி தங்காவை அறிமுகம் செய்ததற்கும் குறிப்பிடத்தகுந்தது.
- அடிமை வம்ச மரபுகள் பலவீனமானவை என்பதால், இல்துமிஷ் இறந்த பிறகு அவரது வாரிசுகள் ஆட்சிக்கு வருவது எளிதாக இல்லை. ஒரு பத்து ஆண்டுகளுக்குள், ஒரு மகன், ஒரு மகள் (சுல்தானா இரஸியா) மற்றொரு மகன், ஒரு பேரன் எனப் பலரும் ஆட்சிக்கு வந்தனர். இறுதியில் அவரது கடைசி மகள் சுல்தான் இரண்டாம் நசிர் அல்லுதீன் முகமது (1246–66) அரசரானார். இல்துமிஷின் வாரிசுகள் தங்கள் தந்தையாரால் நியமிக்கப்பட்ட தளபதிகளையும் ஆளுநர்களையும் எதிர்த்து போரிட்டுத் தோற்றனர்.
- மூத்த பிரபுக்களாகிய அவர்கள் தொடர்ந்து தில்லி அரசியலில் தலையிட்டனர். இல்துமிஷ் வாரிசுகளுக்கு நிபந்தனைகள் விதித்து வந்தனர். மூத்த அரச குடும்ப அடிமைகளுக்கு மாற்றாக இளைய தலைமுறையினரை சுல்தான்நியமித்தபோது, அவர்களுக்கு முன்னே அதிகாரம் செலுத்தியவர்களுக்கு நிகரான வலிமையான ஒன்றுபட்ட சுல்தானிய அரசு பற்றி அரசரக்கிருந்த கண்ணோட்டத்தை அவர்கள் பெற்றிருக்கவில்லை.
- கிழக்கே நவீன வங்கம், மேற்கே பஞ்சாப், சிந்து மாகாணங்களில் நியமிக்கப்பட்ட அடிமை அளுநர்கள் தில்லியின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறி சுதந்திர அரசுகளாக அறிவித்தனர். தில்லி சுல்தானிய **மைய ஆட்சிப் பகுதியிலிருந்த அடிமை ஆளுநர்களும்** தங்களை நிலைப்படுத்திக் கொண்டும் பக்கத்திலுள்ள குறுநிலத் தலைவர்களுடன் அணி சேர்ந்தும் சுல்தானுக்கு கட்டுப்பட மறுத்தனர்.
- ஷம்ஸியின் அடிமைகளுக்கும் அடுத்தடுத்து வந்த தில்லி சுல்தான்களுக்கும் இடையில் இருபதாண்டுகளுக்கு மோதல்கள் நிகழ்ந்தன. அதன் பிறகு 1254 இல் வடமேற்கில் ஷிவாலிக் ஆட்சிப் பகுதிகயின் தளபதியாக இருந்த உலுக்கான, தில்லியைக் கைப்பற்றினார். உலுக்கான், இல்துமிஷ் ஆட்சியின் போது அடிமையாகவும் இளைஞராகவும் இருந்தவர். அவர் (சுல்தானுக்குத் துணையாக இருந்த) ஆட்சி அதிகாரப் பிரதிநிதி என்று பொருள்படும் **நயிப்–இ–முல்க்** என்று பட்டம் சூட்டிக்கொண்டார். பிறகு 1266 இல் சுல்தான் கியாஸ்–உத்–தின் பால்பனாக தில்லி ஆட்சியைக் கைப்பற்றினார்.
- இல்துமிஷ் நாற்பதின்மர் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அவர்களிடமிருந்து தெரிவு செய்து இராணுவத்திலும் குடிமை நிர்வாகத்திலும் நியமித்தார். இல்துமிஷ் இறந்த பிறகு ருக்னுத்தின் பொரோஸை அரசனாக்கவேண்டும் என்ற விருப்பத்தை புறந்தள்ளும் அளவுக்கு அந்த நாற்பதின்மர் குழு வலுமிக்கதாயிற்று, எனவே அந்த நாள்பதின்மர் அமைப்பு சுல்தானியத்தின் நிலைத்தன்மைக்கு பெரிய அபாயத்தை ஏற்படுத்துகிறது என்று கூறி அதை பால்பன் ஒழித்தார். இதன் மூலம் **துருக்கிய பிரபுக்கள்** ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். அலாவுதீன கில்ஜி ஒற்றர்களைப் பணியமர்த்தி, துருக்கியப் பிரபுக்களின் கள்ளத்தனமான நடவடிக்கைகள் ஏதேனும் இருந்தால் தம்மிடம் நேரடியாகத் தெரிவிக்குமாறு பணித்து அவர்களுக்கு எதிராக கடுமையான நடடிக்கை எடுத்தார்.
- இல்துமிஷ் கட்டி முடித்த போது 72.5 மீட்டர் உயரமிருந்த குதுப் மினார், ஃபெரோஸ் ஷா துக்ளக் மேற்கொண்ட பழுதுநீக்கம் பணிகளால் 74 மீட்டராக உயர்ந்தது. 379 படிகள் கொண்ட மினார், அதன் உயரத்துக்காகவும், மாடிகளை அடையாளப்படுத்துகிறது துருத்தி நிற்கிற உப்பரிகைகளுக்காகவும், படிப்படியான கோபுரச் சரிவுக்காகவும், கோபுரத்தைச் சுற்றிலுமுள்ள சரிவான விளிம்பு அலங்கரிப்புகள் ஒரு வளைவு தோற்றத்தைத் தருவதற்காகவும் சிறப்புடையது.

இரஸியா சுல்தானா (1236–1240)

- இவர் பேரரசர் இல்துமிஷின் மகள். இரஸியா அரியணை ஏறுவதற்கு துருக்யி பிரபுக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஏராளமான தடைகளைக் கடந்தே இரஸியா பேரரசியாகப் பதவி ஏற்றார். மொராக்கோ நாட்டைச் சேர்ந்த பயணி, இபின் பதூதாவின் கூற்றுப் படி **குதிரை மீது ஆண்கள் சவாரி செய்வதைப் போல், கையில் வில் அம்புடன், அரச பரிவாரங்கள் சூழ இரஸியாவும் சாவரி செய்தார். தனது முகத்துக்கு அவர் திரையிடவில்லை.** ,இருப்பினும் அவர் மூன்றரை ஆண்டுகளே ஆட்சி புரிந்தார். ஜலாலுதீன் யாகுத் என்ற ஓர் அபிசீனிய அடிமையை அவர் குதிரை இலாயப் பணித்துறைத் தலைவராக (அமீர்–இ–அகுர்) ஓர் உயர்ந்த பதவியில் அமர்த்தினார். இது, துருக்கிய பிரபுக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.
- யாகுத்துக்கும் அரசி இரஸியாவுக்கும் இருந்த நெருக்கத்தைப் பெரிதுப்படுத்த, பிரபுக்கள், அரசியைப் பதவியிலிருந்த இறக்க முயன்றனர். இரஸியாவுக்க பொதுமக்கள் ஆதரவு இருந்ததால், தில்லியில் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தெற்குப்த பஞ்சாபில் கலகக்கார ஆளுநர் அல்துனியாவைத் தண்டிப்பதற்கு அவர் நடவடிக்கை மேற்கொண்டிருந்த சந்தப்பத்தைச் சதிகாரர்கள் பயன்படுத்தி அவரை ஆட்சியிலிருந்து அகற்றினார்.

பால்பன் (1266–1287)

- பால்பன் அரசரானதும் தில்லி சுல்தானியத்தில் குழப்பங்கள் விளைவித்த பிரபுக்கள் அரசியல் சூழ்ச்சிகள் முடிவுக்குவந்தன. பால்பன், தனது ஆட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள, அடங்க மறுத்த ஆளுநர்கள் மீதும் அவர்களின் உள்ளூர் கூட்டாளிகள் மீதும் தாக்குதல் தொடுத்தார். தில்லியைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தோவாபிலும் நிகழ்ந்த பால்பனின் தாக்குதல்களை பரணி குறிப்பிடுகிறார்.
- இந்தத் தாக்குதல்களின்போது காடுகள் அழிக்கப்பட்டன. புதிய சாலைகள் அமைக்கப்பட்டன. காடுகள் அழிக்கப்பட்ட புதிய நிலங்கள், புதிதாகப் படையில் சேர்ந்த ஆப்கானியர்களுக்கும் மற்றவர்களுக்கும் குத்தகையில்லா நிலங்களாக (மப்ருஸி) வழங்கப்பட்டு, அவை பயிரிடப்பட்டன. வணிகத் தடங்களையும் கிராமச் சந்தைகளையும் பாதுகாக்கப் புதிய கோட்டைகள் கட்டப்பட்டன.
- **பால்பனும் சட்ட ஒழுங்கும்:** கங்கை,யமுனை நதிகள்இடையிலான தோவாப் பகுதிகளில் சட்ட ஒழுங்கு நிலைமை சீர்குலைந்தது. ராஜபுத்திர ஜமீன்தார்கள் கோட்டைகள் அமைத்தனர். சுல்தாணின் ஆணைகளை மீறினார். வடமேற்கில், மேவாரைச் சுற்றிய அடர்ந்த காட்டுப் பகுதிகளில் வாழ்ந்த **மியோ** என்ற ஓர் இஸ்லாமியச் சமூகம் கொலையிலும் கொள்ளையிலும் ஈடுபட்டிருந்தது. இதை ஒரு சவாலாக ஏற்ற பால்பன் தாமே முன்னின்று மேவாரைச் சேர்ந்தவர்கள் மீது தாக்குதல் தொடுத்தார்.
- படைவீரர்கள், மியோக்களைத் தேடிப் பிடித்துக் கொன்றனர் தோவாப் பகுதியில் ராஜபுத்திர அரண்கள் அழிக்கப்பட்டன. காடுகள் அழிக்கப்பட்டன.சாலைகள் பாதுகாக்கவும் கலகங்களைக் கையாளவும் அப்பகுதி முழுவதும் ஆப்கான் படை வீரரர்கள் குடியமர்த்தப்பட்டனர்.
- **துக்ரில் கானை தண்டிக்கின்ற தாக்குதல் :** பால்பன், கலகங்களை ஈவிரக்கமின்றி ஒடுக்கினார். தனக்குப் பிடித்த ஓர் அடிமையான துக்ரில் கானை வங்கத்தின் ஆளுநராக நியமித்தார். ஆனால் விரைவிலேயே துக்ரில் கான் வெளிப்படையாகவே கலகம் செய்தார். அதை ஒடுக்குவதற்கு, பால்பன் அனுப்பிவைத்த அவத் ஆளுநர் அமின்கான், பணிந்து பின்வாங்கினார். இதனால் ஆத்திரமடைந்த பால்பன் மேலும் இரு படைப் பிரிவுகளை அனுப்ப அவையும் தோல்வியைத் தழுவின.
- அடுத்தடுத்து ஏற்பட்ட பின்னடைவுகளால் அவமானப்பட்ட பால்பன், தாமே வங்கத்திற்குச் சென்றார். பால்பன் நெருங்கிவிட்டதைக் கேள்வியுற்ற துக்ரில் கான் தப்பியோடினார். பால்பன், அவரைப் பின் தொடர்ந்து முதலில் லக்நௌதிக்கும் பிறகு திரிபுராவை நோக்கியும் சென்றார். அங்கே துக்ரில்கானைப் பிடித்த பால்பனின் படைவீரர்கள் அவரைக் கொன்றனர். பிறகு வங்கத்தின் ஆளுநராக பால்பனின் மகன் புக்ரா கான் நியமிக்கப்பட்டார். பால்பன் இறந்த பிறகு புக்ரா கான் ஒரு சுதந்திர அரசாட்சியாகப் பிரிந்து போனாரேயன்றி தந்தையின் அரியணையைக் கோரவில்லை. இதனால் தில்லியில் ஒரு தலைமை நெருக்கடி ஏற்பட்டது. மேலும் அவரது மகன் கைகுபாத் சிற்றின்பத்தில் வீழ்ந்து கிடந்தார்.
- **மங்கோலிய அச்சுறுத்தலுக்கு எதிரான நடவடிக்கைகள்** –மங்கோலியர்களின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் விதமாக தனது ராணுவத்தை பால்பன் பலப்படுத்திக் கொண்டார். படிண்டா, சுனம், சாமானா ஆகிய இடங்களில் இருந்த

கோட்டைகளில் கூடுதல் படைகளை நிலைநிறுத்தி வலுப்படுத்தினார். அதே நேரத்தில், ஈரானின் மங்கோலிய பொறுப்பு ஆளுநரும் செங்கிஸ்கானின் பேரனுமான ஹீலுக் கானுடன் நல்லுறவைப் பேணுவதற்கு அவர் முயற்சி செய்தார்.

- சட்லஜ்க்கு அப்பால் முன்னேறி வரமாட்டோம் என்ற வர்க்குறுதியை மங்கோலியரிடமிருந்து பால்பன் பெற்றார். இதை 1259இல் தில்லிக்கு ஒரு நல்லெண்ணக் குழுவை அனுப்பிவைத்து உலுக்கான் குறிப்பால் உணர்த்தினார்
- மங்கோலியத் தாக்குதல்களிலிருந்து எல்லைப் பகுதிகளைக் காப்பதற்காக தனது விருப்பத்துக்குரிய மகன் முகமது கானுக்கு முல்தானின் ஆளுநர் பொறுப்பு அளித்திருந்தார் பால்பன். உலுக்கானுடன் நட்புறவு இருந்தபோதிலும் ஒரு மங்கோலியரோடு ஏற்பட்ட ஒரு மோதலில் முகமது கான் கொல்லப்பட்டார். இதனால் மனமுடைந்த பால்பன், 1286 இறந்து போனார்.
- பூமியின் *கடவுளின் பிரதிநிதியாகத்* தாம் ஆட்சி செய்வதாக பால்பன் கூறினார்.

கில்ஜிகள் வம்சம் (1290–1320)

ஜலாலுதீன் கில்ஜி (1290–1296)

- பால்பனின் மகன் கைகுபாத் அரசராகும் தகுதியற்றவராக இருந்தார். இதனால் அவரது மூன்று வயது மகன் கைமர்ஸ் அரச கட்டிலில் அமர்த்தப்பட்டார். பேரரசின் அமைச்சர்கள், பொறுப்பு ஆளுநர் போன்றறோரை நியமிப்பதில் ஒத்த கருத்து ஏற்படவில்லை, இதையொட்டிப் பிரபுக்கள் சதி செய்தனர்.
- இக்குழப்பத்திலிருந்து ஒரு புதிய தலைவராகப் படைத் தளபதி மாலிக் ஜலாலுதீன் கில்ஜி மேலெழுந்தார். கைகுபாத்தின் பெயரால் அரசாட்சி செய்த ஜலாலுதீன், அவரைக் கொல்வதற்கு ஒரு அதிகாரியை அனுப்பினார்.விரைவிலேயே ஜலாலுதீன் முறைப்படி அரசரானார்.
- ஜலாலுதீன் ஓர் ஆப்கானியர், துருக்கியர் அல்லர் என்ற அடிப்படையில் அவருக்கு எதிர்ப்பிருந்தது. உண்மையில் கில்ஜிகள், ஆப்கானிஸ்தானில் துருக்கியர் ஆட்சி நிறுவப்படுவதற்கு முன்பே அங்கு குடியமர்ந்தவர்கள். எனவே அவர்கள் ஆப்கானியமயமான துருக்கியர்களாவர்.
- பிரபுக்கள் பலரையும் விரைவிலேயே ஜலாலுதீன் வசப்படுத்திவிட்டார். இதனால் கில்ஜிகள் மீது தொடக்கத்தில் அவர்களுக்கு இருந்த வெறுப்பு மறைந்து அவர் பல சண்டைகளில் வெற்றிபெற்றார், மேலும் தமது முதிய வயதில்கூட மங்கோலியக் கூட்டங்களை எதிர்த்து அணிவகுத்த அவர், இந்தியாவுக்குள் அவர்கள் நுழைவதை வெற்றிகராமாகத் தடுத்து நிறுத்தினார்(1292)
- காரவின் பொறுப்பு ஆளுநரான ஜலாலுதீன் கில்ஜியின் ஓர் உடன் பிறந்தார் மகனும் மருமகனுமான அலாவுதீன், இச்சமயத்தில் மால்வா மீது படையெடுத்தார். இந்தப் படையெடுப்பில் பெருமளவு செல்வம் கிடைத்தது. இந்த வெற்றி, தக்காணத்திலிருந்த யாதவ அரசின் தலைநகர் தேவகிரியைச் சூறையாடுவதற்கான ஓர் உந்துதலை அவருக்கு அளித்தது.
- டெல்லி திரும்பிய அலாவுதீனின் ஏற்பாட்டில் ஜலாலுதீன் கொல்லப்பட்டார் அலாவுதீன் அரியணை ஏறினார். இவ்வாறாக, ஜலாலுதீனின்த ஆறாண்டுக் கால ஆட்சி 1296 இல் முடிவுக்கு வந்தது.

அலாவுதீன் கில்ஜி (1296–1316)

- அலாவுதீன், எதிரிகளை ஒழித்து தில்லியில் தமது இடத்தைப் பலப்படுத்திக்கொள்வதில் முதலாண்டு முழுவதும் கழித்தார். விரைவிலேயே அவர், பிரபுக்கள் மீது ஒரு உறுதியான பிடியை வைத்துக்கொள்வதில் தமது கவனத்தைச் செலத்தினார். உயர் அதிகாரிகள் பலரையும் பணிநீக்கம் செய்தார். குறிப்பாக, ஜலாலுதீனுக்கு எதிராகத் தங்களின் விசுவாசத்தை மாற்றிக்கொண்டு, சந்தர்ப்பத்துக்கேற்பத் தம்மிடம் இணைந்த பிரபுக்களிடத்தில் அவர் மிகக் கடுமையான நடந்துகொண்டார்.
- மங்கோலியப் படையெடுப்புகள் அலாவுதீனுக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்தன. அவரது இரண்டாவது ஆட்சி ஆண்டில் (1298) மங்கோலியர் தில்லியை உக்கிரமாகத் தாக்கினர். அலாவுதீனின் படையால் அவர்களை எதிர்த்து நிற்க இயலவில்லை.
- அடுத்த ஆண்டில் மேலும் அதிக படைகளுடன் மங்கோலியர் மீண்டும் தாக்கிய போது, தில்லியின் புறநகர மக்கள் நகரத்துக்குள் தஞ்சமடைந்தனர். இந்தச் சவாலை அலாவுதீன் தானே எதிர்கொள்ள வேண்டியிருந்ததது.
- இதன்விளைவாக நிகழ்ந்த மோதலில் மங்கோலியர் நிலைகுலைந்தனர். இருப்பினும் 1305இல் தோஆப் சவெளிப் பகுதியின் வழியே நுழைந்து மீண்டும் தாக்கினர். இம்முறை மங்கோலியரை தோற்கடித்த சுல்தானின் படை, அதிக எண்ணிக்கையில் அவர்களைச் சிறைப்பிடித்துக் கொன்றது. ஆனாலும் மங்கோலியர் அச்சுறுத்தல்கள் தொடர்ந்தன. கடைசி மங்ககோலியர் அச்சுறுத்தல்கள் தொடர்ந்தன. கடைசி மங்கோலியத் தாக்குதல் 1307 –08

நிகழ்ந்தது. இது மிகப் பிரமாண்மாக இருந்தது. ஆனாலும், மங்கோலியருக்குக் கிடைத்த கடுமையான பதிலடி, அதன் பிறகு அவர்கள் உள்ளே நுழைந்து தாக்காதவாறு தடுத்தது.

- **இராணுவத் தாக்குதல்கள்–** தேவகிரி (1296,1307,1314), குஜராத் (1299–1300, ரான்தம்பூர் (1301), சித்தூர் (1303), மால்வா (1305) ஆகிய இடங்களின் மீது அலாவுதீன் நடத்திய தாக்குதல்கள், அவருடைய ராணுவ, அரசியல் அதிகாரத்தைப் பறைசாற்றவும், செல்வளத்தையுப் பெருக்கவுமே நடத்தப்பட்டன, தீபகற்பத்தில் அவருடைய முதல் இலக்கு மேற்கு தக்காணத்தில் இருந்த தேவகிரியாகும்.
- 1307 ஆம் ஆண்டு தேவகிரி கோட்டையைக் கைப்பபற்றுவதற்காக மாலிக் காபூர் தலைமையில் ஒரு பெரும்படையை அலாவுதீன் அனுப்பினார். இதைத் தொடர்ந்து தெலுங்கானா பகுதியிலுருந்த வாரங்கல்லின் காகதீய அரசர் பிரதாபருத்ரதேவா 1309 இல் தோற்கடிக்கப்பட்டார்.
- 1310 இல் தோல்வியடைந்த ஹொய்சாள அரசர் மூன்றாம் வீரவல்லாளன், அவரது செல்வங்கள் அனைத்தையும் தில்லித் துருப்புகளிடம் ஒப்படைத்தார். பிறகு மாலிக் காபூர் தமிழ் நாட்டுக்குப் புறப்பட்டார். கனத்த மழை,வெள்ளத்தால் காபூர் முன்னேறுவது தடைபட்டபோதும், சிதம்பரம், திருவரங்கம் ஆகிய கோயில் நகரங்களையும், பாண்டியர் தலைநகரம் மதுரையையும் சூறையாடினார். தமிழ்ப் பிரதேசங்களிருந்த இஸ்லாமியர், மாலிக் காபூரை எதிர்த்து, பாண்டியர் தரப்பில் நின்று போரிட்டனர் என்பது இங்குக் குறிப்பிடத்தகுந்தது. 1311 இல் ஏராளமான செல்வக் குவியலுடன் மாலிக் கபூர், தில்லி திரும்பினார்.
- **நிர்வாகச் சீர்திருத்தங்கள்** – பரந்த நிலப்பரப்புகளை வென்றதைத் தொடர்ந்து, அரசை நிலைப்படுத்தும் நோக்கில் விரிவான நிர்வாகச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. நிலப்புரபுக்களிடமிருந்து நிலத்தை பறித்தார். கிராம அலுவலர்கள் அனுபவித்துவந்த மரபுரிமைகளைப் பறித்து, பரம்பரை கிராம அலுவலர்களின் அதிகாரங்களைத் தடை செய்தார். ஊழல் வயப்பட அரச அலுவலர்களைக் கடுமையாகத் தண்டித்தார். மதுவும் போதை மருந்துகளின் பயன்பாடும் தடைசெய்தார். சூதாடிகள் நகரத்துக்கு வெளியே விரட்டப்பட்டனர். இருப்பினும் மது விலக்கு பெருமளவில் மீறப்பட்டதால், கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் கட்டாயம் அலாவுதீனுக்கு ஏற்பட்டது.
- உழவர்களிடமிருந்து நிலவரிகள் நேரடியாக வசூலிக்கப்பட்டன. தனது பேரரசின் அனைத்துப் பகுதிகளுடனும் தொடர்பில் இருப்பதற்காக அலாவுதீன் அஞ்சல் முறையை ஏற்படுத்தினார்.
- **சந்தைச் சீர்திருத்தங்கள் –** அலாவுதீன் ஒரு பெரிய, திறமை வாய்ந்த படையைப் பராமரிக்க வேண்டியிருந்தது. படை வீரர்களுக்குக் கொள்ளையில் பங்கு தராமல் பணமாக ஊதியம் வழங்கிய முதல் சுல்தான் அலாவுதீன் ஆவார். அத்தியாவசிய பொருள்களின் விலையை கட்டுப்படுத்தும் பொருட்டு கள்ளச்சந்தை, பதுக்கல், குறித்த விவரங்களை சேகரிப்பதற்கு விரிவான ஒற்றாடல் வலைப்பின்னலை ஏற்படுதினார்.
- விலை ஒழுங்குமுறை விதிகளை மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். ஏதேனும் எடைக் குறைவு கண்டுபிடிக்கப்பட்டால், விற்பவரின் உடலிருந்து அதற்குச் சமமான எடையுள்ள சதை வெட்டி அவரது கண் முன்னே வீசப்பட்டது.
- மதத்தின் பரிந்துரைகள் குறித்தும தாம் கவலைப்படவில்லை என்று கூறிகொண்டு அலாவுதீன் கில்ஜி முழு அதிகாரத்தை கோரினார். இருப்பினும் அரசு மக்கள் நலனுக்கு இன்றியமையாதவற்றையே செய்தார்.
- **அலாவுதீன் வாரிசுகள்** – அலாவுதீன் தனது மூத்த மகன் கிசர் கானை தமது வாரிசாக நியமித்தார். இருப்பினும் அந்நேரத்தில் அலாவுதீன் நம்பிக்கைகுரியவராக மாலிக் காபூர் இருந்தார். எனவே, மாலிக் கபூர் தாமே அரசாங்க அதிகாரத்தை எடுத்துக்கொண்டார். ஆனால் ஆட்சிக்கு வந்த 35 நாட்களில் பிரபுக்களால் அவர் கொள்ளப்பட்டார். இதன் காரணமாக மங்கோலியருக்க எதிரான படையெடுப்புகளில் பங்கேற்ற திறமைசாலியான *காஸி மாலிக்,* 1320 இல் கியாசுதீன் துக்ளக் ஆக ஆட்சியில் அமர்ந்தார்.
- பதவியிலிருந்த கில்ஜி ஆட்சியாளர் குஸ்ரௌவைக் கொன்றதன் மூலம் கில்ஜி வம்சத்திலிருந்து எவரும் அரசுரிமை கோருவதைத் தடுத்தார். இவ்வாறாக 1414 வரையிலும் நீடித்த துக்ளக் வம்சத்தின் ஆட்சி தொடங்கியது.

துக்ளக் வம்சம் (1320–1414)

கியாசுதீன் துக்ளக் (1320–1324)

- கியாசுதீன் துக்ளக், பிரபுக்கள் வகுப்பினருடன் சமரசக் கொள்கையைப் பின்பற்றினார். அவரது ஐந்தாவது ஆட்சி ஆண்டில் 1325ல் கியாசுதீன் இறந்தார். மூன்று நாள்கள் கழித்து *ஜூனாகான்* என்ற இயற்பெயர் கொண்ட அவரது மகன் ஆட்சிக் கட்டில் ஏறியதோடு முகமது–பின்–துக்ளக் எனும் பட்டத்தை சூட்டிக்கொண்டார்.

முகமது–பின்–துக்ளக் (1324–1351)

- முகமது–பின்–துக்ளக், கற்றவர், நற்பண்பு நிறைந்தவர், திறமை வாய்ந்த அரசர் என்றபோதிலும் இரக்கமற்றவர், கொடூரமானவர், நியாயமற்றவர் என்றும் பெயர் பெற்றிருந்தார். தில்லிக்கு அருகே மீரட் வரையிலும் அணிவகுத்து வந்த மங்கோலியப் படையை முகமது–பின்–துக்ளக் திறமையாகப் பின்வாங்கச் செய்தார். ஆனால், அலாவுதீன் போல் தமது திட்டங்களைப் வெற்றிகரமாகச் செயல்படுத்தும் மனவு றுதி முகமதக்கு இல்லை.
- **தலைநகர் மாற்றம்–** தில்லியிலிருந்து தென்னிந்தியாவை ஆள்வது கடினம் என்று முகமது–பின்–துக்ளக் கருதினார், எனவே தலைநகரை மகாரஷ்டிரத்திலுள்ள தொளலாபாத்திற்கு (தேவகிரி) மாற்றினார். ஆனால் இந்தத் திட்டம் தோல்வியைத் தழுவியது. தௌலதாபாதிலிருந்து வட இந்தியாவை ஆள்வது கடினம் என்று முகமது–பின்–துக்ளக் விரைவிலேயே உணர்ந்தார். எனவே மீண்டும் தலைநகரை தில்லிக்கு மாற்ற உத்தரவிட்டார்.
- **அடையாள நாணயங்கள் –** முகமது–பின்–துக்ளக் மேற்கொண்டளை அடுத்த முக்கியமான பரிசோதனை அடையாள நாணயங்களை அறிமுகப்படுத்தியதாகும். இந்த நாணய முறை ஏற்கனவே சீனாவிலும் ஈரானிலும் நடைமுறையிலிருந்தது. இந்தியாவில் நாணயங்களின் மதிப்பு அதிலிருந்த வெள்ளி உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஆனால் துக்ளக்கின் முயற்சி காலத்திற்கு முன் எடுத்த முயற்சியாகிவிட்டது.
- வெண்கல நாணயங்களைப் போலியாக அடிப்பது எளிதாகியிருந்தது. அரசாங்கம் அதைத் தடுக்க முடியவில்லை வெண்கல நாணயங்களைத் திரும்பப்பெற வேண்டிய அளவுக்குப் புதிய நாணயங்கள் மதிப்பிழக்கத் தொடங்கின இதனால் மீண்டும் வெள்ளி நாணயங்களை அரசாங்கம் வெளியிட்டு அதை ஈடு செய்ய வேண்டியதாயிற்று.
- வேளாண்மையை விரிவாக்குகிற முகமது–பின்–துக்ளக்கின் திட்டம் புதுமையானது என்றாலும் அதுவும் துயரகரமாகத் தோற்றது. தோவாப் சமவெளிப் பகுதியில் ஒரு நீண்ட காலக் கடும் பஞ்சம் ஏற்பட்டிருந்த நேரத்தில் இம்முயற்சி எடுக்கப்பட்டது.
- வேளாண்மையை கவனித்துக்கொள்ள ஒரு தனித் துறையை **திவான் –இ–அமிர் கோஹி** சுல்தான் ஏற்படுத்தினார். கால்நடைகள், விதைகளை வாங்க கடன் வழங்கப்பட்டது. அவரது ஒடுக்குதல் நடவடிக்கைகள் மக்களை மேலும் அவரிடமிருந்து அந்நியப்படுத்தன. வங்கம்,மதுரை, வாரங்கள், ஆவாத், குஜராத், சிந்து ஆகிய தொலைதூரப் பகுதிகள் ஒன்றுக்குபின் ஒன்றாக கிளர்ந்தெழுந்தன. கிளர்ச்சியாளர்களுடன் சண்டையிடவதிலேயே முகமது தமது கடைசி நாட்களை கழித்தார். குஜாரத்தில் ஒரு கிளர்ச்சித் தலைவரை விரட்டிச் செல்வதில் ஈடுபட்டிருந்தபோது உடல்நலம் கெட்டு, தனது 26வது ஆட்சியாண்டில் 1351ல் முடிவில் முகமது –பின்– துக்ளக் இறந்தார்.
- முகமது –பின்–துக்ளக் ஆட்சியின் முடிவுக் காலத்தில் ஒரு சில சிறிய பகுதிகளைத் தவிர, எதிரெதிர் முனைகளிலுள்ள காஷ்மீரத்தையும் கேரளத்தையும் உள்ளடக்கிய இந்தியா முழுவதும் தில்லியின் நேரடி ஆட்சிக்குள் வந்தது.
- இந்தியாவை வென்றடக்கிய முகமது கோரி, தமது தங்க நாணயங்கள் சிலவற்றில் பெண் கடவுள் லட்சுமியின் உருவத்தைப் பொறித்திருக்கிறார். 1325 இல் முகமது பின் துக்ளக் சமணத் துறவிகளுக்கு அனைத்து அரசு அலுவலர்களும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என் ஓர் ஆணை வெளியிட்டார். அவரே கூட ஹோலி பண்டிகையில் பங்கெடுத்ததோடு யோகிகளுடன் நல்ல நட்புடன் இருந்திருக்கிறார்.

ஃபெரோஸ் துக்ளக் (1351–1388)

- ஃபெரோஸின் தந்தை ரஜப், கியாசுதீன் துக்ளகின் தம்பி ஆவார். இருவருமே அலாவுதீன் கிலுஜியின் ஆட்சிக் காலத்தில் குரசனிலிருந்த வந்தவர்கள். ரஜப், ஒரு ஜாட் இளவரசியை மணந்திருந்தார். ஃ பெரோஸிக்கு ஏழு வயதான போது அவர் இறந்துவிட்டார். கியாசுதீன் ஆட்சிக்கு வந்த போது, ஃபெரோஸை, 12,000 குதிரை வீரர்களைக் கொண்ட சிறப்புப் படைக்குத் தளபதியாகக்கினார்.
- பின்னர், சுல்தானியத்தின் நான்கு பிரிவுகளில் ஒன்றின் பொறுப்பு ஃபெரோஸிடம் கொடுக்கப்பட்டது. முகமது–பின்–துக்ளக், தனது வாரிசை அறிவிக்காமாலேயே இறந்திருந்தார். முகமதுவின் சகோதரி, தனது மகளுக்கு ஆட்சி உரிமை கோரியதைப் பிரபுக்கள் ஆரிக்கவில்லை

- முகமதுவின் வாழ்நாள் நண்பர் கான்–இ–ஜஹான் பரிந்துரைத்த முகமது வின் மகன் ஒரு குழந்தையாக இருந்தார். எனவே ஃபெரோஸ் ஆட்சியில் அமர்ந்தார். ஃபெரோஸ் துக்ளக்கிடம் ஓர் உயரதிகாரியாக இருந்த புகழ் பெற்ற கான்–இ–ஜஹான். இஸ்லாமுக்கு மாறிய ஒரு பிராமணர். ஆதியில், கண்ணு என்று அறியப்பட்ட அவர். (குற்போதையை தெலுங்கானாவின்) வாரங்கல்லில் நிகழ்ந்த சுல்தானியப் படையெடுப்பு ஒன்றின் போது சிறைப் பிடிக்கப்பட்டவர்.
- **பிரபுக்களுடன் சமரசக் கொள்ளகை** –பிரவுக்கள் வகுப்பினரிடமும் மதத் தலைவர்களிடமும் ஃபெரோஸ் துக்ளக், சமரசக் கொள்கையைக் கடைப்பிடித்தார். அலாவுதீன் ஆட்சியில் பறிக்கப்பட்ட சொத்துகள் மீண்டும் அவர்களிடயே ஒப்படைக்கப்பட்டன. அலாவுதீன் ஆதிரிக்காத ஒரு நடைமுறையான,அலுவலர்களைப் பர ம்பரையாகப் பணியமர்த்துகிற முறையை ஃபெரோஸ் மீண்டும் அறிமுகப்படுத்தினார்.
- அரசாங்க அலுவலர்களின் ஊதியத்தை அதிகப்படுத்தினார். அடிமைகள் குறித்து ஃபெரோஸீக்கு ஒரு மெய்யான அக்கறை இருந்தது. அவர்களது நலன்களைக் கவனிப்பதற்காகத் தனியே ஓர் அரசுத் துறையை ஏற்படுத்தினார். 1,80,000 அடிமைகளின் நல்வாழ்க்கையில் அடிமைகள் நலத்துறை, அக்கறை செலுத்தியது. கைவினைத் தொழில்கள் பயிற்சி அளிக்கப்பட்டு, அரசாங்கத்தின் தொழில்கூடங்களில் அவர்கள் பணியமர்த்தப்பட்டனர்.
- ஃபெரோஸ் துக்ளக், போர்கள் எதவும் தொடுக்கவில்லை. இருப்பினும், கிளர்ச்சியை முடிவுக்கக் கொண்டு வருவதற்கான அவரது வங்கப் படையெடுப்பு ஒரு விதிவிலக்காகும். அவரது படை வங்கத்திலிருந்து திரும்புகிற வழியில் திடீரென்று ஒரிசாவுக்குள் நுழைந்தது. திறை செலுத்த ஒப்புக்கொளும் வாக்குறுதியை அப்பகுதி அரசரிடமிருந்து பெறுவதற்கு இது உதவியது. அவரது காலத்தில் இரண்டு மங்கோலிய தாக்குதல்களே நிகழ்ந்தன. அவ்விரண்டுமே வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன.
- அவரது காலத்திய ஒரே பெரிய இராணுவப் படையெடுப்பு, சிந்துவின் மீது தொடுக்கப்படடதாகும் (1362). எதிரிகளை வழியிலேயே நிலைகுலைய வைத்து ஃபெரோஸ் வெற்றிபெற்றார். எனினும் அவரது எதிரிகளும் அப்போது ஏற்பட்ட ஒரு பஞ்சமும் சுல்தானுக்கும் அவரது படைக்கும் ஒரு கடுமையான சோதனையை ஏற்படுத்தினர். இருப்பினும் ஃ பெரோஸின் இராணுவம் சமாளித்து சிந்துவை அடைந்தது. சிந்துவின் அரசர், சுல்தானிடம் சரணடையவும் திறை செலுத்தவும் இணங்கினார்.
- **மதக்கொள்கை** வைதீக இஸ்லாமை ஃபெரோஸ் ஆதரித்தார். மதத் தலைவர்களை மன நிறைவுறச் செய்வதற்காக தமது அரசை இஸ்லாமிய அரசாக அறிவித்தார். இஸ்லாமியர் அல்லாதவர்களுக்கு **ஜிஸியா** எனும் வரியை விதித்தார். பிராமணர்களும் அதை செலுத்துமாறு கட்டாயப்படுதினார். இருப்பினும் புதிய இந்துக் கோயில் கட்டுவதற்க தடைவிதிக்கப்படவில்லை. இந்தியாவின் முதன்முறையாக இஸ்லாமியர் அல்லாதார் மீது **ஜிஸியா** விதித்தவர் குத்புதீன் ஐபக். முகலாய அரசர் அக்பர், பதினாறம் நூற்றாண்டில் ஜிஸியாவை ஒழித்தார் என்றாலும் பதினேழாம் நூற்றாண்டில் ஔரங்கசீப் அவ்வரியை மீண்டும் அறிமுகப்படுத்தினார்.
- **பொதுப்பணிகள்** பால பாசனத் திட்டங்களை ஃபெரோஸ் மேற்கொண்டார். சட்லெஜ் நதியிலிருந்து ஹன்ஸிக்கு வெட்டிய கால்வாயும் யமுனையில் வெட்டிய மற்றொரு கால்வாயும் வலுவான பொதுப்பணி வளர்ச்சிக் கொள்கையைச் சுட்டுகின்றன.
- தனது மகன் பதே கானையும் பேரன் கியாசுதீனையும் தில்லி சுல்தானியத்தின் இணை ஆட்சியாளர்களாக ஆக்கிய பிறகு 1388 இல் ஃபெரோஸ் இறந்தார். பெரோஸ் இறந்து ஆறு ஆண்டுகளுக்குள் அவரைத் தொடர்ந்து நால்வர் ஆட்சிபுரிந்தனர்.
- **தைமூரின் படையெடுப்பு :**கடைசி துக்ளக் அரசர் நசுருதீன் முகமது ஷா (1394–1412) இவரது ஆட்சியின் போதுதான் மத்திய ஆசியாவிலிருந்து தைமூரின் படையெடுப்பு நிகழ்ந்தது. தைமூர் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மாபெரம் மங்கோலிய அரசர் செங்கிஸ்கானுடன் இரத்த உறவு இருப்பதாகக் கூறதக்க துருக்கியர். உள்ளபடியே எந்த எதிர்ப்புமின்றித் தைமூர் தில்லியைச் சூறையாடினார்.
- தைமூர் வந்து சேர்ந்த செய்தியைக் கேட்ட சுல்தான் நசுருதீன் தில்லியை விட்டுத் தப்பி ஓடிவிட்டார். கொல்லர், கல்தச்சர், தச்சர் போன்ற இந்திய கைவினைஞர்களைச் சிறைபிடித்துச் சென்ற தைமூர், தனது தலைநகர் சாமர்கண்டில் கட்டடங்களை எழுப்புவதில் அவர்களை ஈடுபத்தினார். நசுருதீன் 1412 வரையிலம் சமாளித்து ஆட்சி செய்யமுடிந்தது.

சையது வம்சம் (1414–1451)

- பஞ்சாப் போர் அணிவகுப்புகளில் தன் நலன்களை மேற்பார்வை பார்ப்பதற்கு சிசர் கானைத் தனது துணையாக நியமித்தார் தைமூர். கிசர்கான் (1414–1421) தானே சென்று தில்லியைக் கைப்பற்றி சையது வம்ச ஆட்சியை நிறுவினார். கிசர் கான் நிறுவிய சையது வம்சத்தில் 1451 வரையிலும் நான்கு சுல்தான்கள் ஆண்டனர்

- முற்பட்ட சையது சல்தான்கள், தைமூரின் மகனுக்கு திறை செலுத்தி ஆட்சி புரிந்தனர். அவர்களின் ஆட்சியை, யாஹியா–பின்–அஹ்மத் சிரிந்தி இயற்றிய தாரிக்–இ–முபாரக்–சாஹி குறிப்பிடுகிறது. அவர்களது ஆட்சியின் இறுதியில் பேரரசு தில்லி நகரத்துக்குள் சுருங்கி விட்டது.
- தில்லி சுல்தானிய ஆட்சியின் ஒட்டுமொத்த வரலாற்றில் ஆட்சி உரிமையைத் தாமாகவே துறந்து, தில்லிக்கு வெளியே ஒரு சிறிய நகருக்குச் சென்று. முழுமையாக முப்பது ஆண்டுகள் மனநிறைவோடும் அமைதியாகவும் வாழ்ந்த ஒரே சுல்தான் சய்யித் வம்சத்தின் வந்த ஆலம் ஷா –Abraham Eraly. the Age of Wrath.

லோடி வம்சம் 1451–1526)

- லோடி வம்ச ஆட்சியை நிறுவியவர் பஹ்லுல் லோடி ஆவார். இவரது ஆட்சியின் போது வங்கத்தில் ஆட்சி புரிந்த ஷார்கி அரசு கைப்பற்றப்பட்டது. இவரது மகன் சிக்கந்தர் லோடி (1489–1517) 1504 இல் தலைநகரை தில்லியிலிருந்து ஆக்ராவுக்கு மாற்றினார். கடைசி லோடி ஆட்சியாளரான இப்ராஹிம் லோடி, முகலாய வம்ச ஆட்சியை நிறுவிய முதலாம் பானிபட் போரில் (1526) பாரிடம் தோற்றார்.
- **அரசும் சமூகமும்:** சுல்தானிய அரசு முறையான இஸலாமிய அரசாக கருதப்பட்டது. கலிபாவின் தலைமையைத் தாங்கள் ஏற்பதாக கூறினாலும் அவர்கள் முழு அதிகாரமுள்ள ஆட்சியாளர்களாக விளங்கினர். இராணுவத் தலைவர் என்ற வகையில் ஆயுதம் தாங்கிய படைகளின் தலைமைத் தளபதி எனும் அவர்களிடமிருந்தது.
- நீதி நிர்வாகத் தலைவர் என்ற முறையில் மேல்முறையீட்டு உச்சநீதிமன்றமும் அவர்கள்தான். இக்தா (முக்திகள் அல்லது வாலிகள்) உரிமையாளர்கள் வரிகள் வசூலித்தனர்) அரச சேவைக்குப் படைக் குழுக்களைப் பராமரிப்பதற்கு சுல்தான்களுக்கு அவர்கள் தேவைப்பட்டனர். சுல்தானின் நேரடி கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள் **கலியா** எனப்பட்டன. இத்தகைய பகுதிகளில் வசூலிக்கும் வருவாயிலிருந்தே சுல்தான்களின் சொந்த படைக்குழுக்களின் (ஹஷ்ம்–இ–கால்ப்) அதிகாரிகளுக்கும் வீரர்களுக்கும் ஊதியம் வழங்கப்பட்டது.
- உற்பத்தி பொருளில் பாதி என்ற அடிப்படையில் நிலிவரி கடுமையாக விதிக்கப்பட்டது. தோவாப் பகுதிகளில் விவசாய கிளர்ச்சியை 1332–34 ஏற்பட்டது. இதனை தொடர்ந்து வந்த பஞ்சமும் உழவர்களுக்கு கடன் வழங்குவதை அடிப்படையாக கொண்ட ஒரு வேளாண் வளர்ச்சித் திட்டத்தை கொண்டு வருமாறு முகமது–பின்–துக்ளக்கை நிர்பந்தித்தன. மாநில ஆளுநர்கள் முக்தி எனப்பட்டனர்.
- **சமயம் :** இஸ்லாமியர்கள் ஓர் இறை வழிபாட்டைப் பின்பற்றினர். பதிமூன்றாம் நூற்றாண்டில் கர்நாடகத்தில் பசவண்ணர் நிறுவிய லிங்காயத் பிரிவு ஒரு கடவுளையே (பரமசிவன்) நம்பியது. அப்பிரிவு சாதிப் பாரபட்சங்களை நிராகரித்தது. பெண்களுக்கு உயர் நிலையை அளித்தது. இதற்கு இணையாக தமிழ்நாட்டில் சித்தர்கள் விளங்கினர்.
- தென்னிந்திய பக்தி இயக்கத்தையும் ஓரிறைக் கொள்கையையும் வட இந்தியாவுக்கு கொண்டு சென்றதில் இரண்டு பேர் முக்கியமான பங்கு வகித்தனர். அதிகம் அறியப்படாதவர்கள். மகாராஷ்டிரத்தை சேர்ந்த நாமதேவர் ஒருவர், உருவ வழிபாட்டையும் சாதிப் பாகுபாடுகளையும் இவர் எதிர்த்தார், ஓரிறைக் கொள்கையை கடுமையாகப் பின்பற்றினார். இரண்டாமவர் இராமானுஜரைப் பின்பற்றிய இராமானந்தர்.
- பல கடவுள் வழிபாட்டாளர்களையும், இந்துக்களையும், மங்கோலியர்களையும், நாத்திகர்களையும் பஞ்சணையில் அமர வைத்து சகல மரியாதைகளும் செய்கிறார்கள் என்று இஸ்லாமிய ஆட்யிாளர்கள் குறித்து பரணி வெறுப்புடன் எழுதுகிறார். மேலும் இந்துக்கள் எவ்வளவு வரி செலுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்து கோயில்கள் கட்டிக்கொள்ளவும், திருவிழாக்கள் நடத்தவும், இஸ்லாமிய வேலையாட்களை வைத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறார்கள். இஸ்லாமியர்களுக்கு நிகராக ராய், ராணா, தாகூர்,ஷா,மஹ்தா, பண்டிட் போன்ற அரசு பட்டங்கள் இந்துகளுக்கு வழங்கப்படுகின்றன என்றும் பரணி எழுதுகிறார்.
- **பொருளாதாரம்–** பதினான்காம் நூற்றாண்டில் தில்லியும், தௌலாபாத்தும் (தேவகிரி) உலகின் மாபெரும் நகரங்களாக விளங்கின. முல்தான்,காரா, அவத்,கௌர், கேம்பே(கம்பயத்), குல்பர்காபோன்ற இதர பெரிய நகரங்களும் இருந்தன. பதிமூன்றாம் நூற்றான்டின் தொடக்கத்திலிருந்தே செப்புக் காசுகளோடு தங்க, வெள்ளிக் காசுகளையும் தில்லி சுல்தான்கள் வெளியிடத் தொடங்கினர். மேற்கு எல்லைப்பகுதிகளில் மங்கோலியப் படையெடுப்புகள் வெற்றிபெற்றபோதிலும், தரை வழியிலும் கடல் வழியிலும் நிகழ்ந்த இந்தியாவின் அயல் வணிகம், இக்காலத்தில் கணிசமாக வளர்ச்சி பெற்றது என்கிறார் இர்ஃபான் ஹபீப்.
- **தொழில்துறை வல்லமை :** சீனர் கண்டுபிடித்து அரபியர் கற்றுக்கொண்ட காகிதம் தயாரிக்கும் தொழில்நுட்பம், தில்லி சுல்தானியர் காலத்தில் இந்தியாவில் அறிமுகமானது. சீனர் கண்டுபிடித்த நூற்புச் சக்கரம், பதினான்காம் நூற்றாண்டில்

ஈரான் வழியே இந்தியாவுக்கு வந்தது. இது நூற்பவர்களின் உற்பத்தி திறனை ஆறு மடங்கு அதிகரிக்க உதவியது. நூல் உற்பத்தியை மாபெரும் அளவுக்கு பெருக்கியது.

- பதினைந்தாம் நூற்றாண்டில் வங்கத்தில் பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள் நிறுவப்பட்டன. அதிகமாக செங்கல், கலவை பயன்படுத்தி நிலவறைத் தொழில்நுட்பத்தோடு கூடிய கட்டட நடவடிக்கைகள் ஓர் புதிய உச்சத்தை எட்டின.
- **கல்வி** – இஸ்லாமிய உலகக் கல்வி மரபுகள் அறிமுகமாயின. அடிப்படையாக இருந்தது மக்தப். உயர் கல்வியின் மேலும் ஒழுங்கப்படுத்தப்பட்ட வடிவம் மதரஸா (கற்றுக்கொள்கிற இடம்) பதினோறாம் நூற்றாண்டில் மத்திய ஆசியாவிலும் ஈரானிலும் இத பரவலாக நிறுவபப்பட்டது.
- ஃபெரோஸ் துக்ளக், தில்லியில் ஒரு பெரிய மதராஸாவைக் கட்டினார்.அந்த அற்புதமான கட்டடம் இன்றும் இருக்கிறது. முதன்மையாக அங்கே **குர்ஆன் உரை, இறைதூதரின் வாக்குகள், இஸ்லாமியச் சட்டங்கள் (ஃபிக்)** கற்பிக்கப்பட்டன என்று பரணியின் விவரணையிலிருந்து தெரிகிறது.
- சிக்கந்தர் லோடி (1489–1517) தமது ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் முழுவதும் பல்வேறு நகரங்களில் மக்தப்களிலும் மதராஸாக்களிலும் ஆசிரியர்களை நியமித்தார். அவர்களும் நிலமும் மானியமும் ஒதுக்கினார் என்பது திட்டவட்டமாக தெரிகிறது.
- **வரலாற்றியல் :** அரபியரின் சிந்துப் படையெடுப்பு குறித்து எழுதப்பட்ட நூல் சச்நாமா (ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு அரபிய மூல நூலின் பதிமூன்றாம் நூற்றாண்டுப் பாரசீக மொழிபெயர்ப்பு). தில்லியில் சுமார் 1260இல் எழுதப்பட்ட மின்ஹஜ் சிராஜின் தபகத்–இ–நசிரியைப் போன்று பிற்கால வரலாறெழுதலின் ஒத்திசைவும் தர்க்க ஒழுங்கும் இல்லாமல் இருக்கிற போதிலும் அது வரலாற்று ஆராய்ச்சியில் முன்னேற்றத்தை காட்டுவதாக உள்ளது..
- **சூஃபியிசம்** –பதின்மூன்று பதினான்காம் நூற்றாண்டுகளில் சூஃபிகள் மத்தியில் செல்வாக்கு மிக்க இரு பிரிவுகள் தோன்றின. முல்தானை மையமாகக் கொண்ட சுஹ்ரவாத்தி, தில்லியிலும் பிற இடங்களிலும் கோலோச்சிய சிஸ்டி ஆகியன
- **சாதியும் பெண்களும்:** அடிமை முறை ஏற்கனவே இந்தியாவில் நிலவியது. இருப்பினும் 13 மற்றும் 14 ஆம் நூற்றாண்டுகளில் அடிமைகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தது. போர், வரி செலுத்தத் தவறுதல் ஆகிய இரு நேர்வுகளாலும் மக்கள் அடிமைப்படுத்தப்பட்டனர். வீட்டுவேலை செய்வதிலும் கூடவே கைத்தொழிலிலும் அடிமைகள் ஈடுபடுத்தப்பட்டனர்.
- கிராம சமுதாயமும் சாதி அமைப்பும் மாற்றமின்றி நடைமுறையில் நீடித்தது. பெண்கள் கல்வியறிவு பெறுவது அவமானதிற்குரியதாக கருதப்பட்டது. மேலும் குடும்ப உறுப்பினர் தவிர வேறெந்த ஆண்களோடும் எவ்விதத் தொடர்புமின்றி ஸெனானாவில் (பெண்கள் வசிப்பிடத்தில்) ஒதுக்கி வைக்கப்பட்டனர். சதி வழக்கம் அறியப்பட்டிருக்கவில்லை.
- சுல்தான் பெரோஸ் துக்ளக் 1,80,000 அடிமைகள் வைத்திருந்ததற்காகப் புகழ்பெற்றவர். இதில் 12,000 பேர் கைவினைஞர்களாகப் பணிபுரிந்தனர். அவரது முதன்மை அமைச்சர் கான் ஜஹான் மக்பூல் 2000 த்துக்கும் அதிகமான பெண் அடிமைகளை வைத்திருந்தார்.
- **கட்டடக் கலை** : வளைவு, கவிகை, நிலவறைகள், சுண்ணாம்புக் கலவைப் பயன்பாடு, சாராசெனிய அம்சங்கள் ஆகியவை இந்தியாவில் அறிமுகமாயின. பளிங்குக்கல், சிகப்பு,சாம்பல் மஞ்சள் நிற மணற்கல் பயன்பாடு கட்டங்களுக்குப் பேரழகூட்டின. சுல்தான்கள், ஏற்கனவே இருந்த கட்டடங்களைத் தம் தேவைகளக்கு ஏற்ப மாற்றிக்கொண்டனர்.
- இதற்கு தில்லியில் குதுப் மினாருக்குப் பக்கத்தில் அமைந்துள்ள குத்புருதீன் ஐபக்கின் குவ்வாத் உல் இஸ்லாம் மஸூதியும் அஜ்மீரிலுள்ள அத்ஹை–தின்–கஜோப்ராவும் சிறப்பான எடுத்துக்காட்டுகள். ஒரு சமண மடாலயத்தின் மீது கட்டப்பட்ட ஒரு இந்துக் கோயில், குவ்வாத் உல் இஸ்லாம் மஸூதியாக மாற்றி அமைக்கப்பட்டது. ஒரு மஸூதியாக மாற்றப்படுவதற்கு முன்பு அத்ஹை–தின்–க–ஜோப்ரா, ஒரு சமண மடலாயமாக இருந்திருக்கிறது.
- முதல் மெய்யான வளைவால் அலங்கரிக்கப்பட்டது பால்பனின் கல்லறை. குவ்வாத் உல் இஸ்லாம் மஸூதிக்கு ஒரு நுழைவாயிலாக அலாவுதீன் கில்ஜி கட்டிய அலாய் தர்வாஸா முதல் உண்மையான கவிகையாகும்.
- கியாசுதீன் துக்ளக்கும், முகமது பின் துக்ளக்கும் தலைநகர் தில்லியின் துக்ளகாபாத்தில் யமுனை நதியைத் தடுத்து செயற்கை ஏரி ஒன்றை உருவாக்கி அதன் நடுவில் அமைந்திருந்த கோட்டை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.
- கியாசுதீன் துக்ளகின் கல்லறை ஓர் உயர்ந்த மேடையின் மீது கவிகைகளைக் கொண்ட சாய்வுச் சுவர் அமைப்பை அறிமுகப்படுத்தியது. ஃபெரோஸ் துக்ளகின் கட்டடங்கள், குறிப்பாக அவரது உல்லாச விடுதியான ஹவுஸ் காஸ்,

இந்தியா, சாராசெனிய அம்சங்களை ஒன்று விட்டு ஒன்றான அடுக்களில் இணைத்திருப்பது, ஒருங்கிணைப்பு உணர்வைக் காட்டுகிறது.

- **இசையும் நடனமும்:** ரபாப், சாரங்கி போன்ற இசைக்கருவிகளை இஸ்லாமியர் கொண்டுவந்தனர். இந்திய இசை, உலகிலுள்ள மற்ற அனைத்து இசைகளை விடவும் மேம்பட்டது என்று அமீர் குஸ்ரு தெரிவித்தார்.
- சூஃபி துறவி பிர் போதன் இக்காலத்தின் ஒரு மிகப்பெரும் இசைஞராகக் கருதப்பட்டார். பெரோஸ் துக்ளக் இசையில் காட்டிய ஆர்வம், **ராக் தர்பன்** என்ற இந்திய சமஸ்கிருத இசை நூலைப் பாரசீக மொழிக்கும் பெயர்த்தத்தன் மூலம் ஒத்திசைவுக்கு இட்டுச்சென்றது. இசைஞர் நுஸ்ரத் காட்டன் நடனக்காரர் மிர் அப்ரோஸ், ஜலாலுத்தீன் கில்ஜி அரசவையில் இருந்ததை ஜியாவுத்தீன் பரனி பட்டியலிடுகிறார்.
- **இலக்கியம்** :பாரசீக உரைநடைலும் கவிதைகளிலும் ஒரு முக்கியமான நபராக விளங்குபவர் அமிர்குஸ்ரு. தமது **ஒன்பது வானங்கள்** நூலில் தம்மை ஓர் இந்தியன் என்று அழைத்துக்கொள்வதில் அவர் பெருமிதம் கொள்கிறார். இந்நூலில் அவர் இந்தியாவின் வானிலை, மொழி,சமஸ்கிருதம்,கலைகள்,விலங்குகளையும் கூடப் போற்றுகிறார்.
- சூஃபி துறவி நிசாமுதீன் அவுலியாவின் உரையாடல்களை **ஃபவாய் துல் ஃபவாத்** என்ற ஒரு நூலை அமிர் ஹாஸ்ஸன் தொகுத்தார். தில்லியிலுள்ள 1276 ஆம் ஆண்டுக்குரிய செவ்வியல் சமஸ்கிருத கல்வெட்டு (பால பவோலி), சுல்தான் பால்பனின் நல்லாட்சியின் விளைவாக விஷ்ணு பகவான், எந்தக் கவலைகளுமின்றிப் பாற்கடலில் துயில்கிறார் என்கிறது.

பாமினி–விஜயநகர அரசுகள்

- 14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தில்லி சுல்தானியம் தெற்கே விரிவாக்கத்திற்குத் தாயரானபோது தக்காண தென்னிந்தியவும் நான்கு அரசுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவை
  - தேவகிரி – யாதவர் (மேற்குக் தக்காணம்/தற்போதைய மகாராஷ்டிரா)
  - துவாரசமுத்திரம்– ஹொய்சாலர் (கர்நாடகா),
  - வாரங்கலின் – காகதியர் (தெலுங்கானவின் கிழக்கு பகுதி)
  - மதுரை – பாண்டியர் (தென் தமிழ்நாடு)
- 1304, 1310 ஆகிய ஆண்டுகளில் மாலிக் காபூரின் இரு படையெடுப்புகளில் இந்தப் பழைய அரசுகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோற்கடிக்கப்பட்டன. சேர்த்துவைக்கப்பட்டிருந்த தங்கள் செல்வங்களின் பெரும் பகுதியை தில்லி சுல்தானியத்தின் போது இழந்தன.
- முகமது பின் துக்ளக்கின் தலைநகர் மாற்றத்திற்கு பின் அவரின் தென்பகுதி மாகாண ஆளுநர்கள் தங்களை சுதந்திர அரசர்களாக அறிவித்தனர். இதன் காரணமாக 1333 இல் மதுரையில் சுதந்திரமான மதுரை சுல்தானியம் உருவானது.
- இதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பாக 1336 ஆம் ஆண்டுகளுக்கு முன்பாக 1336 ஆம் ஆண்டு விஜயநகர அரசு சங்கம வம்ச சகோதரர்களான ஹரிஹரர், புக்கர் ஆகியோரால் துங்கபத்ரா நதிக்கரையில் விஜயநகரைத் தலைநகராகக் கொண்டு தற்போதைய ஹம்பி தோற்றுவிக்கப்பட்டது.
- அடுத்த நூற்றாண்டுகளில் இவ்வரசுகள் தங்களுக்குள் வளமான ரெய்ச்சூர் தோவாப் பகுதி, குதிரை இறக்குமதி, கோவா, ஹோனாவர் துறைமுகங்களை கட்டுப்படுத்தவும் இடைவெளியில்லாமல் கடுமையகப் போரிட்டனர்.
- **ஆதாரங்கள்** – விஜயநகர அரசவையின் ஆதரவில் எழுதப்பட்ட மனுசரிதம், சாளுவபையுதயம் போன்ற இலக்கியங்கள் விஜயநகர அரசின் வம்சாவளி, அரசியல் மற்றும் சமூகம் பற்றிய தகவல்களைத் தருகின்றன.
- தெலுங்கு மொழியில் எழுதப்பட்ட இலக்கியமான நாரயவாசகமு கிருஷ்ணதேவராயரின் கீழ் இருந்த நாயங்காரர் முறை பற்றிய ஆர்வமூட்டக்கூடிய தகவல்களைத் தருகின்றது. 14 முதல் 16 ஆம் நூற்றாண்டு வரை தென்னிந்தியாவிற்கு வந்த பல அயல்நாட்டுப் பயணிகளின் குறிப்புகள் மூலம் அரசியல், சமூகம், பண்பாடு ஆகிய அம்சங்களின் முக்கியத்துவதை அறிய உதவுகிறது.

வ. எண்	பெயர்	நாடு	வருகைபுரிந்த ஆண்டு
1.	இபன் பாதுதா	மொராக்கோ	1333–45
2.	அப்துர் ரசாக்	பாரசீகம்	1443–45

3.	நிகிடின்	ரஷியா	1470–74
4.	டோமிங்கோ பயஸ், நூனிஸ்	போர்ச்சுகல்	1520–37

- விஜயநகர அரசர்கள் **வராகன்** என்று குறிப்பிட்ட தங்க நாணயங்களை அதிக எண்ணிக்கையில் வெளியிட்டனர். (இது தமிழில் பொன் என்றும் கன்னடத்தில் ஹொன்னு என்றும் குறிப்பிடப்பட்டது) இந்தத் தங்க நாணயங்கள் வெவ்வேறு இந்து தெய்வங்களின் உருவங்களையும் காளை, யானை , கண்ட பெருண்டா என்ற கற்பனைப் பறவை (இரட்டைக் கழுகு வடிவத்தில் உள்ள இந்த உருவம் தனது அலகிலும் நகத்திலும் யானையைக் கொத்திக்கொண்டிருப்பதாகக் காணப்படுகிறது) ஆகிய விலங்கு உருவங்களையும் தாங்கியுள்ளன. நாணயத்தில் அரசனுடைய பெயர் நகரி அல்லது கன்னட எழுத்து வடிவத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

பாமினி அரசு

- **அலாவுதீன் ஹசன் பாமன்ஷா (1347–1358)**– கிருஷ்ணா, துங்கபத்ரா நதிகளுக்கிடையிலான வளமான ரெய்ச்சூர் பகுதியைக் கைப்பற்றுவதில் பாமினி, விஜயநகர அரசுகளிடையே ஏற்பட்ட போட்டி பாமினி அரசின் தொடக்க கால வரலாற்றைக் குறிப்பதோடு மட்டுமல்லாமல் இரு நூற்றாண்டுகளுக்கு நீடித்த அம்சமாக இருந்தது.
- 1345 இல் வடக்குக் கர்நாடகாவில் ஜாபர்கான் தன்னைச் சுதந்திர அரசராக அறிவித்துக்கொண்டு தன் தலைநகரை தேவகிரியிலிருந்து குல்பர்காவிற்கு மாற்றினார். அவர் பாமன் ஷா என்ற பட்டத்தை சூடி பாமினி அரசவம்சத்தைத் (1347–1527) தோற்றவித்தார்.
- வாரங்கல்லின் கிழக்குப் பகுதி மற்றும் ஒரிசா ஆட்சியாளர்களுக்குத் எதிராக பாமன்ஷா தன் போராட்டத்தைத் தொடங்கினார். தன் பகுதியை நான்காக பிரித்தார் (குல்பர்க்கா, தௌலதாபாத், பீடார், பெரார்). அப்பகுதிகள் **தராப்ஸ்** எனப்பட்டன. பிரிக்கப்பட்ட நான்கு பகுதிகளுக்கும் ஒவ்வொரு ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர்.
- 11 ஆண்டுகள் பாமன்ஷா தன் அரசியல் எதிரிகளை அடக்கி சிறப்பாக ஆட்சி செய்தார். வாரங்கல் மற்றும் ரெட்டி அரசுகளான ராஜமுந்திரி, கொண்டவீடு ஆகியவற்றிடமிருந்து வருடம் தோறும் கப்பம் பெற அவர் மேற்கொண்ட முயற்சி பல போர்களுக்கு இட்டுச் சென்றது. அனைத்திலும் அவர் வெற்றிபெற்றார். இவர் தான் பெற்ற வெற்றிகளை நினைவு கூறும் வகையில் தன் நாணயங்களில் தன்னுடைய பெயரை **இரண்டாம் அலெக்சாண்டர்** என்று பொறித்துக்கொண்டார்.
- **முதலாம் முகமது (1358–1375)** – விஜயநகர அரசுடன் ரெய்ச்சூர் ஆற்றிடைப் பகுதி தொடர்புடைய பல போர்களை அவர் மேற்கொண்டார். 1363இல் வாரங்கல் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றினார். கோல்கொண்டா கோட்டை அவர் வசமானது. அங்கிருந்த கருவூலங்கள், ரத்தினக்கற்கள் பாமினி அரசின் வசமாயின. அங்கிருந்த ரத்தினச் சிம்மாசனம் பாமினி அரசின் சிம்மாசனமாயிற்று.
- ஆகாய நீல வண்ணத்திலுள்ள ரத்தினக்கற்கள் ஓரளவு விலை மதிப்புள்ள கற்காளகும். இம்மாணிக்கக் கற்களினால் இழைக்கப்பட்ட அரியணை பாரசீக அரசர்களின் ஒரு சிம்மாசனமாக இருந்தது என பீர்தௌசீயின் ஷாநாமா குறிக்கின்றது.
- இவரது சிறப்பான நிர்வாக முறை பிற்காலத்தில் மாரத்திய ஆட்சியாளர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. இவர் எட்டு அமைச்சர்கள் கொண்ட குழுவை ஏற்படுத்தினார்.
  - வகில்–உஸ்–சுல்தானா – படைத்தலைவர் (அரசருக்கு அடுத்த நிலையில்)
  - வசீர்–இ–குல் – மற்ற அமைச்சர்களின் பணிகளை மேற்கொள்பவர்
  - அமீர்–இ–ஜீம்லா – நிதியமைச்சர்
  - வசீர்–இ–அஷ்ரப் – வெளியுறவு அமைச்சர். அரசு விவாகரம், அரசு விழா முன்னின்று நடத்தும் பொறுப்புடையவர்.
  - நசீர் – நிதித்துறை இணையமைச்சர்
  - பேஷ்வா – அரசப் படைகளின் பொறுப்பாளர்
  - கொத்வால் – காவல்துறைத் தலைவர், தலைநகரின் நீதிபதி
  - சதர்–இ–ஜஹான் – தலைமை நீதிபதி, சமய அறநிலைத்துறை அமைச்சர்

- வழிப்பறி கொள்ளையர்களுக்கு எதிராக அவர் கடுமையான நடவடிக்கை எடுத்தார். நிறுவன மற்றும் புவியியல் ரீதியில் முகமது ஷா ஏற்படுத்திய ஒருங்கிணைப்பே அவர் அரசுக்கு திடமான அடித்தளத்தை உருவாக்கியது.
- அவர் குல்பர்காவில் இரு மசூதிகளை எழுப்பினார். அதில் ஒரு மசூதி 1367 ஆம் ஆண்டில் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டது. அது சிறந்த கட்டடமாகும். முதலாம் முகமது ஷாவிற்குப் பின் சில சுல்தான்கள் ஆட்சி செய்தனர். அவர்கள் திறமையற்றவர்கள்.
- 1425இல் வாரங்கல் மற்றும் அதன் கிழக்கிலிருந்த பகதிகளை ஒரிசாவின் ஆட்சியாளர்கள் கைப்பற்றினர். இந்நிலையில் தலைநகரம் குல்பர்காவிலிருந்து 1429இல் பீடாருக்கு மாற்றப்பட்டது.
- மூன்றாம் முகமது (1463–1482) காலத்தில் சிறந்த அமைச்சராக விளங்கிய முகமது கவான் சிறந்த அரசியல் இராஜதந்திரியாவார்.
- **கோல்கொண்டா கோட்டை :** ராஜா கிருஷ்ண தேவ் என்ற வாரங்கல்லைத் தலைநகரமாகக் கொண்ட காகத்திய வம்ச அரசர் கட்டிய கோட்டை இது. 1495–1496 இல் இக்கோட்டை சுல்தான் குலிகுதுஷாவிற்கு ஒரு ஜாகீராகத் (நிலமாக) தரப்பட்டது. அவர் அக்கோட்டையைக் கருங்கற்கள் கொண்டு புனரமைத்தார்.
- அதன்பின் அக்கோட்டைப் பகுதி இருந்த நகரம் முகம்மது நகர் எனப்பட்டது. பிற்காலத்தில் பாமினி அரசின் கைவசமாகி,இ அதன்பின்னர் குதுப்ஷாகி வம்ச அரசின் தலைநகரானது. குதுப்ஷாகி வம்சத்தின் ஐந்தாவது சுல்தானான முகம்மது குலி குதுப்ஷா காலத்தில் கம்பீரமான கோட்டையாக கோல்கொண்டா கோட்டை திகழ்ந்தது. பாமினி சுல்தானியத்தின் வீழ்ச்சிக்குபின் இந்நகரம் வளர்ச்சியடைந்தது.
- 17ஆம் நூற்றாண்டில் கோல்கொண்டா ஒரு சிறந்த வைரச் சந்தையாகத் திகழ்ந்தது. கோஹினூர் வைரம் உட்பட மிகச்சிறந்த வைரங்களை உலகிற்கு வழங்கியது. கோல்கொண்டா கோட்டை ஹைதாராபத்திலிருந்து 11 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மலைமீது 120 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கோல்கொண்டா கோட்டை அதன் ஒலி அம்ச அடிப்படையில் சிறந்த கட்டடக் கலையின் அம்சமாகும். இக்கோட்டையின் உயர்ந்த பகுதி பாலா ஹிசார் என்றழைக்கப்படுகிறது.
- இதில் ரகசிய நிலத்தடி சுரங்கப்பாதை உள்ளது. அது தர்பார் அறையிலிருந்து மலையின் கீழுள்ள அரண்மனைக்குச் செல்வதாக சொல்லப்படுகிது. இக்கோட்டையில் அரச அவையும் ஒரு மாளிகையும் உள்ளது.
- கோல்கொண்டா கோட்டையில் குதுப்ஷாகியின் கல்லறையும் உள்ளது. இதில் இருவிதத் தனி வழிகள் உள்ளன. இவை கோல்கொண்டா கட்டடக்கலையின் சிறப்பம்சங்களில் ஒன்றாகத் கருதப்படுகிறது. பீரங்கீகள்,பாலங்கள், அரச அரண்மனைகள், அறைகள், மசூதிகள், தொழுவங்கள் உட்பட நான்கு சிறிய கோட்டைகளும் இதனுள் அடங்கும்.
- இக்கோட்டையின் நுழைவாயில் பகுதி பதேதர்வாசா (அ) வெற்றி நுழைவாயில் என்றழைக்கப்படுகிது. ஔரங்கசீப் எட்டு மாதங்கள் முற்றுகையிட்டு 1687 இல் ஆப்கானிய வாசல் காப்பாளரின் துரோகம் காரணமாக கோல்கொண்டா கோட்டையை அதன் ஆட்சியாளரிடமிருந்து கைப்பற்றினார்.
- **முகமது கவான் –** பாரசீகத்தில் பிறந்த முகமது கவான் புகழ்பெற்ற இஸ்லாமிய சமய வல்லுநராகவும், பாரசீக மொழியில், கணிதத்தில் புலமை பெற்றவராகவும் விளங்கினார்.
- **பீடாரில்** ஒரு மதரசாவை நிறுவிய அவர் அதில் ஒரு பெரிய நூலகத்தையும் அமைத்தார். அந்நூலகத்தில் 3000 கையெழுத்து நூல்கள் இருந்தன. மூன்றாம் முகமதுவின் பிரதமந்திரியாகவும் பாதுகாவலராகவும் இருந்து பாமினி அரசின் வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாக திகழ்ந்தார்.
- பாரசீக வேதியியல் வல்லுநர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் வெடிமருந்தைப் பயன்படுத்தினார். மாகாண ஆளுநர்களின் அதிகாரத்தை கட்டுபடுத்தி சிறப்பான ஆட்சி அமைப்புக்கு கவான் அடித்தளமிட்டார்.
- அரசை எட்டு மாகாணங்களாகப் பிரித்தார். தனி எல்லை பிரிக்கப்பட்டு தனித்தனியே ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். சில மாவட்டங்களை கவானே நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார். அரசு அதிகாரிகளுக்கு ஊதியத்திற்கு பதில் நிலங்கள் தரப்பட்டன.
- தக்காணத்தில் ஆளுநர்களுடையே இருபிரிவுகள் உண்டாயின. அவ்விரு பிரிவினர்
    - தக்காண முஸ்லீம்கள்
    - வெளிநாட்டிலிருந்து வந்த முஸ்லீம்கள்
- இவ்விரு பிரிவினரிடையே ஏற்பட்ட மோதலால் நிர்வாகச் சிர்குலைவும் வீழ்ச்சியும் ஏற்பட்டன. கவானின் வளர்ச்சியால் பொறாமை கொண்ட அவர்கள் கவான் சுல்தானுக்கு எதிராக சதி செய்கிறார் என்றும் போலிக் கடிதத்தை தயாரித்து சுல்தானின் கைகளில் கிடைக்குமாறு செய்தனர்.

- ஏற்கனவே கவான் தன் மீது ஆதிக்கம் செலுத்துவதாக எண்ணிய சுல்தான் அவர்மீது அதிருப் கொண்டு அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றினார். சுல்தான் மூன்றாம் முகம்மது இறந்தபின் பாமினி அரசு வீழ்ச்சியடையத் தொடங்கியது.
- அதன்பின் அவரது வம்சத்தைச் சார்ந்த 5 மன்னர்கள் ஆட்சி செய்தனர். அரசும் நான்கு சுதந்திர அரசுகளாகப் பிரிந்தது (பீஜப்பூர், அகமது நகர், பெரார், கோல்கொண்டா) அதன் ஐந்தாவது பீடார் உருவாக்கப்பட்டது. பிற்காலத்தில் பீஜப்பூர் வலிமையான அரசானது. பீடார், பெரார் போன்றவை அதில் இணைக்கப்பட்டன. அதே நேரத்தில் அகமது நகர், கோல்கொண்டா போன்றவை சுதந்திர அரசுகளாயின.
- பொது எதிரியான விஜநகர அரசை எதிர்க்கும் வகையில் இணைந்து 1565 இல் தலைக்கோட்டை போரில் (ராக்சஷிதங்கடி போர்) விஜயநகர அரசைத் தோற்கடித்தன. ஆனால் தலைக்கோட்டைப் போருக்குப் பின் தக்காண சுல்தானியங்கள் முகலாய அரசுடன் இணைக்கப்பட்டன.

விஜயநகரப் பேரரசு

- சங்கமரின் இரு புதலவர்களான ஹரிஹரர், புக்கர் ஆகியோர் ஹொய்சாள அரசரிடம் சில காலம் பணி செய்த பின்னர் தங்களை சுதந்திர அரசர்களாக நிலைநிறுத்திக் கொண்டு 1336 இல் புதிய அரசுக்கான அடித்தளத்தை அமைத்தனர். தொடக்கத்தில் துங்கபத்திரை நதியின் வடக்குக் கரையில் அனகொண்டி அருகே தலைநகர் அமைந்திருந்தது.
- ஆனால் விரைவில் ஆற்றின் தென்கரையில் அமைந்திருந்த ஹொய்சாள நகரமான ஹொசபட்னா (ஹம்பிக்கு அருகே) என்றும் இடத்திற்கு மாற்றப்பட்டது. தலைநகரம் விரிவுபடுத்தப்பட்ட பின்னர் *வெற்றியின் நகரம்* என்ற பொருளில் *விஜயநகரம்* எனப் புதிய பெயர் சூட்டப்பட்டது.
- அதன் பின்னர் தங்களை கர்நாடக–விஜயநகர அல்லது விஜயநகர அரசர்களாகப் பிரகடனப்படுத்திக் கொண்டனர். 1346ஆம் ஆண்டு ஹரிஹரரின் முடிசூட்டுவிழா கொண்டாடப்பட்டது. வரலாற்றறிஞர்கள் ஹரிஹரர், புக்கர் தொடங்கிய இவ்வரச வம்சத்தை அவரின் தந்தையாரின் பெயரில் அல்லது மூதாதையரின் பெயரில் சங்கம வம்சம் என அழைத்தனர். விஜயநகர அரசர்கள், சாளுக்கியரின் முத்திரையான பன்றி (வராகம்) உருவத்தைத் தங்களது அரச முத்திரையாகக் கொண்டனர்.
- புகழ்பெற்ற சைவத் துறவியும், சமஸ்கிருத அறிஞருமான வித்யாரண்யரின் அறிவுறுத்தலுக்கு இணங்க ஹரிஹரும் புக்கரும் சுல்தான் துக்ளக்கிடம் செய்துவந்த பணியிருந்து விலகி, சுல்தானால் சிறை பிடிக்கப்பட்டபோது முஸ்லீம் மதத்திற்கு மாறியிருந்த இவர்கள் மீண்டும் இந்துக்களாக மாறினர் என்று கூறுப்படுகிறது.
- விஜயநகரப் பேரரசு நிறுவியதில் வித்யாரண்யர் முக்கியப் பங்காற்றினார். ஆனால் இது சந்தேகத்திற்குரியது என்பர். ஏனெனில் சில கல்வெட்டுச் சான்றுகளின்படி வித்யாரண்யர் பதினான்காம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்தவர். அதாவது விஜயநகரப் பேரரசு உருவான அறுபது ஆண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்தவர்.
- விஜயநகர அரசு நான்கு அரச வம்சத்து அரசர்களால் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக ஆளப்பட்டது.
    - சங்கம வம்சம் (1336–1485)
    - சாளுவ வம்சம் (1485–1505)
    - துளுவ வம்சம் (1505–1570)
    - ஆரவீடு வம்சம் (1570–1650)
- விஜயநகர அரசு உருவான நாற்பதாண்டுகளுக்கு உள்ளாகவே ஐந்து சகோதரர்களும் வெவ்வேறு திசைகளில் மேற்கொண்ட படையெடுப்புகளின் விளைவாகக் குறுநில அரசு என்ற நிலையிலிருந்து பெரிய அரசாக மாறியது. கர்நாடக ஹொய்சாள அரசின் இதயமாக இருந்த பகுதிகளான கடற்கரைப்பகுதிகளை கைப்பற்றினர்.
- முதலாம் புக்கரின் ஆட்சிகாலத்தில் தமிழகத்தில் வட பகுதியான சம்புவராயன் ஆட்சிசெய்து வந்த தொண்டை மண்டலப் பகுதியின் மீது கவனம் திரும்பியது. இளவரசர் கம்பணர்–ஆல் (குமார கம்பணர்) தன் நம்பிக்கைகுரிய தளபதி மாரையா நாயக்கரின் உதவியுடன் இப்பணியை வெற்றிகரமாக முடித்தார்.
- மதுரை சுல்தானை 1370இல் கொன்றதன் மூலம் மதுரை சுல்தானிய ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்த பெருமையும் குமார கம்பண்ணாவைச் சாரும். இச்செய்தி குமார கம்பண்ணாவின் மனைவி கங்காதேவி சமஸ்கிருத மொழியில் எழுதிய **மதுரா விஜயம்** எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மதுரை உள்ளிட்ட பாண்டிய நாடு அப்போது விஜயநகர அரசோடு இணையவில்லை. நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் 1500 இல் பாண்டிய நாடு விஜயநகர அரசின் ஒரு பகுதியானது.

விஜயநகர் –பாமினி மோதல்

- கிருஷ்ண, துங்கத்திரை நதிகளுக்கு இடைப்பட்ட வளம் மிக்க ரெய்ச்சூர் பகுதியை இணைத்துக்கொள்ளவும், மேலாதிக்கம் செலுத்தவும் இருவருமே விரும்பினர். பாமினி அரசுகளுக்கும் இந்து விஜயநகர அரசுகளுக்கும் இடையேயான போர்களுக்கு மதம் ஒரு அடிப்படை காரணம் என்றாலும் முஸ்லீம் அரசு அல்லது இந்து அரசுகளான வாராங்கல், கொண்டவீடு, ஒரிசா ஆகியவற்றுடன் போரிட்டபோது முஸ்லீம் அரசுகள் சில சமயம் ஆதரவாக இருந்தன.
- கோவா மற்றும் ஏனைய துறைமுகங்கள் வழியாக நடைபெற்ற குதிரை வாணிகத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதில் ஏற்பட்ட போட்டி இப்போர்களுக்கு மற்றொரு காரணமாகும். தொடர்ந்து போரிட்டுக்கொண்டாலும் கிருஷ்ணா நதியே ஏறக்குறை இவ்விருவரையும் பிரிக்கும் எல்லைக் கோடாக அமைந்திருந்தது.
- ஆந்திராவின் கடற்கரைப் பகுதிகளில் அதிகாரத்திற்கான போட்டி ஒரிசாவைச் சேர்ந்த கஜபதி அரசுக்கு விஜயநகருக்குமிடையே நடைபெற்றது.
- இரண்டாம் தேவராயர் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை இப்பிரச்சனையில் விஜயநகரால் பெரும் வெற்றி என எதையும் பெற இயலவில்லை. இரண்டாம் தேவராயர் (1422–46) ஓரியர்களைச் சில போர்களில் தோற்கடித்தார். இப்போர்கள் அனைத்தும் கப்பம் வசூல் செய்வதற்காகவே நடைபெற்றன.
- **இரண்டாம் தேவராயர்**– சங்கம வம்ச அரசர்களில் மிகச் சிறந்த அரசர் இரண்டாம் தேவராயர் ஆவார். தனது குதிரைப் படையின் வலிமையைப் பெருக்குவதற்காகப் பயிற்சி பெற்ற முஸ்லீம் குதிரைப்பட வீரர்களைத் தனது படைகளில் சேர்த்துக் கொண்டார். இரண்டாம் தேவராயரின் காலத்தில் இங்கு வந்த பாரசீக நாட்டின் தூதுவர் அப்துர் ரஸாக் கொச்சி சாமரின் அரசவைக்கும் விஜயநகரத்திற்கும் வருகை தந்தார். இரண்டாம் தேவராயர் இலங்கை அரசனிடமிருந்து கப்பம் பெற்றார்.
- இரண்டாம் தேவராயருக்குப் பின்னர் திறமையற்ற அரசர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றதின் விளைவாக கஜபதி அரசர்கள் ஆந்திராவின் கடற்கரைப் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தினர். 1460–65 க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் கஜபதி படைகள் பலமுறை தாக்குதல்களை மேற்கொண்டன. மேலும் திருச்சிராப்பள்ளிவரை வெற்றிகரமாகப் படையெடுத்து வந்த கஜபதி படைகள் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியதோடு கோவில்களின் செல்வத்தையும் கொள்ளையடித்தன.
- சாளுவ வம்ச அரசர்களின் எழுச்சி வரை தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி பகுதிகளில் திருமலைத்தேவர், கோனேரித்தேவர் போன்ற குறுநில மன்னர்கள் ஒருசில பத்தாண்டுகள் சுதந்திர அரசர்களைப் போல ஆட்சி நடத்தினர்.
- காலத்தின் நகர்வில் அரசியல் அதிகாரம் நம்பிக்கைக்குரிய தளபதி சாளுவ நரசிம்மரின் கைகளுக்கு சென்றது. அவர் கஜபதிகளிடமிருந்து நாட்டைக் காத்து, ஆந்திரக் கடற்கரை பகுதிகளை மீட்டார். 1485 இல் அரசாட்சியைக் கைப்பற்றி தன்னையே அரசரென அறிவித்து, குறுகிய காலமே ஆட்சி செய்து சாளுவ வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார். அவருடைய தளபதியும் மாபெரும் போர்வீரருமான நரச நாயக்கர் அவருக்குத் துணை நின்றார். அவர் தென்பகுதியில் கலகத்தில் ஈடுபட்ட உள்ளூர் தலைவர்களை அடக்க முயன்றார். 1491 இல் சாளுவ நரசிம்மர் மரணமடைந்தார்.
- அதற்கு முன்பாக தனது இளம் வயது மகன்களை நரச நாயக்கரின் பாதுகாப்பில் விட்டுச் சென்றார். உண்மையான ஆட்சி அதிகாரம் தனது கைகளுக்கு வரப்பெற்ற நரச நாயக்கர் தனது மரணம் வரையிலும் நாட்டைப் பாதுகாக்க பல நடவடிக்கை மேற்கொண்டார்.
- 1505 இல் அவருடைய மூத்த மகன் வீரநரசிம்மர் துளுவ வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார். அவரைத் தொடர்ந்து அவரது தம்பி கிருஷ்ணதேவராயர் அரியணை ஏறினார்.

கிருஷ்ணதேவராயர் (1509–1529)

- கிருஷ்ணதேவராயர் விஜயநகர அரசர்களில் மகத்தானவராகக் கருதப்படுகிறார்.
- தனது ஆட்சியின் தொடக்கத்தில் மைசூருக்கு அருகேயிருந்த கலக மனப்பான்மை கொண்ட உம்மத்தூர் குறுநில மன்னனை தோற்கடித்துப் பணியச் செய்தார்.
- கிழக்குதிசை படையெடுப்பின்போது கஜபதி அரசர்களின் வசமிருந்த உதயகிரி கோட்டையைப் போன்று பல கோட்டைகள் கைப்பற்றப்பட்டதைப் பற்றிப் பலகல்வெட்டுகள் தெளிவாக விளக்குகின்றன. முடிவில் அவர் தனது வெற்றித் தூணை சிம்மாச்சலத்தில் நிறுவினார்
- ஒருசில படையெடுப்புகளின்போது மலபார், கொங்கணக் கடற்கரைப் பகுதிகளில் தங்களுடைய அதிகாரத்தை நிறுவுவதற்கு முயன்றுகொண்டிருந்த போது போர்த்துகீசியர் விஜயநகருக்கு இராணுவ உதவிகளைச் செய்தனர். மேலும் பத்கல் என்னும் இடத்தில் கோட்டை கட்டிக்கொள்ளும் உரிமையைப் பெற்றனர்.

- ஸ்ரீசைலம், திருப்பதி,காளஹஸ்தி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம் ஆகிய இடங்களிலுள்ள சைவ, வைணவக் கோவில்களுக்குப் பெருமளவில் கொடையளித்தார்.
- அவருடை அரசவையை அல்லசானி, பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா போன்ற தலைசிறந்த புலவர்கள் அலங்கரித்தனர். கிருஷ்ணதேவராயரே பெரும் அறிஞராக கருதப்படுகிறார். ஆமுக்தமால்யதா (ஆண்டாளின் கதை) எனும் நூலை இயற்றியுள்ளார்.
- ஆனாலும் அவருடைய தலைசிறந்த சாதனை, ஒரு மதிநுட்பம் மிக்க நிர்வாகியாக அவர் நாயக்கர் அல்லது நாயங்காரா முறையை மறுசீரமைப்பு செய்து அதற்கு சட்ட அங்கீகாரத்தையும் கொடுத்ததாகும்.
- 1529 இல் இறந்தார்.

தலைக்கோட்டை போர் (1565)

- கிருஷ்ணதேவராயர் இறந்தபோது அவருடைய மகன் குழந்தையாக இருந்ததால் அவருடைய சகோதரர் அச்சுதவேதராயர் ஆட்சிப் பொறுப்பேற்றார். கிருஷ்ண தேவராயரின் மருமகனான ராமராயர் அச்சிறு வயது இளவரசனுக்குப் பட்டம் சூட்டுவதன் வழியாக அரசியல் மேலாதிக்கம் செலுத்த விரும்பினார். இருந்தபோதிலும் அச்சுதராயருக்கு செல்லப்பா (சாளுவநாயக்கர் என்றும் அறியப்படுபவர்) என்பாரின் ஆதரவு இருந்தது.
- அக்கால கட்டத்தில் சிறப்பிடம் வகித்த இவர் தமிழகத்தின் பெரும்பகுதியை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். காலப்போக்கில் இவரே கிளர்ச்சியில் ஈடுபட அச்சுதராயர் பெரும்படையோடு தென்னகம் வந்து இவரை அடக்கினார்.
- அச்சுத தேவராயர் பாமினி சுல்தான்களோடும் சில போர்களை மேற்கொண்டார். 1542 இல் அவர் மரணமடைந்தபோது அவருடைய ஒன்றுவிட்ட சகோதரர் அரச பதவியேற்று ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் ஆண்டார் (1542–70). ஆனால் உண்மையாண அதிகாரம் ராமராயரின் கைகளில் இருந்தது. பல நெருங்கிய உறவினர்களின் (ஆரவீடு வம்சாவளியினர்) ஆதரவு அவருக்கு இருந்தது, அரசின் பல முக்கியப் பொறுப்புகளில் அவர்தன் உறவினர்களை அமர்த்தினார்.
- போர்த்துகீசியரோடு ஒப்பந்தம் மேற்கொண்டதன் மூலம் பீஜப்பூர் அரசருக்குக் குதிரைகள் அனுப்பப்படுவதை நிறுத்தினார். சில காலம் கழித்து கோல்கொண்டா, அகமதுநகர் சுல்தான்களுக்கு எதிராக பீஜப்பூரோடு கைகோர்த்தார். இதன் விளைவாக தக்காண சுல்தான்கள் தங்களது பகையை மறந்து ஒன்றுபட்டு, பொது எதிரிக்கு எதிராக இறுதிப்போர் புரிய கைகோர்த்தனர்.
- 1565 இல் தலைக்கோட்டை அல்லது ராக்சஷி–தங்கடி போர் நடைபெற்றது. தனது வயது முதிர்வையும் பொருட்படுத்தாமல் ராமராயரே படைப்பிரிவுகளுக்குத் தலைமை ஏற்று தனது சகோதரரர்கள், ஏனைய உறவினர்களோடு போர்களம் புகுந்தார். போரின் இறுதிக் கட்டத்தில் விஜயநகரம் தோல்வியடைந்தது.
- ராமராயர் கைது செய்யப்பட்டு உடனடியாகக் கொல்லப்பட்டார். பாமினி படைகள் வரலாற்றில் முதல்முயைாக விஜயநகத்துக்குள் புகுந்து பல மாதங்கள் அந்நகரைக் கொள்ளையடித்துச் சூறையாடி பாழ்படுத்தின.
- பொதுவாக இப்போர் விஜயநகர அரசின் முடிவின் அடையாளமாகக் கருதப்படுகிறது. அரசர் சதாசிவராயரும் அவரடைய வீரர்களும் பெனுகொண்டாவுக்கத் தப்பிச் சென்றனர். ராமராயரின் சகோதரர் திருமலை 1570இல் தன்னை அரசராக அறிவித்து நான்காவது அரச மரபான ஆருவீடு வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார். அவரது வாரிசுகள் 1630 வரை ஆட்சி செய்தனர்.
- வேறுசில அரசர்கள் தலைநகர் இல்லாமல் நாடோடிகளாக திரிந்து 1670 வரை ஆட்சி புரிந்தனர்.
- 1601 இல் அரசு விசுவாசிகள் பெரும்பேடு என்னும் ஊரைச் சேர்ந்த யச்சம் நாயக்கர் தலைமையிலும் எதிர் தரப்பினர் வேலூர் நாயக்கர் (வேலூர்) தலைமையிலும் உத்திரமேருரில் கடுமையான போரில் ஈடுபட்டனர். இப்போரில் சுதந்திர அரசுகளாக மாறிவிட்ட தஞ்சாவூர், மதுரை, செஞ்சி நாயக்க அரசுகள் வேலூர் நாயக்கரை ஆதரித்தனர்.
- **நிர்வாகம் –** அரசரே அனைத்து அதிகாரங்களையும் பெற்றவராவார். அவரே படைத்தளபதியும் ஆவார். முதலமைச்சர் *மகாபிரதானி* என்றழைக்கப்பட்டனர். தளவாய் (தளபதி), வாசல் (அரண்மனைப் பாதுகாவலர்), ராயசம் (செயலர்/கணக்கர்), அடைப்பம் (தனி உதவியாளர்) காரிய கர்த்தா (செயல் முகவர்) போன்ற கிழ்நிலை அதிகாரிகளுக்கு இவரே தலைமையாவர்.
- ராஜ்யா என்னும் மண்டலங்களாக நாடு பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ஒரு பிரதானி (ஆளுநர்) நியமிக்கப்பட்டார். ஹொய்சாளா, ராஜ்யா, அரகா, பரகூர், மங்களூர்,முளுவாய் ஆகியன முக்கியமான ராஜ்யாக்களாகும்.
- 1400 இல் தமிழகப் பகுதிகளில் சந்திரகிரி, படைவீடு, வலுதலம்பட்டு, திருச்சிராப்பள்ளி, திருவாரூர் என ஐந்து ராஜ்யங்கள் இருந்தன. பிரதானி அரசவை உறுப்பினராகவோ அல்லரது ராணுவ அதிகாரியகவோ இருப்பார்.

- ஒவ்வொரு ராஜ்யமும் சீமை,ஸ்தலம், கம்பா எனும் சிறிய நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. மிகச்சிறிய நிர்வாக அலுகு கிராமமாகும்.
- துளுவ வம்சத்தைச் சேர்ந்த கிருஷ்ணதேவராயரால் நாயக்கர் முறை அறிமுகமானபோது ராஜ்யங்கள் தங்களது நிர்வாக, வருவாய் முக்கியத்துவதை இழந்தன
- **நாயக்க முறை–** நாயக்க என்னும் சொல் தெலுங்கு, கன்னடப் பகுதிகளில் பதிமூன்றாம் நூற்றாண்டிலிருந்தே இராணுவத்தலைவர், அல்லது இராணுவவீரர் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்தது.
- விஜயநகர அரசில் இராணுவ சேவைக்குப் பதிலாக வருவாய் ஈட்டித்தரும் நிலப்பகதிகளை வழங்கும் முறை 1500 அல்லது அதற்குச் சற்று முன்னதாகவே தொடங்கிற்று. கல்வெட்டுகள் இம்முறையைத் தமிழில் நாயக்கட்டணம் எனவும், நாயன்கரமு எனத் தெலுங்கிலும் குறிப்பிடுகின்றன. இம்முறையானது கிருஷ்ணதேவராயர், அச்சுததேவராயர் ஆகியோரின் ஆட்சியின் போது நிறுவன வடிவம் பெற்றது.
- விஜயநகர அரசு இருநூறுக்கும் மேற்பட்ட நாயக்குகள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் குதிரை, காலாட்படை வீரரர்களைப் பராமரித்து தேவைப்படும் நேரத்தில் அரசருக்கு இராணுவச் சேவை செய்ய வற்புறுத்தப்பட்டார்கள் எனவும் நூனிஸ் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் சில குறிப்பிட்ட ஒன்பது நாள் இராமநவமித் திருவிழா போன்ற சமயங்களில் அரசருக்குக் குறிப்பிட்ட அளவு வருவாயை வழங்க வேண்டும். நூனிஸின் கூற்றை **ராயவாசகமு** என்னும் தெலுங்கு நூல் உறுதிப்படுத்துகிறது. இந்நூல் கிருஷ்ணதேவராயரின் காலத்தில் இம்முறை நடைமுறையில் இருந்ததைக் கூறுகிறது.
- இந்நாயக்குகள் நாயக்தானம் எனப்பட்ட தங்களின் பகுதிகளில் உற்பத்தியைக் கட்டுப்படுத்தினர். **பேட்டை** எனும் வணிக மையங்களை நிறுவினர். தலைக்கோட்டை போருக்குப் பின்னர் பெரும்பாலான நாயக்குகள் சுதந்திரமாகச் செயல்படத் துவங்கினர். அவர்களில் மதுரை, தஞ்சாவூர், இக்கேரி போன்ற நாயக்குகள் வலுவலன அரசுகளை உருவாக்கிக் குறுநிலத் தலைவர்களைக் கட்டப்படுத்தினர். பதினேழாம் நூற்றாண்டு பெரும் நாயக்க அரசுகளின் நூற்றாண்டாகும்.
- **சமூகமும் பொருளாதாரமும் –** மக்களின் மீது வரிவிதிப்பின் மூலமே அரசு வருமானத்தைப் பெற்றது. சங்கம வம்ச அரசர்களின் காலத்தில் விஜயநகரத்தின் ஆட்சி புதிய பகுதிகளுக்குப் பரவியபோது வரிவசூல் அதிகாரிகள் கடுமையாக நடந்து கொண்டதால் உழைக்கும் மக்கள் கிளர்ச்சி 1430இல் தமிழ்நாட்டின் மையப்பகுதிகளல் நடைபெற்றது.
- விஜயநகர இளவரசர் இந்த விஷயத்தில் நேரடியாகத் தலையிட்டு மக்களைச் சமாதனப்படுத்தி வரித் தொகையைக் குறைத்ததாகக் கூறப்படுகிறது. பதினாறாம் நூற்றாண்டில், நாயக்க நிர்வாக முறையில் நாயக்குகள் நெசவு போன்ற கைவினைத் தொழில்களை வளர்ப்பதற்காக அவ்வப்போது வரிச்சலுகை வழங்கினார்.
- பதிமூன்றாம் நூற்றாண்டு வரை பொருளாதாரம் பெருமளவில் வேளாண்மையைச் சார்ந்திருந்தது. வேளாண் அல்லாத பிரிவுகளைச் சார்ந்த **பட்டடை** அல்லது **காஸய–வர்க்கம்** என்றழைக்கப்பட்ட இவர்கள் வரிகளைப் பணமாகவே வழங்கினர்.
- தமிழகத்தின் வடபகுதி,ராயலசீமை,ஆந்திரக் கடற்கரைப்பகுதி ஆகியவற்றில் பெரும் எண்ணிக்கையில் வணிகமையங்களும் நெசவு மையங்களும் உருவாயின. இயல்பாகவே தென்னிந்தியத் துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களில் ஜவுளி முக்கியப் பண்டமாக விளங்கியது.
- பதினாறாம் நூற்றாண்டிலிருந்து ஜவுளி வணிகமானது இந்தியாவிற்கு வந்த போர்த்துகீசியர் மற்றும் ஏனைய ஐரோப்பிய வணிகர்களைப் பெரிதும் ஈர்த்த ஒன்றாகும்.

முகலாயப் பேரரசு

📖 முகலாய பேரரசை நிறுவியர் பாபர். இப்பேரரசு 1526 இல் பானிபட் போரில் இப்ராகிம் லோடியை பாபர் தோற்கடித்தபின் நிறுவப்பட்டு 1526 முதல் 1857 வரை நீடித்தது. 1707 இல் ஔரங்கசீப் மறைவை தொடர்ந்து பேரரசு வீழ்ச்சியடைந்தது. என்றாலும் 1707 முதல் 1857 வரை முகலாயர் அரசு பெயரளவுக்கு ஓர் அரசாக இயங்கி வந்தது.

நூல்களும் ஆசிரியர்களும் :

ஆசிரியர்கள்	நூல்கள்	குறிப்பு
ஜாஹிருதின்முகமது பாபர்	துசுக்–இ–பாபரி (பாபர் நாமா)	பாபரின் வாழ்க்கை வரலாறு
அபுல் பாசல்	◆ அய்னி அக்பரியில் ◆ அக்பர் நாமா	அக்பரின் வாழ்க்கை வரலாறு
துளசிதாசர்	ராமசரிதமனஸ்	
சூர்தாஸ்	சூர்–சராவளி	
பாஸ்கரச்சாரியர்	லீலாவதி (கணித நூல்)	
ஹமீது லகோரி, முகமது வரிஸ்	பாதுஷா நாமா	ஷாஜகான் வாழ்க்கை வரலாறு (அய்னி அக்பரியை முன்னுதரனமாக கொண்டு எழுதப்பட்டது)
காஸிம்	ஆலம்கீர் நாமா	ஔரங்கசீப் வாழ்க்கை வரலாறு (முதல் பத்தாண்டு ஆட்சி பற்றியது)
ரகீம் கானி–இ–கானான்	சகதாய் (பாரசீகம்)	பாபரின் சகதாய் என்னும் துருக்கிய மொழியில் எழுதிய நூலை பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்தார்.
அபுல்பெய்சி	மகாபாரதம் (பாரசீகம்)	அபுல் பாசலின் சகோதரர் அபுல்பெய்சியின் மேற்பார்வையில்பாரசீகத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.
	மஸ்னாவி, உத்பி, நசிரி	இந்தியாவில் பாரசீக மொழியில் வளம்சேர்த்த நூல்கள்.
தாரஷூகோ	சர்–இ–அக்பர் (மாபெரும் இரகசியம்)	உபநிடதங்களின் மொழிபெயர்ப்பு
கல்ஹணர்	ராஜவலிபதகா	காஷ்மீரின் முழுமையான வரலாறு இந்நூல் அக்பர் காலத்தில் பிரக்ஞபட்டரால் தொகுக்கப்பட்டது.
நீலகண்டர்	தஜிகனிலகந்தி	அக்பரின் அவையில் இடம்பெற்றிருந்த வானியல் அறிஞர்
ஜெகநாத பண்டிதர்	ரசகங்காதார	ஷாஜகானின் அவைகளப் புலவர்
முக்தீஸ்வரர்	இராமயணம், மகாபாரதம் (மராத்திய மொழியில்)	
கிருஷ்ணதேவராயர்	ஆமுக்தமால்யதா (தெலுங்கு)	ஆண்டாளை பற்றியது
அல்லசானி பெத்தண்ணா	மனுசரித்திரா (தெலுங்கு)	கிருஷ்ணதேவராயரின் அவைகளப் புலவர்
குரு அர்ஜீன் சிங்	குரு கிராந்த்	சீக்கியரின் புனித நூல் . (தொகுப்பு)
குமரகுருபரர்	◆ மீனாட்சியம்மைபிள்ளைதமிழ் ◆ நீதிநெறி விளக்கம்	

ஜாகிருதீன் முகமது பாபர் (1526–1530):

📖 மத்திய ஆசியாவில் பல்வேறு இனக்குழுக்குளுக்கிடையே நடைபெற்ற மேலாதிக்கத்திற்கான போட்டியில் சாமர்கண்ட் பகுதியான அரசரான பாபரை, தனது வாழ்க்கை வளத்துக்கான வாய்ப்புகளை வேறு இடங்களில் தேடிச் செல்ல கட்டாயப்டுத்தியது. ஒன்றேகால் நூற்றாண்டுக்கு முன்னர் தைமூர் செய்ததை மீண்டும் செய்ய வேண்டுமெனக் கனவு கண்டிருந்தார் பாபர்.

📖 தில்லி சுல்தானியம் அரசியல் ரீதியாக சிரைவுற்றதைத் தொடர்ந்து 1526 இல் தில்லியைத் தலைநகராகக் கொண்டு முகலாயப் பேரரசை நிறுவுவதில் வெற்றி பெற்றார்.

- பாபர் 11 வயது சிறுவனாக தனது தந்தையிடமிருந்து சாமர்கண்டை (தற்போதைய உஸ்பெக்கிஸ்தானிலுள்ள ஒரு நகரம்) மரபுரிமைச் சொத்தாகப் பெற்றார். எதிரிகளால் சூழப்பட்ட அவர் விரைவில் அதை மீட்டார். தைமூர் வம்சத்தை சேர்ந்தவர் ஆகையால் பஞ்சாப் மீது அவருக்கு ஒரு கண் இருந்தது. ஏனெனில் முன்பு பஞ்சாபின் ஒரு பகுதி தைமூரின் ஆளுகைக்குள் இருந்திருக்கிறது.
- 1519க்கும் 1524க்கும் இடையே அவர் பேரா, சியால்கோட் லாகூர் ஆகியவற்றின் மீது படையெடுத்து இந்துஸ்தானை கைப்பற்றும் ஊறுதியான எண்ணத்தை வெளிக்காட்டினார். காபூல், கஜினி ஆகியவற்றை கைப்பற்றிய பாபர் சிந்து நதியைக் கடந்து ஒரு சிறிய அரசை ஏற்படுத்தினார்.
- தில்லி சுல்தானியத்தில் லோடி வம்சத்தை சேர்ந்த இப்ராஹிம் லோடி தனது எல்லைகளை விரிவுபடுத்துவதை ஆப்கானியர், ராஜபுத்திரர்கள் விரும்பவில்லை. பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து வரவேண்டும் என்ற வேண்டுகோளோடு இப்ராகிம் லோடியின் எதிரியான தொளலத்கான் லோடியாலும், மேவாரின் அரசனும் ரஜபுத்திரஅசுகளின் கூட்டமைப்பு தலைவருமான ராணா சங்காவாலும் அனுப்பப்பட்ட தூதுக்குழுக்களை பாபர் சந்தித்தார்.
- பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது, முதலில் தனக்கு உதவி செய்வதாக உறுதிகூற பின்னர் பின்வாங்கிய தொளலத்கான் லோடியின் படைகளை லாகூரில் வென்றார்.

முதலாம் பானிப்பட் போர் (ஏப்ரல் 21, 1526):

- இதன் பின்னர் பாபர் லோடியால் ஆளப்பட்ட பஞ்சாப்பை நோக்கித் திரும்பினார். இப்ராஹிம் லோடியின் பெரும் படையை பாபர் குறைவான தனது படையை திறம்படப் பயன்படுத்தியும் , போர் வியூங்களை வகுத்தும், பீரங்கி படையை திறம்படப் பயன்படுத்தியும் வெற்றி பெற்றார்.
- தில்லி ஆக்ராவையும் பாபர் கைப்பற்றினாலும் ஆப்கானியர்களையும் ரஜபுத்திரரர்களையும் அடக்க வேண்டிய அவசியமிருந்தது. பீரங்கியை பயன்படுத்தும் ராணவப் படைப்பிரிவு aritillery ஆகும். 13 ஆம் நூற்றாண்டுகளில் சீனாவில் வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டது. பாபருக்கு முன்பாக இந்தியாவில் போர்களில் பீரங்கள் பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை.

கன்வா போர் 1527 :

- மேவாரின் அரசன் சித்துாரின் ராணா சங்காவை எதிர்த்து ஆக்ராவுக்கு அருகில் உள்ள கான்வா என்னுமிடத்தில் பாபரின் படைகள் போரிட்டன. ராணா சங்கா அச்சமூட்டக் கூடிய தனது பெரும்படையோடும் அதற்கு வலுச்சேர்த்த ஆப்கன் முஸ்லீம்கள், இப்ராஹிம் லோடியின் சகோரரர் முகமது லோடி, மேவாட்டின் அரசனான ஹசன்கான் வோட்டி ஆகியோரின் உதவியோடு ஆவேசமாக அணிவகுத்து பாபரின் படைகளை எதிர்கொண்டன.
- மீண்டும் இராணவ தந்திரத்தாலும், பீரங்கிப் படையாலும் பாபர் ராணா சங்காவின் படைகளைத் தோற்கடித்தார். இவ்வெற்றியைத் தொடர்ந்து குவாலியர், தோல்பூர் ஆகிய கோட்டைகள் கைப்பற்றப்பட்டன. இது பாபரின் நிலைக்கு மேலும் வலுவூட்டியது.

சந்தேரிப் போர் 1528 :

- மாளவப் பகுதியின் அரசர் மேதினிராய் என்பவருக்கு எதிராக சந்தேரியில் நடைபெற்ற போரில் பாபர் வெற்றிபெற்றார்.

காக்ராபோர் 1529 :

- ஆப்கானியருக்கு எதிராக பாபர் மேற்கொண்ட இறுதிப்போர் இதுவாகும். டெல்ல சுல்தான் இப்ராகிம் லோடியின் சகோதரனான முகம்மது லோடியும், அவரது மரமகனான சுல்தான் நஸ்ரத்ஷாவும் பாபருக்கு எதிராகச் சதி செய்தனர். கங்கையின் துணை நதியான காக்ரா ஆற்றின் கரையில் இறுதியாக நடைபெற்ற போரில் பாபர் ஆப்கானியரைத் தோற்கடித்தார்.
- ஆக்ராவிலிருந்து திரும்பி லாகூர் செல்லும் வழியில் பாபர் 1530 இல் காமமானார்.
- பாபரின் இறப்பைப் பற்றி ஒரு கதையுள்ளது அவருடைய மகள் ஹீமாயூன் நோய் வாய்ப்பட்டிருந்தார். மகன் மீது கொண்டிருந்த பாசத்தால் மகன் உடல்நலம் பெற்றால் தனதுயிரை ஈவதாக பாபர் பிரார்த்தனை செய்தார். ஹீமாயூன் நோயிலிருந்து மீண்டார்.

பாபரைப் பற்றிய மதிப்பீடு:

- முகலாயப் பேரரசை நிறுவிய பாபர் பாரசீக அராபிய மொழிகளில் புலமை பெற்றவராவார். தனது வாழ்க்கையைப் பற்றிய பாபரின் நினைவுச் குறிப்புகளான துசுக்–இ–பாபுரி (பாபர் நாமா) உலகச் செவ்வியல் இலக்கியமாகக் கருதப்படுகிறது.

- பாபர் இந்தியவை பற்றி கீழ்கண்டவாறு கூறுகிறார். " இந்துஸ்தானத்தின் தலையாய மேன்மை எதுவெனில் இது ஒரு மிகப்பெரிய நாடு. பெருமளவிலான தங்கத்தையும் வெள்ளியையும் கொண்டுள்ளது. இந்துஸ்தானத்தின் மற்றொரு வசதி யாதெனில் இங்குள்ள தொழிலாளர்கள், ஒவ்வொரு தொழிக்கும் ஒவ்வொரு பிரிவுக்கம் பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் முடிவே இல்லாத வகையில் கடுமையான உழைத்தனர்.

ஹிமாயூன் (1530–1540, 1555–1556)

- ஹீமாயூன் பண்பாடும் கல்வியறிவும் மிக்கவர். குஜராத் அரசரான பகதூர்ஷா அச்சத்தை ஏப்டுத்துபவராக இருந்தார். காபூல், காந்தகார் பகதிகளுக்கு பொறுப்பு வகித்த ஹீமாயூனின் சகோதரர் கம்ரான் தன்னுடைய அதிகாரத்தைப் பஞ்சாப் வரை நீட்டித்தார்.
- பீகார், உத்திரப்பிரதேசம் ஆகியவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஷெர்கான் (பின்னர் ஷெர்ஷா) என்பவரின் தலைமையில் வளர்ந்து வரும் ஆப்கானியரின் அதிகாரம், அவர்களுக்கு எதிராக நடடிவக்கைகளை மேற்கொள்ள ஹீமாயூனைத் தூண்டின.
- 1532இல் தெளரா என்னுமடத்தில் ஆப்கானியரைத் தோற்கடித்தன ஹீமாயூன், பலம் வாய்ந்த சுனார் கோட்டையை முற்றுயைவிட்டார். நான்கு மாதங்களுக்குப் பின்னர் முகலாயருக்கு விசுவாசமாக இருப்பேன் எனப் பொய்யாக வாக்குறுதியளித்த ஷெர்ஷாவின் வார்த்தைகளை நம்பி ஹீமாயூன் முற்றுகையை கைவிட்டார். ஹீமாயூன் எடுத்த இந்த தவறான முடிவு அவரது ஆட்சியின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது.
- தில்லியில் **தீன்பனா** என்னும் புதிய நகரை உருவாக்கினார். இந்த சமயத்தில் பகதூர்ஷா ராஜஸ்தானைக் கைப்பற்றி இணைத்துக்கொண்டு முகலாயர்களுக்கு எதிரானவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களை தூண்டியும் விட்டார்.
- ஹீமாயூன் பகதூர்ஷாவின் மேல் போர் தொடுத்து குஜராத்தையும் மாளவத்தையும் கைப்பற்றி அவற்றை தனது சகோதரரான அஸ்காரியின் பொறுப்பில் விட்டார். குஜராத்தின் மக்களின் கலகங்களை அடக்க இயலாத நிலையில் அஸ்காரி ஆக்ராவைக் கைப்பற்றி தனதாக்கி கொள்வார் என்ற அச்சத்தில் மாண்டுவில் தங்கியிருந்த ஹிமாயூன் குஜராத்தையும் மாளவத்தையும் கைவிட்டுவிட்டுப் படைகளோடு சகோதரரைப் பின் தொடர்ந்தார். ராஜஸ்தானில் சந்தித்துக்கொண்ட சகோதரர்கள் இருவரும் சமாதானமாயினர்.
- பகதூர்ஷா தொடர்பான போர் நிகழ்வுகளில் ஹீமாயூன் முழுமையாக ஈடுபட்டிருந்த வேளையில் ஷெர்கான் வங்காள ஆட்சியாளரத் தோற்கடித்து தன்னை மேலும் வலுப்படுத்திக் கொண்டார். வங்காளத்திலுள்ள கோட்டையும் ரோக்தா கோட்டையும் அவரால் கைப்பற்றப்பட்டன.
- சுனார் கோட்டையைக் கைப்பற்றிய ஹீமாயூன் ஷெர்கானை எதிர் கொள்வதற்காக வங்காளம் நோக்கி புறப்பட்டார். இடையே கவுர் அல்லது கௌடா என்ற இடத்தை ஹீமாயூன் அடைந்தபோது அவருடையட மற்றொரு சகோதரரான ஹிண்டால் கிளர்ச்சி செய்வதாக தகவல் வந்தது.
- ஆகவே ஹீமாயூன் அதை அடக்குவதற்காக ஆக்ரா நோக்கிப் புறப்பட்டார். அதுவரையிலும் அமைதி காத்த ஷெர்கான் இப்போது ஹீமாயூனின் படைகளைத் தாக்கத் தொடங்கினார். மிகப்பெரும் இடர்பாடுகளுக்குப் பின்னர் ஹீமாயூன் சௌசா என்னுமிடத்தை அடைந்தபோது ஒரு முழுமையான போரோஏற்பட்டது.

சௌசாப் போர் (1539)

- ஹிமாயூன் பெருந்தோல்வியைச் சந்தித்தார். இப்போரில் 7000 முகலாயப் பிரபுக்களும் வீரர்களும் கொல்லப்பட்டனர். ஹீமாயூன் கங்கை நதியை நீந்திக் கடந்தார். ஆக்ராவை சென்றடைந்த அவர் சகோதரர்கள் அஸ்காரி, ஹிண்டால் ஆகியோரின் உதவியோடு ஷெர்கானை எதிர்கொள்ள படையொன்றைத் திரட்டினாா. இறுதி மோதல் கன்னோசியில் நடைபெற்றது.

கன்னோசி போர் (1540)

- கண்னோசி போரில் ஹீமாயூனின் படைகள் முற்றிலுமாகத் தோற்கடிக்கப்பட்ன. அவர் நாடற்ற அரசரானார்.

ஷெர்ஷாவும் சூர் வம்சமும்

- ஒரு ஜாகீர்தாரின் குடும்பத்தில் பிறந்து பரித் என்றழைக்கப்பட்ட இவர் ஒரு புலியைக் என்றழைக்கப்பட்ட இவர் ஒரு புலியைக் (ஹிந்தியில் ஷெர்) கொன்றதனால் ஷெர்கான் என்னும் பெயரைப் பெற்றார். அரியணை ஏறிய பின் ஷெர்ஷா என்றழைக்கப்பட்டார்.
- தன் திறமையினாலும் ஆற்றலினாலும் இந்தியாவிலிருந்த ஆப்கானியரின் தலைவரானார். மாளவம் போரிடாமலேய அவரிடம் வீழ்ந்தது. மேவாரின் உதய்சிங் எதிர்ப்பேதும் தெரிவிக்காமல் சரணடைந்தார். கலிஞ்சாரைக் கைப்பற்ற வேண்டும் என்ற தனது அடுத்த முயற்சியில் தோல்வி கண்டார்.
- அவருக்குப்பின் பதவியேற்ற அவருடைய இரண்டாவது மகன் இஸ்லாம்உ 1553 வரை ஆட்சி புரிந்தார். சிறு வயதிலேயே அவர் மரணமடைந்ததைத் தொடர்ந்து வாரிசுரிமை பற்றிய குழப்பம் நிலவியது. இச்சூழ்நிலையை ஹிமாயூன் பயன்படுத்தி தில்லியையும் ஆக்ராவையும் சூர்வம்ச அரசர்களிடமிருந்து மட்டார்.

ஷெர்ஷாவின் சிர்திருத்தங்கள்

- ஹீமாயூனை பின்தொடர்ந்த ஷெர்ஷா அதற்கு முன்னர் கிசிர்கான் என்பவரை வங்காளத்தின் ஆளுநராக நியமித்திருந்தார் கிசிர்கான் வங்காளத்தின் முன்னாள் ஆட்சியரான சுல்தான் முகமுதுவின் மகளை மணந்தவர். அவர் சுதந்திர அரசரைப்போல் செயல்படத் துவங்கினார். ஊர் திரும்புயவுடன் அவரைக் கைது செய்ய ஷெர்ஷா உத்தரவிட்டார்.
- **விவசாயி சீர்குலைந்தால் அரசன் சீர் குலைவன்** என ஷெர்ஷா நம்பினார். படைகள் ஓரிடம் விட்டு வேறொரு இடம் செல்லும் போது பயிர்களுக்கு சேதம் ஏற்படக் கூடாது என்பதில் ஷெர்ஷா தனிக்கவனம் செலுத்தினார்.
- நெகிழ்வு தன்மை கொண்ட வருவாய் முறையைப் பின்பற்றினார். நிலங்கள் முறைாக அளவை பின்பற்றினார். நிலங்களின் வளத்திற்கு ஏற்றவாறு வரி நிர்ணயம் செய்யப்பட்டது.
- சில பகுதிகளில் ஜாகீர்தாரி முறையும் ஜமீன்தாரி முறையும் தொடர்ந்து செயல்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன. வேறுபல இடங்களில் மொத்த வேளாண் விளைச்சலில் ஒரு குறிப்பிட்ட பங்கு மட்டும் வரியாக வசூலிக்கப்பட்டது.
- வணிகத்தை ஊக்குவிப்பதற்காக வணிக வரிகளை எளிமைப்படுத்தினார். நுழைவு வரி, விற்பனை வரி ஆகியவை மட்டுமே வசூலிக்கப்பட்டன. தங்க வெள்ளி, செப்புக் காசுகளில் இடம் பெறும் உலோகங்களின் தரஅளவு வரையறை செய்யப்பட்டது வணிகத்திற்சக வசதி செய்து கொடுத்தது. அவருடைய நாணயமுறையானது முகலாயர் காலம் முழுவதும் அப்படியே பின்பற்றப்பட்டு ஆங்கிலேயர் காலத்து நாணய முறைக்கும் அடித்தளமானது.
- வணிகத்தையும் வர்த்தகத்தையும் மேம்படுத்தும் பொருட்டு உறுதியான சாலை வசதி முறையை ஷெர்ஷா பராமரித்தார். பழைய சாலைகள் புதுப்பிக்கப்பட்டதோடு புதிய சாலைளும் அமைக்கப்பட்டன. சிந்துப் பகுதியிலிருந்து வங்காளத்தில் சோனர்கான் வரையிலான முக்கியப் பெருவழியைச் செப்பனிட்டதோடு குஜராத் கடற்கரைத் துறைமுகங்களை ஆக்ராவோடும் ஜோத்பூரோடும் இணைக்கும் புதிய சாலைகளையும் அமைத்தார்.
- லாகூர் முல்தான் ஆகிய நகரங்களை இணைக்கும் புதிய சாலை அமைக்கப்பட்டது. அனைத்துச் சாலைகளிலும் **சராய்** எனப்படும் சத்திரங்கள் வணிகர்களுக்காக உருவாக்கப்பட்டன. இவை இன்றளவும் உள்ளன. இத்தகைய சராய்கள் தங்களுக்கு அருகே நகரங்கள் உருவாவதையும் உறுதி செய்தன.
- **ஜாகீர்தாரிமுறை** – இது ஒரு நில உடைமை முறையாகும். தில்லி சுல்தானியர் காலத்தில் இம்முறை வளர்ச்சி பெற்றது. இம்முறையின் கீழ் ஒரு குறிப்பிட்டப் பகுதியில் வரிவசூல் செய்கின்ற அதிகாரமும் அப்பகுதியை நிர்வகிக்கிற அதிகாரமும் அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியிடம் ஒப்படைக்கப்படும்.
- **ஜமீன்தாரி–**__இச்சொல் மற்றொரு நில உடைமை முறையைக் குறிப்பதாகும். பாரசீக மொழியில் ஜமீன்தார் என்ற சொல்லுக்கு நிலத்தின் உடைமையாளார் என்று பொருள். முகலாயர் காலத்தில் பிரபுக்கள் வர்க்கத்தைச் சேர்ந்தோரே ஜமீன்தார்களாக இருந்தனர். அக்பர் பிரபுக்களுக்கும் முந்தைய அரச குடும்பங்களின் வழித்தோன்றல்களுக்கும் நிலங்களை வழங்கி அவற்றை பரம்பரையாக அனுபவிக்கும் உரிமையையும் வழங்கினார். ஜமீன்தார்கள் குத்தகைதார்களிடமிருந்தும் விவசாயகளிடமிருந்தும் வரி வசூல் செய்து ஒரு குறிப்பிட்ட தொகையை அரசுக்குச் செலுத்தினர்.
- ஷெர்ஷா ஆதரவற்றோர்களுக்கு கருவூலத்திலிருந்து உதவித்தொகை வழங்கினார். தவறு செய்தவர்கள் பிரபுக்களாயிருந்தாலும் தனது உறவினர்களாக இருந்தாலும் அவர்களை தண்டிக்க தவறவில்லை
- மிகவும் புகழப்படும் அக்பர், தோடர்மால் ஆகியோரின் நிதிநிர்வாக முறை பெருமளவில் ஷெர்ஷாவின் நிதி நிர்வாக முறையினை அடித்தளமாகக் கொண்டதாகும். தில்லியில் கோட்டைச் சுவர்களுடன் கூடிய ஒரு புதிய நகரத்தை நிர்மாணிக்கத் தொடங்கினார் பின்னர் அது **புராண கில** என அழைக்கப்பட்டது. தன்னுடைய கல்லறை மாடத்தை **சசாரம்** என்னுமிடத்தில் கட்டினார்.

- ஷெர்ஷா 1545இல் காலமான பின்னர் அவருக்குப் பின்வந்த வலிமை குன்றிய அரசர்கள் பத்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர்

ஹீமாயூன் மீண்டு வருதல்

- கன்னோசி போரில் தோற்றுத் தப்பியோடிய ஹீமாயூன் பாரசீகத்தில் தஞ்சம் புகுந்தார். பின்னர் பாரசீகப் படைகளுடன் ஆப்கானிஸ்தான் சென்ற ஹீமாயூன் காந்தகாரையும் காபூலையும் கைப்பற்றினார். ஆனால் அவரது சகோதரர் கம்ரான் அவர் கைப்பற்றிய பகுதிகளை அமைதியாக ஆட்சி புரிய ஹீமாயூன் அனுமதிக்கவில்லை. இதனிடையே சூர் பேரரசு பல துண்டுகளாக சிதைவுற்றது. எனவே, ஹீமாயூன் மீண்டும் பேரரசர் ஆனார்.
- ஆனால் மிக விரைவிலேயே தில்லி கோட்டைக்குள் இருந்த நூலகம் ஒன்றின் மாடிப்படிகளில் இடறி விழுந்து ஹீமாயூன் இறந்து போனார். ஸ்டேன்லி லேன்பூலின் பொருள் பொதிந்த வார்த்தைகளில் சொல்வதென்றால் **வாழ்க்கை முழுவதும் தவறி விழுந்த ஹீமாயூன் வாழ்க்கையை விட்டே தவறி விழுந்து இறந்தார்.**

அக்பர் (1556–1605)0

- ராஜபுதனத்துப் பாலைவனங்களில் ஹீமாயூன் அலைந்து திரிந்துபோது அவருடைய மனைவி 1542இல் ஓர் ஆண்மகனைப் பெற்றெடுத்தார். அந்த ஆண் மகனே ஜலாலுதீன் என்று அறியப்பட்டட அக்பர். 14 வது வயதில் அவருக்கு முடிசூட்டப்பட்டது.
- ஆப்கானியரும் ராஜபுத்திரரும் பெரும் சவாலகத் திகழ்ந்தனர். இருந்தபோதிலும் அக்பர் பைராம்கான் என்ற தலைசிறந்த பாதுகாவலரைப் பெற்றிருந்தார்.

இரண்டாம் பானிப்பட் போர் (1556)

- தில்லியில் வீற்றிருந்த ஷெர்ஷாவின் வழிவந்த ஆப்கானிய அரசன் அடில்ஷாவின் இந்து படைத்தளபதியான ஹெமு, முதலில் குவலியரைக் கைப்பற்றி அதன் முகலாய அரசரை வெளியேற்றினார். அடுத்து எவ்வித எதிர்ப்பும் இன்றி ஆக்ராவை கைப்பற்றினார்.
- அக்பர் 1556 நவம்பர் மாதம் தில்லியைநோக்கி புறப்பட்டு ஹெமுவை இரண்டாம் பானிபட் போரில் சந்தித்தார். போர் ஹெமுவுக்கு சாதகமாக முடியவிருந்த தருவாயில் அவர் கண்ணில் அம்பொன்று பாய மயக்கமுற்று கீழே விழுந்தார். தலைமை இல்லாத ஆப்கானிய படைகளை முகலாயப் படைகள் எளிதில் வெற்றபெற்றன.
- ஹெமு கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். இவ்வெற்றி அக்பரை ஆக்ரா மற்றும் தில்லியின் அதிபதி ஆக்கியது. முகலாயப் பேரரசு மீண்டும் நிறுவப்பட்டது.

அக்பரும் பைரம்கானும்

- அக்பரின் முதல் நான்காண்டு ஆட்சிக் காலத்தில் பகர ஆளுநர் பைராம்கானின் கீழ் , நாடு குவாலியர், ஆஜ்மீர் உட்பட காபூலிருந்து ஜான்பூர் வரை விரிவடைந்தது. தன் சாதனைகளின் காரணமாய் பைரம்கான் ஏனைய பிரபுக்களிடம் ஏளனத்துடனும் இறுமாப்போடும் நடந்துகொள்ளத் துவங்கினார்.
- பதவியிறக்கப்பட்ட பைரம்கான் கலகம் செய்ததை அக்பர் சாதுர்யமாக கையாண்டு அவரை மெக்காவுக்கு அனுப்பினார். செல்லும் வழியில் ஆப்கானியன் ஒருவரால் கொல்லப்பட்டார்.
- பைரம்கானின் மகன் அப்துர் ரகீம் அறிவுக் கூர்மை மிக்க மேதையாக கான்–இ–கானான் என்ற பட்டத்துடன் அக்பரின் அவையில் ஒளிர்ந்தார்.

அக்பரின் படையெடுப்புகள்

- 1562 இல் மாளவம் பாஜ்பகதூரிடமிருந்து கைப்பற்றப்பட்டு அவர் அக்பரின் அரசவையில் ஒரு மன்சப்தாராக ஆக்கப்பட்டார்.
- 1564இல் இந்தியாவின் மையப்பகுதியிலிருந்த கோண்டுவானா அதன் ராணி துர்காதேவி அவ்வம்மையாரின் மகன் வீர்நாரயணன் ஆகியோருடனான கடும் போருக்குபின் கைப்பற்றப்பட்டது.
- மேவார் அரசரான ராணா உதய்சிங்கிடமிருந்து சித்தூரை ஆறுமாத முற்றுகைக்கு பிறகு கைப்பற்றினார். ராணா உதய்சிங் குன்றுகளுக்குள் பின்வாங்க அவரின் தளபதிகளான ஜெய்மால், பட்டா ஆகியோர் போரைத் தொடர்ந்து நடத்தினர். இவ்விருவர் உட்பட 30,000 ரஜபுத்திர வீரர்கள் இப்போரில் கொல்லப்பட்டனர்.
- ஜெய்மால், பட்டா ஆகியோரின் துணிச்சலை கண்டு பெரும் வியப்படைந்த அக்பர் அவர்களின் நினைவாகவும் அவர்களைச் சிறப்பிக்கும் வகையிலும் ஆக்ரா கோட்டையின் முக்கிய நுழைவாயிலில் அவர்களின் சிலைகளை நிறுவினர்.

- சித்தூர் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து ரஜபுத்திர அரசுகளான ராந்தம்பூர்,கலிஞ்சர், பிக்கானீர், ஜோத்பூர், ஜெய்சால்மர் ஆகியவை சரணடைந்தன.
- கடல்சார் வணிகத்திற்கு புகழ்பெற்ற குஜராத் மீது கவனம் செலுத்திய அக்பர் 1573இல் குஜராத்தைக் கைப்பற்றினார். குஜராத் தக்காணத்தைக் கைப்பற்றுவதற்கான ஏவுதளமானது.
- 1576இல் பீகார், வங்காளம் ஆகிய பகுதிகளை ஆண்டு வந்த தாவுத்கான் அக்பரால் தோற்கடிக்கப்பட்டு இவ்விரு பகுதிகளம் இணைக்கப்பட்டது.
- ராஜா மான்சிங், பகவன்தாஸ் ஆகியோரின் உதவியுடன் அக்பர் காபூலைச் சேர்ந்த மிர்சா ஹக்கீமைத் தோற்கடித்தார். காஷ்ரையும் (1586) சிந்துவையும் (1591) அக்பர் கைப்பற்றி வடமேற்கில் அவருடைய பேரரசை வலுப்படுத்தினார்.
- 1591ல் அக்பரின் படைகள் காண்டேஷ் பகுதியை கைப்பற்றினர். 1596இல் சாந்த்பீபியிடமிருந்து பெரார் கைப்பற்றப்பட்டது. இவ்வம்மையார் அகமதுநகரின் நிஜாம் சாகி வம்சத்தை சேர்ந்த தன் உடன்பிறப்பின் மகனான முசாபர்ஷாவினுடைய பகர ஆளுநராக அகமது நகரைத் தாக்கிய முகலாயப்படைகளை எதிர்த்து வீரத்தோடு போராடினார்.
- 1600இல் அகமது நகர் அரசின் ஒரு சில பகுதிகளை முகலாய படைகள் வசமானது.
- 1604 இல் செப்டம்பர் மாதம் அக்பர் நோய்வாய்ப்பட்டு 1605 அக்டோபர் மாதம் 27 ஆம் நாள் இயற்கை எய்தினார்.

ராஜபுத்திர கொள்கை

- முஸ்லீம் அல்லாத மக்களின் மீது விதிக்கப்பட்டிருந்த ஜிசியா வரியையும் (தலைவரி) இந்து புனித யாத்திரைகளின் மீது விதிக்கப்பட்டிருந்த வரியையும் நீக்கினார்.
- போர்கைதிகளை அடிமைகளாக்கும் நடைமுறையும் கைவிடப்பட்டது. இந்து விதவைகள் பின்பற்றிய உடன்கட்டை ஏறும் முறையும் ஒழிக்கப்பட்டது.
- அவரது இணக்கமான ராஜபுத்திரக் கொள்கையானது ரஜபுத்திர அரச குடுமம்பங்களோடு திருமண உறவை மேற்கொள்ளுதல், அரசவையில் உயர்ந்த பதவிகளில் அவர்களை அமர்த்துதல் ஆகியவற்றைப் உள்ளடக்கியதாகும்.
- அக்பர் ஆம்பர் நாட்டு அரசர் ராஜா பார்மல் (பீகாரிமால் என்று அறியப்பட்டவரின்) மகளான ஹர்க்கா பாயை மணந்தார். இந்த ஹர்க்காபாய் பின்னாளில் ஜோதஅக்பர் என்று அழைக்கப்பட்டார்.
- மேலும் பிக்கானீர், ஜெய்சால்மர் ஆகிய ராஜபுத்திர அரசுகளின் இளவரசிகளையும் திருமணம் செய்து கெண்டார். ஹர்க்காபாய் பெற்றெடுத்த இளவரசர் சலீம் பின்னர் ராஜா பகவன்தாஸின் மகளைக் கரம்பற்றினார்.
- ராஜா பகவன்தாஸின் மகனான ராஜா மான்சிங் அக்பரின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதியானார். திருமண உறவு மேற்கொள்ளக் கூடாது என நினைத்த ராஜபுத்திரர்களும் அக்பரின் அரசவையில் உயரிய மரியாதையைப் பெற்றனர்.
- வருவாய்த்துறை நிர்வாகத்தில் நிபுணத்துவம் உடைய ராஜா தோடர்மால் திவானாக பதவி உயர்த்தப்பட்டார். ராஜா பீர்பால் அக்பரால் பெரிதும் விரும்பப்பட்ட நண்பராவார்.
- மேவார், மார்வார் ஆகியவை முகலாயப் பேரரசை எதிர்த்து நின்ற ராஜபுத்திர அரசுகளாகும். ராணா உதய்சிங்கின் மரணத்திற்குப் பின்னர் அவருடையய மகன் ராணா பிரதாப்சிங் அக்பரின் அதிகாரத்தை ஏற்காமல் 1597 இல் தனது மரணம் வரை தொடர்ந்து போரிட்டார்.
- 1576 இல் நடைபெற்ற ஹால்டிகாட் போரே முகலாயப் படைகளுக்கும் ராணா பிரதாப் சிங்குக்குமிடையே நடைபெற்ற நேரடிப் போராகும். மார்வாரில் (ஜோத்பூர்) மால்தியோ ராத்தோரின் மகனான அரசர் சந்திரா சென் 1581 இல் தான் இறக்கும் வரை முகலயரை எதிர்த்தார். ஆனால் அருடைய சகோதரரர்கள் முகலாயர் பக்கமிருந்து போரிட்டனர்.
- தொடக்கத்தில் ஆக்ரா அக்பரின் தலைநகராக இருந்தது. பின்னாளில் பதேபூர்சிக்ரி என்னும் புதிய தலைநகரை அக்பர் உருவாக்கினார். தற்போது கைவிடப்பட்ட நகரமாக இருந்தாலும் இன்றும் அது அழகான மசூதிகளோடும் உன்னதமான புலந்தர்வாசா மற்றும் ஏனைய கட்டங்களோடும் திகழ்கிறது.

மன்சப்தாரி முறை

- அக்பர் ஒரு முறைப்படுத்தப்பட்ட மையப்படுத்தப்பட்ட நிர்வாக முறையை உருவாக்கினார். அம்முறை பேரரசின் வெற்றிக்குப் பெருமபங்காற்றியது. அவர் மன்சப்தாரி முறையை அறிமுகம் செய்தார். பிரபுக்கள், குடிமைப் பணிசார்ந்த இராணுப நிர்வாகம் சார்ந்த அதிகாரிகள் ஆகிய அனைவரும் ஒன்றுபடுததப்பட்டு ஒரே பணியின் கீழ் கொண்டுவரப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் **மன்சப்தார்** என்ற பட்டம் வழங்கப்பட்டது.
- மன்சப்தார் தகுதி *ஜாட்,சவார்* என இருவகைப்பட்டது. ஜாட் என்பது ஒவ்வொரு மன்சப்தாரும் பெறும் இராணுவ வீரரர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வதாகும் அவ்வெண்ணிக்கை 10 முதல் 10,000 வீரர்கள்வரை ஆனதாகும். சவார் என்பது மன்சப்தாரின் கீழிருக்கும் குதிரைகளின் எண்ணிக்கையைக் குறிக்கும். வீரரர்களின் எண்ணிக்கை

குதிரைகளின் எண்ணிக்கை ஆகியவற்றை அதிகரிப்பது அல்லது குறைப்பதன் மூலம் ஒரு மச்சப்தாரின் உயர்வும் தாழ்வும் நிர்ணயம் செய்யப்பட்டது.

- மன்சப்தாரி முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின் ரஜபுத்திரரும் ஷேக்தா என்றழைக்கப்பட்ட இந்திய முஸ்லீம்களும் பிரபுக்கள் வரிசையில் இடம்பெற்றனர்.
- மன்சப்தார்களின் ஊதியம் பணமாக நிர்ணயம் செய்யப்பட்டாலும் அதற்கு மாறாக அவர்களுக்கு நிலங்கள் (ஜாகீர்) ஒதுக்கப்பட்டன. மன்சப்தார் பதவியானது பரம்பரை உரிமை சார்ந்ததல்ல.
- அக்பரின் நிதி நிர்வாக முறை ஷெர்ஷாவை நிர்வாக முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டது.

அக்பரின் மதக் கொள்கை

- அக்பர் ஒரு வைதீக முஸ்லீமாகத் தனது வாழ்க்கையைத் தொடங்கினார். ஆனால் சூபி தத்துவங்கள் ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாக ஓர் இணக்கமான போக்கைமேற்கொண்டார்
- அனைவருக்கும் அமைதி **சுல்–கு–குல்** என்ற தத்துவத்தை பரப்புரை செய்தார். மதங்களுக்கு இடையிலான தொடர்புகள் பற்றி அக்பர் மேற்கொண்ட தத்துவ விவாதங்கள் மீது வெறுப்புக்கெண்ட தத்துவ விவாதங்கள் மீது வெறுப்புக் கொண்ட சமகால வராாற்று அறிஞரான பதானி அக்பர் இஸ்லாமைப் புறக்கணித்தார் எனக் குற்றம் சாட்டினார்.
- அக்பர் இபாத்கானா எனும் வழிபாட்டுக் கூடத்தை நிறுவினார். இஸ்லாமியர்கள், இந்துக்கள், கிருஸ்தவர்கள், ஜொராஸ்திரியகள், சமணர்கள்,கடவுள் மறுப்பாளகள் ஆகியவர்களை இவ்விவாதங்களை பங்கேற்க வரவேற்றார். இபாத்கானவில் நடைபெற்ற விவாதங்கள் மதங்களிடையே கசப்புணர்வை ஏற்படுத்தியால் 1582இல் அக்பர்அவற்றை நிறுத்தினார்.
- அக்பர் பல்வேற மதங்களைச் சேர்ந் புகழ்பெற்ற ஞானிகளோடு எடுத்துக் காட்டாக புருசோத்தம் தேவி (இந்து மதம்), மெகர்ஜிராணா (ஜொராஸ்திரிய மதம்), அக்வாவிவா, மான்சரட் எனும் போர்த்துச்கீசியர் (கிறித்துவ மதம்), ஹிர விஜய சூரி (சமண மதம்) ஆகியேரை தனிப்பட்ட விதத்தில் தொர்பு கொண்டு உண்மை எதுவென அறிய முயன்றார்.
- இத்தகைய விவாதங்களுக்குப் பின்னே ஒரே ஒரு கடவுள் மட்டும் இருப்பதாக பின்னே ஒரே ஒரு கடவுள் மட்டும் இருப்பதாக அவர் உணர்ந்தார். அக்பருடைய தத்துவத்தை விளக்குவதற்கு அக்பரும் பதானியும் பயன்படுத்திய சரியான சொல் **தௌகித்–இ–இலாகி (தீன் இலாகி)** என்பதாகும். தௌகித்–இ–இலாகி என்ற சொல்லின் நேரடிப் பொருள் தெய்வீக ஒரு கடவுள் கோட்பாடாகும்.
- இது ஒரு புதிய மதமல்ல. ஆனால் இதை சூபி மரபின் ஒரு வகைமுறையாக் கருதலாம். அக்பர் இப்பிரிவின் பீர் (மத குரு) என்ற முறையில் அவர் சீடர்களைச் (முரிக்கள் சூபி சீடர்கள்) சேர்ந்திருந்தார். இச்சீடர்கள் குரு முன்வைக்கும் விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் பல்லாயிரக் கண்காணோர் அக்பரின் உண்மையான நோக்கம் மதச் சார்பற்ற கோட்பாடுகளை, பல்வேறு நம்பிக்கைகளைச் சார்ந்தவர்களுக்குச் சரி சமமான சகிப்புத்தன்மையும் சம மதிப்பையும் வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்ட ஓர் அரசை உருவாக்குவதாகும்.
- சமஸ்கிருத, அராபிய, கிரேக்க மற்றும் ஏனைய மொழி நூல்களை பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்வதற்காக ஒரு மொழியாக்க துறையை அக்பர் உருவாக்கினார்.
- இராமயணம்,மகாபாரதம், அதர்வதேம், விவிலியம், குரான் ஆகியவை அனைத்தும் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டன. தௌகித் –இ–இலாகி (தீன் இலாகி) அக்பருக்குப் பின்னர் இல்லாமல் போனது.

உலகத்தின் ஏனைய பகுதிகளில் : *அக்பரின் காலமான 1556 முதல் 1605 வரை மாபெரும் அரசர்களின் காலமாகும். அவருக்கு மிக அருகேயிருந்த சமகாலத்தவர் இங்கிலாந்தின் பேரரசியார் எலிசபெத் ஆவர். இக்காலப் பகுதியில்தான் ஷேக்ஸ்பியரும் வாழ்ந்தார். இதே காலத்தில்தான் பிரான்சை போர்பார்ன் வம்சத்தின் முதல் அரசர் நான்காம் ஹென்றியும், பாரசீகத்தை சபாவி அரசவம்சத்தின் மாபெரும் வலிமைமிக்க அரசனான மகாஅப்பாஸீம் ஆண்டுவந்தனர் ஐரோப்பாவில் நடைபெற்ற ஸ்பானிய ஆட்சிக்கு எதிராக நெதர்லாந்தின் கிளர்ச்சி இக்காலத்தில் தொடங்கி ஏறத்தாழ எண்பது ஆண்டுகளுக்கு தொடர்ந்து 1648இல் முடிவடைந்தது.*

ஜஹாங்கீர் (1605–1627):

- அக்பருக்கு பின் அவருடைய மகன் சலீம் நூருதீன் ஜஹாங்கீர் என்ற பட்டப் பெயருடன் அரியணை ஏறினார். இவர் அரசரானதை எதிர்த்து இவருடைய மூத்தமகன் குரு அர்ஜீன் தேவின் ஆதரவோடு கலகத்தில் இறங்கினார். கலகம் ஒடுக்கப்பட்டு இளவரசர் குஸ்ரு கைது செய் யப்பட்டு விழிகள் அகற்றப்பட்டன. கலகத்தை தூண்டியதாக குரு அர்ஜீன் தேவ் கொல்லப்பட்டார்.

- வங்காளத்தின் தனக்கெதிராகக் கலகம் செய்த ஆப்கானியரான உஸ்மான் கான் என்பவரை ஜஹாங்கீர் பணிய வைத்தார்.
- ராணா உதய்சிங், ராணா பிரதாப்சிங் ஆகியோர் காலத்தில் முகலாயருக்கு அடிபணிய மறுத்த் மேவார் ராணா உதய்சிங்சின் பேரன் ராணா அமர்சிங்கிற்கு எதிராக தனது மகன் இளவரசர் குர்ரம் (பின்னாளில் பேரரசரான ஷாஜகான்) தலைமையில் படையெடுப்பு நடத்தி ஒழுங்குக்கு கொண்டுவரப்பட்டது.
- பின்னர் அவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமர்சிங் ஜஹாங்கீரின் மேலதிகாரத்தை ஏற்றுக் கொண்ட அரசராகக் தனது பகுதிகளை ஆண்டார்.
- 1608இல் தக்காண அரசான அகமது நகர் மாலிக் ஆம்பரின் தலைமையிலான கீழ் தன்னைச் சுதந்திர அரசாக அறிவித்தது.
- அகமதுநகரை இளவரசர் குர்ரம் கைப்பற்ற மேற்கொண்ட பல முயற்சிகள கடைசியில் தோல்வியில் முடிந்தன. 14 மாத கால முற்றுகைக்குப் பின்னர் காங்ரா கோட்டையைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றார்.
- 1595இல் பாரசீகர்களிடமிருந்து அக்பரால் கைப்பற்றப்பட்ட காந்தகாரை 1622 இல் பாரசீக அரசர் ஷா அப்பாஸ் மீட்டிருந்தார். ஜஹாங்கீர் அதை மீண்டும் கைப்பற்ற விரும்பினார். ஆனால் இளவரசர் குர்ரம் மேற்கொண்ட கிளர்ச்சியின் காரணமாக அதை அவரால் செய்ய இயலவில்லை. ஜஹாங்கீரின் ஆட்சி வில்லியம் ஹாக்கின்ஸ் மற்றும் சர் தாமஸ் ரோ என்ற இரு ஆங்கிலேயரின் வருகைக்கு சாட்சியமானது. இந்தியாவில் ஆங்கிலேயே வணிகக் குடியேற்றம் ஒன்றை நிறுவுதற்குப் பேரரசின் அனுமதியை முதலாமவரால் பெற இயலவில்லை. ஆனால் தாமஸ் ரோ இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ் அனுப்பிய தூதுவராய்ச் சூரத் நகரில் ஒரு வணிகக் குடியேற்றத்தை அமைத்துக் கொள்வதற்கான அனுமதியை பேரரசரிடம் பெறுவதில் வெற்றி பெற்றார்.
- ஜஹாங்கீர் அரசு விஷயங்களைக் காட்டிலும் கலை,ஓவியம், தோட்டம், மலர்கள் ஆகிவற்றில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். இதன் காரணமாக அரசரின் பாரசீக மனைவி மெகருண்ணிசா (ஜஹாங்கீரால் நூர்ஜகான் எனப் பெயரிட்டவர்) அரியணையின் பின்னே உண்மையான அதிகாரம் கொண்டவராகத் திகழ்ந்தார். நூர்ஜகான் மேற்கொண்ட அரசியல் சூழ்ச்சிகளால் இளவரசர் குர்ரம் தனது தந்தைக்கு எதிராக கிளர்ச்சி செய்தார். ஆனால் ஜஹாங்கீரின் விசுவாசமிக்க தளபது மகபத்கான் மேற்கொண்ட முயற்சிகளால் வெற்றிபெற இயலாத நிலையில் குர்ரம் தக்காணம் திரும்பினார்.
- பின்னர் நூர்ஜகானால் திறமையுடன் கையாளப்பட்டதால் மகபத்கானால் கலகத்தில் இறங்க, அக்கலகம் நூர்ஜகானின் திறமையுடன் கையாளப்பட்தால் மகபத்கானும் தக்காணம் சென்று குர்ரமுடன் கைகோர்த்தார். ஜஹாங்கீர் இறந்தவுடன் நூர்ஜகான் தன் மருமகன் ஷாரியர் என்பவருக்கு மணிமுடி சூட்ட முயன்றார். ஆனால் நூர்ஜகானின் சகோதரரும் குர்ரமின் மாமனாருமான ஆசப்கான் மேற்கொண்ட முயற்சிகளால் குர்ரம் ஷாஜகான் என்ற பெயருடன் அடுத்த முகலாய அரசராக அரியணை ஏறினார். பத்து ஆண்டுகள் நாட்டையாண்ட நூர்ஜகான், 1627இல் ஜஹாங்கிரின் இறப்பிற்குப் பின்னர் அதிகாரத்தையும் செல்வாக்கையும் இழந்தார்.

  மாலிக் ஆம்பர் – *எத்தியோப்பியவிருந்து இந்தியாவுக்கு ஓர் அடிமையாகக் கொண்டுவரப்பட்ட மாலிக் ஆம்பர், பல இடங்கள் மாறி இறுதியாக அகமதுநகர் அரசின் பிரதம மந்திரியான செங்கிஸ்கானிடம் வந்து சேர்ந்தார். மாலிக் ஆம்பர் அரசியல் விவேகம், ராணுவம் மற்றும் நிர்வாக விஷயங்களை செங்கிஸ்கானிடமிருந்து கற்றுக்கொண்டார். செங்கிஸ்கானின் மரணத்திற்குப் பின்னர் அவருடைய மனைவி மாலிக் ஆம்பரை சுதந்திர மனிதராக்கினார். கடுமையான உழைப்பின் மூலம் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி இறுதியாகத் தென்னிந்தியச் சுல்தானியங்கள் ஒன்றின் இராணுவத் தளபதியாகவும் பகர ஆளுநராகவும் ஆனார்.*

- *தக்காணத்தில் முஸ்லீம்களும் மராத்தியர்களும் தங்கள் அரசியல் மற்றும் வட்டாரத் தனித்தன்மைகளைப் பாதுகாக்கும் முயற்சியில் ஒருங்கிணைந்து முகலாயரின் மேலாதிக்கத்தை எதிர்த்தனர். இம்முயற்சியின் பின்னே மூளையாகச் செயல்பட்டவர் மாலிக் ஆம்பர். 1628, மே 14 மாலிக் ஆம்பர் தன்னுடைய 78 ஆம் வயதில் மரணமடைந்தபோது அவரால் பயிற்றுவிக்கப்பட்ட மராத்தியர்கள் ஓர் அங்கீகரிக்கப்பட்ட சக்தியாக மாறினார்.*

ஷாஜகான் (1627–1658)

- ஷாஜான் ஆக்ராவில் அரியணை ஏறியபோது அவருடைய நிலை பாதுகாப்பானதாகவும் சவால்களற்றதாகவும் இருந்தது.
- தெற்குப் பிராந்தியங்களின் ஆளுநராக இருந்த கான்ஜகான் எனும் பட்டப் பெயர் கொண்ட ஆப்கானிய பிர்லோடி பகைமை பாராட்டினார். தக்காண அரசிலிருந்து அவரை இடமாற்றம் செய்து ஷாஜகான் ஆணை பிறப்பித்திருந்தும் அவர்

அகமதுநகர் சுல்தானான இரண்டாக மூர்தசா நிஜாம்ஷாவுடன் இணைந்து ஷாஜகானுக்கு எதிராகச் சதிகளில் ஈடுபட்டார்.

- நிலைமை தீவிரமடைந்ததைத் தொடர்ந்து ஷாஜகான் தானே நேரடியாகச் தக்காணத்திற்கு விரைந்தார். புதிதாகப் பதவியில் அமர்த்தப்பட்டத் தக்காண ஆளுநர் ஆசம்கான் எனும் பட்டத்தை பெற்ற இராதத்கான் பேரரசின் படைகளுக்கு தலைமையேற்று பால்காட் பகுதியை தாக்கினார். பேரரசின் படைகளால் ஏற்பட் அழிவுகளை கண்ட மூர்தசா கான்ஜகானுடான தனது போக்கை மாற்றிக் கொண்டார்.
- இதனால் கான்ஜகான் தெளலதாபததிலிருந்து தப்பி மாளவம் சென்றார். ஆனால் முடிவில் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார். தக்காணத்தில் அமைதி திரும்பியது. ஷாஜகான் தக்காணத்தை விட்டு செல்லும் முனபாக அப்பகுதியைத் தெளலதபாத் உள்ளிட்ட அகமதுநகர், காண்டேஷ், பெரார், தெலுங்கானா என நான்கு மாநிலங்களுக்கும் ஆளுநராகப் பதினெட்டே வயது நிரம்பிய தனது மகன் ஔரங்கசீப்பை நியமித்தார். தக்காணம் இவ்வாறாக ஷாஜகான் காலத்தில் முகலாயப் பேரரசின் ஆற்றல்மிக்க கடுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- முகடிலாயருக்கு வலுவான போட்டியாளராகத் திகழ்ந்த அகமதுநகர் மாலிக் ஆம்பரின் கடுமையான எதிர்ப்பையும் மீறி பேரரசோடு இணைக்கப்பட்டது.
- 1636 இல் ஷாஜகான் மகபத்கானின் உதவியோடு அகமது நகரின் நிஜாம் ஷாஹி அரசர்களைப் பணியச் செய்தார். ஷியா சேர்ந்த கோல்கொண்டாவின் சுல்தான் தன் அமைச்சர் மீர்ஜும்லாவைச் சிறையில் அடைத்ததைக் காரணம் காட்டி ஔரங்கசீப் கோல்கொண்டாவின் மீது படையெடுத்தார். உடன்படிக்கையொன்றும் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி குதுப்ஷாஹி அரசர் முகலாயப் பேரரசுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசரானார்.
- 1638 இல் ஷாஜகான் பாரசீகப் பேரரசில் அரங்கேறிய அரசியல் சூழ்ச்சிகளைப் பயன்படுத்தி, அக்பரால் கைப்பற்றப்பட்டு ஜஹாங்கீரால் இழக்கப்பட்ட காந்தகாரைக் கைப்பற்றி இணைத்தக்கொண்டார்.
- போர்த்துகீசிரியர் கோவாவில் ஒரு ஆளுநரைக் கொண்டருக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தாலும் வங்காளத்தில் தங்களது குடியிருப்புகளைத் தொலைதூரத்திலிருந்த ஹீக்ளியில் பெற்றிருந்தனர். ஷாஜகான் இப்போர்த்துகீசியரை அவர்களின் குடியிருப்புகளிலிருந்து துரத்தும்படி வங்காள ஆளுநருக்கு உத்தரவிட்டனர். ஹீக்ளியிலிருந்த 200 போர்த்துகீசியர் 600 இந்திய அடிமைகளுக்குச் சொந்தக்காரர்களாய் இருந்தனர்.
- அவர்களில் பலரைப் போர்த்துகீசியர் கட்டாய மதமாற்றம் செய்து கிறித்தவர்களாக்கினர். மேலும் கோவாலிருந்த போர்த்துகீசியர் தங்களைப் பாதகாத்துக்கொள்வதில் வீரமாகப் போராடினாலும் முகலாயப் படைகளால் எளிதாகத் தோற்கடிக்கப்பட்டனர்.
- 1641 இல் ஷாஜகானின் அமைச்சரும் மாமனாருமான ஆசப்கான் மரணமடைந்தார். ஆசப்கானின் தமக்கையும் ஷாஜகானின் முன்னாள் எதிரியுமான நூர்ஜகான் 1645 டிசம்பர் வரை உயிரோடிருந்தார். ஓய்வு பெற்றபின் அவர் வேறு பிரச்சனைகள் எதையும் எதையும் ஏற்படுத்தவில்லை.
- பிரான்ஸ் அரசன் 14வது லூயியின் சமகாலத்து அரசனான ஷாஜகான் முப்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தார், இவருடைய காலத்தில்தான் அரசருக்காகப் புகழ்பெற்ற மயிலாசனம் செய்யப்பட்டது.
- பெர்னியர் (பிரெஞ்சு வைர வியாபாரி பயணி), தாவர்னியர் (பிரெஞ்சு வைர வியாபாரி, பயணி), மான்டெல்சோ (ஜெர்மன் பயணி மற்றும் துணிச்சல் வீரர்), பீட்டர்முன்டி, (இங்கிலாந்து வணிகர்), மனுச்சி (இத்தாலிய எழுத்தாளர் மற்றும் பயணி) ஆகிய ஐரோப்பியர்கள் ஷாஜகானின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்கு வந்தனர். இந்தியா குறித்த விரிவான விவரங்களை எழுதிச் சென்றனர்.
- ஷாஜகானின் இறுதி நாட்களில் அவரது நான்கு மகன்களிடையே அரியணைக்கான போட்டி ஏற்பட்டது. மூத்த மகன் தாரஷூகோ பட்டத்து இளவரசனாக அறிவிக்கப்பட்டதால் மற்ற சகோதரரர்கள் வெறுப்புக் கொண்டனர். மூன்றாவது மகனான ஔரங்கசீப் மனிதர்களையும் சூழ்நிலைகளையும் சரியாக எடைபோடுபவராகவும் சிறந்த திட்டமிடக் கொண்டவராகவும் இரக்கமற்றவராகவும் இருந்தார். தாரஷூகோ சன்னி இஸ்லாமியப் பிரிவைச் சேர்ந்தவராயினும் சூபி தத்துவங்களின் மேல் ஆர்வம் கொண்டிருந்தார். ஷாஜகானில் நான்கு மகன்களிடையே நடைபெற்ற வாரிசுரிமைப் போரில் மூன்றாவது மகன் ஔரங்கசீப் வெற்றி பெற்றார்.
- ஷாஜகானைச் வீட்டுச் சிறையிலடைத்த ஔரங்கசீப் முகலாயப் பேரரசராக முடிசூட்டிக் கொண்டார். மனம் உடைந்துபோன ஷாஜகான் ஒரு அரண்மனைக் கைதியாகவே 1666 ஜனவரி மாதம் மரணமடைந்தார். தாஜ்மஹாலில் அவரது மனைவியின் அருகே நல்லடக்கம் செய்யப்பட்டார்.
- தில்லி அரியணைக்கான வாரிசுரிமைப் போரில் ஔரங்கசீப்பிடம் தோற்றுப்போன தாரஷூகோ தத்துவஞான இளவரசர் என அறியப்பட்டார். பல்வேறு பண்பாடுகளை உரையாடலுக்கு உட்படுத்திய அவர் இந்து மதத்திற்கும்

இஸ்லத்துக்கும்மிடையே நெருங்கிய தொடர்புகள் இருப்பதைக் கண்டறிந்தார். சமஸ்கிருத மொழியிலமைந்த உபநிடதங்களைப் பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்.

- ***தக்காண சுல்தானியம்*** *– மகாராஷ்டிரா, ஆந்திரா ஆகியவற்றின் பெரும் பகுதியையும் கர்நாடகத்தின் ஒரு பகுதியையும் கொண்டிருந்த பாமினி சுல்தானியம் ஒரு நூற்றாண்டுக் காலம் செல்வச் செழிப்போடு இருந்து பின்னர் சிதைவுற்றது. வலிமை வாய்ந்த பிரபுக்கள் கோல்கொண்டா (குதுப்ஷாஹி), பீஜப்பூர்,(அடில்ஷாஹி), பெரார் (இமத்ஷாஹி) பீடார், (பரித் ஷாஹி) அகமதுநகர், (நிஜாம் ஷாஹி) ஆகிய இடங்களில் புதிய அரசுகளைத் தோற்றுவித்தனர். இவையனைத்தும் கூட்டாகத் தக்காணச் சுல்தானியம் என்றழைக்கப்படுகிறது.*

முகலாயர் காலத்து ஐரோப்பியக் குடியேற்றங்கள்–

- ***போர்த்துகீசியர்:*** *1510 இல் அல்புகர்க் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கோவாவைக் கைப்பற்றி அதை கீழ்த்திசை போர்த்துகீசியப் பேரரசின் தலைநகராக்கினார். தொடர்ந்து மேற்குக் கடற்கரையில் டாமன், சால்செட், பம்பாய் ஆகிய இடங்களிலும், கிழக்குக் கடற்கரையில் சென்னைக்கு அருகே சாந்தோம், வங்காளத்தில் ஹீக்ளி ஆகிய இடங்களிலும் போர்த்துகீசியர் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன.*
- ***டச்சுக்காரர்:*** *டச்சுக்காரர்கள் மசூலிப்பட்டினம் (1605), புலிக்காட் (பழவேற்காடு 1610), சூரத்(1616), பிமிலிபட்டினம் (1641), காரைக்கால் (1645), சின்சுரா (1653) காசிம்பஜார், பாராநகர், பாட்னா, பாலசோர், நாகப்பட்டினம் (அனைத்தும் 1658), கொச்சி (1663) ஆகிய இடங்களில் தங்களது வணிக நிலையங்களை ஏற்படுத்தினார்.*
- ***பிரெஞ்சுக்காரர் :*** *சூரத் (1668), மசூலிப்பட்டினம் (1669), அப்போது சிறுகிராமமாக இருந்த புதுச்சேரி (1673), வங்காளத்தின் சந்தன்நகர் (1690) ஆகியவை பிரெஞ்சுக்காரரின் தொடக்ககாலக் குடியேற்றங்களாகும். பின்னர் மலபாரில் உள்ள மாஹி, சோழமண்டலக் கடற்கரையில் ஏனாம் (இரண்டும் 1725இல்), காரைக்கால் (1739) ஆகியவற்றை கைப்பற்றினார்.*
- ***ஆங்கிலேயர்:*** *முதலில் கம்பெனி சூரத்தில் ஒரு வணிகச்சாவடியை நிறுவியது (1612இல் அங்கு ஒரு வணிக நிறுவனம் / பண்டகசாலை அமைக்கப்பட்டது). பின்னர் சென்னை (1639),பம்பாய் (1668), கல்கத்தா (1690) ஆகியவற்றைப் பெற்றது. கம்பெனி பல வணிகக் குடியேற்றங்களைப் பெற்றிருந்தாலும் கல்கத்தா வில்லியம் கோட்டையும், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையும், பம்பாயிலுள்ள மாளிகையும் ஆங்கிலேயரின் மிக முக்கியமான வணிகக் குடியேற்றங்களாகும்.*

தாஜ்மஹால் :

- *தாஜ்மஹால் முகலாயக் கட்டடக் கலையின் கலையின் சிறப்புமிக்க வடிவமாகும். அது இந்தியப் பாரசீக இஸ்லாமியக் கட்டடக் கலைகளின் கூட்டுக் கலவையாகும்.*
- *1612இல் திருமணமானதில் தொடங்கி 1631 குழந்தைப்பேறின் போதுமரணமடையும் வரைஇணைபிரியாமல் உற்ற துணையாய் இருந்த தனது மனைவி மும்தாஜீக்கு அழியாப் புகழை அளிப்பதற்காக ஷாஜகான் தாஜ்மஹாலைக் கட்டினார்.*
- *பாரசீக வம்சாவளியைச் சேர்ந்த இந்தியராகிய உஸ்தத் அகமத் லஹாவ்ரி என்பவர் தலைமைக் கட்டடக்கலை நிபுணராக இருந்தாலும் இவ்வளாகத்திற்கான வரைபடத்தைத் தயாரித்த பெருமை இக்காலகட்டத்தைச் சேர்ந்த கட்டடக்கலை நிபுணர்களைச் சாரும். இவ்வளாகம் தலைவாயில், தோட்டம், மசூதி, கல்லறைமாடம் (மினார் என்றழைக்கபடும் நான்கு கோபுரங்கள்) ஆகிய அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டுத் தனித்தன்மை வாய்ந்ததாக வடிவமைக்கப்பட்டது.*
- *1632 இல் கட்டிட வேலைகள் தொடங்கின. இந்தியா, பாரசீகம், உதுமானியப் பேரரசு, ஐரோப்பிய ஆகியவற்றிலிருந்து இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கல்லறை மாடப்பணியை 1638–39இல் முடிப்பதற்கு பணியமர்த்தப்பட்டனர். அருகிலுள்ள ஏனைய கட்டடங்கள் 1643இல் முடிவடைந்தன. அலங்கார வேலைகள் குறைந்தபட்சம் 1647 வரை தொடர்ந்தது.*

ஔரங்கசீப் (1658–1707)

- ஔரங்கசீப் ஆலம்கீர் (உலகை வெல்பவர்) வாரிசுரிமைப் போரில் அரியணைக்காகத் தன்னோடு போட்டியிட்ட தாரஷூகோ,ஷூஜா, முராத் ஆகியோரை வெற்றி கொண்டு 1658இல் அரியணை ஏறினார்.
- 1681 இல் அவருடைய மகன்களில் ஒருவரான இளவரசர் அக்பர் மேற்கொண்ட கிளர்ச்சியின் காரணமாய் அவர் தக்காணம் செல்ல நேர்ந்தது. மீண்டும் அவர் தில்லிக்குத் திரும்பவேயில்லை. ஏமாற்றமடைந்த மனநிலையில் 1707 இல் அவர் அகமதுநகரில் காலமானார்.

- எல்லைகளைவிரிவடைய இவர் மேகொண்ட போர்களினால் கருவூலம் வறண்டு போனது. மேலும் விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கு இருந்த வரி சரிபாதியாக உயர்த்தப்பட்டது.
- தொடக்கத்தில் ஷாஜகானாபாத் அவரின் தலைநகராக அமைந்தது. ஆனால் இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் தனது நீண்ட படையெடுப்புகளின்போது ஔரங்கசீப் எங்கெல்லாம் முகாமிட்டாரோ அவ்விடங்களுக்குத் தலைநகர் மாறியது.
- வடஇந்தியாவில் ஔரங்கசீப்பிற்கு எதிராக மூன்று மிக முக்கியக் கிளர்ச்சிகள் அரங்கேறின. ஜாட் (மதுரா மாவட்டம்), சத்னாமியர் (ஹரியானா பகுதி). சீக்கியர் ஆகியோர் கலகம் செய்தனர். ஜஹாங்கீர், ஷாஜாகான் காலத்திலேயே தொடர்ந்து கலகம் செய்யும் இயல்பினைக் கொண்ட ஜாட்டுகளின் 1669ஆம் ஆண்டுக் கலகம் தற்காலிகமாக ஒடுக்கப்பட்டாலும் ஔரங்கசீப்பின் இறப்பிற்குப் பின்னரும் அவர்கள் கட்டுக்கடங்காதவர்களாகவே இருந்தனர்.
- சத்னாமியரின் கிளர்ச்சியானது உள்ளூர் இந்து ஜமீன்தார்களின் உதவியோடு ஒடுக்கப்பட்டது. சீக்கியர் கலகமானது, அதிகாரப்பூர்வமாக சீக்கிய குரு தேஜ்பகதூருக்கு எதிராக அப்பதவியின் மீது உரிமை பாராட்டிய ராம்ராய் மேற்கொண்ட சூழ்ச்சிகளின் காரணமாய் வெடித்தது. இறுதியில் சீக்கியரின் ஒன்பதாவது குருவான தேஜ்பகதூர் கொல்லப்பட்டதோடு கிளர்ச்சி முடிவுற்றது.
- அனைத்து வகைகளைச் சேர்ந்த இந்துக்களின் மீதும் ஜிஸியா வரி விதிக்கப்பட வேண்டுமென ஔரங்கசீப் மேற்கொண்ட முடிவு, அதுவரைப் பேரரசிற்கு விசுவாசத்துடன் சேவை செய்துவந்த ராஜஸ்தானத்து தலைவர்களிடையே கிளர்ச்சி மனநிலையை உருவாக்கியது.
- மார்வாரில் ஜஸ்வந்த் சிங்கின் மரணத்தைத் தொடர்ந்து வாரிசுரிமைச் சிக்கல் ஏற்பட்டது. இச்சிக்கலில் ஔரங்கசீப் தலையிட்டு ஜஸ்வந்த் சிங்சின் பேரனான இந்திரசிங் என்பவரைப் பெயரளவிற்கு அரச பதவியில் அமர்த்த மேற்கொண்ட முயற்சியை ஜஸ்வந்த் சிங்கின் மனைவி ராணி ஹாடி வெறுத்தார். இது தொடர்பாக ரத்தோர் ரஜபுத்திரரரின் உவியோடு மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சி ஒடுக்கப்பட்டது.
- மார்வார் அரசியலில் ஔரங்கசீப் தலையிட்டதால் வெறுப்புக் கொண்ட மேவாரின் ராணாவான ராஜ்சிங் கலகத்தில் ஈடுபட்டார். இக்கிளர்ச்சியை ஔரங்கசீப்பின் மகன் இளவரசர் அக்பர் ஆதரித்தார். இருந்தபோதிலும் முகலாயப் படைகளுக்கு ராணா இணையாளவர் அல்ல என்பதால் கொரில்லா போர்முறையைக் கையாண்டு 1680இல் தான் மரணமடையும் வரை ராணா போராடினார்.
- 1681 இல் மேவாரின் புதிய ராணாவாகப் பதவியேற்ற ராணா ஜெய்சிங் ஔரங்கசீப்புடன் ஒரு அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்.

ஔரங்கசீப்பின் தக்காணக் கொள்கை

- ஔரங்கசிப்பின் தக்காணக் கொள்கையானது வளர்ந்துவந்த மராத்தியரின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவது, ஷியா பிரிவைச் சேர்ந்த தக்காணச் சுல்தானியங்களானக் கோல்கொண்டா, பீஜப்பூர் ஆகியவற்றின் கிளர்ச்சிப் போக்கிற்கு அணைபோடுவது, தக்காணத்தைப் புகலிடமாகக் கொண்ட தனது மகன் இளவரசர் அக்பரின் கிர்ச்சிகளை ஒடுக்குவது ஆகியவற்றை நோக்கமாய்க் கொண்டிருந்தது.
- ஔரங்கசீப் 1682இல் தக்காணம் வந்தார். 1707இல் தனது மரணம் வரை தக்காணத்திலேயே தங்கியிருந்தார். பீஜப்பூரின் அடில்சாஹி வம்சத்தைச் சேர்ந்த சுல்தான் சிக்கந்தர் அடில்ஷா ஔரங்கசீப்பின் பல படையெடுப்புகளை எதிர்த்து நின்றார்.
- ஔரங்கசீப் 1685 இல் தனது மகன் ஆசாம் ஷாவை அனுப்பிவைத்ததில் பயனேதுமில்லை பின்னர் மற்றொரு மகன் ஷாஆலமை பீஜப்பூரைக் கைப்பற்ற அனுப்பி வைத்தார். ஷியா முஸ்லீமான பீஜப்பூர் சுல்தான் திறமையுடன் கோட்டையைப் பாதுகாத்தார்.
- ஆனால் ஔரங்கசீப் பே நேரடியாகப் போர்க்களத்தில் இறங்கி இறுதிவரை போரிடும்பாடி தனது பகைளுக்கு உற்சாகம் அளித்ததால் பீஜப்பூர் சுல்தான் தோல்வியடைந்தார். கோல்கொண்டா சுல்தான் அப்துல் ஹசன் 1687இல் தோற்கடிக்கப்பட்டு கோல்கொண்டா கைப்பற்றப்பட்டது.

கோல்கும்பாஸ்

- *1480 முதல் 1686 வரை ஆட்சி செலுத்திய அடில் ஷாஹி மரபின் தலைநகர் பீஜப்பூர் ஆகும். இது கண்கவர் கட்டடங்களையும் மசூதிகளையும் தன்னகத்தே கொண்டது. இவ்வம்சத்தின் ஏழவாது ஆட்சியாளரான முகமது அடில்ஷாவின் (1627–1656) மிடுக்கான கல்லறையே கோல்கும்பாஸ் (வட்டவடிவக் குவிமாடம் ஆகும். அடில் இதனைத் தனது வாழ்நாளிலேயேக் கட்டினார். இது அடர் சாம்பல்நிறக் கற்களால் கட்டப்பட்டு மேற்பூச்சி பூசி அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதன் வெளிப்புறம் சாதாரணமாயும் ஆனால் அழகுறவும் அமைக்கப்பட்டுள்ளது.*

☞ *கட்டடத்தின் நான்கு வெளிமூலைகளிலும் எண்கோணக் கவிகைமாடம் உள்ளது. ஒவ்வொரு கவிகைமாடமும் ஏழு அடுக்குகளையும் ஒவ்வொரு அடுக்கம் பல சாளரங்களையும் கொண்டு பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும் வண்ணம் அமைந்துள்ளது. ரோமின் புனித பீட்டர் தேவாலயத்திற்கு அடுத்து உலகின் இரண்டாவது பெரிய குவிமாடம் இதுவேயாகும். இதன் உட்சுவற்றின் நீளம் 135 அடி, உயரம் 178 அடி. இங்க சற்று உயர்த்தப்பட்ட மேடையில் முகமது அடில்ஷா அவர் மனைவி அருஸ்பீபி, அவர் மகள், பேரன், பேரனின் பிரிய மனைவி ரம்பா ஆகிய ஐவரின் கல்லறைகள் உள்ளன.*

மராத்தியருக்கு எதிரான ஔரங்கசீப்பின் நடவடிக்கைகள்

- சிவாஜியின் தலைமையில் மராத்தியர்கள் ஔரங்கசீப்புக்கு ஓர் அச்சுறுத்தலாகவே இருந்தனர் ஔரங்கசீப் தனது இரு முக்கியத் தளபதிகளான செயிஷ்டகான், ஜெய்சிங் ஆகியோரை ஒருவருக்கு பின் ஒருவராக சிவாஜியைக் கைதுசெய்ய அனுப்பி வைத்தார், ஜெய்சிங் சிவாஜியைக் கைது செய்து தில்லிக்கு அழைத்துச் சென்றார் ஆனால் அங்கிருந்து தப்பிய சிவாஜி மீண்டும் தக்காணத்தை அடைந்தார். சிவாஜி கொரில்லா போர் முறையைப் பின்பற்றி 1680இல் 53 வது வயதில், தான் மரணமடையும் வரை முகலலாயப் படைகளை எதிர்த்துப் போர் செ ய்தார். சிவாஜியின் மகன்களும் தொடர்ந்து எதிர்த்து 1707இல் ஔரங்கசீப் மரமணமடையும்வரை அவரைப் பெரும் சோதனைக்கு உள்ளாக்கினர். 1707இல் ஔரங்கசீப் காலமமானது இந்திய வரலாற்றில் ஒரு முக்கியத் திருப்புமுனையாகும். ஏனெனில் அடுத்த 150 ஆண்டுகளுக்கு வலிமைகுன்றிய வழித்தோன்றல்களால் அது ஆளப்பட்டபோதும் ஔரங்கசீப் மரணமடைநதபோதே முகலாயப் பேரரசும் முடிவுக்கு வந்துவிடடது,

ஔரங்கசீப்பின் பிற நடவடிக்கைகள்

- அரியணைப் போட்டியில் தனக்கு எதிரான முக்கியப் போட்டியாளரான தனது சகோதரர் தாரஷூகோவுக்குச் சீக்கியர் உதவினர் என்ற காரணத்திற்காக அவர்களின் மீது ஔரங்சீப் வெறுப்புக் கொண்டார். ஔரங்சீப்பின் உத்தரவின்படியே குரு தேஜ்கதூர் கொல்லப்பட்டார்.
- இந்நிலையில் ரஜபுத்திர அரசர்கள் தங்களை சுதந்திர அரசுகளாகப் பிரகடனம் செய்து கொண்டனர், இவர்களுக்கு எதிராக ஔரங்சீப்பின் மகனான இளவரசர் அக்பரின் தலைமையில் பெரும்படையொலொன்று அனுப்பப்பட்டது, மகனுடையத் துரோகக் கணத்தை ஒருவேளை அறிந்திராமலே ஔரங்கப் இந்த முடிவை எடுத்திருக்கலாம். எப்படியிந்தபோதிலும்_இளவரசர் தன்னை முகலாயப் பேரரசராகப் பிரகடனம் செய்து கொண்டார். தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அவரைத் தக்காணத்திற்குத் துரத்தின. அங்கு அவர் சிவாஜியின் மகன் சாம்பாஜியின் உ தவியைப் பெற்றார், ஔரங்கசீப் நேரடியாகக்களத்தில் இறங்கவே பாரசீகத்திற்குத் தப்பிச் சென்ற இளவரசர் அக்பர் அங்கிருந்து திரும்பவேலயில்லை, 1689இல் சாம்பாஜி கைதுசெய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தானியங்கள் முற்றிலுமாகச் சரணமையும் அளவுக்குத் தள்ளப்பட்டன,
- ஔரங்கசீப்பன் இறப்பிற்குப் பின் தோன்றிய அரசுகளால் பேரரசின் சிதைவு விரைவுபடுத்தப்பட்டது,
- நிலவரிக்கு மேலாக வசூலிக்கப்பட்ட அப்வாப் என்னும் வரி ஷரியத் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ற காரணத்திற்க்காக நிறுத்தினார்,
- ஷாஜகானுடைய ஆட்சிக் காலத்தைக் காட்டிலும் ஔரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தில் இந்து அதிகாரிகள் அதிகமான எண்ணிக்கையில் அரசு நிர்வாகத்தில் பணியாற்றினர்.

முகலாயர்காலச் சமுதாயம்

- முக்காடம் என்றழைக்கப்பட்டக் கிராமத் தலைவர்கள் கிராமத்தின் நிர்வாக உறுப்பான *பஞ்ச்* (பஞ்சாயத்து) என்ற அமைப்பினை உருவாக்கினர். கிராம அளவில் வரிகளை வசூலிப்பதும் அவை தொடர்பான கணக்குகளை பராமரிப்பதும் இவர்களது பொறுப்பாகும்.
- சமூகத்தின் நடுத்தர வர்க்கமானது சிறிய மன்சப்தார்கள், சிறு கடைகள் வைத்திருப்போர், ஹக்கீம் (மருத்துவர்கள்), இசைக் கலைஞர்கள் ஏனைய கலைஞர்கள், முகலாய நிர்வாகத்தின் கீழ்நிலை அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டிருந்தது.
- ஊதியம் பெறும் ஒரு வர்க்கமும் இருந்தது. இவர்கள் **மதாத்–இ–மாஷ்** எனப்பட்ட மானியத்தை முகலாயப் பேரரசரிடமிருந்தும, உள்ளூர் ஆட்சியாளர்கள், ஜமீன்தார்கள் ஆகியோரிடமிருந்தும் பெற்றனர். இவர்கள் கிராமத்து மேன்மக்களின் ஒரு பகுதியாக மாறி கிராமத்தையும் நகரத்தையும் இணைக்கின்ற கண்ணிகளாய் இருந்தனர்.
- தில்லி, ஆக்ரா, பதேப்பூர் சிக்ரி, லாகூர், அகமதுநகர், டாக்கா, முல்தான் ஆகியன பேரரசின் முக்கியமான நகரங்களாகும். அவை சமகால ஐரோப்பிய நகரங்களான லண்டன், பாரிஸ், போன்றவற்றிற்கு இணையாகக் கருதத்தக்க நிலையிலிருந்தன.

- சமுகத்தின் அடிமட்டத்திலிருந்த மக்களில் ஆண்கள் **லங்கோடு** எனப்பட்ட கோவணத்தையும் பெண்கள் சேலையையும் அணிந்தனர்.
- அபுல் பாசல் தன்னுடைய அய்னி அக்பரியில் ஜமீன்தார்கள் ஆவதற்கானத் தகுதிகளையுடைய சாதிகளைப் பட்டியலிடுகிறார்.
- அக்பர் ஆட்சியயில் 15 விழுக்காடுக்கும் மேற்பட்ட பிரபுக்கள் ரஜபுத்திரர்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ராஜா தோடர்மால், ராஜா மான்சிங், ராஜா பீர்பால் ஆகியோர் அக்பர் காலத்தில் புகழ்பெற்ற பிரபுக்களாவர்.
- ராஜபுத்திரர்கள் அரசு நிர்வாகத்திலிருந்த பல்வேறு பணியிடங்களுக்கக் காயஸ்தர், கத்ரி சமூகத்தைச் சேர்ந்தவர்களை நியிமித்தனர். ஜஹாங்கீர், ஷாஜகான், ஔரங்கசீப் ஆகியோர் மராத்தியரைப் பிரபுக்காள நியமித்தனர். எடுத்துக்காட்டாக சிவாஜியின் தந்தை ஷாஜி சில காலம் ஷாஜகானிடம் பணியாற்றினார்.
- மரபு வழி சொத்துகளில் பங்க பெறுவதற்கு குறைந்தபட்ச உரிமையே பெண்களுக்கு இருந்தது. உயர்சாதி பெண்களிடையே விதவை மறுமணம் தடைசெய்யப்பட்டிருந்தது.
- முஸ்லீம் மணப்பெண்கள் திருமணத்தின்போது **மகர்** எனும் பணப்பரிசை (மணமகன் மணமளுக்குக் கட்டாயம் தர வேண்டிய பணம்) பெறுவதற்கு உரிமை பெற்றிருந்தனர். மேலும பரம்பரைச் சொத்துகளில் குடுமப்பத்திலுள்ள ஆண்களுக்குச் சமமமாக இல்லாவிட்டாலும் பெண்களும் ஓரளவு பங்குபெறும் உரிமையைப் பெற்றிருந்தனர்.

பொருளாதாரம்

- முகலாயப் பொருளாதாரம் காடு சார்ந்த வேளாண் பொருளாதாரமாகும். உற்பத்தியாளர்களுக்கும் காடுகளுக்குமான உறவு மிக நெருக்கமாக இருந்தது.
- கிணற்றுநீர் பாசனமே முக்கியப் பாசன முறையாக இருந்தது. ராபி, காரிப் ஆகிய இரு வேளாண் பருவங்களில் பயிர் செய்யப்பட்டப் பயிர் வகையை அய்னி அக்பரி பட்டியலிடுகிறது.
- புகையிழையும் மக்காச் சோளமும் பதினேழாம் நூற்றாண்டில் அறிமுகமாயின. அதற்குன் பின்னரே மிளகாயும், வேர்க்கடலையும் அறிமுகமாயின. அன்னாசிபழம் பதினாறாம் நூற்றாண்டில் அறிமுகமாயின.
- ஒட்டுமுறையில் பல மாம்பழ ரகங்களை போர்ச்சுகீசியர்கள் வளர்த்தனர். உருளைக்கிழங்கு, தக்காளி, கொய்யா ஆகியவை பின்னர் வந்தன. அவுரி மற்றுமொரு முகலாயர் கால முக்கிய வணிகப் பயிராகும்.
- பட்டு உற்பத்தி வங்காளத்தில் பிரமிபூட்டும் வளர்ச்சியைப் பெற்று உலகச் சந்தைக்கு அதிகமான பட்டுத்துணியை அனுப்பி வைக்கும் தலைமைப் பட்டு உற்பத்தி மையமாயிற்று
- முகலாய ஆளம் வர்க்கத்திற்க நிலவரியே மிக முக்கியமான வருவாயாகும். அது விளைச்சலில் ஒரு பங்காகும்.
- அரசு நிர்வாகம் நிலத்தின் உற்பத்திக் திறனை மதிப்பிட்டு நிலத்தை அளவை செய்து மொத்த அளவை அடிப்படையாகக் கொண்டு வரியை நிர்ணயம் செய்தது. அக்பர் ஜப்தி முறையை (தோடர்மால்ல் அறிமுகம் செய்யப்பட்ட முறை) பிரகடனம் செய்தார். நிலத்தின் அளவு விளைவிக்கப்பட்ட பயிர் ஆகியவற்றில் அடிப்படையில் விவசாயி பணமாகச் செலுத்த வேண்டிய வரி நிர்ணயிக்கப்பட்டது. பல்வேறு பகதிகளைச் சேர்ந்த விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் செலுத்த வேண்டிய இவ்வரிகள் தொடர்பான விவரங்களைக் கொண்ட அட்டவணைகள் **தஸ்தர்** என அழைக்கப்பட்டன.
- **கர்கானா** எனும் தொழிற்கூடங்களில் விலையுயர்ந்த கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அரசப் குடும்பங்களுக்கு தேவையான பொருட்களை அரண்மனை சார்ந்த கர்கானாக்கள் உற்பத்தி செய்தன.

வர்த்தகமும் வாணிகமும்

- **பஞ்சாரா** எனும் நாடோடி வணிகக் இனக்குழு பெருமளவிலான பொருட்களைத் தொலைதூரப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லும் நிபுணத்துவம் பெற்றிருந்தது.
- அரிசி, சக்கரை, பட்டு,மஸ்லின் உணவு தானிய ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதில் வங்காளம் முக்கிய மையமாகத் திகழ்ந்தது. சோழமண்டலக் கடற்கரை, தனது பருத்தித் துணி உற்பத்திக்காகப் புகழ் பெற்றிருந்தது.
- காஷ்மீர் சால்வைகளும் தரைவிரிப்புகளும் கைவினைப் பொருட்களின் உற்பத்திக்குப் பெயர் பெற்றிருந்த லாகூரிலிருந்து விநியோகமாகின.
- பொருட்கள் இடம் விட்டு இடம் செல்வதற்கு **உண்டி** என்றழைக்கப்பட்ட கடன் பத்திரங்கள் உதவின. ஒருங்கிணைக்கப்பட்டிருந்த **சராய்கள்** (ஓய்வு விடுதிகள்) வணிகர்களின் பயனங்களை ஊக்குவித்தன. மிகப்பெரிய இராணுவத்தை கொண்டிருந்தபோதிலும் முகலாய அரசு ஒரு கடற்படையைக் கொண்ட சக்தியாக இல்லை. தாங்கள் ஒரு பலம் பொருந்திய கடற்படைச் சகாப்தத்தில் வாழ்கிறோம் என்பதை அவர்கள் உணரவில்லை. முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

- இந்திய தங்கத்தையும் வெள்ளியையும் இறக்குமதி செய்தது. முகலாயரின் வெள்ளி நாணய முறை வெள்ளிக்கான தேவையை அதிகரித்தது.

மதம்

- இக்காலகட்டத்தில் பக்தி இலக்கியம் பெரும் வளர்ச்சி பெற்றது. வியாசாராயரால் பிரபலப்படுத்தப்பட்ட கர்நாடகத்தைச் சேர்ந்த பக்தி இயக்கமான **தசருதா** இயக்கம் தாழ்த்தப்பட்ட சாதிகளை சேர்ந்தோரின் இயக்கமாக மாறியது. பக்தி இயக்கத்தின் முக்கியமான ஆளுமை கபீர் ஆவார்.
- கடவுள் ஒருவரே என குருநானக் நம்பினார். சூபியிசம் ஈரானில் தோன்றியது. ஐரோப்பிய வணகர்கள் வருகையோடு பிரான்சிஸ் சேவியர், ராபார்ட் –டி–நோபிலி போன்ற கிறித்தவச் மதப் பரப்பாளர்கள் இந்தியாவிற்கு வந்தனர். சீகன்பால்கு விவிலியத்தின் புதிய ஏற்பாட்டை 1714இல் தமிழில் மொழியாக்கம் செய்தார். வெகுவிரைவில் பழைய ஏற்பாடும் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டது.

அறிவியலும் தொழில்நுட்பமும்

- முஸ்லீம் கல்வி நிறுவனங்களான மதராஸாக்கள் முஸ்லீம் இறையியலின் மீதே அதிகக் கவனம் செலுத்தியது. வாரணாசி போன்ற மிகச் சிறந்த கல்வி மையங்களில் ஜோதிடம் கற்றுத்தரப்பட்டது.
- ஐரோப்பியாவிலிருந்த பல்கலைக் கழகங்களுக்கு நிகராக இந்தியாவில் கல்வி நிறுவனங்கள் இல்லையெ பிரான்ஸ் நாட்டுப் பயணி பெர்னியர் குறிப்பிடுகிறார்.
- அக்பரின் அவைக்களப் புலவரான பெய்சி பாஸ்கரச்சாரியரின் புகழ்பெற்ற கணித நூலாண லீலாவதியை மொழிபெயர்த்தார்.
- நீர் இறைப்பதற்காகப் பல பீப்பாய்கள் இணைக்கப்பட்டச் சக்கரமான பாரசீகச் சக்கரம் பாபர் காலத்தில் அறிமுகமானது. வரிசையாக விசைச் சக்கரங்கள் பொருத்தப்பட்டச் சற்றே கடினமான நீர் இறைக்கும் இயந்திரம் பதேபூர் சிக்ரியில் நிறுவப்பட்டது.
- வெடியுப்பை பயன்படுத்தி நீரைக் குளிர்விக்கும் முறையைப் பரலாக்கிய பெருமை அக்பரைச் சாரும். கப்பலின் ஒட்டகம் எனச் சொல்லப்படும தொழில்நுட்பத்தை உலகத்திலேயே கண்டறிந்த முதல் மனிதர் என அக்பர் புகழப்படுகின்றார்.
- வரலாற்றறிஞர் இர்பான் ஹபீப் இந்தியாவின் பின்தங்கிய நிலையைக் கீழ்க்கண்டவாறு பதிவு செய்கிறார். *தொழில் நுட்பத்தில் இந்தியாவின் பின்தங்கிய நிலை வெளிப்படையாகத் தெரிகிறது. இந்தியப் படைகளில் மேட்ச் லாக் எனப்படும் பழைய பாணியிலானத் துப்பாக்கிகள் அதிகமான பயன்பாட்டில் இருந்தபோது ஐரோப்பாவில் பிளிண்ட்லாக் எனப்படும் நவினத் துப்பாக்கிகள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டன. செலவு மிக்க செம்பினாலான பீரங்கிகளை இந்தியா தொடர்ந்து பயன்படுத்திட வந்தபோது ஐரோப்பாவில் முன்னதாகவே அவை பயன்பாட்டிலிருந்து நீங்கிவிட்டன. இதற்கு காரணம் பதினேழாம் நாற்றாண்டில்கூட இந்தியாவால் வார்ப்பிரும்பை உற்பத்தி செய்ய இயலாமல் போனதேயாகும்.*

கட்டடக்கலை

- கூண்டு வடிவிலான குமிழ்களைக் கொண்ட கவிகை மாடங்களாலும், ஒப்பனைகள் மிகுந்த கலங்கரை விளக்கம் போன்ற கோபுரங்களாலும், நான்கு மூலைகளிலும் எழுப்பப்பட்டுள்ள ஸ்தூபி மாடங்களாலும் படங்கள் வரையப்பட்டு பதிக்கப்பட்டு ஓடுகளாலும் அலுங்காரிக்கப்பட்ட பெரிய வடிவங்களுக்கு முகலாயக் கட்டடங்கள் பெயர் பெற்றவையாகும்.
- சூர் வம்சத்து அரசர்கள், தில்லியில் புராணகிலா, பீகாரில் சசாரம் என்னுமிடத்தில் கட்டிய ஷெர்ஷா, இஸ்லாம் ஷா ஆகியோரின் கல்லறைகள் போன்ற கண்களைக் கவரும் கட்டங்களை விட்டுச் சென்றள்ளனர். புராணகிலாவில் உயர் அரண் படியடுக்கு நடைமேடையில் கட்டப்பட்டுள்ள கல்லறைகள்கள், நாற்புறமும் சூழ்ந்துள்ள நீர் நீலைகள் ஆகியன நவீனக் கூறுகளாகும்
- அக்பர் ஆட்சிக் காலத்தில் ஹீமாயூனின் கல்லறை உயர்த்தப்பட்ட தளத்தின் மீது வைக்கப்பட்டது. சுற்றிலும் தோட்டங்கள் அமைக்கப்பட்டன.
- மணற்கற்பாறைகளால் கட்டப்பட்ட ஆக்ரா கோட்டை ரஜபுத்தி பாணிகளை இணைத்துக் கட்டப்பட்டதற்கு ஒரு எடுத்துக்காட்டாய் திகழ்கிறது. அக்பரின் புதிய தலைநகரான பதேபூர் சிக்ரியின் கோட்டைகளால் சூழப்பட்ட எழுச்சியூட்டும் பல கட்டடங்களைக் கொண்டுள்ளது. பதேபூர் சிக்ரியின் மலைப்பூட்டும் வாயிற்பகுதியும், அக்பர் சிகப்புநிற மற்றும் பளிங்குக் கற்களால் கட்டிய புலந்தர்வாசாவும் நேர்த்தியான கட்டடக்கலையின் முகலாயரின் சாதனைகளாகக் கருதப்படுகின்றன.
- ஆக்ராவின் அருகில் சிக்கந்தராவிலுள்ள அக்பரின் கல்லறை மாடம் சில பௌத்த கட்டடக்கலைக் கூறுகளையும் கொண்டுள்ளது. இது அக்பரின் காலத்தில் தொடங்கப்பட்டு ஜஹாங்கீரின் காலத்தில் நிறைவு பெற்றது

- ஜஹாங்கீர் நூர்ஜ்கானின் தந்தையான இதிமத் உத் தௌலாவுக்காக எழுப்பிய கல்லறையே முழுவதும் வெள்ளை நிறப் பளிங்குக் கற்களால் முகலாயர் கட்டிய முதல் கட்டடமாகும்.
- ஷாஜகான் காலத்தில் முகலாயக் கட்டடக்கலை அதன் சிகரத்தை எட்டியது. தாஜ்மஹால் முழுவதும் பளிங்குக் கற்களால் உயர்த்தப்பட்ட தளத்தின் மீது கட்டப்பட்டதாகும். (மினார்–கோபுரம்)
- திவானி ஆம், திவானி காஸ், மோதி மஹால், ஹீரமஹால் போன்ற பிரமிப்பூட்டும் கட்டடங்களால் சூழப்பட்டுள்ள செங்கோட்டை ஷாஜகான் காலத்து கட்டக்லைத் திறன்களை பிரதிபலிக்கின்றன.
- ஆக்ரா கோட்டையிலிருக்கும் மோதி மஸூதி முழுவதும் பளிங்குத் கற்களாலானது தில்லியிலுள்ள கம்பீரமான வாயிற் பகுதியில் வரிசையான கவிகை மாடங்கள், உயரமான மெலிதான கோபுரங்கள் (மினார்) ஆகியவற்றைக் கொண்டுள்ள ஜீம்மா மஸூதி ஆகியன ஷாஜகானால் கட்டப்பட்ட முக்கிய மஸூதிகளாகும். ஷாஜகான் ஷாஜகானாபாத் என்ற பெயரில் ஒரு நகரத்தையே (இன்றைய பழைய தில்லி) உருவாக்கினார். இங்குதான் செங்கோட்டையும் ஜீம்மா மஸூதியும் அமைந்துள்ளது.
- ஔரங்கசீப் காலத்தில் லாகூரில் பாதுஷாகி மஸூதி கட்டப்பட்டது. மேலும் ஔரங்காபாத்தில் ரபீயா உத் தௌராயின் பளிங்கிலான கல்லறையும் கட்டப்பட்டது. இக்கல்லறை பீபிமக்பாரா (பெண்ணின் கல்லறை) என்றழைக்கப்படுகிறது.
- ஜஹாங்கீர், ஷாஜகான் ஆகியோர் உருவாக்கிய ஷாலிமர் தோட்டங்கள் இந்தியத் தோட்டக் கலையில் குறிப்பிடத்தக்கவை ஆகும். மிகப்பெரும் கட்டிடங்களைத் தவிர பொதுப்பயன்பாட்டிற்காகவும் பல கட்டுமானப் பணிகளை முகலாயர் மேறகொண்டனர். அவற்றுள் மகத்தானது ஜான்பூரில் கோமதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளட்ப பாலமாகும்.
- முகலாயரின் மிகவும் போற்றத்தக்கச் சாதனை தில்லிக்கு நீர் கொண்டுவரும் மேற்கு யமுனா கால்வாயைக் கட்டியதாகும்.
- மதுராவுக்கு அருகே பிருந்தாவனத்தில் உள்ள கோவிந்தேவ் கோவிலும்ட, மத்தியப்பிரதேசம் ஒரிசாவிற்கு அருகேயுள்ள சதுர்டிஜ் என்னும் இடத்திலுள்ள பீர்சிங் கோவிலுள்ள முகலாயக் கட்டிடக்கலையின் தாக்கத்தைக் காணலாம்.

ஓவியம்

- மத்திய ஆசியாவிலிருந்து ஹீமாயூனோடு இந்தியா வந்த நுண் ஓவியக் கலைஞர்களான அப்துல் சமத், மீர் சையத் அலி ஆகியோரிடமிருந்து இந்திய ஓவியர்கள் ஊக்கம் பெற்றனர்.
- தஷ்வந்த், பசவன் ஆகியோர் அக்பரின் அவையை அலங்கரித்த முக்கிய ஓவியர்களாவர். ஐரோப்பிய ஓவியங்கள் போர்த்துகீசியப் பாதிரிமார்களால் அக்பரின் அவையில் அறிமுகம் செய்யப்பட்டன.
- ஜஹாங்கீர் காலத்தில் உருவப் படத்தை வரைதலும் விலங்குகளை வரைவதும் வளர்ச்சி பெற்றன. இத்துறையில் மன்சூர் பெரிதும் அறியப்பட்டராவார். முகலாய நுண்ணோவியங்கள் டச்சு நாட்டின் தலைசிறந்த ஓவியரான ரெம்பிராண்ட் மீது தாக்கத்தை ஏற்படுத்தினர்.ஷாஜகான் ஓவிய மரபைத் தொடர்ந்தார். ஆனால் ஔரங்கசீப்பின் அலட்சியத்தால் ஓவியர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குக் கலைந்து சென்றதன் மூலம் பிராந்திய அளவில் ஓவியக்கலை வளர்ந்தது.

இசையும் நடனமும்

- பல மெல்லிசைப் பாடல்களை இயற்றிய குவாலியரைச் சேர்ந்த தான்சென் ஏனைய 35 இசைக் கலைஞர்களோடு அக்பரால் ஆதரிக்கப்பட்டார் என அய்னி அக்பரி குறிப்பிடுகின்றது. ஜஹாங்கீரும் ஷாஜகானும் இசையை ஆதரித்தவர்களே. ஔரங்கசீப் இசைக்கு எதிரானவர் என்ற பொதுக் கருத்தொன்று நிலவுகிறது. ஆனால் அவருடைய காலத்தில்தான் இந்தியாவில் செவ்வியல் இசை குறித்த பல நூல்கள் எழுதப்பட்டன.
- பிற்கால முகலாய அரசர்களில் ஒருவரான முகமது ஷர் இசைத்துறையில் முக்கிய வளர்ச்சிகள் ஏற்படக் காரணமாக இருந்தார். பாபர் நாமா, பாதுஷா நாமா ஆகிய நூல்களில் இசைக்கருவிகளோடு பெண்கள் நடனமாடும் ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன.

இலக்கியம்

- பாரசீகம், சமஸ்கிருதம் மற்றும் பிராந்திய மொழிகள் முகலாயர் காலத்தில் நன்கு வளர்ச்சியடைந்தன. முகலாய பேரரசிலும் தக்காண அரசுகளிலும் பாரசீக மொழியே நிர்வாக மொழியாக இருந்தது.
- முகலாய நிர்வாகத்தை பற்றி அய்னி அக்பரில் விவரிக்கப்பட்டுள்ளது. அறிவியல்,புள்ளியல் ,புவியியல், பண்பாடு ஆகியவற்றின் மீது அய்னி அக்பரி கொண்டுள்ள அக்கறைக்காகவே அது பாராட்டப்பட வேண்டும்.
- தபிஸ்தான் என்னும் நூல் பல்வேறு மதங்களின் நம்பிக்கைகள்,அம்மதங்கள் தொடர்பான நூல்கள் ஆகியன குறித்துப் பாரபட்சமற்ற விபரங்களைக் கொண்டுள்ளது.

- சமஸ்கிருத மொழி நூல்களை மொழிபெயர்த்ததால் பாரசீகம் வளர்ச்சிபெற்றது. முகலாயர் காலத்தில் இலக்கியத் துறைக்கு செய்யப்பட்ட பெரும் பங்களிப்பு பல்வேறு மொழிகளைப் பேசி வந்த மக்களிடையே உருது ஒரு பொதுவான தொடர்பு மொழியாக வளர்ச்சியடைந்ததாகும்.
- அப்துர் ரகீம் கான்–இ–கானான் என்பவர் வாழ்க்கை குறித்த, மனித உறவுகள் தொடர்பான பாரசீகர்களின் சிந்தனைகள் இழையோடும் பக்திப் பாடல்களை இந்தியின் கிளை மொழியான பிரிஜி என்னும் வடிவத்தில் எழுதினார்.
- கிழக்கு உத்திரபிரதேசத்து மக்கள் பேசிய இந்தி மொழியின் வட்டார மொழியான அவதியில் துளசிதாசர் எழுதிய பாடல்கள் அவற்றின் பக்திச் சிந்தனைகளுக்காகப் பிரபலமாயின. இக்காலத்தில் ஏகநாதர், துக்காராம், ராம்தாஸ், முக்தீஸ்வர் ஆகியோரின் இலக்கியப் படைப்புகளால் மராத்திய இலக்கியம் எழுச்சி பெற்றது. ஏனைய மொழிகளின் மீதான சமஸ்கிருதத்தின் மேலாதிக்கத்தை ஏக்நாத் கேள்விக்குள்ளாக்கினார்.
- துக்காராமின் பாடல்கள் ஒரு கடவுள் கோட்பாட்டின் மேல் ஆர்வத்தைத் தூண்டியது.
- அஸ்ஸாமிய மொழியில் பக்திப் பாடலை முன்மாதிரியாகக் கொண்டு சங்கர தேவர் ஒரு புதிய இலக்கியமரபை உருவாக்கினார். அஸ்ஸாமிய மொழியில் வானியல், கணிதம் யானைகள் மற்றும் குதிரைகளுக்கு சிகிச்சையளிக்கும் முறைகள் குறித்த நூல்கள் படைக்கப்பட்டன.
- கிருஷ்ணருக்கும் ராதைக்குமான காதலைச் சித்தரிக்கும் கவிதைகளைக் கொண்ட சைதன்ய வழிபாட்டு முறை வங்காள இலக்கியத்தை மேம்படுத்தியது. ஷேக்பரித் ஆகியோரின் பாடல்கள் பஞ்சாபி மொழியின் பரிணாம வளர்ச்சியின் முக்கிய அடையாளங்களாகும்.

மராத்தியர்

- முகலாயர் வீழ்ச்சியில் மராத்தியர் முக்கியப் பங்கு வகித்தனர். 18 ஆம் நூற்றாண்டின் மத்தியில் இந்தியாவின் மையப்பகுதியில் மராத்திய மாமன்னர் சிவாஜியின் தலைமையில் முகலாய ஆட்சியை முடிவுக்கு கொண்டுவருவதில் வெற்றி பெற்றனர். தஞ்சாவூரில் நாயக்க மன்னரின் ஆட்சி முடிவடைந்த உடன் மராத்தியத் தளபதி வெங்கோஜி (சிவாஜியின் ஒன்றுவிட்ட சகோதரர்) தமிழகத்தில் மராத்திய ஆட்சியை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டார். தஞ்சாவூரில் 1674ஆம் ஆண்டு தொடங்கிய மராத்தியரின் ஆட்சி 1832 ஆம் ஆண்டு இரண்டாவது சரபோஜி மன்னர் மரணம் வரை நீடித்தது.
- பாமினி சுல்தான்களின் கீழ் செயல்பட்ட மராத்தியர், சிவாஜி காலத்தில் எழுச்சிப் பெற்றனர். ***கொரில்லா தாக்குதல் முறை*** அவர்களின் வலிமையாக திகழ்ந்தது.
- பக்தி இயக்கம் பரவியதன் மூலமாக மராத்தியரிடம் ஒற்றுமை உணர்வு மேலோங்கியது. துக்காராம், ராம்தாஸ், ஏகநாதர், ஆகியோர் பக்தி இயக்ககத்தின் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். மராத்தி மொழியில் பாடப்பட்ட பக்திப் பாடல்கள் சமூகத்தில் வாழ்ந்த மக்களிடையே பிணைப்பை ஏற்படுத்தின.
- *"மராத்திய நாட்டில் மத எழுச்சி என்பது பிராமணச் சமயம், சார்ந்ததாக இல்லை. அமைப்புகள், சடங்குகள், வகுப்பு, வேறுபாடுகள், ஆகியவற்றுக்கு எதிரான தனது போராட்டத்தைப் பொறுத்த அளவில் வழக்கத்தில் உள்ள கொள்கைக்கு மாறானதாகஅது அமைந்தது. துறவிகள் பெரும்பாலும் பிராமண வகுப்பைச் சாராமல் சமூகத்தின் அடிநிலையைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்"–* ***நீதிபதி ரானடே***
- பீஜப்பூர், கோல்கொண்டா அரசுகள் கலைந்த சூழலில் மராத்தியர் ஒன்றினைந்து தங்களுடைய வாழ்க்கைக்காகப் போராட வேண்டிய உந்துதலைப் பெற்றனர். பீஜப்பூர், கோல்கொண்டா, அகமதுநகர் ஆகிய சுல்தான்களுக்கு எதிராக நடந்த தக்காணப் போர்களின் காரணமாக முகலாயர்களின் கருவூலம் காலியானது. தக்காணப் பகுதியில் சிதறிக் கிடந்த மராத்தியரைத் தனது தலைமையின் கீழ் ஒன்றுதிரட்டி சிவாஜி ஒரு வலுவான அரசை நிறுவினார். அந்த அரசுக்கு ***ராய்கர்*** தலைநகரமாக விளங்கியது.

சிவாஜி (1627–1680)

- ஜீன்னார் என்ற இடத்திற்கு அருகே ஷிவ்னர் என்ற பகுதியில் ஷாஜி போன்ஸ்லே மற்றும் அவரது முதல் மனைவி ஜீஜாபாய்க்கு மகனாக சிவாஜி பிறந்தார். தாய் வழியில் தேவகிரியை ஆண்ட யாதவ மன்னர்களில் வழித்தோன்றலாகவும் தந்தை வழியில் மேவாரின் கிசோடியாக்களின் வழித்தோன்றலாகவும் ஷாஜி போன்ஸ்லே விளங்கினார். அகமது நகர், அகமது ஷாவின் அபிசீனிய அமைச்சராகவும், முன்னாள் அடிமையாகவும் இருந்த மாலிக் அம்பர் (1548–1626) என்பவரின் கீழ் ஷாஜி போன்ஸ்லே சேவை புரிந்தார். மாலிக் அம்பர் மறைவுக்கு பிறகு அரசியலில் ஈடுபட்ட ஷாஜி போன்ஸ்லே அகமதுநகர் முகலாயர்களால் இணைக்கப்பட்ட பிறகு பீஜப்பூர் சுல்தானிடம் தன் பணியைத் தொடர்ந்தார்.

- பூனாவில் இருந்த ஷாஜி போன்ஸ்லேவின் ஜாகீர்தாரான தாதாஜி கொண்டதேவ் என்பவரின் பராமரிப்பில் சிவாஜியும் அவரது தாயும் விடப்பட்டனர். பூனாவைச் சுற்றியிருந்த மலைப்பாங்கான பகுதிகளில் அனுபவமும் அறிவும் வலிமையும் கொண்ட மாவலியைச் சேர்ந்த விவசாயிகள் மற்றம் தலைவர்களின் நன்மதிப்பை சிவாஜி பெற்றார்.
- துறவி ராம்தாஸ் அவர்களை சிவாஜி தனது குருவாக ஏற்றுக்கொண்டார்.

இராணுவ வெற்றிகள்

- சிவாஜி தமது 19 வது வயதில் முதல் இராணுவத்தில் ஈடுபாடு காட்டத் தொடங்கினார். 1646இல் தோர்னா கோட்டையை பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கைப்பற்றினார். தோர்னாவில் இருந்து ஐந்து மைல் தொலைவில் இருந்த ராய்கர் கோட்டையையும் கைப்பற்றி மீண்டும் முழுமையாக அதனைக் கட்டினார்.
- 1647 இல் தாதாஜி கொண்டதேவ் மறைந்த பிறகு தமது தந்தையின் (ஜாகீர்) நிலத்தை நிர்வகிக்கும் பொறுப்பை சிவாஜி ஏற்றார். அதனைத் தொடர்ந்து பாராமதி, இந்தபுரம், புரந்தர், கொண்டானா ஆகிய கோட்டைகளும் அடுத்தடுத்து அவரது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. அந்தப் பகுதியிலிருந்த கல்யாண் என்ற முக்கிய நகரையும் மராத்தியர் முன்பே கைப்பற்றி இருந்தார்கள்.
- பீஜப்பூர் சுல்தான் சிவாஜியின் தந்தையை சிறுமைப்படுத்தி சிறையில் அடைத்தார். தக்காணத்தின் முகலாய அரசப்பிரதிநிதியாக இருந்த இளவரசர் மூராத் உடன் பேச்சுவார்த்தை நடத்திய அவர் முகலாய சேவையில் சேர விருப்பம் தெரிவித்தார்.
- 1649ஆம் ஆண்டு சில நிபந்தனைகளின் அடிப்படையில் பீஜப்பூர் சுல்தான் ஷாஜியை விடுதலை செய்தார்.
- 1649 முதல் 1655 வரை இராணுவச் செயல்பாடுகளில் ஈடுபடுவதிலிருந்து சிவாஜி விலகிருந்தார். இந்தக் காலகட்டத்தில் அவர் தனது அதிகாரத்தையும் நிர்வாகத்தையும் ஒருங்கிணைப்பதில் கவனம் செலுத்தினார்.
- 1656 ஆண்டு முதல் சிவாஜி தனது இராணுச் செயல்பாடுகளை தொடங்கினார். சதாரா மாவட்டத்தில் ஜாவ்லி என்ற இடத்தைக் கைப்பற்றினார். இந்தக் குறிப்பிடதக்க வெற்றியால் அவர் மராத்தியரின் மத்தியில் பிரபலம் அடைந்தார்.
- ஜாவ்லி என்ற இடத்திலிருந்து மேற்கே இரண்டு மைல் தொலைவில் பிரதாப்கர் என்ற புதிய கோட்டை கட்டப்பட்டது.

பீஜப்பூருக்கு எதிரான மோதல்

- 1656 நவம்பர் மாதம் பீஜப்பூரின் முகமது அடில்ஷா மரணமடைந்தார். பதினெட்டு வயதே நிரம்பிய இளைஞர் இரண்டாம் அடில்ஷா அடுத்துப் பொறுப்பேற்றார்.
- 1657ஆம் ஆண்டு பீடார், கவ்லயாணி,புரந்தர் ஆகியவற்றை ஔரங்கசீப் கைப்பற்றினார். எனவே பீஜப்பூர் சுல்தானும் சிவாஜியும் ஔரங்கசீப்புடன் சமரசம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த நேரத்தில் ஷாஜகான் நோய்வாய்ப்பட்டார். தில்லியில் அவரைத் தொடர்ந்து யார் ஆட்சிக்கு வருவது என்பதில் போட்டி நிலவியது. ஔரங்கசீப் ஆட்சியை கைப்பற்றி தில்லி வந்தார். இந்த வாய்ப்பை பயன்படுத்திகொண்ட சிவாஜி வடக்கு கொங்கணம் மீது போர் தொடுத்து கல்யாண், பிவாண்டி, மாகுலி கோட்டைகளைக் கைப்பற்றினார்.

சிவாஜி மற்றும் அப்சல்கான், 1659

- பீஜப்பூர் சுல்தான் சிவாஜி மீது தாக்குதல் நடத்த முடிவு செய்தார். அப்சல்கான் பெரும்படையுடன் அப்பணியில் ஈடுபடுத்தப்பட்டார். *மலையில் ஒளிந்துகொண்டருக்கும் எலியை சங்கிலியில் கட்டி இழுத்துக்கொண்டு வருவதாக அவர் சூளுரைத்தார்.* ஆனால் அவர் போரில் தோல்வியுற்றார்.
- தெற்கு கொங்கணம் மற்றும் கோல்ஹாபூர் மாவட்டங்களைத் தாக்கிய மராத்தியப் படைகள் பன்ஹலா கோட்டையை கைப்பற்றின. பீஜப்பூர் சுல்தான் தாமே இந்தப் படைகளுக்கு தலைமை தாங்கினார். இந்த போர் ஓராண்டுக் காலம் நீடித்தது. ஆனாலும் எந்தப் பகுதியையும் வெல்ல முடியவில்லை. இறுதியாக பேச்சுவார்த்தைக்குப் பிறகு சிவாஜி தமது ஆளுகையின் கீழுள்ள பகுதிகளின் ஆட்சியாளராக அங்கீகரிக்கப்பட்டார்.

சிவாஜி மற்றும் முகலாயர்

- 1658 ஜீலை மாதம் ஔரங்கசீப் மாமன்னராக அரியனை ஏறினார். சிவாஜியை அடக்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு 1660ஆம் ஆண்டு செயிஷ்டகான் தக்காணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். சிவாஜி ஒரு தைரியமான திட்டத்தை வகுத்தார். ஓர் இரவு நேரத்தில் பூனாவுக்கு 400 வடை வீரரர்களுடன் திருமண குழுவினர் போல் சென்ற அவர் செயிஷ்டகானின் இல்லம் மீது தாக்குதல் நடத்தினார். இதனால் 1663 டிசம்பர் மாதம் ஔரங்கசீப் செயிஷ்டகானை தக்காணத்திலிருந்து திரும்ப அழைத்துக்கொண்டார்

சிவாஜி மற்றும் ஜெய்சிங்

- அரபிக் கடல் பகுதியில் முகாலாயரின் முக்கயித் துறைமுகமாக விளங்கிய சூரத் நகரைக் குறிவைத்து 1664 ஆம் ஆண்டு சிவாஜி தாக்குதல் நடத்தினார். சிவாஜியை அடக்குவதற்காக ராஜபுத்திர தளபதி ராஜா ஜெய்சிங் தலைமையில்

ஒரு இராணுவத்தை ஔரங்கசீப் அனுப்பினார். அப்பொழுது இளவரசர் மூவாசம் (முதலாம் பகதூர் ஷா) தக்காணத்தில் ஆளுநராக பதவி வகித்தார்.

- 1665 ஜூன் மாதம் புரந்தர் கோட்டையை படைகள் சுற்றி வளைத்தன. சிவாஜியின் தீரமான வீரதீர தற்காப்பு பலன் தரவில்லை. இதை உணர்ந்த சிவாஜி பேச்சுவார்த்தை மேற்கொள்ள முடிவு செய்தார்.
- 1665 ஜூன் 11 தேதி ஏற்பட்ட புரந்தர் உடன்படிக்கையின்படி சிவாஜிக்கு அவர் கைப்பற்றிய கோட்டைகளை வைத்துக்கொள்ள அனுமதி கிடைத்தது. மன்சப்தாராகச் செயல்பட்டு பீஜப்பூரைக் கைப்பற்ற முகலாயருக்கு உதவ ஒப்புக்கொண்டார்.

ஆக்ரா பயணம்

- முகலாய அரசவையை பார்வையிடுமாறு ஜெய்சிங்கின் அழைப்பை ஏற்று சிவாஜியும் அவரது மகன் சாம்பாஜியும் 1666 மே மாதம் ஆக்ராவை அடைந்தனர். ஆனால் அங்கு சிவாஜி சிறைப்பிடிக்கப்பட்ட சிவாஜி பழக்கூடை ஒன்றில் ஒளிந்துகொண்டு அங்கிருந்து தப்பியதாக கூறப்படுகிறது.
- 1666 ஆண்டு முதல் சிவாஜி தீவிர போர்க் கொள்கையைக் கடைபிடிக்கலானார்.

முகலாயருடன் மோதல் (1670)

- பீரராரில் சிவாஜிக்கு முன்னர் கொடுக்கப்பட்ட ஜாகீர் நிலத்தின் ஒரு பகுதியை ஔரங்கசீப் எடுத்துக்கொண்டார். இதனால் கோபமடைந்த சிவாஜி முகலாயர் சேவியிலிருந்த தனது படைகளைத் திரும்ப அழைத்துக் கொண்டார். புரந்தர் உடன் படிக்கையால் சிவாஜி தான் இழந்த கோட்டைகளைத் திரும்பவும் மீட்டுக்கொண்டார்.
- 1670 ஆண் ஆண்டு மேற்குக் கடற்கரையோரத்தின் முக்கியத் துறைமுகமான சூரத்தை அவர் மீண்டும் கைப்பற்றினார்.
- 1672 ஆம் ஆண்டு சூரத்திலிருந்து ***சௌத்*** எனப்படும் நான்கில் ஒரு பங்கு வருமானத்தை வருடாந்திரக் கப்பமாக மராத்தியர் பெற்றனர்.

அரியணை ஏறுதல்

- 1674 ஜூன் 6 ஆம் தேதி சிவாஜி ராய்கர் கோட்டையில் வேத முறைப்படி அரியணை ஏறினார். ***சத்ரபதி*** என்ற பட்டத்தை சூடினார்.

தக்காணப் போர் முயற்சிகள்

- 1676 ஆம் ஆண்டு தெற்குப் பகுதியில் சிவாஜி தனது வெற்றியைத் துவக்கினார். கோல்கொண்டா சுல்தானுடன் இரகசிய ஒப்பந்தந்தில் கையெழுத்திட்டார். இதற்குக் கைமாறாக சிவாஜி சில பகுதிகளைத் தருவதாக உறுதியளித்தார். செஞ்சி, வேலூர் ஆகியவற்றைக் கைப்பற்றிய அவர், அடுத்திருந்த தனது தந்தை ஷாஜிக்குச் சொந்தமான பகுதிகளையும் சேர்த்துக்கொண்டார்.
- சகோதர உறவிலான வெங்கோஜியை அல்லது இகோஜி, தஞ்சாவூரை நிர்வகிக்குமாறு அவர் பணித்தார். மதுரை நாயக்கர்களுக்குப் பெரும் தொகையைக் கப்பமாக தரவும் உறுதியளித்தார். கர்நாடாக முற்றுகை முயற்சிகள் சிவாஜிக்கு பெருமையையும் புகழையும் கொடுத்தன. புதிதாகக் கைப்பற்றிய செஞ்சி அவருக்குப் பிறகு பொறுப்பேற்றவர்களுக்கு இரண்டாம் கட்டப் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்தது.

சிவாஜியின் கடைசி நாட்கள்

- சிவாஜியின் கடைசி நாட்கள் மகிழ்ச்சியானவையாக இல்லை. அவரது மூத்த மகன் சாம்பாஜி அவரைக் கைவிட்டுவிட்டு முகலாய முகாமில் இணைந்தார். சாம்பாஜி திரும்பியபோது ஔரங்கசீப்பால் சிறைபிடிக்கப்பட்டு பன்ஹலா கோட்டைக்கு அனுப்பப்பட்டார்.
- அடுத்தடுத்த போர்கள் சிவாஜியின் உடல்நலத்தைப் பாதித்தன. அவர் தனது 53 ஆவது வயதில் 1680 ஆம் ஆண்டு காலமானார்.
- அவரது மறைவின்போது மேற்குத் தொடர்ச்சி மலைகள், கல்யாண் மற்றும் கோவா இடையேயான கொங்கணப் பகதி ஆகியன சிவாஜி அரசின் கீழ் இருந்தன. தெற்கில் பெல்காம் தொடங்கி துங்கபத்திரை நதிக்கரை வரை மேற்கு கர்நாடகாவை உள்ளடக்கிய பகுதிகள் அவரது கடுப்பாட்டின் கீழ் இருந்தன. அவரது மரணத்தின்போது வேலூர், செஞ்சி மற்றும் இதர சில மாவட்டங்கள் பற்றிய விஷயத்தில் தீர்வு காணப்படவில்லை.

சிவாஜிக்குப் பிறகு மராத்தியர்

- சிவாஜி மறைந்து ஓராண்டுக்கு பிறகு அவரது மூத்த மகன் சாம்பாஜி மராத்திய இராணுவத்திற்கு தலைமை ஏற்று முகலாயப் பகுதிக்குள் நுழைந்து பீராரில் பகதூர்பூரைக் கைப்பற்றி அங்கிருந்த சொத்துக்களைக் கைப்பற்றினார். இதனால் ஆத்திரம் அடைந்த ஔரங்கசீப் மேவாரைச் சேர்ந்த ரஜபுத்திரர்களுடன் சமரசம் மேற்கொண்டு

தக்காணப் பகுதிக்குள் படைகளை வழிநடத்திச் சென்றார். 1686இல் பீஜப்பூரும் 1687 கோல்கொண்டாவும் வெல்லப்பட்டன.

- தன்னுடன் மல்லுக்கட்டும் தனது மகன் இளவரசர் இரண்டாம் அக்பருக்குப் பாதுகாப்பு கொடுத்ததற்காக சாம்பாஜிக்கு தண்டனைக் கொடுப்பதே ஔரங்கசீப்பின் அடுத்த இலக்காக இருந்தது. 1689இல் முகலாயப் படை சாம்பாஜியைச் சிறைபிடித்துக் கொன்றது.
- சாம்பாஜியின் இளவல் ராஜாராம் செஞ்சிக்கோட்டையிலிருந்து சண்டையைத் தொடங்கினார். ராஜாராம் 1700இல் மரணமடைந்தார். பிறகு அவரது மனைவி தாராபாய் தலைமையில் போராட்டம் தொடர்ந்தது.
- ஔரங்கசீப் மரணத்திற்குப் பிறகு சாம்பாஜியின் மகன் சாஹூ விடுதலையாகி மராத்தியரின் அரியணையை அலங்கரித்தார். தாரபாய் இதை எதிர்த்தார். அதன் பின் நடந்த உள்நாட்டுப் போரில் அதில் சாஹூ வெற்றி பெற்று 1708இல் அரியணையில் அமர்ந்தார். பாலாஜி விஸ்வநாத் அவருக்கு ஆதரவாக இருந்தார்.
- 1713இல் பாலாஜி விஸ்வநாத்தை பேஷ்வாக நியமித்த சாஹூ சாராவுக்கு ஓய்வெடுக்க சென்றார்.
- கோல்ஹாபூரைத் தலைநகரமாக கொண்டு தாராபாய் ஒரு மாற்று அரசாங்கத்தை நடத்தினார். 1848 இல் கடைசி மன்னரான இரண்டாம் ஷாஜி மரணமடைந்தார்.

சிவாஜி ஆட்சியில் மராத்திய நிர்வாகம்

- ***அஷ்டபிரதான்*** – அன்றாட நிர்வாகத்தில் தனக்கு உதவுவதற்கான ஓர் ஆலோசனை சபையை சிவாஜி வைத்திருந்தார். இந்த சபையில் எட்டு அமைச்சர்கள் இடம்பெற்று இருந்தனர். பல அமைச்சர்களின் கீழ் மொத்தம் 18 துறைகள் இருந்தன.

பதவியின் பெயர்	கடமைகள்
முக்கிய பிராதன் (அ) பேஷ்வா (அ) பிரதம மந்திரி	நாட்டின் பொதுநலன்கள் மற்றும் முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவது இவரது முக்கிய கடமைம
அமத்தியா	நிதி அமைச்சர்
வாக்கியநாவிஸ்	அரசின் நடவடிக்கைகள் (ம) நீதிமன்ற நட வடிக்கைகளை ஆவணங்கள் வடிவில் பராமரித்தார்.
சுமந்த் (அ) டாபிர்	வெளியுறவுச் செயலாளர்
சச்சிவ் (அ) சுருநாவிஸ்	உள்துறை செயலாளர்.
பண்டிட் ராவ் (அ) தனதியாக்சா (அ) சதர் (அ) முதாசிப்	மதத் தலைவர்
நியாயதீஷ்	தலைமைநீதிபதி
சானெளக்	தலைமை இராணுவ தளபதி

- அரசு –மாகாணம்–––பிராந்த்–– கிராமம் என்ற வரிசையின் படி மராத்தியர் நாடு நிர்வகிக்கப்பட்டது. மாகாணங்களை நிர்வகிக்க வைஸ்ராய் எனப்படும் அரசப்பிரதிநிதிகளை நியமித்திருந்தார். ஜீாகீர் வழங்கும் முறை ஒழிக்கப்பட்டு அனைத்து அதிகாரிகளுக்கும் ரொக்கமாக பணம் வழங்கப்பட்டது.
- மொத்த உற்பத்தியில் அரசின் உரிமையாக 30 சதவிகிதமாக நிர்ணயிக்கப்பட்டு அது பணமாகவோ பொருளாகவே செலுத்தப்பட்டது. பின்னர் இந்த வரி 40 சதவிகிதமாக அதிகரிக்கப்பட்டது.

சௌத் மற்றும் சர்தேஷ்முகி

- அரசு வசூலிக்கும் வருவாய், தேவைகளுக்கப் போதுமானதாக இல்லாத நிலையில் சௌத், சர்தேஷ்முகி என இரண்டு வரிகளைத் தனது சாம்ராஜ்யத்தின் அண்டை பகுதிகளான முகலாய மாகாணங்களிடருந்தும் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகளிலிருந்தும் சிவாஜி வசூலித்தார்.
- மராத்தியர் கைப்பற்றிய மாவட்டத்தின் வருவாயில் நான்கில் ஒரு பங்கு **சௌத்** என வசூலிக்கப்பட்டது.
- சர்தேஷ்முக் என்ற தகுதியின் காரணமாக சிவாஜி தனது கூடுதல் வருவாயில் 10 சதவிகிதமாக சர்தேஷ்முகி என்னும் வரிமூலம் பெற்றார். தேசாய்கள் , தேஷ்முக்குகளின் பிரதம தலைமையாக சர்தேஷ்முக் திகழ்ந்தார். மரபுவழியாகத் தனது நாட்டின் சர்தேஷ்முக் ஆக சிவாஜி விளங்ககினார்.

இராணுவ அமைப்பு

- காலாட்படை, குதிரைப்படை,யானைப்படை, ஆயுதப்படை என இராணுவத்தில் நான்கு பிரிவுகள் இருந்தன. கொரில்லா போர்முறையில் வீரரர்கள் சிறந்து விளங்கியபோதிலும் பாரம்பரியப் போர்முறையிலும் அவர்கள் பயிற்சி பெற்றனர்.

- காலட்படைகள் ரெஜிமெண்டுகள், பிரிகேடுகள் எனப் பிரிக்கப்பட்டது. ஒன்பது வீரரர்களைக் கொண்ட சிறிய படைபிரிவுக்கு நாயக் (கார்ப்பரல்) தலைமை வகித்தார். ஒவ்வொரு படைப்பிரிவிலும் 25 குதிரைப் படை வீரரர்கள் சார்ஜண்ட் தகுதிக்கு இணையான தகுதியில் ஹவில்தார் தலைமையின் கீழ் செயல்பட்டனர்.
- பத்து ஜமால்தார்களின் தலைவராக ஒரு ஹஜாரி திகழ்ந்தார்.
- சாரிநெளபத் குதிரைப்படையின் தலைமைத் தளபதி ஆவார். ஒவ்வொரு குதிரைப்படையும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.
- அரசு மூலமாகக் குதிரைகள் வழங்கப்பட்ட படைவீரரர்கள் ***பர்கிர்கள்*** என்றும், தாங்களாகவே குதிரைகளை ஏற்பாடு செய்து கூலிக்கு வேலை செய்யும் வீரரர்கள் ***ஷைலேதார்கள்*** என்றும் அழைக்கப்பட்டனர்.

நீதி

- கிரிமினல் வழக்குகளை ***பட்டேல்கள்*** விசாரித்தனர். சிவில், கிரிமினல் வழக்குக்களுக்கான மேல்முறையீடுகளைத் தலைமை நீதிபதி நியாயதுஷ், ஸ்மிருதிகளின் ஆலோசனையோடு விசாரித்தார்.
- **ஹாஜீர்மாஜ்லிம்** இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றாக இருந்தது.

பேஷ்வா ஆட்சி (1713–1818)

- பேஷ்வா (அ) பிரதம மந்திரி என்பவர் சிவாஜியின் அமைச்சரவையான அஷ்டபிரதான் அமைப்பில் முதன்மையானவர். பாலாஜி விஸ்வநாத் என்பவர் ஆற்றல் மிகுந்த முதல் பேஷ்வா ஆவார்.

பாலஜி விஸ்வநாத் (1713–1720)

- மராத்திய மன்னர் சாஹீக்கு உள்நாட்டு கலகத்தின்போது சிக்கலிருந்த அரசைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர உறுதுணையாக இருந்தார். ஜாகீர்களை வழங்கும் நடைமுறை மீண்டும் வழக்கத்திற்கு கொண்டுவரப்பட்டது. பேஷ்வாவின் பதவி மரபு சார்ந்தது.

முதலாம் பாஜி ராவ் (1720–1740)

- பாலாஜி விஸ்வநாத்தின் பிறகு அவரது மகன் முதலாம் பாஜிராவ் 1720இல் மன்னர் சாஹீவால் பேஷ்வாக நியமிக்கப்பட்டார்.
- முகலாயரின் கட்டுப்பாட்டில் இருந்த பந்தேல்கண்டை அவர் விடுவித்தார். பேஷ்வாக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய தளபதி திரிம்பக்ராவ் 1731இல் பரோடா அருகே தபாய் என்னும் இடத்தில் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.
- 1738 ஆம் ஆண்டு தானே, சால்செட், பேசின் ஆகிய பகுதிகள் போர்த்துகீசியர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

பாலாஜி பாஜி ராவ் (1740–1761)

- ***நானாசாகிப்*** என்று அழைக்கப்பட்டவர். நல்ல நிர்வாகியாகவும் நிதி தொடர்பான விஷயங்களில் வல்லுநராகவும் விளங்கினார்.

கர்நாடகத் தாக்குதல்கள்

- ஆற்காடு நவாபின் மருமகன் சந்தா சாகிப் திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றிய பிறகு தஞ்சாவூரை முற்றுகை இடப்போவதாக அச்சுறுத்தினார். 1739 இல் தஞ்சாவூரை ஆண்ட மராத்திய ஆட்சியாளர் சாஹீவிடம் உதவி கோரினார். இந்தக் கோரிக்கையை ஏற்று பேஷ்வா ராகோஜி போன்ஸ்லேவைத் அனுப்பினார்.
- 1740 இல் ரகோஜி போன்ஸ்லே ஆற்காடு நவாப் தோஸ்த் அலியை வீழ்த்திக் கொன்றார். திருச்சிராப்பள்ளி கைப்பற்றப்பட்டு சந்தாசாகிப் சிறையில் அடைக்கப்பட்டார்.
- ஆனால் 1743இல் நவாப் முகமது அலி ஆற்காட்டை எளிதாக கைப்பறியதோடு திருச்சிராப்பள்ளியையும் மீட்டார். இதனால் பேஷ்வா தனது உடன்பிறவா சகோதரரான சதாசிவ ராவை கர்நாடகத்துக்கு அனுப்பினார்.

உத்கிர் போர்–1760

- 1748 இல் நிஜாம் ஆசப்ஜாவின் மறைவுக்குப் பிறகு வாரிசுப் போட்டி வெடித்தது. நிஜாமின் மூத்த மகனுக்குப் பேஷ்வா தனது ஆதரவைத் தெரிவித்தார். சதாசிவ ராவ் தலைமையில் பேஷ்வா அனுப்பிய இராணுவம் 1760இல் நடந்த உத்கிர் போரில் எதிரிகளை வீழ்த்தியது. பர்கான்பூர், பீஜப்பூர், ஔரங்காபாத், தௌலதாபாத், அகமதுநகர் ஆகிய பகுதிகளைப் பேஷ்வா கைப்பற்றினாா.
- ரஜபுதனத்தை (1741 முதல் 1748 வரை ஆறு தாக்குதல் முயற்சிகளுக்குப் பிறகு மராத்தியர் தங்கள் ஆளுகையின் கொண்டு வந்தார்கள்.
- 1751 இல் வங்காள நவாப் ஒரிசாவை கைவிட்டுவிட்டு மராத்தியருக்கு கப்பம் கட்ட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்.

- முகலாயரின் ஆட்சியை குறிவைத்தே மராத்தியர்கள்செயல்பட்ட காரணத்தால் 1752 இல் தில்லியில் நுழைந்து ஆப்கானியர்கள், ரோகில்லாக்களையும் விரட்டியடித்தனர். மராத்தியரின் உதவியோடு வைஸ்ராய் பொறுப்பேற்ற இமாத் உல் முல்க் அவர்களின் சொல்லுக்கு கட்டுப்படும் பொம்மையானார்.
- பஞ்சாபை கைப்பற்றிய அவர்கள் ஆப்கானிஸ்தான் துராணி சாம்ராஜ்யதை நிறுவிய அகமது ஷா அப்தாலியின் பிரதிநிதியை அங்கிருந்து அகற்றினார்கள்.
- வடமேற்கு அதிகார மையங்களிலும் மராத்தியர் தங்கள் கூட்டாளிகளை உருவாக்க முனைந்தனர். ஆனால் அவர்கள் எதிரான மனநிலையை கொண்டிருந்தனர். சீக்கியர்கள், ஜாட் தலைவர்கள் முஸ்லீம்கள் மராத்தியரை நம்ப தயாராக இல்லை
- 1757 இல் நடந்த பிளாசிப் போரில் சிராஜ் உத் தௌலாவுக்கு மராத்தியர்கள் உதவவில்லை.

மூன்றாவது பானிப்பட் போர், 1761

- இந்திய வரவாற்றில் 1761 இல் நடந்த மூன்றாவது பானிப்பட் போர் முக்கிய முடிவைக் கொடுத்ததாகும், இந்தப் போரில் மராத்தியர்க்கும் முகலாயருக்கும் கிடைத்த மிகப் பெரிய தோல்வி இந்தியாவில் ஆங்கிலேய அரசு காலூன்ற வழி வகுத்தது.
- பலவீனமான முகலாய அரச வடமேற்கு எல்லைப்பகதிகளில் பாதுகாப்பை உறுதிசெய்யத் தவறிவிட்டது. இதனால் அப்போது ஆப்கானிஸ்தானை ஆண்ட நாதிர் ஷா போர் தொடுக்க நேரிட்டது.
- 1739 இல் நாதிர் ஷாவின் தாக்குதல்கள் தொடங்கின. தில்லி சூறையாடப்பட்டது மற்றும் கோகினூர் வைரம், மதிப்புமிகு மயிலாசனம் ஆகியற்ற அவர் கைப்பற்றிச் சென்றார்.
- 1747 இல் நாதிர்ஷா கொல்லப்பட்ட பிறகு அவரது இராணுவ தளபதிகளில் ஒருவரான அகமதுஷா அப்தாலி ஆப்கானிஸ்தான் ஆட்சியாராக மாறினார்.
- 1757 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அகமது ஷா அப்தாலியால் தில்லி சூறையாடப்பட்டது. மதுராவும் பிருந்தாவனமும் சிதைக்கப்பட்டன. மீர் பக்சியை தனது பிரதிநிதியாக நியமித்தார். தைமூர் ஷா லாகூரின் அரசப்பிரதிநிதியாக ஆக்கப்பட்டார்.
- மலஹர் ராவ் ஹோல்கர், ரகுநாத ராவ் ஆகியோரின் தில்லியிலிருந்து அப்தாலியின் பிரதிநிதியை அகற்றினார்கள். பின்னர் தங்களுக்கு பிடித்த ஒருவரை வசீராக நியமித்தனர். 1758இல் சர்கிந்த் மற்றும் லாகூரை அவர்கள் கைப்பற்றினார்கள். ஆப்கான் படைகள் வீழ்த்தப்பட்டு தைமூர் ஷா ஆட்சியிருந்து அகற்றப்பட்டார்.
- 1759 அக்டோபர் முதம் அப்தலி பஞ்சாபை மீட்டார். லாகூர், முல்தான், சர்கிந்த் ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டிய நிலைமைக்கு மராத்தியர் தள்ளப்பட்டனர்.
- 1760 இல் நடந்த போரில் மகாதாஜி சிந்தியாவின் சகோதரரான தத்தாஜி சிந்தியாவை அப்தாலி கொன்றார்.
- ரோகில்கண்டின் நஜீப் உத்தௌலா மற்றும் அயோத்தியின் ஷீஜா உத் தௌலா ஆகியோருடன் கூட்டணி அமைத்து அப்தலி பதிலடி கொடுத்தார். வடக்கு அதிகார மையங்களில் மராத்தியருக்குக் கூட்டாளிகள் கிடைக்கவில்லை அயோத்தி நவாப்,சீக்கியர், ஜாட் தலைவர்கள் ஆகியோரைப் பகைத்துக்கொண்ட மராத்தியர் ராஜபுத்திரர்களின் நம்பிக்கையையும் இழந்தனர்.
- பேஷ்வாவின் இளைய புதல்வர் விஸ்வாஸ் ராவின் ஒட்டுமொத்த தலைமையின் கீழ் மராத்திய இராணுபம் இருந்தது. இந்தப் படைகளுக்கு சதாசிவ ராவ் உண்மையான தளபதியாகத் திகழ்ந்தார். வழியில் ஹோல்கர், சிந்தியா,கெய்க்வாட் ஆகியோரை இணைத்துக் கொண்டனர். இந்த நேரத்தில் முகலாய மன்னர் இரண்டாம் ஆலம் கீர் கொல்லப்பட்டார்.
- அவரது இளைய மகன் இரண்டாம் ஷாஆலம் தானே முடி சூடிக்கொண்டார். இந்தப் படுகொலையைத் திட்டமிட்ட வசீர் மூன்றாம் ஷாஜகானுக்கு பட்டம் சூட்டினார். இதில் தலையிட்ட சதாசிவ ராவ் மூன்றாம் ஷாஜகானை ஆட்சியிலிருந்து அகற்றிவிட்டு இரண்டாம் ஷா ஆலம் என்பவரை மன்னராக அறிவித்தார்.
- அப்தலியின் படைகள் மீது தாக்குதல் நடத்துவதற்குப் பதிலாக சதாசிவராவ் உயவுப்பற்றாக்குறை ஏற்படும் வரை நீண்ட காலம் அமைதிகாத்தார். தட்டுப்பாடின்றி உணவு கிடைக்கக்கூடிய பசுமையான ஆற்றிடைப் பகுதிகளில் அப்தலி தனது படைகளை நிறுத்தினார்.

பானிபட் போரின் விளைவுகள்

- 1761 ஜனவரி 14 ஆம் தேதி மூன்றாவது பானிபட் போர் நடந்தது. மராத்தியரின் இராணுவம் முற்றிலுமாக அழிந்தது. பேஷ்வாவின் மகன் விஸ்வரா, சதாசிவ ராவ், மற்றும் எண்ணற்ற மராத்திய தளபதிகள் 28,000 போர் வீரர்கள்

இறந்தனர். ஹோல்கர் தப்பியோடினார். சிந்தியாவின் படைகள் அவரைத் துரத்தின இந்தத் துயர செய்தி கேட்டுட பேஷ்வா அதிர்ச்சி அடைந்தார். இந்தத் துயர செய்தி கேட்டு பேஷ்வா அதிர்ச்சி அடைந்தார். இதயம் நலிவடைந்த பேஷ்வா 1761 ஜூனில் மரணம் அடைந்தார்.

- பானிப்பட் போருக்கு பிறகு அப்தலி இரண்டாம் ஷா ஆலத்தை தில்லியின் மன்னராக அங்கீகரித்தார். ஆண்டொன்றுக்கு நான்கு மில்லியன் கப்பம் கிடைத்தது.

பேஷ்வா முதலாம் மாதவ் ராவ் (1761–1772) மற்றும் அவரது வழித்தோன்றல்கள்

- 1761 ஆம் ஆண்டு பாலாஜி பாஜி ராவின் மகன் மாதவ் ராவ், பேஷ்வாவின் இளைய சகோதரர் ரகோபாவின் ஆட்சியில் பேஷ்வா ஆகப் பதவியேற்றார்.
- 1765–1767 க்கு இடைப்பட்ட காலத்தில் அவர் நடத்திய தாக்குதல்கள் வெற்றி பெற்றன. 1772 ஆம் ஆண்டு பேஷ்வா மரணமடைந்தார். முதலாம் மாவராவ்வுக்கு வாரிசு இல்லாத காரணத்தால் அவரது இளைய சகோதரர் நாராயண ராவ் 1772 இல் பேஷ்வா ஆகப் பொறுப்பேற்றார்.
- அவரது மகன் சவாய் மாதப் ராவ் (இரண்டாம் மாதவ் ராவ்) பிறந்து 40 நாட்களே ஆனே நிலையில் பேஷ்வா ஆக முடிசூடப்பட்டார். இரண்டாம் மாதவ் ராவின் மரணத்துக்குப் பிறகு ரகுநாத் ராவின் மகன் இரண்டாம் பாஜி ராவ் பதவியை ஏற்றார். அவரே கடைசி பேஷ்வா ஆவார்.

ஆங்கிலேய–மராத்தியப் போர்கள் (1775–1782)

முதலாவது ஆங்கிலேயே –மராத்தியப் போர் (1775–1782)

- *காரணம்–* நானா பட்னாவிஸ் ஆட்சியில் மாதவ் ராவ் நாராயண பேஷ்வா சிறுவனாக இருந்ததால் முன்னாள் பேஷ்வாவான முதலாம் மாதவ்ராவின் மாமான ரகுநாத் ராவ் அதிகாரத்தைக் கைப்பற்றினார். சால்செட், பேசின் ஆகிய பகுதிகளை ரகுநாத் ராவ் திரும்பப் பெற பம்பாயிலிருந்த கம்பெனி நிர்வாகம் ஆதரவாக இருந்தது.
- மகாதஜி சிந்தியாவும் நாக்பூரின் போன்ஸ்லேயும் ஆங்கிலேயே ஆதரவாளர்களாக ஆனதை அடுத்து மராத்தியர் சால்செட், தானே ஆகிய பகுதிகளை ஆங்கிலேயருக்குத் தாரை வார்க்க நேரிட்டது. சால்பை உடன்படிக்கையின் படி 1782இல் ரகுநாத ராவ் கட்டாய ஓய்வு பெற வைக்கப்பட்டார்.

இரண்டாம் ஆங்கிலேய–மராத்தியப் போர் (1803–1806)

- நானா பட்னாவிஸ் மறைவு அவரது பெரும் சொத்துகள் சிதற வழி வகுத்தது. ரகுநாத் ராவின் மகன் இரண்டாம் பாஜிராவ் ஆட்சியிலிருந்து இறக்கப்பட்டார். அந்தச் சூழ்நிலையில் இரண்டாம் பாஜி ராவுக்கு ஆங்கிலேயரின் உதவியை ஏற்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.
- அப்போதைய கவர்னர் ஜெனரலாக இருந்த வெல்லெஸ்லி பிரவு பேஷ்வா மீது துணைப்படைத் திட்டத்தைத் திணித்தார். 1802 இல் பேசின் ஒப்பந்தம் கையெழுத்தானது 2.6 லட்சம் வருமானம் ஈட்டக்கூடிய நிலப்பகுதி கொடுக்கப்பட வேண்டும்.
- முன்னணியிலிருந்த மராத்திய அரசுகள் பல இந்த மோசமான ஒப்பந்தத்தை ஒதுக்கித் தள்ளின. அதனால் இரண்டாவது ஆங்கிலேயே–மராத்தியப் போர் மூண்டது. மராத்தியர் கடும் எதிர்ப்பைக் காட்டியபோதிலும் மராத்தியத் தலைவர்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டனர். துணைப்படைத் திட்டம் ஏற்கப்பட்டது. ஆங்கிலேயருக்கு தோ ஆப், அகமதுநகர், புரோச், மலைப்பகுதிகள் ஆகியன முழுமையாக கிடைத்தன.

மூன்றாம் ஆங்கிலேயே–மராத்தியப் போர் (1817–1819)

- மராத்தியக் கூட்டமைப்பை உருவாக்க ஆங்கிலேயருக்கு எதிராக சிந்தியா, போன்ஸ்லே, ஹோல்கர் ஆகியோருடன் சதித்திட்டம் தீட்டியதாகப் பேஷ்வா மீது குற்றச்சாட்டு சுமத்துப்பட்டது. எனவே 1817 ஆம் ஆண்டு பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஆட்சியாளர்களை ஆங்கிலேயர்கள் வற்புறுத்தினார்கள்.
- அதன்படி மராத்தியக் கூட்டமைப்பின் தலைமையிலிருந்து பேஷ்வா பதவி விலகினார். கொங்கணப் பகுதியை ஆங்கிலேயருக்கு வழங்கியதோடு கெயிக்வாரின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது.
- தனக்கு நேர்ந்த அவமானத்தை பாஜி ராவால் ஏற்கமுடியவில்லை. எனவே பிண்டாரிகளை அடக்குவதில் தீவிரமாக ஆங்கிலேயர்கள் ஈடுபட்டிருந்த வேளையில் பூனா அரசக்குடியிருப்பை இரண்டாம் பாஜி ராவ் தீயிட்டு கொளுத்தினார். பூனாவுக்கு உடனடியாக விரைந்த ஜெனரல் ஸ்மித் அதனைக் கைப்பற்றினார். சதாராவுக்கு பேஷ்வா தப்பியோடிய நிலையில் அதனையும் ஜெனரல் ஸ்மித் கைப்பற்றினார். ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பாஜி ராவ் ஓடிக்கொண்டே இருந்தனர்.
- அவரது படைகளை அஸ்தா,கிர்க்கி,கோர்கான் ஆகிய பகுதிகளில் ஜெனரல் ஸ்மித் வீழ்த்தினார். 1818 ஆம் ஆண்டு பாஜிராவ் எல்பின்ஸ்டன்னிடம் சரணமடைந்தார்.

விளைவுகள்

- ✍ பேஷ்வா முறையை ரத்து செய்த ஆங்கிலேயர்கள் அனைத்து பேஷ்வா பகுதிகளையும் இணைத்துக்கொண்டனர் உரிமைப்படி ஜாகீர்களைக் கொண்டிருந்தவர்களின் நிலம் அவர்களுக்கே வழங்கப்பட்டது.
- ✍ இரண்டாம் பாஜி ராவ் 1851இல் மரணமடையும் வரை வருடாந்திர ஓய்வூதியத்தின் கீழ் சிறைக்கைதியாகவே விளங்கினார்.
- ✍ சிவாஜியின் வழித்தோன்றலான பிரதாப் சிங் சதாராவிலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு சிறிய அரசாங்கத்துக்கு அரசராக உருவாக்கப்பட்டார்.
- ✍ முதலாம் பாஜிராவால் உருவாக்கப்பட்ட போன்ஸ்லே, ஹோல்கர், சிந்தியா ஆகியோரின் பகுதிகளை உள்ளடக்கிய மராத்திய கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.
- ✍ பூனாவின் அரசபிரதிநிதியாக இருந்த மவுண்ட் ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டோன் பம்பாய் ஆளுநராக ஆனார்.

பேஷ்வாக்களின் கீழ் மராத்திய நிர்வாகம்

- ✍ மராத்திய நிர்வாகத்தின் மையம் பூனாவிலிருந்த பேஷ்வா தலைமைச் செயலகமாகும்.
- ✍ பெரிய மாகாணங்கள் **சர்–சுபாஷ்தார்கள்** என்று அழைக்கப்பட்ட ஆளுநர்கள் கீழ் இருந்தன.
- ✍ மாகாணங்களுக்கு கீழ் மண்டலங்கள் சுபாக்கள் (ம) பிராந்துகள் என்று அழைக்கப்பட்டன. மம்லத்தார், காமாவிஸ்தார் ஆகியோர் மாவட்டங்களில் பேஷ்வாக்களின் பிரதிநிதியகளாக விளங்கினார்கள்.
- ✍ தேஷ்முக், தேஷ்பாண்டே ஆகியோர் மாவட்ட அளவில் கணக்குகளைக் கவனித்துக்கொண்ட அதிகாரிகளாகவும், பேஷ்வாக்களின் பிரதிநிதிகளை கண்காணிப்பவர்களாகவும் விளங்கினார்கள்.
- ✍ பொதுப்பணம் தவறாகக் கையாளப்படுவதைத் தடுக்கும் வகையில் மராத்திய அரச பெரும் தொகையை ரசத் மற்றும் இதர அதிகாரிகளிடமிருந்து வசூலித்தது.
- ✍ **பட்டேல்** தலைமை கிராம அதிகாரியாக விளங்கினார். அவருக்கு உதவியாகக் குல்கர்னி அல்லது கணக்காளர் மற்றும் ஆவணக்காப்பாளர் இருந்தார்.
- ✍ நகரங்களிலும் மாநகரங்களிலும் தலைமை அதிகாரி **கொத்வால்** என்று அழைக்கப்பட்டார்.
- ✍ சௌத் மற்றும் சர்தேஷ்முகி ஆகியன இதர வருவாய் ஆதாரங்களாக விளங்கின. சௌத் என்பது கீழ்க்கண்ட வகையில் பிரிக்கப்பட்டிருந்தது.
- ✍ கீழ்கண்ட வகையில் பிரிக்கப்பட்டிருந்தது. ஆட்சியாளருக்கு 25 சதவீதம், மராத்திய அதிகாரிகள் மற்றும் படைகளைப் பராமரிப்பதற்காக இராணுவத் தளபதிகளுக்கு 66 சதவீதம்
- ✍ பிறப்பில் பிராமணராகவும் தலைவராகவும் உள்ள பண்டிட் சச்சீவுக்கு 6 சதவீதம் வரி வசூல் செய்வோருக்கு 3 சதவீதம்
- ✍ **மகர்கள்** காவலர்களாக ஒவ்வொரு கிராமத்திலும் பணியில் ஈடுபட்டனர்.
- ✍ மராத்திய அரசின் மக்களிடைக்கிடையே இறையாண்மை பாதிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் மராத்தியரின் ஆட்சி

- ✍ கிருஷ்ணதேவராயர் தனது ஆட்சிக்காலத்தில் (1509–1529) நயங்காரா அமைப்பை உருவாக்கினார். இதன்படி தமிழகம் செஞ்சி, தஞ்சாவூர், மதுரை என மூன்று மிகப்பெரிய நயங்காராக்களாக பிரிக்கப்பட்டது. இந்த புதிய முறைப்படி துணைத் தலைவர்கள் பாளையக்காரர்களாக நியமிக்கப்பட்டனர். பாளையங்கள் அவர்களின் கட்டுப்பாட்டிலிருந்தன.
- ✍ சோழ சாம்ராஜ்யத்தின் பகுதியாக முதலிலிருந்த தஞ்சாவூர் பிறகு பாண்டிய அரசின் பகுதியாக உருவானது. பின்னர் இது மதுரை சுல்தானியத்தின் பகுதியாக உருவெடுத்தது. கடைசியில் நாயக்கர் கைகளுக்குச் சென்றது.
  - ☯ ***ராஜா தேசிங்கு–*** *மராத்திய அரசர் ராஜாராம் முகலாயப் படைகளின் அச்சுறுத்தல் காரணமாக ராய்கரிலிருந்து தப்பியோடி செஞ்சியில் அடைக்கலம் புகுந்தார். படைத்தளபதி சுல்பிகர்கான் தலைமையிலும்ட, பின்னர் தாவுத்கான் தலைமையிலும் அவரைத் தொடர்ந்து சென்ற முகலாய படைகள் செஞ்சியைக் கைப்பற்றின. செஞ்சிக்கு எதிரான முகலாயத் தாக்குதலில் பன்டேலா ரஜபுத்திர தலைவர் சுவரூப் சிங் செஞ்சிக்கோட்டையின் (கோட்டை இராணுவத்தின் தலைவர்) கிலாதாராக 1700 இல் பணியில் அமர்த்தப்பட்டடார்.*
  - ☯ *அதன் பிறகு சுவரூப் சிங் செஞ்சி முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார். 1714 இல் அவர் மறைந்த பிறகு அவரது மகன் தேஜ்சிங் (தேசிங்கு) செஞ்சியின் ஆளுநராக பொறுப்பேற்றார். முகலாய மன்னருக்குக் கப்பம் கட்டமறுத்ததை அடுத்து நவாப் சதத்–உல்–லா கானின் கோபத்திற்கு ஆளானார்.*

அதனைத் தொடர்ந்து நடந்த சண்டையில் 22 வயதே ஆன ராஜா தேசிங்கு கொல்லப்பட்டார். அவரது இள வயத மனைவி உடன்கட்டை ஏறினார். ராஜா தேசிங்கு நவாபுக்கு எதிராக வெளிப்படுத்திய வீரம் மக்களிடையே கதைப் பாடல்களாக உருவெடுத்தது.

- மதுரை நாயக்கர் மற்றும் தஞ்சாவூர் நாயக்கரிடையே நிலவிய பகை கடைசியில் நாயக்கரிடையே நிலவிய பகை கடைசியில் 1673இல் தஞ்சாவூரில் நாயக்க ஆட்சியை முடிவுறச் செய்தது. தஞ்சாவூரில் 1676இல் மராத்திய தளபதி வெங்கோஜி தன்னை அரசராக அறிவித்தார். இவ்வாறாக மராத்தியர் ஆட்சி தஞ்சாவூரில் துவங்கியது.
- கர்நாடகத்தின் மீது 1677 இல் படையெடுத்த சிவாஜி வெங்கோஜியை அகற்றிவிட்டுத் தனது ஒன்றுவிட்ட சகோதரர் சந்தாஜியை அப்பதவியில் அமர்த்தினார். ஆனால் வெங்கோஜி மீண்டும் தஞ்சாவூரைக் கைப்பற்றினார். அவரது மறைவுக்குப் பிறகு அவரது மகன் ஷாஜி தஞ்சாவூரை ஆண்டார்.
- ஷாஜிக்கு வாரிசு இல்லாததால் அவரது சகோதரர் முதலாம் சரபோஜி அடுத் ஆட்சியாளராக அமர்ந்தார். 1712 முதல்1728 வரை 16 ஆண்டுகளுக்கு அவர் ஆட்சியில் இருந்தார்.
- அவருக்கு பிறகு துக்கோஜி ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தார். அவரைத் தொடர்ந்து 1739 முதல் 1763 வரை பிரதாப் சிங் ஆட்சி புரிந்தார். பின்னர் அவரது மகன் துல்ஜாஜி 1787இல் ஆம்சியில்அமர்ந்தார்.
- அந்த ஆண்டில் பத்து வயதான இரண்டாவது சரபோஜி அரியணை ஏறினார். துல்ஜாஜியின் சகோதரரர் அமர்சிங் ஆட்சியை நிர்வகித்தார். இந்த வாரிசு அரசியலை எதிர்த்த ஆங்கிலேயர் இரண்டாவது சரபோஜியின் மீது ஒப்பந்தம் ஒன்றை திணித்தனர்.
- அதன் அடிப்படையில் இரண்டாம் சரபோஜி தனது அரசு நிர்வாகத்தை ஆங்கிலேயர் வசம் ஒப்படைக்க நேரிட்டது. இரண்டாம் சரபோஜி தஞ்சாவூரை ஆண்ட மராத்தியரின் போன்ஸ்லே சாம்ராஜ்யத்தின் கடைசி ஆட்சியாளராவார்.

இரண்டாம் சரபோஜி

- இரண்டாம் சரபோஜி ஒரு தலைசிறந்த அரசர். ஜெர்மானிய சமய பரப்புக் குழுவை சேர்ந்த ப்ரெட்ரிக் ஸ்வார்ட்ஸ் மூலமாகக் கல்வி பயின்றபோதிலும், பலரும் எதிர்பார்த்தபடி அவர் கிறித்துவ மதத்தை தழுவவில்லை. அதேபோல் மேற்கத்திய அறிவியல் மற்றும் மருத்துவத்தைக் கையாளும் மருத்துவராக சரபோஜி திகழ்ந்தார். எனினும் இந்தியப் பாரம்பரியத்தை சிரத்தையுடன் அவர் பின்பற்றினார். பல ஐரோப்பிய மொழிகளைக் கற்று நிபுணத்துவம் பெற்ற அவர் அனைத்து துறைகளைச் சார்ந்த புத்தகங்களைக் கெண்ட மிகப் பிரபலமான நூலகத்தை வைத்திருந்தார்.
- ஒரு அச்சகத்தை நிறுவுவது சரபோஜியின் நவீனத் திட்டங்களில் ஒன்றாக இருந்தது. (இதுவே மராத்தி மற்றும் சமஸ்கிருத மொழிகளுக்கான முதலாவது அச்சகமாகம்). சரஸ்வதி மஹால் நூலகத்தை மேம்படுத்துவதும் அவரது திட்டங்களில் ஒன்றாக இருந்தது.
- அவரது அரசவை மூலம் நவீனப் பொதுப் பள்ளிகளை நிறுவி ஆங்கிலம் மற்றும் பிரதேச மொழிகளில் நிறுவி ஆங்கிலம் மற்றும் பிரதேச மொழிகளில் பாடங்கள் இலவசமாகக் கற்பிக்கப்பட் வேண்டும் என்பதுதான் அவரது அதிநவீனத் திட்டமாக இருந்தது
    - *சரஸ்வதி மஹால் நூலகம் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டு இரண்டாம் சரபோஜி மன்னரால் செறிவூட்டப்பட்டது. மராத்திய அரசவையின் அன்றாட அலுவல்கள், 18 ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு–மராத்தியர் இடையே நடந்த கடிதப்போக்குவரத்து ஆகியன மோடி எழுத்துவடிவ ஆவணங்களாக அமைந்துள்ளன. மராத்தி மொழியில் அமைந்த ஆவணங்கள் மோடி எழுத்து வடிவில் எழுதப்பட்டன.*
- அவர் காலத்தில் வாழ்ந்த தரங்கம்பாடி சமய பரப்புக்குவைச் சேர்ந்த அறிஞர் சி.எஸ். ஜான் என்பவரைக் கல்வித் துறையின் முன்னோடியாக மன்னர் சரபோஜி கருதினார்.
- 1812 இல் ஆங்கிலேயே காலனி அரசுக்கு அவர் சமர்ப்பித்த முக்கியத் திட்டத்தில் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் இந்திய மாணவர்களுக்கு இலவசப் பள்ளிகளை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கிறிஸ்தவர் அல்லாத மாணவர்களுக்கு ஆங்கில வழிக் கல்வி கிடைக்காத சூழல் நிலவிய காலகட்டம் அதுவாகும்.
- சென்னை ஆளுநர் தாமஸ் மன்றோ 1820ஆம் ஆண்டில் தொடக்கப் பொதுப்பள்ளிகளுக்கான ஒரு திட்டத்தை யோசனையாக கூறினார். ஆனால் கம்பெனி அரசு 1841 ஆம் ஆண்டு வரை நவீனப் பள்ளிகளை உள்ளூர் குழந்தைகளுக்காகச் சென்னையில் ஏற்படுத்தவேவில்லை. இதற்கு மாறாக ஜெர்மானிய சமயப்பரப்புக்குழு ஆங்கில வழி மற்றும் வட்டார மொழிப்பள்ளிகள் பலவற்றைத் தெற்கு மாகாணங்களில் 1707 ஆம் ஆண்டு முதல் நடத்தியுள்ளனர்.
- சரபோஜிக்கு சமயப்பரப்புக்குழு மற்றும் காலனி அரசுக்கு முன்னோடியாக 1803 ஆம் ஆண்டிலேயே தஞ்சாவூரில் கிறித்தவர்கள் அல்லாத உள்ளூர் குழந்தைகளின் கல்விக்காக முதலாவது நவீனப் பொதுப்பள்ளிகளை நிறுவினார்.

உயர் கல்வி நிறுவனங்களை இந்திய அரசர்கள் நடத்திய போதிலும் அவர்கள் தொடக்கப் பள்ளிகளை நடத்தியதில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது.

- ஆதரவற்றோர் மற்றும் ஏழை மாணவர்களுக்கு எனத் தஞ்சாவூர் மற்றும் இதர அண்டை இடங்களில் இலவச தொடக்க மற்றும் உயர்நிலைப்பள்ளிகளை நிறுவி நிர்வகித்தது மன்னர் சரபோஜியின் மிக முக்கியமான முன்முயற்சியாகும். அரசவை மேன்மக்கள், வேத அறிஞர்கள், ஆதரவற்றோர் ஏழைகள் ஆக அனைவருக்கும் இந்தப் பள்ளிகள் சேவை புரிந்தன.
- புதிய அல்லது நவீன கல்வி முறைக்காக **நவவித்யா** முறையை அரசவை நடத்திய இந்தப் பள்ளிகளில் அறிமுகம் செய்தது மற்றொரு முக்கிய முன்முயற்சியாகும்.
- 1803 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட முக்தாம்பாள் சத்திரம் அரசரின் விருப்பமான அன்ன சத்திரமாகும். அங்கு 1822 ஆம் ஆண்டில் இரண்டு வகுப்பறைகளில் காலையும் மாலையும் 15 ஆசிரியர்கள் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த மொத்தம் 464 மாணவர்களுக்குக்ககான பள்ளியையும் சரபோஜி ஆதரித்தார். அவரது வள்ளல் தன்மைக்கு சான்றாக ஆதரவற்றோருக்கான பள்ளி விளங்கியது.
- மனிதர்களுக்காகவும் விலங்குகளுக்காகவும் மூலிகை மருந்துகளைத் தயாரித்த ***தன்வந்தரி மஹால்*** என்ற ஆராய்ச்சி நிறுவனத்தை சரபோஜி நிறுவினார். 18 தொகுதிகள் அடங்கிய ஆராய்ச்சி புத்தகத்தையும் சரபோஜி மன்னர் உருவாக்கினார்.
- பிரத்யேகமான கை ஓவியங்கள் மூலமாக முக்கிய மூலிகைகள் பற்றியத் தகவல்களை சரபோஜி பட்டியலிட்டுப் பாதுகாத்தார். ஆங்கிலக் கல்வி கற்ற தூபாஷிகள், எழுத்தர்கள், ஐரோப்பிய மற்றும் இந்திய அரசவைகளுக்கு இடையே மத்தியஸ்தம் செய்த இந்து மற்றும் கிறிஸ்துவ மொழிபெயர்ப்பாளர்கள் பல பொறுப்புக்களை ஏற்க முடிந்தது.
- குமாரசம்பவ சம்பு, தேவேந்திர குறவஞ்சி, முத்ராசஸ்யா ஆகிய புத்தகங்களையும் அவர் எழுதியுள்ளார். கர்நாடக இசையில் மேற்கத்திய இசைக்கருவிகளான கிளாரினட், வயலின் ஆகிய கருவிகளை அவர் அறிமுகம் செய்தார்.
- தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தில் தமிழ்நாட்டின் முதலாவது வன உயிரியல் பூங்காவை அவர் அமைத்தார்.
- 1832 இல் மார்ச் 7 ஆம் தேதி ஏறக்குறைய 40 ஆண்டுகால ஆட்சிக்குப் பிறகு சரபோஜி மரணமடைந்தார். இவரது இறுதி யாத்திரையில் 90 ஆயிரம் பேருக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். அவரது இறுதி ஊர்வலத்தில் சமயப்பரப்பாளரான அருட்தந்தை பிஷப் ஹீபர் இவ்வாறு கூறினார்.

> *"முடிசூடிய பல தலைவர்களைப் நான் பார்த்து இருக்கிறேன். ஆனால் இவர் தவிர எவரிடமும் அது இளவரசத் தன்மையோடு அலங்கரித்ததில்லை."*

ஆங்கிலேய ஆட்சிக்குத் தொடக்ககால எதிர்ப்புகள்

- ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி பலருடைய ஆட்சிப்பகுதிகளை வெற்றி கொண்டதும் தங்களது எல்லையை விரிவுப்படுத்திக்கொண்டே போனதும் தொடர்ச்சியான பல கிளர்ச்சிகளுக்கு வழிவகுத்தன.

மைசூர் சுல்தான்களின் எதிர்ப்பு

ஹைதர் அலியின் எழுச்சி

- மைசூர், விஜயநகரப் பேரரசின் கீழ் நிலமானிய முறையில் இயங்கிய ஒரு அரசராக இருந்தது. 1565 இல் விஜயநகரப் பேரரசு வீழ்ந்ததற்குப் பிறகு உடையார் வம்சத்தினர் சுதந்திரமான ஆட்சியாளர் ஆயினார். ராஜா உடையார் 1578இல் அரியணை ஏறினார். 1610 இல் தலைநகரம் மைசூரிலிருந்து ஸ்ரீரங்கப்பட்டணத்திற்கு மாற்றப்பட்டது. இந்த உடையார் ஆட்சி 1760 வரை தொடர்ந்தது.
- 1710 இல் தளவாய் அல்லது முதன்மை அமைச்சராக ஹைதர் அலி நியமிக்கப்பட்டார். ஹைதர் அலியின் தந்தை ஃபதே முகம்மது கோலார் பகுதியின் கோட்டைக் காவற்படைத் தளபதியாக (பெஜ்தார்) இருந்தார். தந்தை இறப்புக்கு பிறகு ஹைதர்அலி 1755க்குள் 100 குதிரைப்படை வீரரர்களையும் 2000 காலாட்படை வீரரர்களையும் நிர்வகிக்கும் அளவுக்கு அதிகாரம் படைத்த பொறுப்பை பெற்றிருந்தார்.
- மைசூரில் ஏற்பட்ட கிளர்ச்சியை ஒடுக்கியும், மராத்தியர் ஆக்கிரமித்த மைசூர் அரசின் சில பகுதிகளையும் ஹைதர் மீட்டெடுத்தார். இதற்காக அவர் ***ஃபதே ஹைதர் பகதூர்*** (வீரமும் வெற்றியும் கொண்ட சிங்கம்) என்ற பட்டம் பெற்றார்.

- 1760இல் ஹைதர் ஆங்கிலேயருக்கு எதிராக புதுச்சேரியில் இருந்த பிரெஞ்சுக்காரர்களுடன் கூட்டு சேர்ந்தார். சொந்த மண்ணில் மராத்தியரால் உருவாக்கப்பட்ட சதித்திட்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எனினும் ஹைதர் அதை வெற்றிகரமாக முறியடித்தார். அதற்குப் அவரே நடைமுறையில் மைசூரின் உண்மையான ஆட்சியாளர் ஆனார்.
- 1770இல் மைசூர் அரசர் நஞ்சராஜா நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார். இந்நிகழ்விற்கு பிறகு ஹைதரே உண்மையான அரச அதிகாரத்துக்கு உரியவர் ஆனார்.

ஹைதர் அலியும் ஆங்கிலேயரும்

- கிழக்கிந்தியக் கம்பெனி திவானி உரிமையைப் பெற்ற (வங்காளம்,பீகார், ஒரிசா ஆகியவற்றில் முகலாய அரசுக்குப் பதிலாக வரி வசூலிக்கும் உரிமை) பிறகு, தனது நிர்வாகத்துக்கு உட்பட்ட பகுதிகளைக் கூடுதல் கவனத்துடன் பாதுகாக்க வேண்டியிருந்தது.
- ஒரு குறிப்பிட்ட பகுதியில் அதிகாரத்துக்கு உட்பட்ட இடங்களைத் தக்கவைத்துக்கொள்ள இடைப்பட்ட நாடுகளை (buffer states) வாரன் ஹேஸ்டிங்ஸ் சுற்றுவேலிக் கொள்கை மூலம் தொடர்ந்து அனுமதித்தார். நவாப் பதவிக்காக ஏற்பட்ட மோதல்களால் கம்பெனி கர்நாடக அரசியல் விவகாரங்களில் தலையிட்டது. ஆனால் அவர்களின் முயற்சிக்கு ஹைதர் அலி, ஹைதராபாத் நிஜாம் ஆகிய வலிமைமிக்க சக்திகளிடமிருந்து அச்சுறுத்தல்கள் இருந்தன.

முதலாம் மைசூர் போர் (1767–69)

- கர்னல் ஃபோர்டே 1759இல் மசூலிப்பட்டிணத்தைக் கைப்பற்றினார். இது ஜாலாபத் ஜங் உடனான உடன்படிக்கைக்கு வழிவகுத்தது. அவர் ***வட சர்க்கார்கள்*** அறியப்படும் கஞ்சம், விசாகப்பட்டினம், கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் ஆகிய மாவட்டங்களை ஆங்கிலேயருக்கு விட்டுக்கொடுக்க வேண்டியிருந்தது.
- வட சர்க்கார் ஆங்கிலேயர் வசம் ஆனதை முகலாயப் பேரரசர் 1765இல் அலகாபாத் உடன்படிக்கை மூலம் அங்கீகரித்தார்.
- ஆனால் 1766 இல் ஆங்கிலேயர் இப்பகுதியைக் கையகப்படுத்தினர். இதற்கு நிஜாம் அலி எதிர்ப்பு தெரிவிக்காமல் இருக்க வேண்டுமென்றும், ஆபத்து ஏற்படும் போது ஆங்கிலேயர்கள் உதவிக்கு வருவார்கள் என்றும் ஓர் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆங்கிலேயர்கள் பின்நாளில் பின்பற்றிய துணைப்படைத்திட்டத்துக்கு இந்நடைமுறை காரணியாக அமைந்தது.
- நிஜாம் அலி ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்துகொண்டாலும் 1767 இல் அவருக்கும் ஹைதர் அலிக்கும் ஓர் புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்டது. எனவே ஆங்கிலேயர் ஹைதருக்கு எதிரான போரை அறிவித்தார்கள். இதுவே முதலாம் ஆங்கில மைசூர் போர் அல்லது முதலாம் மைசூ போர் என அறியப்படுகிறது.
- பம்பாயிலிருந்து வந்த ஆங்கிலேயரின் ஒரு படை மங்களுரைச் கைப்பற்றியது ஆனால் ஹைதர் அலி அதை மீட்டு எடுத்துார்.
- 1768இல் ஹைதர் பாராமஹால் (சேலம் மாவட்டம்) மீது திடீர் தாக்குதல் தொடுத்து, கேப்டன் நிக்சனைத் தோற்கடித்துக் கரூரையும் ஈரேட்டையும் கைப்பற்றினார். இதற்கிடையே ஹைதரின் தளபதி ஃபசலுல்லா கான் மதுரையிலும் திருநெல்வேலியிலும் படையை எந்த எதிர்ப்புமின்றி வழிநடத்திச் சென்றார்.
- ஹைதர் தஞ்சாவூருக்கும் அங்கிருந்து கடலூாருக்கும் முன்னேறிச் சென்றார். ஆங்கிலேயர் மீதான தாக்குதலை நிறுத்த ஹைதர் விரும்பவிட்டாலும் மராத்தியர் படையெடுத்து வரக்கூடும் என்ற அச்சுறுத்தல் அவரை ஆங்கிலேயருடன் அமைதி உடன்படிக்கை செய்துகொள்ளும் நிலைக்குத் தள்ளியது.
- *சென்னை உடன்படிக்கை:* இருதரப்பும் கைப்பற்றிய பகுதிகளை அவரவரிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும். கரூர் மட்டும் ஹைதரின் வசம் இருக்கும். மராத்தியர்கள் தாக்குதல் நடத்தும் சமயத்தில் ஆங்கிலேயர்கள் உதவ வேண்டும். ஆனால் ஹைதருக்கும் மராத்தியருக்கும் எதிரான சண்டையின்போது தேவையான நேரத்தில் ஆங்கிலேயரின் உதவி கிடைக்காததால் ஹைதர் ஆங்கிலேயருக்கு எதிராகக் திரும்பினார்.

இரண்டாம் மைசூர் போர் (1780)

- **காரணம்:** அமெரிக்கச் சுதந்திரப்போருக்குப் பிறகு பிரான்ஸ் அமெரிக்காவுடன் நட்பு உடன்படிக்கை (1778) செய்துகொண்டது. எனவே பிரிட்டன் பிரான்ஸிக்கு எதிரான போரை அறிவித்தது. இதைப் போலவே ஸ்பெயினும் அமெரிக்காவுடன் நட்பு உடன்படிக்கை மேற்கொண்டு, இங்கிலாந்துக்கு எதிராகப் போரில் (1779) இறங்கியபோது இங்கிலாந்து தனிமைப்பட்டது.
- இந்தியாவிலும் பிரெஞ்சுப்படையின் ஆதரவுடன் நிஜாம் அலியும் மராத்தியரும் கைகோத்துச் செயல்பட்ட போக்கு ஆங்கிலேயருக்கு நெருக்கடியை அதிகப்படுத்தியது. ஹைதர் அலி இந்தச் சூழலைத் தனக்குச் சாதமாகப் பயன்படுத்திகொள்ள கர்நாடத்திற்குப் படையெடுத்தார்.

- ஹெக்டா மன்றோ தலைமையிலான படையுடன் சேர்ந்து செயல்பட வேண்டிய கர்னல் பெய்லி ஹைதரின் திடீர்தாக்குதலில் கடுமையாகக் காயமுற்றார். இது மன்றோவை சென்னை நோக்கி செல்ல வைத்தது.
- ஹைதர் ஆற்காட்டைக் கைப்பற்றினார்(1780). இந்நிலையில் சென்னை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க வந்தவாசப் போரில் வெற்றிபெற்ற அயர்கூட் மதராஸைக் கடல்வழியே முற்றுகையிட வங்காளத்திலிருந்து அனுப்பப்பட்டார்.
- ஹைதருக்கு எதிராக வெற்றியை ஈட்டிய கூட் புதுச்சேரியை நோக்கி நகர்ந்தார். இதற்கிடையே ஹைதர் தஞ்சாவூர் அரசைத் தன் பிடிக்குள் கொண்டுவந்தார். கூட் பரங்கிப்பேட்டையை அடைந்து, ஹைதருக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் வகையில் வெற்றி பெற்றார். ஹைதர் அங்கு நடைபெற்ற மோதலில் ஆங்கிலேயரிடம் பிடிபடுவதிலிருந்து நூலிழையில் தப்பினார்.
- ஹைதரின் மகன் திப்பு சுல்தான் கர்னல் ப்ரெய்த்வெயிட்டை கும்பகோணம் அருகே தோற்கடித்துச் சிறைப்பிடித்தார். மைசூர் சுல்தானின் கவனத்தைத் திசைதிருப்புவதறகாக ஜெனரல் மேத்யூஸ் மங்களூரை நோக்கி ஒரு படையெடுப்பை மேற்கொண்டார். இந்த நடவடிக்கை ஆங்கிலேயர் எதிர்பார்த்தபடி திப்பு சுல்தானைக் கர்நாடகத்தை விட்டு மேற்குக் கடற்கரையை நோக்கி நகர வைத்தது.
- புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஹைதரின் மரணம் (1782), அமெரிக்கச் சுதந்திரப் போரின்ட முடிவில் கையெழுத்தான பாரிஸ் உடன்படிக்கை (1783), நீண்ட நாட்களுக்கு நீடித்த மங்களூர் முற்றுகை ஆகிய நிகழ்வுகள் திப்பு சுல்தானுக்கு எதிரான ஆங்கிலேயரின் நடடிவக்கைகளுக்கு வலுச் சேர்ப்பதாக இருந்தன.
- கர்னல் லேங் கரூரையும் திண்டுக்கல்லையும் கைப்பற்றினார். கர்னல் ஃபுல்லர்ட்டன் பாலக்காட்டையும் கோயம்புத்தூரையும் கைப்பற்றினார். அடுத்தாக ஸ்ரீரங்கப்பட்டணத்தை கைப்பற்றும் நோக்கத்துடன் அவர் முன்னேறி வந்தபோது திப்பு சுல்தான் சமாதனத்துக்கு விருப்பம் தெரிவித்து முற்றுகையைத் தவிர்த்தார்.
- 1784 மார்ச் மாதத்தில் மங்களூர் உடன்படிக்கை கையெழுத்தானது. அதன்படி இருதரப்பினரும் அதுவரை வென்ற பகுதிகளைத் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்றும் போரில் கைதானவர்களை விடுவிக்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

மூன்றாம் மைசூர் போர் 1790–92

- இடைப்பட்ட காலத்தில் கார்ன்வாலிஸ் கவர்னர் ஜெனரல் ஆகப் பொறுப்பேற்றார்.தெற்கில் இரு மிகப்பெரும் சக்திகளாக விளங்கிய ஹைதராபாத் நிஜாமும் மராத்தியரின் கூட்டமைப்பும் திப்பு சுல்தானைப் பழிவாங்கும் விதத்தில் ஆங்கிலேயரின் கூட்டாளிகளாக செயல்பட்டனர்.
- 1782 இல் முதல் ஆங்கிலேய மராத்தியப் போருக்கு பின் ஆங்கிலேயருடன் சால்பை உடன்படிக்கை செய்துகொண்ட மராத்திய ஆங்கிலேயரை ஆதரித்தார்கள்.
- திப்பு 1787இல் பாரிசுக்கும் கான்ஸ்டாண்டிநோபிளுக்கும் தூதுக்குழுவை அனுப்பினார். பிரஞ்சு அரசர் பதினாறாம் லூயி தூதுக்குழுவை நட்புறவுடன் நடத்தினாலும், திப்பு எதிர்பார்த்த ஆதரவு குறித்து வெற்று வாக்குறுதியையே அளித்தார்.
- பிரிட்டனுடன் நட்பு பாராட்டிய திருவிதாங்கூர் மீதான திப்புவின் தாக்குதலும் கொடுங்களூரைக் கைப்பற்றியதும் கம்பெனி அரசுடனான போருக்கான அறிவிப்பாகவே எடுத்துக்கொள்ளப்பட்டன. இவ்வாறு மூன்றாம் ஆங்கிலேய–மைசூர் போர் தொடங்கியது.
- கர்னல் ஹார்ட்லி திப்புவின் தளபதி ஹுசைன் அலியைக் கள்ளிக்கோட்டையில் தோற்கடித்தார். இதற்குப் பதிலடியாகத் திப்பு திருவண்ணாமலையைக் கைப்பற்றினார். புதுச்சேரி பிரெஞ்சு ஆளுநரின் ஆதரவைப் பெறுவதற்குத் திப்பு எடுத்த முயற்சி வெற்றி பெறவில்லை கவர்னர் ஜெனரலான காரன்வாலிஸ் தானே வேலூரிலிருந்து படையெடுத்து வந்து, பெங்களூரை அடைந்தார்.
- வழியில் அவர் திப்புவை எதிர்கொள்ள நேர்ந்தது. ஸ்ரீரங்கப்பட்டணம் அருகே திப்பு தோற்கடிக்கப்பட்டார். படையெடுப்பின்போது தேவைப்படும் பொருட்களின் பற்றாக்குறையால் காரன்வாலிஸ் பின்வாங்க வேண்டியிருந்தது. இந்தத் தருணத்தில் மராத்தியர் ஆங்கிலேயருக்குத் தேவையான பொருட்களை வழங்கினார்கள்.
- கூடுதல் வலிமை பெற்ற ஆங்கிலேயப்படை ஸ்ரீரங்கப்பட்டணத்தை முற்றுகையிட்டது. அதன் கடுமையான தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் திப்பு அமைதி உடன்படிக்கைக்கு அழைப்பு விடுத்தார்.
- *உடன்படிக்கை:* ஸ்ரீரங்கப்பட்டண உடன்படிக்கையின்படி, திப்பு அவருடைய ஆட்சிப்பகுதிகளில் பாதி இடங்களை ஆங்கிலேயருக்குக் கொடுக்க வேண்டும்.

- போர் இழப்பீடாக மூன்று கோடி ரூபாய் அளிக்க வேண்டும். அவருடைய மகன்களில் இருவரைப் பிணைக்கைதிகளாக அனுப்பி வைக்க வேண்டும். திப்புவிடமிருந்து பெறப்பட்ட பகுதிகளும் இழப்பீட்டுத்தொகையும் சமமாகப் பகிர்ந்துகொள்ளப்பட்டன. ஆங்கிலேயர் மலபார், திண்டுக்கல், பாராமஹால் ஆகிய பகுதிகளைப் பெற்றார்கள். திப்பு குடகுப் பகுதியை இழந்தார்
- திப்புவின் அதிகாரம் பெருமளவுக்குக் குறைக்கப்பட்டது. சென்னையில் பிணைக்கைதிகளாகயிருந்த திப்புவின் மகன்கள் அனைத்து நிபந்தைகளும் நிறைவேற்றப்பிறகு ஸ்ரீரங்கப்பட்டணத்துக்கு 1794 ஆம் ஆண்டு மே 29 அன்று திருப்பியனுப்பி வைக்கப்பட்டார்கள். இந்த உடன்படிக்கை மூலம் ஏற்பட்ட அவமானத்தையும் பொருளாதார இழப்பையும் திப்புவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை
- மைசூர் அரசர் ஒன்பதாம் சாமராஜ் 1796இல் இறந்தார். அடுத்த அரசரை நியமிக்கும் முறையான வழக்கத்தைத் திப்பு பின்பற்றவில்லை. அவர் இந்தத் திர்மானத்துக்கு வந்த அதே நேரத்தில், பிரெஞ்சு காலனி ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த மொரீஷியஸின் கவர்னர் மாலாரிக் ஓர் அறிவிப்பை வெளியிட்டார். பிரான்ஸிடமிருந்து உதவி கிடைத்த பிறகு திப்பு ஆங்கிலேயர் மீதான போர் குறித்து அறிவிப்பார் என்பதே மாலாரிக்கின் அறிவிப்பாகும். திப்பு 1798ஜ ூலையில் பிரான்சு ஆட்சியை நிர்வகித்த இயக்குநரகத்துடனும் அதற்குப் பிறகு அங்கு ஆட்சியைப் பிடித்த நெப்போலியனுடனும் மேற்கொண்ட கடிதத் தொடர்புகள், அவர் வெல்வெஸ்லியுடனான கடிதத்தொடர்பில் காட்டிய நழுவல் ஆகியவை வெல்வெஸ்லியை மீண்டும் திப்புக்கு எதிரான போரை அறிவிக்கச் செய்தது.

நான்காம் மைசூர் போர் 1799

- 1796 இல் பாரிசுக்கு மீண்டும் தூதர்களை அனுப்பினார். 1797 இல் வருகை புரிந்த பிரெஞ்சு தூதுக்குழுவானது மொரிஷியஸிலிருந்து பிரெஞ்சு ஆதரவு கொடுக்கப்படுமெ என உறுதியளித்தது. பிரான்சில் இருப்பதைப் போல ஸ்ரீரங்கப்பட்டணத்திலும் ஜேக்கோபியர் கழகம் தொடங்கப்பட்டது. மைசூர் சுல்தானுக்கும் பிரெஞ்சு அரசுக்குமான நல்லுறவைத் தெரிவிக்கும் விதத்தில் பிரெஞ்சு குடியரசின் கொடி ஏற்றப்பட்டது.
- பிரானுசுடன் திப்பு ஏற்படுத்திக்கொண்ட கூட்டணியால் கோபமுற்ற புதிய கவர்னர் ஜெனரலான வெல்லெஸ்லி துணைப்படைத்திட்டத்தின் கீழ் மைசூரில் ஆங்கிலேயப் படை ஒன்றை நிரந்தரமாக வைத்திருக்க வேண்டும் என வலியுறுத்தினார். திப்பு இதை ஏற்கவில்லை.
- ஆங்கிலேயர் நான்காம் ஆங்கிலேய–மைசூர் போரை 1799இல் அறிவித்தனர். ஜெனரல் டேவிட் பெய்ர்டு ஸ்ரீரங்கப்பட்டணத்தின் மீது திடீர் தாக்குதல் தொடுத்துக் கைப்பற்றினார். அமைதி உடன்படிக்கைக்கான திப்புவின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. இறுதி மோதலில் காயமுற்ற திப்பு ஓர் ஐரோப்பியக் படைவீரனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- திப்புவை அகற்றியதும் உடையார் வம்சத்தினரை மீண்டும் ஆட்சியில் அமர்த்தியதும் தென்னிந்தியாவில் கம்பெனி ஆட்சியின் உண்மையான தொடக்கமாக அமைந்தன. திப்புவின் மகன்கள் முதலில் வேலூரில் சிறைவைக்கப்பட்டார்கள்.
- 1806 இல் வேலூர் கிளர்ச்சிக்குப் பிறகு கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டார்கள். இவ்வாறு ஆங்கிலேயருக்கு எதிரான மைசூர் சுல்தான்களின் வீரம் செறிந்த மோதல்கள் முடிவுக்கு வந்தன.

தென்னகப் பாளையக்காரர்களின் தொடக்ககால எதிர்ப்பு

பாளையங்களின் தோற்றம்

- பாளையம் என்ற சொல் ஒரு பகுதியையோ, ஒரு இராணுவ முகாமையோ அல்லது ஒரு சிற்றரசையோ குறிப்பதாகும். பாளையக்காரர்கள் (இவர்களை ஆங்கிலேயர்கள் ***போலிகார்*** என்று குறிப்பிட்டனர்) என்ற தமிழ்ச்சொல் இறையாண்மை கொண்ட ஒரு பேரரசுக்குக் கப்பம் கட்டும் ஒரு குறுநில அரசரைக் குறிக்கிறது.
- வாராங்கல்லை சார்ந்த பிரதாபருத்ரனின் ஆட்சிக்காலத்தில் காகதீய அரசில் இப்பாளையக்காரர் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.
- விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, அரசப்பிரதிநிதியாக மதுரைக்கு வந்த நாகம நாயக்கரும் அவருடைய மகன் விஸ்வநாத நாயக்கரும் மதுரை, திருநெல்வேலி ஆகியவற்றின் சுதந்திரமான ஆட்சியாளர்களாகத் தங்களை உறுதிப்படுத்திக்கொண்டார்.
- 1529 இல் பதவியேற்ற விஸ்வநாத நாயக்கர் அவர்தம் அமைச்சரான அரியநாதரின் உதவியோடு தமிழகத்தில் இம்முறையை அறிமுகப்படுத்தினார்.

- தளவாய் அரியநாத முதலியாரின் திறமையான வழிகாட்டுதலின் கீழ் முன்னாள் பாண்டியப் பேரரசின் அனைத்து சிற்றரசுகளும் வகைப்படுத்தப்பட்டு, 72 பாளையங்களாக மாற்றப்பட்டன. விஸ்வநாத நாயக்கர் மதுரையைச் சுற்றி வலிமை மிகுந்த ஒரு கோட்டையை எழுப்பினார். அதில் 72 அரண்கள் இருந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தலைமையின் கீழ் இருந்தன.

  - *பாளையக்காரர் முறை 1530களில் தோன்றியது. வாராங்கலை ஆண்டுவந்த காகதிய அரசில் இந்த முறை பின்பற்றப்பட்டு வந்ததாக கருதப்படுகிறது. அரசருக்குத் தேவையானபோது போரில் வீரர்களுடன் பங்கேற்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒரு பாசறையையும் பெரும் நிபந்தனையுடன் நிலப்பரப்பையும் வைத்திருப்பவரையே பாளையக்காரர் என்ற சொல் குறிக்கிறது. இந்த முறை தோன்றுவதற்கு முன்னால், சேர்வைக்காரர்களும் தலையாரிகளும் காவல் பணிகளுக்காக வரி வசூலித்து வந்தனர். பாளைய முறை அறிமுகமான பிறகு, பாளையக்காரர்கள் சேர்வைக்காரர்கள், தலையாரிகளைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தார்கள்.*

- பாளையக்காரர் அரசருக்கு ஆண்டுதோறும் குறிப்பிட்ட தொகையைக் கப்பமாகச் செலுத்துவதற்கும் தேவையானபோது படைவீரரர்களை அனுப்புவதற்கும் பாளையத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும் கடமைப்பட்டவர். இந்தக் கடமைகளையும் பிற பணிகளையும் செவ்தற்குத் தேவையான நிதியாதாரத்தைப் பெற சில கிராமங்கள் அவருக்கு வழங்கப்பட்டிருந்தன. அக்கிராமங்களில் அவர் வரிவிதித்து நிதி திரட்டினார். இத்துடன் கூடுதலாய் பல பட்டங்களும் சிறப்புரிமைகளும் பாளையக்காரர்களுக்கு வழங்கப்பட்டன. பாளையத்துக்கு உட்பட்ட பகுதியில் குடிமையியல் பிரச்சனைகளிலும் குற்றவியல் பிரச்சனைகளிலும் விசாரனை நடத்தி நீதி வழங்கும் அதிகாரம் அவருக்கு உண்டு.
- புவியியல் அடிப்படையில், பரவியிருந்த பாளையங்களை மேற்குப் பாளையங்கள் (ஊத்துமலை, தலைவன்கோட்டை,நடுவக்குறிச்சி, சிங்கம்பட்டி,சேத்தூர்), கிழக்குப் பாளையங்கள்(சாத்தூர், நாலபுரலம், எட்டையபுரம், மற்றும் பாஞ்சாலங்குறிச்சி) எனப் பிரிக்கலாம். மறவர் குறுநில மன்னர்களிடமிருந்த பாளையங்கள் பெரும்பாலும் திருநெல்வேலியின் மேற்குப் பகுதியில் அமைந்திருந்தின. கிழக்குப் பகுதியில் உள்ள கரிசல் நிலப்பரப்புகளில் தெலுங்கு பேசுவோர் குடியேறியிருந்தார்கள். அவை பாளையக்கார நாயக்கர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன.

பாளையக்காரர்களின் கிளர்ச்சி (1755–1801)

பூலித்தேவிரின் புரட்சி (1755–1767)

- ஆற்காட்டு நவாப் கர்நாடகப்போர்களில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட செலவினங்களுக்காக கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து கடன் பெற்றிருந்தார்.
- தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிராமங்களை அடகு வைத்து ஏராளமான கடன் வாங்கியிருந்த ஆற்காடு நவாப் அங்கெல்லாம் நிலவரி வசூல்செய்யும் உரிமையை கம்பெனிக்கு அளித்தார். கான் சாகிப் என்று அழைக்கப்பட்ட யூசுப்கான் கிழக்கிந்திய கம்பெனி படையில் இந்திய வீரரர்களுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்.
- அவருக்குப் படைத் தலைமையுடன் வரி வசூலிக்கும் பொறுப்பும் வழங்கப்பட்டது. ஆற்காடு நவாபின் வேண்டுகோளின்படி, 1755 இல் அவருக்கு உதவி செய்ய 500 ஐரோப்பியரும் 200 சிப்பாய்களும் அடங்கிய படை மதுரை, திருநெல்வேலி பகுதிக்குள் நுழைய உத்திரவிடப்பட்டது. பாளையக்காரர்களின் அதிகாரத்தில் கம்பெனி நிர்வாகத்தின் குறுக்கீடு கடுமையான எதிர்ப்பை ஏற்படுத்தியது.
- மாபுஸ்கான் (ஆற்காடு நவாப்பின் மூத்த அண்ணன்) இந்தப் பகுதிகளில் நவாவின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். மாபுஸ்கான் கர்னல் ஹெரானுடன் 1755 ல் திருநெல்வேலிக்குப் படையெடுத்துச் சென்றார். அவர்கள் மதுரையை எளிதாகக் கைப்பற்றினர்.
- பாஞ்சாலக்குறிச்சி பாளையத்தை ஆட்சி செய்த கட்டபொம்மனின் அதிகாரத்தைக் குறைப்பதற்காகச் சிறப்புக் குழு அனுப்பி வைக்கப்பட்டு, பிறகு அது திரும்ப வரவழைக்கப்பட்டது. ஹெரான் ஊர் திரும்பும் வழியில் நெற்கட்டும் செவல் கோட்டை மீது திடீர் தாக்குதல் தொடுக்க உத்தரவு வந்தது. அந்தப் பாளையத்தை ஆட்சி செய்த பூலித்தேவர் மேற்குப் பாளையக்காரர்களிடையே பெரும் செல்வாக்கு பெற்றிருந்தார்.
- பீரங்கி உள்ளிட்டவற்றின் பற்றாக்குறை, படைவீரர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டிய தேவை ஆகிய காரணங்களால் ஹெரானின் தாக்குதல் கைவிடப்பட்டது. அவரைது படை மதுரைக்குத் திரும்பியது.
- நவாப் சந்தா சாகிப்பின் பிரதிநிதிகளான மியானா, முடிமய்யா, நபிகான் கட்டக் ஆகிய பதான் இனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மதுரையையும் திருநெல்வேலியையும் கண்காணித்து வந்தனர். அவர்கள் ஆற்காடு நவாப் முகமது

அலிக்கு எதிராகத் தமிழ்ப் பாளையக்காரர்களை ஆதரித்தனர். அவர்களுடன் புலித்தேவருக்கு நெருக்கமான உறவு இருந்தது.

- ஊற்றுமலை, சுரண்டை, தலைவன்கோட்டை, நடுவக்குறிச்சி, சிங்கம்பட்டி, ஊர்க்காடு, சேத்தூர், கொல்லம்கொண்டான், வடகரை ஆகிய பாளையங்களின் ஆட்சியாளர்களும் புலித்தேவரின் கூட்டமைப்பில் சேர்ந்தனர். திருவிதாங்கூரின் ஆட்சியாளரையும் தன் கூட்டமைப்பில் சேர்த்திருந்தார்.
- **<u>களக்காடு போர்–</u>**இன்னொரு பக்கம் ஆற்காடு நவாப் மாபுஸ்கானுக்குக் கூடுதல் படைப்பிரிவை அனுப்பினார். நவாபின் வலுப்படுத்தப்பட்ட படை திருநெல்வேலியை நோக்கிப் பயணித்தது. கம்பெனியைச் சேர்ந்த 1000 வீரர்களுடன், நவாப் மூலம் கூடுதலாக அனுப்பி வைக்கப்பட்ட 600 வீரர்களும் இப்போது மாபுஸ்கானிடம் இருந்தார்கள். கூடவே கர்நாடகத்திலிருந்து குதிரைப்படையினரும், காலாட்படை வீரர்களும் வந்ததால் மாபுஸ்கானின் படைபலம் அதிகரித்தது.
- அவர்தன் படையினரைக் களக்காட்டுக்கு அருகே நிறுத்திவைப்பதற்கு முன்பே திருவிதாங்கூரிலிருந்து வந்த 2000 வீரர்கள் புலித்தேவர் படையுடன் சேர்ந்துகொண்டார்கள். களக்காட்டில் நடைபெற்ற போரில் மாபுஸ்கானின் படை தோற்றது.
- **<u>யூசுப்கானும், பூலித்தேவரும்</u>**– புலித்தேவரும் பிற பாளையக்காரர்களும் கூட்டாக, சிறப்பான திட்டமிடலுடன் காட்டிய எதிர்ப்பு ஆங்கிலேயரைத் திருநெல்வேலி விவகாரங்களில் நேரடியாகத் தலையிட வைத்தது. 1756 இலிருந்து 1763 வரைக்கும், திருவிதாங்கூரிலிருந்து கிடைத்த சீரான ஆதரவுடன், புலித்தேவர் தலைமையிலான பாளையக்காரர்கள் ஆற்காடு நவாபுக்கு எதிரான கிளர்ச்சியில் நீடித்து நின்றார்கள்.
    - ***ஒண்டிவீரன்:*** *ஒண்டிவீரன் பூலித்தேவரின் படைப்பிரிவுகளில் ஒன்றனுக்கு தலைமையேற்றிருந்தார். பூலித்தேவரோடு இணைந்து போரிட்ட அவர் கம்பெனிப் படைகளுக்கு பெரும் சேதங்களை ஏற்படுத்தினார். செவிவழிச் செய்தியின்படி ஒரு போரில் அவரது கை துண்டிக்கப்படதாகவும், அதனால் பூலித்தேவர் பெரிதும் வருந்தியதாகவும் தெரிகிறது. ஆனால் ஒண்டிவீரன், எதிரியின் கோட்டையில் தான் நுழைந்து பல தலைகளைக் கொய்தன்மைக்காகத் தமக்கு கிடைத்தப் பரிசு என்று கூறியுள்ளார்.*
- கம்பெனியால் அனுப்பப்பட்ட யூசுப் கான் திருச்சிராப்பள்ளியிலிருந்து பீரங்கிகளும் வெடிமருந்துகளும் வந்துசேரும வரை புலித்தேவரைத் தாக்கத் துணியவில்லை. பிரெஞ்சுக்காரர், ஹைதர் அலி, மராத்தியர் ஆகியோருடன் ஆங்கிலேயர் போர்களில் ஈடுபட்டுவந்ததால், 1760 செப்டம்பரில்தான் பீரங்கிகள் வந்துசேர்ந்தன.
- யூசுப்கான் நெற்கட்டும் செவல் கோட்டையை இடிக்கும் நோக்கத்துடன் தாக்குதலை நடத்தினார். இது ஏறத்தாழ இரு மாதங்கள் நீடித்தது. 1761 மே 16 இல் நெற்கட்டும் செவல், வாசுதேவநல்லூர், பணையூர் ஆகிய இடங்களில் இருந்த முக்கியமான கோட்டைகள் யூசுப்கான் வசமாயின. புதுச்சேரியை ஆங்கிலேயர் கைப்பற்றியதால் பிரெஞ்சுக்காரர்களின் தலையீடு இல்லாமல் ஆனது.
- பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து உதவிகள் வரமுடியாத காரணத்தால், பாளையக்காரர்களின் ஒற்றுமை குலையத் தொடங்கியது. திருவிதாங்கூர், சேத்தூர், ஊற்றுமலை, சுரண்டை ஆகிய பாளையங்களைச் சேர்ந்தவர்கள் ஆங்கிலேய அணிக்கு மாறினர். கம்பெனி நிர்வாகத்துக்குத் தெரிவிக்காமல் பாளையக்காரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்த யூசுப் கான் துரோகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, 1764இல் தூக்கிலிடப்பட்டார்.
- கோட்டைகளை யூசூப் கான் கைப்பற்றிய பிறகு, எங்கோ தஞ்சம் புகுந்த புலித்தேவர் தனது பாளையத்துக்குத் திரும்பி, மீண்டும் ஆங்கிலேயருக்கு எதிராகப் பாளையக்காரர்களைத் திரட்டத் தொடங்கி 1764 இல் நெற்கட்டும் செவலை மீண்டும் கைப்பறினார். ஆனால் கேப்டன் கேம்பெல் அனுப்பிய படைடி நெற்கட்டும் செயல் கோட்டையை முற்றுகையிட்டு 1767இல் கைப்பற்றினார். புலித்தேவரின் இறுதிநாட்கள் குறித்த உறுதியான செய்திகள் கிடைக்கப்பெறவில்லை.
    - *யூசுப் கானின் இயற்பெயர் மருதநாயகம். அவர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். புதுச்சேரியில் இருந்தபோது, இசுலாம், சமயத்தைத் தழுவினார். 1752இல் கிளைவ் தலைமையிலான கம்பெனிப் படையில் சேர்ந்த யூசுப் கான் 1752–54இல் நடைபெற்ற திருச்சிராப்பள்ளி முற்றுகையில் பங்கேற்றார். ஆற்காடு நவாபுக்குச் சொந்தமானதாக இருந்தாலும், கம்பெனி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருந்த மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு 1756 முதல் 1761 வரை ஆளுநராகப் பொறுப்பு வகித்தார்.*
    - *யூசுப்கான் ஹைதர் அலியைத் தோற்கடித்து, சோழவந்தானைக் கைப்பற்றினார். லாலியின் மதராஸ் முற்றுகை (1758–59)யின் போது யூசுப்கானின் பங்களிப்பு சிறப்பானதாக இருந்தது. அவர் நிர்வாகப்பொறுப்பில் இருந்தபோது மதுரையில் நெசவுத்தொழிலை ஊக்குவித்தார்.*

- ❖ *மதுரை கோயில்களில் வழிபாடு நடத்துவதற்குக் குறிப்பிட்ட தொகையை வழங்கினார். மதகுருக்கள் வசமிருந்த கோயில் நிலங்களை மீட்டெடுத்தார். ஆங்கிலேயர் அவரை ஆற்காடு நவாபுக்கு பணிசெய்ய ஆணையிட்டதால், அவர் கிளர்ச்சியில் இறங்கினார்.*

வேலுநாச்சியர்(1730–1796)

- இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களாக இன்று அறியப்படும் பகுதியைச் சேதுபதி மன்னர்கள் ஆட்சி செலுத்தினர். வேலு நாச்சியார் இராமநாதபுரம் அரசரான செல்லமுத்து சேதுபதிக்கு 1730 இல் அரசகுடும்பத்தில் பிறந்த ஒரே பெண் வாரிசு ஆவார். அவர் சிவகங்கை அரசரான முத்துவடுகர் பெரிய உடையாரை மணந்தார்(16 வயதில்). அவர்களுக்கு வெள்ளச்சி நாச்சியார் என்ற மகள் இருந்தார்.
- 1772 இல் ஆற்காட்டு நவாபும் லெப்டினன்ட் கர்னல் பான் ஜோர் தலைமையிலான கம்பெனி படைகளும் இணைந்து காளையர்கோயில் அரண்மனையை தாக்கினார்.
- வேலு நாச்சியாரின் கணவர் நவாபின் படைகளால் கொல்லப்பட்டதும், அவர் தன் மகளுடன் தப்பித்து, திண்டுக்கல் அருகே விருப்பாச்சியில் ஹைதர் அலியின் பாதுகாப்பில் எட்டு ஆண்டு காலம் இருந்தார். இக்காலகட்டத்தில் வேலு நாச்சியார் ஒரு படையைக் கட்டமைத்தார்.
    - ❖ ***விருபாட்சியின் பாளையக்காரரான கோபால நாயக்கர்–*** *கோபால நாயக்கரைத் தலைவராகக் கொண்ட திண்டுக்கல் கூட்டமைப்பில் மணப்பாறையின் லெட்சுமி நாயக்கரும், தேவதானப்பட்டியின் பூஜை நாயக்கரும் , தேவதானப்பட்டியின் பூஜை நாயக்கரும் இடம் பெற்றிருந்தனர்.*
    - ❖ *தனது நட்பை வெளிப்படுத்தும் விதமாக ஒரு நல்லுறவுக் குழுவை அனுப்பிவைத்த திப்பு சுல்தானால் கோபால் நாயக்கர் ஈர்க்கப்பட்டார். கோயம்புத்தூரை மையமாகக்கொண் பிரிட்டிஷாரை எதிர்த்த அவர், பின்னாட்களில் கட்டபொம்மனின் சகோதரரான ஊமைத்துரையோடு இணைந்தார். அவர் உள்ளூர் விவசாயிகளின் ஆதரவுடன் ஆனைமலையில் கடும் போர் புரிந்தார். ஆயினும் பிரிட்டிஷ் படைகளால் அவர் 1801 இல் வெற்றிகொள்ளப்பட்டார்.*
- வேலுநாச்சியாரின் சார்பில் ஹைதர் அலிக்கு, தளவாய் (இராணுவத் தலைவர்) தாண்டவராயனார்எழுதிய கடிதத்தில் ஆங்கிலேயரைத் தோற்கடிக்கும் பொருட்டு 5000 காலாட்படைகளும், 5000 குதிரைப் படைகளும் அனுப்பும்படி அவரிடம் கோரினார்.வேலுநாச்சியார் உருது மொழியில் தனக்கு கிழக்கிந்திய கம்பெனியோடு இருந்த பிணக்குகளை கடிதத்தில் விவரித்திருந்தார். மேலும் தன் ஆங்கிலேயரோடு மோதுவதில் தீவிரமாக இருப்பதைத் தெளிவுபடுத்தினார்.
- அவரது மனவுறுதியைப் பார்த்து வியந்த ஹைதர் அலி தனது திண்டுக்கல் கோட்டை படைத்தலைவரான சையதிடம் அவருக்கு வேண்டிய இராணுவ உதவிகளை வழங்குமாறு ஆணையிட்டார்.
- ஆங்கிலேயரைத் தாக்கும் நோக்கத்துடன் கோபால நாயக்கர், ஹைதர் அலி ஆகியோருடன் கூட்டணி அமைத்து. 1780இல் இவ்விருவரின் துணையோடு ஆங்கிலேயருடன் போரிட்டு வென்றார்.
    - ❖ *வேலு நாச்சியார் ஒரு பெண்கள் படையை உருவாக்கியிருந்தார். அவர் ஆங்கிலேயரின் வெடிமருந்துக் கிடங்குகளைக் கண்டுபிடிப்பதற்குத் தன் உளவாளிகளைப் பயன்படுத்தினார். நாச்சியாரின் படையில் இருந்த குயிலி தன் மீது நெருப்பு வைத்துக்கொண்டு, ஆங்கிலேயரின் வெடிமருந்து கிடங்கில் நுழைந்து (1780) அதை அழித்தார். நாச்சியாரின் படையிலிருந்த இன்னொரு உளவாளி அவரால் தத்தெடுக்கப்பட்ட உடையாள் ஆவார். இவர் ஆங்கிலேயரின் ஓர் ஆயுதக்கிடங்கை வெடிக்கச் செய்வதற்காகத் தன்னையே அழித்துக்கொண்டார்.*
- வேலுநாச்சியார் ஆற்காடு நவாப்பை தோற்கடித்து சிறைவைத்தார். பின் சிவகங்கைக்குள் நுழைந்த வேலுநாச்சியார். மருது சகோதரர்களின் துணையுடன் இராணியாக முடிசூடினார். சின்ன மருது நாச்சியாரின் ஆலோசகராகவும் பெரிய மருது படைத் தளபதியாகவும் நியமிக்கப்பட்டனர்.
- 1783இல் ஆங்கிலேயர் சிவகங்கைக்கு மீண்டும் படையெடுத்து வந்தனர். இம்முறை மருது பாண்டியர் சில இராஜதந்திர நடவடிக்கைகளால் சிவகங்கையின் பாதுகாப்பை உறுதிசெய்தனர். பிற்காலத்தில் ஆங்கிலேயரின் சமரச உடன்பாட்டின்படி வேங்கண் பெரிய உடைய தேவர் சிவங்கை அரசர் ஆனார்.
- இந்திய நாட்டில் பிரிட்டிஷ் காலனியாதிக்க அதிகாரத்தை எதிர்க்க முதல் பெண் ஆட்சியாளர் அல்லது அரசி என்ற பெருமை அவருக்கே உரித்தானதாகும்.
- 1790இல் இவருக்கு மணம் முடித்துவைக்கப்பட்ட வெள்ளச்சி நாச்சியார் சந்தேகத்துக்கிடமான முறையில் இறந்தார். வேலு நாச்சியார் நோயுற்று 1796 இல் இறந்தார்.

வீரபாண்டிய கட்டபொம்மனின் காலம் (1790–1799)

- கட்டபொம்மன் ஓட்டப்பிடாரத்துக்கு அருகில் உள்ள பாஞ்சாலங்குறிச்சியை ஆட்சி செய்த பாளையக்காரர் ஆவார். கட்டபொம்மன் நாயக்கர் என்பது அவரது குடும்பப் பட்டமாகும். கட்டபொம்மனின் தாத்தா ஜெகவீர கட்டபொம்மன் கர்னல் ஹெரான் காலத்தில் குறுநிலமன்னராக இருந்தார்.
- 1760இல் பிறந்த வீரபாண்டிய கட்டபொம்மன் தனது தந்தை ஜெகவீரபாண்டிய கட்டபொம்மனின் இறப்பிற்குப் பின் பாஞ்சாலங்குறிச்சி பாளையத்துக்குப் பொறுப்பேற்றார். கம்பெனிக்கு அவர்கள் கப்பம் செலுத்துவது ஒரு பிரச்சனையாகவே நீடித்தது.
- கம்பெனி நிர்வாகிகளான ஜேம்ஸ் லண்டன் மற்றும் காலின் ஜாக்சன் என்போர் இவரை அமைதியை விரும்பும் மனம் கொண்டவராகவே கருதினார். எனினும் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் கட்டபொம்மனுக்கும், கிழக்கிந்திய கம்பெனிக்கும் மோதல்போக்கை ஏற்படுத்தின.
- 1781 இல் கம்பெனியாருடன் நவாப் ஏற்படுத்திகொண்ட உடன்படிக்கையின்படி, மைசூரின் திப்பு சுல்தானுடன் ஆற்காட்டு நவாப் போர்புரிந்து கொண்டிருந்தபோது கர்நாடகப்பகுதியில் கம்பெனியின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் செல்லும் நிலை ஏற்பட்டது. வசூலிக்கப்பட்ட வரியில் ஆறில் ஒரு பங்கு நவாபிற்கும் அவர் குடும்ப பராமரிப்பிற்கும் ஒதுக்கப்பட்டது.
- 1798 செப்டம்பர் மாதத்துக்கான கப்பமும் செலுத்தப்படாததால் (3310 பகோடாக்கள்), கலெக்டர் ஜாக்சன் அவருக்கே உரிய ஆணவத்துடன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்குக் கடிதம் அனுப்பினார்.
- நாட்டில் கடுமையான வறட்சி ஏற்பட்டதால், வரி வசூலிப்பது மிகக்கடினமான வேலை ஆனது. கலெக்டர் ஜாக்சன் வீரபாண்டிய கட்டபொம்மனைத் தண்டிக்கும் நோக்குடன் ஒரு படையை அனுப்ப விரும்பினாலும், சென்னை நிர்வாக அதை ஏற்றுக்கொள்ளவில்லை.
- திருநெல்வேலியிருந்த படை வீரர்களை மைசூரில் திப்பு சுல்தானுக்கு ஏற்கனவே அனுப்பியிருந்தது. இந்த நிலையில் மிகவும் தொலைவிலிருந்த தெற்குப்பகுதியில் போர் செய்வத ஆபத்து எனக் கம்பெனி கருதியது. அது பிரச்சனையில் தொடர்புடைய பாளையக்காரரை இராமநாதபுரத்துக்கு வரவழைத்து, கலந்தாலோசனை செய்யும்படி கலெக்டருக்கு உத்தரவிட்டது.
- அதன்படி, 1798 ஆகஸ்ட் 18 அன்று ஜாக்சன் இரு வாரங்களுக்குள் தன்னை இராமநாதபுரத்துக்கு வந்து சந்திக்கும்படி வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு உத்தரவு பிறப்பித்துவிட்டு, திருநெல்வேலி சுற்றுப்பயணத்தைத் துவக்கினார். பாளையக்காரர்களிடமிருந்து கப்பம் வசூலிப்பதற்காகச் சொக்கம்பட்டி, சிவகிரி, சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களில் அவர் தங்கியிருந்தபோது வீரபாண்டியக் கட்டபொம்மன் அவரைச் சந்திக்க முயன்றார். ஆனால் இராமநாதபுரத்தில்தான் கலெக்டரைச் சந்திக்க முடியும் என அவருக்கு அறிவுறுத்தப்பட்டது.
- இந்த அவமதிப்பையும் மீறி, கட்டபொம்மன் 23 நாட்களில் 400 மைல் தூரம் கலெக்டரைச் சளைக்காமல் பின்தொடர்ந்து, செப்டம்பர் 19 ஆ ம் நாள் இராமநாதபுரத்தை அடைந்தார். கலெக்டரைச் சந்திப்பதற்கான வாய்ப்பு அன்றே தரப்பட்டது.
- கட்டபொம்மன் கம்பெனிக்குச் செலுத்த வேண்டிய கப்பத்தொகையில் பெரும்பகுதியைச் செலுத்திவிட்டதையும் 1080 பக்கோடா மட்டுமே பாக்கி இருப்பதையும் கணக்குகளைச் சரிபார்த்து அவர் அறிந்துகொண்டார்.
- சந்திப்பின் இறுதியில் ஜாக்சன் இருவரையும் இராமநாதபுரம் கோட்டையில் தங்கும்படி கூறினார். அங்கு திடீரென வந்த வீரர்கள் கட்டபொம்மனைக் கைது செய்யவே வந்திருந்தார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிந்தது. கட்டபொம்மனும் அமைச்சரும் தப்ப முயன்றனர். கோட்டைவாசலில் நடந்த மோதலில் லெப்டினெண்ட் க்ளார்க் உள்ளிட்ட சிலர் கொல்லப்பட்டார்கள். சிவசுப்பிரமணிய பிள்ளை கைது செய்யப்பட்டார். கட்ட பொம்மன் மட்டுமே தப்ப முடிந்தது.
- பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பிய கட்டபொம்மன் தன்னிடம் ஜாக்சன் நடந்துகொண்ட முறையே இராமநாதபுரத்தில் நடந்த மோதலுக்குக் காரணம் என்று சென்னை கவுன்சிலுக்குக் கடிதம் அனுப்பினார். இதற்கிடையே ஆளுநர் எட்வர்டு கிளைவ் கம்பெனி நிர்வாகத்திடம் கட்டபொம்மன் சரணடையும்படி அறிவிப்பு வெளியிட்டார். இவ்வாறு கட்டபொம்மன் சரணடைந்தால் நேர்மையான விசாரணை நடைபெறும் என்றும் இதற்கு உடன்படாவிட்டால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். அதன்படி கட்டபொம்மன் கம்பெனி விசாணைக்குழுவிடம் நேரில் சென்று விளக்கம் அளித்தார் (1798 டிசம்பர் 15).

- கலகக் குற்றச்சாட்டுகளிலிருந்து கட்டபொம்மனை விடுவித்த குழு, கலெக்டர் நடந்துகொண்ட விதத்துக்காக அவரைக் கண்டித்தது எஸ். ஆர். லூஷிங்டன் புதிய கலெக்டராக நியமிக்கப்பட்டார். இறுதியில் ஜாக்சன் பணிநீக்கம் செய்யப்பட்டார்.
- பிறப்பித்தார். திருவனந்தபுரம் அரசரின் படையும் ஆங்கிலேயருடன் இணைந்தது. மேஜர் பானர்மேன் அதிக ஆற்றல் கொண்ட போர்த்தளவாடங்களுடன் படைகளை வழிநடத்தினார்.
- இந்த சூழலில் மருது பாண்டியர்கள் திண்டுக்கல் கோபால நாயக்குருடனும் ஆனைமலை யாதுல் நாயக்கருடனும் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிரான கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் இருந்தார்கள். இதே விருப்பத்துடன் இருந்த கட்டபொம்மனும் மருது பாண்டியரும் நெருக்கமானார்கள்.
- கட்டபொம்மன் சிவகிரி பாளையக்காரருடனும் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டார். கட்டபொம்மனின் நிலையைப் பலப்படுத்துவற்காகச் சிவகிரி பாளையக்காரரின் மகன் வீரபாண்டியன் தன் வீரர்களுடனும் கூட்டணியில் இருந்த பிற தலைவர்களுடனும் தளவாய் குமாரசாமி நாயக்கரின் தலைமையில் மேற்கு நோக்கி அணிவகுத்துச் சென்றார். சிவகிரிபாயைம் கம்பெனிக்குக் கட்டுப்பட்டதாக இருந்ததால், வீரபாண்டியனின் இந்நடவடிக்கையை சென்னைக் கம்பெனி அரசு தனக்கு விடுக்கப்பட்ட சவாலாகக் கருதி தாக்குதலுக்கு உத்தரவிட்டது.
- 1799 மே மாதத்தில் வெல்லெஸ்லி பிரவு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் இருந்த படைகளை திருநெல்வேலிக்கு அனுப்ப உத்தரவு பிறப்பித்தார். திருவனந்தபுரம் அரசரின் படையும் ஆங்கிலேயருடன் இணைந்தது. மேஜர் பானர்மேன் அதிக ஆற்றல் கொண்ட போர்த்தளவாடங்களுடன் படைகளை வழிநடத்தினார்.
- 1799 ஜீன் 1 அன்று கட்டபொம்மன் 500 ஆட்களுடன் சிவகங்கைக்குச் சென்றார். பழையனாறு என்ற இடத்தில் மருதவுடன் தீவிர ஆலோசனை நடத்தினார். இதையடுத்து, சிவகங்கையிலிருந்து ஆயுதம் தரித்து வந்த 500 பேருடன் கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பினார்.
- நாகலாபுரம், மன்னர்கோட்டை, பாவாலி, கோலார்பட்டி,செந்நல்குடி ஆகிய பாளையங்களின் தலைவர்கள் மருது சகோதரர்களின் முயற்சியால் ஏற்கனவே ஒன்று சேர்ந்திருந்தார்கள். அவர்கள் கம்பெனியின் ஆட்சிப்பகுதிகளிலிருந்த சில குறிப்பிட்ட கிராமங்களில் வரி வசூலிக்கும் உரிமையை உறுதிப்படுத்தியிருந்தார்கள்.
- கட்டபொம்மன் தன் செல்வாக்கையும் நிதியாதாரங்களையும் முன்னிறுத்தி, இந்த அணியில் சேர்ந்து அதன் தலைவர் ஆனார். இக்கூட்டமைப்பை ஏற்படுத்த சாப்டூர், ஏழாயிரம் பண்ணை, காடல்குடி, குளத்தூர் ஆகியவற்றின் பாளையக்காரர்களையும் அதில் சேரும்படி வலியுறுத்தினார்.
- மே 1799 இல் மதராசில் இருந்த வெல்லஸ்லி பிரபு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படைகளை திருநெல்வேலி நோக்கிச் செல்ல உத்தரவிட்டார். படைகளுக்கு மேஜர் பானர்மென் தலைமையேற்றார். திருவிதாங்ககூர் படைகளும் பிரிட்டிஷ் படைகளோடு இணைந்தன.
- **பாஞ்சாலங்குறிச்சி முற்றுகை** –1799 செப்டம்பர் 1 அன்று மேஜர் பானர்மேன் தன்னைக் கட்டபொம்மன் பாளையங்கோட்டையில் சந்திக்கும்படி இறுதி எச்சரிக்கை விடுத்தார். கட்டபொம்மன் சந்திப்பைத் தவிர்த்ததால், பானர்மேன் போர் தொடுக்க முடிவெடுத்தார். செப்டம்பர் 5 ஆம் நாள் கம்பெனி படை பஞ்சாலங்குறிச்சியைச் சென்றடைந்தது.
- கட்டபொம்மனின் கோட்டை 500 அடி நீளத்திலும் 300 அடி அகலத்திலும் முழுவதும் மண்ணினால் கட்டப்பட்டிருந்தது. ஆங்கிலேயப்படை கோட்டையின் தகவல்தொடர்புக்கான வழிகளைத் துண்டித்தது. கட்டபொம்மனின் வீரர்கள் கம்பீரத்துடனும் வீரத்துடனும் போரிட்டார்கள். அவர்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன. பானர்மென் இராமலிங்கரை தூதனுப்பி கட்டபொம்மனைச் சரணடையுமாறு கேட்டுக்கொண்டார். கட்டபொம்மன் மறுத்தார். கட்டபொம்மன் மறுத்தார். கோட்டையின் இரகசிகங்கள் அனைத்தையும் இராமலிங்கர் சேகரித்தார். அவரது அறிக்கையை அடிப்படையாக கொண்டு பானர்மென் தாக்குதல் உத்திகளை வடிவமைத்தார். கள்ளர்பட்டியில் நடந்த மோதலில் சிவசுப்பிரமணியனார் கைது செய்யப்பட்டார்.
- கர்னல் வெல்ஷ் என்பார் தனது நினைவுக் குறிப்புகளில், கட்டபொம்மனது படைவீரர்களின் வீரத்தைப் பதிவிட்டுள்ளார். கம்பெனிப் படைக்குக் கூடுதல் எண்ணிக்கையில் வீரர்கள் தேவைப்பட்டனர்.
- கட்டபொம்மன் புதுக்கோட்டைக்கு தப்பிச் சென்றார். பிரிட்டிஷார் அவரது தலைக்கு ஒரு வெதுமதியை நிர்ணயித்தனர்.
- செப்டம்பர் 16 அன்று ஆங்கிலேயருக்குக் கூடுதல் வலு சேர்ப்பதற்கான உதவிகள் பாளையங்கோட்டையிலிருந்து வந்து சேர்ந்தன. அவர்களின் தொடர்ச்சியான தாக்குதலால் சுவர்கள் உடைந்து கோட்டை பலவீனம் அடைந்ததால், கோட்டைக்கான காவற்படை வெளியேறி காடல்குடியை அடைந்தது.

- கோலார்பட்டியில் நடந்த மோதலில் கட்டபொம்மனின் அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளை பிடித்து நாலகபுரத்தில் செப்டம்பர் 13 அன்று தூக்கிலிடப்பட்டார். நாலாபுறமும் எதிர்ப்பைக் காட்டிய தலைவர்களுக்குரிய பிற பாதுகாப்பு அரண்கள் அனைத்தும் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்கு வந்தன. ஆங்கிலேயப்படையைக் கண்டதும், மேற்குப் பாளையத்தாரும் சரணடைந்தனர்.
- புதுக்கோட்டை மன்னர் விஜய ரகுநாத தொண்டைமான் களப்பூர் காட்டிலிருந்த கட்டபொம்மனைப் பிடித்து, ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார். கட்டபொம்மனின் ஆதரவாளர்கள் மருது சகோதரர்கள், கோபால நாயக்கர் ஆகியோருடன் இணைவதற்குச் சிவகங்கைக்கும் திண்டுக்கல் மலைக்குன்றுகளுக்கும் விரைந்தனர்.
- 1799 அக்டோபர் 16 அன்று பானர்மேன் கட்டபொம்மனைக் கயத்தாறு என்னுமிடத்தில் பாளையக்காரர்கள் கூடியிருந்த அவையில் விசாரணை செய்தார். அவர் சிவகிரிக்கு எதிராக ஆயுதந்தரித்த வீரர்களை அனுப்பியதையும் பாஞ்சாலங்குறிச்சிப் போரில் ஆங்கிலேயப்படைகளுக்கு எதிராகப் போரிட்டதையும் ஒத்துக்கொண்டார். கட்டபொம்மன் கயத்தாறு பழைய கோட்டைகக்கு அருகில் 1799 அக்டோபர் 16 அன்று தூக்கிலிடப்பட்டார்.

மருது சகோதரர்களும் (1801) தென்னிந்தியக் கிளர்ச்சியும்

- பெரிய மருது என்ற வெள்ள மருது மற்றும் அவரது தம்பியான சின்ன மருது ஆகிய இருவரும் சிவகங்கையின் முத்துவடுகநாதரின் திறமையான படை தளபதிகளாவர். காளையார் கோவில் போரில் முத்துவடுகநாதர் இறந்தபின் வேலுநாச்சியாருக்கு அரசுரிமையை மீட்டெடுக்க மருது சதோரர் அரும்பாடுபட்டனர். கட்டபொம்மன் இறப்பிற்குப் பின்னர் அவரது சகோதரர் ஊமைத்தரையோடு இணைந்து பணியாற்றினர்.
- ஆற்காடு நவாப் 1772 ஆம் ஆண்டு உடன்படிக்கை மூலம், ஸ்தலக்காவல், தேசக்காவல் ஆகியவற்றுக்கான உரிமைகளை கம்பெனிக்குக் கொடுத்திருந்தார். இது பாளையக்காரர்கள், பாளையக்காரர்கள் அல்லாதோர் ஆகிய இரு தரப்பினரின் ஆட்சிப்பகுதிகளிலுமிருந்த காவல் தலைவர்களைப் பாதித்தது. அதிருப்தியடைந்த காவல்காரர்களுக்கு அவர்களின் தலைவர்களும் நவாபுக்கும் கம்பெனிக்கும் எதிராகப் பாளையக்காரர்களுடன் சேர்ந்தார்கள்.
- சிவகங்கை பெரிய உடைய தேவர், நவாப் படைக்கு எதிரான சண்டையில் உயிரிழந்ததால் நிர்வாகப் பொறுப்பை எடுத்துக்கொண்ட சின்ன மருதுவும் பெரிய மருதுவும் நவாப் படையை வெளியேறினார்கள்.
- பெரிய உடைய தேவர், வேலு நாச்சியார் ஆகியோரின் மகளான வெள்ளச்சி நாச்சியாரை சிவகங்கையின் இராணியாக அறிவித்தனர். அவர்கள் அமைச்சர் பொறுப்புகளை ஏற்றனர். அன்றைய சிவகங்கைக் காட்டின் நடுவில் இருந்த காளையார் கோவில், கிளர்ச்சியாளர்கள்கூடுமிடமாகவும் அவர்களது அடையாளமாகவும் இருந்தது. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டதும், அவருடைய சகோதரர் ஊமைத்துரை கமுதியைச் சென்றடைந்தார். அங்கிருந்து அவரைச் சின்ன மருது சிவகங்கையின் தலைநகரான சிறுவயலுக்கு அழைத்துச் சென்றார்.

மருது சகோதரர்களின் கலகம் (1800–1801)

- கட்டபொம்மனின் கலகம் 1799 இல் ஒடுக்கப்பட்டதும், 1800 இல் மீண்டும் கலகம் வெடித்தது. பிரிட்டிஷாரின் குறிப்புகளில் இது இரண்டாவது பாளையக்காரர் போர் என்று குறிப்பிடப்படுகிறது. இப்போரனாது சிவகங்கையின் மருது பாண்டியர், திண்டுக்கல்லின் கோபால நாயக்கர், மலபாரின் கேரள வர்மா, மைசூரின் கிருஷ்ணப்பா மற்றும் தூண்டாஜி ஆகியயோர் அடங்கிய கூட்டமைப்பால் வழிநடத்தப்பட்டது.
- விருப்பாட்சியில் ஏப்ரல் 1800 இல் சந்தித்த அவர்கள் கம்பெனியாருக்கு எதிராகக் கிளர்ந்தெழ முடிவெடித்தனர். கோயம்புத்துாரில் 1800 இல் ஏற்பட்ட எழுச்சி அதிவேகமாக இராமநாதபுரத்திற்கும், மதுரைக்கும் பரவியது. நிலைமையை புரிந்துகொண்ட கம்பெனியார் மைசூரின் கிருஷ்ணப்பா மீதும், மலபாரின் கேரளவர்மா மீதும் இன்ன பிறர் மீதும் போர் தொடுக்கப்போவதாக அறிவித்தார். கோயம்புத்துார், சத்தியமங்கலம் மற்றும் தாராபுரம், ஆகிய பகுதிகளில் பாளையக்காரர்கள் பிடிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார்கள்.
- கட்ட பொம்மன் சகோதரர்களான ஊமைத்துரையுடம, செவத்தையாவும் பிப்ரவரி 1801 இல் பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து தப்பி கமுதியில் பதுங்கியிருப்பதை அறிந்த சின்ன மருது அவர்களைத் தமது தலைமையிடமான சிறுவயலுக்கு அழைத்துச் சென்றார்.
- நவாப் முகமது அலி முத்துராமலிங்கத் தேவரைத் சிறையிலிருந்து விடுவித்து, அவரை இராமநாதபுரத்தின் சேதுபதியாக முடிசூட்டினார். ஆனால் கிளர்ச்சியாளர்கள் முத்துக்கருப்பத் தேவரைத் தங்கள் ஆட்சியாளராக அறிவித்தனர். மேலும் அரசின் தெற்குப் பகுதியையும் வடக்குப் பகுதியையும் ஆக்கிரமித்தனர். கிளர்ச்சியாளர்களின் வீரர்கள் மதுரைக்குள்ளும் நுழைந்தனர். ஜூலையில் ஊமைத்துரை தன் ஆதரவாளர்களுடன் மதுரையில் உள்ள பழையநாடு என்னும் பகுதியைக் கைப்பற்றினார்.

- காலின் மெக்காலே தலைமையிலான பிரிட்டிஷ் படைகள் ஏப்ரலில் மீண்டும் கோட்டையை முற்றுகையிட்டதால் அவர்கள் மருது சகோதரர்களிடம் சிவகங்கையில் அடைக்கலம் கோரினார். தப்பியோடியவர்களை (ஊமைத்துரையும், செவத்தையும்) ஒப்படைக்கும்படி மருது சகோதரர்கள் வலியுறுத்தப்பட்டனர்.
- ஆனால் அவர்கள் மறுத்துவிட்டார்கள். இதையடுத்து கர்னல் அக்னியூவும், கர்னல் இன்னஸீம் சிவகங்கையை நோக்கி படைநடத்திச் சென்றனர்.
- மருது சகோதரர்கள் சூன் 1801 இல் நாட்டின் விடுதலையை முன்னிறுத்திய ஒரு பிரகடனத்தை வெளியிட்டனர் இதுவே ***திருச்சிராப்பள்ளி பேரறிக்கை*** என்றழைக்கப்படுகிறது.

1801 ஆம் ஆண்டு பேரறிக்கை (திருச்சிராப்பள்ளி பேரறிக்கை)

- பிரிட்டிஷாருக்கு எதிராக மண்டல, சாதி, சமய, இன வேறுபாடுகளைக் கடந்து நிற்பதற்காக முதலில் விடுக்கப்பட்ட அறைகூவலே 1801 ஆம் ஆண்டின் பேரறிக்கை ஆகும். இப்பேரரறிக்கை திருச்சியில் அமையப்பெற்ற நவாபின் கோட்டையின் முன்சுவரிலும், ஸ்ரீரங்கம் கோவிலின் சுற்றுச் சுவரிலும் ஒட்டப்பட்டது.
- ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்பட விழைந்த தமிழகப் பாளையக்காரர்கள் பலரும் ஒன்று திரண்டனர் சின்ன மருது ஏறத்தாழ 20,000 ஆட்களை ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் திரட்டினார். வங்காளம், சிலோன், மலேயா ஆகிய இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் படைகள் விரைந்து வந்தன. புதுக்கோட்டை, எட்டையபுரம் மற்றும் தஞ்சாவூரின் அசர்கள் பிரிட்டிஷாருடன் கைகோர்த்தார்கள். ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை என்ற உத்தி விரைவில் பாளையக்காரர்களின் படைகளில் பிரிவினையை ஏற்படுத்தியது.
- 1801 இல் சின்ன மருதுவின் மகன் செவத்த தம்பியின் தலைமையில் சிவகங்கை இராமநாதபுரம் ஆகிய இரு பகுதிகளைச் சேர்ந்த படைகளும் இணைந்து, கடற்கரை வழியாகத் தஞ்சாவூர் நோக்கி அணிவகுத்துச் சென்றன. தஞ்சாவூரில் இருந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளும் செவத்த தம்பியின் படையில் சேர்ந்தனர். தஞ்சாவூர் ஸ்தானிகர் ஆக இருந்த கேப்டன் வில்லியம் ப்ளாக்பர்ன் படைகளைத் திரட்டி, மாங்குடி அருகே செவத்த தம்பியை வென்றார். தஞ்சாவூர் ராஜர் சரபோஜி ஆங்கிலேயருக்குத் துணையாக நின்றார். இருப்பினும் வீரர்கள் ஆங்கிலேயர் படை பின் தொடர்தலிலிருந்து தப்பித்து. கடந்து சென்ற பகுதிகளை எல்லாம் அழித்து நாசமாக்கி சென்றனர்.

தென்னிந்தியக் கிளர்ச்சி (1801)

- சிவகங்கையின் ஆட்சியாளராகக் கம்பெனியால் படமாத்தூர் ஒய்யாத்தேவர் என்பவர் அங்கீகரிக்கப்பட்டார்.
- ஆங்கிலேயர்கள் மே 1801 இல் தஞ்சாவூரிலும் திருச்சியிலும் இருந்த கலகக்காரர்களைத் தாக்கினார்கள். கலகக்காரர்கள் பிரான் மலையிலும். காளையார் கோவிலிலும் தஞ்சம் புகுந்தனர். அவர்கள் பிரிட்டிஷ்படைகளால்மீண்டும் தோற்கடிக்கப்பட்டனர். இறுதியாக வலுவான இராணுவமும், சிறப்பான தலைமைத்துவமும் கொண்ட ஆங்கிலேய கம்பெனியே விஞ்சி நின்றது.
- கலகம் தோற்றதால் 1801இல் சிவகங்கை இணைக்கப்பட்டது. இராமநாதபுரத்தின் அருகே அமைந்த திருப்பத்தூர் கோட்டையில் 1801 அக்டோபர் 24 அன்று மரு சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டனர். ஊமைத்துரையும், செவத்தையாவும் பிடிக்கப்பட்டு 1801 நவம்பர் 16இல் பாஞ்சாலங்குறிச்சியில் தலை துண்டிக்கப்படடனர். கலகக்காரர்களில் 1802 ஏப்ரலில் 73 பேர் பிடிக்கப்பட்டு மலேயாவின் பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்டார்கள். பாளையக்காரர்கள் வீழ்ச்சியடைந்தாலும் அவர்களது வீரமும், தியாகமும் எதிர்காலச் சந்ததிகளை ஈர்ப்பதாக அமைந்தது. இதனால் மருது சகோதரர்களின் கலகம் ***தென்னிந்தியப் புரட்சி*** என்று அழைக்கப்படுகிறது.
- 1799 மற்றும் 1800–1801 ஆம் ஆண்டு பாளையக்காரர்களின் கலகம் அடக்கப்பட்டதன் விளைவு தமிழகத்திலிருந்து அனைத்து உள்ளூர் குடித்தலைமையினரின் எண்ணங்களையும் நீர்த்துப்போகச்செய்தது.
- 1801 சூலை 31 இல் ஏற்பட்ட கர்நாடக உடன்படிக்கையின் விதிகளின்படி, பிரிட்டிஷார் நேரடியாக தமிழகத்தின் மீது தங்கள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியதோடு பாளையக்காரர் முறையும் முடிவுக்கு வந்ததுடன் அனைத்துக் கோட்டைகளும் இடிக்கப்பட்டு அவர்களது படைகளும் கலைக்கப்பட்டன.

தீரன் சின்னமலை

- சேலம், கோயம்புத்தூர், கரூர், திண்டுக்கல் ஆகியவை அடங்கிய கொங்குநாடும், மதுரை நாயக்கர் அரசின் ஒரு பகுதியாக இருந்தது. அதை மைசூர் உடையார்கள் கைப்பற்றித் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். உடையார்களின் வீழ்ச்சி பிறகு மைசூர் சுல்தான்களால் கட்டுப்படுத்தப்பட்டன. மூன்றாம், நான்காம் மைசூர் போர்களின்

விளைவாகக் கொங்குப் பகுதி முழுவதும் ஆங்கிலேயர் வசமாயின. திப்புவின் திவான் முகம்மது அலி என்பவரால் வரி வசூலிக்கப்பட்டது.

- தீரன் சின்னமலை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியை எதிர்த்துப் போரிட்ட கொங்குநாட்டுப் பாளையக்காரர் ஆவார். இவர் பிரெஞ்சுக்காரர்களாலும் திப்புவாலும் பயிற்சியளிக்கப்பட்ட பாளையக்காரர்களில் ஒருவர். சின்னமலை கோயம்புத்தூரில் இருந்த ஆங்கிலேயரின் கோட்டை மீது தாக்குதல் நடத்தும் முயற்சியில் (1800) இருந்தபோது, மருது பாண்டியரின் உதவியைப் பெற முயன்றார்.
- கம்பெனியுடன் போரிடவதற்காக விருபாட்சி கோபால நாயக்கர், பரமத்திவேலூர் அப்பச்சிக் கவுண்டர், சேலம் ஆத்தூர் ஜோனி ஜான் கஹன், பெருந்துறை குமராள் வெள்ளை, ஈரோடு வாரணவாசி ஆகியோருடன் கூட்டணி சேர்ந்தார்.
- தனது படையை வலுவூட்டுவதற்குத் தேவையான உதவிகளை மருது சகோதர்களிடமிருந்து பெறுவதைக் கம்பெனி தடுத்துவிட்டதால் சின்னமலையின் திட்டங்கள் பலிக்கவில்லை. அவரும் தன் திட்டத்தை மாற்றிக்கொண்டு , திட்டமிட்டதற்கு ஒரு நாள் முன்னதாகவே கோட்டையைத் தாக்கினார். கம்பெனிப் படை 49 பேரைத் தூக்கிலிடுவதற்கு இது வழிவகுத்தது. சின்னமலை ஆங்கிலேயரிடம் சிக்காமல் தப்பினார். 1800 இலிருந்து அவர் தூக்கிலிடப்பட்ட 1805 ஜீலை 31 வரை கம்பெனிக்கு எதிராகப் போராடிக்கொண்டே இருந்தார்.
- சின்னமலையின் போர்களில் முக்கியமானவை மூன்று: காவிரிக்கரையில் நடைபெற்ற 1801 போர், 1802 ஆம் ஆண்டு ஓடநிலையில் நடந்த போர்: 1804 இல் நடந்த அரச்சலூர் போர் ஆகும். அவரது இறுதிப் போர் 1805 இல் நடைபெற்றதாகும். இப்போரில் சின்னமலை அவருடைய சமையல்காரரால் துரோகம் இழைக்கப்பட்டார். தீரன் சின்னமலை சிவகிரி (சங்ககிரி) கோட்டையில் 1805 சூலை 31 ல் தூக்கிடப்பட்டார்.

வேலூர் புரட்சி

- மருது சகோதரர்களின் கிளர்ச்சி ஒடுக்கப்பட்ட பின்னர், அவர்கள் வேலூரை மையமாகக் கொண்டு செயல்பட்டனர். எண்ணிக்கையில் 3000 க்குக் குறையாத திப்பு சுல்தானின் விசுவாசிகள் வேலூரிலும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் குடியேறியிருந்ததால், வேலூர் கோட்டை தென்னிந்தியாவின் புரட்சியாளர்கள் சந்தித்துக்கொள்ளுமிடமாக ஆனது.

உடனடிக் காரணம்–

- சிப்பாய்கள் சாதி அல்லது மதத்தின் அடையாளமாகத் தங்களது நெற்றியில் அணிந்த அனைத்து விதமான குறியீடுகளும் தடைசெய்யப்பட்டன.
- புரட்சி ஏற்படுவதற்கான இயக்க சக்தியாக தலைமைத்தளபதி சர் ஜான் கிரடாக் வெளியிட்ட புதிய இராணு விதிமுறை அமைந்தது.
- சிப்பாய்கள் தங்கள் மீசையை ஒரே மாதிரியான முறைக்குப் பொருந்தும்படி வெட்டுவதற்கு அறிவுறுத்தப்பட்டனர். துணை ஜெனரல் அக்னியு சிப்பாய்களுக்கான ஒரு புதிய தலைப்பாகையை வடிவமைத்து, தனது நேரடிக் கண்காணிப்பில் அதனை அறிமுகம் செய்தார்.
- புதிய தலைப்பாகையின் மேல் ரிப்பன் மற்றும் குஞ்சம் ஆகியவை மிருகத் தோலில் செய்யப்பட்டிருந்தது. பன்றித்தோல் முஸ்லீம்களுக்கு வெறுப்பூட்டும் பொருள் ஆகும். இந்துக்கள் பசுத்தோலில் செய்யப்பட்ட எந்தப் பொருளையும் விளக்கவேண்டியதாக கருதினர். மேலும் சிப்பாய்கள் அணியும் சீருடையின் முன்பக்கம் சிலுவை பொறிக்கப்பட்டிருந்தது.

புரட்சியின் போக்கு:

- 1806 சூலை 10 அன்று அதிகாலையிலேயே முதல் மற்றும் இருபத்தி மூன்றாம் படைப்பிரிவுகளின் இந்திய சிப்பாய்கள் துப்பாக்கிகளின் முழக்கத்தோடு புரட்சியி இறங்கினார்.
- கோட்டைக் காவற்படையின் உயர் பொறுப்புவகித்த கர்னல் பேன்கோர்ட் என்பவர்தன் முதல் பலியானார். அடுத்ததாக இருபத்தி மூன்றாம் படைப்பிரிவைச் சேர்ந்த கர்னல் மீக்காரஸ் கொல்லப்பட்டார். கோட்டையைக் கடந்து சென்றுகெண்டிருந்த மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங் துப்பாக்கிகளின் முழக்கத்தைக் கேட்டார்.
- முதல் எதிர்ப்பு 1806 மே மாதத்தில் நிகழ்ந்தது. வேலூரிலிருந்த 4 ஆம் ரெஜிமெண்ட்டின் 2 ஆம் படைப்பிரிவு வீரர்கள் புதிய தலைப்பாகையை அணிய மறுத்தனர். இந்தப் பிரச்சனை படைமுகாமின் தளபதியான கவர்னர் ஃபேன்கோர்ட்டுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் கிளர்ச்சியாளர்களை உடனிருந்து கண்காணிக்கும்படி 19 ஆம் குதிரைப்படைப்பிரிவுக்கு உத்தரவிட்டார்.

- இவர்கள் மீதான விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டது. 4 ஆம் ரெஜிமெண்ட்டின் 2 ஆம் படைப்பிரிவுக்கு பதிலாக வாலாஜபாத்திலிருந்த 23 ஆம் ரெஜிமெண்ட்டின் 2 ஆம் படைப்பிரிவு பொறுப்பை ஏற்றது. தலைமையின் உத்தரவை எதிர்த்தமைக்காகப் படையின் கீழ்நிலைப் பொறுப்பிலிருந்த 21 வீரர்கள் இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டனர்.
- அவர்களில் 10 முஸ்லீம்களும் 11 இந்துக்களும் இருந்தார்கள். நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றும் பொருட்டு இரு வீரர் (ஒரு முஸ்லீம், ஒரு இந்து)களுக்குத் தலா 900 கசையடிகள் கொடுக்கப்பட்டு அவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள்.
- புதிய தலைப்பாகையை அணிவதற்கு விருப்பமில்லாத உணர்வு வீரர்களிடையே மிக பலவீனமாக இருப்பதாகவே கவர்னர் வில்லியம் பெண்டிங் நம்பினார்.
- வேலூர் கோட்டையில் 1806 சூலை 9ஆம் நாள் இரவின்போது பணியிலிருந்த இராணுவ அதிகாரிகள் வழக்கத்துக்கு மாறாக எதையும் கவனிக்கவில்லை என முதலில் கூறப்பட்டது. எனினும், அன்றைக்குப் பொறுப்பிலிருந்த ஆங்கிலேயே அதிகாரி பார்வையிடும் தனது வேலையை அன்று செய்யவில்லை என்றும் தனக்குப் பதிலாக ஜமேதார் ஷேக் காசிம் என்ற இந்திய அதிகாரியை அனுப்பினார் என்றும் பின்னர் தெரிய வந்தது.
- வேலூர் புரட்சிக்குப் பிறகு, அவர் முதன்மைக் குற்றவாளிகளில் ஒருவராக அடையாளம் காணப்பட்டார். சூலை 10 அதிகாலையில் பயிற்சியில் கலந்துகொள்ள வேண்டிய படைப்பிரிவின் தலைவர்கள் சூலை 9 ஆம் நாள் இரவே கோட்டையில் தூங்குவதற்கு அதைச் சாக்காகப் பயன்படுத்தினர். இந்தச் துணை இராணுவ அதிகாரி கோட்டைக்குள் பாதுகாவலர்களாகத் தன்னால் இயன்றவரை தன்னுடைய ஆதரவாளர்களையே நியமித்தார்.
- வேலூர் புரட்சியில் முக்கியப் பங்கு வகித்தாகக் கருதப்படுபவர் ஜமாலுதீன் ஆவார். இவர் திப்புக் குடும்பத்தின் 12 இளவரசர்களில் ஒருவர். அவர் ஷேக் காசிம் போன்ற இந்திய அதிகாரிகளிடமும் வீரர்களிடமும் இரகசியப் பேச்சுவார்த்தைகளின்போது, அவர்கள் வேலூர் கோட்டையை எட்டு நாட்களுக்குத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்படியும் அதற்குள் 10 ஆயிரம் ஆதரவாளர்கள் உதவிக்கு வந்து விடுவார்கள் என்றும் கூறி வந்தார்.
- உரிமை பறிக்கப்பட்ட பாளையக்காரர்களின் உதவியைக் கேட்டு அவர்களுக்குத் கடிதம் எழுதப்பட்டுள்ளதையும் அவர் தெரிவித்தார். திப்பு சுல்தானிடம் பணிபுரிந்த ஏராளமான அதிகாரிகள் திப்புவின் முன்னாள் அமைச்சரான புர்னியாவுடன் தொடர்பில் இருப்பதாகவும் அவர்கள் தக்க நேரத்தில் கைகொடுப்பார்கள் என்றும் ஜமாலுதீன் கூறினார்.
- வேலூர்க் கோட்டையில் சூலை 10 ஆம் நாள் காலை 2 மணிக்கு முதன்மை பாதுகாப்புத்தளத்திலிருந்த காவலாளியிடமிருந்து கார்ப்பரல் பியர்சிக்கு ஒரு செய்தி தெரிவிக்கப்பட்டது. படைவீரர் குடியிருப்புக்கு அருகில் துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டது என்பதே அச்செய்தி. முடிவில் 13 அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இராணுவக் குடியிருப்பில் 82 கீழ்நிலை இராணுவ வீரர்கள் இறந்தார்கள். 91 பேர் காயமடைந்தனர்.
- உள்ளூர் வீரர்கள் அடங்கிய 16 ஆம் காலாட்படையைச் சேர்ந்த மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங் துப்பாக்கிச் சத்தம் கேட்டபோது கோட்டைக்கு வெளியே பல்லக்கில் சென்று கொண்டிருந்தார். கோட்டையின் சரிவான பகுதிக்கு சென்று விசாரித்துக்கொண்டிருந்தபோது குண்டுமழை அவரது உயிரை பறித்தது.
- கோட்டைக்கு வெளியே பணியிலிருந்த மேஜர் கோட்ஸ் கிளர்ச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டு கோட்டைக்குள் நுழைய முயன்றார். ஆனால் அவரால் உள்ளே செல்ல முடியாததால், ஆற்காட்டில் குதிரைப்படை முகாமுக்கு பொறுப்பு வகித்த கில்லஸ்பிக்குக் கடிதம் எழுதி, அதைக் கேப்டன் ஸ்டீவன்சன் என்பவரிடம் கொடுத்தனுப்பினார். அக்கடிதம் வேலூரிலிருந்து 25 கி.மீ தொலைவில் இருந்த ஆற்காட்டுக்குக் காலை 6 மணி அளவில் சென்றடைந்தது.
- கர்னல் கில்லஸ்பி உடனே வேலூருக்குப் புறப்பட்டார். தன்னுடன் கேப்டன் யங் தலைமையில் 19 ஆம் குதிரைப்படையைச் ஒரு பிரிவையும் லெப்டினெண்ட் உட் ஹவுஸ் தலைமையில் அதற்குத் துணைநிற்கும் 7 ஆம் குதிரைப்படையிலிருந்து ஒரு வலுவான பிரிவையும் அழைத்துச் சென்றார்.
- அவர் குதிரைப்படையில் மீதமுள்ள வீரர்களுடன் தன்னைப் பின்தொடர்ந்து வரும்படி கர்னல் கென்னடியிடம் அறிவுறுத்திவிட்டு, ஆற்காடு படைமுகமையைப் பாதுகாக்கவும் தன்னுடன் தகவல்தொடர்பில் இருக்கவும் ஒரு தனிப்பிரிவை விட்டுச்சென்றார்.
- வேலூர் கோட்டைக்குக் காலை 9 மணிக்கு வந்தடைந்த கில்லஸ்பி தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடந்துகொண்டிருந்ததால், பீரங்கிகள் தங்கள் பாதுகாப்புக்கு வந்துசேரும்வரை காத்திருக்க முடிவு செய்தார். விரைவிலேயே ஆற்காட்டிலிருந்து பின்தொடர்ந்து வந்த கென்னடி தலைமையிலான குதிரைப்படை 10மணி அளவில் வந்துசேர்ந்தது.
- இதற்கிடையே புரட்சிக்காரர்கள் திப்புவின் மூத்த மகனான ஃபதே ஹைதரை புதிய மன்னராகப் பிரகடனம் செய்தது மைசூர் சுல்தானின் புலி கோட்டையில் ஏற்றியிருந்தனர்.

- லெப்டினெண்ட் ப்ளாகிஸ்டன் தலைமையில் 19 ஆம் குதிரைப்படையின் பீரங்கியால் கோட்டையின் வெளிவாசல் கதவு தகர்க்கப்பட்டது. கேப்டன் ஸ்கெல்ட்டன் தலைமையிலான குதிரைப்படையின் ஒரு பிரிவு கோட்டைக்குள் நுழைந்தது.
- கிளர்ச்சியில் ஈடுபட்ட சிப்பாய்கள் பின்வாங்கினார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் கோட்டையின் சுவர்கள் மீது ஏறித் தப்பித்தனர் அல்லது ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு கருணைக்காக கெஞ்சினர்.
- தேடுதல் வேட்டையில் ஒளிந்திருந்த கிளர்ச்சியாளர்கள் இரக்கமின்றி கொல்லப்பட்டார்கள். கில்லஸ்பியின் ஆட்கள் கிளர்ச்சிக்குத் திட்டம் தீட்டிய திப்புவின் மகன்களைப் பழிவாங்க விரும்பினார்கள். ஆனால் லெப்டினெண்ட் கர்னல் மர்ரியாட் இதை எதிர்த்தார்.
- கர்னல் கில்லஸ்பி வேலூர் கோட்டையை 15 நிமிடங்களுக்குள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்குள் கெண்டுவந்ததாகக் கூறப்படுகிறது. கர்னல் ஹர்கோர்ட் (வாலஜாபாத் படைக்குப் பொறுப்பு வகித்தவர்) சூலை 11இல் வேலூரி படையின் தற்காலிகப் பொறுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.
- சூலை 13இல் ஹர்கோர்ட் படைமுகாமின் பொறுப்பாளராகப் பதவியேற்று, இராணுவச் சட்ட ஆட்சியை அமல்படுத்தினார். கர்னல் கில்லஸ்பியின் விரைவான, சிறந்த திட்டமிடலுடன் கூடிய நடவடிக்கையே, கோட்டையைச் சில நாட்களுக்குள் கைப்பற்றி, அடுத்ததாக மைசூரிலிருந்து வரவிருந்த 50 ஆயிரம் வீரரர்களின் ஆதரவைப் பெறுவதற்குத் திட்டமிட்ட கிளர்ச்சியாளர்களின் கூட்டணிக்கு முற்றுப்புள்ளி வைத்தாகக் கருதப்படுகிறது.
- படைவீரர்கள் எதிர்ப்பு தெரிவித்த அருவருப்பான மாற்றங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன. விசாரணைக் குழுவின் கூற்றுப்படி, மைசூர் இளவரசர்கள் கிளர்ச்சிக்கு உடந்தையாக இருந்தார்கள் என்பது நிறுவப்படாததால், அவர்களைக் கல்கத்தாவுக்கு அனுப்பிவைக்கும்படி உத்தரவிடப்பட்டது. உயர்மட்டத் தீர்ப்பாயங்கள் கவர்னர், தலைமைப் படைத்தளபதி, துணை உதவி ஜெனரல் ஆகியோரை இந்தக் குளறுபடிக்குப் பொறுப்பாக்கி, அவர்களைத் திரும்ப அழைத்துக்கொள்ள உத்தரவிட்டன.
- நீதிமன்ற விசாரனைக்குப்பின் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்ட ஆறு நபர்கள் பீரங்கியில் கட்டியநிலையில் சுடப்பட்டும் ஐந்து நபர்களால் துப்பாக்கியால் சுடப்பட்டும், எட்டு நபர்கள் தூக்கிலிடப்பட்டும் கொல்லப்பட்டனர். திப்புவின் மகன்களை கல்கத்தாவுக்கு அனுப்ப உத்தவிடப்பட்டது.
- கலக்குவரத்தை அடக்குவதில் ஈடுபட்ட அதிகாரிகளுக்குப் பரிசுத்தொகையும் பதவிஉயர்வும் வழங்கப்பட்டது. கர்னல் ஜில்லஸ்பி 7,000 பகோடாக்கள் வெகுமதியாக அளிக்கப்பட்டது.
- எனினும், தலைமைத் தளபதி ஜான் கிரடாக்கும், உதவித் தளவதி அக்னியூம், ஆளுநர் வில்லியம் பெண்டிங்கும் புரட்சி நடக்கக் காரணமானவர்கள் என்று கருதப்பட்டு அவர்களைப் பணிநீக்கம் செய்வதோடு அவர்கள் இங்கிலாந்திற்கு திருப்பியழைக்கப்பட்டனர்.
- வேலூர் நிகழ்வின் தாக்கம் ஹைதராபாத், வாலஜாபாத், பெங்களூர்,நந்திதுர்கம், பாளையங்கோட்டை, பெல்லாரி, சங்கரிதுர்கம் ஆகிய இடங்களிலும் பரவியது. 1857 ஆம் ஆண்டு நடைபெற்ற பெரும் கிளர்ச்சிக்கான அனைத்து முன்னறிகுறிகளும் வேலூர் கிளர்ச்சியில் இருந்தன.

- *கில்லஸ்பியின் வன்கொடுமைகளை நேரில் பார்த்த ஜே. பிளாக்கிஸ்டன், 800க்கும் மேற்பட்ட உடல்கள் கோட்டையிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்தாக கூறுகிறார். டபிள்யூ. ஜே. வில்சனின் மதிப்பீட்டின்படி கிளர்ச்சியில் பங்கேற்றதாக 378 பேர் சிறை வைக்கப்பட்டனர். 516 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டாலும் சிறைத் தண்டனை விதிக்கப்படவில்லை. விசாரணைக்குழுவிடம் அளிக்கப்பட்ட வாக்குமூலங்களின்படி, இராணுவ நீதிமன்றம் சில தனிப்பட்ட நபர்களுக்கு மரண தண்டனை விதித்தது. சிலரை நாடு கடத்தியது. இத்தண்டனைகள் வேலூர் பொறுப்பதிகாரிகயால் 1806 செப்டம்பர் 23அன்று நிறைவேற்றப்பட்டது.*

- ***முதலாம் ரெஜிமெண்டின் முதல் படைப்பிரிவு***

பீரங்கி முனையில் கட்டிச் சுடப்பட்டவர்கள்	–	*1 ஹவில்தார், 1 நாயக்*
சுட்டுக்கொல்லப்பட்டவர்கள்	–	*1 நாயக், 4 சிப்பாய்கள்*
தூக்கிலிடப்பட்டவர்கள்	–	*3 ஹவில்தார்கள், 2 நாயக்குகள், 1 சிப்பாய்*

- ***23 ஆம் ரெஜிமெண்ட்டின் 2 ஆம் படைப்பிரிவு***

பீரங்கி வாயில் கட்டிச் சுடப்பட்டவர்கள்	–	*2 சுபேதார்கள், 2 லஸ்கார்கள்*
தூக்கிலிடப்பட்டவர்கள்	–	*2 ஹவில்தார்கள், 1 நாயக்*

(சான்று: W.J.Wilson. History of Madras Army. vol.III,pp.186-89)

விவசாயிகள், பழங்குடிகள் ஆகியோரின் கிளர்ச்சிகள்

- பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கம்பெனி அரசாங்கத்தின்நில உரிமையும் வருவாய் ஈட்டும் முறையும் இந்தியக் கிராமியச் சமூகத்தை மிகக் கடுமையாகப் பாதித்தன. விவசாயிகள் உள்ளூர் கச்சேரி (வருவாய் வசூலிக்கும் அலுவலகம்)களைத் தாக்கினார்கள், தானியச் சேகரிப்புக்கிடங்குகளைக் கொள்ளையடித்தார்கள், வரியை செலுத்த மறுத்தார்கள்.

ஃபராசி இயக்கம்

- ஹாஜி ஷாயத்துல்லா என்பவரால் 1818 ஆம் ஆண்டு ஃபராசி இயக்கம் தொடங்கப்பட்டது. வங்காளத்தின் கிழக்குப் பகுதிகளில் தொடங்கப்பட்ட இவ்வமைப்பின் உறுப்பினர்களை இஸ்லாத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என்று கேட்டார்.
- 1839 இல் ஷரியத்துல்லா மறைந்த பிறகு இந்த கிளர்ச்சிக்கு அவரது மகன் டுடு மியான் தலைமை ஏற்றார். அவர் வரி செலுத்தவேண்டாம் என்று விவசாயிகளை கேட்டுக்கொண்டார்.
- சமத்துவ இயல்பிலான மதம் குறித்து வலியுறுத்திய டுடு மியான் *நிலம் கடவுளுக்குச் சொந்தமானது* என்று அறிவித்தார். எனவே வாடகை வசூலிப்பது அல்லது வரி விதிப்பது ஆகியன இறைச்சட்டத்துக்கு எதிரானது என்றார்.
- கிராம அமைப்புகளின் கட்டமைப்பு மூலமாக பெரும் எண்ணிக்கையிலான விவசாயிகள் ஒன்றுதிரட்டப்பட்டனர்.
- 1840 கள் மற்றும் 1850கள் முழுவதும் ஜமீன்தாரர்கள் மற்றும் பயிரிடுவோர் மத்தியில் கடுமையான மோதல்கள் நிலவின. 1862இல் டுடு மியான் மறைந்த பிறகு 1870 களில் நோவா மியான் எப்வரால் இந்த இயக்கம் மீண்டும் உயிர்பெற்றது.

பரசத்தில் வஹாபி கிளர்ச்சி

- வஹாபி கிளர்ச்சி என்பது ஆங்கிலேய ஆட்சிக்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிராக துவங்கப்பட்டதாகும். வங்காளத்தில் பரசத் பகுதியில் 1827 வாக்கில் தோன்றியது. வஹாபி போதனைகால் பெரிதும் ஆழமாக ஈர்க்கப்பட்வராக திகழ்ந்த இசுலாமிய மதபோதகர் டிடு மீர் என்பவர் இந்தக் கிளர்ச்சிக்குத் தலைலையேற்றார்.
- ஜமீன்தாரி முறையால் ஒடுக்கப்பட்ட குறிப்பாக இசுலாமிய விவசாயிகள் மத்தியில் அவர் செல்வாக்குமிக்க நபராகத் திகழ்ந்தார்.
- எனினும் பெரும்பான்மையான ஜமீன்தாரர்கள் இந்துக்களாக இருந்ததால் இந்தக் கிளர்ச்சிக்கு இந்து எதிர்ப்புச் சாயம் பூசப்பட்டது.
- 1831 நவம்பர் 6 இல் பூர்ணியா நகரில் முதல் பெரும் தாக்குதல் நடத்தப்பட்டது. டிடு மீர் உடனடியாக ஆங்கிலேய ஆட்சியில் இருந்து விடுதலை பெற்றதாக அறிவித்தார். இதற்கு தக்க பதிலடி கிடைத்தது. பெரும் எண்ணக்கையிலான துருப்புகள் நர்கெல்பேரியாவுக்கு அனுப்பப் பட்டன. இப்போராட்டத்தில் ஐம்பது வீரரர்களுடன் டிடு மீர் கொல்லப்பட்டார்.

மலபார் கிளர்ச்சி

- 1840 களிலும் 1850 களிலும் செயல்பட்ட விவசாயிகள் இயக்கம் மலபார் கிளர்ச்சியாக வெளிப்பட்டது. இப்பகுதியில் குடியேறி, மலபார் பெண்களைத் திருமணம் செய்துகொண்ட அரபு வணிகர்களின் சந்ததியினர் (மாப்பிள்ளைகள்) ஆவர்.
- படிப்படையாக மாப்பிள்ளைமார்கள் விவசாயத்தைச் சார்ந்தவர்களாகி, நிலத்தை வாடகைக்கு எடுத்து விவசாயம் செய்வோராவும் நிலமற்ற உழைப்பாளர்களாகவும் சில்லறை வணகர்களாவும் மீனவர்களாகவும் மாறினர்.
- 1792இல் ஆங்கிலேயர் மலபாரைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து, நிலத்துக்கான தனிநபர் உரிமையாளர் முறையை உருவாக்குவது அவர்கள் கொண்டுவந்த மாற்றமாகும்.
- ஆங்கிலேயர் கொண்டுவந்த புதிய முறை ஜன்மிகளை நிலத்தின் முழு உரிமையாளர்களாக்கி, குத்தகை விவசாயிகளை வெளியேற்றும் அதிகாரத்தையும் கொடுத்தது. இந்த நடைமுறை விவசாயிகளை மிகவும் பாதித்தது.
- 1849 ஆகஸ்ட் மாதத்தில் மஞ்சேரியிலும், 1851 ஆகஸ்ட் மாதத்தில் குளத்துாரிலும் (இந்த இரு இடங்களும் தெற்கு மலபாரில் உள்ளவை) 1852 ஜனவரி மாதத்தில் வடக்கில் உள்ள மட்டனுாரிலும் நிகழ்ந்த கிளர்ச்சிகள் மிகவும் தீவிரமானவையாகும். இங்கெல்லாம் அமைதியை ஏற்படுத்த ஆங்கிலேயர் கையாண்ட அடக்குமுறை நடவடிக்கைகள் இருபது ஆண்டுகளுக்கு மேல் நீடித்தன. ஆனால் மாப்பிள்ளைகள் 1870இல் மீண்டும் எழுச்சி பெற்றனர்.

கோல்களின் கிளர்ச்சி (1831–32)

- கோல் (kol) என்ற பழங்குடி இனத்தினர் பீகாரிலும் ஒரிசாவிலும் சோட்டா, நாக்பூர், சிங்பும் ஆகிய பகுதிகளிலும் வாழ்ந்தனர். சோட்டா நாக்பூர் ராஜா பல கிராமங்களைப் பழங்குடி அல்லாதோருக்குக் குத்தகைக்கு விட்டதே கோல்களின் கிளர்ச்சிக்கு உடனடிக் காரணமாகும்.
- சோன்பூர், தமர் ஆகிய பகுதிகளில் வசித்த கோல்கள் திக்காடர்களுக்கு (வரி வசூலிப்போர்) எதிரான கிளர்ச்சியை நடத்துவதற்கு முதல் முயற்சியை எடுத்தனர்.
- கொள்ளையடிப்பதும சொத்துகளுக்குத் தீவைப்பதும அவர்களது கிளர்ச்சியில் முக்கிய வழிமுறைகளாக இருந்தன.
- 1831 டிசம்பர் 20 ஆம் நாளில் சோட்டா நாக்பூரில் உள்ள சோனிப்பூர் பர்கானா எழுநூறு கிளர்ச்சியாளர்கள் அடங்கிய குழுவால் தாக்கப்பட்டு, கொள்ளையடிக்கக்ப்பட்டு, தீக்கரையாக்கப்ப்ட்டது.
- 1832 ஜனவரி 26 க்குள் கோல்கள் சோட்டா நாக்பூர் முழுவதையும் தங்கள் ஆளுகைக்குள் கொண்டு வந்துவிட்டார்கள். இவர்களின் கிளர்ச்சி ஆங்கிலேயருக்கு எதிரான ஒரு போருடன் முடிவுக்கு வந்தது. மிகத் தீவிரமாக ஒரு குறுகிய பரப்புக்குள் நடந்த சண்டையில் கோல் கிளர்ச்சியின் தலைவரான ***புத்த பகத்*** கொல்லப்பட்டார்.
- துண்டிக்கப்பட்ட அவரது தலையை ஆட்சியாளர்களிடம் ஒப்படைத்ததற்காக அதிகாரிகள், இராணுவ வீரர்கள் ஆகியோருக்கு ஓராயிரம் ரூபாய் விநியோகிக்கப்பட்டது.
- கிளர்ச்சிக்கு தூண்டுகோலாக இருந்த ***பிந்த்ராய் மன்கி*** 1832 மார்ச் 19 ஆம் நாள் சரணடைந்ததும், கோல்களின் போராட்டம் ஒரு துயரமான முடிவுக்கு வந்தது.

சந்தால் கிளர்ச்சி (1855–56)

- பழங்குடிகளான சந்தால்கள் வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் உள்ள பல்வேறு காட்டுப்பகுதிகளில் அங்கங்கே பரவியிருந்தபடி வாழ்ந்தார்கள். தங்களின் தாய்மண்ணிலிருந்து துரத்தப்பட்ட சந்தால்கள் ராஜ்மகல் குன்றுகளை சுற்றியுள்ள பகுதியைத் திருத்தி, அதை டாமின்–இ–கோ (சந்தால்களின் நிலம்) என்று அழைத்தார்கள்.
- பழங்குடி நிலங்கள் சந்தால் அல்லாத ஜமீன்தார்களுக்கும் வட்டிக்கடைக்காரர்களுக்கும் குத்தகைக்கு விடப்பட்டதால், சந்தால்கள் படிப்படியாகக் கையறுநிலையில் வாழ வேண்டிய நெருக்கடிக்குத் தள்ளப்பட்டனர். இத்துடன், உள்ளூர் காவல்துறையினராலும் அப்பகுதிகளில் தொடர்வண்டிப்பாதை அமைப்பதில் ஈடுபட்ட ஐரோப்பிய அதிகாரிகளாலும் அடக்குமுறைக்குள்ளானார்கள். டிக்குகளின் (வெளியிலிருந்து வந்தோர்) இத்தகைய ஊடுருவல் சந்தால் சமூகத்தை நிலை தடுமாறச் செய்தது. இது அவர்கள் இழந்த பகுதியை மீட்பதற்கான நடடிவக்கையில் ஈடுபட வைத்தது.
- 1854 ஆம் ஆண்டு வாக்கில் பல இடங்களில் சமூகக் கொள்ளை நடடிவக்கைகளை பீர்சிங் என்பவரின் தலைமையில் நடைபெற்றது. மகாஜன்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு எதிராகக் குறிவைத்து இவை நடந்தன. ஜமீன்தாரி நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்ட பீர்சிங் அங் கு அடித்துத் துன்புறுத்தப்பட்டனர்.
- மகாஜன்கள் மற்றும் வர்த்தகர்களைக் குறிவைத்து மேலும் பல கொள்ளைச் சம்பவங்களை அரங்கேற்றி பீர் சிங்கும் அவரது நண்பர்களும் இதற்கு பதிலடி கொடுத்தனர் . அடக்குமுறை நடிவடிக்கைகள் சாந்தலர்களை மேலும் ஆத்திரமூட்டியது.
- 1855 இல் சித்து மற்றும் கணு ஆகிய இரண்டு சாந்தலர் சகோதரர்கள் கிளர்ச்சியைத் தலைமையேற்று நடத்தவேண்டி தங்களுக்கு கடவுளிடமிருந்து தேவசெய்தி கிடைத்தாக அறிவித்தனர். அவர்கள் மகாஜன்கள் மற்றும் தரோக்கக்களை (காவல் துறை அதிகாரிகள்) முற்றிலுமாக கொன்றுகுவிக்கவும், நாட்டில் வசதிபடைத்த பெங்காலிகளையும் ஜமீன்தார்கள் மற்றும் வர்த்தகர்களை அழித்தொழிக்கவும், அவர்களை அழிக்க முயன்ற அனைவரையும் அழிக்கவும், அவர்களின் எதிரிகளின் குண்டுகள் நீராக மாறிவிடும் என்று கடவுள் உத்தரவிட்டதாக 1855 சூன் 30 இல் அவர்கள் தெரிவித்தனர். சாந்தலர்களின் கூட்டத்தால் இரண்டு தரோகாக்கள் (காவல்துறை அதிகாரிகள்) கொல்லப்பட்டனர்.
- 1855 சூலையில் சந்தால்கள் ஜமீன்தார்களுக்கும் அரசாங்கத்துக்கும் விடுத்த இறுதி எச்சரிக்கை செவிமடுக்காமல் போனவுடன், ஆயிரக்கணக்கிலான சந்தால்கள் வில்லும் அம்பும் ஏந்திக்கொண்டு வெளிப்படையான கிளர்ச்சியைத் துவக்கினார்கள். ராஜ்மகால் மற்றும் பாகல்பூர் நோக்கி கம்பெனி ஆட்சிக்கு முடிவு கட்டப்போவதாக முழக்கமிட்டிபடி பேரணியாகச் சென்றனர்.
- தமது கிளர்ச்சி தம்மை ஒடுக்குபவர்களான ஜமீன்தார்கள், வட்டிக்கடைக்காரர்கள், அரசாங்கம் ஆகிய மூன்று தரப்பினரின் புனிதமற்ற கூட்டுக்கு எதிரானது என்றுஅவர்கள் குறிப்பிட்டார்கள்.
- மகேஷ்பூர் போரில் மஞ்சிகளில் பெரும்பாலானவர்கள் சிவப்பு நிற உடையை அணிந்திருந்தார்கள். பின்னாட்களில் இது அதிகாரத்துக்கு உரிமைகோரும் அடையாளத்துக்கான ஆடை ஆனது. கிளர்ச்சியின் முதல் வாரத்தில் பத்து பேர்

அடங்கிய ஒரு குழு மோங்கபர்ரா என்னும் கிராமத்தைத் தாக்கித் தீக்கிரையாக்கியது. கிளர்ச்சியாளர்களில் பெண்களும் இருந்தார்கள்.

- தொடக்கத்தில் ***சித்தோ*** சாந்தால்களின் தலைவராக இருந்தார். அவர் கைது செய்யப்பட்ட பின்னர் ***கானு*** கிளர்ச்சியை நடத்தினார். கிளர்ச்சியின் பிற்பகுதியில் விவசாயிகளும் சேர்ந்துகொண்டார்கள், ஆயிரக்கணக்கான விவசாயிகள் சார்லஸ் மசேக் அவுரித் தொழிற்சாலையைத் தாக்கிக் கொள்ளையடித்தார்கள்.
- இதன் விளைவாக, கிளர்ச்சியை ஒடுக்க ஆங்கிலேயர் தரப்பிலிருந்து மிருகத்தனமான நடவடிக்கைகள் தொடங்கின. இராணுவம் குவிக்கப்பட்டு, சந்தால் கிராமங்கள் பழிக்குப் பழியாக ஒன்றன் பின் ஒன்றாகத் தீக்கரையாக்கப்பட்டன.
- ஒரு கணக்கீட்டின்படி, கிளர்ச்சி இறுதியாக ஒடுக்கப்படும் முன்பு, 30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் பேர் வரையிலான கிளர்ச்சியாளர்களில் 15 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டார்கள் எனத் தெரிகிறது.
- 1855 இல் சாந்தலர்கள் வசிமிருந்த பகுதிகளை ஒழுங்குமறைப்படுத்துவது பற்றிய சட்டம் நிறைவேற்றப்பட்டது. சாந்தல் பர்கானா மண்டலம் என்ற தனி மண்டலத்தை உருவாக்கும் வகையில் இந்தச் சட்டம் நிறைவேறியது.

முண்டா கிளர்ச்சி

- ராஞ்சியில் இக்காலகட்டத்தில் நடைபெற்ற உலுகுலன் கிளர்ச்சி (பெரிய கலகம்) பழங்கடியினக் கிளர்ச்சிகளில் மிக முக்கியமானதாக அறியப்படுகிறது. கூட்டாக நிலத்தை வைத்துக்கெண்டு குண்ட்கட்டி என்ற முறையில் விவசாயம் செய்வதில் முண்டா மக்கள் பெயர்பெற்றவர்கள்.
- 1890 களில் பழங்குடியின மக்களை அவர்கள் வாழும் பகுதிகளிலிருந்து இடம்பெயரச் செய்வது மற்றும் அவர்களைக் கட்டாயத் தொழிலாளிகளாக உருவாக்குவது ஆகிவற்றை பழங்குடியினத் தலைவர்கள் எதிர்த்தனர்.
- பிர்சா முண்டா வழிநடத்திய முண்டாக்களின் கிளர்ச்சி (உல்குலன்) 1899–1900 காலகட்டத்தில் நடைபெற்றது. முண்டாக்கள் பீகார் பகுதியில் முக்கியத்துவம் வாய்ந்த பழங்குடிகள் ஆவர். ஆங்கிலேயரின் ஆட்சியில் அவர்களின் பொதுநில உரிமை முறை அழிக்கப்பட்டது.
- முண்டாக்களுக்குச் சொந்தமான நிலங்களை ஜாகீர்தார்களும் திக்காடர்களும் (பெரும் விவசாயி) வட்டிக்கடைக்காரர்களும் பறித்துக்கொண்டனர்.
- பிர்சா முண்டா குத்தகைக்குப் பயிரிடும் விவசாயிகளின் குடும்பத்தில் 1874இல் பிறந்தார். ஆங்கிலேயரை விரட்டிவிட்டு, முண்டாக்களின் ஆட்சியை நிறுவ வந்த புனிதத்தூதர் என அவர் தன்னை அழைத்துக்கொண்டார். பழங்குடிகளின் நிலங்களைப் பழங்குடி அல்லாதோர் ஆக்கிரமிப்பதை இவரது தலைமையில் முண்டாக்கள் எதிர்த்தார்கள். முண்டா இனத்தைச் சேர்ந்த விவசாயிகள் ஜமீன்தார்களுக்கு வாடகை செலுத்த வேண்டாம் பிர்சா முண்டா வலியுறுத்தினார்.
- 1889 ஆம் ஆண்டு கிறிஸ்த்து மஸ் நாளில் அவர்கள் வன்முறையை கையில் எடுத்தனர்.
- பிர்சா முண்டா சோட்டா நாக்பூர் பகுதியில் கிளர்ச்சியைத் துவக்கினார். சாயில் ரகப் என்னுமிடத்தில் முண்டா சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் கண்மூடித்தனமாகக் கொல்லப்பட்டார்கள். சாயில் ரகப் படுகொலை பிர்சா ஆதரவாளர்களைத் தடுத்து நிறுத்தவில்லை. ஆங்கிலேய அதிகாரிகள் பிர்சாவைக் கைது செய்ய உத்தரவு பிறப்பித்ததுடன், அவரைப் பிடித்துப் தருபவர்களுக்குப் பரிசளிப்பதாகவும் அறிவித்தார்கள்.
- இத்தனைக்குப் பிறகும் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு தொடர்வதைக் காண முடிகிறது. 1900 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கைது செய்யப்பட்டு ராஞ்சி சிறையில் அடைக்கப்பட்ட பிர்சா 1900 ஆண்டு சூன் 9 ஆம் நாளில் தியாகி ஆனார்.

1857 பெருங்கிளர்ச்சி

- ஆங்கில வரலாற்றாசிரியர்கள் இவ்வெழுச்சியை இராணுவக் கலகம் என்றும் இராணுவ வீரர்களின் கோபத்தின் வெளிப்பாடு என்று கூறி சாதாரணமாய் புறந்தள்ளுகின்றனர். இந்திய வரலாற்றாசிரியர்கள்

நாடுகளை ஆக்கிரமித்தல்

- மேலாதிக்க கொள்ளை: ஆங்கிலேயர் தங்களை வானளாவிய அதிகாரங்கள் கொண்ட உயர் அதிகார அமைப்பாக கருதினார்கள். உள்நாட்டு ஆட்சியாளர்கள் ஊழல்வாதிகள் மற்றும் திறனற்றவர்கள் என்ற அடிப்படையில் நாடுகள் இணைக்கப்பட்டன.
- டல்ஹௌசி வாரிசு உரிமை இழப்புக் கொள்கையின் மூலமாக அவத்தையும் ஜான்சியையும் இணைத்ததும், கடைசி பேஷ்வாவின் தத்தெடுக்கப்பட்ட மகனான நானா சாகிபை அவமானகரமாக நடத்தியதும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தின.

- முறையான உரிமம் இல்லாமல், குத்தகை இல்லாத நிலங்களை வைத்திருப்போர் பற்றி விசாரிக்க பம்பாய் அரசு அமைத்த இனாம் கமிஷனின் (1852) அறிக்கையின்படி 21,000க்கும் மேற்பட்ட தோட்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இணைக்கப்பட்ட பகுதிகளில் குறிப்பாக அவத்தில் மேற்கொள்ளப்பட்ட நிலவருவாய் ஏற்பாடுகள் தாலுக்தாரின் நலன்களுக்குப் பாதகமாக அமைந்ததால் அவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகத் திரும்பினர்.
- மேலும் அவத்தில் அரச குடும்பத்தின் ஆதரவை நம்பியிருந்த ஆயிரக்கணக்கான மக்களும், விலையுயர்ந்த ஆடைகள், அலங்கரிக்கப்பட்ட காலணிகள், அதிக விலையுள்ள நகைகள் ஆகியவற்றைத் தயாரிப்போரும் வாழ்விழந்தனர். இவ்வாறு டல்ஹௌசி தன்னுடைய விரிவாக்கக் கொள்கையின் மூலமாக வருவாரியான மக்களுக்குத் துன்பத்தை விளைவித்தார்.

பெருஞ்சுமையான நிலவருவாய் முறை

- இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட நிலவருவாய் ஏற்பாடுகளில் இருந்ததைக் காட்டிலும் தற்போது நிலவரி மிக அதிகமாக இருந்தது. ஆங்கிலேயருக்கு முன்னர் இருந்த இந்திய அரசுகள் விளைந்த நிலங்ககுக்கு மட்டுமே வரி வசூலித்தனர்.
- ஆங்கிலேயர் நிலவருவாயை வரியாகக் கருதாமல் வாடகையாகக் கருதினர். இதன்படி நிலத்தில் விவசாயம் செய்தாலும் செய்யாவிட்டாலும் அதே அளவு வரி வசூலிக்கப்பட்டது பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் விவசாயப் பண்டங்களின் விலைகள் கடுமையாக வீழ்சியுற்றன.
- காலனியரசு கடனைக் குறைக்கவோ நிவாரணம் வழங்கவோ முன்வராத சூழலில் சிறு விவசாயிகளும் குத்தகைதாரர்களும் சொல்லொன்னாத் துயரங்களுக்கு உள்ளாயினர்.

முஸ்லீம் உயர்குடியினரம் கற்றறிந்தோரும் ஒதுக்கப்படுதல்

- முஸ்லீம்கள் பெரும்பாலும் அரசுப் பணிகளையே சார்ந்திருந்தனர். கம்பெனியின் ஆட்சிக்கு முன்னர் முந்தைய அரசுகளில் மதிப்புமிகுந்த பணிகளில் அவர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தனர். குதிரைப்படைச் தளபதிகளாகச் சிலர் உயர்ந்த ஊதியம் பெற்று வந்தனர்.
- ஆனால் கம்பெனியின் ஆட்சியில் அவர்கள் துயரத்திற்கு ஆளாயினர். ஆங்கில மொழியும் மேலைக்கல்வியும் முஸ்லீம் அறிவு ஜீவிகளை முக்கியமற்றவர்களாக ஆக்கியது. நீதிமன்றங்களில் பொதுப்பணித் தேர்வுகளில் பாரசீக மொழியின் பயன்பாடு ஒழிக்கப்பட்டது அரசப் பணியில் முஸ்லீம்கள் சேர்வதற்கான வாய்ப்புகளை குறைத்தது.
- ஊதியம் மற்றும் பதவி உயர்வில் பாரபட்சம் காட்டப்படுவது குறித்தும் சிப்பாய்கள் கவலை அடைந்தனர். ஐரோப்பிய சிப்பாய்களுடன் ஒப்பிடுகையில் இந்திய சிப்பாய்களுக்கு மிகக்குறைந்த அளவில் ஊதியம் வழங்கப்பட்டது. அவர்கள் தரக்குறைவாக நடத்தப்பட்டதோடு மூத்த படையினரால் இனக் குறிடப்பட்டு அவமதிக்கப்பட்டார்கள்.

மத உணர்வுகள்

- 1824 ஆம் ஆண்டு கல்கத்தா அருகே பாரக்பூரில் சிப்பாய்கள் கடல்வழியாக பர்மா செல்ல மறுத்தனர். கடல் கடந்து சென்றால் தங்களது சாதியை இழக்க நேரிடும் என்று அவர்கள் நம்பினார்கள்.
- 1856ஆம் ஆண்டு சட்டமானது வங்காளப் படையில் உயர் ஜாதியினரும் சேர்ந்தகொள்ள வழிவகை செய்தது. சாதிப்பற்றை, கைவிட்டுடு அவர்கள் படைகளில் சேரவேண்டும் அல்லத இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றி முன்னேறும் வாய்ப்பைக் கைவிட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது.
- மேலும் சதி ஒழிப்புச் சட்டம், விதவை மறுமணத்தை சட்டபூர்வமாக்கியது, பெண் குழந்தைகள் கொல்லப்படுவதற்கு எதிரான சட்டம் ஆகியவை சமய நம்பிக்கைகளில் ஆங்கில அரசு தலையிடுவதாகக் கருதப்பட்டது. 1850இல் இயற்றப்பட்ட லெக்ஸ் லோசி சட்டம் கிறித்தவர்களாக மதம் மாறியவர்க்ளுக்கும் மூதாதையரின் சொத்துக்களில் உரிய பங்கினைப் பெறும் உரிமையை அளித்தது. இது வைதீக இந்துக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தியது.
- மேலும் புதிய என்பீல்டு துப்பாக்கித் தோட்டாக்களில் பசுவின் கொழுப்பும் பன்றியின் கொழுப்பும் தடவப்பட்டுள்ளது என்ற செய்தி பரவியபோது இந்து, முஸ்லீம் படைவீரர்களின் மத உணர்வுகள் புண்பட்டன. இத்தோட்டாக்களை புதிதாக செலுத்துவதற்கு முன்பாக அதைப் படை வீரர்கள் கடிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. இது கிறித்தவ மதத்திற்கு மாற்றம் செய்யும் முயற்சியாக கருதப்பட்டது.
- ஆகவே அனைத்து விதத்திலும் 1857 ஆம் ஆண்டு, பெருங்கிளர்ச்சி கனிந்த ஆண்டாகும். கொழுப்பு தடவிய தோட்டா பிரச்சனை கிளர்ச்சி எனும் வெடிமருந்தில் வைக்கப்பட்ட தீப்பொறியாகும்.

- பதவி பறிக்கப்பட்ட அதிருப்தி கொண்ட ராஜாக்கள், ராணிகள், ஜமீன்தார்கள், குத்தகைதாரர்கள் கைவினைஞர்கள், தொழிலாளர்கள், முஸ்லீம் அறிவு ஜீவிகள், இந்து பண்டிதர்கள், குருமார்கள் ஆகிய அனைவரும் இவ்வெழுச்சியைத் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பாகக் கருதினர்.

பெருங்கிளர்ச்சியின் போக்கு

- மார்ச் 29 ஆம் தேதி மங்கள் பாண்டே என்ற பெயர் கொண்ட சிப்பாய்கள் தனது ஐரோப்பிய அதிகாரியைத் தாக்கினார்.
- இப்பெருங் கிளர்ச்சி கல்கத்தாவுக்கு அருகேயுள்ள பரக்பூரில் இராணுவக் கலகமாகவே தொடங்கியது. மங்கள் பாண்டே தனது இராணுவ மேலதிகாரியை சுட்டுக் கொன்றார். தொடர்ந்து அங்கு இராணுவக் கலகம் வெடித்தது.
- அடுத்த மாதம் மீரட் நகரில் தோட்டாகளைப் பெற வேண்டிய 90 வீரர்களில் ஐவர் மட்டுமே உத்தரவுக்கு அடிபணிந்தனர். மே மாதம் 10 ஆம் நாளில் மூன்று ரெஜிமெண்டுகளைச் சேர்ந்த சிப்பாய்கள் கிளர்ச்சியில் இறங்கி தங்கள் உயர் அதிகாரிகளைக் கொன்று, சிறையில் அடைக்கப்பட்டிருந்த வீரர்களை விடுதலை செய்தனர்.
- 1857 மே மாதம் 11 இல் மீரட்டில் இருந்து தில்லி செங்கோட்டை நோக்கி ஒரு குழுவாக சிப்பாய்கள் அணிவகுத்து சென்றனர். மறுநாள் தில்லியை அடைந்த அவர்கள் ஐரோப்பியர் பலரைக் கொன்று நகரைக் கைப்பற்றினர் கிளர்ச்சியாளர்கள் இரண்டாம் பகதூர்ஷாவை பேரரசராகப் (ஷாஹின்ஷா இ– ஹிந்துஸ்தான்) பிரகடனம் செய்தனர்.
- ஜீன் மாதத்தில் கிளர்ச்சி ரோகில்கண்ட் பகுதிக்குப் பரவியது. ஒட்டுமொத்த கிராமப்புறமும் கிளர்ச்சியில் ஈடுப்பட்டது. கான் பகதூர் கான் தன்னைப் பேரரசருடைய வைஸ்ராயாக அறிவித்துக் கொண்டார். பந்தேல்கண்ட் பகுதியும் ஆற்றிடைப்பகுதி முழுவதும் ஆங்கிலேயருக்கு எதிராக ஆயுதம் ஏந்தியது.
- ஜான்சியில் ஐரோப்பியர் கொல்லப்பட்டு 22 வயதான லட்சுமிபாய் அரியணை ஏற்றப்பட்டார். கடைசி பேஷ்வா மன்னரான இரண்டாவது பாஜிராவின் தத்துப்பிள்ளையான நானா சாகிப் கான்பூரில் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினார். அவருக்கு ஓய்வூதியம் தர கம்பெனி மறுத்துவிட்டது. பெண்களும் குழந்தைகளும் உட்பட சுமார் 125 ஆங்கிலேயரிகளும் ஆங்கிலஅதிகாரிகளும் கொல்லப்பட்டு அவர்களது உடல்கள் ஒரு கிணற்றுக்கும் வீசப்பட்டன.
- கான்பூர் படுகொலை என்றறியப்பட்ட இந்நிகழ்வு ஆங்கிலேயரைச் கோபம் கொள்ளச் செய்தது. நிலைமைகளை எதிர்கொள்ள அனுப்பப்பட்ட தளபதி ஹென்றி ஹேவ்லக் படுகொலைக்கு மறுநாளே நானா சாகிப்பைத் தோற்கடித்தார்.
- ஆங்கில இராணுவ அதிகாரி நீல் கொடூரமான பழிவாங்கம் நடவடிக்கையில் ஈடுபட்டார். படுகொலைக்குக் காரணமானவர்கள் எனக் கருதப்பட்டோர் அனைவரும் கொல்லப்பட்டனர். நவம்பர் மாத இறுதியில் தாந்தியா தோபே கான்பூரைக் கைப்பற்றினார். ஆனால் அது விரைவில் காம்ப்பெல் என்பவரால் மீட்கப்பட்டது.
- லக்னோவில் பேகம் ஹஸ்ரத் மகால், பரேலியில் கான் பகதூர் ஆகியோர் தத்தமது பகுதிகளில் பொறுப்பை ஏற்றுக்கொண்னடனர்.
- ஹென்றி லாரன்சால் பாதுகாக்கப்பட்ட லக்னோ ஆளுநர் மானிகை கிளர்ச்சியாளர்களின் வசமானது. நானா சாகிப்பை ஹேவ்லக் தோற்கடித்த பின்னர் லக்னோவைக் கைப்பற்ற விரைந்தார். ஆனால் அவர் திரும்ப நேர்ந்தது.
    - *1857 ஆம் ஆண்டு கிளர்ச்சியின் முக்கிய அத்தியாயமாக இருப்பது கான்பூர் முற்றுகையாகும். கான்பூரில் சுற்றிவளைக்கப்பட்ட கம்பெனிப் படைகளும் இராணுவ வீரரர்களும் நீட்டிக்கப்பட்ட சுற்றிவளைப்புக்குத் தயாராக இல்லாததால் நானாசாகிப் தலைமையிலான கிளர்ச்சிப் படைகளின் கீழ் சரணடைந்தனர்.*
    - *அவர்கள் அலகாபாத்துக்கு திரும்பிச்செல்ல பாதுகாப்பான வழி அமைக்கப்பட்டது. அவர்கள் பயணம் செய்த படகுகள் தீயிடப்பட்டு எரிக்கப்பட்டு அதனை அடுத்து கான்பூர் தளபதி மேஜர் ஜெனரல் ஹக் வீலர் உள்படி பெரும்பாலும் அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்தனர்.*
- ஜீலை மாத இறுதியில் ஜான் லாரன்ஸால் தில்லிக்கு அனுப்பப்பட்ட ஜான் நிக்கல்சன் அதைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றார். முகலாயப் பேரரசர் இரண்டாம் பகதூர்ஷா சிறைக் கைதியானார். அவருடைய இரண்டு மகன்களும் பேரனும் சரணடைந்த பின் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- அவத்தில் மட்டும் தாலுக்தார்களும் விவசாயிகளுடன் பங்கு கொண்டதால் கிளர்ச்சி நீடித்தது. தாலுக்தார்களில் பலர் அவத் நவாபின் விசுவாசிகளாவர். ஆகவே அவர்கள் லக்னோவில் பேகம் ஹஸ்ரதி மஹாலோடு (நவாப் வஜித் அலியின் மனைவி) சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்த்தனர். பெரும்பாலான வீரர்கள் விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.
- ஆதலால் விவசாயிகள் பாதிக்கபட்டபோது இவர்களும் பாதிப்புக்குள்ளாயினர். நீண்ட காலத்திற்கு வங்காளப்படைகளுக்கு அவத் நாற்றங்காலாக இருந்தது. அவத்தை சேர்ந்த வீரர்கள் குறைந்த ஊதியம் குறித்தும் விடுமுறை பெறுவதிலுள்ள இடர்ப்பாடுகள் பற்றியும் புகார் செய்தனர்.

- அவர்கள் அனைவரும் பேகம் ஹஸ்ரத் மஹாலின் பின் அணி திரண்டனர். ராஜா ஜெய்லால் சிங்கின் தலைமையில் அவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்டு லக்னோவைக் கைப்பற்றினர். ஹஸ்ரம் ம்ஹால் தன் மகன் பிர்ஜிஸ் கத்ராவை அவத்தின் அரசராக அறிவித்தார். கான்பூரில் பழிதீர்த்துக் கொண்ட நீல் லக்னோவில் தெருச் சண்டையில் சுட்டுக் கொல்லப்பட்டார். 1858 மார்ச் மாதத்தில்தான் லக்னோவை ஆங்கிலேயரால் கைப்பற்ற முடிந்தது.

  - *சென்னை மௌன்ட் ரோட்டில் வைக்கப்பட்டிருந்த நீல் சிலை இந்திய தேசியவாதிகளைக் கோபம் கொள்ளச் செய்தது. அதை அப்புறப்படுத்த காங்கிரஸ் சத்தியாக்கிரகம் செய்தது. ராஜாஜியின் காங்கிரஸ் அமைச்சரவை (1937–39) இச்சிலையை அகற்றி சென்னை அருங்காட்சியகத்தில் வைத்தது.*

- ஹக் ரோஸ் ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் ஜான்சியை முற்றுகையிட்டு தாந்தியா தோபேயைத் தோற்கடித்தார். இருந்தபோதிலும் லட்சமிபாய் துணிச்சலுடன் போரிட்டு குவாலியரைக் கைப்பற்றினார். ஆங்கிலேயருக்கு ஆதரவான குவாலியர் அரசர் சிந்தியா தப்பியோடினார்.
- ரோஸ் தன்னுடைய படைகளோடு லட்சுமிபாயுடன் நேரடியாக மோதினார். வியப்பூட்டும் வகையில் லட்சமிபாய் போரில் பங்கோற்று வீரமரணமடைந்தார். கிளர்ச்சியாளர்களில் வட்சுமிபாய் மிகச் சிறந்த தைரியம் மிக்க தலைவி என லட்சமிபாயைப் பற்றி ரோஸ் குறிப்பிட்டுள்ளார்.
- குவாலியர் விரைவில் மீட்கப்பட்டது 1858இல் கானிங் இராணுவப் புரட்சி ஒடுக்கப்பட்டு அமைதி மீட்கப்பட்டதாக அறிவித்தார். தாந்தியா தோபே கைது செய்யப்பட்டு 1858 ஏப்ரல் மாதம் கொல்லப்பட்டார்.
- இரண்டாம் பகதூர்ஷா செப்டம்பர் 1857இல் கைது செய்யப்பட்டு குற்றவாளி என அறிவிக்கப்பட்டு ரங்கூனுக்கு (மியான்மர்) நாடு கடத்தப்பட்டார். அங்கேயே அவர் நவம்பர் 1862இல் தனது 87வது வயதில் மரணமடைந்தார். அவருடைய இறப்போடு முகலாய அரசவம்சம் முடிவுக்க வந்தது.

பெருங்கிளர்ச்சியின் விளைவுகள்

- அலகாபாத்தில் 1858 நவம்பர் இல் அரசு தர்பார் கூட்டப்பட்டது. விக்டோரியா ராணி வெளியிட்ட பேரறிக்கை தர்பார் மண்டபத்தில் கானிங்பிரபுவால் வாசிக்கப்பட்டது. அவரே இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலும் முதல் வைஸ்ராயுமாவார்.
- இதன் பின்னர் இந்தியா ஆங்கிலேய முடியரசின் பெயரால் அரசுச் செயலர் மூலம் ஆளப்படும். பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட இந்தியா கவுன்சில் எனும் அமைப்பு அரசு செயலருக்கு உதவி செய்யும். இதன் விளைவாகக் கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர் குழுவும், கட்டுப்பாட்டுக் குழுவும் ஒழிக்கப்பட்டன. ஆங்கிலேய முடியரசும் நாடாளுமன்றமும் அரசியல் அமைப்பின் அடிப்படையில் இந்தியாவை ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொள்வர். கிழக்கிந்தியக் கம்பெனியின் படை கலைக்கப்பட்டு இங்கிலாந்து அரசின் படைகளோடு இணைக்கப்படும்.
- ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்திய அரசர்களோடு மேற்கொண்ட உடன்படிக்கைகளை இப்பேரறிக்கை ஏற்றுக் கொண்டது. அவ்வரசர்களின் உரிமைகளையும் கண்ணியத்தையும் கௌரவத்தையும் மதிப்பதாகவும் உறுதியளித்தது. மேலும் இந்தியாவில் உள்ள ஆங்கிலேயருக்குச் விரிவுபடுத்தும் நோக்கம் இல்லை எனவும் அறிவித்தது.
- 1853ஆம் ஆண்டு சட்டமன்றம் ஐரோப்பியர்களை மட்டுமே உறுப்பினர்களாக கொண்டிருந்ததால் அவர்கள் இந்தியரின் கருத்துக்களைத் தெரிந்துகொள்ள அக்கறை இல்லாமல் இருந்ததே இச்சிக்கலுக்கு காரணம் என்று கூறிய அறிக்கை 1861இல் அமைக்கப்படும் சட்ட மன்றத்தில் இந்தியப் பிரதிநிதிகள் நியமிக்கப்படுவர் எனக் கூறியது.
- வாரிசு உரிமை இழப்புக் கொள்கையும் நாடிணைப்புக் கொள்கையும் கைவிடப்படும். ஆங்கிலேயரை நேரடியாகக் கொன்ற கிளர்ச்சியாளர்களைச் தவிர மீதமுள்ள கிளர்ச்சியாளர் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படும்.
- கல்வி, பொதுப்பணித் திட்டங்கள (சாலைகள் இருப்புப்பாதை, தந்தி, நீரிப்பாசனம்) ஆகியவை முடுக்கிவிடப்படும்.
- கடந்த காலம் மீண்டும் வரும் எனும் நம்பிகை மங்கியது. இந்தியச் சமூகத்தின் மரபுசார்ந்த கட்டமைப்பு உடையத் துவங்கியது. மேற்கத்தியமயமான ஆங்கிலக் கல்வி பயின்ற நடுத்தர வர்க்கம் தேசிய சிந்தனைகளோடு உருவானது.

இந்தியாவில் தேசியத்தின் எழுச்சி

- கி.பி (பொ.ஆ) 1915 இல் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பி 1919இல் இந்திய தேசிய இயக்கத்திற்கு அவர் தலைமையேற்றுதிலிருந்து இந்திய தேசியம் மிகப்பெரும் மக்கள் இயக்கமாக மாறியது.
- இந்தியாவில் நெசவாளர், பருத்தியிழை ஆடை தயாரிப்போர், தச்சர், கொல்லர், காலணிகள் தாயரிப்போர் ஆகியோர் வேலையற்றோர் ஆயினர். கச்சாப் பொருட்களைக் கொள்முதல் செய்தவற்கான இடமாக இந்தியா மாறியது. இங்கிலாந்தின் தொழிற்சாலைகளுக்குத் தேவையான பயிர்களான அவுரி மற்றும் ஏனையப் பயிர்களை உற்பத்தி செய்யும்படி இந்திய விவசாயிகள் வற்புறுத்தப்பட்டனர்.
- இம்மாற்றத்தினால் பல நூற்றாண்டுகளாக இந்தியாவின் மூலாதாரமாக விளங்கிய வேளாண்மை பாதிக்கப்பட்டு உணவுப் பற்றாக்குறைக்கு இட்டுச் சென்றது.
- 1859–60 இல் நடைபெற்ற இண்டிகோ கலகம் கம்பெனியின் அடக்குமறைக் கொள்கைக்கு எதிரான இந்திய விவசாயிகளின் ஒரு எதிர்வினையாகும். இப்புரட்சியின் மூலம் விவசாயிகள் பண்ணையார்களை வடக்கு வங்காளத்திலிருந்து வெளியேற்றினார்.
- **இண்டிகோ கிளர்ச்சி** 1859 ஆம் ஆண்டு தொடங்கியத. இந்தக் கிளர்ச்சி ஒரு வேலைநிறுத்த வடிவில் தொடங்கியது. வங்காளத்தின் நாடியா மாவட்டத்தின் ஒரு கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் இனி இண்டிகோ பயிரிடப்போவதில்லை என மறுத்து வேலைநிறுத்தத்தில் ஈடுப்பட்டனர். இந்த இயக்கம் இண்டிகோ பயிரிடப்பட்ட வங்காளத்தின் இதர மாவட்டங்களுக்கும் பரவியது. இந்தக் கிளர்ச்சி பின்னர் வன்முறையாக வெடித்தது.
- நீல் தர்ப்பன் (இண்டிகோவின் கண்ணாடி) என்ற தலைப்பில் ஒரு நாடகதை தீன பந்து மித்ரா எழுதினார்.
- **தக்கான கலவரங்கள்–1875–** 1875 ஆம் ஆண்டு மே மாதத்தில் தக்காணத்தில் வட்டிக்குப் பணம் அருகே உள்ள சூபா என்ற கிராமத்தில் முதன்முதலாக வெடித்ததாகப் பதிவாகியுள்ளது. பூனா மற்றும் அகமது நகர் ஆகிய பகுதிகளில் சுமார் 30 கிராமங்களில் இதே போன்ற கலவரங்கள் ஏற்பட்டதாகப் பதிவாகியுள்ளது.
- இதன் விளைவாக ஆங்கிலேயரின் ஆட்சியில் லட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் மாண்டனர். 1770–1900 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட் காலப்பகுதியில் பஞ்சத்தின் காரணமாக இருபத்தைந்து மில்லியன் மக்கள் உயிரிழந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- 1793இல் தொடங்கி 1900 வரையிலான காலப்பகுதியில் போர்களில் மரணமடைந்தோரின் எண்ணிக்கை ஐந்து மில்லியனாக இருக்க 1891 முதல் 1900 வரையிலான பத்தாண்டுகளில் பஞ்சத்தினால் மட்டுமே இந்தியாவில் 19 மில்லியன் மக்கள் உயிரிழிந்ததாக மெட்ராஸ் டைம்ஸ் பத்திரிக்கையின் ஆசிரியர் வில்லியம் டிக்பை குறிப்பிட்டுள்ளார்.
- 1866 இல் ஒரிசா பஞ்சத்தின்போது ஒன்றரை மில்லியன் மக்கள் பட்டினிக்குப் பலியான போது ஆங்கிலேயர் 200 மில்லியன் பவுண்ட் அரிசியை இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்தனர்.
- ஒரிசா பஞ்சத்தின் தூண்டுதலின் காணமாக தேசியவாதியான தாதாபாய் நெளரோஜி இந்தியாவின் வறுமை குறித்துத் தனது வாழ்நாள் முழுவதுமான ஆய்வைத் தொடங்கினார்.
- 1876–1878 காலப்பகுதியில் தொடர்ந்து இரண்டாண்டுகள் பருவமழைப் பொய்த்துப் போனதால் மதராஸ் மாகாணத்தில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது.
- ஒரிசா பஞ்சத்தின் போது பின்பற்றப்பட்ட தலையிடாக் கொள்கையையே பின்பற்றினார். மதராஸ் மாகாணத்தில் 3.5 மில்லியன் மக்கள் பஞ்சத்திற்குப் பலியானதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- 1815 இல் சிலோன் ஆளுநர் மதராஸ் மாகாண ஆளுநருக்கு எழுதிய கடிதத்தில் பெருந்தோட்டங்களில் வேலை செய்யக் கூலிகளை அனுப்பிவைக்கக் கேட்டுக் கொண்டார். இக்கடிதம் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைத்தார். 1833,1843 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சங்கள் அரசாங்கத்தின் தூண்டுதல் இல்லாமலேயே மக்களைப் புலம் பெயர்ந்து செல்லக் கட்டாயப்படுத்தின.
- 1843 இல் பிரிட்டிஸ் இந்தியாவில் அடிமைமுறை ஒழிக்கப்பட்டதால் பேரரசின் காலனிகளுக்கு குடிபெயரும் செயல்பாடுகள் ஊக்கம் பெற்றன.
- 1837 இல் தமிழ்நாட்டிலிருந்து குடிபெயர்ந்து இலங்கையில் காபித் தோட்டங்களில் வேலை செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 10,000.
- 1846 இல் 80,000 என மதிப்பிடப்பட்ட தமிழ் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1855 இல் 1,28,000 ஆனது. 1877 இல் ஏற்பட்ட பஞ்சத்தினால் இலங்கையில் ஏறத்தாழ 3,80,000 தமிழ் கூலித்தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தனர்.

- 1835 இல் இந்தியக் கவுன்சில் ஆங்கிலக் கல்விச் சட்டத்தை இயற்றியது. இந்தியாவில் அறிமுகம் செய்ய வேண்டிய ஆங்கிலக் கல்விமுறையை வடிவமைத்தவர் டி.பி. மெக்காலே ஆவார்.
- 1857 இல் பம்பாய், சென்னை, கல்கத்தா, ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன.
    - *டி.பி. மெக்காலே 1834 முதல் 1838 வரை கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக் குழுவில் முதல் சட்ட உறுப்பினராக அங்கம் வகித்தவர்.*
    - *1823இல் பொதுக்கல்விக்கான பொதுக்குழு உருவாக்கப்பட்டது. 1835 இல் அவர் தனது புகழ்பெற்ற **இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்** எனும் குறிப்புகளை வெளியிட்டார், இதில் ஆங்கில வழிக் கல்வியை வலியுறுத்தினார்.*

- 19 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற சீர்திருத்த இயக்கங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. **சீர்திருத்த இயக்கங்கள்**

ராஜா ராம் மோகன்ராய்	–	பிரம்ம சமாஜம் (1828)
ஆத்மராம் பாண்டுரங்	–	பிரார்த்தனை சமாஜம் (1867)
சையது அகமது கான்	–	அலிகார் இயக்கம்
தயானந்த சரஸ்வதி	–	ஆரிய சமாஜம் (1875)

2. **மீட்பு இயக்கங்கள்**

   ஆரிய சமாஜம், இராமகிருஷ்ண இயக்கம், தியோபந்த் இயக்கங்கள்.

3. புனேயில் ஜோதிபா பூலே, கேரளாவில் நாராயண குரு, அய்யன்காளி, தமிழ்நாட்டில் இராமலிங்க அடிகள், வைகுண்ட சுவாமிகள் பின்னர் அயோத்தி தாசர் ஆகியோரால் முன்னெடுக்கப்பட்ட சமூக இயக்கங்கள்.

- பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சீர்திருத்தவாதிகள் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு கற்றறிந்த மேலை நாட்டினர் முன்வைத்த சவால்களைப் எதிர்கொண்டு பதில் கூறினர். இச்சீர்திருத்தவாதிகளால் தூண்டப்பட்ட மீள் சிந்தனையின் விளைவாகவே இந்திய தேசிய உணர்வு உதயமானது.
    - கிழக்கிந்திய அமைப்பு –1866
    - பூனா சர்வஜனிக் சபை –1870
    - பம்பாய் மாகாண சங்கம் –1885

தேசியத்தின் எழுச்சிக்கு ஏனைய முக்கியக் காரணங்கள்

- 1857இன் பேரெழுச்சியே இந்திய தேசிய இயக்கத்தின் பிறந்த நாளாகும். 1857 சூன்–செப்டம்பர் மாதங்களில் ஆங்கிலப் படைகளால் டெல்லி முற்றுகையிடப்பட்டது குறித்து, பம்பாய் மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் எல்பின்ஸ்டன், அப்போதைய இந்தியாவின் எதிர்கால அரசப்பிரநிதி (1864) சர்ஜான் லாரன்சுக்கு எழுதியது

  "நண்பன் பகைவன் என்ற வேறுபாடின்றி முழுவீச்சிலான பழி வாங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொள்ளையடிப்பதைப் பொறுத்தமட்டில் நாம் உண்மையாகவே நாதிர்ஷாவை மிஞ்சிவிட்டோம்."

- ஆங்கிலேயர் இனப்பாகுபாட்டுக் கொள்கையைப் பின்பற்றினர். குடிமைப் பணிகள் தேர்வுகள் அறிமுகமானபோது வயது வரம்பு இருபத்தொன்று என நிர்ணயம் செய்யப்பட்டது. அத் தேர்வில் இந்தியர்கள் வெற்றிபெற்றதை தொடர்ந்து இந்தியர்கள் வெற்றி பெறுதவதற்கு வயது வரம்பு 19 ஆக குறைக்கப்பட்டது.
- அரசுக்கு எதிராக வெறுப்புணர்வைத் தூண்டும் முயற்சிகளை மேற்கொள்வோரை தண்டனைக்குள்ளாக்கும் இந்திய தண்டனைச் சட்டம் (1870) பிரிவு 124 அ, அடக்குமுறை ஒழுங்காற்றுச் சட்டமும், பத்திரிக்கைகளைத் தணிக்கைக்கு உட்படுத்திய பிராந்திய மொழிச் சட்டமும் (1878) எதிர்ப்புகளை தூண்டின.
- ரிப்பன் அரசப் பிரதிநிதியாக இருந்தபோது இல்பர்ட் மசோதாவின் மூலம் இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை விசாரிக்க அதிகாரம் பெற்றனர். ஆனால் ஐரோப்பியர் எதிர்ப்பால் இச்சட்டம் திருத்தப்பட்டது.
- ராஜாராம் மோகன்ராயின் வங்க மொழிப் பத்திரிக்கையான சம்வத் கௌமுதி (1821) பாரசீக மொழிப் பத்திரிக்கையான மிராத்–உல்–அக்பர் ஆகியவை மக்கள் நலன் சார்ந்த முக்கியப் பொது விஷயங்களை மக்களுக்குக் கற்றுக் கொடுப்பதில் முற்போக்காக பங்காற்றின.

  "தேசியத்தின் குறிக்கோளனது இந்தியக் சிந்தனையை, இந்திய குணநலன்களை, இந்திய உணர்வுகளை, இந்திய ஆற்றலை ,இந்தியாவின் உன்னதத்தை மீட்டெடுப்பதாகும். மேலும்

உலகைத் தடுமாறச் செய்யும் பிரச்சனைகளை இந்திய மனப்பாங்குடன் இந்திய நிலைப்பாட்டில் தீர்த்து வைப்பதாகும்" – **அரவிந்த கோஷ்**

இந்தியாவில் சங்கள் உருவாதல்

சென்னை வாசிகள் சங்கம்

- 1852 பிப்ரவரி 26 இல் சென்னைவாசிகள் சங்கம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது.
- சென்னையின் மிக முக்கிய வணிகரான கஜீலா லட்சுமிநரசு என்பவரே இவ்வமைப்பு உருவாவதற்கு உந்து சக்தியாய்த் திகழ்ந்தார்.
- 1852 டிசம்பரில் சமர்ப்பித்த மனுவில் ராயத்துவாரி, ஜமீன்தாரி முறைகள் வேளாண் வர்க்கத்தினரைக் சுட்டிக் காட்டியது.
- ஜமீன்தார்கள், கம்பெனியின் அதிகாரிகள் ஆகியோரின் அடக்குமுறை சார்ந்த தலையீட்டிலிருந்து விவசாயிகளை விடுவிக்கப் பண்டைய கிராமமுறை மீட்டுடெடுக்கப்பட வேண்டுமென இவ்வமைப்பு வற்புறுத்தியது. மானிய உதவித்திட்டத்தின் கீழ் சமயப்பரப்பு நிறுவனங்களின் கல்விக் கூடங்களுக்கு அரசின் நிதி மடைமாற்றம் செய்யப்படுவதும் இம்மனுவில் எதிர்க்கப்பட்டிருந்தது.
- வருவாய் அதிகாரிகளால் விவசாயிகள் சித்திரவதைப்படுத்தப்படுவதற்கு எதிராக இவ்வமைப்பு நடத்திய போராட்டத்தின்னால் சித்திரவதை ஆணையம் நிறுவப்பட்டது.
- சென்னைவாசிகள் சங்கத்தின் மனு மார்ச் 1853 இல் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. இந்தியச் சீர்திருத்தக் கழகத்தின் தலைவரான எச்.டி. செய்மோர் அக்டோபர் 1853 இல் சென்னை வந்தார். ஆனால் 1853 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி தொடா அனுமதி வழங்கியது.
- இந்தியாவில் கம்பெனியின் ஆட்சி ஒழிக்கப்பட வேண்டுமென்றகோரிக்கையைக் கொண்ட 14 ஆயிரம் நபர்களால் கையெழுத்திடப்பட்ட தனது இரண்டாவது மனுவை ஆங்கிலப் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தது.
- 1866 இல் லட்சுமிநரசு இயற்கை எய்தினார். 1881இல் இவ்வமைப்பு இல்லாமல் போயிற்று. (பத்தாம் வகுப்பு –1862 க்குப் பின் இவ்வமைப்பு இல்லாமல் போயிற்று)

சென்னை மகாஜன சங்கம்

- தென்னிந்தியாவில் தெளிவான தேசிய நோக்கங்களுடன் துவங்கப் பெற்ற தொடக்ககால அமைப்பு சென்னை மகாஜன சபையாகும்.
- மே, 1884 இல் சென்னை மகாஜன சங்கம் நிறுவப் பெற்றது. 1884 மே 16 இல் நடைபெற்ற தொடக்க விழாவில் பங்கேற்ற முக்கியப் பிரமுகர்கள் ஜி. சுப்ரமணியம், வீரராகவாச்சாரி, அனந்தா சார்லு, ரங்கையா, பாலாஜிராவ், சேலம் ராமசாமி ஆகியோராவர். இதன் செயலலளராக அனந்தா சார்லு பணியாற்றினார்.
- மாகாணத்தின் பல பகுதிகளில் வாழும் மக்களிடையே பல்வேறு பொதுப்பிரச்சனைகள் குறித்த ஒருமித்த கருத்தை உருவாக்கி அதை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்துவதே இதன் நோக்கம்.
- குடிமைப் பணிகளுக்கான தேர்வை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஒரே சமயத்தில் நடத்த வேண்டும், லண்டனிலுள்ள இந்தியக் கவுன்சிலை மூடுவது, வரிகளை குறைப்பது, இராணுவ குடியியல் நிர்வாகச் செலவுகளைக் குறைப்பது ஆகியன இவ்வமைப்பின் கோரிக்கைகளாகும்.
- சென்னைமகாஜன சபையை பம்பாயில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாட்டில் இந்திய தேசிய காங்கிரசோடு இணைத்தனர்.

இந்திய தேசிய காங்கிரஸ்

- 1875க்கும் 1885க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் ஆங்கிலேயரின் கொள்கைகளுக்கு எதிராகப் பல போராட்டங்கள் நடைபெற்றன.
- 1875 இல் இறக்குமதியாகும் பருத்தி இழைத் துணிகளின் மீது இறக்குமதி வரி விதிக்கப்பட வேண்டுமென ஜவுளி ஆலை உரிமையாளர்கள் இயக்கம் நடத்தினர்.
- 1877 இல் அரசுப் பணிகள் இந்தியமயமாக்கப்பட வேண்டுமென்றக் கோரிக்கை ஓங்கி ஒலித்தது.
- 1878 ஆம் ஆண்டு வட்டார மொழிப் பத்திரிகைச் சட்டத்திற்கு எதிராகப் போரட்டங்கள் நடைபெற்றன.
- இல்பர்ட் மசோதாவிற்கு ஆதரவாக 1883 இல் கிளர்ச்சிகள் நடைபெற்றன.

✍ ஆலன் ஆக்டேவியன் ஹியூம் எனும் பணி நிறைவு பெற்ற இந்தியக் குடிமைப் பணி அதிகாரி டிசம்பர் 1884 இல் , சென்னையில் பிரம்ம ஞான சபையின் கூட்டமொன்றிற்குத் தலைமை ஏற்றிருந்தார். இக்கூட்டத்தில் அகில இந்திய



அளவில் செயல்படும் ஒரு அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பாக விவாதிக்கப்படுகையில் இந்திய தேசிய காங்கிரசை உருவாக்குவது எனும் கருத்து உருவானது.

- இந்திய தேசிய காங்கிரஸ் 1885 டிசம்பர் 28 இல் பம்பாயில் உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பின் முதல் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். முதல் கூட்டத்தில் 72 பேர் கலந்துகொண்டனர். அதில் இரண்டு முஸ்லிம்கள் இருந்தனர்.
- கோரிக்கைமனு கொடுப்பது விண்ணப்பங்கள் அனுப்புவது போன்ற செயல்பாடுகளை மட்டும் காங்கிரஸ் மேற்கொண்ட போதும, தொடக்கத்திலிருந்தே சமூகத்தின் அனைத்துப் பிரிவினைரையும் தனது வரம்புக்குள் கொண்டுவரும் பணிகளை மேற்கொண்டது. இதுவே அகில இந்திய அளவில் மக்களைத் திரட்டும் தொடக்கமாய் ஆனது. இந்திய தேசிய காங்கிரசின் முக்கிய நோக்கங்களும் கோரிக்கைகளும்.
- **அரசியல் அமைப்பு–** அரசில் இந்தியப் பிரதிநிதிகள் இடம்பெற வேண்டுனெக் காங்கிரஸ் கோரியது.
- **பொருளாதாரம் –** நிலவரி குறைக்கப்பட வேண்டும், இறக்குமதி பொருள்களின் மீது அதிக வரிக்கு பரிந்துரைத்தது.
- **நிர்வாகம்–** குடிமைப்பணி தேர்வுகளை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஒரே நேரத்தில் நடத்த வேண்டும், மாகாண மற்றும் மத்திய அளவில் சட்ட மேலவைகளை உருவாக்கவது, இராணுவச் செலவை குறைப்பது, வனச்சட்டத்தை மறுபரிசீலனை செய்தல், காவல்துறை சீர்திருத்தங்கள்.
- **நீதித்துறை–** நீதி நிர்வாகமும் தனித்தனியே முற்றிலுமாகப் பிரிக்கப்பட வேண்டும்

தொடக்கால தேசியவாதிகளின் பங்களிப்பு (1885–1915)

- இந்திய தேசிய காங்கிரசை சேர்ந்த தொடக்க காலத் தலைவர்கள் சமூகத்தின் உயர்குடிப் பிரிவைச் சேர்ந்தோர் ஆவர். காங்கிரசின் இத்தலைவர்கள் அரசியல் சட்டம் அனுமதித்த வழிகளான மனுகொடுப்பது, மன்றாடுவது, விண்ணப்பம் செய்வது போன்ற முறைகளை மேற்கொண்டதால் ***மிதவாத தேசியவாதிகள்*** என்னும் புனைப் பெயரைப் பெற்றனர்.
- 1890களின் பிற்பகுதியிலிருந்து இந்திய தேசிய காங்கிரசுக்குள்ளே கருத்து வேறுபாடுகள் வளர்ந்தன. பிபின் சந்தர்பால், பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய் போன்ற அணுகு முறைகளுக்கு மாற்றாகத் தீவிரமான அணுகுமுறைகளைப் பரிந்துரைத்தனர். இவர்கள் ***தீவிர தேசியவாதிகள்*** *என்றழைக்கப்பட்டனர்.*
- 1897 இல் திலகர் ***சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன்*** என முழங்கிய போது அவர்களின் நோக்கம் தெளிவாகத் தெரிந்தது.
- 1905 இல் தொடங்கப்பட்ட சுதேசி இயக்கம் ஆங்கிலேய ஆட்சியை நேரடியாகக் எதிர்த்ததோடு, சுதேசித் தொழில்கள், தேசியக்கல்வி, சுயஉதவி இந்திய மொழிகளைப் பயன்படுத்துதல் ஆகிய கருத்துகளை ஊக்குவித்தது.
- தாதாபாய் நௌரோஜி ***இந்தியாவின் குரல்*** , ***ராஸ்த் கோப்தார்*** எனும் இரு பத்திரிகைகளைத் தொடங்கி அவற்றின் ஆசிரியாகவும் பணியாற்றினார்.
- சுரேந்திரநாத் பானர்ஜி ***பெங்காலி*** என்னும் செய்திப்பத்திரிகையின் ஆசிரியராகத் திகழ்ந்தார். இந்திய தேசிய காங்கிரஸ் மேற்கொண்ட முயற்சிகள் பற்றிய செய்திகளை இப்பத்திரிகைகளே மக்களுக்கு எடுத்துச் சென்றன.
- தேசிய இயக்கத்தில் மத்தியதர வகுப்பினரும் விவசாயகளும், கைவினைஞர்களும் தொழிலாளர்களும் மிக முக்கியமான பங்கினை வகிக்க முடியுமென பால கங்காதர திலகர் உறுதியாக நம்பினார்.
- இந்தியாவில் ஆங்கிலேயரின் ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராக நாடுதழுவிய எதிர்ப்புக்கு அவர் அழைப்பு விடுத்தார். 1897 சூலை 27 இல் திலகர் கைது செய்யப்பட்டு இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 124அ யின் கீழ் குற்றம் சாட்டப்பட்டார்.

நௌரோஜியும் அவர் முன்வைத்த சரண்டல் கோட்பாடும்

- *இந்திய தேசியத்தின் முதுபெரும் தலைவர்* என அறியப்படும் தாதாபாய் நௌரோஜி தொடக்கால தேசிய இயக்கத்தின் முக்கியத் தலைவர்களில் ஒருவராவர்.
- 1870களில் பம்பாய் மாநகராட்சிக் கழகத்திற்கும், நகரசபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் அவர் லண்டனில் ***இந்திய சங்கம்–1865, கிழக்கிந்தியக் கழகம் –1866*** எனும் அமைப்புகளை உருவாக்கினார். அவர் மூன்று முறை இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- அவர் எழுதிய ***வறுமையும் பிரிட்டனுக்கொவ்வாத இந்திய ஆட்சியும் (Poverty and Un-British Rule in India-1901)*** எனும் புத்தகமே இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு அவர் செய்த முக்கியப் பங்களிப்பாகும். இந்நூலில் அவர் ***செல்வச் சுரண்டல்*** எனும் கோட்பாட்டினை முன் வைத்தார்.
- 1835 முதல் 1872 முடிய ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 13 மில்லியன் புவுண்டுகள் மதிப்புடைய பொருட்கள் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் ஆனால் அந்த அளவிற்கானப் பணம் இந்திய வந்து சேரவில்லை

எனவும் கூறினார். தாயகக் கட்டணம் எனும் பெயரில் ஆண்டொன்றுக்கு 30 மில்லியன் பவுண்டுகள் நஷ்டம் ஏற்படுத்துவதாக நௌரோஜி உறுதிபடக் கூறினார்

தீவிர தேசியவாதத்தின் எழுச்சியும் சுதேசி இயக்கமும்

- பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளில் இந்திய தேசிய காங்கிரசுக்குள்ளே மிதவாத அரசியலுக்கு எதிராக வெளிப்படையான வெறுப்பு நிலவியது.
- இவர்கள் மிதவாத தேசியவாதிகளின் கவனமான அணுகுமுறை, ஆங்கிலேயரிடம் மன்றாடுதல், மனுச் சமர்ப்பித்தல் போன்ற அவர்களின் *இறைஞ்சுதல் கொள்கைகளை* கடுமையாக விமர்சித்தனர்.
- மகாராஷ்டிராவில் பாலகங்காதர திலகர், வங்காளத்தில் பிபின் சந்திரபால், பஞ்சாபில் லாலா லஜபதி ராய் ஆகியோரின் தலைமையில் இப்போர்க்குணம் வளர்ச்சி பெற்றது.
- ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கைக்கு முதன்மையான எடுத்துக்காட்டு வங்கப் பிரிவினையாகும். அது காலனிய எதிர்ப்பு, சுதேசி, தேசியம் வளர்வதற்கு வினையூக்கியாய் அமைந்தது.
- அந்நியப் பொருட்களைப் புறக்கணிப்பது, அரசால் நிர்வகிக்கப்படும் கல்வி நிலையங்களைப் புறக்கணிப்பது ஆகியன சுதேசி இயக்கத்தின் ஆக்கபூர்வமானத் திட்டங்களாக இருந்தன.
- 1905–1911 காந்தியடிகளின் சகாப்தத்திற்கு முந்தைய இந்திய தேசிய இயக்கத்தின் மிக முக்கியக் கட்டமாகும்.
- இக்காலப்பகுதிகளில் முதன் முதலாக உயர்குடியினர் முழுமுயற்சி மேற்கொண்டு சாமானிய மக்களிடம் பேசி அவர்களையும் அரசியலில் இணைந்து கொள்ள அழைத்தனர். மேலும் இந்தியாவின் பல பகுதிகளில் வட்டார மொழிப் பத்திரிக்கைகளின் தேசியத்தன்மை மிகத் தெளிவாகவே புலப்பட்டது.
- தமிழ்நாட்டில் சுதேசமித்ரன், மகாராஷ்டராவில் கேசரி, வங்காளத்தில் யுகந்தர் ஆகிய பத்திரிக்கைகளின் பங்களிப்பு ஒரு சில எடுத்துக்காட்டுகளாகும்.
- சுதேசி இயக்கம் மக்களிடையே பெரும் ஆதரவைப்பெற்ற நிலையில், தேசிய இயக்க நடவடிக்கைகளை, அவை எத்தகையதாக இருந்தாலும் அவற்றை நசுக்கும் பொருட்டு ஆங்கில அரசு,
  - பொதுக்கூட்டங்கள் சட்டம் (1907),
  - வெடி மருந்துச் சட்டம் (1908),
  - செய்தித்தாள் சட்டம், தூண்டுதல் குற்றச் சட்டம் (1908),
  - இந்தியப் பத்திரிகைச் சட்டம் (1910), எனபல அடக்குமுறைச் சட்டங்களை இயற்றியது.

வங்கப் பிரிவினை

- 1899 ஜனவரி 6 இல் புதிய தலைமை ஆளுநராகவும் இந்தியாவின் அரசப் பிரதிநிதியாகவும் கர்சன் பிரபு பணி நியமனம் செய்யப்பட்டார்.
- 1899 இல் கல்கத்தா மாநகராட்சிக் குழுவில் அங்கம் வகித்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்தார்.
- 1904 இல் இயற்றப்பட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி கல்கத்தா பல்கலைக்கழகச் சட்டத்தின்படி கல்கத்தா பல்கலைக்கழகம் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டது.
- 1904 இல் இந்தியச் செய்திப் பத்திரிகைகளின் தேசியவாதத் தன்மையைக் குறைப்பதற்காக அலுவலக ரகசியச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது.
- இறுதியாக வங்காளத்தை பிரிக்க 1905 சூலை 19 இல் ஆணை பிறப்பித்தார். இப்பிரிவினை இந்தியா முழுவதும் பரவலான எதிர்ப்புக்கு இட்டுச் சென்று இந்திய தேசிய இயக்கத்தில் ஒரு புதிய கட்டத்தைத் தொடங்கி வைத்தது.
- ஒரு நிர்வாக பிரிவு எனும் பொருளில் வங்காள மாகாணம் உண்மையிலேயே மேலாண்மை செய்ய இயலாத வகையில் பெரிதாக இருந்தது.
- 1860 ஆம் ஆண்டு முதலாக விவாதங்கள் நடைபெற்று வந்தன. மார்ச் 1890 இல் பிரிவினைக்கானத் திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது.
- 1903 இல் தன்னுடைய இந்தியாவின் பிரதேச மறுவிநியோகம் தொடர்பான குறிப்புகளில் ஒரு திட்டத்தை கர்சன் தீட்டியிருந்தார். அதுவே பின்னர் திருத்தம் செய்யப்பட்டு ரிஸ்லி அறிக்கை என்ற பெயரில் வெளியிடப்பட்டது.
- வங்காளம் இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட வேண்டும். புதிய கிழக்கு வங்காளமும் அசாமும் சிட்டகாங், டாக்கா, திப்பேராவிலுள்ள ராஜஷாசி மலையின் சில பகுதிகள், அசாம் மாகாணம் ஆகியவற்றை உள்ளடக்கியதாய் இருக்கும்.

✍ ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக வங்காளத்தில் நடைபெறும் அரசியல் நடவடிக்கைகளை அடக்கி இந்து–முஸ்லீம் மக்களிடையே பிரிவினையை உருவாக்குவது என்பதே கர்சனுடைய நோக்கமாகும்

✍ பாகீரதி ஆறு இயற்கையாகவே வங்காளத்தைப் பிரிப்பதாக அமைந்திருந்தது. கிழக்கு வங்காளத்தில் முஸ்லீம்களும் மேற்கு வங்காளத்தில் இந்துக்களும் பெரும்பான்மையாக இருந்தனர்.

✍ முஸ்லிம் மக்கள் ஒரு போதும் அனுபவித்திராத ஓர் ஒற்றுமையைப் புதிய மாகாணமான கிழக்கு வங்காளத்தில் அனுபவிப்பார்கள் என பிப்ரவரி 1904 இல் டாக்காவில் கர்சன், முஸ்லிம்களுக்கு உறுதியளித்தார்.

பிரிவினை எதிர்ப்பு இயக்கம்

✍ டிசம்பர் 1903இல் வங்கப்பிரிவினை அறிவிக்கப்பட்டதில் இருந்தே தீவிர தேசியவாதிகள், மிதவாத தேசியவாதிகள் ஆகிய இருதரப்பினரும் அதை விமர்சனம் செய்தனர். பரவலான எதிர்ப்புகளுக்கிடையே 1905 சூலை 19 இல் வங்கப் பிரிவினை அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

✍ வங்கப்பிரிவினையின் விளைவாக ஆங்கிலப் பொருட்களை புறக்கணிப்பது. நீண்ட விவாதத்திற்குப் பின்னர் இந்திய தேசிய காங்கிரசின் மிதவாத தேசியத் தலைமை இதனை ஏற்றுக்கொண்டது.

✍ 1905 சூலை 17 இல் கல்கத்தாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் எதிர்பை மக்களிடையே விரிவுபடுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. அதே கூட்டத்தில் ஆங்கிலப்பொருட்களையும் நிறுவனங்களையும் புறக்கணிக்க சுரேந்திரநாத் பானர்ஜி அறைகூவல் விடுத்தார்.

✍ ஆகஸ்டு 7 இல் கல்கத்தா நகர அரங்கில் நடைபெற்ற மற்றொரு கூட்டத்தில் சுதேசி இயக்கம் முறையாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

✍ வங்காளம் முழுமையிலும் நகரங்களிலும் கிராமங்களிலும் ஆயிரக் கணக்கில் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பெற்றன. மத விழாக்களான துர்காபூஜை போன்றவற்றை புறக்கணிப்புப் பற்றிய வேண்டுகேள் விடுப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டன.

✍ அதிகாரபூர்வமாக வங்காளம் பிரிக்கப்பட்ட நாளான 1905 அக்டோபர் 16 துக்கதினமாக கடைபிடிக்கப்பட் வேண்டுமென அறிவிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கில் மக்கள் கங்கையில் நீராடி வந்தே மாதரம் பாடலைப் பாடிக்கொண்டு வீதிகளில் ஊர்வலமாகச் சென்றனர்.

புறக்கணித்தலும், வங்காளத்தில் சுதேசி இயக்கமும் (1905–1911)

✍ சென்னையைச் சேர்ந்த தேசியவாதியான ஜி. சுப்பிரமணியம் சுதேசி இயக்கத்தின் குறித்து ***தேசிய வாழ்வின் அனைத்துத் தளங்களிலும் தங்களின் சார்பு நிலைக்கு எதிரான புரட்சி*** எனச் சுருக்கமாக விளக்கினார்.

✍ விடுதலைப் போராட்டத்தின் போது சுதேசி இயக்கம் என்ற எண்ணம் முதன்முதலாக 1905 இல் ஒரு சில காங்கிரஸ் தலைவர்களாலும், பின்னர் 1920 களில் மகாத்மா காந்தியடிகளின் தலைமையிலும் ஒரு தத்துவமானது.

- ***சுதேசி*** என்பதன் பொருள் ***ஒருவரது சொந்தநாடு*** என்பதாகும். இத்தத்துவத்தின் தோற்றமானது 1872 இல் பூனாவில் மகாதேவ் கோவிந்த ரானடே தனது தொடர் சொற்பொழிவுகளின் மூலம் இச்சிந்தனையைப் பிரபலப்படுத்தினார். ரானடேயின் கருத்துப்படி ஒருவரது சொந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு அப்பொருட்களின் பயன்பாடு குறைவான மனநிறைவைக் கொடுத்த போதிலும் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.
- ***1920*** களில் காந்தியடிகள் இதை அனைத்து இந்தியர்கள் தாங்கள் பிறந்த நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமைகளோடு இணைத்துச் சுதேசி சிந்தனைக்குப் புதிய பொருளைக் கொடுத்தார்.
- தனிச்சிறப்புடையயவர்களில் ஒருவரான ரவீந்தரநாத் தாகூர் தனது எழுத்துக்கள் மூலம் இக்கருத்துகளைப் பிரபலமடையச் செய்தார். சுய உதவி (ஆத்ம சக்தி) எனும் ஆக்கத் திட்டத்தினை அவர் கோடிட்டுக் காட்டினார். தாகூர் சுய பொருளாதார வளர்ச்சிக்கு அழைப்பு விடுத்தார். கல்வியானது தாய்மொழியில் வழங்கப்பட வேண்டுமென வற்புறுத்தினார். சுயஉதவி (ஆத்ம சக்தி) எனும் செய்தியை மக்களிடம் பரப்புவதற்கு மேளாக்கள் எனும் திருவிழாக்களைப் பயன்படுத்த அவர் அழைப்பு விடுத்தார். இதன் விளைவாக வங்காளத்தில் சுதேசி விற்பனை நிலையங்கள் பெருகின.
- வட்டடார மொழியில் கல்வி எனும் கருத்து சுதேசி இயக்கத்திற்கு வெகு முன்னரே 1902 இல் சதீஷ் சந்திராவால் விடிவெள்ளிக் கழகம் நிறுவப்பட்ட போதே உருவாகி விட்டது.
- 1905 நவம்பர் 5 இல் விடிவெள்ளிக் கழகத்தின் முன்னெடுப்பில் கல்விக்கான தேசிய கழகம் உருவாக்கப்பட்டது.
- ஆகஸ்ட் 1906 இல் வங்காள தேசியக் கல்லூரியும் பள்ளியும் நிறுவப்பட்டன. அடிமை நிறுவனங்களிலிருந்து வெளியே வரும்படி சதிஷ் சந்திரா மாணவர்கட்கு ஒரு உணர்ச்சிகரமான வேண்டுகோள் விடுத்தார்.
- பெருவாரியான மக்களை ஒன்று திரட்ட மேற்கொள்ளப்பட்ட மற்றொரு வெற்றிகரமான முறை சமிதிகள் (தொண்டர் படைகள்) எனும் அமைப்புகள் உருவாக்கப்பட்டமையாகும்.
- வங்கப் பிரிவினையை ரத்து செய்வதற்கான அறிகுறிகள் தென்படாத நிலையில் 1906 லிருந்து சுதேசி இயக்கம் முக்கிய மாற்றம் பெற்றது. பெருமபாலான தலைவர்கள் இவ்வியக்கத்தைப் பயன்படுத்தி நாடு முழுவதும் அரசியல் சுதந்திரம் அல்லது சுயராஜ்ஜியம் எனும் கருத்தை பரப்ப வேண்டுமெனக் கருதினர்.
- அரவிந்தகோஷ், பிபின் சந்திரபால் ஆகியோரின் வழிகாட்டுதல்படி சுதேசி நிகழ்ச்சி நிரலில் பின்வருவன இணைத்துக் கொள்ளப்பட்டன. அவை அந்நியப் பொருட்களைப் புறக்கணிப்பது, அரசுப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் புறக்கணிப்பது, நீதிமன்றங்களைப் புறக்கணித்தல், பட்டங்களைத் துறந்து விடுதல், அரசுப் பணிகளைக் கைவிடுதல், ஆங்கிலேயரின் அடக்குமுறை தாங்க இயலாத அளவிற்குச் சென்றால் ஆயுதப் போராட்டத்தைக் கைக்கொள்வது.

தீவிர தேசியவாதம்

- பாலகங்காதர திலகர், பிபின் சந்திரபால், லாலா லஜபதி ராய் (அடிக்கடி லால் –பால்–பால் எனக் குறிப்பிடப்படும் முப்பெரும் தலைவர்கள்) ஆகியோரின் இயக்க நடவடிக்கைகளின் விளைவாக மகராஷ்டிரம், வங்காளம், பஞ்சாப் ஆகிய மூன்றும் சுதேசி இயக்கக் காலப்பகுதியில் தீவிர தேசியவாதத்தின் மையப்புள்ளிகளாகத் திகழ்ந்தன.
- 1905 இல் ஒரு சமயம் அரவிந்த கோஷிடம் ஒருவர் எவ்வாறு நாட்டுப்பற்று உடையவராக ஆவது எனக் கேட்டார். சுவரில் தெங்கிய இந்திய வரைப்படத்தைச் சுட்டிக்காட்டிய அரவிந்தர், *நீ அந்த வரைப்படத்தைப் பார்க்கிறாயா அது ஒரு வரைபடமல்ல மாறாக பாரத மாதாவின் உருவப்படம் அதனுடைய நகரங்களும் மலைகளும் ஆறுகளும் காடுகளும் அவளுடைய குழந்தைகளே அவளுடைய பெரிதும் சிறியதுமான நரம்புகள் பாரதத்தை வாழ்கின்ற தாயாக நினைத்து கவனம் செலுத்தி ஒன்பது மடங்கு அதிக பக்தியுடன் அவளை வழிபடு* என பதிலுரைத்தார்.
- தீவிர தேசியவாதத்தலைவர்களின் பொதுவான குறிக்கோள்களில் ஒன்று சுயராஜ்ஜியம் அல்லது சுயாட்சி என்பதாகும். ஆனால் சுயராஜ்ஜியத்தின் பொருள் குறித்து தலைவர்கள் வேறுபட்டனர். திலகருக்கு சுயராஜ்ஜியம் என்பது நிர்வாகத்தின்மீதான இந்தியர்களின் கட்டுப்பாடு மட்டுமே தவிர இங்கிலாந்துடனான உறவுகள் அனைத்தையம துண்டித்துக் கொள்வதில்லை.
- பிபின் சந்திரபாலின் கருத்துப்படி சுயராஜ்ஜியம் என்பது அந்நியர் ஆட்சியிலிருந்து முற்றிலுமாக விடுதலையடைதல் என்பதாகும்.
- 1908 முதல் தீவிர தேசியவாதம் சரியத் தொடங்கியது. 1907 இல் ஏற்பட்ட சூரத்பிளவு அதன் வீழ்ச்சிக்கான மற்றுமொரு காரணமாகும்.

சூரத் பிளவு

- ✍ 1906 இல் மிண்டோ பிரவு இந்திய அரசப்பிரதிநிதியாகப் பணியமர்த்தப்பட்டதிலிருந்து மிதவாத தேசியவாதிகளுக்கும் தீவிர தேசியவாதிகளுக்கும் இடையில் நிலவிய கருத்து வேற்றுமை மேலும் தீவிரமடைந்தது.
- ✍ இந்நிலையில் 1906 இல் கல்கத்தா மாநாட்டில் மிதவாத தேசியவாதிகளின் கோரிகையை ஏற்று தாதாபாய் நௌரோஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால் பிளவு தவிர்க்கப்பட்டது. பெரோஸ்ஷா மேத்தாவின் தலைமையிலான பல மிதவாத தேசியவாதிகள் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டனர்.
- ✍ சுதேசி புறக்கணிப்பு, தேசியக் கல்வி, சுயாட்சி ஆகியவை தொடர்பான நான்கு தீர்மானங்களைத் தீவிர தேசியவாதிகள் ஒருவாறு நிறைவேற்றினர்.
- ✍ காங்கிரசின் அடுத்த மாநாடு தீவிர தேசியவாதிகளின் கோட்டை எனக் கருதப்பட்ட பூனாவில் நடைபெறத் திட்டமிடப்பட்டது. கல்கத்தா மாநாட்டு முடிவுகளால் அச்சம் கொண்டிருந்த மிதவாத தேசியவாதிகள் மாநாடு நடைபெறுமிடத்தைச் சூரத் நகருக்கு மாற்றினர்.
- ✍ காங்கிரசின் அடுத்த தலைவர் பொறுப்புக்கு மிதவாத தேசியவாதிகளின் வேட்பாளரான ராஷ்பிகாரி கோஷ் என்பாருக்கு எதிராகத் தீவிர தேசிய வாதிகள் லாலா லஜபதி ராயின் பெயரை முன்மொழிந்தனர். இயக்கத்தில் பிளவு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக லாலா லஜபதி ர ராய் போட்டியிட மறுத்தார்.
- ✍ 1906 இல் கல்கத்தா மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட நான்கு தீர்மானங்களைப் பின்பற்றுவதா இல்லைய என்ற கேள்வியை ஒட்டி நிலைமை கொதி நிலையை எட்டியது.
- ✍ பெரோஷா மேத்தாவின் குழு இந்த தீர்மனங்களை நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கப்பட வேண்டுமெனக் கோரியது. பெரோஸ்ஷாவின் இத்தகைய திட்டத்தை எதிர்கொள்ளத் தீவிர தேசிய வாதிகள் ராஷ் பிகாரி கோஷ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதை எதிர்க்க முடிவு செய்தனர். மாநாடு குழப்பத்தில் முடிந்தது.
- ✍ 1885 இல் உருவான காங்கிரஸ் இப்போது மிதவாத தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகளென இரு குழுக்களாகப் பிரிந்தது. சூரத்பிளவுக்கு பின் உருவான காங்கிரஸ் முன்பிருந்ததைக் காட்டிலும் ஆங்கிலேயரிடம் அதிக விசுவாசத்துடன் நடந்து கொண்டது. தீவிர தேசியவாதிகள் இல்லாத புதிய காங்கிரஸ் ***மேத்தா காங்கிரஸ்*** என அழைக்கப்பட்டது.
- ✍ 1908 இல் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் மிதவாத தேசிய வாதிகள் மட்டுமே கலந்து கொண்டனர்.

புரட்சிகர தேசியவாதம்

- ✍ 1908 இல் தீவிர தேசியவாதம் சரிவுற்று புரட்சிகர செயல்பாடுகள் மேலெழுந்தன.
- ✍ 1870 களில் விவேகானந்தர் விளக்கியவாறு எஃகினாலான உடலையும் நரம்புகளையும் வளர்ப்பதற்காக பல்வேறு இடங்கல் அக்காரா எனப்படும் உடற்பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டன.
- ✍ பங்கிம் சந்திர சட்டர்ஜியின் ஆனந்மத் (ஆனந்த மடம்) எனும் நாவலும் குறிப்பிடதக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்நாவல் வங்காளத்துப் புரட்சிகர தேசியவாதிகளால் பரவலாகப் படிக்கச் பெற்றது. அந்நாவலின் ஒரு பகுதியான வந்தே மாதரம் பாடல் சுதேசி இயக்கத்தின் கீதமாயிற்று.

அலிப்பூர் குண்டுவெடிப்பு வழக்கு

- ✍ வங்காளத்தில் 1902 இல் பல ரகசிய சங்கங்கள் நிறுவப்பட்டதிலிருந்தே புரட்சிகர தேசியவாதத்தின் கதை தொடங்குகிறது. அவைகளுள் ஜதிந்தரநாத் பானர்ஜி, அரவிந்த கோஷின் சகோதரரான பரீந்தர்குமார் கோஷ் ஆகியோரால் கல்கத்தாவில் நிறுவப்பெற்ற அனுசீலன் சமிதி மிகவும் குறிப்பிடதக்க ஒன்றாகும்.
- ✍ புலின் பிகாரி தாஸ் என்பவரின் முயற்சியினால் டாக்கா அனுசீலன் சமிதி 1906 இல் உருவானது. இதன் தொடர்ச்சியாக புரட்சிகர வார இதழான ***யுகாந்தர்*** தொடங்கப்பெற்றது. கல்கத்தா அனுசீலன் சமிதி விரைவில் தன்னுடைய செயல்பாடுகளைத் துவங்கியது. இது நிதி திரட்டுவதற்காக ஆகஸ்ட் 1906 இல் சங்பூரில் முதல் சுதேசிக் கொள்கையை நடத்தியது.
- ✍ 1906 ஆம் ஆண்டில் ஹேம்சந்திர கனுங்கோ இராணுவப் பயிற்சி பெறுவதற்காக பாரிஸ் சென்றார். 1908 நாடு திரும்பிய அவர் மணிக்தலா எனுமிடத்தில் ஒரு பண்ணை வீட்டில் ஒரு மதச்சார்புப் பள்ளியோடு குண்டுகள் தயாரிப்பதற்கான ஒரு தொழிறுகூடத்தையும் நிறுவினார்.
- ✍ சுதேசி போராட்டக்காரர்களை கொடூரமாக நடத்திய டக்ளஸ் கிங்ஸ்போர்டு எனும் ஆங்கில அதிகாரியை கொல்வதற்கான திட்டமும் அங்கு தீட்டப்பட்டது. கொலை செய்யும் பொறுப்பு இளம்வயது புரட்சிவாதிகளான 18 வயது நிரமபிய குதிராம் போஸ், 19 வயதான பிரஃபுல்லா சாக்கி ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

- 1908 ஏப்ரல் 30 இல் அவர்கள் தவறுதலாக ஒரு சாரட் வண்டியின் மீது குண்டை வீச கிங்ஸ் போர்டுக்கு பதிலாக வேறு இரண்டு ஆங்கிலப் பெண்கள் அதில் கொல்லப்பட்டனர்.
- பிரஃபுல்லா சாக்கி தற்கொலை செய்து கொள்ள, குதிரம் போஸ் கைது செய்யப்பட்டு பின்னர் கொலைக்குற்றத்திற்காகத் தூக்கிலிடப்பட்டார்.
- அரவிந்த் கோஷ், அவரின் சகோதரர் பரீந்தர் குமார் கோஷ் அவர்களுடன் மேலும் முப்பந்தைந்து நபர்கள் கைது செய்யப்பட்டனர். சித்தரஞ்சன் தாஸ் இவ்வழக்கில் புரட்சிகர தேசியவாதிகளுக்காக வாதாடினார். இது அலிப்பூர் குண்டுவெடிப்பு வழக்கு எனப்படுகிறது.
- ஒருவருடம் நடைபெற்ற விசாரணையின் முடிவில் அரவிந்த கோஷ் விடுதலை செய்யப்பட்டார். பரிந்தர் கோஷ், உல்லாஸ்கர்தத் ஆகியோருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் அது ஆயுட்கால நாடு கடத்தல் தண்டனையாக மாற்றப்பட்டது.
- அரவிந்த் கோஷ் விடுதலைக்குப் பின்னர் ஒரு ஆன்மீகப் பாதையை தேர்ந்தெடுத்து தனது இடத்தைப் பாண்டிச்சேரிக்கு மாற்றிக் கொண்டு 1950 இல் தான் இயற்கை எய்தும் வரை அங்கேய இருந்தார். வங்காளத்தில் புரட்சிகர இயக்கம் படிப்படியாக வீழ்ச்சியடையக் காரணமாயிற்று.

ஆங்கிலேயரின் அடக்குமுறை

- டிசம்பர் 1908 இல் மிண்டோ–மார்லி அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள் அறிவிக்கப்பட்டன. இதன் நடவடிக்கைகள் பிரிவினைகளை ஏற்படுத்துவதாக அமைந்தன. அது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை நிறுவனப்படுத்தி இந்து, முஸ்லீம்களைப் பிரித்தது. மேலும் சில அடக்கு முறைச் சட்டங்களையும் காலனிய அரசு அறிமுகம் செய்தது.
- முஸ்லீம்களுக்கு தனித் தொகுதிகள் வழங்கப்பட்டது.
- 1908 செய்தித்தாள் சட்டம் (குற்றம் செய்யத் தூண்டுதல்) இச்சட்டம் ஆட்சேபனைக்குரிய வகையிலான செய்திகளை வெளியிடும் அச்சகங்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்யும் அதிகாரத்தை நீதிபதிகளுக்கு வழங்கியது.
- 1910 இந்தியப் பத்திரிக்கைச் சட்டம் அச்சக உரிமையாளர்களும் வெளியீட்டாளர்களும் பிணைத்தொகை கட்டுவதைக் கட்டாயமாக்கியது.
- இந்தியக் குற்றவியல் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தம் விசாரணையின்றி முடிவுகளை மேற்கொள்ள அனுமதித்தது. மேலும் பொது அமைதிக்கு ஆபத்தான அமைப்புகளைத் தடை செய்தது. அடக்குமுறை நடவடிக்கைகள் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டாலும் இந்திய தேசிய இயக்க கட்சியிலிருந்து புரட்சிகர தேசியவாத செயல்பாடுகளின் வசீகரம் மறையவேயில்லை. செயல்பாடுகளின் மையம் வங்காளத்திலிருந்து பஞ்சாபிற்கும் உத்திரப்பிரதேசத்திற்கும் நகர்ந்தது.

தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம்

- தமிழ்நாட்டிலும் அதிலும் குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்ற சுதேசி இயக்கம் பெரும் கவனத்தையும் ஆதரவையும் பெற்றது.
- மெரினாக் கடற்கரையில் சுதேசி கூட்டங்கள் நடைபெறுவது வழக்கமாகக் காணக்கூடிய காட்சியாயிற்று. இவ்வாறான கூட்டங்கள் நடைபெறும். மற்றொரு இடம் மூர்மார்க்கெட் வளாகமாகும்.
- பொது இடங்களில் ஐரோப்பியர்கள் மாணவர்களால் ***வந்தே மாதரம்*** எனும் முழக்கத்துடன் வாழ்த்தப்பட்டனர்.
- 1907 இல் சென்னைக்கு வருகை தந்த பிபின் சந்திர பால் சென்னைக் கடற்கரையில் ஆற்றிய உரைகள் பார்வையாளர்களிடையே உத்வேகத்தை ஏற்படுத்தியது.

வ.உ.சி யும் சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியும்

- 1906 இல் வ.உ. சிதம்பரம் ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராகச் சுதேசி கப்பல் கம்பெனி ஒன்றை ஏற்படுத்தும் கருத்தை வெளிப்படுத்திய போது தமிழ்நாட்டின் சுதேசி இயக்கம் தேசத்தின் கவனத்தைப் பெற்றது.
- 1906 இல் வ.உ.சி சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி (Swadeshi Steam Navigation Company- SSNC) என்னும் கூட்டுப்பங்கு நிறுவனத்தைப் பதிவு செய்தார். மொத்த முதலீடான ரூபாய் 10 லட்சம் 40,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டு ஒரு பங்கு ரூ.25 வீதம் இந்தியர்கள், இலங்கையைச் சேர்ந்தவர்கள். ஆகிய நாடுகளைச் சேர்ந்தோருக்கு மட்டும் விற்பனை செய்யப்பட்டது.
- வ.உ.சி. S.S. கலியா, S.S. லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கினார். வ.உ.சியின் சுதேசி இயக்க முன்னெடுப்பு தேசியத் தலைவர்களால் பாராட்டப் பெற்றது.

- சுதேசி கப்பல் நிறுவனத்தின் வெற்றி குறித்து லோகமான்ய திலகர் தன்னுடைய கேசரி, மராட்டா பத்திரிக்கைகளில் எழுதினார். அரவிந்த் கோஷிம் சுதேசி முயற்சிகளைப் பாராட்டி கம்பெனியின் பங்குகள் விற்பனையாவதற்கு உதவினார். பாண்டித்துரையும், ஹாஜி பக்கீர் முகமதுவும் பெரிய பங்குதாரர்களில் இருவராவர்.
- சூரத் மாநாட்டில் பங்கேற்ற பின்னர் ஊர் திரும்பிய வ.உ.சி ஓர் அரசியல் அமைப்பைத் தொடங்குவதற்கானப் பணிகளைச் செய்யத் திட்டமிட்டார்.
- 1907 இல் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் வ.உ.சியும், சுப்ரமனிய சிவாவும் தூத்துக்குடிக் கடற்கரையில் தினந்தோறும் பொதுக் கூட்டங்களில் பேசினர்.
- 1908 இல் கோரல்மில் தொழிலாளர்களின் படுமோசமான வேலை, வாழ்க்கைச் சூழல்கள் வ.உ.சி, சிவா ஆகியோரின் கவனத்தைக் கவர்ந்தது. தொடர்ந்து வந்த சிலநாட்களில் தலைவர்கள் இருவரும் தொழிலாளர்களிடம் உரையாற்றினர்.
- 1908 மார்ச் 8 இல் பருத்தி நூற்பாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்தியாவில் திட்டமிட்டு நடத்தப்பட்ட தொடக்ககால வேலை நிறுத்தங்களில் இதுவும் ஒன்றாகும்.
- வேலை நிறுத்தத்தை ஒடுக்க நினைத்த அரசு ஆலை நிர்வாகத்திற்கு ஆதரவாக இருந்தது. தொழிலாளர்களுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் தலைவர்கள் தூத்துக்குடி நகரினுள் கூட்டங்கள் நடத்தத் தடை விதிக்கப்பட்டது. முடிவில் ஆலை முதலாளிகள் தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடிவு செய்தனர்.
- தொழிலாளர்களின் வெற்றி வங்காளத்து தீவிர தேசியவாதிகளிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியது. வங்காளத்துச் செய்திப் பத்திரிகைகள் இவ்வெற்றியை வாழ்த்தின. இவ்வெற்றி ***கற்றறிந்த மக்களுக்கும் பொது மக்களுக்குமிடையே ஒரு இணைப்பை உருவாக்கியுள்ளது. அதுவே சுயராஜ்ஜியத்தை நோக்கி எடுத்து வைக்கப்பட்ட உன்னதமான முதல் அடியாகும். இந்தியத் தொழிலாளியின் ஒவ்வொரு வெற்றியும் நாட்டிற்குக் கிடைத்த வெற்றி*** என அரவிந்த கோஷின் வந்தே மாதரம் புகழாரம் சூட்டியது.

சுப்ரமணிய பாரதி : கவிஞர் மற்றும் தேசியவாதி

- செய்திப் பத்திரிகையை பயன்படுத்தி தேசியவாதச் செய்திகளை விரிந்துபட்ட பார்வையாளர்களிடையே பரப்புரை செய்த தலைவர்களுள் முதன்மையானவர் ஜி. சுப்ரமணியம். அவர் வேறு ஐந்து நபர்களுடன் இணைந்து தி இந்து மற்றும் தமிழில் வெளியிடப்பட்ட முதல் தினசரி நாளிதழான சுதேசமித்ரன் எனும் பத்திரிக்கைகளை நிறுவினார்.
- 1906 இல் பர்சால் காங்கிரஸ் மாநாட்டின் போது ஆங்கிலேயர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை விமர்சித்து அவர் ஒரு புத்தகத்தை வெளியிட்டார். சுதேசமித்திரன் தேசியவாதிகளின் செயல்பாடுகள் குறித்து குறிப்பாக வ.உ.சி தூத்துக்குடியில் ஆற்றிய உரைகள் பற்றி விரிவான செய்திகளை வெளியிட்டது.
- 1904 இல் சுப்ரமணிய பாரதி சுதேசமித்திரன் பத்திரிகையின் துணையாசிரியராகப் பணியமர்த்தப்பட்டார். பாரதி சக்ரவர்த்தினி எனும் மாத இதழின் ஆசிரியராகவும் பணியாற்றினார். அது பெண்களின் மேம்பாட்டிற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட பத்திரிகையாகும்.
- அயர்லாந்து நாட்டுப் பெண்மணியும் விவேகானந்தரின் சீடருமான சகோதரி நிவேதிதாவை அவர் 1905 இல் சந்தித்தார். குருமணி (ஆசிரியர்) என அவரால் குறிப்பிடப்பட்ட அப்பெண்மணி அவரின் தேசியவாதச் சிந்தனைகளுக்கு ஊக்கமளித்தார்.
- சட்டத்திற்கு உட்பட்ட முறைகளைப் பின்பற்ற விரும்பிய மிதவாதி தேசியவாதிகளை ***யாசிப்பவர்கள்*** என தீவிர தேசியவாதிகள் ஏளனம் செய்தனர்.
- 1907 இல் நடைபெற்ற சூரத் காங்கிரஸ் மாநாட்டிற்குப் பிறகு திலகர் மீது அவர் கொண்டிருந்த ஆர்வமும் பற்றும் மேலும் பெருகியது. திலகரின் Tenets of New party எனும் நூலை பாரதி தமிழில் மொழியாக்கம் செய்தார்.
- மேலும் 1907 இல் *சூரத் சென்று வந்த பயணம் சென்னை மாகாணத் தீவிர தேசியவாதிகள் குறித்து* எனும் சிறு புத்தகமொன்றை *இந்தியா* என்ற வார இதழ் தீவிர தேசியவாதிகளின் குரலாக மாறியது.

வ.உ.சி , சுப்ரமணிய சிவா கைதும் சிறை வாசமும்

- ஆறு மாத காலச் சிறை தண்டனைக்கு பின்னர் பிபின் சந்திர பால் 1907 மார்ச் 9 இல் விடுதலை செய்யப்பட்டார். அந்நாளை தமிழ்நாட்டுச் சுதேசி இயக்கத் தலைவர்க ***சுதேசி தினமாக*** திருநெல்வேலியில் தடையை மீறி கொண்டாட முடிவெடுத்தனர்.

- எனவே , வ.உ.சி, சுப்ரமணிய சிவா, பத்மாநாபர் ஆகியோர் 1908 மார்ச் 12 இல் தேச துரோகக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டனர்.
- எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் கடையடைப்பு நடத்தப்பெற்றது. திருநெல்வேலியில் நகரசபைக் கட்டடமும் காவல் நிலையமும் தீ வைக்கப்பட்டன. முக்கியமாக நூற்பாலைத் தொழிலாளர்கள் பெருவாரியான எண்ணிக்கையில் ஆலையை விட்டு வெளியே வந்தனர். கூட்டத்தாரோடு ஏற்பட்ட சில மோதல்களுக்குப் பின்னர் காவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் நால்வர் கொல்லப்பட்டனர்.
- கைது செய்யப்பட வேண்டியவர்களில் ஜி. சுப்பிரமணியர், சுரேந்திரநாத் ஆர்யா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். சிறைத்தண்டனையைத் தவிர்ப்பதற்காக சுப்பிரமணிய பாரதி பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்த பாண்டிச்சேரிக்கு இடம் பெயர்ந்தார்.
- பாரதியின் முன்னுதாரணத்தை அரவிந்தகோஷ், வி.வி. சுப்பிரமணியனார் போன்ற தேசியவாதிகளும் பின்பற்றினர்.
- பேரரசருக்கு எதிரான வ.உ.சி , சுப்ரமணிய சிவா வழக்கில் நவம்பர் 4, 1908 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.
- 1908 சூலை 7 இல் வ.உசி யும் சுப்ரமணிய சிவாவும் குற்றம் செய்தனர் என அறிவிக்கப்பட்டு தேச துரோகக் குற்றத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்டனர். அரசுக்கு எதிராகப் பேசிய குற்றத்திற்காகச் சிவாவுக்கு 10 ஆண்டுகள் நாடு கடத்துதல் தண்டனையும் அவருக்கு உடந்தையாக இருந்ததற்காக வ.உ.சிக்கு ஆயுள் தண்டனையும் (20 ஆண்டுகள்) விதிக்கப் பெற்றது. வ.உ.சி அரசை எதிர்த்துப் பேசிய குற்றத்திற்காக மேலும் ஒரு ஆயுன் தண்டனை விதிக்கப்பெற்றார்.

ஆஷ் படுகொலை

- 1904 இல் நீலகண்ட பிரமச்சாரியும் வேறு சிலரும் பாரத மாதா சங்கம் எனும் ரகசிய அமைப்பை உருவாக்கினர். ஆங்கில அதிகாரியை கொள்வதன் மூலம் மக்களிடையே நாட்டுப்பற்று உணர்வைத் தூண்டுவதே இவ்வமைப்பின் நோக்கமாகும். செங்கோட்டையை சேர்ந்த வாஞ்சிநாதன் இவ்வமைப்பால் உள்ளுணர்வு தூண்டப்பட்டார்.
- திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் ராபர்ட் ஆஷ், சூன் 1911 இல் மணியாச்சி ரயில் நிலையத்தில் வாஞ்சிநாதனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1880 இல் திருவாங்கூர் அரசின் பகுதியில்பிறந்த வாஞ்சிநாதன் அவ்வரசின் ஆட்சியிலிருந்த புனலூரில் வனத்துறையில் காவலராகப் பணியாற்றினார்.
- ***பாரதா மாதா*** என்ற புரட்சிகர தேசியவாதக் குழுவில் அவரும் ஒரு உறுப்பினராவார். ஐரோப்பிய அதிகாரிகளைக் கொல்வதன் மூலம் இந்தியர்களைப் புரட்சிக்குத் தூண்டுவதே இவ்வமைப்பின் குறிக்கோளாகும். திட்டத்தின் ஒரு பகுதியாக வாஞ்சிநாதனுக்கு கைத்துப்பாக்கியைப் பயன்படுத்தும் பயிற்சியை வ.வே. சுப்ரமணியம் பாண்டிச்சேரியில் வழங்கினார்.
- மணியாச்சி ரயில் நிலையத்தில் ஆஷை சுட்ட பின்னர் வாஞ்சிநாதன் அதே துப்பாக்கியால் தன்னைச் சுட்டுக் கொண்டார்.
- விசாரணையின் போது ஆஷ் கொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களுடன் பாண்டிச்சேரியில் தலைமறைவாய் இருக்கும் வ.வே. சுப்ரமணியரும் ஏனையோரும் நெருக்கமாக இருந்து இணைந்து செயல்பட்டுள்ளனர் என்பதை ஆங்கில அரசு மெய்ப்பித்தது.

தன்னாட்சி இயக்கம்

- 1916 இல் மேற்கத்திய இந்தியாவில் திலகர் தலைமையிலும் தென்னிந்தியாவில் டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார் தலைமையிலம் தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கம் தொடங்கப்பட்டது.
- 1916 இல் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் இடையே கையெழுத்தான லக்னோ ஒப்பந்தம் இந்திய தேசியத்துக்கு மேலும் வலிமை சேர்த்தது.
- அயர்லாந்தவரான டாக்டர் அன்னிபெசண்ட், பிரிட்டனில் இருந்தபோது அயர்லாந்தின் தன்னாட்சி இயக்கம், ஃபேபியன் சோஷலிசாவாதிகள்,குடும்பக்கட்டுப்பாட்டு இயக்கங்கள் ஆகியவற்றில் தீவிரப் பங்காற்றினார். பிரம்மஞான சபையில் (தியாசாபிகல் சொசைட்டி) உறுப்பினராக அன்னிபெசண்ட் அம்மையார் இந்தியாவுக்கு 1893 இல் வந்தார்.
- பனாஸில் (வாரணாசியில்) மத்திய இந்துக் கல்லூரியை அவர் நிறுவினார். பின்னர் இந்தக் கல்லூரி 1916 ஆம் ஆண்டு பண்டித மதன்மோகன் மாளவியா மூலமாக பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகமாக மேம்படுத்தப்பட்டது.
- 1907 இல் எச்.எஸ். ஆல்காட் அவர்களின் மறைவுக்குப் பிறகு பிரம்மஞான சபையின் உலக தலைவராக பெசண்ட் அம்மையார் பதவி வகித்தார். அதன் தலைமையகம் சென்னையின் அடையாறில் செயல்பட்டது.

- ஜம்னாதாஸ், துவாரகாதாஸ், ஜார்ஜ் அருண்டேல், ஷங்கர்லால் பன்கர், இந்துலால் யக்னிக், சி.பி. இராமசாமி, பி.பி. வாடியா ஆகியோர் பெசண்ட் அம்மையாரின் ஆதரவாளர்கள்.
- 1910 ஆம் ஆண்டு பத்திரிகைச் சட்டத்தின்படி அன்னிபெசண்ட் பிணைத் தொகையாக பெருமளவு பணத்தைச் செலுத்தும்படி அறிவுறுத்தப்பட்டார்.
- 1914 இல் ***தி காமன்வீல்*** என்ற வாரப்பத்திரிக்கையை அவர் தொடங்கினார்.
- 1915 இல் How India Wrought for Freedom என்ற தலைப்பிலான புத்தகத்தைப் பதிப்பித்தார். இந்தியா: ஒரு தேசம் என்னும் புத்தகத்தையும் வெளியிட்டார்.
- *அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதைவிட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது* – அன்னிபெசன்ட்
- *இங்கிலாந்தின் கடினமான தருணம் இந்தியாவின் வாய்ப்புக்கான தருணம்* என்று அவர் முழக்கமிட்டார். பிரிட்டன் நாடாளுமன்றத்தில் இந்தியக் கட்சி ஒன்றை ஏற்படுத்த முயன்று தோல்வி கண்டார்.
- *1917* இல் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு அன்னிபெசன்ட் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். தன்னாட்சி இயக்கத்தில் உறப்பினராக இருந்த பி.பி. வாடியா போன்றோர் தொழிற்சங்கங்களை உருவாக்கி தொழிலாளர் வர்க்கத்தை அணிதிரட்டுவதில் முக்கியப் பங்கு வகித்தனர்.
- 1915 சூலை 14 இல் ***நியூ இந்தியா*** என்ற தினசரி பத்திரிக்கையை வெளியிட்டார். தன்னாட்சி குறித்த தனது கொள்கையினை அவர் செப்டம்பர் மாதம் வெளிபடுத்தினார். *தன்னாட்சி என்பது நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சபைகள் மூலமாகவும் அவர்கள் சபைக்கு கடமைப்பட்டவர்களாவும் விளங்க நடைபெறும் ஆட்சியாகும்.*
- இந்தியாவில் தன்னர்ட்சி இயக்கத்தை துவக்கப்போவதாக அவர் 1915 செப்டம்பர் 28 இல் முறைப்படி அறிவித்தார். மற்றொரு தனி இயக்கம் தொடங்கப்படுவதை மிதவாத தேசியவாதிகள் விரும்பவில்லை. தனது இயக்கம் வெற்றிபெற காங்கிரஸ் கட்சியின் அனுமதி தேவை என்பதை அவரும் அறிந்திருந்தார்.
- ஒன்று திலகர் தலைமையிலும் மற்றொன்று பெசண்ட் அம்மையார் தலைமையிலும் என 1916 இல் நாட்டில் இரண்டு தன்னாட்சி இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வியக்கத்தின் இரண்டு குறிகோள்கள்– பிரிடிஷ் ஆட்சியில் இந்தியாவில் தன்னாட்சியை ஏற்படுத்துவது மற்றும் தாய்நாடு பற்றிய பெருமையுணர்வை இந்திய மக்களிடையே ஏற்படுத்துவது ஆகியன அந்த இரண்டு குறிக்கோள்களாகும்.

திலகரின் தன்னாட்சி இயக்கம்

- ஏப்ரல் 1916 இல் பெல்காமில் நடந்த பம்பாய் மாகாண மாநாட்டில் இது நிறுவப்பட்டது. பம்பாய் நகரம் உட்பட மகாராஷ்டரா, கர்நாடகா, மத்திய மாகாணங்கள், பெரார் ஆகிய பகுதிகளில் திலகரின் தன்னாட்சி இயக்கம் செயல்படும். திலகரின் இயக்கத்துக்கு ஆறு கிளைகள் ஒதுக்கப்பட்டன. அன்னிபெசண்ட் அம்மையாரின் இயக்கத்துக்கு இந்தியாவின் எஞ்சிய அனைத்துப் பகுதிகளும் ஒதுக்கப்பட்டன.
- மகாராஷ்டிரம் மற்றும் கர்நாடகத்தில் பிரபலமடைந்திருந்த அவரது இயக்கம், ஏப்ரல் 1917 இல் 14 ஆயிரம் உறுப்பினர்களில் இருந்து 1918 இன் தொடக்கத்தில் 32 ஆயிரம் உறுப்பினர்களாக அதிகரித்தது.
- தன்னாட்சி பற்றிய கொள்கைகளை பரப்பியதற்காக 1916 சூலை 23 இல் தமது அறுபதாவது நாளில் திலகர் கைது செய்யப்பட்டார்.

பெசண்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கம்

- செப்டம்பர் 1916 ஆம் ஆண்டு மதராஸில் தன்னாட்சி இயக்கத்தை அன்னிபெசண்ட் தொடங்கினார். கான்பூர், அலாகபாத், பனராஸ் (வாரணாசி), மதுரா, கள்ளிக்கோட்டை, அகமதுநகர் ஆகிய இடங்களில் இந்த இயக்கத்தின் கிளைகள் அமைந்தன.
- *இந்தியாவின் விசுவாசத்தின் விலை இந்தியாவின் விடுதலை* என்று அவர் அறிவித்தார். ஜவஹர்லால் நேரு, முகம்மது அலி ஜின்னா, பி. சக்கரவர்த்தி, ஜிதேந்திரலால் பானர்ஜி, சத்யமூர்த்தி , கலிக்குஸ்மான் ஆகியோர் இந்த இயக்கத்தில் உறுப்பினர்களாகத் தங்களை இணைத்துக்கொண்டனர். அடக்குமுறைகளைப் எதிர்த்து சர். எஸ். சுப்ரமணியம் அரசப் பட்டத்தை துறந்தார்.
- தலைவர்கள் விடுதலையாகாவிட்டால் சட்டமறுப்பு இயக்கத்தை அரசுக்கு எதிராகப் பயன்படுத்துவது குறித்து 1917 சூலை 28 இல் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் திலகர் வலியுறுத்தினார்.

- தன்னாட்சி நிறுவனங்கள் மற்றும் பொறுப்பான அரசு என்பதே இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் குறிக்கோள் என்று புதிய வெளியுறவு அமைச்சர் மாண்டேகு 1917 ஆகஸ்டு 20 இல் அறிவித்தார்.
- 1917 இல் இந்திய தேசிய காங்கிரஸ் கல்கத்தா மாநாட்டிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ***Indian unrest –*** என்ற புத்தகத்தின் ஆசிரியர் வேலண்டைன் சிரோலிக்கு எதிராக தாம் தொடுத்த அவதூறு வழக்கை நடத்துவதற்காக செப்டம்பர் 1918 இல் திலகர் பிரிட்டனுக்குச் சென்றது மற்றும் உத்தேசிக்கப்பட்ட மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களை பெசண்ட் ஏற்றுக்கொண்ட பிறகு தன்னாட்சி இயக்கம் வீழ்ச்சி கண்டது.
- பிரிட்டிஷ் அரசின் கீழ் இந்தியா தன்னாட்சி பெறுவது அல்லது கனடா, ஆஸ்திலேலியா ஆகியவற்றின் வழியில் தன்னாட்சிப் பகுதித் (டொமினியன்) தகுதியைப் பெறுவது ஆகியவற்றுக்காகப் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரைவைக் கோருவதற்காக இந்திய காமன்வெல்த் லீக் என்று தன்னாட்சி இயக்கம் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பின்னர் 1929 இல் இந்திய லீக் என்று வி.கே. கிருஷ்ணமேனன் மாற்றம் செய்தார்.
- பம்பாய் மாநாட்டில் தீவிர தேசியத்தன்மை கொண்டவர்களைத் திரும் சேர்த்துக்கொள்ள ஒப்புக்கொள்ளப்பட்டு அதனைத்தொடர்ந்து காங்கிரசின் அமைப்பு விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- காங்கிரஸ், முஸ்லீம் லீக், தன்னாட்சி இயக்கம் ஆகியன தங்களுடைய வருட மாநாடுகளை லக்னோவில் நடத்தியதால் 1916 ஆம் ஆண்டு முக்கியத்துவம் பெற்றது. காங்கிரஸ் தலைவர் அம்பிகா சரண் மஜீம்தார் தீவிர தேசியத்தன்மை கொண்டவர்களை வரவேற்றார். *பத்தாண்டு கால வலி தந்த பிரிவுக்குப் பிறகு ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கிப் பிரிந்தால் அனைவருக்கும் தாழ்வு என்பதை இந்திய தேசிய காங்கிரஸ் உணர்ந்து, சகோதரர்கள் தங்களுடைய சகோதரர்களைக் கடைசியில் சந்தித்துவிட்டனர்.*
- லக்னோ ஒப்பந்தம் அல்லது காங்கிரஸ்–லீக் ஒப்பந்தம் என்று பிரபலமாக அழைக்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்ஐ ஒன்றிணைப்பதில் அன்னிபெசண்ட் அம்மையாரும் திலகரும், ஜின்னாவும் முக்கியப் பங்காற்றினார்கள்.
- லக்னோ ஒப்பந்தத்தின் தலைமைச் சிற்பியான ஜின்னாவை ***இந்து–முஸ்லீம் ஒற்றுமையின் தூதர்*** என்று சரோஜினி அம்மையார் அழைத்தார்.

காதர் இயக்கம்

- சோஹன் சிங் பக்னாவைத் தலைவராகக் கொண்டு பசிபிக் பிரதேச இந்துஸ்தான் அமைப்பை சான்பிரான்சிஸ்கோவில் வசித்துவந்த லாலா ஹர்தயாள் 1913 இல் நிறுவினார். இந்த அமைப்பு காதர் கட்சி என்றழைக்கப்பட்டது. உருது மொழியில் காதர் என்றால் கிளர்ச்சி என்று பொருள். சீக்கியர்களே இக்கட்சியில் அதிகளவில் இடம்பெற்றிருந்தனர்.
- 1913 ஆம் ஆண்டு நவம்பரில் சான்பிரான்சிஸ்கோவிலிருந்து வெளியானது.

காலனி ஆதிக்க அரசின் அடக்குமறை நடவடிக்கைகள்

- தேசியவாதிகளின் நடவடிக்கைகள் பற்றியத் தகவல்களை இரகசியமாகச் சேகரிப்பதற்காக 1903 இல் கர்சன் பிரபு குற்ற உளவுத்துறையை (சி.ஐ.டி) உருவாக்கினார்.
- பத்திரிக்கைகள் (குற்றங்களுக்குத் தூண்டும்) சட்டம் –1908
- வெடிபொருட்கள் தடுப்பு சட்டம் –1908
- இந்திய பத்திரிக்கை சட்டம் –1910
- தேசத்துரோக கூட்டங்கள் தடுப்புச் சட்டம் –1911
- வெளிநாட்டினர் அவசரச் சட்டம் –1914

இந்தியப் பாதுகாப்புக்கான சட்டம்

- முதல் உலகப் போரின்போது தேசியவாத மற்றும் புரட்சிகர நடடிவக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அரவசர கிரிமினல் சட்டமாக இயற்றப்பட்ட இந்தச் சட்டம், இந்தியப் பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் சட்டம் என்று குறிப்பிடப்பட்டது.

கிலாபத் இயக்கம்

- முதல் உலகப்போரின் முடிவில் (1918) கலீபாவின் அதிகாரத்தைத் துண்டாடுவது இசுலாம் மீதான பெரும் தாக்குதலாகக் கருதப்பட்டது.உலகம் முழுவதும் உள்ள முஸ்லீம்கள் கலீபா மீது அனுதாபம் கொண்டவர்கள் அதனால் இந்நடவடிக்கையை எதிர்க்க முடிவு செய்தனர்.

- மௌலானா முகமது அலி, மௌலான சௌஹத் அலி என்ற முஸ்லிம் சகோதரர்கள் கிலாபத் இயக்கத்தைத் தொடங்கினார். ஆட்டோமன் அரசை ஆதரிப்பதையும் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்ப்பதையும் நோக்கங்களாகக் கொண்டு இந்த இயக்கம் தோன்றியது.
- மௌலானா அபுல் கலாம் ஆசாத், எம்.ஏ. அன்சாரி, ஷேக் ஷௌகத் அலி சித்திக், சையது அதுல்ல ஷா புகாரி ஆகிய பல முஸ்லிம் தலைவர்கள் இந்த இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.
- மார்ச் 1920 இல் பாரிசில் முகமது அலி கிலாபத் இயக்கத்தின் கோரிக்கைகளைத் தூதாண்மை அதிகாரிகளிடையே சமர்ப்பித்தார்.
    - *தென்னாப்பிரிக்காவில் ஆற்றிய மனிதாபிமானப் பணிகளுக்காக காந்தியடிகளுக்கு கெய்சர்–இ–ஹிந்த் தங்கப்பதக்கம் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.*
    - *1906 இல் ஆம்புலன்ஸ் படையில் செயல்பட்டதாக அவருக்கு ஜீலு போர் வெள்ளிப்பதக்கம் வழங்கப்பட்டது.*
    - *கிலாபத் இயக்கத்தின் தொடர்பில் ஒத்துழையாமை இயக்கத்தைக் காந்தியடிகள் தொடங்கியபோது மேற்கண்ட அனைத்துப் பதக்கங்களையும் திரும்ப ஒப்படைத்தார்.*
- இந்து–முஸ்லிம் ஒற்றுமையைப் பலப்படுத்த இதனை ஒரு வாய்ப்பாகக் காந்தியடிகள் கருதி ஆதரவு தெரிவித்தார்.
- 1919 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தில்லியில் நடைபெற்ற அகில இந்தியா கிலாபத் இயக்க மாநாட்டிற்கு அவர் தலைமையேற்றார். அல்லாஹீ அக்பர், வந்தே மாதரம், இந்து–முஸ்லீம் வாழ்க ஆகிய மூன்று தேசிய முழக்கங்களை முன்மொழிந்த சௌகத் அலியின் யோசனையை காந்தியடிகள் ஆதரித்தார்.
- 1920 சூன் 9 இல் அலகாபத்தில் கூடிய கிலாபத் குழுவின் கூட்டம் காந்தியடிகளின் அகிம்சை மற்றும் ஒத்துழையாமை இயக்கத்தை ஏற்றுக்கெண்டது. ஒத்துழையாமை இயக்கம் 1920 ஆகஸ்டு முதல் நாள் தொடங்கியது.

தொழிலாளர் இயக்கத்தின் எழுச்சி

- பம்பாயின் சோரப்ஜி ஷபூர்ஜி, மற்றும் என்.எம். லோக்காண்டே, வங்காளத்தின் சசிபாத பானர்ஜி ஆகியோர் தொழிற்சாலை பணியாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகத் தங்களின் குரல்களை எழுப்பினர்.
- 1917 ஆம் ஆண்டின் போல்ஷ்விக் புரட்சியின் வெற்றி இந்திய தொழிலாளர்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது.
- 1918 ஆம் ஆண்டில் இந்தியாவில் முதன்முறையாக மதராசில் பி.பி. வாடியா அவர்களால் மதராஸ் தொழில் சங்கம் நிறுவப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இந்தியாவில் பல்வேறு சங்கங்கள் தொடங்கப்பட்டன.
- 1920 அக்டோபர் 30 (பத்தாம் வகுப்பு –அக்டோபர் 31) இல் 1,40,854 உறுப்பினர்களைக் கொண்ட 64 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பம்பாயில் சந்தித்து லாலா லஜபதி ராயின் தலைமையில் அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரசை (ஏ.ஐ.டி.யு.சி) நிறுவினர்.
- 1919–20 இல் 107 ஆக இருந்த பதிவு பெற்ற தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 1946–47 இல் 1833 ஆக அதிகரித்தது.

காந்தி தேசிய தலைவராக உருவெடுத்து மக்களை ஒன்றினைத்தல்:

- மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி 1869 அக்டோபர் 2 இல் கடற்கரையோர நகரான போர்பந்தரில் பிறந்தார். அவரது தந்தையார் காபா காந்தி, போர்பந்தரின் திவானாகவும் பொறுப்பு வகித்தவர்.
- தீவிர வைணவ பக்தையான அவரது தாயார் புத்லிபாயின் தாக்கம் இளையவரான காந்தியின் நடவடிக்கைகளில் பெரிதும் இருந்தது.
- காந்தியடிகள் சட்டம் பயில்வதற்காக 1888 இல் இங்கிலாந்துக்குக் கடல்பயணம் மேற்கொண்டார். 1891 ஆம் ஆண்டு சூன் மாதம் வழக்கறிஞர் பட்டம்பெற்ற பின்பு அவர் பிரிட்டிஷாரின் நீதி மற்றும் நியாய முறையில் நம்பிக்கை கொண்டவராக இந்தியாவக்கு திரும்பினார்.
- இந்தியா திரும்பியவுடன் பம்பாயில் வழக்குரைஞராக பணியாற்ற காந்தியடிகள் மேற்கண்ட முயற்சி தோல்வியடைந்தது.
- அந்த நேரத்தில் தென்னாப்பிரிக்காவில் இருந்த ஒரு குஜராத் நிறுவனம் ஒன்று சட்ட உரிமை வழக்குகள் தொடர்பாக காந்தியடிகளின் சேவையை நாடியது. இந்த வாய்ப்பை ஏற்றுக்கொண்ட காந்தியடிகள் 1893 ஏப்ரல் மாதம் தென்னாப்பிரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.
- டர்பனில் இருந்து பிரிட்டோரியாவுக்கு ரயில்பயணம் மேற்கொண்டபோது பீட்டமாரிட்ஸ்பர்க் ரயில் நிலையத்தில் முதல்வகுப்புப் பெட்டியிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார். கூலிகளைப் போன்றுதான் இந்தியர்கள்நடத்தப்பட்டனர். ஆனால் காந்தியடிகள் இதை எதிர்த்துப்போராட உறுதி பூண்டார்.

- காந்தியடிகள் டிரான்ஸ்வாலில் உள்ள இந்தியர்களின் கூட்டத்தை கூட்டி அவர்கள் தங்களுடைய குறைகளை உறுதியுடன் வெளிப்படுத்தி களைவதற்காக ஒரு அமைப்பை ஏற்படுத்தவேண்டும் என்று அறிவுறுத்தினார்.
- டிரான்ஸ்வாலில் வசித்த இந்தியர்கள் தலைவாரியாக 3 பவுண்டுகளை செலுத்த வேண்டியிருந்தது. அவர்களுக்கென குறிக்கப்பட்ட பகுதிகளை விடுத்து வேறு இடங்களில் அவர்கள் நிலத்தை சொந்தமாக வைத்துக்கொள்ள முடியாத நிலை இருந்தது.
- இரவு 9 மணிக்குப் பிறகு அனுமதியின்றி வெளியிடங்களுக்கு செல்லமுடியாத நிலையும் இருந்தது. இத்தகைய நியாயமற்ற சட்டங்களை எதிர்த்து அவர் போராட்டத்தைத் தொடங்கினார்.
- காந்தியடிகளுக்கு டால்ஸ்டாய், ஜான்ரஸ்கின் ஆகியோரின் எழுத்துக்களுடன் அறிமுகம் கிடைத்தது. *கடவுளின் அரசாங்கம் உன்னில் உள்ளது* என்ற டால்ஸ்டாயின் புத்தகம், *அண்டு திஸ் லாஸ்ட்* என்ற ஜான் ரஸ்கின் எழுதிய புத்தகம் தாரோவின் சட்டமறுப்பு ஆகிய புத்தகங்களால் காந்தியடிகள் பெரும் தாக்கத்திற்குள்ளானார்.
- ரஸ்கின் அவர்களால் ஈர்க்கப்பட்ட காந்தியடிகள் ஃபீனிக்ஸ் குடியிருப்பையும் (1905) டால்ஸ்டாய் பண்ணையையும் (1910) நிறுவினார்.
- 1915 ஆம் ஆண்டு அவர் இந்தியா திரும்பியபோது தென்னாப்பிரிக்காவின் இனவாத அரசு விதித்த சமத்துவமில்லாத நிலைமைகளுக்கு எதிரான காந்தியடிகளின் போராட்டங்கள் ஒரு சாதனையாக இருந்தது.
- கோபால கிருஷ்ண கோகலேவின் செயல்பாடுகள் மற்றும் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அவரைத் தனது அரசியல் குருவாக அடையாளம் கண்டார். அவரின் அழைப்பின் பேரிலேயே இந்தியா அவர் வந்தார்.

காந்தியடிகளின் சத்தியாகிரக சோதனைகள்

1. **சாம்பரன் இயக்கம் (1917)**

- பீகாரின் சம்பரான் மாவட்டத்தில் ***தீன் காதியா*** முறை பின்பற்றப்பட்டது. இந்த சுரண்டல் முறையில் இந்திய விவசாயிகள் தங்களின் நிலத்தின் இருபதில் மூன்று பங்கு பகுதியில் அவுரிச் செடிய பயிரிட வேண்டும்என ஐரோப்பிய பண்ணையாளர்கள் அவர்களைக் கட்டாயப்படுத்தினர். இந்த சிரமங்களை சந்திதித்த ராஜ்குமார் சுக்லா, சம்பரானுக்கு வருகை புரியுமாறு காந்தியடிகளை கேட்டுக்கொண்டார்.
- காந்தியடிகள் *நாடு முதன்முதலாக ஒத்துழையாமை இயக்கச் செயல்முறைப் பாடத்தைக் கற்றுக்கொண்டதாக* காந்தியடிகள் தெரிவித்தார்.
- இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராக பின்னாளில் பொறுப்பேற்ற ராஜேந்திர பிரசாத்தும் வழக்குரைஞராக தொழில் செய்த பிரஜ்கிஷோர் பிரசாத்தும் காந்தியடிகளுக்கு துணையாக செயல்பட்டனர்.
- அதன் பின் துணை நிலை ஆளுநர் ஒரு குழுவை உருவாக்கினார். அக்குழுவில் காந்தியடிகையையும் ஒரு உறுப்பினராகக் கொண்டு விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு ஐரோப்பிய வர்த்தகர்களின் கட்டுப்பாட்டிலிருந்த கருநீலச்சாய விவசாயிகள் மீட்கப்பட்டனர். ***தீன் காதியா*** முறை இரத்துப் செய்யப்பட்டது.

2. **ஆலையத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் மற்றும் அகமதபாத்தில் காந்தியடிகளின் உண்ணாவிரதம் (1918)**

- அகமதாபாத் நகர மையத்தில் பணியாளர்களுக்காக மக்களை ஒன்றுதிரட்டும் பணி காத்திருந்தது. துணி ஆலைப் பணியாளர்களுக்கும், ஆலை முதலாளிகளுக்கும் இடையே பிரச்சனை நிலவியது.
- 35 சதவீதம் ஊதிய உயர்வு வேண்டும் என்று கோரி வேலைநிறுத்தத்தில் ஈடுபடுமாறு காந்தியடிகள் அவர்களுக்கு அறிவுரை வழங்கினார். தொழிலாளர்களுக்கு ஊக்கம் தரும் வகையில் அவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கினார். இறுதியில் தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்க வேண்டிய நிலைக்கு ஆலை முதலாளிகளை நிர்ப்பந்தித்தது.

3. **கேதா போராட்டம் (1918)**

- கேதா மாவட்ட விவசாயிகள் பருவமழை பொய்ததன் காரணமாகச் சிரமத்தைச் சந்தித்தனர். 1918 இல் நில வருவாய் வசூலை ரத்துசெய்யுமாறு காலனி ஆட்சி நிர்வாகத்திடம் அவர்கள் கோரினர். அரசின் பஞ்சகால விதியின்படி, பயிர்சாகுபடி சராசரியாக 25 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தால் பயிரிடுவோர் முழு நிலவரி ரத்துக்கு தகுதிபெறுவர். ஆனால் நிர்வாகத்தினர் இவ்விதியை அமல்படுத்த மறுத்தவிட்டு முழுமையாக பணத்தை செலுத்துமாறு துன்புறுத்தினர்.
- பாதிக்கப்பட்ட விவசாயிகள் காந்தியடிகள் உறுப்பினராக அங்கம் வகித்த இந்தியப் பணியாளர் சங்கத்தை உதவிக்கு கோரி அணுகினர்.

- ஏழை விவசாயிகள் சார்பாக விதல்பாய் பட்டேலுடன் இணைந்து தலையிட்ட காந்தியடிகள் பணம் செலுத்துவதை நிறுத்திவிட்டு சாகும்வரை போராட்டம் நடத்துமாறு அறிவுறுத்தினார். இளம் வழக்கறிஞரான வல்லபாய் பட்டேலும் இந்துலால் நாயக்கும் காந்தியடிகளுடன் இந்த இயக்கத்தில் இணைந்து விவசாயிகளை உறுதியாக இருக்குமாறு வேண்டினர்.
- பல்வேறு அடக்குமுறைகளை கையாண்ட ஆங்கிலேய அரசு எந்த விவசாயியால் பணம் செலுத்த முடியிமோ அவர்களிடம் இருந்து மட்டுமே வருவாயை வசூல் செய்யவேண்டும் என்று அரசு நிர்வாகத்தினர் அறிவுறுத்தினர். இதனை அறிந்த காந்தியடிகள் போராட்டத்தை விலக்கிக்கொள்ள முடிவு செய்தார்.

இந்திய பணியாளர் சங்கம்

- *இந்திய பணியாளர் சங்கம் 1905 இல் கோபால கிருஷ்ண கோகலேவால் தொடங்கப்பட்ட அமைப்பாகும்.*
- *இந்த அமைப்புக்குத் தலைமையகம் மகாராஷ்டிரவின் பூனாவிலும், சென்னை (மதராஸ்), மும்பை (பம்பாய்), அலகாபாத் மற்றும் நாக்பூரில் முக்கிய கிளைகளும் இருந்தன.*

மாண்டேகு – செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்கள்

- இந்தியாவுக்கான பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் எட்வின் மாண்டேகுவும் அரசப் பிரதிநிதி (வைசிராய்) செம்ஸ்போர்டும் இந்தியாவுக்கான அரசியல்சாசன மாற்றங்களை அறிவித்தனர். அவையே பின்னர் 1919 இன் இந்திய கவுன்சில்கள் சட்டம் என்று அழைக்கப்பட்டது.
- மாகாண சட்டப்பேரவைகளைப் பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடன் விரிவுபடுத்த இந்தச் சட்டம் வகைசெய்தது.
- இரட்டை ஆட்சியின் கீழ் மாகாண அரசுகளுக்கு நிர்வாகத்தில் அதிகப் பங்கு வழங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் சட்டம், ஒழுங்கு, நிதி ஆகிய முக்கியமான துறைகள் ஆங்கிலேயருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆளுநர்களின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- சுகாதாரம், கல்வி, உள்ளாட்சி போன்ற இதர துறைகள் இந்தியப் பிரதிநிதிகளுக்கு மாற்றப்பட்டது.
- மத்திய சட்டப்பேரவையில் இருந்த 144 மொத்த உறுப்பினர்களில் 41 உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படவேண்டும் . மாநிலங்களவை என்றழைக்கப்பட்ட மேலவையில் மொத்தம் இருந்த 60 உறுப்பினர்களில் 26 நபர்கள் நியமன உறுப்பினர்களாக இருந்தனர்.
- 1918 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பம்பாயில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸின் சிறப்பு அமர்வில் இந்தத் திட்டம் பற்றி விவாதிக்கப்பட்டது. இந்த திட்டம் ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் அளிப்பதாகக் காங்கிரஸ் தெரிவித்தது.
- சீர்திருத்தங்களை முயன்று அதற்காக உழைக்கவேண்டும் என்று கோரிய மிதவாத/தாராளக் கொள்கையுடைய அரசியல் தலைவர்களின் குழு ஒன்று செயல்பட்டது.
- சுரேந்திரநாத் பானர்ஜி தலைமையிலான இந்தக் குழு பெரும்பான்மைக் கருத்தை எதிர்த்ததோடு இந்திய லிபரல் (தாராளமய) கூட்டமைப்பு என்ற பெயரில் தனது சொந்தக் கட்சியைத் தொடங்க காங்கிரசுக்கு வழியமைத்தது.

பிராமணரல்லாதார் இயக்கம்

- வங்காளத்திலும் இந்தியாவின் கிழக்குப் பகுதிகளிலும் தொடங்கப்பட்ட நாமசூத்ரா இயக்கம், இந்தியாவின் வடமேற்கு பகுதியில் தொடங்கப்பட்ட ஆதிதர்மா இயக்கம், மேற்கு இந்தியாவில் சத்யசோதக் இயக்கம் மற்றும் தென்னிந்தியாவின் திராவிட இயக்கங்கள் இந்த நூற்றாண்டின் திருப்பத்தில் தங்கள் குரல்களை எழுப்பின.
- 1872 ஆம் ஆண்டு ஜோதி ராவ் பூலேவின் புத்தகம் குலாம்கிரி என்ற தலைப்பில் முதலில் வெளிவந்தது. அவரது அமைப்பு, சத்யசோதக் சமாஜ், பிராமணியத்தின் கொடுங்கோல் மற்றும் சுரண்டல் ஆகியவற்றிலிருந்து ஒடுக்கப்பட்ட சாதியினரை விடுவிப்பதற்கான அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது.
- வாக்குரிமை அரசியல் 1880 களில் அறிமுகம் செய்யப்பட்டு இது போன்ற அமைப்புகளின் இடத்தை அவை நிரப்பின.
- தெற்கில் இந்த இயக்கத்தின் வடிவமைப்பு சற்று வித்தியாசமாக இருந்தது. பிராமணர்கள் ஆதிக்கத்திற்கு அதிகக் காரணம் அவர்கள் வெறும் 3.2 சதவீதம் மட்டுமே மக்கள் தொகையில் இடம்பெற்றிருந்தாலும் அவர்களில் 72 சதவிகிதம் பட்டாதாரிகளாய் இருந்தனர்.

ரௌலட் சத்தியாகிரகம்

- 1919 ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் ஏமாற்றத்தை அளித்தது. மேலும், அரசானது போர்க்கால கட்டுப்பாடுகளை நிரந்தரமாக விரிவுபடுத்தி அமைல்படுத்தத் தொடங்கியது. பிடிஉத்தரவு இல்லாமல் கைது நடவடிக்கை விசாரணை இல்லாமல் சிறையிலடைப்பது என காவல் துறையினருக்கு அதீத அதிகாரங்களை ரௌலட் சட்டம் வழங்கியது.
- இந்தச் சட்டத்தை ***கருப்பு சட்டம்*** என்றழைத்த காந்தியடிகள் அதனை எதிர்த்து நாடு தழுவிய சத்தியாகிரகப் போராட்டத்திற்கு 1919 ஏப்ரல் 6 இல் அழைப்பு விடுத்தார்.

ஒத்துழையாமை இயக்கம்

- மிதவாத தேசியவாதிகளுக்கு முக்கியத்துவம் தருவதும் தீவிர தேசியவாதிகளைத் தனிமைப்படுத்துவதும் பிரிட்டிஷாரின் கொள்கையின் ஒரு பகுதியாக இருந்தது. 1919 இல் இந்திய கவுன்சில்கள் சட்டம் மற்றும் ரௌலட் சட்டம் ஆகியன ஒரே ஆண்டில் இயற்றப்பட்டன.
- மத்திய சட்டப்பேரவையின் ஒவ்வொரு உறுப்பினரும் இந்த மசோதாவை எதிர்த்த நிலையில் 1919 இல் மார்ச் மாதம் ரௌலட் சட்டத்தை அரச நிறைவேற்றியது.
- எந்தவித நீதிமன்ற விசாரணையுமின்றி எவரையும் சிறையில் அடைக்க அரசுக்கு இந்தச் சட்டம் அதிகாரமளித்தது.
- காந்தியடிகளும் அவரது சகாக்களும் அதிர்ச்சி அடைந்தனர். காந்தியடிகள் நிறுவிய சத்தியாகிரக சபை, இந்த சட்டத்தை மீறுவது என்று முதன்முதலாக உறுதி ஏற்றது.
- 1919 மார்ச்–ஏப்ரல் மாதங்களில் ரௌலட் சட்டத்துக்கு எதிராக வேலைநிறுத்தத்தைக் கடைபிடிக்குமாறு காந்தியடிகள் அழைப்பு விடுததவுடன் நாடு முழுவதும் ஊக்கம் பிறந்தது.
- இந்துக்களையும் முஸ்லீம்களையும் ஒன்றிணைத்த கிலாபத் இயக்கத்தையும் இத்துடன் இணைத்தார்.

ஜாலியன் வாலாபாக் படுகொலை

- ரௌலட் சட்டத்திற்கு எதிராக போராட்டம் பஞ்சாபில் குறிப்பாக அமிர்தசரஸ் மற்றும் லாகூரில் தீவிரமடைந்தது. காந்தியடிகள் கைது செய்யப்பட்டதுடன் பஞ்சாபிற்குற் நுழையவிடாமலும் தடுக்கப்பட்டார். ஏப்ரல் 9 ஆம் நாள் டாக்டர் சத்தியபால், சாய்புதீன் கிச்லு. சத்யபால் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர். ஐரோப்பிய தலைவர்கள் சிலர் கொள்ளப்பட்டனர். படைத்துறை சட்டம் அறிவிக்கப்பட்டது.
- சத்தியபால், சாய்புதீன் கிச்லு ஆகியோரைக் கைது செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைதியான வகையில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக இரண்டாயிரத்துக்கும் அதிகமான மக்கள் 1919 ஏப்ரல் 13 இல் பஞ்சாபின் அமிர்தசரஸ் நகரில் ஜாலியன் வாலாபாக் பகுதியில் அமைதியான வகையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பைசாகி திருநாளில் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- பஞ்சாபின் துணை நிலை ஆளுநராக மைக்கேல் ஓ டையரும், ராணுவக் கமாண்டராக ஜெனரல் ரெஜினால்டு டையரும் பதவி வகித்தனர்.
- நிராயுதபாணியாக நின்ற மக்களின் மீது துப்பாக்கி குண்டுகள் தீரும் வரை சுடுமாறு ஜெனரல் டையர் உத்தரவிட்டார். அரசு தகவல்களின் அடிப்படையில் உயிரிழப்புகள் 379 என்ற எண்ணிக்கையில் இருந்தபோதிலும் உண்மையில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இறந்திருக்கக்கூடும். இராணுவச் சட்டமும் பஞ்சாப் முழுவதும் அமல்படுத்தப்பட்டது.
- இந்தக் கொடுமைகளைக் கண்டு நாடு முழுவதுமு கொந்தளித்தது. பம்பாய், கல்கத்தா, டெல்லி, லாகூர் ஆகிய இடங்களில் ரௌலட் சட்டத்துக்கு எதிராகப் பெரிய அளவில் போராட்டங்கள் நடந்தது.
- இந்த கொடுமைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து இரவீந்திரநாத் தாகூர்தனக்கு வழங்கப்பட்ட *வீரத்திருமகன்* (Knighthood) என்ற பட்டத்தை திருப்பிக் கொடுத்தார். *கெய்சர்–இ–ஹிந்த்* பதக்கத்தை காந்தியடிகள் திருப்பிக்கொடுத்தார்.
- ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பிறகு இரவீந்திரநாத் தாகூர் தனது அரசப் பட்டத்தை உடனடியாக துறுந்தார். 1919 ஆம் ஆண்டு மே மாதம் 31 தேதி அரசப்பிரதிநிதிக்கு எழுதிய கடிதத்தில் அரசப்பட்டத்தை துறப்பதாக எழுதினார்.
- கிலாபத் , பஞ்சாப் கொடுமை ஆகிய இரண்டு காரணங்களால் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப்பட்டது. துருக்கி சுல்தான் மற்றும் இசுலாமிய புனிதத் தலங்கள் தொடர்பானது கிலாபத் இயக்கம்.
- ஜாலியன் வாலாபாக்கில் நடத்தப்பட்ட கொடுமைகளுக்குக் காரணமான ரெஜினால்டு டைய, மைக்கேல் ஓ டையர் இருவரையும் பிரிட்டிஷ் நீதிமன்றங்கள் குற்றங்களில் இருந்து விடுதலை செய்துவிட்டது.
- கால்சா ஆதரவற்றோர் காப்பகத்தில் வளர்க்கப்பட்ட சீக்கிய பதின்பருவ இளைஞரான உதம் சிங் இந்த நிகழ்வை தனது கண்களால் கண்டார். ஜாலியன் வாலாபாக் படுகொலைகளுக்குப் பழி தீர்க்கும் விதமாக 1940 மார்ச் 30 இல்

இலண்டனின் காக்ஸ்டன் அரங்கில் மைக்கேல் ஓ டையரை உதம் சிங் படுகொலை செய்தார். லண்டனின் பெண்டோன்வில்லே சிறையில் உதம் சிங் தூக்கிலிடப்பட்டார்.

ஒத்துழையாமை இயக்கத்தின் தொடக்கம்

- கிலாபத் மாநாட்டில் காந்தியடிகளின் வற்புறுத்தலின் பேரில் 1920 ஆகஸ்டு 31 முதல் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்க முடிவு செய்யப்பட்டது.
- அரசு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரச நீதிமன்றங்களைப் அரசு வழங்கிய விருதுகளைபுறக்கணிக்கும் திட்டத்தை அலகாபாத்தில் கூடிய அனைத்துக் கட்சிக் கூட்டம் முடிவு செய்தது
- 1920 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் சிறப்பு அமர்வில் ஒத்துழையாமையைக் கடைபிடிப்பது என்ற காந்தியடிகளின் திட்டத்திற்கு காங்கிரஸ் அனுமதி வழங்கியது.
- 1920 டிசம்பர் மாதம் சேலம். சி. விஜயராகவாச்சாரியாரின் தலைமையில் நாக்பூரில் நடந்த அமர்வில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- கிலாபத் மற்றும் பஞ்சாப் குறைகள் சரிசெய்யப்பட்டு தன்னாட்சி அரசு நிறுவப்படும் வரை இந்த ஒத்துழையாமைக் கடைபிடிக்க உறுதி ஏற்கப்பட்டது.
- 1920 ஆம் ஆண்டு நாக்பூரில் நிகழ்ந்த காங்கிரஸ் அமர்வில் மொழிசார்ந்த மாகாண காங்கிரஸ் கமிட்டிகளை அங்கீகரித்து அமைப்பதற்கு வகை செய்யும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- காங்கிரசின் அடிப்படையை விரிவாக்கும் நடவடிக்கையாகப் பணியாளர்கள் கிராமங்களுக்கு சென்று 4 அணா (25 பைசா) என்கிற குறைவான கட்டணத்தில் கிராமத்தினரைக் காங்கிரஸ் சேர்க்கவேண்டும்.
- சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்குமாறு மக்களுக்கு அந்ததந்த பிரதேச காங்கிரஸ் கமிட்டிகள் அழைப்பு விடுத்தன.
- 1921 இல்வேல்ஸ் இளவரசர் மேற்கொண்ட பயணமும் புறக்கணிக்கப்பட்டது.
- சி. இராஜாஜி, எ.ஸ். சத்தியமூர்த்தி, தந்தை ஈ.வே.ரா. பெரியார் ஆகிய தலைவர்கள் தலைமையல தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கம் நடத்தப்பட்டது.

வரிகொடா இயக்கம்

- அரசு ஏழு நாட்களுக்குள் பத்திரிக்கைச் சுதந்திரத்தை மீட்டு சிறைக்கைதிகளை விடுதலை செய்யாவிட்டால் பர்தோலியில் வரிகொடா பிரச்சாரங்கள் உட்பட சட்டமறுப்பு இயக்கத்தை தொடங்கப்போவதாக காந்தியடிகள் பி அறிவித்தார்.
- வரிகொடா இயக்கம் போன்ற பிரச்சாரத் திட்டங்கள் விவசாயிகளின் கவனத்தைக் கவர்ந்தன. 1922 பிப்ரவரி மாதம் பர்தோலியில் வரிகொடா இயக்க இயக்கங்கள் ஒரு தேசியத் தலைவராக காந்தியடிகளின் நற்பெயரை பெரிதும் மேம்படுத்தின.

சௌரி சௌரா சம்பவம் மற்றும் ஒத்துழையாமை இயக்கத்தைத் திரும்பப்பெறுதல்

- கலவரங்கள் மற்றும் மோசமான வன்முறைகளும் நாட்டில் நிகழ்ந்தன. மலபார் மற்றும் ஆந்திராவில் இரண்டு வன்முறைக் கிளர்ச்சிகள் நடந்தன. கரையோர ஆந்திராவின் ராம்பா பகுதியில் அல்லூரி சீதாராம ராஜீ தலைமையில் பழங்குடியினர் கிளர்ச்சி செய்தனர்.
- மலபாரில் முஸ்லிம் (மாப்பிள்ளை) விவசாயிகள் ஆயுதமேந்தி உயர்வகுப்பு நிலபிரபுக்கள் மற்றும் பிரிட்டிஷாருக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.
- உத்தரப்பிரதேசத்தில் கோரக்பூர் மாவட்டத்தில் சௌரி சௌரா என்ற கிராமத்தில் மதுக் கடைகள் மற்றும் உள்ளூர் சந்தையில் அதிக விலைக்குப் பொருட்கள் விற்கப்படுவதைக் கண்டித்து ஒரு தன்னார்வக் குழு ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.
- 1922 பிப்ரவரி 5 இல் சௌரி சௌரா கிராமத்தில் 3,000 நபர்களுடன் நடந்த ஒரு காங்கிரஸ் கட்சிப் பேரணி மீது போலிசார் நடத்திய துப்பாக்கி சூட்டில் ஆத்திரமடைந்த ஆர்பாட்டக் குழுவினர் காவல் நிலையத்தைக் குறிவைத்து தாக்குதல் நடத்தியதோடு அதை எரித்ததில் 22 போலீசார் உயிரிழந்தனர்.
- இந்த நிகழ்வை அடுத்து காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் திரும்பப்பெறுவதாக அறிவித்தார்.
- தேசியவாதத் தொண்டர்களுக்கு ஏமாற்றம் தரும் விதமாக பர்தோலியில் இந்த முடிவை காங்கிரஸ் செயற்குழு ஏற்றுக்கொண்டது.

- கைது செய்யப்பட்டு ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்ற காந்தியடிகள் பற்றி ஜவஹர்லால் நேருவும் சுபாஷ் சந்திர போஸிம் கடுமையாக விமர்சனம் செய்தனர். இப்படியாக ஒத்துழையாமை இயக்கம் முடிவுக்கு வந்தது.
- துருக்கி மக்கள் முஸ்தபா கமால் பாட்சா தலைமையில் கிளர்ந்தெழுந்து சுல்தானிடம் இருந்து அரசில் அதிகாரத்தைப் பறித்து கலிபா என்ற நடைமுறையை ரத்து செய்துவிட்டு, மதமும் அரசியலும் இணைந்து பயணிக்க முடியாது என்று அறிவித்த நிலையில் கிலாபத் இயக்கம் தேவையற்றுப் போனது.
- சௌரி சௌரி நிகழ்வுக்குப் பிறகு ஆர்வலர்களும் மக்களும் அகிம்சை போராட்டம் குறித்த பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று காந்தியடிகள் உணர்ந்தார். அதன் ஒரு பகுதியாக காதி இயக்க மேம்பாடு, இந்து–முஸ்லிம் ஒற்றுமை தீண்டாமை ஒழிப்பு ஆகியவற்றல் அவர் கவனம் செலுத்தினார்.

சுயராஜ்ய கட்சி மற்றும் அதன் செயல்பாடுகள்

- இதனிடையே காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது. சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு 1923 ஜனவரி முதல் நாளில் சுயராஜ்ஜியக் கட்சியை தொடங்கினர்.
- சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு ஆகியோர் புதிய வழியில் செயல்பாட்டை அறிவித்தனர். தீவிர அரசியலுக்குத் திரும்பவேண்டும் என்றும் அதில் தேர்தல் அரசியலில் ஈடுபடுவது அடக்கம் என்றும் அவர்கள் விரும்பினார்கள். சுயராஜ்யம் வேண்டுவோர் மற்றும் மாற்றம் வேண்டுவோர் என்று இந்தக் குழு அழைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் சத்தியமூர்த்தி இந்தக் குழுவில் இணைந்தார்.
- சட்டப்பேரவை நுழைவை எதிர்த்த மற்றொரு குழு காந்தியடிகளின் வழியைப் பின்பற்றி மக்களை ஒன்றுதிரட்டும் பணிகளில் ஆர்வம் காட்டியது. இத்நக் குழுவுக்கு இராஜாஜி, வல்லபாய் பட்டேல், இராஜேந்திர பிரசாத் ஆகியோர் தலைமை ஏற்றனர். எந்த மாற்றமும் தேவையில்லை என்று இந்த அணி வலியுறுத்தியது. இவர்கள் மாற்றம் விரும்பாதோர் என்று அழைக்கப்பட்டனர்.
- மத்திய சட்டப்பேரவைக்கு நடந்த தேர்தலில்களில் சுயராஜ்ய கட்சி சிறப்பாகப் பங்கேற்று 101 இடங்களில் 42 இடங்களை கைப்பற்றியது. 1919 ஆம் ஆண்டுச் சட்டத்தின் குறைபாடுகள் குறித்து தெரிவிப்பதிலும் வெற்றி அடைந்தனர்.
- வகுப்புவாத அரசியலில் ஈடுபட்ட இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் இதயங்களை ஈர்க்கும் வகையில் காந்தியடிகள் 1924 இல் 21 நாள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.
- 1925 இல் அக்கட்சியின் தலைவர் சித்தரஞ்சன் தாஸ் மறைந்த பிறகு சுயராஜ்ஜிய கட்சி வீழ்ச்சி காணத் தொடங்கியது. சுயராஜ்ஜிய கட்சி உறுப்பினர்கள் சிலர் அரசுப் பதவிகளை ஏற்க தொடங்கினர். 1926இல் சட்டபேரவைகளில் இருந்து சுயராஜ்ஜிய கட்சி விலகிக் கொண்டது.

இடது சாரி சிந்தனைகள்

- பகத்சிங், சந்திரசேகர் ஆசாத், ராஜகுரு ஆகியோர் லாலா லஜ்பத் ராய் கொல்லப்பட்டது மற்றும் காவல்துறை அராஜகதை எதிர்த்து, பிரிட்டிஷ் காவல்துறை அதிகாரி லாகூரில் நடத்தப்பட்ட தடியடிகக்குத் தலைமை தாங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலகட்டத்தில் நவஜான் பாரத் சபை, இந்துஸ்தான் குடியரசு அமைப்பு ஆகியன தொடங்கப்பட்டன.
- மத்திய சட்டப்பேரவை அரங்குக்குள் 1929 இல் ஏப்ரல் 8 இல் பகத் சிங்கும், படுகேஷ்வர் தத்தும் வெடிகுண்டு ஒன்றை எறிந்தனர்.
- 1929 இல் மீரட் சதித்திட்ட வழக்கு பதியப்பட்டு மூன்று டஜன் கம்யூனிச தலைவர்கள் நீண்ட கால சிறைத் தண்டனைகளைப் பெற்றனர்.

சைமன் குழு–நேரு அறிக்கை–லாகூர் காங்கிரஸ்

சைமன் குழு புறக்கணிப்பு

- 1927 நவம்பர் 8 ஆம் நாள் இந்திய அரசியல் சாசன சீர்த்திருத்தங்களுக்கான இந்திய சட்டபூர்வ ஆணைத்தை நியமிப்பதாக ஆங்கில அரசு அறிவித்தது.
- 1927 இல் மதராஸில் நடந்த காங்கிரஸ் வருடாந்திர மாநாட்டில் இந்தக் குழுவை புறக்கணிக்க முடிவு செய்யப்பட்டது. இந்து மகா சபையும் முஸ்லிம் லீக் அமைப்பும் இந்த முடிவுக்கு ஆதரவு தெரிவித்தனர்.
- சர் ஜான் சைமன் தலைமையிலான இந்தக் குழுவில் ஏழு உறுப்பினர்கள் இடம்பெற்றனர். இது ***சைமன் குழு*** என்றே அழைக்கப்பட்டது.

- இக்குழுவில் இந்தியர்கள் எவரும் இடம்பெறவில்லை எனவே இந்தக் குழு சென்ற இடங்களில் எல்லாம் ஆர்ப்பாட்டங்களும் கருப்புக்கொடி ஏந்தியபடி ***சைமனே திரும்பிப் போ*** எனும் முழக்கங்களும் இடம்பெற்றன. இக்குழு எதிர்ப்பு போராட்டம் லாகூரில் நடந்தபோது லாலா லஜ்பத் ராய் மிக மோசமா காயமடைந்து பின்னர் சில நாட்களில் உயிரிழந்தார்.
- போராட்டத்தின் அடுத்த கட்டத்துக்கு மக்கள் தயாராகி வருவதை இந்தப் போராட்டம் எடுத்துக்காட்டியது. டிசம்பர் 1928 மோதிலால் தலைமையில் கல்கத்தாவின் கூடிய காங்கிரஸ் மாநாட்டின் போது, இடதுசாரிகளை சாந்தப்படுததும் முயற்சியாக 1929 இல் நடக்கவிருக்கும் அடுத்த மாநாட்டிற்கு ஜவஹர்லால் நேரு தலைவராக இருப்பார் என்று அறிவிக்கப்பட்டது.

நேரு அறிக்கை

- இந்தியாவில் இருந்த பல்வேறு அரசியல் கட்சிகளை சைமன் குழு புறக்கணிப்பு ஒன்றினைத்தது. சைமன் குழு முன்மொழிவுகளுக்கு மாற்றாக இந்தியாவுக்கு அரசியல் சாசனம் உருவாக்குவதை குறிக்கோளாகக் கொண்டு 1928 இல் அணைத்துக் கட்சி மாநாடு நடைபெற்றது.
- இந்த கொள்கைகளின் அடிப்படையில் அரசியல் சாசன வரைவுக்காக திட்டம் வகுக்க மோதிலால் நேரு தலைமையிலான கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டியின் அறிக்கை ***நேரு அறிக்கை*** என்று அழைக்கப்பட்டது. அதன் பரிந்துரை செய்யப்பட்டவை
    - இந்தியாவுக்கு தன்னாட்சிப் பகுதி என்ற டொமினியன் தகுதி
    - மத்திய சட்டப் பேரவை மற்றும் மாகாண சட்டப் பேரவைகளுக்கு கூட்டு மற்றும் கலவையான வாக்காளர் தொகுதிகளுடன் தேர்தல் நடைபெறுகிறது.
    - மத்திய சட்டப் பேரவை மற்றும் முஸ்லீம்கள் சிறுபான்மையினராக உள்ள மாகாண சட்ட பேரவைகளில் முஸ்லீம்களுக்கு இடஒதுக்கீடு அதேபோல் இந்துக்களுக்கு அவர்கள் சிறுபான்மையினராக உள்ள வடமேற்கு எல்லை மாகாணத்தில் இடஒதுக்கீடு
    - பொது வாக்களிப்பு முறையும் அடிப்படை உரிமைகளும் வழங்கப்படுவது.
- மத்திய சட்டப்பேரவையில் இடஒதுக்கீடு வழங்குவது குறித்து ஜின்னா சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்தார். மூன்றில் ஒருபங்கு இடங்கள் முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று அவர் கோரினார்.
- அவரை ஆதரித்த தேஜ் பஹதூர் சாப்ரூ இது பெரும் மாற்றத்தைத் தராது என்று வேண்டினார். எனினம், அனைத்துக் கட்சி மாநாட்டில் இவை அணைத்தும் தோல்வி கண்டன.
- பின்னர் ஜின்னாவின் 14 அம்சங்கள் என்று அழைக்கப்பட்ட தீர்மானத்தை அவர் முன்மொழிந்தார். எனினும் அதுவும் நிராகரிக்கப்பட்டது. இந்து–முஸ்லிம் ஒற்றுமையின் தூதராக பாராட்டப்பட்ட ஜின்னா பின்னர் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு முஸ்லிம்களுக்கு தனிநாடு என வலியுறுத்த ஆரம்பித்தார்.

லாகூர் காங்கிரஸ் மாநாடு – பூரண சுயராஜ்ஜியம்

- இதனிடையே டொமினியன் எனப்படும் தன்னாட்சிப் பகுதி தகுதி குறித்து திருப்தி அடையாத காங்கிரசார் சிலர், முழுமையான சுதந்திரம் வேண்டி கோரிக்கை வைத்தனர்.
- முழுமையான சுதந்திரம் அடைவது என்பதைக் குறிக்கோளாகக் காங்கிரஸ் கட்சி இம்மாநாட்டில் அறிவித்தது. 1929 டிசம்பர் 31 இல் ஜவஹர்லால் நேரு தலைமையில் லாகூரில் நடைபெற்ற இம்மாநாட்டில் மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26 ஆம் நாளை விடுதலை நாளாகக் கொண்டாடவும் முடிவு செய்யப்பட்டது. சட்டமறுப்பு இயக்கம் காந்தியடிகளின் தலைமையில் தொடங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. மேலும்வட்டமேசை மாநாட்டை புறக்கணிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

தண்டி யாத்திரை (அ) உப்பு சத்தியாகிரகம்

- 1930 ஜனவரி 31 ஆம் நாளுக்குள் நிறைவேற்ற வேண்டும் என்ற காலக்கெடுவுடன் அரசப்பிரதிநிதி இர்வின் பிரபுவிடம் கோரிக்கைகள் அடங்கிய மனு கொடுக்கப்பட்டது. அவை கீழ்க்கண்டவையாகும்.
    1. ராணுவம் மற்றும் ஆட்சிப்பணி சேவைகளுக்கான செலவுகளை 50 சதவிகிதம் வரை குறைப்பது.
    2. முழுமையான புறக்கணிப்பை அறிமுகம் செய்வது.
    3. அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வது.
    4. நிலவருவாயை 50 சதவிகிதமாக குறைப்பது.

5. உப்பு வரியை ரத்துசெய்வது.

- கோரிக்கை மனுவுக்கு அரசப்பிரதிநிதி பதில் தெரிவிக்காத நிலையில் காந்தியடிகள் சட்டமறுப்பு இயக்கத்தை தொடங்கினார். அனைவருக்கும் அவசியமான பொருளான உப்பு மீது அநியாய வரி விதிக்கப்பட்டதை எதிர்த்து நடந்த ஆர்ப்பாட்டம் இதுவாகும்.
- 1930 மார்ச் மாதம் 12 ஆம் நாள் 78 பேர்களுடன் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தனது புகழ்பெற்ற தண்டி யாத்திரையைத் தொடங்கினார்.
- காந்தியடிகள் தனது 61 ஆவது வயதில் 24 நாட்களில் 241 மைல் (375 கி.மீ.)தொலைவு யாத்திரையாக நடந்து சென்று 1930 ஏப்ரல் 5 ஆம் நாள் மாலை தண்டி கடற்கரையை அடைந்தார். அடுத்த நாள் (1930 ஏப்ரல் 6) காலை ஒரு கைப்பிடி உப்பைக் கையில் எடுத்து உப்புச்சட்டத்தை மீறினார்.
- தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியில் இருந்து வேதாரண்யம் வரை இதேபோன்ற ஒரு யாத்திரையை சி. ராஜாஜி மேற்கொண்டார். திருச்சிராப்பள்ளியில் தொடங்கி 150 மைல்கள் தொலைவில் தஞ்சாவூர் மாவட்டத்தின் கரையோர கிராமமான வேதாரண்யம் வரை இந்த நடைபயணம் மேற்கொள்ளப்பட்டது.
- 1930 ஏப்ரல் 13 இல் ஆரம்பித்த இந்த நடைபயணம் ஏப்ரல் 28 இல் முடிவடைந்தது. அப்போதைய தஞ்சாவூர் ஆட்சித் தலைவராக இருந்த ஜெ.ஏ.தார்ன் எச்சரிக்கை விடுத்தும் மக்கள் ஆதரவு தெரிவித்தனர்.
- கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர் எனும் சிறப்புப் பாடலை நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார் புனைந்திருந்தார்.
- ராஜாஜி தலைமையில் 12 தொண்டர்கள் உப்புச் சட்டத்தை மீறி உப்பை அள்ளினர். உப்புச் சட்டத்தை மீறியதற்காக ராஜாஜி கைது செய்யப்பட்டார். டி.எஸ்.எஸ். ராஜன், திருமதி. ருக்மணி லட்சுமிபதி, சர்தார் வேதரத்தினம், சி. சாமிநாதர் மற்றும் கே. சந்தானம் ஆகியோர் வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்ற ஏனைய முக்கியத் தலைவர்களாவர்.
- கேரளா, ஆந்திரா மற்றும் வங்காளத்திலும் உப்பு சத்தியாகிரக யாத்திரை நடந்தன. வடமேற்கு எல்லை மாகாணத்தில் கான் அப்துல் கஃபார்கான் (எல்லை காந்தி) என்பவர் இந்த இயக்கத்திற்குத் தலைமை ஏற்றார். செஞ்சட்டைகள் என்றழைக்கப்பட்ட ***குடைகிட்மட்கர்*** இயக்கத்தை அவர் நடத்தினார். ஆயுதம் ஏந்தாத சத்தியாகிரகிகள் மீது தாக்குதல் நடத்த கட்வாலி படையணியின் வீரர்கள் மறுத்துவிட்டனர்.
- காந்தியடிகள் நள்ளிரவில் கைது செய்யப்பட்டு எரவாடா சிறையில் அடைக்கப்பட்டார். ஜவஹர்லால் நேரு, கான் அப்துல் கஃபார் கான் மற்றும் இதர தலைவர்கள் விரைவாக கைதானார்கள். இந்தியா சந்தித்த மக்கள் இயக்கங்களிலேயே இது மிகப் பெரியது. 90,000 க்கும் மேற்பட்டோர் கைதானார்கள்.
    - *ஆங்கிலேயர்கள் 1865 ஆம் ஆண்டு முதலாவது வனச்சட்டத்தை நிறைவேற்றினார்கள்.*
    - *1878 ஆம் ஆண்டின் இந்திய வனங்கள் சட்டத்தின்படி வனங்களின் உரிமை அரசிடம் இருந்தது.*
    - *விசாகப்பட்டினம் மற்றும் கோதாவரி மாவட்டங்கள் மற்றும் ராம்பா பகுதி ஆதிவாசிகளின் நலன் காப்பதற்காக ஊழல் அதிகாரிகளுடன் அல்லூரி சீதாராம ராஜி போராடினார்.*
    - *ராம்பா ஆதிவாசிகளின் கிளர்ச்சியை அடக்குவதற்காக (1922–24) மலபார் காவல்துறையின் சிறப்புக் குழு அனுப்பி வைக்கப்பட்டது.*

வட்டமேசை மாநாடு

- சைமன் குழு தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்தது. காங்கிரஸ், இந்து மகா சபை, முஸ்லிம் லீக் ஆகியன அதனைப் புறக்கணித்தன. இந்த அறிக்கையைச் சட்டப்பூர்வமாகவும் நம்பிக்கைக்கு உரியதாகவும் ஆக்கும் நோக்கில் இந்தியக் கருத்தை உருவாக்கும் வல்லமை உடைய பலதரப்பட்ட தலைவர்களுடன் லண்டனில் ஒரு வட்டமேசை மாநாட்டைக் கூட்டவிருப்பதாக அரசு அறிவித்தது.
- 1930 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் லண்டனில் முதலாவது வட்ட மேசை மாநாடு நடந்தது. பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மெக்டொனால்டு மாகாண சுயாட்சியுடன் கூடிய மத்திய அரசு பற்றிய யோசனையை அறிவித்தார்.
- சிறுபான்மையினருக்கு தனித்தொகுதிகள் வழங்குவது குறித்த பிரச்சனையில் சிக்கல் நீடித்தது. காங்கிரசின் தலைவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்ததால் இந்த வட்டமேசை மாநாட்டில் காங்கிரஸ் கட்சி கலந்து கொள்ளவில்லை.
- காங்கிரஸ் பங்கேற்பின்றி விவாதங்கள் நடத்துவதால் எந்தவொரு பயனும் இல்லை என்பது தெளிவானது.
- 1931 மார்ச் 5 இல் காந்தி – இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தானது இந்தியாவில் சட்டமறுப்பு இயக்கத்தின் முடிவை குறிப்பதாக அது அமைந்தது. 1931 இல் நிபந்தனையின்றி காந்தியடிகள் விடுதலை செய்யப்பட்டார்.

- 1932 இல் செப்டம்பர் 7 ஆம் நாள் நடைபெற்ற இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் காங்கிரசின் ஒரேயொருப் பிரதிநிதியாக காந்தியடிகள் கலந்துகொண்டார்.
- காந்தியடிகள் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்ட போதும் அரச அவரது கோரிக்கைகளை ஏற்க முன்வராமல் பிடிவாதம் செய்தது. சிறுபான்மையினருக்கு தனித்தொகுதிகள் வழங்குவதை காந்தியடிகள் ஏற்கவில்லை. வெறும் கையோடு அவர் திரும்பியது அடுத்த சட்டமறுப்பு இயக்கத்தை மீண்டும் கையில் எடுப்பது என்று காங்கிரஸ் தீர்மானித்தது.
- படைத்துறைச் சட்டம் அமல்படுத்தப்பட்டு 1932 ஜனவரி 4 ஆம் நாள் காந்தியடிகள் கைது செய்யப்பட்டார். இந்த இயக்கம் மெதுவாக மந்த நிலை அடைந்து மே 1933 இல் அதிகாரப்பூர்வமாக நிறுத்தப்பட்டு பின்னர் மே 1934 இல் முற்றிலும் முடிவுக்கு வந்தது.
- இதனிடையே 1932 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் நாள் முதல் டிசம்பர் 24 ஆம் நாள் வரை மூன்றாவது வட்டமேசை மாநாடு நடத்தப்பட்டது. சட்டமறுப்பு இயக்கத்திற்க புத்துயிரூட்டியதால் காங்கிரஸ் கட்சி இந்த மாநாட்டில் பங்கேற்கவில்லை.

டாக்டர் பி. ஆர். ஆம்பேத்கரின் தலைமை மற்றும் தனித்தொகுதிகளின் உருவாக்கம்

- 1920 களில் ஒடுக்கப்பட்வர்களின் போராட்டங்களின் மையப்புள்ளயிாக டாக்டர் அம்பேத்கர் விளங்கினார். தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சாதியாக் கருதப்பட்ட மஹர் சாதியில் ராணுவ வீரரின் மகனாகப் பிறந்த டாக்டர் அப்பேத்கார் அவரது சாதியில் பத்தாம் வகுப்பை நிறைவு செய்த முதலமாவராகத் திகழ்ந்தார்.
- எல்பின்ஸ்டன் கல்லூரியில் சேர்ந்த அம்பேத்கர் கல்வி உதவித்தொகை பெற்று 1912 இல் பட்டதாரி ஆனார்
- பரோடா அரசரின் கல்வி உதவித்தொகை பெற்ற அவர் அமெரிக்கா சென்று பட்டமேற்படிப்புப் பட்டத்தையும், கொலம்பியா பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்தையும் பெற்றர்.
- சட்டம் மற்றும் பொருளாதார படிப்புகளுக்காக அவர் லண்டன் சென்றார்.
- 1916 இல் மானுடவியல் தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு ***இந்தியாவின் சாதிகள்*** என்ற தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்தார். இந்தக் புத்தகம் பின்னர் ***அரிய இந்தியப் புத்தகம்*** என்ற தொகுப்பில் பதிப்பிக்கப்பட்டது.
- இந்திய வாக்காளர்களுக்கு வாக்குரிமை பெற வயது மற்றும் தகுதி பற்றி தகவல் சேகரித்து வந்த சவுத்பொரோ குழுவுடன் கலந்துரையாட வருமாறு அவருக்கு அழைப்பு விடுத்தது. அப்போதுதான் அப்பேத்கார் முதன் முதலாக தனித் தொகுதிகள் பற்றி பேசினார்.
- அப்பேத்கர் புதிய பத்திரிக்கைகள் மற்றும் அமைப்புகளைத் தோற்றுவித்தார். ***மூக் நாயக்*** (வாய்பேச முடியாதவர்களின் தலைவர்) என்ற பத்திரிக்கை தனது கருத்துகளை வெளிப்படுத்துவதற்காகவும் ***பஹிஷ்கிரித் ஹிடாகாரினி*** சபை (தனித்துவிடப்பட்டவர்களின் நலனுக்கான அமைப்பு) என்ற அமைப்பைத் தனது செயல்பாடுகளுக்காகவும் அவர் தொடங்கினார்.
- கிணறுகள் மற்றும் ஊருணிகளில் ம தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தரவேண்டிய அடிப்படை உரிமைகளை மீட்டுத்தர மஹத் சத்தியாகிரகம் என்ற அமைப்பைத் தொடங்கினார்.
- ஆகஸ்ட் 1932 இல் வகுப்புவாரித் தொகுதி ஒதுக்கீடுகள் குறித்து பிரிட்டிஷ் அரசு அறிவித்தது. இவ்வாறாக இட ஒதுக்கீட்டுடன் கூடிய தனித்தொகுதிகள் பற்றிய அம்பேத்கரின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டன.

பூனா ஒப்பந்தம்

- 1932 ஆகஸ்டு 16 ஆம் நாள் வகுப்புவாரி ஒதுக்கீட்டை ராம்சே மெக்டொனால்டு அறிவித்தார்.
- தீண்டத்தகாதோருக்குத் தனித் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளதைத் தனது வாழ்நாள் முழுவதும் எதிர்க்கப்போவதாக மிகவும் வருத்தத்துடன் காந்தியடிகள் அறிவித்தார். தான் அடைக்கப்பட்ட ஏரவாடா சிறையில் 1932 செப்டம்பர் 20 ஆம் நாள் முதல் சாகும் வரை உண்ணாவிரதத்தை இருக்க முயன்றார்.
- காந்தியடிகள் அம்பேத்கார் இருவரும் சிறைச்சாலையில் நடந்த சந்திப்புக்குப் பிறகு வகுப்புவாரித் தொகுதி ஒதுக்கீடு திருத்தப்பட்டது. அம்பேத்கார் மற்றும் காந்தியடிகளுக்கு இடையே ஏற்பட்ட புதிய ஒப்பந்தம் பூனா ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்டது.

- ☯ ***அதன் விதிமுறைகள்***– *தனித்தொகுதிகள் பற்றிய கொள்கைகள் கைவிடப்பட்டன. மாறாக, ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்குதல் கூட்டுத் தொகுதிகள் பற்றிய யோசனை ஏற்கப்பட்டது.*
- ☯ *ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கான இடங்கள் 71 லிருந்து 148 ஆக அதிகரிக்கப்பட்டது. மத்திய சட்டப் பேரவையில் 18 சதவிகித இடங்கள் ஒதுக்கப்பட்டன.*

- 🕮 1937 இல் சுதந்திர தொழிலாளர் கட்சியை அம்பேத்கர் தொடங்கினார்.
- 🕮 1942 இல் பட்டியல் இனத்தவர் கூட்டமைப்பை அம்பேத்கர் தொடங்கினார்.
- 🕮 1942 ஆம் ஆண்டு பாதுகாப்புத் துறை ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக அம்பேத்கர் நியமிக்கப்பட்டார். சில மாதங்களுக்குப் பிறகு அரசப்பிரதிநிதியின் அமைச்சரவையில் அமைச்சராக இடம்பிடித்தார்.

தீண்டாமைக்கு எதிரான பிரச்சாரம்

- 🕮 காந்தியடிகளுக்கு அம்பேத்கார் உடனான தொடர்புகள் சாதி அமைப்புகள் பற்றிய காந்தியடிகளின் கருத்துக்களில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் தமது இருப்பிடத்தை வார்தாவில் இருந்த சத்தியாகிரக ஆசிரமத்துக்கு மாற்றினார்.
- 🕮 அரிஜனர்களுக்கான பயணம் என்ற நாடுதழுவிய பயணத்தை காந்தியடிகள் மேற்கொண்டார். ***அரிஜனர் சேவை சங்கத்தை*** அமைத்து சமூகத்தில் உள்ள பாரபட்சங்களை முழுமையாக அகற்றுவதற்கு பணியாற்றினார்.
- 🕮 இதற்காக 1933 இல் இரண்டு உண்ணாவிரதங்களை மேற்கொண்டார். கோயில் நுழைவுப் போராட்டம் என்பது இந்தப் பிரச்சாரத்தின் முக்கியமான பகுதியாகும.
- 🕮 1933 ஜனவரி 8 ஆம் ***கோவில் நுழைவு நாள்*** என அனுசரிக்கப்பட்டது.

ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களில் புரட்சிகர தேசியவாதத்தின் காலம்

- 🕮 இந்திய தேசிய காங்கிரசில் இடதுசாரிகளின் செல்வாக்கும் படிப்படியாகக் சுதந்திரப் போராட்டத்தில் அது ஏற்படுத்திய தாக்கமும் 1920 களின் பிற்பகுதியில் கணிசமான அளவில் உணரப்பட்டது. இந்தியக் பொதுவுடைமைக் கட்சியானது எம்.என். ராய், அபானி முகர்ஜி, எம்.பி.டி ஆச்சார்யா முகமது அலி, முகமத ஷாஃபிக் ஆகியோரால் 1920 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சோவியத் யூனியனில் உருவாக்கப்பட்டது.
- 🕮 1921 சூன் 3 இல் முதல் புரட்சிகர தேசியவாத குழுவினர் பெஷாவருக்கு வந்தனர். ஆனால் அவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டனர்.
- 🕮 1925 இல் இந்தியாவெங்கிலும் இருந்து வந்திருந்த பல்வேறு கம்யூனிஸ்ட்களின் குழுக்களின் மாநாடு ஒன்று நடந்தேறியது. இந்த மாநாட்டில் தமிழ்நாட்டிலிருந்து சிங்காரவேலர் சென்று கலந்துகொண்டார். முடிவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பம்பாயில் முறைப்படி தொடங்கப்பட்டது.
  - ☯ *எம் . சிங்காரவேலர் (18 பிப்ரவரி 1860– 11 பிப்ரவரி 1946) மதராசில் பிறந்தார். திரு. வி. கல்யாணசுந்தரத்துடன் இணைந்து தென்னிந்தியாவில் பல தொழிற்சங்கங்களை இவர் தோற்றுவித்தார். 1923 ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாள் முதன்முறையாக நாட்டில் மே தினத்தைக் கொண்டாடினார். 1928 ஆம் ஆண்டு தென்னிந்திய ரயில்வே வேலைநிறுத்தத்தை (பொன்மலை, திருச்சிராப்பள்ளி) ஏற்பாடு செய்ததில் இவர் முக்கியப் பங்கு வகித்தார். அதற்காகத் தண்டனை பெற்றார்.*

கான்பூர் சதிவழக்கு –1924

- 🕮 போல்ஷ்விசம் என்று அழைக்கப்பட்ட அரசியல் புரட்சிகர தேசியவாதத்தை நசுக்கும் பொருட்டு பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் ஒடுக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. 1924 ஆம் ஆண்டின் கான்பூர் சதிவழக்கு அத்தகைதொரு நடடிவக்கையே ஆகும். அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கம்யூனிஸ்ட்டுகளும் தொழிற்சங்கவாதிகளும் ஆவார்.
- 🕮 இந்திய தண்டனைச் சட்டம் 121 ஏ பிரிவின் கீழ் அவர்களுள் எட்டு பேர் (முதலில் 13 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது.) *வன்முறையான புரட்சி ஒன்றின் மூலம் ஏகபோக பிரிட்டனிடமிருந்து இந்தியாவை முற்றிலும் பிரித்து பிரிட்டானிய இந்தியாவின் பேரரசின் இறையாண்மைக்குக் குந்தகம் விளைவிப்பதாகக்* குற்றம் சாட்டப்பட்டுப் பல்வேறு சிறைகளுக்கு அனுப்பப்பட்டனர்.

- இவ்வழக்கு நீதிபதி ஹோம்ஸ் முன்னிலையில் விசாரனைக்கு வந்தது. இவர் கோரக்பூர் அமர்வு நீதிபதியாகப் பணியாற்றியபோது சௌரிசௌரா வழக்கில் தொடர்பு கொண்டவர்களாகக் குற்றம் சாட்டப்பட்ட 172 விவசாயிகளுக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்துப் பிரசித்தி பெற்றவர்.
- கான்பூர் சதிவழக்கில் முசாபர் அகமது, சவுகத் உஸ்மானி, நளினி குப்தா, எஸ், ஏ. டாங்கே ஆகியோர் நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை அனுபவிப்பதற்காகச் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.
- ஆங்கிலேயர் ஆண்ட இந்தியாவில், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக வழக்கறிஞர்களை அமர்த்தவும் நிதி திரட்டவும் ***கம்யூனிஸ்ட்களின் பாதுகாப்புக் குழு*** ஒன்று உருவாக்கப்பட்டது.

மீரட் சதி வழக்கு–1929

- 1929 ஆம் ஆண்டின் மீரட் சதி வழக்குதான் அனேகமாக, ஆங்கிலேய அரசினரால் தொடுக்கப்பட்ட அனைத்துக் கம்யூனிஸ்ட் சதி வழக்குகளிலும் பெரிதும் புகழ்பெற்றதாகும்.
- 1927 ஆம் ஆண்டு பிப்ரவரியிலும் செப்டம்பரிலும் நடைபெற்ற காரக்பூர் ரயில்வே பணிமனை வேலைநிறுத்தங்கள்.
- 1928 ஆம் ஆண்டு ஜனவரி, சூலை மாதங்களுக்கிடையே நடைபெற்ற லில்லுவா ரயில் பணிமனை வேலைநிறுத்தம்.
- 1928 ஆம் ஆண்டு கல்கத்தா துப்புரவுத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம்.
- 1929 ஆம் ஆண்டு சூலை, ஆகஸ்ட் மாதங்களில் வங்காளத்தின் சணல் ஆலைகளில் வேலைநிறுத்தம்.
- 1928 ஆம் ஆண்டு சூலையில் திருச்சிராப்பள்ளியின் பொன்மலை பணிமனையில் நடைபெற்ற வேலைநிறுத்தம்
- 1928 ஏப்ரலில் பம்பாயில் நடந்தேறிய ஜவுளித் தொழிலாளர் வேலைநிறுத்தம் ஆகியவை குறிப்பிட்டுச் சொல்லத்தக்கச் கம்யூனிஸ்டுகளின் முக்கிய போராட்டமாகும்.
- இந்த வேலைநிறுத்தங்களின் அலையாலும் கம்யூனிஸ்ட் செயல்பாடுகள் பரவுவாதாலும் கவலை அடைந்த ஆங்கிலேய அரசு 1928 ஆம் ஆண்டின் தொழிற்தகராறுகள் சட்டம், 1928 ஆம் ஆண்டின் பொதுமக்கள் பாதுகாப்பு மசோதா ஆகிய இரு கொடுஞ்சட்டங்களை இயற்றியது.
- பம்பாய், கல்கத்தா, பஞ்சாப், பூனா, ஒருங்கிணைந்த பிரதேசங்கள் போன்ற பிரிட்டிஷ் இந்தியாவின் பகுதிகளிருந்து கம்யூனிஸ்ட் கட்சியின் 32 முன்னோடிச் செயல்பாட்டாளர்களைக் கைது செய்தது.
- இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டியமைக்க உதவுவதற்கென பிரிட்டானிய கம்யூனிஸ்ட் கட்சியால் அனுப்பிவைக்கப்பட்ட பிலிப் ஸ்ப்ராட், பான் ப்ராட்லி, லெஸ்டர் ஹட்சின்சன் ஆகிய பிரிட்டானிய கம்யூனிஸ்டுகள் மூவரும் கைது செய்யப்பட்டனர்.
- கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர்களைப் போன்று இவர்களும் இந்திய தண்டனைச் சட்டம் 121 ஏ பிரிவின் கீழ் குற்றம் சாட்டப்பட்டனர். கைது செய்யப்பட்ட 32 தலைவர்களும் மீரட்டுக்கு கொண்டு வரப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.
- காலனிய நிர்வாகத்தினரால் ***நிலைகுலைவிக்கும் விஷயங்கள்*** என்று விவரிக்கப்பட்ட புத்தகங்கள், கடிதங்கள், போன்ற கணிசமான ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுக் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான சாட்சியங்களாக ஒப்படைக்கப்பட்டன.
- கே.எஃப். நாரிமன், எம்.சி. சக்லா போன்ற புகழ்பெற்ற வழக்கறிஞர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் வாதாடினர்.
- 1929 இல் நடைபெற்ற கைது நடவடிக்கைகளுக்கு நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் 1933 ஜனவரி 16 இல் மீரட் அமர்வு நீதிமன்றம் கடுமையான தீர்ப்பை வழங்கியது. 27 பேர் தண்டிக்கப்பட்டு வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.
- இங்கிலாந்து நாட்டினர் மூவர் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டதைத் தொடர்ந்து இந்த வழக்கு சர்வதேச அளவிலும் தெரியவந்தது. மிகவும் முக்கியமாக ரோமன் ரோலண்ட், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் போன்றவர்களும் கூடக் குற்றம் சாட்டவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தனர்.
- தேசிய, சர்வதேச அழுத்தங்களின் காரணமாக, அவர்களின் கோரிக்கையைத் தொடர்ந்து சூலை 1933 இல் தண்டனை வெகுவாகக் குறைக்கப்பட்டது.

பகத்சிங்கும் கல்பனா தத்தும்

- காலனி ஆட்சியை ஆயுதக் கிளர்ச்சியின் மூலம் அகற்றும் பொருட்டு 1924 இல் இந்துஸ்தான் குடியரசு இராணுவம் கான்பூரில் உ ருவாக்கப்பட்டது.

- 1925 ஆம் ஆண்டு ராம்பிரசாத் பிஸ்மில், அஷ்ஃபாகுல்லா கான் மற்றும் பலர் லக்னோ அருகே காகோரி என்ற கிராமத்தில் அரசுப்பணத்தை கொண்டுச்சென்ற ஒருரயில்வண்டியை கொள்ளையடித்தனர். கைதுசெய்யப்பட்டு அனைவரும் தூக்கிலிடப்பட்டனர்.
- கிஷன்சிங் (தகப்பனார்), வித்யாவதி கவுர் (தாயார்) ஆகியோரின் மகனாக பகத்சிங், தற்போதைய பாகிஸ்தானின் ஒரு பகுதியான பஞ்சாப் மாநிலத்திலுள்ள லயல்பூர் மாவட்டம், ஜார்ன்வாலா என்ற இடத்தில் 1907 செப்டம்பர் 28 இல் பிறந்தார்.
- பகத்சிங்கின் 14 ஆம் வயதில் ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ந்தது. அவர் தனது இளமைக் காலம் முதலாகவே, நவ்ஜவான் பாரத் சபா, ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷன் ஆகிய அமைப்புகளில் தன்னை இணைத்துக்கொண்டார். இதில் இரண்டாவது அமைப்பு சச்சின் சன்யால், ஜோகேஷ் சட்டர்ஜி ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டது. செப்டம்பர் 1928 இல் அதனைத் தொடர்ந்து ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன் என்று பகத்சிங்காலும் , சந்திரசேகர ஆசாத், சிவராம் ராஜகுரு, சுகதேவ் தாபர் ஆகிய தோழர்களாலும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பகத்சிங் அதன் தலைவராக விளங்கினார்.
- 1929 ஏப்ரல் 8 இல் மத்திய சட்டமன்றத்தில் மீது பகத்சிங் குண்டு வீசினார்.

லாகூர் சதி வழக்கு

- ராஜகுரு, சுகதேவ், ஜதீந்திரநாத் தாஸ் ஆகியோருடன் பகத்சிங் மேலும் 21 பேரும் கைது செய்யப்பட்டனர். சாண்டர்ஸ் கொலை தொடர்பான விசாரணைக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டனர். சிறையில் உண்ணாவிரதம் மேற்கொண்ட ஜதீந்திரநாத் தாஸ் 64 நாட்களுக்கு பிறகு மரணமடைந்தார்.
- 1928 டிசம்பர் மாதத்தில் லஜபதிராய் மீது கொடுந்தாக்குதல் நடத்தியதற்கும் அதனைத் தொடர்ந்த ராயின் மரணத்திற்கும் பொறுப்பான லாகூர் காவல்துறைக் கண்காணிப்பாளர் ஜேம்ஸ் ஏ. ஸ்காட்டுக்குப் பதில் தவறுதலாக சாண்டர்ஸ் பலியானர். 1929, டிசம்பரில் இர்வின் பிரவு (1926–1931) பயணம் செய்துகொண்டிருந்த ரயிலைக் கொளுத்தும் முயற்சியிலும் அவர்கள் ஈடுபட்டனர்.
- லாகூர் சதி வழக்கின் விசாரணைகள் முடியும் வரை குண்டு வீச்சு வழக்கின் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கில்தான் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோருக்கு 1930 அக்டோபர் 7 அன்று மரண தண்டனை விதிக்கப்பட்டது. ***புரட்சி ஓங்குக*** (Inquilab Zindabad) என்று ம் ***பட்டாளி வர்க்கம் வாழ்க*** என்றும் பகத்சிங் முழங்கினார்.
- லாகூர் சிறைச்சாலையில் 1931 மார்ச் 23 அன்று அதிகாலையில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.

கல்பனா தத் (1913–1995)

- 1920 களின் பிற்பகுதியில் கல்பனாதத் என்னும் ஓர் இளம்பெண் (கம்யூனிஸ்ட் தலைவர் பி.சி. ஜோஷியைத் திருமணம் செய்து கொண்ட பின்னர் கல்பனா ஜோஷி என்ற அறியப்பட்டவர்) சிட்டகாங் ஆயுதப் படைத்தளத்தைத் துணிகரமாகத் தாக்கியதன் மூலம் இளம் நெஞ்சங்களில் தேசபக்தியைக் கனன்றெழச் செய்தவர்.

சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதல்

- சூரிய சென்னின் புரட்சிகக் குழுவான இந்தியக் குடியரசு இரணுவம் ஐரிஷ் குடியரசுப் படைக்குப் பின் அதுபோன்று பெயர் சூட்டிக்கொண்டது.
- சிட்டகாங்கைக் கைப்பற்றுவதற்காக மறைந்திருந்து தாக்கும் கொரில்ல பாணி தாக்குதலை நடத்த அவர்கள் திட்டமிட்டனர்.
- 1930 ஏப்ரல் 18 அன்று இரவில் சிட்டகாங் படைத்தளம் தாக்கித் தகர்க்கப்பட்டது. புரட்சியாளர்கள் தேசியக்கொடியை ஏற்றி *வந்தே மாதரம் , புரட்சி ஓங்குக* போன்ற கோஷங்களை முழங்கிக் குறிப்புணர்த்தினர்.
- பிப்ரவரி 1933இல் அவர் கைதானர். பதினொரு மாதங்கள் கழித்து 1934 ஜனவரி 12 இல் அவருக்குத் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்த சிட்டகாங் தாக்குதலில் ஈடுபட்டவர்களில் கல்பனா தத்தும் ஒருவர் ஆவார்.
- புரட்சிகர சிட்டகாங் இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்றதினால் கல்பனா தத் கைது செய்யப்பட்டார். தண்டனையாக சூர்யா சென்னும் கல்பனா தத்தும் வாழ்நாள் முழுதும நாடுகடத்தப்பட்டனர். குற்றச்சாட்டு யாதெனில் ***பேரரசருக்கு எதிரான போரை நடத்தியது*** .

இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி அமர்வு–1931

- மார்ச் 1931 இல் நடந்த கராச்சி அமர்வு சர்தார் வல்லபாய் படேல் தலைமையில் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதோடல்லாமல் சுதந்திர இந்தியாவின் பொருளாதார கொள்கை பற்றிய ஒரு பார்வையை வழங்கிது.

இந்தியாவில் தொழில்துறை வளர்ச்சி

- 1854 இல் பம்பாயில் கவஸ்ஜீ நானாபாய் தவர் (1815–73) என்ற பார்சி இனத்தைச் சேர்ந்த இந்தியரே பருத்தி ஆலையை முதன்முதலில் தொடங்கினார். இது *பாம்பே ஸ்பின்னிங் அண்ட் வீவிங் கம்பெனி* என்று அழைக்கப்பட்டது.
- இந்தியாவின் தொழில்துறையை நிறுவுவதில் ஒரு முக்கியமான மைல்கல் இந்தியாவின் இருப்புப்பாதை விரிவாக்கமும் புகைவண்டிப் போக்குவரத்து அதிகரித்ததுமேயாகும். இந்தியாவின் முதல் பயணிகள் ரயில் 1853 ஏப்ரல் 16, பிற்பகல் 3.35 மணிக்கு பம்பாயிலுள்ள போரி பந்தர் இரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு 34 கி.மீ. தொலைவிலுள்ள தானே எனுமிடத்தைச் சென்றடைந்தது.
- இந்தியாவின் முதல் சணல் உற்பத்தி ஆலை கல்கத்தாவில் 1855 இல் நிறுவப்பட்டது. 1914 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் மட்டும் 64 சணல் ஆலைகள் இருந்தன.
- 1843இல் ரவீந்திரநாத் தாகூரின் தாத்தா துவாரகநாத் தாகூர் (1794–1847) என்பவரால் ராய்கஞ்ச் என்ற இடத்தில் பெங்கால் நிலக்கரி நிறுவனம் நிறுவப்பட்டது. 1892 க்குப் பிறகு நிலக்கரி உற்பத்தித் துறையின் வளர்ச்சி வேகமெடுத்து முதல் உலகப்போரின் போது உச்சத்தையெட்டியது.
- 1907 இல் பீகாரிலுள்ள சாகி நகரில் டாடா குழுமத்தால் டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (Tisco) முதன் முதலாக சுதேசி இயக்கத்தின் ஒரு நிகழ்வாக அமைக்கப்பட்டது.
- இந்தியாவின் முதல் இரும்பு மற்றும் எஃகு ஆலை 1889 இல் வங்களாத்தில் ஐரோப்பிய குழுவால் அமைக்கப்பட்டது.
- முதல்முறையாக 1916 இல் ஒரு தொழிற்துறை ஆணையம் நியமிக்கப்பட்டது.
- 1882 ஆம் ஆண்டில் லக்னோவில் முதல் காகித ஆலை இந்திய முதலாளிகளால் கூப்பர் பேப்பர் மில் என்ற பெயரில் அமைக்கப்பட்டது.
- 1904 இல் மதராஸ் நகரில் தென்னிந்திய தொழிற்சாலை நிறுவனம் சிமெண்ட் உற்பத்தியைத் தொடங்கியது.
- 1860 இல் கான்பூரில் அரசால் ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலை அமைக்கப்பட்டது.
- 1905 இல் முதன் முறையாக இந்தியருக்குச் சொந்தமான தேசிய தோல் பதனிடும் தொழிற்சாலை ஒன்று கல்கத்தாவில் அமைக்கப்பட்டது.
- 1919 சிந்தியா நீராவிக் கப்பல் கம்பெனி லிமிடெட் ஆரம்பிக்கப்பட்டது. 1939 இல் அவர்கள் பிரிட்டிஷாரின் பம்பாய் நீராவிக் கப்பல் நிறுவனத்தையும் வாங்கிவிட்டனர்.
- 1932 இல் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மதுக்கரை என்ற இடத்தில் சிமெண்ட் தொழிற்சாலை தொடங்கப்பட்டது.

தேசிய வாத அரசியலில் வகுப்பு வாதம்

- பம்பாய் ஆளுநர் எல்பின்ஸ்டோன், ***பழைய ரோமானிய இலட்சியமான Divide et Impera_(பிரித்தாளுதல்)__என்பது நமதாக வேண்டும்*** என்று எழுதினார்.
- சர் சையது அகமது கான் *அலிகார்* இயக்கத்தை நிறுவினார். சர் சையது அகமது கான் இலண்டன் பிரிவி கவுன்சிலிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியரான சையது அமீர் அலி போன்ற முஸ்லீம் தலைவர்கள் காங்கிரஸ், இந்துக்களை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு என்று வாதிட்டனர்.
- *இந்து – முஸ்லிம் வகுப்புவாதம், நடுத்தர வகுப்புகளுக்கிடையே நடந்த மோதல்களின் விளைவே ஆகும். மனசாட்சியுள்ள இந்து மற்றும் முஸ்லிம் பொதுமக்கள் இத்தகைய வகுப்புவாதத்திலிருந்து முற்றிலும் விலகியே இருந்தனர்–**ஜவஹர்லால் நேரு***
- 1909 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பஞ்சாப் இந்து சபை, இந்து இனவாத கருத்தியல் மற்றும் அரசியலுக்கான அடித்தளத்தை அமைத்தது. முஸ்லிம்களை திருப்திபடுத்தும் கொள்கையை, இந்திய தேசிய காங்கிரஸ் பின்பற்றியதற்கு லால் சந்த் கடும் கண்டனம் தெரிவித்தார்.

இந்திய முஸ்லிம் லீக்கின் உருவாக்கம்

- 1906 அக்டோபர் 1 இல் முஸ்லிம் பிரபுக்கள், ஆளும் வர்க்கத்தினர், சட்ட வகுப்பினர், சட்ட வல்லுநர்கள் மற்றும் சமூகத்தின் உயர்பிரிவினர் பெரும்பாலும் அலிகார் இயக்கத்தோடு தொடர்புடையவர்கள் ஆகிய 35 பங்கேற்பாளர்கள் ஆகாகான் அலைமையின் கீழ் சிம்லாவில் ஒன்று திரண்டு அப்போதைய அரசப்பிரதிநிதியான மிண்டோ பிரபுவிடம் தங்களது கருத்துகளை முன்வைத்தனர்.
- அரசுப் பணிகளில் முஸ்லிம்களின் சதவீதத்தை உயர்த்துதல், உயர்நீதி மன்றங்களின் முஸ்லிம் நீதிபதிகளின் நியமனம் மற்றும்அரசபிரதிநிதியின் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.
- சிம்லா மாநாடு அரசப்பிரதிநிதியிடமிருந்து எந்த ஒரு நல்ல தீர்மானத்தையும் முஸ்லிம்களுக்கு வழங்கவில்லையென்றாலும், இது அகில இந்திய முஸ்லிம்களுக்கு வழங்கவில்லையென்றாலும், இது அகில இந்திய முஸ்லிம் லீக் உருவாவதற்கு ஒரு ஊக்கியாக செயல்பட்டது எனலாம்.
- உருவாக்கப்பட்ட மூன்றே ஆண்டுகளில் முஸ்லிம்களுக்கான தனித்தொகுதி பெறுவதை வெற்றிகரமாக சாதித்தது எனலாம்.
- லக்னோ ஒப்பந்தம் (1916), முஸ்லிம்களின் தனி அரசியல் அடையாத்திற்கான அலுவல் முத்திரையை முஸ்லிம் லீக்கிற்கு வழங்கியது.
    - ❖ *தனித்தொகுதி அல்லது வகுப்புவாரித் தொகுதி– இந்த வகையான முறையில் முஸ்லிம்கள் மட்டுமே முஸ்லிம் வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும். 1909 ஆம் ஆண்டு மிண்டோ–மார்லி சட்டம், பேரரசு சட்டமன்றத்தில் அலுவலரல்லாத 27 உறுப்பினர்களுக்கான இடங்களில் எட்டு இடங்களை முஸ்லிம்களுக்கு வழங்கியது. மாகாண சட்டமன்றங்களின் இடங்களை முஸ்லிம் வேட்பாளருக்குப் பின்வருமாறு ஒதுக்கியிருந்தது. அவையாவன : மதராஸ் 4, பம்பாய் 4, வங்காளம் 5.*

அகில இந்திய இந்து மகாசபையின் எழுச்சி

- அம்பாலாவில் நடைபெற்ற ஐந்தாவது பஞ்சாப் இந்து மாநாட்டிலும் , பெரோஷ்பூரில் நடைபெற்ற ஆறாவது மாநாட்டிலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் தொடர்ச்சியாக 1915 இல் இந்துக்களின் முதல் அகில இந்திய மாநாடு ஹரித்துவாரில் கூட்டப்பெற்றது. அங்குதான் டேராடூனைத் தலைமையிடமாகக் கெண்ட அகில இந்திய இந்து மகாசபை தொடங்கப் பெற்றது.
- இதனைத் தொடர்ந்து மாகாண இந்துசபைகள் அலகாபாத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஐக்கிய மாகாணத்திலும் பம்பாயிலும், பீகாரிலும் இவ்வமைப்புகள் திறம்பட செயல்படவில்லை. சென்னையிலும் வங்காளத்திலும் ஓரளவிலான ஆதரவேயிருந்தது.
- வகுப்புவாதிகளின் பிரிவினைவாத அரசியலைக் கிலாபத் இயக்கம் ஓரளவுக்கு ஒத்திப்போட்டு. இதன் விளைவாக 1920–1922 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்து மகாசபை செயல்படவில்லை.
- 1921 இல் நடைபெற்ற குருதி கொட்டிய மலபார் கிளர்ச்சியின் போது அங்கு முஸ்லீம் விவசாயிகள் ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் இந்து நிலப்பிரபுக்களுக்கு எதிராகவும் களமிறங்கியது இந்து மகா சபை தன்னுடையப் பிரச்சாரத்தை புதுப்பிக்க காரணமாயிற்று. மலபாரில் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு முஸ்லிம் தலைவர்களின் பொது மன்னிப்பு கேட்க வேண்டுமென காந்தியடிகள் கோரிக்கை விடுத்தார்.
- 1922 இல் ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தப்பட்டதும், 1924 இல் கலீஃபா பதவி ஒழிக்கப்பட்டதும் முஸ்லீம்களிடையே பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. ஒத்துழையாமை இயக்கத்தின் பின் விளைவாகக் காங்கிரசுக்கும் முஸ்லிம் லீக்குக்குமான ஒப்பந்தம் சிதைந்தது.
- 1923 இல் வாராணாசியில் நடைபெற்ற இந்து மகாசபையின் ஆறாவது மாநாட்டில் 968 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்து மகாசபை

- வகுப்புவாதம் பஞ்சாபில் ஒரு வலுவான இயக்கமாக முழுமையான நிலை கொண்டது. 1924 இல் பஞ்சாப் மாகாணம் இந்து, முஸ்லிம் மாகாணங்களாகப் பிரிக்கப்பட வேண்டுமென லாலாலஜபதி ராய் வெளிப்படையாகக் கூறினார்.
- அரசியல் களத்தில் இந்துமத மறுமலர்ச்சிக்கு ஆதரவான சக்திகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய இந்துமகாசபை ***அகண்ட இந்துஸ்தான்*** என்னும் முழக்கத்தை முன் வைத்தது.

- முகமது அலி ஜின்னாவை இந்து – முஸ்லீம் ஒற்றுமையின் தூதுவர் என சரோஜினியால் புகழாரம் சூட்டப்பெற்றவராவர்.
- இரண்டாவது வட்டமேஜை மாநாட்டுப் பிரதிநிதிகள் வகுப்பாத அடிப்படையில்தான் தேர்வு செய்யப்பட்டனர்.
- 1925 இல் உருவாக்கப்பட்ட ராஷ்ட்ரிய சுயசேவா சங்கம் விரிவடைந்து கொண்டருந்தது. அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,00,000 மாக உயர்ந்தது.
- கே.பி. ஹெட்கேவர், வி.டி. சவார்க்கர், எம்.எஸ் கோல்வாகர் ஆகியோர் இந்து ராஷ்டிரா எனும் கோட்பாடடை மேலும் விரிவாக்கம் செய்யும் முயற்சிகளை மேற்கொண்டனர்.
- ***இந்துக்கள் ஆகிய நாங்கள் நாங்களாகவே ஒரு தேசமாக உள்ளோம்–*** வி.டி. சவார்க்கர்
- 1934 முதலாகவே தனது உறுப்பினர்கள் இந்து மகாசபையிலோ ஆர். எஸ்.எஸ் இயக்கத்திலோ இணைவதைக் காங்கிரஸ் தடைசெய்தது.
- ஆனால் டிசம்பர் 1938 இல் தான் காங்கிரஸ் செயற்குழு இந்து மகாசபையில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் காங்கிரசில் உறுப்பினர்களாக இருக்கத் தகுதி இல்லாதவர்கள் என அறிவித்தது.
- 1937 இல் தேர்தல் நடைபெற்ற 11 மாகாணங்களில் 7 மாகாணங்களில் காங்கிரஸ் வெற்றி வாகை சூடியது.

மீட்பு நாளாகக் கடைப்பிடித்தல்

- 1939 இல் இரண்டாம் உலகப் போர் வெடித்தது. இந்தியாவின் அரசபிரதிநிதியாக இருந்த லின்லித்கோ இந்தியாவும் போரில் இருப்பதாக உடனடியாக அறிவித்தார். காங்கிரசைக் கலந்தாலோசிக்காமல் இம்முடிவு எடுக்கப்பட்டதால் காங்கிரஸ் மிகவும் ஆத்திரமடைந்தது. காங்கிரஸ் செயற்குழு மாகாணங்களைச் சேர்ந்த காங்கிரஸ் அமைச்சர்கள் அனைவரும் ராஜினாமாச் செய்ய வேண்டுமென முடிவு செய்தது.
- காங்கிரசின் அமைச்சர்களின் ராஜினாபமாவைத் தொடர்ந்து மாகாண ஆளுநர்கள் சட்டமன்றங்களை தற்காலிகமாக நிறுத்தி வைத்த பின்னர் மாகாண நிர்வாகப் பொறுப்பைத் தாங்கறே ஏற்றுக் கொண்டனர்.
- காங்கிரஸ் ஆட்சி முடிவடைந்ததை ***மீட்பு நாளாக*** 1939 டிசம்பர் 22 இல் முஸ்லீம் லீக் கொண்டாடியது.
- இந்நிலையில் 1940 மார்ச் 26 இல் லாகூரில் முஸ்லிம் லீக், முஸ்லிம்களுக்கு தனிநாடு வேண்டுமென்ற கோரிக்கையைத் தீர்மானமாக நிறைவேற்றியது.
    - *1930 இல் அலகாபாத்தில் நடைபெற்ற முஸ்லீம் லீக்கின் ஆண்டு மாநாட்டில் இக்பால் ஒருங்கிணைக்கப்பட்ட வடமேற்கு இந்திய முஸ்லீம் அரசைத் தான் காண விரும்புவதாக கூறினார். இது பின்னர் கேம்பிரிட்ஜ் மாணவர்களில் ஒருவரான ரகமது அலியால் வலுவாக வெளிப்படுத்தப்பட்டது. லீக்கின் அடிப்படைக் கோரிக்கையானது* ***இரு நாடு கொள்கை*** ஆகும். இதனை முதலில் சர் வாசிர் ஹசன் என்பவர்தான் 1937 இல் நடைபெற்ற பம்பாய் லீக் மாநாட்டில் தனது தலைமை உரையில் குறிப்பிட்டார்.

நேரடி நடவடிக்கை நாள்

- 1942 இல் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை முஸ்லிம் லீக் வெளிப்படையாகவே புறக்கணித்தது.
- 1946 இல் அரசியல் நிர்ணய சபைக்கு நடைபெற்ற தேர்தலில் முஸ்லிம் லீக் மத்திய சட்டமன்றத்தில் தனக்கென ஒதுக்கப்பட்ட 30 இடங்களிலும் வென்றதோடு, மற்ற மாகாணங்களில் ஒதுக்கப்பட்ட பெரும்பாலான இடங்களையும் வென்றது.
- காங்கிரஸ் தலைவர்களும் ஜின்னாவும் அமைச்சரவைத் தூதுக்குழு திட்டத்தை ஏற்றுக்கொண்டனர். ஆனால் பல வாரங்கள் நடைபெற்ற இரகசிய பேச்சுவார்த்தைகளுக்குப் பின் 1946 சூலை 29 இல் முஸ்லிம் லீக் அமைச்சரவைத் தூதுக்குழு திட்டத்தை நிராகரிப்பதாக அறிவித்ததோடு, இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ***ஆகஸ்ட் 16 அன்று நேரடி நடவடிக்கை நாளில்*** ஈடுபடவும் அழைப்பு விடுத்தது. இது கடுமையான வன்முறைத் தாக்குதல்களுக்கு இட்டுச் சென்றதோடு ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளும் ஏற்பட்டன. இதுவரை நாட்டைப் பிரிவினை செய்யும் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த காந்தியடிகள் முஸ்லிம் லீக்கின் பாகிஸ்தான் கோரிக்கையை ஏற்றார்.

இந்தியக் தேசியக் இயக்கத்தின் இறுதி கட்டம்

- காந்தியடிகள் அக்டோபர் 1940 இல் தனிநபர் சத்தியாகிரகதைத் துவங்கியதன் மூலமாக காங்கிரஸ் இயக்கத்தின் மனவலிமையை உறுதிப்படுத்தினார்.

- இதற்கிடையே இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக சுபாஷ் சந்திர போஸ் தேர்ந்தெடுக்கப்பட்டது காந்தியடிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியதால் சுபாஷ் தம் பதவியைத் துறந்தார். பின்னர் ஃபார்வர்ட் பிளாக் கட்சியைத் துவக்கினார். பிரிட்டிஷாரின் கைது நடவடிக்கையால் சுபாஷ் ஜெர்மனி மற்றும் சிங்கப்பூருக்கு தப்பிச் சென்று இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கி காங்கிரஸ் இயக்கத்திலிருந்து தனித்துப் புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.
- 1942 ஆம் ஆண்டு அதிருப்யிலிருந்த தேசியவாதிகளை அரவணைக்கும் பொருட்டு 1942 இல் கிரிப்ஸ் தூதுக்குழு வருகைபுரிந்தது. ஆனால் அதன் முன்மொழிவில் எந்தப் பலனும் இருப்பதாகத் தெரியவில்லை.

தனிநபர் சத்தியாகிரகம்.

- காந்தியடிகளால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சத்தியாகிகிகளை அவர்களின் பேச்சுரிமையை மையப்படுத்தி போருக்கு எதிரானப் பிரச்சாரத்தை மேற்கொள்ள தூண்டினார்.
- வினோபா பாவே மகாராஷ்டரத்தில் அமைந்த தனது பாவ்னார் ஆசிரமத்தருகே 1940 அக்டோபர் 17 இல் முதல் சத்தியாகிரகத்தை நடத்தியதின் வாயிலாக இவ்வியக்கம் தொடங்கப்பெற்று காந்தியடிகள் டிசம்பர் 1940 இல் இவ்வியக்கம் முடிவுக்கு வந்ததாக அறிவித்தார்.
- சில மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்ட பின் மீண்டும் ஜனவரி 1941 இல் குழு சத்தியாகிரகமாக உருவெடுத்தபோதும் அதை ஆகஸ்ட் 1941 இல் திரும்பப் பெறுவதாக அறிவித்தார்.

ஆகஸ்ட் கொடை

- தனிநபர் சத்தியாகிரகம் என்பது அரசபிரதிநிதி லின்லித்கோ பிரபுவின் ஆகஸ்ட் கொடைக்கு காங்கிரஸ் கொடுத்த பதிலடியாகும்.
- லின்லித்கோ பிரபு 1940 ஆகஸ்ட் 8 இல் அளிக்க முன்வந்தாவது :
    1. வரையறுக்கப்படாத ஒரு தேதியில் மொமினியன் அந்தஸ்து,
    2. அதிகமான இந்தியர்களைக் கொண்டு அரசபிரதிநிதியின் குழுவை விரிவாக்கம் செய்தல்
    3. இந்திய உறுப்பினர்களைக் கொண்ட போர் ஆலோசனைக் குழுவை உருவாக்குதல்.
    4. சிறுபான்மையினருக்கு உரிமைகளை அங்கீகரித்தல்
    5. போருக்குப் பின் இந்திய மக்கள் தங்களுக்கென்ற ஒரு அரசியல் சாசனத்தை இயற்ற உள்ள உரிமையை ஏற்று அதற்கு எதிர்கால வாய்ப்பளிக்க உறுதியளித்தல்.
- கல்கத்தாவில் கூடிய அனைத்து இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் போஸ் பதவித் துறப்பு செய்யவே, இராஜேந்திரப் பிரசாத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1939 இல் அவர் காங்கிரசின் அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டார்.

லாகூர் தீர்மானம்

- 1940 மார்ச் 23 இல் லாகூரில் பாகிஸ்தான் தனிநாடு கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ஜப்பான் தென்கிழக்கு ஆசியப் பகுதியில் முன்னேறி வந்ததும் பிரிட்டிஷ் படைகளின் வீழ்ச்சியும் நிலைமையைப் பெரிதும் மாற்றின. இதனால் விடுதலைக்கு ஒப்புதல் வழங்காமலேயே போர் முயற்சிகளில் இந்தியர்களின் ஒத்துழைப்பைப் பெறவேண்டிய அவசரமான சூழல் உதித்தது.
- லண்டன் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் , சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸை காங்கரசோடு பேச்சுவார்த்தை நடத்த அனுப்பிவைத்தார்.
- டிசம்பர் 1941 கூடிய காங்கிரஸ் செயற்குழு போருக்குப் பின் விடுதலையும், உடனடியாக முக்கியப் பிரிவுகளில் அதிகாரப் பகிர்வையும் உறுதியளிக்க பிரிட்டிஷ் அரசு முன்வந்ததால் தாங்கள் ஒத்துழைப்பு நல்கத் தயார் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

கிரிப்ஸ் தூது குழு வருகை

- சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் தலைமையிலான பிரதிநிதித்துவக் குழு மார்ச் 1942 இல் இந்தியா வந்தடைந்தது.
- கிரிப்ஸின் முன்மொழிவில் டொமினியன் அந்தஸ்தையும் போருக்குப் பின் அரசியல் சாசன வரைவுக்குழுவை உருவாக்குதலையும் ஆதரித்தார். அரசியல் சாசன வரைவுக் குழு மாகாண சபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டும் சுதேச அரசர்கள் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் நியமிக்கப்பட்டவர்களைக் கொண்டும் ஏற்படுத்தப்படும் என்றும் சொல்லப்பட்டிருந்தது. மேலும் அதில் பாகிஸ்தான் பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

- இவ்வரைவு பழைய வரைவுகளிலிருந்து எந்த மாற்றத்தையும் உள்ளடக்கியதாக யாருக்கும் தெரியவில்லை. இது பற்றி பின்னர் நேரு குறிப்பிடுகையில், *நான் முதன்முறையாக இவ்வரைவை வாசித்த போது கடுமையான மன அழுத்தத்திற்கு உட்பட்டேன்.* என்றார்.
- டொமினியன் அந்தஸ்து வழங்குவதென்பது ஏமாற்றமளிக்கக் கூடிய குறுகிய நடவடிக்கையாகும் என கூறி காங்கிரஸ் இவ்வரைவை நிராகரித்தது.
- ஜெர்மனியில் இருந்து மார்ச் 1942 இல் ஆசாத் ஹிந்து ரேடியோ மூலம் போஸ் இந்திய மக்களைத் தொடர்பு கொண்டு உரை நிகழ்த்தினார்.

வெள்ளையனே வெளியேறு இயக்கம்

- இந்திய தேசிய காங்கிரசின் செயற்குழு 1942 சூலை 14 இல் வார்தாவில் சந்தித்தது. இக்கூட்டத்தில் நாடு தழுவிய சட்ட மறுப்புப் போராட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள மறுத்த இராஜாஜியும் புலபாய் தேசாயும் காங்கிரஸ் செயற்குழுவில் இருந்து பதவித் துறப்பு செய்தனர்.
- நேருவும் அதே நிலைப்பாட்டைக் கொண்டிருந்தபோதும் செயற்குழுவின் பெரும்பான்மை முடிவுக்கு கட்டுப்பட்டார்.
- கிரிப்ஸ் தூதுக்குழுவோடு ஏற்பட்டிருந்த கசப்பான அனுபவம் காந்தியடிகளையும் நேருவையும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பிரிட்டிஷாரின் மீது நம்பிக்கை இழக்க வைத்தது.
- இதை காந்தியடிகள் 1942 மே 16 இல் கூடிய பத்திரிக்கையாளர் சந்திப்பில் வெளிப்படுத்தினார், ***இந்தியாவைக் கடவுளிடம் விட்டுவிடுங்கள், அது அதீதமான ஒன்றாக இருக்குமானால் அதை இயற்கையின் அராஜகப் போக்கில்கூட விட்டுவிடுங்கள் இவ்வரையறுக்கப்பட்ட ஒழுங்குமுறை கொண்ட அராஜகம் நீங்கிச் செல்வதால் முற்றிலும் தறிகெட்டு சட்ட சீர்கேடு ஏற்பட்டாலும் அந்த ஆபத்தை எதிர்கொள்ள தயாராக இருக்கிறேன்.*** என்றார்.
- அதன் பின் அவர் மக்களை நோக்கி ***செய் அல்லது செத்துமடி*** என்று கூறி ***முடிவை நோக்கிய ஒரு சண்டையாக*** கருதி தனது மறுப்பியக்கத்தைத் துவக்கினார்.
- காலனிய அரசு காந்தியடிகள் உட்பட அனைத்துக் காங்கிரஸ் தலைவர்களையும் 1942 ஆகஸ்ட் 9 அன்று அதிகாலையில் கைது செய்தது.
- கைதை கண்டித்து ஜாம்ஷெட்பூர் டாடா எஃகு தொழிற்சாலையில் ஆகஸ்ட் 20 தொடங்கி 13 நாட்கள் வேலைநிறுத்தம் போராட்டம் நடைபெற்றது. இதைபோல் அகமதபாத்தின் ஜவுளித் தொழிற்சாலையிலும் மூன்று மாதங்கள் வேலைநிறுத்தம் நடைபெற்றது.
- இதன் தொடர்ச்சியாக நாட்டின் பல இடங்களில் வன்முறை வெடித்தது. வங்காளத்தின் மிட்னாபூர் மாவட்டத்தில் செப்டம்பர் 1944 வரை ஏற்படுத்தப்பட்டிருந்த ***தம்லுக் ஜாட்டியா சர்க்கார்*** என்னும் இணை அரசாங்கம் சதாராவில் நடைபெற்றது.
- 1943 பிப்ரவரி 10 இல் சிறைச்சாலையில் துவக்கிய 21 நாட்கள் உண்ணாவிரதம் ஒரு திருப்புமுனையாக அமைந்து இயக்கத்திற்கு வலுவேற்றியது.
- கைதானவர்களின் எண்ணிக்கை 1943 ஆம் ஆண்டின் முடிவில் 91,836 என்ற அளவை எட்டியது. அதே காலகட்டத்தில் காவல்துறையினரின் துப்பாக்கி சூட்டுக்குப் பலியானவர்களின் எண்ணக்கை 1060 ஆனது. அரசின் 208 காவல் கண்காணிப்பு நிலைகளும் 332 இருப்புப்பாதை நிலையங்களும் 945 அஞ்சல் அலுவலகங்களும் முற்றிலுமாக அழிக்கப்பட்டது.
- வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் மற்றொரு சிறப்பம்சம் புரட்சியாளர்களால் வானொலி பம்பாய் நகரில் இரகசியமாக ஒளிபரப்பப்பட்டதாகும். இதற்கு வித்திட்டவர் உஷா மேத்தா என்பதோடு அதன் ஒலிபரப்பு மதராஸ் வரை கேட்கப்பட்டது.
- உடல்நலம் சார்ந்த காரணங்களுக்காக 1944 மே 6 இல் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட காந்தியடிகள் தனது ஆக்கப்பூர்வமானச் செயல் திட்டங்களை மேற்கொள்ளலானார்.
- 1943 இல் அரசபிரநிதியாக பதவியேற்ற வேவல் பிரபு , *பேச்சுவார்த்தை நடத்துவதைத் தவிர பிரிட்டிஷாருக்கு வேறு வழி இருக்கவில்லை* என்றார்.

நேதாஜி சுபாஷ் சந்திர போசும் இந்திய தேசிய இராணுவமும்

- 1941 மார்ச் மாதம் அவர் தனது இல்லததில் இருந்து நாடகத்தனமாக (மாறுவேடமணிந்து) தப்பித்து ஆப்கானிஸ்தான் சென்றடைந்தார். 1943 பிப்ரவரி மாதம், நீர்மூழ்கி கப்பல் மூலமாக ஜப்பான் சென்ற அவர் இந்திய தேசிய ராணுவத்தின் கட்டுப்பாட்டைக் கையில் எடுத்தார்.
- இந்திய போர்க் கைதிகளை கொண்டு மலாயா மற்றும் பர்மாவில் இருந்த ஜப்பானியர்களை கொண்டு இந்திய தேசிய இராணுவத்தை (ஆசாத் ஹிந்த் ஃபாஜ்) ஜெனரல் மோகன் சிங் பலப்படுத்தினார். அதன்பிறகு இது கேப்டன் லட்சுமி செகல் என்பவரால் நடத்தப்பட்டது.
- இது காந்தி பிரிகேட், நேரு பிரிகேட், பெண்கள் பிரிவாக ராணி லக்ஷ்சுமி பாய் பிரிகேட் என்ற மூன்று பிரிவுகளாக சுபாஷ் சந்திர போஸ் மறுசீரமைத்தார்.1943 சூலை 2 இல் சுபாஷ் சந்திர போஸ் சிங்கப்பூர் சென்று சேர்ந்தார். அங்கியிருந்த டோக்கியோ சென்று பிரதமர் டோஜோவைச் சந்தித்தார். ஆனால் இந்தியாவை ஆக்கிரமிக்கும் எண்ணம் ஜப்பானுக்கு இல்லை என்று ஜப்பானிய அரசர் அறிவித்தார்
- சிங்கப்பூருக்குத் திரும்பிய போஸ் 1943 அக்டோபர் 21 இல் சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசை ஏற்படுத்தினார்.
- போஸ் இராணுவம் சாராத சாதாரண மக்களையும் இந்திய தேசிய ராணுவத்தில் இணைத்ததோடு பெண்களுக்கான ஒரு படைப்பிரிவையும் ஏற்படுத்தினார்.
- சென்னையை சேர்ந்த சுதந்திர போராட்ட வீரரரான அம்மு சுவாமிநாதனின் மகளுமான டாக்டர் லட்சுமி, ராணி ஜான்சி என்ற படைப்பிரிவிற்குத் தலைமையேற்றார்.
- 1944 சூலை 6 இல் தனது ஆசாத் ஹிந்த் ரேடியோவின் மூலம் ரங்கூனிலிருந்து காந்தியடிகளை ***தேசத்தின் தந்தையே*** என்று அழைத்தார்.
- ***தில்லிக்கு புறப்படு (தில்லி சலோ)*** – *என்று முழங்கினார்.*
- டெல்லியின் செங்கோட்டையில் இந்திய தேசிய இராணுவத்தின் மீது நடத்தப்பட்ட விசாரணையில் 1920 களின் ஆரம்பத்தில் தனது சட்டப்பணிகளைத் துறந்த ஜவஹர்லால் நேரு, நீண்ட இடைவெளிக்குப் பின் தனது கருப்பு அங்கியை அணிந்து இந்திய தேசிய இராணுவ வீரர்களின் சார்பில் வழக்கில் ஆஜரானர்.
- காலனிய ஆட்சியாளர்கள் ஷாநவாஸ் கான், பி.கே. ஷெகல் மற்றும் ஜி.எஸ் தில்லான் ஆகிய இந்திய தேசிய இராணுவத்தின் மூன்று முக்கிய அதிகாரிகளைப் பிரித்தெடுத்து விசாரணை நடத்தியது.
- விசாரணை நீதிமன்றம் முப்படைகளின் தண்டனையைக் குறைத்ததோடு 1946 ஜனவரி 6 இல் அவர்களை விடுதலை செய்தார். இந்திய தேசிய இராணுவத்தின் விசாரனை பிப்ரவரி 1946 இல் இந்திய தேசிய இயக்கத்தை மற்றுமொரு முக்கியமான நிகழ்வுக்கு எடுத்துச் செல்ல மேடையமைத்தது. அதன்படி இராயல் இந்தியக் கடற்படையின் மாலுமிகள் கலகக் கொடியைத் தூக்கினார்கள்.

இராயல் இந்திய கடற்படையின் கழகம்

- HMIS – தல்வார் என்ற போர்கப்பலில் மாலுமியாகப் பணியாற்றிய பி.சி. தத் என்பவர் அக்கப்பலின் பக்கவாட்டில் **வெள்ளையனே வெளியேறு** என்று எழுதினார். இதனையடுத்து அக்கப்பலில் மாலுமியாகப் பணியாற்றிய 1,100 மாலுமிகள் உடனடியாகப் போராட்டத்தில் இறங்கினர்.
- ஆங்கிலேய அதிகாரிகளின் நிறவெறியையும் மோசமான உணவு வழங்கப்பட்டமையையும் பிற தரக்குறைவான செயல்பாடுகளையும் மாலுமிகள் கண்டனம் செய்தனர்.
- தத்தின் கைது நடவடிக்கை 1946 பிப்ரவரி 18 இல் வெடித்துக் கிளம்பிய கலகத்திற்கு உந்துவிசையாக அமைந்தது. அதன் மறநாள் கோட்டைக் கொத்தளத்தில் பணியிலிருந்த மாலுமிகளும் அதிக எண்ணிக்கையில் கலகத்தில் இணைந்ததோடு , பம்பாய் நகரை வாகனங்களில் வலம் வந்தவாறே காங்கிரஸ் கொடியை ஏந்தி அசைக்கவும் பிரிட்டிஷ் விரோதக் கூச்சல்களை எழுப்பி ஆரவாரிக்கவும் செய்தனர்.
- பம்பாயின் கலகச் செய்தி கராச்சியை அடைந்ததும் பிப்ரவரி 19 இல் HMIS ஹிந்துஸ்தான் கப்பலின் மாலுமிகளும் கராச்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிறரும் மின்னல் வேகத்தில் போராட்டத்தைத் துவக்கினர்.
- போராட்ட அலை கடற்படை முழுவதும் பரவியதால் 78 கப்பல்களிலும் 20 கரைசார்ந்த பணியிடங்களிலும் இருந்த 20,000 மாலுமிகள் 1946 பிப்ரவரி 18க்குப் பின் போராட்டத்தில் இறங்கியிருந்தனர்.

- மாலுமிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக பம்பாய், பூனா, கல்கத்தா, ஜெஸ்ஸூர், அம்பாலா நகரங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இராயல் இந்திய விமானப்படை ஊழியர்களும் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். ஜபல்பூரில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவச் சிப்பாய்களும் போராடலாயினர்
- அப்போது பம்பாய் நகரில் இருந்த சர்தார் வல்லபாய் படேல் கலகத்தை முடிவிற்குக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொண்டார்.

இராஜாஜியின் முன் மொழிவும் வேவல் திட்டமும்

- முஸ்லீம் லீக் மார்ச் 23, 1940 இல் நிறைவேற்றிய லாகூர் தீர்மானத்தின்படி இந்தியாவில் இஸ்லாமியர் சிறுபான்மையினர் என்ற நிலையிலிருந்து அவர்கள் ஒரு தனிநாடு என்ற நம்பிக்கைக்கு மாறிப்போயிருந்தனர். அச்சமயத்தின் ஒரே பிரதிநிதியாக முகமது அலி ஜின்னா தன்னை மட்டுமே நிலைநிறுத்திக் கொண்டார்.
- 1944 ஏப்ரலில் காங்கிரஸ் தலைவர்கள் பலரும் சிறையில் இருந்த போது சுமூகத் தீர்வை எட்டும் பொருட்டு இராஜாஜி ஒரு முன்மொழிவுத் தீர்மானத்தை வழங்கினார்.
  - *போருக்குப் பின்பு ஒரு ஆணையத்தின் மூலம் இஸ்லாமியர்கள் முழுப் பெரும்பான்மையில் வாழும் தொடர் மாவட்டங்களைப் பிரித்தெடுத்து அங்கே வயதுக்தகுதி அடைந்தோரைக் கொண்டு வாக்கெடுப்பு நடத்தி பாகிஸ்தான் உருவாக்கம் பற்றிய முடிவை எடுத்தல் வேண்டும்.*
  - *எல்லையில் அமையப்பெற்ற மாவட்டங்களுக்கு இரு இறையாண்மைகொண்ட நாடுகளில் ஏதோ ஒன்றில் சேர்ந்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.*
  - *இத்திட்டங்கள் யாவும் முழுமையான அதிகார மாற்றம் ஏற்பட்ட பின் செயல்முறைக்குத் கொண்டு வரப்படுதல் வேண்டும்.*
- காந்தியடிகள் சூலை 1944 இல் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் இராஜாஜி திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஜின்னாவோடு பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தார். ஆனால் அந்தப் பேச்சுவார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படவில்லை.

வேவல் திட்டம்

- வேல் பிரபு சூன் 1945 இல் பேச்சுவார்த்தை நடத்த சிம்லால மாநாட்டைக் கூட்டினார்.
- ஜவஹர்லால் நேரு, சர்தார் பட்டேல், அச்சமயம் காங்கிரஸ் இயக்கத்தின் தலைவராகப் பதவிவகித்த மௌலானா அபுல் கலாம் ஆசாத் போன்றவர்கள் மாநாட்டில் பங்கெடுப்பதற்காகச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.
- சிம்லா மாநாட்டிற்க முகாந்திரம் அமைக்கும் பொருட்டு மார்ச் 1945 இல் லண்டன் சென்ற வேவல் பிரபு சர்ச்சிலிடம் போருக்குப் பின் எழும் நெருக்கடியைச் சமாளிக்க காங்கிரஸையும், முஸ்லிம் லீக்கையும் இணைத்து ஆட்சியமைக்க ஒப்புதல் பெற்றார்.
- தீர்மாமெதையும் எட்டாமலேயே சூன் 25 முதல் சூலை 14 வரை நடந்த சிம்லா மாநாடு முடிவடைந்தது.
- 1946 இல் நடந்த முஸ்லிம் லீக்கின் சட்டசபை உறுப்பினர்கள் மாநாட்டில் பாகிஸ்தான் ஒரு ***இறையாண்மை கொண்ட தனிநாடு*** என்று வர்ணிக்கப்பட்டது.
- வின்ஸ்டன் சர்ச்சில் பதவியிழந்து அவர் பொறுப்பில் தொழிலாளர் கட்சியைத் சேர்ந்த கிளெமண்ட் அட்லி பதவிக்கு வந்தார். அவர் விடுதலையை உறுதி செய்ததோடு அதற்கான நடைமுறைகள் மட்டுமே எஞ்சி இருப்பதாக அறிவித்தார்.

மௌண்ட் பேட்டன் திட்டம்

அமைச்சரவைத் தூதுக்குழு

- இரண்டாம் உலகப்போருக்குப் பின் பெரும் மாற்றங்கள்ஏற்பட்டிருந்த சூழலில் அமைச்சரவைத் தூதுக்குழு உருவாக்கப்பட்டது. இந்திய நாட்டிற்கென்று நியமிக்கப்பட்டிருந்த அரசு செயலரான சர் ஸ்டாஃப்போர்டு கிரிப்ஸ், ஏ.வி. அ லெக்ஸாண்டர் , பெதிக் லாரன்ஸ் ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்ட அந்தத் தூதுக்குழு மார்ச் 1946 இல் இந்தியா வந்தடைந்தது முழு அதிகார மாற்றத்தை ஏற்படுத்துவற்குத் தேவையான அரசை உருவாக்கக முனைந்தது.
- வடகிழக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் முஸ்லிம் லீக்கின் செல்வாக்கை நிறுவும் வகையில் கூட்டாட்சி போன்றதொரு அமைப்பையும், இந்தியாவின் பிறபகுதிகளைக் காங்கிரஸ் நிர்வகிக்குமாறு யோசனை முன்வைக்கப்பட்டது. இதற்கு 1946 சூன் 6 இல் ஜின்னா ஒப்புதல் அளித்தார்.
- இதற்கிடையே காங்கிரசும் அமைச்சரவைத் தூதுக்குழுவின் நோக்கத்தில் சட்டசவையை உருவாக்க இருந்தத் தீவிரதத்தைப் புரிந்து கொண்டது. இது குறித்து 1946 சூலை 7 இல் கூடிய அனைத்திந்திய காங்கிரஸ் குழுவில் பேசிய

நேரு இந்திய தேசிய காங்கிரஸ் குழுவில் பேசிய நேரு இந்திய தேசிய காங்கிரஸ் அந்த முன்மொழிவை ஏற்றுக் கொள்வதாகத் தெரியப்படுத்தினார். ஆனால் இதையடுத்து 1946 சூலை 29 இல் பேசிய ஜின்னா முஸ்லிம் லீக் அம்முன்மொழிவை நிராகரிப்பதாக அறிவித்தார்.

- நீண்ட காலந்தாலோசனைகளுக்குப் பின் 1946 சூன் 15 இல் அரசபிரதிநிதி இடைக்கால அரசை நடத்த 14 பேருக்கு அழைப்புவிடுத்தார். அவ்வாறு அழைக்கப்பட்டவர்கள் காங்கிரஸ் சார்பாக ஜவஹர்லால் நேரு, வல்லபாய் படேல், இராஜேந்திர பிரசாத், இராஜாஜி மற்றும் ஹரி கிருஷ்ண மஹ்தப் ஆகியோரும் முஸ்லிம் லீக் சார்பாக முகம்மது அலி ஜின்னா, லியாகத் அலி கான், முகம்மது இஸ்லாமியல் கான், குவாஜா சர் நிஜாமுதீன் மற்றும் அப்துல் ரப் நிஷ்தர் ஆகியோரும், சீக்கியர்கள் சார்பாக சர்தார் பல்தேவ் சிங்கும், பார்சிகளின் சார்பாக சர் என்.பி. இஞ்சினியரும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் சார்பாக ஜெகஜீவன் ராமும் இந்திய கிறிஸ்த்தவர்கள் சார்பாக ஜான் மத்தாயும் ஆவர்.
- இடைக்கால குழுவில் பங்கெடுக்க தங்களுக்கு வழங்கப்பட்ட ஐந்து இடங்களில் ஒன்றனுக்கு ஜாகிர் ஹீசைன் பெயரை காங்கிரஸ் முன்மொழிந்தது. இதற்கு 1946 சூலை 29 இல் முஸ்லிம் லீக் எதிர்ப்பு தெரிவித்ததோடு தாங்கள் சட்டசபையில் பங்கெடுக்கப் போவதில்லை என்று அறிவித்தது. இதற்கு ஆங்கிலேய நிர்வாகம் கடுமையான எதிர்வினையாற்றியது.
- அரசப்பிரதிநிதி 1946 ஆகஸ்ட் 12 அன்று தான் காங்கிரஸ் தலைவர் நேருவை அழைத்து இடைக்கால அரசை உருவாக்கப் போவதாகத் தெரிவித்தார். நேருவோடு கலந்லோசித்த பின் 1946 ஆகஸ்ட் 25 இல் தேசிய இடைக்கால அரசின் 12 உறுப்பினர்களின் பெயர்களும் அறிவிக்கப்பட்டன.
- நேரு உட்பட வல்லபாய் படேல், இராஜேந்திர பிரசாத், ஆசப் அலி, இராஜாஜி, சரத் சந்திர போஸ், ஜான் மத்தாய், சர்தார் பல்தேவ் சிங், சர் ஷஃப்த் அகமது கான், ஜெகஜீவன் ராம், சையது அலி ஸாகீர் மற்றும் குவர்ஜி ஹொர்முஸ்ஜி பாபா ஆகியோர் ஆவர். மேலும் இரு இஸ்லாமியர்களின் பெயர்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.
- ஐந்து இந்துக்கள், மூன்று முஸ்லிம்கள், பட்டியல் இனம், இந்திய கிறிஸ்த்தவர்கள், சீக்கியர்கள், பார்சிகள் போன்றோரில் இருந்து தலா ஒரு நபர் என்ற அடிப்படையில் பட்டியல் அமைக்கப்பட்டிருந்தது.
- பின்னர் ஹரி கிருஷ்ண மஹ்தபின் இடத்தில் சரத் சந்திர போஸ் நியமிக்கப்பட்டார். அது போலவே பார்சி இனத்தில் என்.பி. இஞ்சினியர் இடத்தில் குவர்ஜி ஹொர்முஸ்ஜி பாபா நியமிக்கப்பட்டார். முஸ்லிம் லீக்கிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் காங்கிரஸ் தனது உறுப்பினர்களை நியமித்தது. அவர்கள் ஆசப் அலி, ஷாபத் அகமது கான் மற்றும் சையது அலி ஸாகீர் ஆகியோர்.
- முஸ்லிம் லீக் 1946 ஆகஸ்ட் 16 இல் நேரடி நவடிக்கை செயலில் இறங்க இஸ்லாமியர்களுக்கு அறைகூவல் விடுத்தது. கல்கத்தாவிலும், டெல்லி உட்பட பிற பகுதிகளிலும் இரத்த ஆறு ஓடியது.
- காந்தி கொல்கத்தாவிலிருந்து டெல்லிக்கு 1946 செப்டம்பர் 9 அன்று வந்தவர் ***இஸ்லாமியர்களும் இந்தியர்களே*** அதனால் அவர்களைப் பாதுகாப்பது இந்திய அரசின் பொறுப்பேயாகும் என்று கூறினார். இதன் பின்பே டெல்லியின் அதிகாரமட்டம் டெல்லி புராணகிலவில் தங்க வைக்கப்பட்டிருந்த முஸ்லிம்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கி கழிவறை வசதியையும் ஏற்படுத்தி கொடுத்தது.
- உண்மையில் இப்பின்புலத்தின்தான் காங்கிரஸ் இடைக்கால அரசு உருவாக்கத்தை ஏற்றுக்கொண்டது. நேருவும் மற்ற 11 நபர்களும் 1946 செப்டம்பர் 2 இல் பதவியேற்றனர். இதன்பின் அகமதபாத் மற்றும் பாம்பாயில் இனக்கலவரம் வெடித்தது. பின்பு நேருவின் ஆலோசனைக்குப்பின் மீண்டும் முஸ்லிம் லீக்கை இடைக்கால அரசில் பங்கெடுக்க அழைப்பு விடுத்தார். முஸ்லீம் அவரது அழைப்பை ஏற்றாலும் ஜின்னா அமைச்சரவையில் பங்கெடுக்க மறுத்துவிட்டார்.
- இடைக்கால அமைச்சரவ 1946 அக்டோபர் 26 இல் மறுசீரமைக்கப்பட்டது. முஸ்லிம் லீக் சார்பில் பங்குபெற்றோர் லியாகத் அலிகான், சுந்துரிகர், ஏ.ஆர். நிஷ்தர், கஸன்பர் அலி கான் மற்றும் ஜோகேந்திர நாத் மண்டல் ஆகியயோர் ஆவர்.
- கிழக்கு வங்காளத்தின் நவகாளி இனக்கலவரத்தால் சூறையாடப்பட்டிருந்தது. இடைக்கால அரசின் செயல்பாடுகளை உள்ளிருந்த கெடுக்கும் நோக்கம் கொண்டது போன்றே முஸ்லிம் லீக்கின் செயல்பாடுகள் அமைந்தன.
- காங்கிரஸ் சூலை–ஆகஸ்ட் 1946 இல் நடிந்த தேர்தலில் 210 ற்கு 199 பொது இடங்களைப் பெற்றுப் பெரும் வெற்றியைக் குவித்தது. முஸ்லிம் லீக்கும் இஸ்லாமியருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் 76 ஐ கைப்பற்றியது. எனினும் சட்டசவையில் பங்கெடுப்பதைப் புறக்கணிக்க அது முடிவு செய்தது. ஆகவே 1946 டிசம்பர் 9 இல் கூடிய முதல் சட்டசபையில் 207 உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொண்டனர்.
- பிரிட்டிஷ் பிரதமரான அட்லி 1947 பிப்ரவரி 20 இல் பாராளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கையின் படி இந்தியாவின் அடுத்தகட்ட நகர்வுக்கு வழி எற்படுத்தும் வகையில் பிரிட்டிஷார் சூன் 1948 வாக்கில் அந்நாட்டைவிட்டு வெளியேறுவதில் தீர்மானமாக இருப்பது உறுதி செய்யப்பட்டது.

- வேவல் பிரவு 1947 மார்ச் 22 இல் அரசபிரதிநிதி பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு அப்பதவிக்கு மௌண்ட்பேட்டன் பிரபு நியமிக்கப்பட்டார்.

மௌண்ட் பேட்டன் திட்டம் (1947 சூன் 3)

- மௌண்ட் பேட்டன் இந்தியப் பிரிவினையை ஏற்படுத்த ஒரு தெளிவான திட்டத்தைக் கொண்டிருந்தார். அதன்படி பஞ்சாபை மேற்கு–கிழக்காகப் பிரிப்பதும் (மேற்குப் பகுதி பாகிஸ்தானுக்கு வழங்கப்படும்), அது போன்றே வங்காளத்தை பிரித்து அதன் மேற்குப் பகுதியை இந்திய வைத்துக்கொள்ளவும் கிழக்குப் பகுதியைப் பாகிஸ்தானின் அங்கமாக மாற்றவும் அம்சங்கள் இருந்தன.
- காங்கிரஸ் செயற்குழு 1947 மே 1 இல் இந்திய பிரிவினைத் திட்டத்திற்கு உடன்படுவதாக மெண்ட்பேட்டனிடம் தெரிவித்தது. 1947 சூன் 14 அன்று மீரட் இல் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் மொளண்ட் பேட்டன் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- லண்டன் சென்று திரும்பிய அரசபிரதிநிதி இந்திய பிரிவினைக்கான வரைவை வெளியிட்டதோடு பிரிட்டிஷார் குறித்த தேதிக்கு முன்பாகவே 1947 ஆகஸ்ட் 15 இல் இந்தியாவைவிட்டு மொத்தத்தில் விலக விரும்புவதாகத் தெரிவித்தார்.
- 1947 சூன் 15 இல் கூடிய போது கோவிந்த பல்லப் பந்த் இந்தியப் பிரிவினைக்கான தீர்மானத்தை முன்னெடுக்க அது நிறைவேற்றப்பட்டது.

காலனியத்துக்கு பின் இந்தியாவின் மறுகட்டமைப்பு

- இந்திய வரைபடத்தைப் பிரிவினைக்கேற்றவாறு மாற்றி வரைவதற்கு லண்டனிலிருந்து அனுப்பப்பட்ட வழக்கறிஞரான சர் சிரில் ராட்க்ளிஃப் இன் வரைபடத்தின் அடிப்படையில் எல்லைகளை வரையறுத்துக்கொள்ளும் பொறுப்பு 1947 ஆகஸ்ட்டு 15 க்குப் பின் இந்தியா – என்ற இரண்டு அரசமைப்பு நாடுகளிடம் ஒப்படைக்கப்பட்டது.
- ஆகஸ்டு 1947 முதல் நவம்பர் 1947 வரையிலான 4 மாத காலத்தில் 4.5 மில்லியன் மக்கள் மேற்கு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்குக் குறிப்பாக கிழக்கு பஞ்சாப் நகரங்கள் மற்றும் புது தில்லிக்கு இடம் பெயர்ந்தனர். அதே நேரத்தில் 5.5 மில்லியன் முஸ்லிம்கள் இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் சென்றனர்.
- இந்திய அரசாங்கத் சட்டம் 1935 இன் அடிப்படையில் ஆகஸ்ட் 1946 இல் மாகாண சட்டமன்றங்களுக்கான தேர்தல் நடைபெற்றது. மாகாண சட்ட மன்றங்கள் மத்திய சட்டமன்றத்தைத் தேர்ந்தெடுக்க அது அரசவைப்பு நிர்ணய சபையாக செயல்பட்டது. 1946 இல் நடைபெற்ற மாகாண தேர்தலில் சொத்துரிமை உரியவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை என இருந்தது.
- 1946 டிசம்பர் 13 அன்று ஜவஹர்லால் நேரு இந்திய அரசமைப்புக்கான குறிக்கோள் தீர்மானத்தை அரசமைப்பு நிர்ணயசபையில் அறிமுகப்படுத்தினார். அரசிலயமைப்பின் முதல் கூட்டம் டிசம்பர் 9 அன்று நடைபெற்றது.
- இந்திய அரசமைப்பு 1949 நவம்பர் 26 இல் அரசமைப்பு நிர்ணயசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைக்கும் பணி 1947 ஆகஸ்ட் 15 க்குள் விரைவாக முடிக்கப்பட்டது. காஷ்மீர், ஜீனாகத், ஹைதராபாத் ஆகியவற்றைத் தவிர மற்ற சுதேச அரசுகள் அனைத்தும் இணைப்புறுதி ஆவணத்தில் யையெழுத்திட்டு பாதுகாப்பு, வெளியுறவு மற்றும் தகவல் தொடர்பில் இந்தியாவின் மைய ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டன. உள்துறை அமைச்சராகவும் மாநில நிர்வாகங்களுக்கான அமைச்சராகவும் இருந்த சர்தார் வல்லபாய் படடேல் திறம்பட செய்து முடித்தார்.
- ஹைதராபாத் நிஜாம் இந்திய ஆளுகைக்கு கீழ்ப்படிய மறுத்து, அவர் ஹைதராபாத் அரசை சுதந்திர அரசு என்று அறிவித்தார். ஜீனாகத் அரசர் மக்கள் விருப்பதற்கு எதிராக பாகிஸ்தானுடன் சேர விரும்பினார். இதே போல் காஷ்மீரின் சுதந்திர அரசாக இருக்குமென்ற அறிவித்தபோது அந்நாட்டு மக்கள் தேசிய மநாட்டுத் தலைமையில் காஷ்மீரைவிட்டு வெளியேறுங்கள் என்ற போராட்டத்தை அரசருக்கெதிராக தொடங்கினார்.
- ஹைதராபாத் நிஜாம் விடுதலைப் பிரகடனம் செய்த 48 மணிநேரத்திற்குள் இந்தியா அங்கு காவல்துறை நடவடிக்கைகளைத் தொடர்ந்தது.
- 1946 முதலே வல்லபாய் படேல் காஷ்மீர் மகாராஜாவோடு பேச்சுவார்த்தை நடத்தி வந்தபோதிலும், காஷ்மீர் அரசர் ஹரிசிங் இந்தியாவோடு இணைய மறுத்துவந்தார். எனினும் அக்டோபர் 1947 ல் பாகிஸ்தானியர்கள் சிலர் காஷ்மீரைச் சூறையாடிய போது மகாராஜா ஹரிசிங்கால் அந்த நடவடிக்கையைத் தடுக்க முடியவில்லை. காஷ்மீர் அரசர் இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட வேண்டும் என்பதில் படேல் உறுதியாக இருந்தார்.

- 🕮 இதன் விளைவாக காஷ்மீர் சுதந்திர இந்தியாவின் ஒரு பகுதியானது. இந்த நிகழ்வின் போது தலைவர்கள் காஷ்மீர் மீதான அக்கறையும் அரசமைப்பு நிர்ணய சபையை ஜம்மு காஷ்மீருக்கு இந்திய அரசமைப்பின் உறுப்பு 379 இன் படி தனி அந்தஸ்து வழங்கக் காரணமாயிற்று
- 🕮 இந்திய அரசமைப்பு நடைமுறைக்கு வந்தபின் மொழிவாரி மாநில மறுசீரமைப்புக் கொள்கை படிப்படியாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. 1956 இல் ஆந்திரப்பிரதேச உருவாக்கப்பட்டது.
- 🕮 மொழிவாரி மாகாணக் கோரிக்கையை ஆராய ஜவகர்லால் நேரு, வல்லபாய் படேல் மற்றும் பட்டாபி சீதாராமைய ஆகிய மூவரையும் கொண்ட ஜே.வி.பி குழு அமைக்கப்பட்டது.
- 🕮 இக்குழு 1949 ஏப்ரல் 1 இல் சமர்ப்பித்தது. இதில் மொழிவாரி மாநில மறுசீரமைப்பிற்கு அது உகந்த நேரமல்ல என்று தெவித்தது.
- 🕮 முதல் பொதுத் தேர்தல் முடிவடைநத் பின்னர் மீண்டும் மொழிவாரி மாநில கருத்தாக்கம் எழுச்சி பெற்றது. ஆந்திரா தனி மாநிலமாகப் பிரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி 1952 அக்டோபர் 19 இல் சாகும் வரை உண்ணாவிரதத்தைத் தொடங்கிய பொட்டி ஸ்ரீ ராமுலு 1952 டிசம்பர் 15 அன்று இரவு காலமானார்.
- 🕮 இதன் காரணமாக பசல் அலியைத் தலைவராகவும், கே.எம். பணிக்கர் மற்றும் எச்.என். குன்ஸ்ரூ ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட மாநில மறுசீரமைப்பு ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் தனது அறிக்கையை 1955 அக்டோபரில் சமர்ப்பித்து மொழிவாரி மாகாணத்திற்கு வழிவகுத்தது.
- 🕮 நேரு ஆட்சிக்காலத்தில் மொழிவாரி மாநில மறுசீரமைப்புக் கொள்கை, மாநில மறுசீரமைப்புச் சட்டமாக 1956 இல் நிறைவேற்றப்பட்டு உறுதியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம்

- ✍ டி. முத்துசாமி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதியாக 1877 இல் நியமிக்கப்பட்டது சென்னை மாகாணத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஒரு இந்தியர் நீதிபதியாக பணியமர்த்தப்பட்டதை சென்னையைச் சேர்ந்த அனைத்துப் பத்திரிக்கைகளும் விமர்சனம் செய்தன. எதிர்ப்பு தெரிவித்த அனைத்து பத்திரிக்கைகளும் ஐரோப்பியர்களால் நடத்தப்படுவதை கல்விகற்ற இளைஞர்கள் உணர்ந்தனர்.
- ✍ ஜி. சுப்பிரமணியம், எம், வீரராகவாச்சாரி மற்றும் இவர்களின் நண்பர்கள் நால்வர் ஆகியோர் இணைந்து 1878 இல் ***தி இந்து*** எனும் செய்திப் பத்திரிக்கைத் தொடங்கினர்.
- ✍ ஜி. சுப்பிரமணியம் 1891 இல் சுதேசமித்தரன் என்ற பெயரில் தமிழில் ஒரு தேசியப் பருவ இதழையும் தொடங்கினார்.1899 இல் அவ்விதழ் நாளிதழாக மாறியது.
- ✍ இவ்விரு பத்திரிக்கைகள் தொடங்கப்பட்டது, இந்தியன் பேட்ரியாட், சவுத் இந்தியன் மெயில், மெட்ராஸ் ஸ்டாண்டர்ட் , தேசாபிமானி, விஜயா, சூர்யோதயம், இந்தியா போன்ற உள்நாட்டுப் பத்திரிக்கைகள் தொடங்கப்படுவதற்கு ஊக்கமளித்தது.
- ✍ தமிழ்நாட்டின் முக்கிய தொடக்ககால மிதவாத தேசியவாதிகளாக வி.எஸ். சீனிவாச சாஸ்திரி, பி.எஸ். சிவசாமி, வி. கிருஷ்ணசாமி, டி.ஆர். வெங்கட்ராமனார், ஜி.ஏ. நடேசன் , டி.எம், மாதவராவ் மற்றும் எஸ். சுப்பிரமணியார் ஆகியோர் அறியப்படுகிறார்கள்.
- ✍ இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்கள் காங்கிரஸ் உருவாக்கப்படுவதற்கு முன்பாக பல கூட்டங்களில் கலந்த கொண்டனர். அவ்வாறன ஒரு கூட்டம் 1884 டிசம்பரில் பிரம்மஞான சபையில் கூடியது. தாதாபாய் நௌரோஜி, கே.டி. தெலாங், சுரேந்திரநாத் பானர்ஜி மற்றும் சில முக்கிய தலைவர்களுடன் சென்னையிலிருந்து ஜி. சுப்பிரமணியம் , பி. ரங்கையா, பி. அனந்தாச்சார்லு போன்றோரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.
- ✍ 1885 இல் பம்பாயில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசின் முதல் கூட்டத்தில் கலந்து கொண்ட 72 பிரதிநிதிகளில் 22 பிரதிநிதிகள் சென்னையைச் சேர்ந்தோராவர். ஜி. சுப்பிரமணியம் தனது எழுத்துக்களின் மூலமாக தேசியத்தை முன்னெடுத்தவர் ஆவார். இந்தியா பொருளாதாரரீதியாக ஆங்கிலேயர்களால் சுரண்டப்படுவதைப் புரிந்துகொள்ள அவர் செய்த பங்களிப்புகளில் அவர் நௌரோஜி மற்றும் கோகலே ஆகியோருக்க இணையானவராவர்.
- ✍ இந்திய தேசிய காங்கிரசின் இரண்டவாது மாநாடு 1886 கல்கத்தாவில் தாதாபாய் நௌரோஜியின் தலைமையில் நடைபெற்றது.
- ✍ காங்கிரசின் மூன்றாவது மாநாடு பத்ருதீன் தியாப்ஜியின் தலைமையில் 1887 இல் சென்னையில் இன்று ஆயிரம் விளக்கு என்று அழைக்கப்படுகிற மக்கிஸ் தோட்டத்தில் நடைபெற்றது . கலந்து 607 பிரதிநிதிகளில் 362 பிரதிநிதிகள் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்.

சுதேசி இயக்கம்

- வங்கப் பிரிவினை (1905) இயக்கத்திற்கு இட்டுச் சென்று விடுதலைப் போராட்டத்தின் போக்கை மாற்றியது. இதன் காரணமாக சுதேசி இயக்கங்கள் தோன்றியத.
- வ.உ. சிதம்பரனார், வி. சர்க்கரையார், சுப்பிரமணிய பாரதி, சுரேந்திரநாத் ஆரியா ஆகியோர் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறந்த தலைவர்களாவர்.
- சுதேச கருத்துகளைப் பரப்புரை செய்ய பல இதழ்கள் தோன்றின. சுதேசமித்திரன், இந்தியா ஆகிய இரண்டும் முக்கிய இதழ்களாகும்.
- ஏனைய இடங்களில் நடந்ததைப் போலவே சுதேசி இயக்கம் இளைஞர்களுக்கு எழுச்சியூட்டியது. தலைவர்கள் இல்லாத சூழலில் அவர்கள் புரட்சிகரப் பாதையை நோக்கித் திரும்பினர். புரட்சிகர தேசியவாதிகளுக்குப் பாண்டிச்சேரி பாதுகாப்பான புகலிடமாயிற்று.
- இவர்களுக்கு புரட்சிகர நடவடிக்கைகள் குறித்த அறிமுகமும் பயிற்சியும் லண்டனிலிருந்த இந்தியா ஹவுஸ் என்ற இடத்திலும் பாரிசிலும் வழங்கப்பெற்றது. அவர்களில் முதன்மையானவர்கள், எம்பி. டி. ஆச்சாரியா, வி.வி. சுப்ரமணியனார் மற்றும் டி.எஸ்.எஸ் . ராஜன் ஆகியோரவர்.
- புரட்சிவாதச் செய்தித்தாள்களான இந்தியா, விஜயா, சூர்யோதயம் ஆகியன பாண்டிச்சேரியிலிருந்து வெளிவந்தன. சில புரட்சி வாத செய்தித்தாள்களும் பாரதியின் பாடல்களும் அரசுக்கு எதிரானதெனத் தடைசெய்யப்பட்டன.
- 1910 இல் அரவிந்த கோஷ், வி.வி. சுப்ரமணியனார் ஆகியோரின் வருகைக்குப் பின்னர் பாண்டிச்சேரியில் புரட்சிகர நடவடிக்கைகள் தீவிரமடைந்தன.

பிராமணர் அல்லாதோர் இயக்கமும் காங்கிரசிற்கு சவாலும்

- சென்னை மாகாணத்தில் பிராமணர் அல்லாதோரின் எண்ணிக்கை அதிகமானது. மேலே விவாதிக்கப்பட்ட தீவிர அரசியல் மற்றும் சமூக நடவடிக்கைகள் படித்த பிராமணரல்லாதவர்களை அரசியலில் ஈடுபட வைத்தது.

தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்

- பிராமணரல்லாதோர் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளவதற்காக தங்களை ஒரு அரசியல் அமைப்பாக அணி திரட்டிக் கொண்டனர்.
- 1912 இல் சென்னை திராவிடர் கழகம் உருவாக்கப்பெற்றது. அதன் செயலாராக சி. நடேசனார் செயலுாக்கமிக்க வகையில் பங்காற்றினார்.
- 1916 சூன் மாதத்தில் அவர் பிராமணர் அல்லாத மாணவர்களுக்காக ***திராவிடர் சங்க தங்கும் விடுதி*** யை நிறுவினார்.
- இவ்வியக்கத்தை சேர்ந்த டி.எம். நாயர், பி. தியாகராயர் ஆகியோர் இடையேயான கருத்து வேற்றுமையை சி. நடேசனார் சரிசெய்தார்.
- 1916 நவம்பர் 20 இல் பி. தியாகராயர், டி.எம். நாயர், சி. நடேசனார் ஆகியோர் தலைமையில் சுமார் 30 பிராமணரல்லாதவர்கள் சென்னை விக்டோரிய பொதுஅரங்கில் கூடினர். பிரமணரல்லாதவர்களின் நலன்களை மேம்படுத்துவதற்காக ***தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்*** எனும் அமைப்பை உருவாக்கினர்
- அவர்கள் ஆங்கிலத்தில் ***ஜஸ்டிஸ்,*** தமிழில் ***திராவிடன்***, தெலுங்கில் ***ஆந்திர பிரகாசிகா*** எனும் மூன்று செய்தித்தாள்களையும் தொடங்கினர்.
- இவ்வமைப்பு நடத்திய ஆங்கில இதழின் பெயரான ஜஸ்டிஸ் என்பதே அவ்வமைப்பின் பெயராகி ***ஜஸ்டிஸ் கட்சி (நீதிக்கட்சி)*** என அழைக்கப்படலாயிற்று. அமைப்புக்கான கிளைகள் உருவாக்கம் முகமாக மாகாணம் முழுவதிலும் ஜஸ்டிஸ் கட்சி பல மாநாடுகளை நடத்தியது.

இட ஒதுக்கீட்டுக்கான கோரிக்கை

- நீதிக்கட்சி தனது நோக்கங்ககளை கோடிட்டுக் காட்டி பிராமணர்ல்லாதோரின் அறிக்கையை வெளியிட்டது அவை–
  - அரசுப் பணியிடங்களில் பிராமணரல்லாதோர்களுக்கு இடஒதுக்கீடு என்பனவாகும்.
  - தன்னாட்சி இயக்கத்தை பிராமணரின் இயக்கம் என்று எதிர்ப்பது
  - காங்கிரசை பிராமணர்களின் கட்சி என எதிர்த்தது.
  - நீதிக்கட்சி சட்டமன்றதத்தில் வகுப்பு வாத பிரதிநிதிதுவம் கோரியது.

- சென்னை அரசாங்கம் நீதிக் கட்சியை ஆதரித்தது. ஆங்கிலேயரின் ஆட்சி பிராமணர் அல்லாதோரின் முன்னேற்றத்திற்காக துணைபுரியும் என நம்பியது.
- 1919 ஆம் ஆண்டுச் சட்டம் பிராமணரல்லாதோர்களுக்கு தேர்தலில் இடஒதுக்கீடு வழங்கியது. இந்நடிவடிக்கையைக் காங்கிரஸ் கட்சி விமர்சனம் செய்தது. ஆனால் நீதிக்கட்சி இதை வரவேற்றது.

நீதிக்கட்சி அமைச்சரவை

- 1920இல் நடத்தப்பட்ட தேர்தல்களைக் காங்கிரஸ் புறக்கணித்தது. சட்டமன்றத்தில் மொத்தமிருந்த 98 இடங்களில் 63 இல் நீதிக்கட்சி வெற்றிபெற்றது. நீதிக்கட்சியின் அ. சுப்பராயிலு முதலாவது முதலமைச்சரானார்.
- 1923 இல் நடைபெற்ற தேர்தலுக்குப் பின்னர் நீதிக் கட்சியைச் சேர்ந்த பனகல் அரசர் அமைச்சரவையை அமைத்தார்.
- பிராமனரல்லாதோரின் நலனுக்காக நீதிக் கட்சி பல்வேறு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியது. அவை வருமாறு–
- கல்விநிலையங்களிலும் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு செய்யப்பட்டது.ட
- 1924 இல் பொதுப்பணியாளர் பணியாளர் தேர்வுக்குழு நிறுவப்பட்டது.
- இந்து சமய அறநிலையத்துறை சட்டமும் சென்னை அரசு தொழில் உதவிச் சட்டமும் இயற்றப்பட்டன. தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது.
- ஏழை எளிய மக்கள் வீடு கட்டிக் கொள்வதற்காகப் புறம்போக்கு நிலங்களை பட்டாசெய்து வழங்கப்பட்டன. கல்வி கட்டணச் சலுகை , கல்வி உதவித்தொகை வழங்குதல், மதிய உணவுத் திட்டம் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ரௌலட் சத்தியாகிரகம்.

- 1919 ஆம் ஆண்டு ரௌலட் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்மூலம், முறையான நீதித்துறை சார்ந்த விசாரணைகைள் இல்லாமலேயே யாரை வேண்டுமானலும் பயங்கரவாதி எனக் குற்றம் சாட்டி அரசு சிறையில் அடைக்கலாம்.
- 1919 மார்ச் 18 இல் மெரினா, கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் காந்தியடிகள் உரையாற்றினார்.
- 1919 ஏப்ரல் 6 இல் ***கருப்புச் சட்டத்தை*** எதிர்க்கும் நோக்கில் கடையடைப்பும் வேலை நிறுத்தங்களும் நடத்தப்பட்டன.
- பல பகுதிகளிலிருந்து தொடங்கிய ஊர்வலங்கள் மெரினா கடற்கரையில் ஒன்றிணைந்து பெரும் மக்கள் கூட்டமானது.
- சென்னை சத்தியாகிரக சபை என்ற அமைப்பும் நிறுவப்பட்டது. ராஜாஜி, கஸ்தூரிரங்கர், எஸ். சத்தியமூர்த்தி, ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர்
- ஜார்ஜ் ஜோசப் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு இவர் ஆற்றிய சேவையின் காரணமாக மதுரை மக்கள் இவரை ***ரோசாப்பு துரை*** என அன்புடன் அழைத்தனர். மதுரை தொழிலாளர் சங்கம் எனும் (1918) அமைப்பை தொடங்குவதற்கு ஹார்வி மில் தொழிலாளர்களுக்கு உதவினார்.

கிலாபத் இயக்கம்

- தமிழ்நாட்டில் 1920 ஏப்ரல் 17 இல் மௌலான சௌகத் அலி தலைமையேற்ற ஒரு பொதுக்கூட்டத்துடன் கிலாபத் நாள் கடைப்பிடிக்கப்பட்டது. இதைபோன்ற ஒரு கூட்டம் ஈரோட்டிலும் நடத்தப்பட்டது. வாணியம்படி கிலாபத் எழுச்சி நவடிக்கைகளின் முக்கிய மையமாகத் திகழ்ந்தது.

ஒத்துழையாமை இயக்கம்

- ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாக, பல இடங்களில் விவசாயிகள் வரிகொடுக்க மறுத்தனர். தஞ்சாவூரில் வரிகொடா இயக்கம் ஒன்று நடைபெற்றது.
- தமிழ்நாட்டில் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கிய அம்சமாகத் திகழ்ந்தது கள்ளுக்கடைகளுக்கெதிரான போராட்டங்களே.
- 1921 நவம்பரில் சட்ட மறுப்ப இயக்கத்தைத் தொடங்குவதென முடிவு செய்யப்பட்டது. ராஜாஜி, சுப்பிரமணிய சாஸ்திரி, ஈ.வெ.ரா ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.
- 1922 சனவரி 13 இல் வேல்ஸ் இளவரசரின் வருகை புறக்கணிக்கப்பட்டது. 1922 இல் சௌரி சௌராநிகழ்வில் 22 காவலர்கள் கொல்லப்பட்டதைத் தொடாந்து ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

ஈ.வெ.ரா வின் ஆக்கபூர்வச் செயல்பாடுகள்

- கதரின் பயன்பாட்டை மேம்படுத்தி அதன் விற்பனையை அதிகரிக்கத் தீவிரமாகச் செயல்பட்டார். கள்ளுன்பதற்கு தனது எதிர்ப்பைக் காட்டும் வகையில் தனக்குச் சொந்தமான தோப்பிலிருந்த தென்னை மரங்கள் அனைத்தையும் வெட்டி வீழ்த்தினார்.

- திருவாங்கூர் அரசின் ஆட்சியிலிருந்த வைக்கம் எனும் ஊரில் நடைபெற்ற கோவில் நுழைவுக்கான சக்தியாகிரகத்திலும் முக்கியப் பங்கு வகித்தார். இதற்கு கைது செய்யப்பட்டு ஒரு மாத சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. பின்னரும் வைக்கத்தை வெளியேறாததால் இரண்டாவது முறையாக கைது செய்யப்பட்டு ஆறுமாதகால கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது.
- 1925 சூன் மாதத்தில் வைக்கத்தில் கோவிலைச் சுற்றியிருந்த வீதிகளில் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது. இப்போரட்டத்தின் காரணமாக அவர் வைக்கம் வீரர் என பாரட்டப்படுகிறார்.
- சேரன்மாதேவி குருகுலப் பிரச்சனையும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தொடர்பாக காங்கிரசுக்குள்ளே ஏற்பட்ட கருத்து வேறுபாடும் ஈ.வெ.ராவை காங்கிரசை விட்டு வெளியேற வைத்தன.
- தேசியக் கல்வியை முன்னெடுக்கும் பொருட்டு ஒரு குருகுலமானது வி.வி. சுப்பிரமணியனாரால் சேரன்மாதேவில் நிறுவப்பெற்றது. இப்பள்ளியில் சாதியின் அடிப்படையில் மாணவர்கள் பாகுபடுத்தப்பட்டனர். இது ஈ.வெ.ரா கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அவர் மற்றொரு தலைவரான பி. வரதராஜீலுவுடன் இணைந்து இப்பழக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கி கடுமையாக விமர்சித்தார்.
- 1925 நவம்பர் 21 இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டி மாநாட்டில் அவர் சட்டசபையில் பிராமணரல்லாதோருக்கு பிரதிநிதித்துவம் வேண்டும் எனும் கோரிக்கையை முன் வைத்தார். இதன் பொருட்டு 1920 முதல் அவர் மேற்கொண்ட முயற்சிகளால் தோல்வியுற்றார்.
- இதனால் காங்கிரஸ் லிருந்து விலகிய ஈ.வெ.ரா சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

சுயராஜ்ஜிய கட்சியினர் – நீதிக்கட்சியினர் இடையேயான போட்டி

- ஒத்துழையாமை இயக்கம் விலக்கி கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து காங்கிரஸ் *மாற்றத்தை விரும்பாதோர், மாற்றத்தை விரும்புவோர்* எனப் பிரிந்தது. மாற்றத்தை விரும்பாதோர் சட்டமன்றப் புறக்கணிப்பைத் தொடர விரும்பினர் (கஸ்தூரிரங்கர், எம்.ஏ. அன்சாரி. ராஜாஜி), மாற்றத்தை விரும்பியோர் தேர்தலில் போட்டியிட்டுச் சட்டமன்றத்தினுள் செல்ல விரும்பினர். சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு ஆகியோரால் சுயராஜ்ஜிய கட்சி உருவாக்கப்பட்டது. தமிழ்நாட்டில் எஸ். சீனிவாசனார், எஸ். சத்தியமூர்த்தி ஆகியோர் சுயரஜ்ஜியக் கட்சியினருக்குத் தலைமை ஏற்றனர்.
- 1926 இல் நடைபெற்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் சுயராஜ்ஜியக் கட்சியினர் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்றனர். இருந்த போதிலும் காங்கிரசின் கொள்கைக்கு இணங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்கமறுத்தது. மாறாக அவர்கள் சுயேட்சை வேட்பாளரான பி. சுப்பராயனுக்கு அமைச்சரவை அமைக்க உதவினார்.
- 1930 இல் நடைபெற்ற தேர்தலில் சுயராஜ்ஜியக் கட்சியினர் போட்டியிடாததால் நீதிக்கட்சி எளிதாக வெற்றி பெற்றது. அக்கட்சி தொடர்ந்து 1937 வரை ஆட்சி செய்தது.

நீல் சிலை அகற்றும் போராட்டம் (1927)

- *ஜேம்ஸ் நீல், மதராஸ் துப்பாக்கி ஏந்திய காலாட்படையைச் சேர்ந்தவர். 1857 பேரெழுச்சியின் போது நடைபெற்ற கான்பூர் படுகொலை என்றழைக்கப்படும் சம்பவத்தில் ,ஆங்கிலப் பெண்களும், குழந்தைகளும் பாதிக்கப்பட்டனர். அவர்களை வஞ்சம் தீர்ப்பதற்காக கொடுரமாக நடந்துகொண்டார். பின்னர் நீல் இந்திய வீரரால் கொல்லப்பட்டார்*
- *இவருக்கு சென்னை மௌண்ட் ரோட்டில் சிலை வைத்தனர். இதை எதிர்த்து திருநெல்வேலியிலிருந்து வந்திருந்த எஸ். என். சோமையாலுஜீலு தலைமையில் போராட்டம் நடைபெற்றது.*
- *அப்பொழுது சென்னை வந்திருந்த காந்திஜி இந்த போராட்டத்திற்க ஆதரவு தெரிவித்தார். 1937 இல் ராஜாஜியின் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி அமைத்திருந்தபோது இச்சிலை அகற்றப்பட்டு சென்னை அருங்காட்சியகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.*

சைமன் குழுவைப் புறக்கணித்தல்

- சென்னையில் எஸ். சத்தியமூர்த்தி தலைமையில் சைமன் குழு எதிர்ப்பு பிரச்சாரக் குழுவொன்று உருவாக்கப்பட்டது.
- 1929 பிப்ரவரி 18 இல் சைமன் குழு சென்னைக்கு வந்தபோது போராட்டம் வலுபெற்றது. குழுவுக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டப்பட்டது.

சட்ட மறுப்பு இயக்கம்

பூரண சுயராஜ்ஜியம் நோக்கி

- 1920 களில் தமிழ்நாட்டில் காந்தியடிகள் தலைமைலியான காங்கிரஸ் விரிந்துபட்ட அடித்தளத்தைக் கொண்ட அமைப்பாக மாறிக் கொண்டிருந்தது.

- 1927 இல் இந்திய தேசிய காங்கிரசின் சென்னை மாநாடு முழுமையான சுதந்திரமே தனது இலக்கு என அறிவித்தது.

தமிழக மாவட்டங்களில் பரவலான போராட்டங்கள்

- டி. பிரகாசம், கே. நாகேஸ்வர ராவ் ஆகியோர் தலைமையில் சத்தியாகிரகிகள் சென்னைக்கு அருகேயுள்ள உதயவனம் என்ற இடத்தில் ஒரு முகாமை அமைத்திருந்தனர். ஆனால் அவர்கள் காவல்துறையால் கைது செய்யப்பட்டனர். இந்நிகழ்வு சென்னையில் கடையடைப்பிற்கு வழிகோலியது.
- 1930 ஏப்ரல் 27 இல் திருவல்லிக்கேணியில் காவல்துறையினருடன் மோதல் ஏற்பட்டது. மூன்று மணிநேரம் நடைபெற்ற இம்மோதலில் மூன்று நபர்கள் உயிரிழந்தனர்.
- ராமேஷ்வரத்தில் உப்பு சத்தியகிரகம் மேற்கொள்ள முயன்ற தொண்டாகள் கைது செய்யப்பட்டனர்.ட
- மாகாணங்கள் முழுவதும் நூற்பாலைகள் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்.
- உப்புச்சட்டங்களை மீறியதற்காக அபராதம் கட்டிய முதல் பெண்மணி ருக்மணி லட்சுமிபதியாவார்.
- 1932 ஜனவரி 26 இல் பரவலாக ஆரியா என அழைக்கப்பட்ட பாஷ்யம் புனித ஜார்ஜ் கோட்டையின் உச்சியில் தேசியக் கொடியை ஏற்றினார்.
- சத்தியமூர்த்தி அந்நியத் துணிகளைத் விற்பனை செய்யும் கடைகளை மறியல் செய்தார். என்.எம்.ஆர். சுப்பராமன் மற்றும் கு. காமராஜ் ஆகியோரும் முக்கியப் பங்கு வகித்தனர்.

திருப்பூர் குமரனின் வீரமரணம்

- 1932 ஜனவரி 11 இல் திருப்பூரில் கொடிகளை ஏந்திய வண்ணம் நாட்டுப்பற்று மிகுந்த பாடல்களை பாடிச் சென்ற ஊர்வலத்தினர் காவல்துறையினரால் இரக்கமின்றி அடித்து உதைக்கப்பட்டனர். பரவலாக திரும்பூர் குமரன் என்றழைக்கப்படும் . O.K.S.R. குமாராசாமி தேசியக் கொடியை உயர்த்திப் பிடித்தவாறே விழுந்து இறந்தார். எனவே இவர் கொடிகாத்த குமரன் என அழைக்கப்படுகிறார்.

முதல் காங்கிரஸ் அமைச்சரவை

- 1935 இந்திய அரசாங்கச் சட்டம் மாநில சுயாட்சிக்கு வழி வகுத்தது. 1937 ஆம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. நீதிக்கட்சி படுதோல்வி அடைந்தது. தேர்தல்களில் காங்கிரஸ் பெற்ற வெற்றியானது, மக்களிடையே அது பெற்றருந்த செல்வாக்கைச் சுட்டிக்காட்டியது.
- ராஜாஜி முதல் காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தார். மது விலக்கைப் பரிசோதனை முயற்சியாக சேலத்தில் அறிமுகம் செய்தார். இதன் மூலம் ஏற்படும் வருவாய் இழப்பை சரிசெய்ய விற்பனை வரியை அறிமுகப்படுத்தினார்.
- சமூகத் தளத்தில் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் கோவில்களைத் திறந்து வைத்தார்.
- டி. பிரகாசம் மேற்கொண்ட முயற்சினால் ஜமீன்தார்களின் பகுதிகளைச் சேர்ந்த குத்தகைதாரர்களின் நிலை குறித்து விசாரணை செய்ய விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டது.
- இந்திய அமைச்சரவையைக் கலந்தாலோசிக்காமல் ஆங்கில அரசு இந்தியாவை இரண்டாம் உலகபோரில் ஈடுபடுத்தியதால் காங்கிரஸ் அமைச்சரவை ராஜினாமா செய்தது.
- மதுரை ஹரிஜன சேவக் சங்கத்தின் தலைவர் வைத்தியநாதர், செயலர் எல். என். கோபால்சாமி ஆகியோரால் 1939 சூலை 9 இல் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் ஹரிஜன மக்களுடன் நுழையத் திட்டமிடப்பட்டது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக உள்ள குடிமை , சமூகக் குறைபாடுகளை அகற்றுவதற்காக 1939 இல் கோவில் நுழைவு அங்கீகார, இழப்பீட்டுச் சட்டம் இயற்றப்பட்டது.

இந்தி எதிர்ப்புப் போராட்டம்

- பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயப்பாடமாக அறிமுகம் செய்யப்பட்டது. இது ராஜாஜியால் மேற்கொள்ளப்பட்ட ஒரு சர்ச்சைகுரிய நடவடிக்கையாகும்.
- இதற்கு எதிராக ஈ.வெ.ரா மிகப்பெரிய பரப்புரையை மேற்கொண்டார். அவர் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்றினை சேலத்தில் நடத்தினார்.
- தாளமுத்து மற்றும் நடராஜன் எனும் இரண்டு ஆர்வமிக்க போராட்டக்காரர்கள் சிறையில் மரணமடைந்தனர். திருச்சியிலிருந்து சென்னைக்கு ஊர்வலமொன்று திட்டமிடப்பட்டது. பெரியார் உட்பட 1200 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்.
- காங்கிரஸ் அரசு பதவி விலகியதைத் தொடர்ந்து நிர்வாகத்தைக் கைக்கொண்ட சென்னை மாகாண ஆளுநர் இந்தி கட்டாயப் பாடம் என்பதை நீக்கினார்.

வெள்ளையனே வெளியேறு இயக்கம்.

- 1942 ஆகஸ்டு 8 இல் வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு காந்தியடிகள் ***செய் அல்லது செத்துமடி*** எனும் முழக்கத்தை வழங்கினார்.
- ஒட்டு மொத்த காங்கிரஸ் தலைவர்களும் ஒரே நாள் இரவில் கைது செய்யப்பட்டனர். ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் காவலர்களின் பெயர்ப் பட்டியலை வைத்துக் கொண்டு அவர்கள் ரயிலை விட்டு இறங்கியதும் கைது செய்ததை பம்பாயிலிருந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்த கு. காமராஜர் கவனித்தார்.
- காவல் துறையினரின் கண்களில் படாமல் அரக்கோணத்திலேயே இறங்கிவிட்டார். பின்னர் அவர் தலைமறைவாகி வெள்ளையனே வெளியேறு இயக்கத்திற்காக மக்களைத் திரட்டும் பணியை மேற்கொண்டார்.
- துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்து கொண்டிருந்த போது ராஜாராஜியும் சத்தியமூர்த்தியும் கைது செய்யப்பட்டனர்.
- தமிழ்நாட்டில் இவ்வியக்கம் பரந்துபட்ட அளவில் நடைபெற்றது. மேலும் அஞ்சல் அலுவலகங்களை தீக்கிரையாக்குவது, தந்திக் கம்பங்களின் கம்பிகளை வெட்டி விடுவது, ரயில் போக்குவரத்திற்கு ஊறு விளைவிப்பது போன்ற வன்முறை நிகழ்வுகளும் அரங்கேறின.
- சூலூர் விமானநிலையம் தாக்குதலுக்குள்ளானது, கோயம்புத்துதூரில் ரயில்கள் தடம்புரளச் செய்யப்பட்டன. மதுரையில் காங்கிரஸ் தொண்டர்கள் இராணுவத்துடன் மோதினார்.
- ராஜபாளையம், காரைக்குடி மற்றும் தேவகோட்டை ஆகிய இடங்களில் காவல்துறையினரின் துப்பாக்கிச்சூடு நடைபெற்றது.
- வெள்ளையனே வெளியேறு இயக்கம் இரக்கமற்ற முறையில் வன்முறை மூலம் ஒடுக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள்

அச்சுத் தொழில்நுட்பத்தின் வருகை

- ஐரோப்பிய மொழிகள், தவிர்த்து அச்சில் ஏறிய மொழிகளில் முதல் மொழி தமிழ் மொழியாகும்.
- மிக முன்னதாக 1578 இல் தம்பிரான் வணக்கம் எனும் தமிழ் புத்தகம் கோவாவில் வெளியிடப்பட்டது.
- 1709 இல் முழுமையான அச்சகம் சீகன்பால்கு அன்பவரல் தரங்கம்பாடியில் நிறுவப்பட்டது. தொடக்கால தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான திருக்குறள் 1812 இல் வெளியிடப்பட்டது.
- பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் அறிஞர்களான சி.வை. தாமோதரனார் (1832–1901) உ.வே. சாமிநாதர் (1855–1942) போன்றவர்கள் தமிழ்ச்செவ்வியல் இலக்கியங்களை மீண்டும் கண்டறியதற்காகத் தங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவழித்தனர்.
- சி.வை. தாமோதரனார் பனையோலைகளில் கையால் எழுதப் பெற்றிருந்த பல தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார்.
- தமிழறிஞர் மீனாட்சி சுந்தரனாரின் மாணவரான உ.வ சாமிநாதர் செவ்வியல் தமிழ் இலக்கிய நூல்களான சீவகசிந்தாமணி போன்ற நூல்களை பதிப்பித்தார்.
- 1816 இல் புனித ஜார்ஜ் கோட்டையில் கல்லூரியினை நிறுவிய எல்லிஸ் தென்னிந்திய மொழிகள் தனிப்பட்ட மொழிக்குடும்பத்தை சார்ந்தவை எனும் கோட்பாட்டை உருவாக்கினார்.
- ராபர்ட் கால்டுவெல் திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம் எனத் தலைபிடப்பட்ட நூலில் இக்கோட்பாட்டை 1856 இல் விரிவுபடுத்தினார்.
- தமிழ்நாட்டில் திராவிட உணர்வு தோன்றி வளர்வதற்கு தமிழ் மறுமலர்ச்சி பங்களிப்பைச் செய்தது இச்சிந்தனைகள் பி. சந்தரனாரால் எழுதப்பெற்ற மனோன்மனியம் எனும் நாடக நூலில் இடம் பெற்றுள்ள தமிழ்மொழி வாழ்த்துப் பாடலில் மெய்பிக்கப்பட்டுள்ளது.
- வள்ளலார் எனப் பிரபலமாக அறியப்பட்ட ராமலிங்க அடிகள் நடைமுறையிலிருந்த இந்து சமய பழமைவாதத்தை கேள்விக்குள்ளாக்கினார்.
- ஆப்ரகாம் பண்டிதர் தமிழ் இசைக்குச் சிறப்புச் செய்ததோடு தமிழ் இசை வரலாறு குறித்து நூல்களையும் வெளியிட்டார்.
- பௌத்தத்திற்குப் புத்துயிரளித்த ஒரு தொடக்கால முன்னோடியான எம். சிங்காரவேலர் காலனிய சக்தியை எதிர்கொள்வதற்காக பொதுவுடைமைவாதத்தையும் சமத்துவத்தையும் வளர்த்தார்.

பரிதிமாற் கலைஞர் (வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரி)

- வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரி மதுரை அருகே பிறந்தார். சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழ் பேரராசிரியராகப் பணியாற்றினார். தமிழ்மேல் கொண்ட பற்றினால் பரிதிமாற் கலைஞர் என தனது பெயரை தூயத்தமிழில் மாற்றிக் கொண்டார்.
- தமிழ்மொழி ஒரு செம்மொழி என்றும் எனவே சென்னைப் பல்கலைக்கழகம் தமிழை ஒரு வட்டாரமொழியென அழைக்கக் கூடாதென முதன்முறையாக வாதாடியவர் அவரே.
- 14 வரிச் செய்யுள் வடிவத்தை முதன் முதலில் அறிமுகப்படுத்தினார். இவரது தனது 33 வயது வயதில் இயற்கை எழுதினார்.

மறைமலை அடிகள்

- மறைமலை அடிகள் தமிழ் மொழியில் தூய்மைவாதத்தின் தந்தை என்றும் தனித்தமிழ் இயக்கத்தை உருவாக்கியவர் எனவும் கருதப்படுகிறார்.
- சங்க இலக்கியங்கள் பலவற்றிற்கு விளக்கவுரை எழுதியுள்ளார். சித்தாந்த தீபிகா எனும் பத்திரிக்கையில் பணிபுரிந்தார். சென்னை கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார்.
- தூய தமிழ் வார்த்தைகளைப் பயன்படுத்துவதையும் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு தமிழ் மொழியிலிருந்து அகற்றப்படுவதையும் மறைமலைஅடிகள் ஊக்குவித்தார்.
- தனித்தமிழ் இயக்கம் தொடங்கப்பட்டது 1916 எனப் பொதுவாகக் கூறப்படுகிறது. அவரது மகள் நீலாம்பிகை இவ்வியக்கம் உருவாக்கப்பட்டதில் முக்கியப் பங்கு வகித்தார்.
- வேதாச்சலம் என்ற தனது பெயரை அவர் தூய தமிழில் மறைமலை அடிகள் என மாற்றிக்கொண்டார்.
- அவருடைய ஞானசாகரம் எனும் பத்திரிக்கை அறிவுக்கடல் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- அவருடைய சமரச சன்மார்க்க சங்கம் எனும் நிறுவனம் பொது நிலைக் கழகம் என பெயரிடப்பட்டது.
- தமிழ்சொற்களடங்கிய அகராதி ஒன்றை நீலாம்பிகை தொகுத்தார்.

திராவிட இயக்கத்தின் எழுச்சி

- சென்னை மாகாணத்தில் சமூகத்தின் அனைத்துத் துறைகளில் குறிப்பாக அரசியல், கல்வி மற்றும் அரசாங்க வேலைவாய்ப்புகளிலும் அவர்களே ஆதிக்கம் செலுத்தினர்.
- 1911 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி சென்னை மாகாண மக்கள் தொகையில் பிராமணர்களின் எண்ணிக்கை 3 விழுக்காட்டிற்கு சற்றே அதிகமாகயும் பிராமணரல்லாதோரின் எண்ணிக்கை 90 விழுக்காடெனவும் காட்டியது.
- மேலும் 1901 முதல் 1911 வரையிலான பத்தாண்டுகளில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு முடித்த பிராமணர் எண்ணிக்கை 4074 ஆகவும் அதே பிராமணரல்லாதோரின் எண்ணிக்கை 1035 ஆகவும் இருந்தது.
- இத்தகைய சூழலில் திராவிட இயக்கம் பிராமண மேலாதிக்கத்திற்கு எதிராகப் பிராமணர் அல்லாதவர்களைப் பாதுகாக்கும் இயக்கமாக உதயமானது.
- 1909 இல் பிராமணர் அல்லாத மாணவர்களுக்கு உதவி செய்வதற்காக **மதராஸ் பிராமணரல்லாதோர் சங்கம்** என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.
- 1912 இல் டாக்டர் சி. நடேசனார் எனும் மருத்துவர் மதராஸ் ஐக்கிய கழகம் எனும் அமைப்பை உருவாக்கினார்.
- இது பின்னாளில் மதராஸ் திராவிடர் சங்கம் என்ற மாறியபின் திராவிடர்களின் மேம்பாட்டிற்கான உதவிகளைச் செய்தது. பிராமணர் அல்லாத பட்டதாரிகளுக்கு உதவுவது அவர்களைக் கற்கவைப்பது ஆகியவற்றோடு அவர்களது குறைபாடுகளை குறித்து விவாதிக்க முறையான கூட்டங்களையும் நடத்தியது.
- இதே சமயத்தில் நடேசனார் தங்கும் விடுதி வசதியில்லாததால் பிராமணரல்லாத மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டதால் அதைச் சரிசெய்யும் வகையில் திருவல்லிகேணியில் (சென்னை) சூலை 1916 இல் திராவிடர் இல்லம் என்ற பெயரில் ஒரு தங்கும் விடுதியை நிறுவினார். மேலும் பிராமணர் அல்லாத மாணவர்களின் நலன் கருதி இவ்வில்லம் ஒரு இலக்கிய அமைப்பையும் கொண்டிருந்தது.

தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (நீதிக்கட்சி)

- 1916 நவம்பர் 29 இல் டாக்டர் நடேசனார், சர் பிட்டி தியாகராயர், டி.எம்.நாயர் மற்றும் அலமேலுமங்கை தாயாராம்மாள் உட்பட 30 முக்கிய பிராமணர் அல்லாத தலைவர்கள் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை உருவாக்க ஒருங்கிணைந்தனர்.

- இதே சமயம் 1916 டிசம்பரில், விக்டோரியா பொது அரங்கில் நடைபெற்ற கூட்டமொன்றில் பிராமணரல்லாதோர் அறிக்கை வெளியிடப்பட்டது.
- மாகாண அரசுகளில் இரட்டையாட்சி முறையை அறிமுகம் செய்த பின்னர் மாண்டேக செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் அடிப்படையில் 1920 இல் முதல் தேர்தல் நடைபெற்றது.
- நீதிக்கட்சி தேர்தலில் வெற்றிபெற்று இந்தியாவின் முதல் அமைச்சரவையை சென்னையில் அமைத்தது. அ. சுப்பராயலு சென்னை மாகாணத்தின் முதலமைச்சரானார்.
- மேலும் நீதிக்கட்சி 1920–1923 மற்றும் 1923–1926 ஆகிய ஆண்டுகளில் அரசமைத்தது. காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தைப் புறக்கணித்த சூழலில் நீதிக்கட்சி 1937 இல் தேர்தல் நடைபெறும் வரை ஆட்சி தொடர்ந்து நீடித்தது.
- 1937 தேர்தல்களில், முதன்முதலாகப் பங்கேற்ற இந்திய தேசிய காங்கிரஸ் நீதிக்கட்சியை படுதோல்வி அடையச் செய்தது.
- சாதி மறுப்புத் திருமணங்களைக் கட்டுப்படுத்திய சட்டச் சிக்கல்களை நீதிக் கட்சியினர் அகற்றியதோடு பொதுக் கிணறுகளையும் நீர் நிலைகளையும் ஒடுக்கப்பட்ட பிரிவு மக்கள் பயன்படுத்துவதை தடுத்த தடைகளைத் தகர்த்தனர்.
- ஒடுக்கப்பட்ட பிரிவு குழந்தைகள் பொதுப்பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்பட் வேண்டுமென நீதிக்கட்சியின் அரசு ஆணை பிறப்பித்தது.
- இச்சமூகக் குழுக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கென 1923 இல் தங்கும் விடுதிகள் உருவாக்கப்பட்டன.
- நீதிக்கட்சியின் கீழிருந்த சட்டமன்றம்தான் முதன்முதலாக தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை 1921 இல் அங்கீகரித்தது.
- இத்தீர்மானம் பெண்களுக்கென இடத்தை ஏற்படுத்தியதால் 1926 இல் முத்துலட்சுமி அம்மையார் இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினராக முடிந்தது.
- சமூக நீதியை நிலைநாட்டுவதின் ஒரு பகுதியாக பல்வேறு சாதிகளையும் சமூகங்களையும் சார்ந்தவர்களுக்கு அரசுப் பணிகளில் சேர்வதற்கு சமமான வாய்ப்புகளை உறுதி செய்யும் பொருட்டு இரண்டு வகுப்புவாரி அரசாணைகள் (1921 செப்டம்பர் 16 மற்றும் 1922 ஆகஸ்ட் 15) இயற்றப்பட்டன.
- அரசு அதிகாரிகளை தேர்வு செய்ய 1924 இல் பணியாளர் தேர்வு வாரியத்தை நீதிகட்சி அமைத்தது.
- இம்முறையை பின்பற்றி பிரிட்டிஷ் இந்திய அரசு 1929 இல் பொதுப் பணியாளர் தேர்வாணையத்தை உருவாக்கியது.
- நீதிக்கட்சி 1926 இல் இந்து சமய அறநிலையச் சட்டத்தை இயற்றியது. அதன்படி எந்தவொரு தனிநபரும், சாதிவேறுபாடின்றி கோவில்களின் நிர்வாகக் குழுக்களில் உறுப்பினராகவும் கோவிலின் சொத்துகளை நிர்வகிக்கவும் வழிவகை செய்யப்பட்டது.

சுயமரியாதை இயக்கம்

- சுயமாரியதை இயக்கம் அன்று நிலவிய சமூக, அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளில் இருந்த சீர்கேடுகளை விமர்சனம் செய்வதோடு தமிழ்நாட்டில் பிராமணர் அல்லாதவர்களின் மேம்பாட்டிற்கான ஒரு திட்டத்தையும் அறிமுகம் செய்தது.
- பகுத்தறிவும் சுயமரியாதையும் அனைத்து மனிதர்களின் பிறப்புரிமை எனப் பிரகடனம் செய்த இவ்வியக்கம் சுயாட்சியைக் காட்டிலும் இவை முக்கியமானவை எனும் கருத்தை உயர்த்திப் பிடித்தது.
- பெண்களின் தாழ்வான நிலைக்கு எழுத்தறிவின்மையே காரணம் என அறிவித்த அவ்வியக்கம் அனைவருக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்கும் பணிகளை மேற்கொண்டது. சமூகத்தில் நிலவிய மூடநம்பிக்கைகளைக் கேள்விகளுக்கு உட்படுத்தினர்.
- இவ்வியக்கம் பெண் விடுதலை கோருதல், மூடநம்பிக்கைகளை நீக்குதல் மற்றும் பகுத்தறிவை வலியுறுத்துதல் போன்ற கோரிக்கைகளை கோரியது. இவ்வியக்கம் சீர்திருத்த திருமணம் அல்லது சுயமரியாதைத் திருமணங்களை ஆதரித்தது.
- சுயமரியாதை இயக்கச் சொற்பொழிவுகளின் மையப் பொருளாக இருந்தது *இனம்* ஆகும். திராவிட மக்களுடைய நீண்டகால வரலாற்றின் போக்கில் திராவிட மக்கள் ஆரிய பிராமணர்களால் திட்டமிட்டு ஒடுக்கப்பட்டதாக அச்சொற்பொழிவுகளில் விவாதிக்கப்பட்டன.
- சுயமரியாதை இயக்கம் பிராமணர் அல்லாத இந்துக்களின் நலன்களுக்காக மட்டுமல்லாமல் இஸ்லாமியர்களின் நலனுக்காகவும் போராடியது. இருப்பினும் முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவது போன்ற சில பழக்கங்களை பெரியார் விமர்சனம் செய்யத் தயங்கவில்லை.

- இஸ்லாம் சமூகத்தில் சீர்திருத்த முன்முயற்சிகள் மேற்கொண்ட துக்கியைத் சேர்ந்த முஸ்தபா கமால் பாட்சா , ஆப்கானிஸ்தானத்தைச் சேர்ந்த அமானுல்லா ஆகியோரை திராவிட முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டுமென பெரியார் கூறினார்.

பெரியார் ஈ.வெ.ரா

- பெரியார் ஈ.வெ. ராமசாமி (1879–1973) சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தவர் ஆவார்.
- இவர் ஈரோட்டை சேர்ந்த செல்வந்தரும் வணிகருமான வெங்கடப்பர், சின்னத்தாயம்மாள் ஆகியோரின் மகனாவர். ஓரளவு முறையான கல்வியைக் கற்றிருந்தாலும் தன் தந்தையால் ஆதரிக்கப்பட்ட ஆறிஞர்களுடன் விமர்சன விவாதங்களில் ஈடுபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.
- ஈரோட்டின் நகரசபைத் தலைவர் பதவி (1918–1919) உட்பட பல பதவிகளையும் அவர் வகித்தார்.
- 1917 க்குப் பின்னர் பிராமணரல்லாத நீதிக் கட்சியின் எழுச்சிக்குப் பின்னர் சி. ராஜாஜியின் முன் முயற்சியினால் பெரியார் மற்றும் பி. வரதராஜிலு போன்ற பிராமணரல்லாத தலைவர்களும் க காங்கிரஸ் கட்சியில் சேர்க்கப்பட்டனர்.
- ஒத்துழையாமை இயக்கத்திற்கு (1920–1922) ஆதரவாகத் தான் வகித்துவந்த அனைத்து அரசுப் பொறுப்புகளையும் அவர் ராஜினாமா செய்தார்.
- லாபம் தரும் வணிகத்தைக் கைவிட்டு செயலார்வமிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஆனார். காதிக்கு துணைநின்ற அவர் தமிழகத்தின் வீதிகளிலே கதர் விற்பனை செய்தார். மது விலக்கு இயக்கத்திற்கு ஆதரவாகத் தனது தோப்பிலிருந்த 500 தென்னை மரங்களை வெட்டினார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயலராகவும் தலைவராகவும் பொறுப்பு வகித்தார்.
- தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக பெரியார் பதவி வகித்தபோது ஒடுக்கப்பட்ட மக்களின் கோவில் நுழைவு உரிமை குறித்த தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார். சாதி தர்மம் என்ற பெயரில் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கோவிலுக்குள்ளும் அதைச் சுற்றியுள்ள வீதிகளிலும் நுழைவது மறுக்கப்பட்டிருந்தது.
- இப்படிப்பட்ட நடைமுறையினை வைக்கம் மக்கள் எதிர்த்தனர். எதிர்பின் தொடக்கக் கட்டங்களில் மதுரையைச் சேர்ந்த ஜார்ஜ் ஜோசப் பெரும்பங்கு வகித்தார்.
- சட்டசபை போன்ற பிரதிநிதித்துவ அமைப்புகளில் பிராமணர் அல்லாதவர்களுக்கு இட ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதில் பெரியார் முனைப்புடன் இருந்தார். ஆனால் அதில் தோல்வியடைந்தார்.
- 1925 இல் காங்கிரசை விட்டு வெளியேறினார் அந்த ஏமாற்றத்தைத் தொடர்ந்து, பெரியார் 1925 இல் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

குடிஅரசு	–	1925
ரிவோல்ட்	–	1928
புரட்சி	–	1933
பகுத்தறிவு	–	1934
விடுதலை	–	1935

போன்ற பல செய்தித்தாள்களையும் இதழ்களையும் பெரியார் தொடங்கினார்.

- சுயமரியாதை இயக்கத்தின் அதிகார்பூர்வ செய்தித்தாள் குடி அரசு ஆகும்.
- ஒவ்வொரு இதழிலும் சமூகப் பிரச்சனைகள் தொடர்பான தனது கருத்துகளைப் பெரியார் வழக்கமான கட்டுரையாக எழுதினார். அவ்வப்போது ***சித்திரபுத்திரன்*** எனும் புனைப் பெயரில் கட்டுரைகளை எழுதினார்.
- பெரியார் பல நாடுகளுக்குச் சென்றார். அந்நாடுகளைச் சேர்ந்த அறிவார்ந்த மக்களோடு உரையாடினார். சிங்கப்பூர், மலேசியா (1929–30, 1954) எகிப்து, சோவியத் ரஷ்ய குடியரசு (தற்போதைய ரஷ்யா), கிரீஸ், துருக்கி, ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் போர்த்துகல் (1931–1932) மற்றும் பர்மா (1954 புத்தரின் 2500 வது பிறந்த ஆண்டு) ஆகிய நாடுகளுக்கு சென்றார்.
- சோவியத் ரஷ்யாவிலும் ஐரோப்பாவிலும் அவர் பெற்ற பயண அனுபவங்கள் அவரை சமதர்மக் கருத்துக்களின்பால் நாட்டம்கொள்ள வைத்தன. பௌத்த சமய முன்னோடியும், தென்னிந்தியாவின் முதல் பொதுவுடமையவாதியுமான சிங்காரவேருடன் நெருக்கமான உறவு கொண்டிருந்தார்.
- பி.ஆர். அம்பேத்கார் எழுதிய சாதி ஒழிப்பு எனும் நூலை, அந்நூல் வெளிவந்தவுடன் 1936 இல் தமிழில் பதிப்பித்தார். அம்பேத்கார் அவர்களின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தனித்தேர்தல் தொகுதிக் கோரிக்கையை பெரியாரும் ஆதரித்தார்.

- 1937 இல் ராஜாஜியின் தலைமையிலான அரசின் செயல்பாட்டினை எதிர்க்கும் விதமாக பள்ளிகளில் இந்தையை கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்ததற்கு எதிராகப் பெரியார் மக்கள் செல்வாக்கு பெற்ற இயக்கத்தை நடத்தினார்.
- இந்தி எதிர்ப்புப் போராட்டமானது (1937–39) தமிழ்நாட்டு அரசியலில் மிக பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தப் போராட்டத்துக்காக பெரியார் சிறையிளல் அடைக்கப்பட்டார்.
- பெரியார் சிறையில் இருந்தபோதே நீதிக்கட்சி சுயமரியாதை இயக்கத்துடன் இணைந்தது. அதற்கு 1944 இல் திராவிடர் கழகம் (திக) புதுப்பெயர் சூட்டப்பெற்றது.
- சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த ராஜாஜி (1952–54) பள்ளிக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்திய தொழில் கல்வி பயிற்சித் திட்டமானது. மாணவர்களுக்கு அவர்களின் தந்தையர்கள் செய்து வந்த தொழில்களில் பயிற்சியளிப்பதாக அமைந்தது. இதை குலக்கல்வித் திட்டம் என விமர்சித்த பெரியார் முழுமையாக எதிர்த்தார்.
- இதற்கு எதிராக பெரியார் மேற்கொண்ட போராட்டங்கள் ராஜாஜியின் பதவி விலகலுக்கு இட்டுச் சென்றது.
- கு. காமராஜ் சென்னை மாநிலத்தின் முதலமைச்சரானார். பெரியார் தன்னுடைய தொன்னூற்று நான்காவது வயதில் 1973 இயற்கை எய்தினார். அவரது உடல் சென்னையில் பெரியார் திடலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.
- சமயம் என்றால் நீங்கள் மூட நம்பிக்கைகளை ஏற்றுக் கொள்கிறீர்கள் என்று பொருள் –பெரியார்.
- குழந்தைத் திருமணத்தையும் தேவதாசி முறையும் கண்டனம் செய்தார். 1929 முதல் சுயமரியாதை மாநாடுகளில், பெண்களின் மோசமான நிலை குறித்து குரல் கொடுக்கத் தொடங்கியலிருந்து பெண்களுக்குகு விவாகரத்து பெறுவதற்கம் சொத்தில் பங்கு பெறுவதற்கும் உரிமை உண்டு என ஆணித்தரமாக வலியுறுத்தினார்.
- திருமணம் செய்து கொடுப்பது எனும் வார்த்தைகளை மறுத்த அவர் அவை பெண்களைப் பொருட்களாகப் நடத்துகின்றன என்றார். அதற்குத் மாற்றாக திருக்குறளில் எடுக்கப்பட்ட வாழ்க்கை துணை என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டினார்.
- பெண்ணியம் குறித்து பெரியார் எழுதிய மிக முக்கியமான நூல் ***பெண் ஏண் அடிமையாளால்?*** என்பதாகும்.
- பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படுவது அவர்களுக்குச் சமூகத்தில நன்மதிப்பையும், பாதுகாப்பையும் வழங்கும் என பெரியார் நம்பினார்.
- 1989 இல் தமிழக அர சு, மாற்றங்களை விரும்பிய சீர்திருத்தவாதிகளின் கனவை நனவாக்கும் வகையில் 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து வாரிசுரிமைச் சீர்திருத்தச் சட்டத்தை அறிமுகம் செய்தது. முன்னோர்களின் சொத்துக்களை உடைமையாகப் பெறுவதில் பெண்களுக்குச் சம உரிமை உண்டென்பதை உறுதிப்படுத்தியது.

இரட்டைமலை சீனிவாசன்

- இரட்டைமலை சீனிவாசன் (1859–1945) தாத்தா எனப் பரவலாக அறியப்பட்ட இவர் 1859ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் பிறந்தார். சமூகநீதி, சமத்துவம், சமூக உரிமைகள் ஆகியவற்றுக்காகப் போராடினார். அவருடைய தன்னலமற்ற சேவைக்காக ராவ்சாகிப் (1926), ராவ் பகதூர் (1930), திவான் பகதூர் (1936) ஆகிய பட்டங்களால் அவர் சிறப்புச்செய்யப்பட்டார்.
- அவரது சுயசரிதையான ***ஜீவிய சரித சுருக்கம்*** 1939 இல் வெயிடப்பட்டது. இந்நூல் முதன்முதலாக எழுதப்பெற்ற சுயசரிதை நூல்களில் ஒன்றாகும்.
- 1893 இல் ஆதிதிராவிட மகாஜன சபை எனும் அமைப்பை உருவாக்கினார். ஒடுக்கப்பட்ட மக்களின் கூட்டமைப்பு மற்றும் சென்னை மாகாண ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் கூட்டமைப்பு ஆகிய அமைப்புகளின் தலைவராகப் பணியாற்றினார்.
- தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகளைச் சந்தித்த இரட்டைமலை சீனிவாசன் அவருடன் நெருக்கமானார்.
- 1923 இல் சென்னை மாகாண சட்டசபை உறுப்பினரான அவர் நீதிக்கட்சியில் தனது செல்வாக்கினை எற்படுத்தி ஒடுக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் உரிமைகளையும் பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்தார்.
- பி.ஆர் அம்பேத்காரின் நெருக்கமானவரான அவர், லண்டனில் (1930 மற்றும் 1931) நடைபெற்ற முதல் மற்றும் இரண்டாம் வட்டமேசை மாநாடுகளில் கலந்து கொண்டு சமூகத்தின் விளிம்புநிலை மக்களின் கருத்துக்களுக்காக குரல் கொடுத்தார்.
- 1932 இல் செய்துகொள்ளப்பட்ட பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களுள் அவரும் ஒருவர்.

மயிலை சின்னதம்பி ராஜா

- மயிலை சின்னதம்பி ராஜா (1883–1943) மக்களால் எம்.சி. ராஜா என அழைக்கப்பட்ட அவர் ஒடுக்கப்பட்ட வகுப்பை சார்ந்த தலைவர்களில் முக்கியமானவர்.

- பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றுக்கான பல்வேறு பாடப்புத்தகங்களை எழுதினார். தென்னிந்திய நலச் உரிமைச் சங்கத்தை (நீதிக்கட்சி) உருவாக்கியவர்களில் ஒருவராவார்.
- சென்னை மாகாணத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து சட்ட மேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் உறுப்பினராவர். (1920–1926) சென்னை சட்ட சபையில் நீதிக்கட்சியின் துணைத் தலைவரகச் செயல்பட்டார்.
- ஆதிதிராவிடர், ஆதி ஆந்திரர் எனும் வார்த்தைகளைப் பயன்படுத்துமாறு பரிந்துரைத்தார்.
- 1928 இல் அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கம் எனும் அமைப்பை உருவாக்கி அதன் தலைவராக நீண்ட காலம் பணியாற்றினார்.

தமிழ்நாட்டில் தொழிலாளர் இயக்கங்கள்

- சென்னை மாகாண தொழிலாளர் இயக்க நடவடிக்கைகளில் ஒரு முன்னோடியாத் திகழ்ந்தவர் ம.சிங்காரவேலர் (1860–1946) ஆவார். சென்னையில் பிறந்த அவர் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த மாநிலக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார்.
- 1923 இல் முதல் முறையாக மே தின விழவை ஏற்பாடு செய்தவரும் இவரே.
- தொழிலாளி வர்க்கத்தின் பிரச்சனைகளைப் வெளிப்படுத்துவதற்காக ***தொழிலாளன்*** (Worker) என்ற பத்திரிக்கையை வெளியிட்டார்.

இந்திய விடுதலைக்கு முன்பு மொழிப்போராட்டம்

- ஆபிரகாம் பண்டிதர் தமிழ் இசை வரலாற்றை முறையாகக் கற்றாய்ந்த, பழந்தமிழர் இசை முறையை மீட்டுருவாக்கம் செய்ய முயன்றார்.
- 1912 இல் தஞ்சாவூர் ***சங்கீத வித்யா மகாஜன சங்கம்*** என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அதுவே தமிழிசை இயக்கத்தின் கருமூலமானது. இசை நிகழ்வுகளில் தமிழில் பாடல்கள் பாடப்படுவதற்கு இவ்வியக்கம் முக்கியத்துவம் வழங்கியது.
- தமிழிசையின் நிலை குறித்து விவாதிக்க 1943 இல் முதல் தமிழிசை மாநாடு நடத்தப்பட்டது.

பெண்கள் இயக்கங்கள்

- இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சென்னை மாகாணத்தில் பெண்களை வலிமையுள்ளவர்களாக மாற்றுதல் எனும் நோக்கத்துடன் பல பெண்ணிய இயக்கங்கள் நிறுவப்பெற்றன. அவைகளுன் தமிழ் நாட்டில் உருவான இந்தியப் பெண்கள் சங்கம்,அகில இந்திய பெண்கள் மாநாடு ஆகியவை முக்கியமானவையாகும்.
- 1917 இல் இந்தியப் பெண்கள் சங்கம் அன்னிபெசன்ட்,டோரதி ஜினாராஜதாசா, மார்கரெட் கசின்ஸ் ஆகியோரால் சென்னை அடையாறில் தொடங்கப்பட்டதாகும்.
- இவ்வமைப்பு தனிநபர் சுகாதாரம், திருமணச் சட்டங்கள், வாக்குரிமை, குழந்தை வளர்ப்பு மற்றும் பொது வாழ்வில் பெண்களின் பங்கு ஆகியவை குறித்து பல்வேறு மொழிகளில் செய்தி மடல்களையும் வெளியிட்டன.
- 1927 இல் இந்திய பெண்கள் மாநாட்டை நிறுவியது. மேலும் அரசு பெண்களின் மேம்பாட்டிற்காகப் பல கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென பரிந்துரை செய்தது.
- தேவதாசி முறையை ஒழிப்பதற்காகச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதற்காக நடைபெற்ற இயக்கத்தில் டாக்டர். முத்துலட்சுமி அம்மையார் முதலிடம் வகித்தார்.
- மதராஸ் தேவதாசி சட்டம் –1947 எனும் சட்டம் அரசால் இயற்றப்பட்டது.
    - *1930 இல் சென்னை சட்டமன்றத்தில் முத்துலட்சுமி அம்மையார் **சென்னை மாகாணத்தில் இந்து கோவில்களுக்குப் பெண்கள் அர்ப்பணிக்கப்படுவதை தடுப்பது** எனும் மசோதாவை அறிமுகப்படுத்தினார். பின்னர் தேவதாசி ஒழிப்புச் சட்டமாக மாறிய இம் மசோதா, இந்து கோவில் வளாகங்களிலோ அல்லது வேறு வழிபாட்டு இடங்களிலோ **பொட்டுக் கட்டும் சடங்கு** நடத்துவது சட்டத்திற்குப் புறம்பானதாகும் என அறிவித்தது.*
    - *தேவதாசிகள் திருமணம் செய்து கொள்வதற்கு சட்டபூர்வமான அனுமதியை வழங்கியது. மேலும் தேவதாசி முறைக்கு உதவிசெய்கிற தூண்டிவிடுகிற குற்றத்தை செய்வோர்க்கு குறைந்த பட்சம் ஐந்தாண்டு சிறை தண்டனை என ஆணையிட்டது. இம்மசோதா சட்டமாக மாறுவதற்கு 15 ஆண்டுகள் காத்திருந்தது.*

பெரியார் பயிற்சி பட்டறை
Padasalai.Net

பெரியார் பயிற்சி பட்டறை
Padasalai.Net

பெரியார் பயிற்சி பட்டறை

மணிவிழுந்தான் வடக்கு, ஆத்தூர் வட்டம்,

சேலம் மாவட்டம்–636 112.

குடிமையியல்

தமிழ்நாடு அரசு புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்திலிருந்து 6–ஆம் வகுப்பு முதல் 10 –ஆம் வகுப்பு வரையில் உள்ள குடிமையியல் பாடங்கள் அரசுத் தேர்வுகளுக்கான பாடத்திட்டத்தின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது.

"கல்வியின் நோக்கம் மக்கள் பகுத்தறிவு பெறும் இலட்சியமாக இருக்க வேண்டுமே தவிர, அறிவை மழுங்க வைக்கும் மூட நம்பிக்கை சம்பந்தப்பட்ட விஷயமாக இருக்கக்கூடாது"

–பெரியார்

6வது முதல் 10 வகுப்பு வரை புதிய பாடப்புத்தகம்

இந்திய அரசியலமைப்பு உருவாக்கம்.

- 1946 ஆம் ஆண்டு அமைச்சரவை தூதுக்குழு திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் நிர்ணய சபையால் இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது.
- இச்சபை 292 மாகாணப் பிரதிநிதிகள், 93 சுதேச அரசுகளின் நியமன உறுப்பினர்கள், பலுச்சிஸ்தானின் சார்பில் ஒருவர் மற்றும் மாகாண முதன்மை ஆணையர்கள் சார்பில் மூவர் என மொத்தம்ம 389 உறுப்பினர்கள் இருந்தனர்.
- அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் நாள் நடைபெற்றது.
- இச்சபையின் தற்காலிக தலைவராக மூத்த உறுப்பனிர் டாக்டர். சச்சிதானந்த சின்கா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இந்திய அரசியலமைப்பை உருவாக்க கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் போதே அவர் இறந்தததைத் தொடர்ந்து, இராஜேந்திர பிரசாத் இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் தலைவராகவும், **H.C.** முகர்ஜி மற்றும் **V.T** கிருஷ்ணமாச்சாரி இருவரும் துணைத் தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- இக்கூட்டத் தொடர் 11 அமர்வுகளாக 166 நாட்கள் நடைபெற்றது. இக்கூட்டத்தின் போது 2473 திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. அவற்றுள் சில ஏற்கப்பட்டன. அரசியல் நிர்ணய சபை பல்வேறு குழுக்களின் மூலம் இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கும் பணியை மேற்கொண்டது.
- இந்தய அரசியலமைப்பு சட்ட வரைவுக்குழுத் தலைவர் டாக்டர். பி.ஆர். அம்பேத்கர் தலைமையின் கீழ் இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. எனவே அவர் ***இந்திய அரசியலமைப்பின் தந்தை*** என அறியப்படுகிறார்.
- இறுதியாக முகவுரை,22 பாகங்கள், 395 சட்டப்பிரிவுகள் மற்றும் 8 அட்டவணைகளைக் கொண்ட இந்திய அரசியலமைப்பு, 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1950 ஆம் ஆண்டு சனவரி 26 ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது இந்த நாளே ஒவ்வொரு ஆண்டும் இந்திய குடியரசு தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- பிரேம் பெஹாரி நரேன் ரைஜடா என்பவரால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் இத்தாலிய பாணியில், அவரது கைப்பட எழுதப்பட்டது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்புக் கூறுகள்

- உலகிலுள்ள எழுதப்பட்ட அனைத்து அரசியலமைப்களை விடவும் மிகவும் நீளமானது
- பெரும்பான்மையான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை
- இது நெகிழாத்தன்மை கொண்டதாகவும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
- கூட்டாட்சி முறை அரசாங்கத்தை ஏற்படுத்துகிறது.
- மத்தியில் மட்டுமல்லாமல் மாநிலங்களிலும் நாடாளுமன்ற முறையைத் தோற்றுவித்தது.
- இந்தியாவை சமயச்சார்பற்ற நாடாக்குகிறது.
- சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
- ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது.
- வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தியது.
- சிறுபான்மையினர், பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் ஆகியோருக்கு சிறப்பு விதிகள் மூலம் சலுகைகள் வகை செய்கிறது.

முகவுரை

- முகவுரை என்ற சொல் அரசியலமைப்பிற்கு அறிமுகம் அல்லது முன்னுரை என்பதைக் குறிக்கிறது. இது அரசியலமப்பின் அடிப்படைக் கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் இலட்சியங்களை உள்ளடக்கியது. இது அரசியலமைப்பின் சுருக்கம் அல்லது சாராம்சத்தைக் கொண்டது. இது பெரும்மதிப்புடன் ***அரசியலமைப்பின் திறவுகோல்*** என குறிப்பிடப்படுகிறது.
- 1947 ஆம் ஆண்டு சனவரி 2 ஆம் நாள் இந்திய அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜவஹர்லால் நேருவின் ***குறிக்கோள் தீர்மானத்தின்*** அடிப்படையில் இந்திய அரசியலமைப்பின் முகவுரை அமைந்துள்ளது.
- முகவுரையானது 1976 ஆம் ஆண்டு 42 வது அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின்படி திருத்தப்பட்டது. அதன்படி சமதர்மம், சமயச்சார்பின்மை, ஒருமைப்பாடு, என்ற மூன்று புதிய சொற்கள் சேர்க்கப்பட்டன.
- இந்திய மக்களாகிய நாம் என்ற சொற்களுடன் இந்திய அரசியலமைப்பின் முகவுரை தொடங்குகிறது.

I. சமத்துவ உரிமை

பிரிவு 14 – சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

பிரிவு 15 – மதம், இனம், சாதி, பாலினம் மற்றும் பிறப்பிடம் இவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதைத் தடைசெய்தல்.

பிரிவு 16 – பொது வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல்.

பிரிவு 17 – தீண்டாமையை ஒழித்தல்.

பிரிவு 18 – இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத் தவிர மற்ற பட்டங்களை நீக்குதல்.

II. சுதந்திர உரிமை

பிரிவு 19 – பேச்சுரிமை, கருத்து தெரிவிக்கும் உரிமை, அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கு உரிமை, சங்கங்கள், அமைப்புகள் தொடங்க உரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும் மற்றும் தொழில் செய்யும் உரிமை.

பிரிவு 20 – குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமை மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.

பிரிவு 21 – வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு பெறும் உரிமை.

பிரிவு 21 A – தொடக்கக்கல்வி பெறும் உரிமை.

பிரிவு 22 – சில வழக்குகளில் கைது செய்து, தடுப்புக் காவலில் வைப்பதற்கெதிரான பாதுகாப்பு உரிமை

III. சுரண்டலுக்கெதிரான உரிமை

பிரிவு 23 – கட்டாய வேலை, கொத்தடிமை முறை மற்றும் மனிதத்தன்மையற்ற வியாபாரத்தைத் தடுத்தல்.

பிரிவு 24 – தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான இடங்களில் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுத்தல்.

IV. சமயச்சார்பு உரிமை

பிரிவு 25 – எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை.

பிரிவு 26 – சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை.

பிரிவு 27 – எந்தவொரு மதத்தையும் பரப்புவதற்காக வரி செலுத்துவதற்கெதிரான சுதந்திரம்.

பிரிவு 28 – மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் நடைபெறும் வழிபாடு மற்றும் அறிவுரை நிகழ்வுகளில் கலந்துகொள்ளாமலிருக்க உரிமை

V. கல்வி, கலாச்சார உரிமை

பிரிவு 29 – சிறுபான்மையினரின் எழுத்து, மொழி, மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு.

பிரிவு 30 – சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்களை நிறுவி, நிர்வகிக்கும் உரிமை.

VI. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை

பிரிவு 32 – தனிப்பட்டவரின், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் போது, நீதிமன்றத்தை அணுகி உரிமையைப் பெறுதல்.

உங்களுக்குத் தெரியுமா?

1978ஆம் ஆண்டு, 44ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தப்படி, அடிப்படை உரிமைகள் பட்டியலிலிருந்து சொத்துரிமை (பிரிவு 31) நீக்கப்பட்டது.

இது இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி XII, பிரிவு 300 A வின் கீழ் ஒரு சட்ட உரிமையாக வைக்கப்பட்டுள்ளது.

இந்த அஞ்சல் வில்லைகள் எந்த அடிப்படை உரிமைகள் மீறுதலைக் குறிப்பிடுகின்றன?

- இந்தியா ஒரு இறையாண்மைமிக்க , சமதர்ம, சமயச்சார்பற்ற, ஜனநாயக குடியரசு என நமது அரசியலமைப்பின் முகவுரை கூறுகிறது.
- 1789 ஆம் ஆண்டு பிரெஞ்சு புரட்சியின் போது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன முக்கிய முழக்கங்களாயின, இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் இவற்றிக்கு முக்கியத்துவம் தரப்பபட்டுள்ளது.

அடிப்படை உரிமை

- இந்திய அரசியலமைப்பு சட்டம் பகுதி 3 இல் சரத்து 12 இல் இருந்து 35 வரையுள்ள சட்டப்பிரிவுகள் அடிப்படை உரிமைகள் பற்றி கூறுகின்றன.
- இந்த அடிப்படை உரிமைகள் ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகளின் தாக்கத்தால் உருவாக்கினர்.
- இந்திய அரசியலமைப்பு ஏழு அடிப்படை உரிமைகளை வழங்கியது. ஆனால் தற்போது ஆறு அடிப்படை உரிமைகள் மட்டுமே உள்ளன.
- இந்திய அரசியலமைப்பின் பகுதி 3 இந்தியாவின் மகாசாசனம் என அழைக்கப்படுகிறது. இந்தியாவில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் அடிப்படை உரிமைகள் பொதுவானது. ஆனால் இந்திய குடிமக்களுக்கு மட்டுமேயான சில அடிப்படை உரிமைகளும் உள்ளன.
- பெரும் முதலாளிகளிடமிருந்து வந்த எதிர்ப்பு காரணமாக கி.பி. (பொ.ஆ) 1215 இல் இங்கிலாந்து மன்னர் முதலாம் ஜான் என்பவரால் வெளியிடப்பட்ட உரிமைகள் பட்டயமே ***மகாசாசனம்*** எனப்படும். இதுவே குடிமக்களின் அடிப்படை உரிமைகளுடன் தொடர்புடைய முதல் எழுதப்பட்ட ஆவணமாகும்.

அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை

- நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப்பேராணை எனப்படும்.
- இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும்.
- உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்கள் இரண்டுமே ஐந்து வகையான நீதிப்பேராணைகளை வெளியிட அதிகாரம் பெற்றுள்ளன.
    1. ஆட்கொணர்வு நீதிபேராணை
    2. கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை
    3. தடையுறுத்தும் நீதிப்பேராணை
    4. ஆவணக் கேட்பு நீதிப்பேராணை
    5. தகுதிமுறைவினவும் நீதிப்பேராணை
- இது போன்ற ஆணைகளை வெளியிட்டு மக்களின் உரிமைகளைக் காப்பதினால் உச்சநீதிமன்றம் ***அரசியலமைப்பின் பாதுகாவலன்*** என அழைக்கப்படுகிறது.
- டாக்டர். பி.ஆர் அம்பேத்காரின் கூற்றுப்படி அரசியலமைப்பு சட்டப்பிரிவு 32, இந்திய அரசியலமைப்பின் ***இதயம் மற்றும் ஆன்மா*** ஆகும்.
- **ஆட்கொணர்வு நீதிப்பேராணை (Habeas corpus)–** சட்டத்திற்கு புறம்பாக ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து இது பாதுகாக்கிறது.
- **கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை– (Mandamus)** மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனுதொடர்பான பணியினைச் சம்மந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்
- **தடையுறுத்தும் நீதிப்பேராணை (prohibition) –** ஒரு கீழ்நீதிமன்றம் தனது, சட்ட எல்லையைத் தாண்டி செயல்படுவதைத் தடுக்கிறது.
- **ஆவணக் கேட்பு பேராணை(certiorari) –** உயர்நீதிமன்றம், ஆவணங்களை நியாயமான பரிசீலனைக்கு தனக்கோ அல்லது உரிய அதிகாரிக்கோ அனுப்பச் செய்ய கீழ் நீதிமன்றங்களுக்கு இடும் ஆணை ஆகும்.
- **தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (Quo – warranto)–** இப்பேராணை சட்டத்திற்குப் புறம்பாக தகாத முறையில் அரசு அலுவலகத்தைக் கைப்பற்றுவதை தடை செய்கிறது.

அடிப்படை உரிமைகளை நிறுத்தி வைத்தல்

- இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 352 ன் கீழ் குடியரசுத் தலைவரால் அவசரநிலை அறிவிக்கப்படும் பொழுது இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 19 ன் கீழ் உத்திரவாதம் அளிக்கப்பட்ட சுதந்திரம் தாமாகவே நிறுத்தப்படுகிறது.
- மற்ற அடிப்படை உரிமைகளையும் குடியரசுத் தலைவர் சில குறிப்பிட்ட ஆணைகளைப் பிறப்பிப்பதின் மூலம் தடை செய்யாமல்.

- குடியரசுத் தலைவான் இந்த ஆணைகள் நாடாளுமன்றத்தால் கட்டாயம் அங்கீகரிக்கப்பட் வேண்டும். ஆனால் எந்த சூழ்நிலையிலும், குடியரசுத்தலைவரால் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 20 மற்றும் 21 ன் கீழ் வழங்கப்பட்ட உரிமைகள் (குற்றங்கள் மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு, வாழ்க்கை மற்றும் தனிநபர் சுதந்திரம் பாதுகாப்பு) தடைசெய்ய முடியாது.

அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள்

- அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள், இந்திய அரசியலமைப்புச்சட்டம் பகுதி 4 சட்டப்பிரிவு 36 இல் இருந்து 51 வரை தரப்பட்டுள்ளது.
- அரசியலமைப்புச் சட்டம், வழிகாட்டும் நெறிமுறைகளுக்காகத் தனியாக வகைபாட்டினையும் கொண்டிருக்கவில்லை. இருப்பினும் பொருளடக்கம் மற்றும் வழிகாட்டுதல் அடிப்படையில் அவை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
    1. சமதர்ம
    2. காந்திய
    3. தாராள அறிவுசார்ந்தவை என்று பிரிக்கப்பட்டுள்ளன.
- இந்த கொள்கைகளை, நீதிமன்றத்தால் வலுக்கட்டாயமாகச் செயற்படுத்த முடியாது. ஆனால் இவை ஒரு நாட்டினை நிர்வகிக் அவசியமானவை.
- ஓர் அரசு சட்டத்தை இயற்றும் போது இந்த கொள்கைகளையும் கவனத்தல் கொள்ளவேண்டியது முக்கிய கடமையாகும்.
- சமுதாய நலனை மக்களுக்குத் தருவதே இதன் நோக்கமாகும். இந்திய அரசியலமைப்பின் ***புதுமையான சிறப்பம்சம்*** என டாக்டர் பி.ஆர் அம்பேத்கார் இதனை விவரிக்கிறார்.
- 2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , 86வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின்படி, இந்திய அரசியலமைப்பின் பிரிவு 45 திருத்தப்பட்டு, பிரிவு 21அ வின் கீழ் தொடக்கக்கல்வி, அடிப்படை உரிமையாயச் சேர்க்கப்பட்டுள்ளது.
- இந்திய திருத்தம் மாநில அரசுகள் முன்பருவ மழலையர் கல்வியை 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வழங்க அறிவுறுத்துகிறது.

அடிப்படை உரிமைகள்	அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள்
இவை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை	இவை அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை
அரசாங்கத்தால் கூட இந்த உரிமையை சுருக்கவோ, நீக்கவோ முடியாது	இவை அரசுக்கு வெறும் அறிவுறுத்தல்களே ஆகும்.
இவற்றை நீதிமன்ற சட்டத்தால் செயற்படுத்த முடியும்	எந்த நீதிமன்றத்தாலும் கட்டாயப்படுத்த முடியாது
இவை சட்ட ஒப்புதலைப் பெற்றவை	இவை தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதலைப் பெற்றவை
இந்த உரிமைகள் நாட்டின் அரசியல் ஜனநாயகத்தை வலுப்படுத்துகின்றன	இந்தக் கொள்கைகளைச் செயற்படுத்தும் பொழுது, சமுதாய மற்றும் பொருளாதார ஜனநாயகம் உறுதியாகிறது.
இவை இயற்கையான உரிமைகள்	இவை மனித உரிமைகளைப் வழிவகுக்கிறது.

அடிப்படைக் கடமைகள்

- இந்திய அரசியலமைப்பில் அடிப்படைக் கடமைகள் என்பவை முன்னாள் சோவியத் யூனியன் அரசியலமைப்பின் தாக்கத்தால் சேர்க்கப்பட்டதாகும்.
- 1976 ஆம் ஆண்டு, காங்கிரஸ் கட்சி சர்தார் ஸ்வரன் சிங் கமிட்டியை அமைத்து அடிப்படைக் கடமைகள் குறித்து ஆராய பரிந்துரை செய்தது.
- அக்கமிட்டி அரசியலமைப்புச் சட்ட திருத்தம் செய்ய பரிந்துரைத்தது. அதன்படி 1976 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 42 வது அரசியல் அமைப்புச் சட்டதிருத்தம் நமது அரசியலமைப்பில் குடிமக்களின் பொறுப்புகள் சிலவற்றைச் சேர்த்தது.
- இவ்வாறு சேர்க்கப்பட்ட பொறுப்புகளே குடிமக்களின் கடமைகள் என்றழைக்கப்பட்டன. மேலும் இந்தச் சட்டத்திருத்தம், அரசியலமைப்பின் பகுதி **IV A** என்ற ஒரு புதிய பகுதியைச் சேர்த்தது. இந்தப் புதிய பகுதி 51 **A** என்ற ஒரேயொரு பிரிவை மட்டும் கொண்டது.
- இது முதன்முறையாக குடிமக்களின் 11 அடிப்படைக் கடமைகளை விளக்கும் குறிப்பிட்ட சட்ட தொகுப்பாக உள்ளது.

அடிப்படை கடமைகளின் பட்டியல்

- ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அரசியலமைப்பு, அதன் கொள்கைகள், நிறுவனங்கள், தேசிய கீதம், தேசியக்கொடி, தேசிய சின்னங்கள் ஆகியவற்றை மதித்தல்
- சுதந்திர போராட்டத்திற்குத் துாண்டுகோலாக அமைந்த உயரிய நோக்கங்களைப் போற்றி வளர்த்தல்
- இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றைப் பேணிப் பாதுகாத்தல்
- தேசப் பாதுகாப்பிற்காகத் தேவைப்படும் பொழுது தேசப்பணியாற்ற தயாராயிருத்தல்
- சமய, மொழி மற்றும் பிராந்திய அல்லது பகுதி சார்ந்து வேறுபாடுகளை மறந்து, பெண்களைத் தரக்குறைவாக நடத்தும் பழக்கத்தை நிராகரித்து, பெண்களின் கண்ணியத்தைக் காக்கும் எண்ணங்களை மேம்படுத்தி, இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதரத்துவத்தை வளர்த்தல்.
- நமது உயர்ந்த பாரம்பாய கலப்பு கலாச்சாரத்தை மதித்து பாதுகாத்தல்
- காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்ககுள் மற்றும் உயிரினங்கள் அடங்கிய இயற்கை சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, மேம்படுத்தி அவை வாழும் சூழலை ஏற்படுத்துதல்.
- அறிவியல் கோட்பாடு, மனிதநேயம், ஆராய்ச்சி மனப்பான்மை மற்றும் சீர்திருத்தம் ஆகியவற்றை வளர்த்தல்
- வன்முறையைக் கைவிட்டு பொது சொத்துக்களைப் பாதுகாத்தல்
- தனிப்பட்ட மற்றும் கூட்டுசெயல்பாடுகள் என அனைத்து செயல்பாடுகளிலுமே சிறந்தவற்றை நோக்கி செயல்பட்டு, தேசத்தின் நிலையான உயர்ந்த முயற்சி மற்றும் சாதனைக்காக உழைத்தல்
- 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்பினை வழங்குதல் (2002 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த பிரிவின் கீழ் அனைத்து இந்திய குடிமக்கள் அல்லது பெற்றோர் 6 முதல் 14 வயதுள்ள தங்கள் குழந்தைகள் அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்பினை ஏற்படுத்தி தர வேண்டும்.

மத்திய –மாநில உறவுகள்

- இந்திய அரசு கூட்டாட்சி முறையில் அமைந்துள்ளதால் மத்திய, மாநில அரசுகளுக்கிடையே அதிகாரங்களை அரசியலமைப்பு பிரிக்கிறது. மத்திய – மாநில அரசுகளுக்கிடையே நிலவும் உறவினை நாம் மூன்று தலைப்புகளின் கீழ் காணலாம்

சட்டமன்ற உறவுகள்

- மத்திய நாடாளுமன்றம், இந்தியா முழுவதற்கும் அல்லது இந்தியாவின் எந்த பகுதிக்கும் சட்டமியற்றும் அதிகாரம் பெற்றுள்ளது.
- இது இந்தியாவின் மாநிலங்களுக்கு மட்டுமின்றி யூனியன் பிரதேசங்களுக்கும் பொருந்தும். இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணை, மத்திய மாநில அரசுக்களுக்கிடையேயான அதிகாரப் பகிர்வினைப் பற்றி கூறுகிறது.
- அவை மத்திய பட்டியல், மாநில பட்டியல், பொதுப்பட்டியல் என மூன்று பட்டியல்கள் முறையே 97,66,47 என்று அதிகாரத்தை வழங்கியுள்ளது.
- மத்திய அரசுக்கு சொந்தமான பட்டியலில், சட்டமியற்றும் பிரத்யேக அதிகாரத்தை நாடாளுமன்றம் பெற்றுள்ளது.
- மாநில அரசுக்கு சொந்தமான பட்டியலில், சட்டமியற்றும் பிரத்யேக அதிகாரத்தை மாநில சட்டமன்றம் பெற்றுள்ளது.
- நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள் பொதுப்பட்டியலில் உள்ள துறைகளின் மீது சட்டமியற்ற அதிகாரம் கொண்டுள்ளன.
- மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையே பொதுப்பட்டியலில் உள்ள துறைகள் குறித்த சட்டமியற்றும் பொழுது முரண்பாடு ஏற்பட்டால், மத்திய அரசு இயற்றும் சட்டமே இறுதியானது.
- தற்போது அதிகாரப் பகிர்வு என்பது மத்திய அரசு பட்டியலில் 100துறைகள், மாநில அரசு பட்டியலில் 61 துறைகள், மற்றும் இரண்டுக்கும் பொதுவான பொதுப்பட்டியலில் 52 துறைகள் என்றும் மாற்றப்பட்டுள்ளது.
- 1976 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 42 வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மாநிலப்பட்டியலில் இருந்து 5 துறைகளை பொதுப் பட்டியலுக்கு மாற்றியது. அவை காடுகள், கல்வி, எடைகள் மற்றும் அளவுகள், பறவைகள் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு, மற்றும் உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்ற அமைப்புகளைத் தவிர பிற நீதிமன்றங்களின் நீதி நிர்வாகம் ஆகியனவாகும்.

நிர்வாக உறவுகள்

- ஒரு மாநில அரசின் நிர்வாக அதிகாரம் அதன் சொந்த மாநிலத்தில் மட்டுமே உள்ளது மற்றும் அம்மாநிலத்தில் மட்டுமே தனக்கான சட்டமியற்றும் தகுதியையும் பெற்றுள்ளது.
- அதே வேளையில், மத்திய அரசும், பிரத்தியோக நிர்வாக அதிகாரம் பெற்றுள்ளது. அவை.
    1. நாடாளுமன்றம் தொடர்பான விஷயங்களில் சட்டங்களை இயற்ற சிறப்பு அதிகாரம்

2. மாநில அரசுகள் செய்து கொள்ளும் உடன்படிக்கை (அ) ஒப்பந்தங்களை அங்கீகரிப்பது ஆகியனவாகும்.

☞ 1969 இல் மத்திய – மாநில அரசுகளின் உறவுகள் குறித்து முழுவதும் ஆராய தமிழக அரசு டாக்டர். பி.வி. இராஜமன்னார் தலைமையில் கீழ் மூவர் குழு ஒன்றை நியமித்தது.

நிதி உறவுகள்

☞ இந்திய அரசியலமைப்பு சட்டம் பகுதி **XII** சட்டப்பிரிவு 268 இல் இருந்து 293 வரை உள்ள பிரிவுகள் மத்தி–மாநில அரசுகளின் நிதிசார்ந்த உறவுகளைப் பற்றி விளக்குகிறது. மத்திய –மாநில அரசுகள், அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் பலவகையான வரிகளை விதிக்கும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன.

☞ இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 280 கீழ் குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்பட்ட நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசால் சில வரிகள் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு, மத்திய அரசாலும், மாநில அரசாலும் பிரித்துக்கொள்ளப்படுகின்றன.

☞ மத்திய –மாநில அரசுகளின் உறவினை விசாரிக்க மறைந்த முன்னாள் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்கள் 1983 ஆம் ஆண்டு சர்க்காரிய குழுவினை நியமித்தார்.

☞ அக்குழுவின் 247 பரிந்துரைகளில் 180 பரிந்துரைகளை மத்திய அரசு செயல்படுத்தியது. அவற்றுள் மிக முக்கியமானது 1990 இல் அமைக்கப்பட்ட மாநிலங்களுக்கிடையிலான குழு ஆகும்.

அலுவலக மொழிகள்

☞ அரசியலமைப்பு சட்டப் பகுதி **XVII** இல் 343 லிருந்து 351 வரையுள்ள சட்டப்பிரிவுகள் அலுவலக மொழிகள் பற்றி விவரிக்கின்றன. இவை நான்கு தலைப்புகளில் பிரிக்கப்பட்டுள்ளன. அவை யூனியன் பிரதேச மொழிகள் , வட்டார மொழிகள், நீதித்துறை மொழிகள் சட்டம் மற்றும் சிறப்பு வழிகாட்டு மொழிகள் என்ற பெயரில் உள்ளன.

☞ முதலாவது மொழிக்குழு 1955 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. இது தனது அறிக்கையை, 1956 இல் சமர்ப்பித்தது. இவ்வறிக்கையின் தொடர்ச்சியாக நாடாளுமன்றம் 1963 ஆம் ஆண்டில் அலுவலக மொழி சட்டம் இயற்றியது.

☞ இச்சட்டம் ஹிந்தியுடன் ஆங்கிலம் மத்திய அரசின் அனைத்து அலுவலக நோக்கங்களுக்காவும் , 15 ஆண்டுகளுக்கு பிறகும் கூட அதன் பயன்பாட்டைத் தொடராலாம் என்று அறிவித்தது.

☞ மீண்டும் 1967 ஆம் ஆண்டு அலுவலக மொழிகள் திருத்தச் சட்டம், அலுவலக மொழியாக ஆங்கிலம் காலவரையின்றி தொடரலாம் என்று அறிவித்தது.

☞ அரசியலமைப்பும் கூட சில வட்டார மொழிகளை மாநிலங்களுக்கான அலுவலக பரிமாற்ற மொழியாகப் பயன்படுத்த அனுமதித்தது.

☞ தொடக்கத்தில் 14 மொழிகள் அரசியலமைப்பின் 8 வது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. தற்போது 22 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

☞ 2004 ஆம் ஆண்டு இந்திய அரசு செம்மொழிகள் எனும் புதிய வகைப்பாட்டினை ஏற்படுத்த தீர்மானித்தது. அதன்படி 6 மொழிகள் செம்மொழி தகுதியை பெற்றள்ளன. அவை, தமிழ் (2004), சமஸ்கிருதம் (2005), தெலுங்கு (2008), கன்னடம் (2008), மலையாளம் (2013) மற்றும் ஒடியா (2014)

அவசரகால ஏற்பாடுகள்

☞ அவசரகால நிலைகளை எதிர்கொள்ளும் விதமாக மத்திய அரசு கூடுதல் அதிகாரங்களைப் பெற்றுள்ளது. அரசியலமைப்பில் மூன்றுவகையான அவசரநிலைகள் பற்றி கூறப்பட்டுள்ளன.

1. தேசிய அவசர நிலை (சட்டப்பிரிவு 352)
2. மாநில அவசர நிலை (சட்டப்பிரிவு 356)
3. நிதி சார்ந்த அவசர நிலை (சட்டப்பிரிவு 360)

தேசிய அவசர நிலை (352) –

☞ போர், வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு, அல்லது ஆயுதமேந்திய கிளர்ச்சி அல்லது உடனடி ஆபத்து அல்லது அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், குடியரசுத் தலைவர், அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 352 ன் கீழ் அவசரநிலையை அறிவிக்கலாம்.

☞ போர் அல்லது வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பின் காரணமாக அவசரநிலை அறிவிக்கப்படும் பொழுது அது ***வெளிப்புற அவசரநிலை*** எனப்படுகிறது.

- ஆயுதமேந்திய கிளர்ச்சிக் காரணமாக அவசர நிலை அறிவிக்கப்படும்பொது அது ***உள்நாட்டு அவசர நிலை*** எனப்படுகிறது. இந்த வகையான அவசர நிலைகள் 1962, 1971, 1975 ஆகிய ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டன.

மாநில அவசர நிலை (356) –

- ஒரு மாநிலத்தில், மாநில அரசால் கட்டுப்படுத்த முடியாத சூழல் ஏற்படும் பொழுது அரசியலமைப்பின் விதிகளுக்கேற்ப ஆளுநர் அறிக்கை அளிக்கும் பொழுது, குடியரசுத் தலைவர் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 356 ன் கீழ் அவசரநிலையை அறிவிக்கலாம்.
- இந்த அவசர நிலை, சட்டப்பிரிவு 352ன் படி நடைமுறையில் இருந்தாலும் அல்லது தேர்தல் ஆணையம் சட்டமன்றத் தேர்தலைநடத்த உகந்த சூழல் இல்லை என்று சான்றளித்தாலும் மட்டுமே ஓராண்டைத் தாண்டியும் தொடரமுடியும்.
- அதகபட்சம் அவசரநிலையின் காலம் 3 ஆண்டுகள் இருக்க முடியும். இந்த வகையான அவசரநிலையில் சட்டமியற்றுதல் மற்றும் நிர்வாக செயல்பாடுகளில் மாநிலங்கள் தங்கள் தன்னாட்சியை இழக்கின்றன.
- அவசரநிலை அறிவித்த பிறகு மாநில சட்டமன்றம் முடக்கப்படுகிறது. மாநிலமானது, குடியரசுத் தலைவர் சார்பாக ஆளுநரால் ஆளப்படுகிறது.
- இந்தியாவில் முதன்முறையாக 1951 இல் பஞ்சாப் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது.

நிதி சார்ந்த அவசரநிலை (360)

- நிதிநிலைத் தன்மை, இந்தியாவின் கடன் தன்மை மற்றும் இந்தியாவின் பகுதியகள் ஆபத்தில் இருந்தால் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 360ன் கீழ் குடியரசுத் தலைவர் நிதிசார்ந்த அவசரநிலையப் பிறப்பிக்கலாம்.
- இந்த வகையான அவசர நிலையில் மத்திய–மாநில அரசு ஊழியர் எந்த வகுப்பினராயினும் அவர்களது ஊதியம், படிகள் மற்றும் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் உட்பட அனைவரது ஊதியமும் குடியரசுத் தலைவரின் ஓர் ஆணையின் மூலம் குறைக்கப்படும். இந்த வகையான அவசரநிலை இந்தியாவில் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

அரசியலமைப்புச் சட்டத்திருத்தம்

- அமெண்ட்மெண்ட் எனும் சொல் மாற்றம், மேம்படுத்துதல், மற்றும் சிறு மாறுதல் என்பதைக் குறிக்கிறது. வழக்கமாக இச்சொல் ஒரு நாட்டின் அரசியலமைப்பில் செய்யப்படும் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிட பயன்படுத்தப்படுகிறது.
- அரசியலமைப்பின் சட்டம் பகுதி **XX** இல் 368 வது சட்டப்பிரிவு, அரசியலமைப்பினை சட்ட திருத்தம் செய்வதில் பின்பற்றப்படும் முறைகள் மற்றும் திருத்தம் செய்வதில் நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் பற்றி தெரிவிக்கிறது.

அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் செய்வதில் பின்பற்றப்படும் வழிமுறைகள்

- நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், அரசியலமைப்புச் சட்டத்திருத்த மசோதா அறிமுகப்படுத்தப்படவேண்டும்.
- நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும், அவையின் ஒட்டுமொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் மற்றும் அவைக்கு வந்து, வாக்களித்தவர்களில் 3 ல் 2 பங்குக்கு குறையாமல் மசோதவிற்கு ஆதரவாக வாக்களித்தால் மட்டுமே, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட வேண்டும்.
- குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தபின் மசோதா திருத்தப்பட்டச் சொற்களுடன் அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்படும்.
- நாடாளுமன்றத்தால் மட்டுமே அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர முடியும்.
- மாநில சட்ட மன்றத்தால் அரசியலமைப்பில் எந்தவொரு சட்டத்திருத்தத்தையும் கொண்டுவர முடியாது.

அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் வகைகள்

- அரசியலமைப்பின் 368வது சட்டப்பிரிவு மூன்று வகைகளில் அரசியலமைப்புச் சட்டத்திருத்தங்களைச் செய்ய வழிவகுக்கிறது.
- அதாவது நாடாளுமன்த்தின் சிறப்பு அறுதிப் பெரும்பான்மை மற்றும் மொத்த மாநிலங்களில் பாதிக்கும் மேற்பட்ட மாநிலங்களின் எளிய அறுதிப் பெரும்பான்மையுடன் திருத்தம் மேற்கொள்ளலாம்.
- ஆனால் சில அரசியலமைப்பு சட்டப்பிரிவுகளைத் திருத்துவதற்கு நாடாளுமன்றத்தின் எளிய அறுதி பெரும்பான்மை தேவை என அரசியலமைப்புச் சட்டம் வகுத்துள்ளது.
- அதவாது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் வந்திருந்து, வாக்களித்த பெரும்பான்மை உறுப்பினர்கள் மூலம் சாதாரண சட்டமன்ற நடைமுறை போல் செய்யப்பட்ட அரசியலமைப்புத் திருத்தங்கள், திருத்தங்களாகக் கருதப்படமாட்டாது.
- 368 வது சட்டப்பிரிவும் இதனை ஏற்காது ஆகையால் அரசியலமைப்பினை மூன்று வழிகளில் மட்டுமே திருத்தமுடியும்
    1. நாடாளுமன்றத்தின் சாதாரண அறுதிப் பெரும்பான்மை மூலம் திருத்தப்படுதல்
    2. நாடாளுமன்றத்தின் சிறப்பு அறுதப் பெரும்பான்மை மூலம் திருத்தப்படுதல்
    3. நாடாளுமன்றத்தின் சிறப்பு அறுதிப் பெரும்பான்மையுடன் பாதிக்கும் மேற்பட்ட மாநில சட்டமன்றங்களின் ஒப்புதலைப் பெறுவதன் மூலம் திருத்தப்படுதல்

- அரசியலமைப்பின் 42 வது சட்டத்திருத்தம் ***சிறிய அரசியலமைப்பு*** என அறியப்படுகிறது.

அரசியலமைப்பு சீர்திருத்தக் குழுக்கள்

- அரசியலமைப்பு செயல்பாடு குறித்த ஆய்வு செய்ய 2000 ஆம் ஆண்டில் இந்திய அரசு ஒரு தீர்மாத்தின் படி திரு. எம்.என். வெங்கடாசலய்யா தலைமையில் அரசியலமைப்புச் சட்ட செயல்பாட்டிற்கான தேசிய சீராய்வு ஆணையம் ஒன்றை அமைத்தது.
- அரசின் பல்வேறுநிலைகள், அவற்றிற்கிடையேயான தொடர்பு மற்றும் பங்களிப்புகள் குறித்துப் புதிய நோக்கத்தோடு ஆராய ஏப்ரல் 2007 ஆம் ஆண்டு மூன்று உறுப்பினர்களைக் கொண்ட எம்.எம். பூஞ்சி தலைமையில் அப்போதைய அரசு ஓர் ஆணையத்தை அமைத்தது.

மத்திய அரசாங்கம்

- இந்திய நாட்டின் உயர்ந்த அரசாங்க அமைப்பு மத்திய அரசு ஆகும். இதன் தலைமையகம் புதுதில்லியில் அமைந்துள்ளது. இந்திய அரசியலமைப்பின் பகுதி **V** இல் 52 முதல் 78 வரையிலான சட்டப்பிரிவுகள் மத்திய அரசின் நிர்வாகம் பற்றி குறிப்பிடுகிறது.



- மத்திய அரசு மூன்று அங்கங்களைக் கொண்டது. அவை நிர்வாகம், சட்டமன்றம், நீதித்துறை ஆகியனவாகும். மத்திய நிர்வாகம், குடியரசுத் தலைவர், துணைக்குடியரசுத் தலைவர், பிரதம அமைச்சரவைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவைக் குழு மற்றும் இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் ஆகியோரை உள்ளடக்கியது ஆகும்.
- மத்திய சட்டமன்றம் நாடாளுமன்றம் என்றழைக்கப்படுகிறது. இது இரண்டு அவைகளைக் கொண்டது. அவை மாநிலங்களவை (ராஜ்ய சபா) மற்றும் மக்களவை (லோக் சபா) ஆகியனவாகும். மத்திய நீதித்துறை உச்சநீதிமன்றத்தைக் கொண்டுள்ளது.

இந்தியக் குடியரசுத் தலைவர்

- மத்திய அரசின் நிர்வாகத் தலைவர் குடியரசுத் தலைவர் ஆவார். அவர் பெயரளவில் நிர்வாக அதிகாரம் பெற்றவர் ஆவார்.
- அவர் இந்தியாவின் முதல் குடிமகன் ஆவார். அவர் முப்படைகளின் தலைமை தளபதியாகச் செயல்படுகிறார்.

- நீதித்துறையை அமைக்கும் பொறுப்பு அவருக்கு உண்டு. அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 53 ன் படி குடியரசுத் தலைவர் நேரடியாகவோ, அல்லது அவருடைய சார்நிலை அலுவலர்கள் மூலமாகவோ மத்திய அரசின் நிர்வாக அதிகாரங்களை அரசியலமைப்பின் படி செயல்படுத்துகிறார்.

குடியரசுத் தலைவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதிகள்

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- மத்திய அரசிலோ, மாநில அரசிலோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மக்களவை உறுப்பினராவதற்கான தகுதியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- அவரின் பெயரைக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர்க் குழுவிலுள்ள பத்து வாக்காளர்கள் முன்மொழியவும் மேலும் பத்து வாக்காளர்கள் வழிமொழியவும் வேண்டும்.
- குடியரசுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினராகவோ அல்லது சட்ட மன்ற உறுப்பினராகவோ பதவி வகிக்கக் கூடாது. ஒருவேளை பதவி வகிக்கும் பட்சத்தில் குடியரசுத் தலைவராக அவர் பதவி ஏற்கும் நாளில் அப்பதவி காலியானதாகக் கருதப்படும்.

குடியரசுத் தலைவருக்கானத் தேர்தல்

- குடியரசுத் தலைவர், ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின் படி வாக்காளர் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- வாக்காளர் குழுமம் என்பது மாநிலங்களவை மற்றும் மக்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அனைத்து மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், தேசிய தலைநகர் டெல்லி, மற்றும் புதுச்சேரியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.
- குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவருக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பதவியேற்பு உறுதிமொழி செய்து வைக்கிறார்.
- குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட தகுதி உடையவர் ஆவார்.

குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள்

- குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் விரிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- **நிர்வாக அதிகாரங்கள் –** இந்திய அரசியலமைப்புச் சட்டம் மத்திய அரசின் அனைத்து நிர்வாக அதிகாரங்களையும் குடியரசுத் தலைவருக்கு வழங்குகிறது. அரசியலமைப்பு சட்டப்பிரிவு 77ன் படி மத்திய அரசின் ஒவ்வொரு நிர்வாக நடவடிக்கையும் குடியரசுத் தலைவரின் பெயராலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.
- நிர்வாகம் திறம்பட செயல்பட முக்கிய அலுவலகங்களுக்கானப் பல நியமனங்களைக் குடியரசுத் தலைவர் மேற்கொள்கிறார்.

இந்திய குடியரசுத் தலைவர்களின் பட்டியல்

1.	திரு. ராஜேந்திர பிரசாத்	1950–1962
2.	திரு. சர்வபள்ளி ராதாகிருஷ்ணன்	1962–1967
3.	திரு. ஜாகிர் உசேன்	1967–1969
4.	திரு. வி.வி கிரி	1969–1974
5.	திரு. பக்ருதீன் அலி அஹமத்	1974–1977
6.	திரு. நீலம் சஞ்சீவி ரெட்டி	1977–1982
7.	திரு. கியானி ஜெயில் சிங்	1982–1987
8.	திரு. ஆர். வெங்கட்ராமன்	1987–1992
9.	திரு. சங்கர் தயாள் சர்மா	1992–1997
10.	திரு. கே.ஆர். நாராயணன்	1997–2002
11.	திரு. அ.ப.ஜ. அப்துல் கலாம்	2002–2007
12.	திருமதி. பிரதீப பாட்டீல்	2007–2012
13.	திரு. பிரனாப் முகர்ஜி	2012–2017
14.	திரு. ராம் நாத் கோவிந்த்	2017 முதல்

- பிரதம அமைச்சரவையும், மற்ற அமைச்சர்களையும் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். அவர் பிரதம அமைச்சரின் ஆலோசனைப்படி அமைச்சரவை உறுப்பினர்களுக்கு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- இந்தியாவின் மிக முக்கிய பதவிகளான மாநில ஆளுநர்கள், உச்ச நீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்றதலைமை நீதிபதிகள், இதர நீதிபதிகள், இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர், தலைமைக் கணக்கு தணிக்கையாளர், இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்கள், மத்திய அரசுப் பணியாளர் தேர்வானையத்தின் தலைவர் மற்றும் இதர உறுப்பினர்கள், மற்ற நாடுகளுக்கான தூதர்கள் மற்றும் உயர் ஆணையர்கள் ஆகியோரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.
- குடியரசுத் தலைவர், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் நிலையை ஆய்வு செய்ய ஓர் ஆணையத்தை நியமிக்கும் அதிகாரம் பெற்றவர் ஆவார்.
- முப்படைகளின் தலைமை தளபதியான குடியரசுத் தலைவர், இராணுவப் படை, கப்பற்படை, விமானப் படை தளபதிகளை நியமனம் செய்கிறார்.

சட்டமன்ற அதிகாரங்கள்

- குடியரசுத் தலைவர் நாடாளுன்றத்தின் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறார். பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை இவர் உரையாற்றி துவக்கி வைக்கிறார்.
- மேலும் ஒவ்வொரு ஆண்டின் நாடாளுமன்றத்தின் முதல் கூட்டம் இவருடைய உரையுடன் துவங்குகிறது.
- குடியரசுத் தலைவர் ஆண்டுக்கு இரண்டுமுறை நாடாளுமன்றத்தைக் கூட்டுகிறார்.
- அவர் நாடாளுமன்றத்தின் எந்தவொரு அவையிலும் ஒரு சட்ட மசோதா நிலுவையில் இருந்தாலும் அது குறித்து செய்தி அனுப்பலாம்.
- குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னரே அனைத்து மசோதாக்களும் சட்டமாகின்றன.
- நிதி மசோதாவைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்ய முடியாது.
- நாடாளுமன்றத்தின் இரு அவைகிளையோ அல்லது ஏதேனம் ஒரு அவையின் கூட்டத்தையோ குடியரசுத்தலைவர் முடிவுக்குக் கொண்டுவரலாம். மக்களவையின் ஐந்து ஆண்டுகாலம் முடியும் முன்னரே அதனைக் கலைக்கும் அதிகாரமும் இவருக்கு உண்டு.
- கலை, இலக்கியம், அறிவியல், விளையாட்டு, மற்றும் சமூகப் பணி ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் 12 நபர்களைக் குடியரசுத் தலைவர் மாநிலங்களவைக்கு நியமிக்கிறார்.
- மேலும் ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தைச் சேர்ந்த 2 நபர்களை மக்களவையில் போதுமான பிரதிநிதித்துவம் இல்லை என்று கருதும்பட்சத்தில் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

நிதி அதிகாரங்கள்

- நிதி மசோதா, குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்குப் பின்னரே நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும். மத்திய அரசின் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினைக் குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்ற பின்னரே மத்திய நிதி அமைச்சர் மக்களவையில் சமர்ப்பிக்கிறார்.
- இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்திய அவசரகால நிதியினைக் குடியரசுத் தலைவரிடம் அளித்துள்ளது.
- அவரின் பரிந்துரை இன்றி எந்தவொரு மானியக் கோரிக்கையும் கொண்டுவர முடியாது இந்தியாவின் அவசர நிதியிலிருந்து அரசின் எதிர்பாராத செலவினங்களை மேற்கொள்ளும் அதிகாரம் அவருக்கு உண்டு.
- ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒரு நிதிக்குழுவினை அமைக்கிறார். அல்லது மத்திய, மாநில அரசுகளின் வருவாயை பகிர்ந்து கொள்ள மாநிலங்கள் கோரிக்கை வைக்கும் பட்சத்தில் முன்கூட்டியே நிதிக்குழுவினை அவர் அமைக்கிறார்.

நீதி அதிகாரங்கள்

- இந்தய அரசியலமைப்புச் சட்டத்தின் 72 வது சட்டப்பிரிவு நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற ஒருவரின் தண்டனையைக் குறைக்கவும், ஒத்திவைக்கவும், தண்டனையிலிருந்து விடுவிக்கவும், மன்னிப்பு வழங்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.
- நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அனைத்து தண்டனைகள், மத்திய சட்டத்திற்கு எதிராகச் செயல்பட்டதால் வழங்கப்பட்ட தண்டனைகள், மரண தண்டனைகள் ஆகியன இவற்றுள் அடங்கும்.
- இவர் தன்னுடைய அதிகாரத்தைச் செயல்படுத்துவதில் (நாடாளுமன்றத்தால் அவருக்கு எதிராக அரசியல் குற்றச்சாட்டு கொண்டு வரும் போது தவிர) எந்த நீதிமன்றத்திற்கும் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை.

இராணுவ அதிகாரங்கள்

- மத்திய பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதி என்ற அதிகாரத்தைச் சட்டப்பிரிவு 53(2) குடியரசுத் தலைவருக்கு வழங்கியுள்ளது.
- அவர் சட்டத்தினபடி இராணுவத்தை வழிநடத்துகிறார். எனவே அவர் பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதி என அறியப்படுகிறார்.
- இதன் மூலம் மற்ற நாடுகளின் மீது போர் அறிவிக்கவும், அமைதியை ஏற்படுத்தவும் அவர் அதிகாரம் பெற்றவர் ஆவார்.

இராஜதந்திர அதிகாரங்கள்

- வெளிநாடுகளுக்கான இந்திய தூதர்களைக் குடியரசுத் தலைவர் நியமிப்பதோடு மட்டுமல்லாமல் அவர் இந்தியாவுக்கான வெளிநாட்டுத் தூதர்களையும் வரவேற்கிறார்.
- வெளிநாடுகளுக்கான அனைத்து உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களும் குடியரசுத் தலைவரின் பெயராலேயே நடைபெறுகிறது.

நெருக்கடி நிலை அதிகாரங்கள்

- நெருக்கடி நிலையை அறிவிக்கும் அதிகாரத்தை இந்திய அரசியமைப்புச் சட்டம் குடியரசுத் தலைவருக்கு வழங்கியுள்ளது. அவைகள் பின்வருவன– போர் வெளிநாட்டு ஆக்கிரமிப்பு, ஆயுதமேந்திய கிளாச்சி ஆகிய சூழ்நிலைகளில் குடியரசுத் தலைவர் நெருக்கடி நிலையை அறிவிக்கும் அதிகாரத்தை 352 வது சட்டப்பிரிவு வகுத்துள்ளது.
- அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஒரு மாநில அரசாங்கம் செயல்படவில்லை எனில் அம்மாநிலத்தில் நெருக்கடி நிலையை அறிவித்து, அம்மாநில அரசாங்கத்தை முடிவுக்கு கொண்டுவரும் அதிகாரத்தைக் குடியரசுத் தலைவருக்கு 356 வது சட்டப்பிரிவு வழங்குகிறது.
- இந்தியாவின் நிதி நிலையில் திருப்தியின்மை காணப்பட்டாலும், இந்தியாவின் எந்த ஒரு பகுதியில் ஏதாவது ஒரு காரணத்திற்காக அச்சுறுத்தல் ஏற்படும் பொழுதும் 360வது பிரிவின் படி குடியரசுத் தலைவர் நிதி நெருக்கடி நிலையை அறிவிக்கிறார்.
- கேரளா மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் அதிகபட்சமாக 9 முறை குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் நீக்கம்

- குடியரசுத் தலைவர் பதவி ஏற்ற நாள் முதல் ஐந்து ஆண்டுகள் வரை பதவி வகிப்பார். அவர் தன்னுடைய பணித்துறப்பு கடிதத்தினை துணைக் குடியரசுத் தலைவரிடம் வழங்கலாம்.
- அவர் சட்டப்பிரிவு 61 ன் படி அரசியலமைப்பை மீறிய குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுவதன் மூலம் பதவி நீக்கம் செய்யப்படலாம்.
- இவருக்கு எதிரான இக்குற்றச்சாட்டு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தீர்மானமாக கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும்.
- மேலும் அவைக்கு வருகை புரிந்தவர்களில் நான்கில் ஒரு பங்கிற்குக் குறையாமல் ஆதரவு தெரிவிக்க வேண்டும்.
- குடியரசுத் தலைவர் தனது பதவிக்காலம் முடிந்தாலும் அவருக்குப் பின் ஒருவர் பதவியேற்கும் வரை அப்பதவியில் தொடரலாம்.

குடியரசுத் தலைவரின் தனிச் சலுகைகள்

- சட்டப்பிரிவு 361(1) ன் படி குடியரசுத் தலைவர் தன்னுடைய பணி மற்றும் அதிகாரத்தைச் செய்ய வேண்டும் என எண்ணுவதிலும் செயல்படுத்துவதிலும் எந்த நீதிமன்றத்திற்கும் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை.

துணைக் குடியரசுத் தலைவர்

- 63வது பிரிவின் படி நாட்டின் இரண்டாவது உயர்ந்த பதவியைத் துணைக் குடியரசுத் தலைவர் வகிக்கிறார். அலுவலக முன்னுரிமையின் படி குடியரசுத் தலைவருக்கு அடுத்த தர நிலையில் இவர் உள்ளார்.
- இப்பதவி அமெரிக்க துணைக் குடியரசுத் தலைவரின் பதவியைப் போன்றது. நாட்டின் அரசாங்க நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற இப்பதவி உருவாக்கப்பட்டுள்ளது.

துணைக்குடியரசுத் தலைவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதிகள்

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- மத்திய அரசிலோ, மாநில அரசிலோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ உதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மாநிலங்ளவை உறுப்பினராவதற்கான மற்ற தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

துணைக் குடியரசுத் தலைவர் – தேர்தல் மற்றும் பதவிக்காலம்

- சட்டப்பிரிவு 66(1) ன் படி துணைக்குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படாமல் குடியரசுத் தலைவர் போல மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- நாடாளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்களை உள்ளடக்கிய வாக்காளர் குழுமத்தின் மூலம் இவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- துணைக் குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். பதவிக்காலம் முடியும் முன்னரே பணித்துறப்பு, இறத்தல், பணிநீக்கம் ஆகிய காரணங்களால் அவரது பதவி முடிவுக்கு வரலாம்.
- அவர் மீண்டும் துணைக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் தகுதி உடையவராவார்.
- அரசியலமைப்புச் சட்டம் துணைக் குடியரசுத் தலைவர் பதவிக்கான தொடர் வழிமுறைகளை நமக்கு வழங்கவில்லை.
- இது போன்ற சூழ்நிலைகளில், துணைக் குடியரசுத் தவைருக்கான தேர்தல் முடிந்தவரையில் விரைவில் நடத்த நடிவடிக்கை எடுக்கப்படும்.
- புதிய துணைக் குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை மாநிலங்களவையின் துணைத் தலைவர் துணைக் குடியரசுத் தலைவரின் பணிகளைச் செய்வார்.
- குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் பதவிகள் ஒரே சமயத்தில் காலியாக இருக்கும் பட்சத்தில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி குடியரசுத் தலைவரின் பணிகளைச் செயலற்றுவார். 1969 ஆம் ஆண்டு இத்தகைய ஒரு நிகழ்வின் போது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி. எம். ஹிதயதுல்லா குடியரசுத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

துணைக் குடியரசுத் தலைவர் பதவி நீக்கம்

- மக்களவையின் ஒப்புதலுடன், மாநிலங்களவையில் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் துணைக் குடியரசுத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கலாம்.
- இத்தகைய தீர்மானம் கொண்டு வர குறைந்தபட்சம் 14 நாட்களுக்கு முன்னரே துணைக் குடியரசுத் தலைவருக்கு ஒரு அறிவிப்பை வழங்க வேண்டும்.

துணைக் குடியரசுத் தலைவரின் செயல்பாடுகள்

- துணைக் குடியரசுத் தலைவர் அவர் வகிக்கும் பதவியின் நிமித்தமாக மாநிலங்களவையின் தலைவராகச் செயல்படுகிறார். மாநிலங்களவையின் தலைவர் என்கிற முறையில் அவர் பல்வேறு பணிகளை மேற்கொள்கிறார்.
- மாநிலங்களவையின் நடவடிக்கைகளை முறைப்படுத்துகிறார்.
- மாநிலங்களவையின் மரபு ஒழுங்கு முறைகளைத் தீர்மானிக்கிறார்.
- மாநிலங்களவையின் தீர்மானம் அல்லது கேள்விகளை அனுமதிப்பதை முடிவு செய்கிறார்.
- மிகப் பெரிய பிரச்சனையின்போது அவையின் நடவடிக்கைகளை அவர் ஒத்திவைக்கவும் அல்லது முடிவுக்கு கொண்டு வரவும் செய்கிறார்.
- பல்வேறு குழுக்களுக்கு அதனுடைய செயல்பாடுகள் தொடர்பாக அவர் வழிமுறைகளை வழங்குகிறார்.
- குடியரசுத் தலைவர் உடல்நலக் குறைவால் தனது கடமைகளை ஆற்ற இயலாத போதும் அல்லது நாட்டில் இல்லாத போதும் துணைக் குடியரசத் தலைவர், குடியரசுத் தலைவரின் பணிகளைக் கவனிப்பார்.
- குடியரசுத் தலைவர் பதவியானது, அவரின் பதவித்துறப்பு , இறப்பு, அரசியலமைப்பை மீறிய குற்றச்சாட்டின் மூலம் பதவி நீக்கம் ஆகிய காரணங்களால் காலியாகும் போது துணைக் குடியரசுத் தலைவர் அதிகபட்சமாக ஆறு மாத காலத்திற்கு அவரின் பணிகளைக் கவனிப்பார்.
- **முடிவுவாக்கு –** மாநிலங்களவையில் சட்ட மசோதாவின் மீது நடைபெற்ற வாக்கெடுப்பு சமநிலையில் இருக்கும் பட்சத்தில் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 100 ன் படி துணைக் குடியரசுத் தலைவர் வாக்கு அளிக்கலாம்.
- சட்ட மசோதாவின் ஒப்புதலுக்கு ஒரு வாக்கு மட்டுமே தேவை என்ற நிலையைக் குறிக்கிறது. ஆகையால் அவர் இந்த விரும்புரிமை அதிகாரத்தைச் சட்ட மசோதாவுக்கு ஆதரவாகவோ எதிராகவோ வாக்களிக்கும் அதிகாரம் பெற்றவர் ஆவார். அவருடைய முடிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்க எவருக்கும் உரிமை இல்லை.

பிரதம அமைச்சர்

- அரசியலமப்புச் சட்டப்பிரிவு 74 (1) குடியரசுத் தலைவருக்கு உதவிடவும், அறிவுரை வழங்கிடவும், பிரதம அமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஒரு மத்திய அமைச்சரவைக் குழு இருக்கும் எனக் குறிப்பிடுகிறது.
- குடியரசுத் தலைவர் அமைச்சரவை வழங்கும் அறிவுரையை மறு பரிசீலனைச் செய்ய சொல்லலாம். ஆனால் மறுபரிசீலனைக்குப் பின்னர் அந்த அறிவுரையின்படி அவர் நடந்த கொள்ள கடமைப் பட்டவராவார்.

- இங்கிலாந்தின் நாடாளுமன்றம் வெஸ்ட்மினிஸ்டர் அரண்மனையில் அமைந்துள்ளதால் அவர்களின் நாடாளுமன்ற முறை வெஸ்ட்மினிஸ்டர் முறை என்றழைக்கப்படுகிறது.
- இந்தியாவின் பிரதம அமைச்சர் பதவியானது வெஸ்மின்ஸ்டர் அரசியலமைப்பு ஜனநாயக முறையில் இருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- மக்களவையின் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரை பிரதம அமைச்சராகக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். மற்ற அமைச்சர்களை பிரதம அமைச்சரின் ஆலோசனையின்படி குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.
- மக்களவையில் எந்த ஒரு கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை பலம் இல்லையெனில் குடியரசுத் தலைவர் எந்தக்கட்சி அமைச்சரவையை அமைக்க முடியுமோ அக்கட்சியின் தலைவரை அவர் அழைத்து அரச அமைக்கக் கூறலாம்.
- குடியரசுத் தலைவர் அமைச்சர்களுக்குப் பதவிப் பிரமாணமும், இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைக்கின்றார்.
- பிரதம அமைச்சர் மற்றும் மற்ற அமைச்சர்களின் ஊதியங்களையும், படிகளையும் நாடாளுமன்றம் நிர்ணயிக்கிறது.
- நாடாளுமன்ற உறப்பினராய் இல்லாதவர் கூட அமைச்சராக நியமிக்கப்படலாம். ஆனால் அவர் 6 மாங்களுக்குள் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.
- அமைச்சர்கள் தனிப்பட்ட முறையிலும், ஒட்டு மொத்தமாகவும் மக்களவைக்கு பொறுப்புடையவர்களாவர்.

இந்திய பிரதமர்கள் பட்டியல்

1.	திரு. ஜவஹர்லால் நேரு	–	1947–64
2.	திரு. லால் பகதூர் சாஸ்திரி	–	1964–66
3.	திருமதி. இந்திர காந்தி	–	1966–77
4.	திரு. மொரார்ஜி தேசாய்	–	1977–79
5.	திரு. சரண்சிங்	–	1979–80
6.	திருமதி. இந்திரகாந்தி	–	1980–84
7.	திரு. ராஜிவ் காந்தி	–	1980–89
8.	திரு. வி.பி. சிங்	–	1989–90
9.	திரு. சந்திரசேகர்	–	1990–91
10.	திரு. பி.வி. நரசிம்ம ராவ்	–	1991–96
11.	திரு. அடல் பிகாரி வாஜ்பாய்	–	மே 1996
12.	திரு. டி. தேவகவுடா	–	1996–97
13.	திரு. ஐ.கே. குஜ்ரால்	–	1997–98
14.	திரு. அடல் பிகாரி வாஜ்பாய்	–	1998–2004
15.	திரு. மன்மோகன் சிங்	–	2004–2014
16.	திரு. நரேந்திர மோடி	–	2014 முதல்

பிரதம அமைச்சரின் செயல்பாடுகளும், கடமைகளும்.

- அரசியலமைப்பு சட்டப்பிரிவு 78 பிரதம அமைச்சரின் கடமைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது.
- பிரதம அமைச்சர் அமைச்சர்களின் நிலையை அறிந்து அவர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- தான் தலைமை வகிக்கும், அமைச்சரவைக் கூட்டத்தின தேதி, நிகழ்ச்சி நிரல் குறித்து முடிவு செய்வார்.
- பிரதம அமைச்சரே அமைச்சரவையின் தலைவர் ஆவார். மற்றவர்கள் அரசின் துறைகளைப் பகிர்ந்து கொள்ளும் சக அமைச்சர்கள் ஆவார்.
- கேபினெட் கூட்டம் நடைபெறாத பொழுது பிரதம அமைச்சர் தனது மூத்த சகாக்கள் இருவர் அல்லது மூவரை இயல்பாகக் கலந்தாலோசிக்கலாம்.
- பிரதம அமைச்சர் பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வையிடுகிறார்.
- மத்திய அரசின் விவகாரங்கள் மற்றும் சட்டத்திற்கான முன்மொழிவுகள் போன்ற அமைச்சரவையின் அனைத்து முடிவுகளையும் குடியரசுத் தலைவருடன் விவாதிக்கிறார்.
- பிரதம அமைச்சர், குடியரசுத் தலைவருக்கும், அமைச்சரவைக்கும் இடையே பாலமாக செயல்படுகிறார்.
- சர்வதேச மாநாடுகளான காமன்வெல்த், அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு, சார்க் நாடுகளின் மாநாடு ஆகியவற்றில் இந்திய நாட்டின் பிரதிநிதியாகப் பிரதமர் பங்கு கொள்கிறார்.

அமைச்சரவைக் குழு

- தேர்தலுக்குப் பின்னர் பிரதம அமைச்சரின் ஆலோசனையின்படி குடியரசுத் தலைவர் அமைச்சரவையை நியமிக்கிறார். சில சமயங்களில் நாடாளுமன்ற உறுப்பினராய் இல்லாதவர்கூட அமைச்சராக நியமிக்கப்படலாம்.
- ஆனால் அவர் ஆறு மாதங்களுக்குள் நாடாளுமன்றத்தின் ஏதேனும் ஓர் அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
- ஒட்டு மொத்த மக்களவை உறுப்பினர்களின் 15 சதவிகிதம் மட்டுமே அமைச்சரவை உறுப்பினர்களாக (பிரதம அமைச்சர் உட்பட) இருத்தல் வேண்டும் என இந்திய அரசியலமைப்பு சட்டம் வரையறுத்துள்ளது.

மத்திய அமைச்சர்களின் வகைகள்

1. கேபினெட் (அ) ஆட்சிக்குழு அமைச்சர்கள்
2. இராசாங்க அமைச்சர்கள்
3. இணை அமைச்சர்கள்

- **கேபினெட் அமைச்சர்கள்–** நிர்வாகத்தின் மையக் கருவை உருவாக்கும் மூத்த அமைச்சர்களின் முறைசாரா அமைப்பே காபினெட் ஆகும். காபினெட் அரசாங்கத்தின் பாதுகாப்பு, நிதி, வெறியுறவுக் கொள்கைகள், உள்துறை ஆகியவற்றின் முக்கிய முடிவுகளை எடுக்கிறது.
- குடியரசுத் தலைவர் அவசரநிலையைப் பிரகடனம் செய்ய அமைச்சரவை பரிந்துரைக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவர அமைச்சரவை ஒரு கருவியாக செயல்படுகிறது.
- நிதி மசோதாவானது அமைச்சரவையில் இருந்து தொடங்கும். பின்னர் குடியரசுத் தலைவர் பரிந்துரையுடன் மக்களவையில் அறிமுகப்படுத்தப்படும்.
- அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையை அமைச்சரவை முடிவு செய்வதோடு, சர்வதேச உடன்படிக்கைகளுக்கும் ஒப்புதல் அளிக்கிறது. பல்வேறு நாடுகளுக்கானத் தூதர்களை நியமிப்பதில் அமைச்சரவை முக்கிய பங்கு வகிக்கிறது.

இராசாங்க அமைச்சர்கள்

- அமைச்சரவை குழுவின் இரண்டாவது வகையினரே இராசாங்க அமைச்சர்கள் ஆவர். அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளின் பொறுப்பு அமைச்சராக செயல்படுகின்றனர். ஆனால் அழைப்பு விடுத்தால் மட்டுமே இவர்கள் அமைச்சரவை கூட்டத்தில் கலந்து கொள்வார்.

இணை அமைச்சர்கள்

- அமைச்சரவையில் மூன்றாவதாக, இணை அமைச்சர்கள் உள்ளனர். காபினெட் அமைச்சர்கள் (அ) இராசாங்க அமைச்சர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளைச் செயலாற்றுவதில் இவர்கள் உதவி புரிகின்றனர்.

இந்திய நாடாளுமன்றம்

- மத்திய அரசின் சட்டம் இயற்றும் அங்கமாக நாடாளுமன்றம் திகழ்கிறது. இது இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி **V** இல் 79 முதல் 122 வரை உள்ள சட்டப்பிரிவுகள், இந்திய நாடாளுமன்ற அமைப்பு, உள்ளடக்கம், ஆயுட்காலம், அலுவலர்கள், செயல்முறைகய், சிறப்புச் சலுகைகள், அதிகாரங்கள் பற்றி குறிப்பிடுகிறது.
- இந்திய நாடாளுமன்றம் மூன்று பகுதிகளைக் கொண்டது. அவைகள்
    1. குடியரசுத் தலைவர்
    2. ராஜ்ய சபா (மாநிலங்களவை)
    3. லோக்சபா (மக்களவை)
- நாடாளுமன்றமானது மாநிலங்களவை என்னும் மேலவையையும் மக்களவை என்னும் கீழவையையும் கொண்டுள்ளதால் இது ஈரவை சட்டமன்றம் என்றும் அழைக்கப்படுகிறது.

மாநிலங்களவை–

- ராஜ்யசபா என்றழைக்கப்படும் மாநிலங்களவை 250 உறுப்பினர்களைக் கொண்டது. இதில் 238 உறுப்பினர்கள், மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் யூனியன் பிரதேச சட்டமன்ற உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- **12** உறுப்பினர்கள், இலக்கியம், அறிவியல், விளையாட்டு, கலை மற்றும் சமூக சேவை ஆகிய துறைகளில் சிறந்த அறிவு அல்லது செயல்முறை அனுபவம் கொண்டவர்களைக் குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

மாநிலங்களவை உறுப்பினராவதற்கானத் தகுதிகள்

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 30 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- அரசாங்கத்தில் ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது
- மனநிலை சரியில்லாதவராகவோ அல்லது பெற்றகடனை திருப்பித்தர முடியாதவராகவோ இருத்தல் கூடாது.
- நாடாளுமன்றத்தால் அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்படம் தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- மக்களவையிலோ (அ) எந்தவொரு சட்டமன்றத்திலோ உறுப்பினராக இருத்தல் கூடாது.

மாநிலங்களவை உறுப்பினரின் பதவிக் காலம்.

- மாநிலங்களவை ஒரு நிரந்தர அவை ஆகும்.
- அதனைக் கலைக்க முடியாது. மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகளாகும்.
- அதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வு பெறுகின்றனர். அதனால் ஏற்படும் காலியிடங்கள் புதிய உறுப்பினர்களால் நிரப்பப்படுகின்றன.
- துணைக் குடியரசுத் தலைவர் பதவி வழி மாநிலங்களவையின் தலைவராகக் செயல்படுகிறார்.
- மாநிலங்களவையின் துணைத் தலைவர் அதன் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

தேர்தல்

- தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில சட்டமன்ற உறுப்பினர்களால் ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையில் மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- இந்த தேர்தல் முறை மறைமுக தேர்தல் எனப்படும். இவர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவதில்லை

மாநிலங்களவையின் செயல்பாடுகள்

- எந்தவொரு மசோதாவும் (நிதி மசோதா தவிர) சட்டமாவதற்கு மாநிலங்களவையின் ஒப்புதல் தேவை. ஆறு மாதங்களுக்கு மேல் ஒரு மசோதா ஒப்புதல் பெறவில்லை எனில் குடியரசுத் தலைவர் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்து மசோதாவின் முடக்கத்தைத் தீர்த்து வைக்கிறார்.
- அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்திற்கான எந்த ஒரு மசோதாவை நிறைவேற்றுவதிலும் மக்களவையைப் போன்றே மாநிலங்களவையும் அதிகாரம் பெற்றுள்ளது.
- மாநிலங்களவை உறுப்பினர்கள் குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்களிக்கும் அதிகாரம் பெற்றுள்ளனர். இவர்கள் மக்களவை உறுப்பினர்கள் மற்றும் அனைத்து மாநிலங்களின் சட்டமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர்.
- இவர்கள், குடியரசுத் தலைவர், உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகளின் பதவிநீக்க செயல் முறைகளில் அதிகாரம் பெற்றுள்ளனர்.
- தேசிய முக்கியத்துவம் கருதி மாநில அரசு பட்டியலை உருவாக்கும் அதிகாரத்தை மாநிலங்களவையின் 2/3 உறுப்பினர்கள் பெரும்பான்மையுடன் ஒரு தீர்மானம் ஒப்புதல் பெறுகிறது. இதன் 2/3 உறுப்பினர்கள் பெரும்பான்மையுடன் அகில இந்தியப் பணிகளை உருவாக்கவும், நீக்கவும் அதிகாரம் பெற்றுள்ளது.
- **நிதி மசோதா** – நிதி மசோதாவின் திருத்தம் செய்யவோ அல்லது நிராகரிக்கவோ மாநிலங்களவைக்கு அதிகாரம் இல்லை. மக்களவையில் மட்டுமே நிதி மசோதாவினை அறிமுகப்படுத்த முடியும். இம்மசோதா மாநிலங்களவையின் ஒப்புதலுடன் சட்டமாக மாறும்.
- மாநிலங்களவை 14 நாட்களுக்குள் ஒப்புதல் அளிக்கவில்லையெனில், ஒப்புதல் பெறாமலேயே சட்டமாகிவிடும். மாநிலங்களவையின் சட்டத் திருத்தத்திற்கான முன்மொழிவுகளை மக்களவை கருத்தில் கொள்ள வேண்டியதில்லை. எந்த முன்மொழிவுகளையும் மக்களவை நிராகரிக்கலாம்.

மக்களவை

- மக்களவையானது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தின் புகழ்மிக்க அவை ஆகும். மக்களவைக்கு அதிகபட்சமாக தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் 552 அவற்றில் 530 உறுப்பினர்கள் பல்வேறு மாநிலங்களிலிருந்தும, 13 உறுப்பினர்கள் யூனியன் பிரதேசங்களில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

- ஆங்கிலோ–இந்தியன் சமூகத்திலிருந்து 2 உறுப்பினர்களைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். தற்சமயம் மக்களவை 545 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

மக்களவை உறுப்பினராவதற்கான தகுதிகள்

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 25 வயதிற்கு குறைவுடையவராய் இருத்தல் கூடாது
- அவரது பெயர் நாட்டின் ஏதாவது ஒரு பகுதியின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.
- மத்திய, மாநில அரசு அலுவலகங்களில் ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது
- மனநிலை சரியில்லாதவராகவோ அல்லது பெற்ற கடனை திருப்பி செலுத்த இயலாதவராகவோ இருத்தல் கூடாது.

மக்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம்.

- பொதுவாக , மக்களவை தன்னுடைய முதல் கூட்டத்திலிருந்து ஐந்து ஆண்டுகள் செயல்படும்.
- அதன் காலம் முடிவதற்கு முன் பிரதம அமைச்சரின் ஆலோசனையின்பேரில் குடியரசுத் தலைவர் மக்களவையைக் கலைக்கலாம்.
- இந்தியஅரசியலமைப்பின் நெருக்கடி நிலை சட்டத்தின்படி மக்களவையின் நம்பிக்கை வாக்கெடுப்பில் எந்தவொரு கட்சிக்கோ (அ) கூட்டணிக்கோ பெரும்பான்மை இல்லாத பட்சத்தில் குடியரசுத் தலைவர் மக்களவையைக் கலைக்கலாம்.

தேர்தல்

- மக்கள் தொகையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட நாடாளுமன்ற தொகுதிகளில் உள்ள மக்களால் நேரடியாக மக்களவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மக்களவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள், மேற்பார்வையிடுதல், நடத்துதல் அகிய பணிகளை இந்தியத் தேர்தல் ஆணையம் செய்கிறது.
- மக்களவைத் தேர்தலுக்காக நாடு முழுவதும் மக்கள் தொகையின் அடிப்படையில் பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
- மக்களவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் ***வயது வந்தோர் வாக்குரிமை*** பின்பற்றுகிறது. வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்ட 18 வயது நிரம்பிய இந்தியக் குடிமக்கள் அனைவரும் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க தகுதியுடையவர் ஆவர்.

மக்களவையின் செயல்பாடுகள்

- அனைத்து மசோதாக்களையும் மக்களவையில் அறிமுகப்படுத்தவும், நிறைவேற்றவும் முடியும் (நிதி மசோதா உள்பட)
- குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்ற நீதிபதிகள் போன்றவர்களின் பதவி நீக்க விவகாரங்களில் பங்கேற்க மாநிலங்களவையைப் போலவே மக்களவையும் அதிகாரம் பெற்றுள்ளது.
- அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்திற்கான எந்வொரு மசோதாவை நிறைவேற்றுவதிலும் மாநிலங்களவையைப் போலவே மக்களவையும் சமமான அதிகாரம் பெற்றுள்ளது.
- மக்களவை உறுப்பினர்கள், குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பெற்றுள்ளனர்.
- நம்பிக்கையில்லாத் தீர்மானம் லோக்சபாவில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் பிரதம அமைச்சர் உட்பட மற்ற அமைச்சர்களும் தங்களது பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும்.
- தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள்
    1. மாநிலங்களவை 18 உறுப்பினர்கள்
    2. மக்களவை 39 உறுப்பினர்கள்

சபாநாயகர்

- மக்களவையைத் தலைமை ஏற்று நடத்துபவர் சபாநாயகர் ஆவார். அவர் மக்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- நாடாளுமன்ற மக்களாட்சியில் சபாநாயகரின் பதவி ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது.
- மக்களவை கலைக்கப்பட்டாலும் புதிய சபாநாயகர் தேர்ந்தெடுக்கும் வரை அவர் பதவியில் நீடிப்பார்.
- நாடாளமன்ற இரு அவைகளின் கூட்டு கூட்டத்திற்கு தலைமை வகிப்பார்.
- அவர் ஒரு மசோதாவை நிதி மசோதாவா அல்லது சாதாரண மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றுள்ளார்.
- பண மசோதாவை தீர்மானிப்பதில் இவருடைய முடிவே இறுதியானது ஆகும்.

- 1985 ஆண்டு ஆண்டு கட்சித்தாவல் தடைச்சட்டத்தின்படி இந்திய அரசியலமைப்புச் சட்டம் 10 வது அட்டவனை அடிப்படையில் ஒரு உறுப்பினர் மக்களவை உறுப்பினர் மக்களவை உறுப்பினர் ஆக தகுதி பெற்றவரா இல்லைய என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு உண்டு.
- சபாநாயகர் பதவி காலியாக இருக்கும் போதும் அல்லது வருகை புரியாத போதும் துணை சபாநாயகர் மக்களவைக்குத் தலைமை வகிப்பார்.
- **நாடாளுமன்றக் கூட்டத் தொடர்**
  - பட்ஜெட் கூட்டத் தொடர் – பிப்ரவரி முதல் மே வரை
  - மழைக் (பருவ) காலக் கூட்டத் தொடர் – சூலை முதல் செப்டம்பர் வரை
  - குளிர்காலக் கூட்டத் தொடர் – நவம்பர் மற்றும் டிசம்பர்

நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்

- இந்திய நாடாளுமன்றம் சட்டமியற்றுதல், நிர்வாகத்தினை மேற்பார்வையிடுதல், வரவு– செலவு திட்டத்தினை நிறைவேற்றுதல், பொதுமக்கள் குறைகளைப் போக்குதல், மேலும் வளர்ச்சித் திட்டங்கள், சர்வதேச உறவுகள், உற்நாட்டுக் கொள்கைகள் போன்றவைகளை விவாதித்தல் என பல பணிகளைச் செய்கிறது.
- நாடாளுமன்றம் குடியரசுத் த லைவர் மீதான அரசியல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கவும், உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள்,தலைமைக் கணக்கு தணிக்கையாளர் ஆகியோரை அரசியலமைப்புச் சட்ட விதிமுறைகளின் படி பதவி நீக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது.
- நாடாளுமன்றதமானது நிர்வாகத்தினை கேள்விகள், துணைக்கேள்விகள் கேட்பதன் மூலமாகவும், ஒத்திவைப்புத் தீர்மானங்கள், விவாதங்கள், தீர்மானங்கள் இயற்றுதல், கண்டனத் தீர்மானம் அல்லது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதித்து அவையில் கொண்டு வருதல் போன்றவைகளின் மூலமாகவும் தனது கட்டுப்பாட்டினைச் செலுத்தி வருகின்றது.
- மாநிலங்களின் எல்லைகள் மாற்றி அமைத்திட நாடாளுமன்திற்கே அதிகாரம் உண்டு.

இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்

- இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 76 இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரை நியமிக்க வழிவகை செய்கிறது.
- இவர் நாட்டின் உயர்ந்த சட்ட அதிகாரி ஆவார். இவர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். உச்ச நீதிமன்ற நீதிபதியாகத் தேவையான தகுதிகளை இவரும் கொண்டிருக்க வேண்டும்.
- இவர் இந்தியக் குடிமகனாய் இருத்தல் வேண்டும். அவர் ஏதாவது ஒரு உயர் நீதிமன்றத்தில் ஐந்து ஆண்டுகள் நீதிபதியாகவோ (அல்லது) உயர் நீதிமன்றத்தில் பத்து ஆண்டுகள் வழக்குரைஞராகவோ அல்லது குடியரசுத் தலைவரின் பார்வையில்வ மேம்பட்ட சட்ட வல்லுநராகவோ இருத்தல் வேண்டும்.
- குடியரசுத் தலைவர் விரும்பும் வரை இவர் பதவியில் நீடிக்கலாம். எந்த நேரத்திலும் குடியரசுத் தலைவரால் அவர் பதவியிலிருந்து அகற்றப்படலாம் அல்லது அவர் குடியரசுத் தலைவருக்குப் பதவி விலகல் கடிதத்தை அளித்து பதவி விலகலாம்.

இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்

- இவர் குடியரசுத் தலைவரால் குறிப்பிடப்பட்ட சட்ட விவகாரங்கள் மீது இந்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவார். குடியரசுத் தலைவரால் ஒதுக்கப்படும் சட்டரீதியிலான மற்ற கடமைகளையும் அவர் மேற்கொள்வார்.
- அரசியலமைப்புச் சட்டம் அல்லது ஏனைய சட்டத்தின்படி வழங்கப்படும் பணிகளையும் அவர் மேற்கொள்வார்.
- இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் வழக்காடும் உரிமை இவருக்கு உண்டு.
- நாடாளுமன்ற இரு அவைகளின் செயல்முறைகளிலும் பேசுவதிற்கும், பங்கு கொள்வதற்கும் இவருக்கு உரிமை உண்டு.
- நாடாளுமன்றத்தின் இரு அவையின் கூட்டதிலோ அல்லது எந்தவொரு கூட்டுக்குழு கூட்டத்திலோ வாக்கு அளிக்கும் உரிமை இன்றி உறுப்பினராக இவர் இடம் பெறுவார்.
- நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியக் அனைத்து சலுகைகளையும், சட்ட விலக்களிப்புகளையும் இவரும் பெறகிறார்.

நீதித்துறை

- மத்திய அரசாங்கத்தின் மூன்றாவது அங்கம் நீதித்துறை ஆகும். குடிமக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதில் நீதித்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. இந்திய அரசியலமைப்பு மற்றும் சட்டத்தின் விதிகள் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்வதிலும், விளக்கமளிப்பதிலும் இது முக்கிய பங்கை வகிக்கிறது.

உச்சநீதிமன்றம்

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் உச்சநீதிமன்றம் ஆகும். நாட்டின் முதன்மை நீதிமன்றமாக, சுதந்திரமான,ஒருங்கிணைந்த நீதி அமைப்பாக உச்சநீதிமன்றம் நிறுவுவதற்கு நமது அரசியலமைப்பு வழிவகை செய்கிறது.
- மத்திய, மாநில அரசுகளின் சட்டமன்ற, நிர்வாகப் பிரிவுகளிலிருந்து நீதித்துறை தன்னாட்சி பெற்று விளங்குகிறது. ஒருங்கிணைந்த நீதித்துறை என்பது நாடு முழுவதும் நீதித்துறையானது ஒற்றை அதிகாரப் படிநிலையைக் கொண்டுள்ளதாகும்.
- குடிமக்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாப்பதில் நீதித்துறை முக்கிய பங்கு வகிக்கிறது.
- புதுதில்லியில் அமைந்துள்ள இந்திய உச்சநீதிமன்றம் 1950 ஜனவரி 28 ஆம் நாள் துவங்கப்பட்டது. இது 1935 ஆம் ஆண்டு இந்தயச் அரசுச் சட்டதின் கீழ் நிறுவப்பட்ட கூட்டாட்சி நீதிமன்றத்தைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தின் அமைப்பு

- 1950 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் தொடக்கத்தில் ஒரு தலைமை நீதிபதி உட்பட 8 நீதிபதிகளை உச்ச நீதிமன்றம் கொண்டிருந்தது.
- தற்சமயம் உச்ச நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதி உட்பட 28 நீதிபதிகளைக் கொண்டுள்ளது.

நீதிபதிகள் நியமனம்

- இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிரார். மற்ற நீதிபதிகளைத் தலைமை நீதிபதியைத் தலைவராகக் கொண்ட மூத்த நீதிபதிகள் குழுவின் ஆலோசனையுடன் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

உச்சநீதிமன்ற நீதிபதிக்கான தகுதிகள்

- அவர் இந்தியக் குடிமகனாய் இருத்தல் வேண்டும் (அல்லது) அவர் ஐந்து ஆண்டுகள் உயர்நீதிமன்ற நீதிபதியாக பணிபுரிந்திருத்தல் வேண்டும்.
- அவர் பத்து ஆண்டுகள் உயர் நீதிமன்றத்தில் வழக்குரைஞராக செயலாற்றியிருத்தல் வேண்டும்.
- குடியரசுத் தலைவர் பார்வையில் சிறப்புமிக்க சட்ட வல்லுநராய் இருத்தல் வேண்டும்.

- தற்காலிக அடிப்படையில் உச்சநீதிமன்ற நீதிபதிகளை நியமிக்க அரசியலமைப்புச் சட்டம் வழிவகை செய்கிறது. உ
- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உட்பட இதர நீதிபதிகள் 65 வயது வரை பதவியில் நீடிப்பார்.
- உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் பதவிக்காலம் முடிவதற்கு முன்பாக குடியரசுத் தலைவரிடம் பதவி விலகல் கடிதத்தை அளித்து பதவி விலகலாம் அல்லது பெருங்குற்றத்தின் மூலம் உண்டான கண்டனத் தீர்மானத்தின் மூலம் உச்ச நீதிமன்ற நீதிபதிகளைப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரத்தினை நாடாளுமன்றம் பெற்றுள்ளது.
- உச்ச நீதிமன்றத்தின் நிரந்தர தலைமையிடம் புதுதில்லியின் உள்ளது. எனினும் இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவு பெற்று இந்தியத் தலைமை நீதிபதியின் முடிவின்படி வேறு எந்த மாநிலத்திலும் அல்லது எந்த ஒரு இடத்திலும் இந்நீதிமன்ற அமர்வு அமையலாம்.

உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்களும் பணிகளும்.

நீதித்துறை செயல்பாடுகள்

- உச்ச நீதிமன்றம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ஆகும். கீழ்க்கண்டவைகள் உச்சநீதிமன்றத்தின் செயல்பாடுகளாகும்.

(அ) தனக்கேயுரிய நீதி வரையறை

- உச்ச நீதிமன்றத்திற்கு நேரடியாக வரும் வழக்குகள் தனக்கேரிய நீதிவரையறைக்குப்பட்டவையாகும். அவைகள்
  1. இந்திய அரசிற்கும் ஒரு மாநிலம் அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையிலான சிக்கல்கள்
  2. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கிடையிலான சிக்கல்கள்
  3. அடிப்படை உரிமைகளை நடைமுறைபடுத்துவது தொடர்பாக எழும் சிக்கல்கள் ஆகியன உச்ச நீதிமன்றத்தின் தனக்கேரிய நீதி வரையறைக்குட்பட்டதாகும்.
- அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்திட கீழ்க்கண்ட நீதிப்பேராணைகளை உச்சநீதிமன்றம் வழங்குகிறது.அவைகள்
  1. ஆட்கொணர்வு நீதிப்பேராணை
  2. கீழ் நீதிமன்றங்களுக்கு விடுக்கும் கட்டளை நீதிப்பேராணை
  3. வழக்கு விசாரணைத் தடை நீதிப்பேராணை
  4. தடைமாற்று நீதிப்பேராணை
  5. உரிமை வினவு நீதிப்பேராணை

(ஆ) மேல்முறையீட்டு நீதிவரையறை

- உச்ச நீதிமன்றமே நாட்டின் இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமாகும். மாநில உயர் நீதிமன்றங்கள் உரிமையியல், குற்றவியல் அரசியலமைப்பு வழக்குகள் மீதான தீர்ப்புகளுக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்குகளை உச்ச நீதிமன்றம் விசாரிக்கின்றது.
- அப்படிப்பட்ட வழக்குகளைத் தீர்க்க அரசியலமைப்புச் சட்டப்படி மேலும் சட்டவிளக்கம் தேவையான உயர் நீதிமன்றம் சான்றிதழ் அளித்தால் மட்டுமே அவ்வழக்குகளை உச்ச நீதிமன்றத்தின் முன் கொண்டு செல்ல முடியும்.

(இ) ஆலோசனை நீதி வரையறை

- பொது முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு சட்டம் அல்லது உண்மை மீதான உச்ச நீதிமன்றத்தின் கருத்தினைப் பெற அரசியலமைப்புச் சட்டம் குடியரசுத் தலைவருக்கு அதிகாரத்தினை வழங்குகிறது.

(ஈ) இதர நீதிவரையறை

- உச்ச நீதிமன்றம் கீழ்க்காணும் இதர அதிகாரங்களைப் பெற்றுள்ளது.
  - உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை இந்தியாவின் அனைத்துப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.
  - குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று நீதிமன்றத்தின் பொதுவான செயல்முறைகள், வழிமுறைகளை ஒழுங்குப்படுத்தும் விதிகளை உருவாக்க உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
  - உச்ச நீதிமன்றம் தனது பணி அமைப்பின் மீதான முழுக் கட்டுப்பாட்டினையும் கொண்டுள்ளது.

(உ) நீதிப்புனராய்வு

- ஒரு சட்டத்தினை அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என அறிவிக்கும் அதிகாரம் உச்சநீதிமன்றத்திடம் உள்ளது இது நீதிப்புனராய்வு (நீதிமன்ற மறுஆய்வு அதிகாரம்) எனப்படும். பின்வரும் தனிப்பட்ட நீதிமன்ற மறுஆய்வு அதிகாரங்களை உச்சநீதிமன்றம் பெற்றுள்ளது. அவை
  - மத்திய, மாநிலங்களுக்கிடையிலான பிரச்சனைகள்
  - அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்படும் சந்தேகங்கள், கருத்து வேற்றுமைகளை விளக்கி தெளிவுபடுத்துதல்
  - அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல்
  - மாநில சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்கள் அரசியலமைப்புச் சட்டதிற்கு முரணானது என அறிவிக்கும் அதிகாரம் போன்றவைகளை உச்ச நீதிமன்றம் பெற்றுள்ளது.

மாநில அரசு

- இந்திய அரசியலமைப்பு மத்தி, மாநில அரசுக்களுக்கான தனித்தனி நிர்வாக முறைகளைக் கொண்ட கூட்டாட்சி அரசாங்கத்தை வழங்குகிறது.
- இச்கூட்டாட்சியில், தேசியத் தலைநகரான டெல்லி, 6 யூனியன் பிரதேசங்கள் மற்றும் 29 மாநிலங்கள் உள்ளன.
- மத்திய – மாநில அரசுகளுக்கான ஒரு சீரான நிர்வாக அமைப்பினை ஏற்படுத்த அரசியலமைப்பு வழிவகுக்கிறது.
- அரசியலமைப்பின் பகுதி **VI** இல் 152 முதல் 237 வரையிலான சட்டப்பிரிவுகள் அனைத்து மாநிலங்களுக்கான சீரான அமைப்பினைப் பற்றி குறிப்பிடுகிறது.
- ஆனால் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 370 ஜம்மு–காஷ்மீர் மாநிலத்திற்கு மட்டும் சிறப்பு அந்தஸ்து வழங்கியுள்ளது.
- மத்திய அரசைப் போன்று மாநில அரசுகளும் நிர்வாகத்தறை, சட்டமன்றம், நீதித்துறை என்ற மூன்று பிரிவுகளில் கீழ் இயங்குகின்றன.



- ஜம்மு – காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும், ஜம்மு –காஷ்மீர் அரசியலமைப்பு 1957 –ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் நாள் ஏற்கப்பட்டு, 1957 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது.
- இந்திய அரசியலமைப்பின் அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் மற்றும் அடிப்படை உரிமைகள் ஜம்மு – காஷ்மீர் மாநிலத்திற்குப் பொருந்தாது.
- இந்திய அரசியலமைப்பு நீக்கிய அடிப்படை உரிமைகளில் ஒன்றான சொத்துரிமை ஜம்மு – காஷ்மீரில் இன்றும் நடைமுறையில் உள்ளது.

நிர்வாகத்துறை

ஆளுநர்

- மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்புத் தலைவர் அளுநர் ஆவார். மாநில ஆளுநரின் பெயரில் மாநில நிர்வாகம் செயல்படுகிறது.
- பொதுவாக ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் ஆளுநர் இருக்கிறார். ஆனால் நிர்வாகச் சூழலின் காரணமாக ஒரு மாநிலத்தின் ஆளுநர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் ஆளுநராகவும் நியமிக்கப்படலாம்.
- அரசியலமைப்பு சட்டப்பிரிவு 154 மாநில ஆளுநரின் நிர்வாக அதிகாரத்தைப் பற்றி கூறுகிறது.
- சட்டப்பிரிவு 154(1)–ன்படி மாநில ஆளுநரின் நிர்வாக அதிகாரம் ஆளுநரிடம் இருக்க வேண்டும். இந்த அதிகாரம் அவரால் நேரடியாகவோ அல்லது அவரின் கீழுள்ள அலுவலர்களாலோ, அரசியலமைப்பின்படி செயல்படுத்தப்பட வேண்டும்.

ஆளுநர் நியமனம்

- மாநில ஆளுநர், குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார்.
- வழக்கமாக, அவரது பதவிக்காலம் 5 ஆண்டுகள்.
- ஆனால் குடியரசுத் தலைவரின் விருப்பத்தின் பேரில் அவரது பதவிக்காலம் நீட்டிக்கப்படலாம். பொதுவாக ஒருவர் தனது சொந்த மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்படமாட்டார்.
- மேலும், அவர் குடியரசுத் தலைவரால் ஒரு மாநிலத்திலிருந்து வேறோரு மாநிலத்திற்கு மாற்றப்படலாம்.
- குடியரசுத் தலைவருக்குத் தனது பணித்துறப்பு கடிதத்தைக் கொடுப்பதன் மூலம் ஆளுநர் எந்நேரத்திலும் பதவி விலகலாம்.
- மாநில சட்டமன்றமோ அல்லது உயர் நீதிமன்றமோ ஆளுநரின் பணி நீக்கத்தில் பங்கு பெற முடியாது. ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் ஆளுநராக நியமிக்கப்படலாம்.
- ஒருவரை ஒரு மாநில ஆளுநராக நியமனம் செய்யப்படுவதில் இரண்டு மரபுகள் பின்பற்றப்படுகின்றன. அவை ஆளுநராக நியமிக்கப்படும் ஒருவர் தான் எந்த மாநிலத்திற்கு ஆளுநராக நியமிக்கப்பட உள்ளாரோ அந்த மாநிலத்தில் வசிப்பவராக இருத்தல் கூடாது.
- மேலும் ஆளுநராக நியமிக்கப்படும் ஒருவரை மத்திய அரசு, மாநில அரசுடன் கலந்தாலோசித்து அவரது பெயரை முன்மொழிய வேண்டும்.

📖 அரசியலமைப்பு சட்டப்பிரிவு சட்டப்பிரிவு 158 (3அ) ன் படி ஒருவர், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் ஆளுநராக நியமிக்கப்படும் பொழுது, குடியரசுத் தலைவர் ஓர் ஆணையின் மூலம், ஆளுநரின் ஊதியம் மற்றும் படிகளை சம்பந்தப்பட்ட மாநிலங்கள் பகிர்ந்து வழங்க தீர்மானிக்கலாம்.

மத்திய – மாநில அரசுகளின் உறவுகளைக் குறித்து ஆராய அமைக்கப்பட சர்க்காரிய குழு ஆளுநர் நியமனம் குறித்த பல ஆலோசனைகளை வழங்கியுள்ளது.அவை.

- மாநில சட்டமன்ற குழுவால் தயாரிக்கப்பட்ட பட்டியலிலிருந்து அல்லது
- முதலமைச்சரின் ஒப்புதலுடன் மாநில அரசால் தயாரிக்கப்படம் பட்டியலிலிருந்து அல்லது
- முதலமைச்சருடன் நடத்தப்படும் கலந்துரையாடல் ஆகிவற்றின் மூலம், ஆளுநர் நியமனம் நடைபெறும்.

ஆளுநரின் தகுதிகள்

📖 இந்திய அரசியலமைப்பின் 157 மற்றும் 158 வது சட்டப்பிரிவுகள் ஆளுநர் பதவிக்குத் தேவையான பின்வரும் தகுதிகளைக் கூறுகின்றன.

- அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
- நாடாளுமன்ற உறப்பினராகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினராகவோ இருத்தல் கூடாது. அவ்வாறு இருப்பின் அவர் ஆளுநராக பதவியேற்கும் பொழுது தாமாகவே அப்பதவி காலியாகிவிடும்.
- மேலும் அவர், இலாபம் தரும் எந்த தொழிலும் ஈடுபடக்கூடாது.

ஆளுநரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

📖 ஆளுநர், மாநில நிர்வாகத்தின் தலைவராக செயல்படுவது மட்டுமல்லாமல் ஏராளமானஅதிகாரங்கள் பெற்றவராகவும் திகழ்கிறார்.

📖 சட்டப்பிரிவு 163–ன் படி, முதலமைச்சரின் தலைமையிலான அமைச்சரவையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின்படி ஆளுநர் குறிப்பிட்ட சில நிகழ்வுகளைத் தவிர மற்ற அதிகாரங்களைச் செயல்படுத்துகிறார்.

📖 மாநில நிர்வாகத் தலைவராக ஆளுநர் பின்வரும் அதிகாரங்களைப் பெற்று பணிகளைச் செய்கிறது.

நிர்வாக அதிகாரங்கள்

- இந்திய அரசியலமைப்பு, மாநில நிர்வாகத்தின் அனைத்து அதிகாரங்களையும் ஆளுநருக்கு வழங்குகிறது. இவற்றை ஆளுநர் நேரடியாகவோ அல்லது அவரின் கீழுள்ள அலுவலர்கள் மூலமோ செயல்படுத்தலாம். ஆளுநரே மாநிலத்தின் அரசியலமைப்புத் தலைவர். அவரது பெயராலே அனைத்து நிர்வாகமும் நடைபெறுகின்றன.

ஆளுநரின் நிர்வாக அதிகாரங்கள் மற்றும் பணிகளாவன

- மாநில சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பெறும் கட்சியின் தலைவரை முதலமைச்சராக ஆளுநர் நியமனம் செய்கிறார்.
- முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் அமைச்சரவையின் மற்ற உறுப்பினர்களை நியமனம் செய்கிறார்.
- மாநிலத்தின் அரசு வழக்கறிஞரை நியமனம் செய்து அவரது ஊதியத்தையும் நிர்ணயம் செய்கிறார். ஆளுநர் விரும்பும் வரை அரசு வழக்குரைஞர் அவரது பதவியைத் தொடரலாம்.
- அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறார். இருப்பினும் ஆளுநரால் இவர்களை பணிநீக்கம் செய்ய முடியாது. குடியரசுத் தலைவரால் மட்டுமே பணி நீக்கம் செய்ய முடியும்.
- மாநில தலைமை தேர்தல் ஆணையரை நியமனம் செய்து, அவரது பணிக்காலம், பணியின் தன்மையைத் தீர்மானிக்கிறார். இருத்த போதிலும், உயர்நீதிமன்ற நீதிபதியைப் பதவி நீக்கம் செய்யும் அதே முறையைப் பின்பற்றியே மாநிலத் தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி நீக்கம் செய்யலாம்.
- ஆளுநர், மாநிலப் பல்கலைக்கழகங்களின் வேந்தராக செயல்படுவதுடன், துணை வேந்தர்களையும் நியமனம் செய்கிறார்.
- குடியரசுத் தலைவரின் அவசரநிலை பிரகடனம் செய்யப்படும் பொழுது, குடியரசுத் தலைவரின் பெயரில் இவரே மாநிலத்தை நேரடியாக ஆட்சி செய்கிறார்.

சட்டமன்ற அதிகாரங்கள்

📖 ஆளுநர் மாநில சட்டமன்றத்தின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாவார். ஆனால் அவர் சட்டமன்றத்தின் உறுப்பினராக இல்லை. ஆளுநர் பின்வரும் சட்டமன்ற அதிகாரங்களைப் பெற்றுள்ளார்.

- ஆளுநர் சட்டமன்ற கூட்டத்தைக் கூட்டவும் ஒத்திவைக்கவும் சட்டமன்றத்தைக் கலைக்கவும் உரிமைப் பெற்றுள்ளார்.
- பொதுத் தேர்தல் முடிந்து முதலமைச்சர் மற்றும் மற்ற அமைச்சர்களின் நியமனத்திற்குப் பிறகு நடைபெறும் சட்டமன்றக் கூட்டத்தின் முதல் கூட்டத்தில் உரை நிகழ்த்துகிறார்.
- நிலுவையிலுள்ள மசோதா குறித்து சட்டமன்ற அவைகளுக்கு ஆளுநர் செய்தி அனுப்பலாம்.
- சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் பணியிடம் காலியாக இருக்கும்பொழுது சட்டமன்றத்தை தலைமை ஏற்று நடத்த எந்த சட்டமன்ற உறுப்பினரை வேண்டுமானாலும் ஆளுநர் நியமனம் செய்யலாம்.
- ஆங்கிலோ – இந்தியன் வகுப்பினரிலிருந்து ஓர் உறுப்பினரை மாநில சட்டமன்றத்திற்கு நியமனம் செய்யலாம்.
- கலை, இலக்கியம், அறிவியல், கூட்டுறவு இயக்கம் மற்றும் சமூக சேவை போன்றவற்றில் சிறந்து விளங்கும் நபர்களைத் தேர்ந்தெடுத்து மாநில சட்டமேலவையின் 6 இல் 1 பங்கு இடங்களுக்கு அவர்களை நியமனம் செய்கிறார்.
- சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்து தேர்தல் ஆணையத்துடன் கலந்தாலோசித்து முடிவு செய்கிறார்.
- மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு மசோதாவும் ஆளுநர் கையொப்பமிட்ட பின்னர் மட்டுமே சட்டமாகும். ஆனால், சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா ஆளுநர் ஒப்புதலுக்காக அனுப்பப்படும் பொழுது ஆளுநர் கையொப்பமிடலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம் அல்லது மீண்டும் மறு பரிசீலனைக்காகசட்டமன்றத்திற்கே திருப்பி அனுப்பலாம்.
- மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட எந்த ஒரு மாசோதாவும் மாநில உயர் நீதிமன்றத்தின் அதிகாரத்திற்குத் தீங்கு விளைவிக்கும் நிலையில் இருக்குமாயின, அதனைக் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக நிறுத்திவைக்கலாம்.
- அரசியலமைப்பு சட்டப்பிரிவு 213–ன் கீழ் ஆளுநர் மாநில சட்டமன்றம் நடைபெறாத பொழுது அவசர சட்டத்தைப் பிறப்பிக்கலாம். ஆனால் அந்த அவசரக் சட்டம், 6 மாதத்திற்குள் மாநில சட்டமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேண்டும். அவசரச்சட்டத்தை எந்நேரத்திலும் ஆளுநர் திரும்பப் பெறலாம்.
- மாநிலத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கை, அரசுப்பணியாளர் தேர்வாணையக் குழுவின் அறிக்கை, அரசின் தணிக்கைக்குழு அறிக்கைகளை சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கிறார்.

நிதி அதிகாரங்கள்

- மாநிலத்தின் ஆண்டு வரவு செலவு திட்டத்தினை தயார் செய்து சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யும் கடமையை ஆளுநருக்கு அரசியலமைப்பு வழங்குகிறது. தேவைப்பட்டால், துணை வரவு செலவு திட்டத்தையும் அறிமுகம் செய்யலாம்.
- ஆண்டு நிதிநிலை அறிக்கையை (வரவு செலவு திட்டம்) சட்டமன்றத்தில் அறிமுகம் செய்ய காரணமாகிறார்.
- மாநில சட்டமன்றத்தில் மாநில நிதியமைச்சர் மூலம் துணை வரவு செலவு திட்டத்தை தேவைப்பட்டால் சமர்ப்பிக்கின்றார்.
- ஆளுநரின் முன் அனுமதியுடன்தான் பண மசோதாவை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியும்.
- ஆளுநரின் பரிந்துரையின்றி நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது.
- அரசின் எதிர்பாராச் செலவினங்களுக்காக ஆளுநர் அவரச நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய முடியும்.
- பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகளின் நிதிநிலையை ஆய்வு செய்ய ஒவ்வொரு ஐந்தாண்டிற்கு ஒருமுறை நிதி ஆணையம் ஒன்றை அமைக்கிறார்.

நீதித்துறை அதிகாரங்கள்

- மாநில அரசின் தலைமை வழக்குரைஞரை நியமனம் செய்கிறார்.
- கீழ் நீதிமன்றங்களின் நீதிபதிகளை நியமனம் செய்கிறார்.
- உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையின் பேரில் மாவட்ட நீதிபதிகளின் நியமனம் மற்றும் பதவி உயர்வு போன்ற பணிகளை மேற்கொள்கிறார்.
- ஆளுநரின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியை நியமனம் செய்கிறார்.
- குற்றவாளிகளின் கருணை மனு அடிப்படையில் குற்றவாளிகளை மன்னிக்கலாம் அல்லது குற்றவாளிகளின் தண்டனையைக் குறைக்கலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம்.

விருப்புரிமை அதிகாரங்கள்

- குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக ஆளுநர் ஒரு மசோதாவை நிறுத்தி வைக்க முடியும்.
- மாநிலத்தில், குடியரசுத் தலைவரின் ஆட்சிக்கு ஆளுநர் பரிந்துரைசெய்கிறார்.
- மாநில நிர்வாகம் மற்றும் சட்டமன்ற செயல்பாடுகள் தொடர்பானச் செய்திகளை முதலமைச்சரிடமிருந்து ஆளுநர் பெறுகிறார்.

- மாநில சட்டமன்ற பொதுத் தேர்தலில் எந்த கட்சியும் அறுதி பெரும்பான்மையைப் பெறாத போது, ஆளுநர் எந்தக் கட்சி தலைவரையும் ஆட்சி அமைக்க அழைக்கலாம்.
- சட்டமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பின் பொழுது பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் போனால் அமைச்சரவையை ஆளுநர் கலைக்க முடியும்.
- அமைச்சரவை பெரும்பான்மையை இழந்தால், சட்டமன்றத்தை ஆளுநர் கலைக்கமுடியும்.

அவசரகால அதிகாரகள்

மாநில அரசு அரசியலமைப்பு விதிகளுக்கேற்ப செயல்படவில்லை என்று ஆளுநர் உறுதியாக நம்பினால் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 356 ன் கீழ் மாநில அரசை கலைக்க குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்யலாம். மாநில அரசு கலைக்கப்பட்டவுடன், மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைக்கு வரும். ஆளுநர் குடியரசுத் தலைவரின் பிரதிநிதியாக மாநிலத்தை நிர்வாகம் செய்கிறார்.

ஆளுநரின் சிறப்புரிமைகள்

சட்டப்பிரிவு 361(1) ஆளுநருக்கான கீழ்க்காணும் சிறப்புரிமைகளை வழங்குகின்றது.

1. தனது பணிகள் மற்றும் அதிகாரத்தைச் செய்ய வேண்டும் என எண்ணுவதிலும் செயல்படுத்துவதிலும் எந்த நீதிமன்றத்திற்கும் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை.
2. ஆளுநரின் பதவிக்காலத்தில் அவர் மீது குற்றவியல் நடவடிக்கைகளை அவருக்கு எதிராக எந்த நீதிமன்றத்திலும் தொடர முடியாது.
3. ஆளுநரின் பதவி காலத்தில் அவர் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தவோ அல்லது அவரை கைது செய்யவோ எந்த நீதிமன்றமும் உத்தரவு பிறப்பிக்க முடியாது.
4. மாநில ஆளுநருக்கு எதிராக உரிமையியல் வழக்குகளைத் தொடர முடியாது

முதலமைச்சர்

அரசியலமைப்பால் அமைக்கப்பட்ட நாடாளுமன்ற முறையில் அமைந்த அரசில், ஆளுநர், மாநிலத்தின் பெயரளவு நிர்வாகியாகவும் முதலமைச்சர் உண்மையான நிர்வாகியாகவும் உள்ளனர். வேறு வகையில் கூற வேண்டுமாயின் ஆளுநர் மாநிலத்தின் அரசின் தலைவர் முதலமைச்சர் அரசாங்கத்தின் அலைவர் ஆவார்.

முதலமைச்சரின் நியமனம்

முதலமைச்சர் மாநில ஆளுநரால் நியமனம் செய்யப்படுகிறார். சட்டமன்றத்தில்ளன பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் அல்லது பெரும்பான்மை பெற்ற கூட்டணிக் கட்சியின் தலைவர் முதலமைச்சராக நியமிக்கப்படுகிறார்.

ஒருவேளை எந்த கட்சியும் முழுமையான பெரும்பான்மை பெற்றவர்கள் தங்களது தலைவரைத் தேர்ந்தெடுக்க தவறும் பொழுது ஆளுநர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அடுத்தாக பெரும்பான்மை பெற்ற பெரிய கட்சியை அமைச்சரவை அமைக்க அழைப்பார்.

அவ்வாறு அழைக்கப்படும் தலைவர், ஆளுநரால் வழங்கப்படும் கால அவகாசத்திற்குள் சட்டமன்றத்தில் அவரது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்.

முதலமைச்சரின் பதவிக்காலம் நிர்ணயிக்கப்பட்ட ஒன்றல்ல. சட்டமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவு எவ்வளவு காலத்திற்கு தொடர்கிறதோ அதுவரை அவர் முதலமைச்சராக நீடிக்கலாம்.

சட்டமன்றத்தில் எப்பொழுது அவர் பெரும்பான்மையை இழக்கிறாரோ அப்பொழுது தனது பதவியை இராஜினாமா செய்கிறார். சட்டமன்றத்தில் மற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் போலவே முதலமைச்சரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

1947 லிருந்து பதவி வகித்த தமிழக முதலமைச்சர்கள்

திரு. ஒ.பி. இராமசாமி	–	1947–1949
திரு.பி.எஸ். குமாரசாமி ராஜா	–	1949–1952
திரு. சி. இராஜகோபலாச்சாரி	–	1952–1954
திரு. கு. காமராஜர்	–	1954–1963
திரு. எம். பக்தவச்சலம்	–	1963–1967
திரு. சி.எண். அன்னாதுரை	–	1967–1969
திரு. எம். கருணாநிதி	–	1969–1976
திரு.எம்.ஜி. இராமச்சந்திரன்	–	1977–1987

திருமதி. ஜானகி இராமச்சந்திரன்	–	ஜனவரி 1988
திருமதி. எம். கருணாநிதி	–	1989–1991
செல்வி.ஜே. ஜெயலலிதா	–	1991–1996
திரு. எம். கருணாநிதி	–	1996–2001
செல்வி. ஜே. ஜெயலலிதா	–	2001
திரு. ஓ. பன்னிர்செல்வம்	–	2001–2002
செல்வி. ஜெ. ஜெயலலிதா	–	2002–2006
திரு. எம். கருணாநிதி	–	2006–2011
செல்வி. ஜெ. ஜெயலலிதா	–	2011–2014
திரு. ஓ. பன்னீர்செல்வம்	–	2014–2015
செல்வி. ஜெ. ஜெயலலிதா	–	2015–2016
திரு. ஓ. பன்னீர்செல்வம்	–	2016–2017
திரு. எடப்பாடி. கே. பழனிசாமி	–	2017 முதல்

முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

மாநில நிர்வாகத்தின் உண்மையான தலைவர் முதலமைச்சர் ஆவார். முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளாவன.

1. அமைச்சரவை தொடர்பானவை
2. ஆளுநர் தொடர்பானவை
3. சட்டமன்றம் தொடர்பானவை
4. இதர பணிகள் மற்றும் அதிகாரங்கள்

அமைச்சரவை தொடர்பானவை

அமைச்சரவையின் தலைவரான முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளாவன.

1. முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் அமைச்சர்களை நியமிக்கிறார்.
2. அமைச்சர்களுக்குத் துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
3. தனது அமைச்சரவையை மாற்றியமைக்கிறார்.
4. ஓர் அமைச்சருடன் கருத்து வேறுபாடுகள் எழும்பொழுது, இராஜினாமா செய்யும்படி கேட்கிறார் அல்லது பதவி நீக்கம் செய்ய ஆளுநருக்குப் பரிந்துரை செய்கிறார்.
5. அமைச்சரவைக் கூட்டதைத் தலைமை ஏற்று நடத்தி முடிவுகளை எடுக்கிறார்.
6. அமைச்சரவையின் குழப்பத்தைத் தனது இராஜினாமா மூலம் முடித்து வைக்கிறார்.
7. அமைச்சர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தி, வழிநடத்தி, இயக்கி, அவர்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.

ஆளுநர் தொடர்பானவை

ஆளுநருக்கும் அமைச்சரவைக்குமிடையே செய்தித்தொடர்புகளில், முதலமைச்சர் முதன்மையாக விளங்குகிறார். கீழ்க்காணும் ஆலுவலர்களின் நியமனங்கள் தொடர்பாக ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறார்.

1. மாநில அரசு வழக்குரைஞர்
2. மாநில தேர்தல் ஆணையர்
3. அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
4. மாநில திட்டக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
5. மாநில நிதிக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

சட்டமன்றம் தொடர்பானவை

1. சட்டமன்ற கூட்டத்தொடரை ஆரம்பிக்கவும் ஒத்திவைக்கவும் ஆளுநருக்கு முதலமைச்சர் ஆலோசனை வழங்குகிறார்.
2. சட்டமன்றத்தில் அரசின் கொள்கைகளை அறிவிக்கிறார்.
3. சட்டமன்றத்தில் மசோதாக்களை அறிமுகப்படுத்துகிறார்.
4. எந்நேரத்திலும் சட்டமன்றத்தைக் கலைக்க ஆளுநருக்குப் பரிந்துரை செய்கிறார்.

இதர அதிகாரங்கள் மற்றும் பணிகள்

1. ஆளுங்கட்சியின் தலைவராக முதலமைச்சர் கட்சியைக் கட்டுப்படுத்தி அதன் ஒழுக்கத்தை மேம்படுத்துகிறார்.

2. மாநிலத்தின் தலைவராகப் பல்வேறுபட்ட மக்களின் தேவைகளை உற்று நோக்குகிறார்.
3. மாநிலத்தின் அரசியல் தலைமையாக பல்வேறு பணிகளைக் கட்டுப்படுத்தி, மேற்பார்வையிடடு, பல்வேறு துறை செயலர்களின் பணிகளை ஒருங்கிணைக்கிறார்.
4. மாநில அரசு சுமூகமாக இயங்க மத்திய அரசுடன் இணக்கமான உறவை வைத்துக்கொள்கிறார்.

அமைச்சரவை

- அமைச்சரவை மாநில சட்டமன்றத்திற்குக் கூட்டாகப் பொறுப்பானது அமைச்சரவைக்குழு வின் அமைச்சர்கள் அனைவரும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.
- சட்டமன்ற உறுப்பினர் அல்லாத ஒருவர் அமைச்சராக பதவியேற்றால் 6 மாத காலத்திற்குள் அவர் சட்டமன்ற உறுப்பினராக வேண்டும்.
- முதலமைச்சரின் தலைமையின் கீழ் அமைச்சர்கள் அனைவரும் ஒரு குழுவாக செயல்பட வேண்டும்.
- முதலலமைச்சர் எவ்வளவு காலம் பதவியில் நீடிக்கிறாரோ அதுவரை அமைச்சரவை தொடரும்.
- சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டால் மாநில அமைச்சரவை இராஜினாமா செய்ய வேண்டும்.
- அரசியலமைப்பு சட்டப்பிரிவு 163 ஆளுநருக்கு ஆலோசனைகள் வழங்க அமைச்சரவையை உருவாக்க வழிவகை செய்திருக்கிறது.
- சட்டப்பிரிவு 163(1) ன் படி, முதலமைச்சரை தலைவராகக் கொண்ட அமைச்சரவை ஆளுநருக்கு தேவைப்படும் பொழுது உதவி செயயவும் ஆலோசனை வழங்கவும் வேண்டும்.

அமைச்சர்களுடனான மற்ற விதிகள்

- சட்டப்பிரிவு 164(1), ஆளுநரால் முதலமைச்சர் நியமிக்கப்படுவதைக் கூறுகிறது. மற்றும் முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் மற்றும் அமைச்சர்களையும் நியமிக்க வகை செய்கிறது.
- ஆளுநர் விரும்பும் வரை முதலமைச்சர் பதவியில் தொடரலாம். முதலமைச்சர் உட்பட மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கை மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 15 விழுக்காட்டை தாண்டக்வடாது என சட்டப்பிரிவு 164(1அ) கூறுகிறது.
- **அமைச்சரவையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**
    1. மாநில அரசிற்கான கொள்கைகளை உருவாக்கி அவற்றை திறம்பட நடைமுறைப்படுத்துகிறது.
    2. சட்டமன்ற நிகழ்ச்சிகளை முடிவு செய்து எல்லா முக்கியமான மசோதாக்களக்கும் ஆதரவளிக்கிறது.
    3. நிதிக்கொள்கையைக் கட்டுப்படுத்துவதுடன் மாநில பொது நலனுக்கான வரிக்கொள்கையை முடிவு செய்கிறது.
    4. சமூக, பொருளாதா மாற்றங்களுக்கான நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களை உருவாக்கி அதன்படி மாநில அரசின் தலைமையில் பல்வேறு தொடர்புடையதுறைகள் உருவாக்கப்படுகின்றன.
    5. முக்கியமான துறைத் தலைவர்களின் நியமனங்களைச் செய்கிறது.
    6. மற்ற மாநிலங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி மேற்கொள்கிறது.
    7. கீழ் நீதிமன்ற நீதிபதிகளின் நியமனங்களில் ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறது.
    8. மாநிலத்திற்கான செலவுகளைச் சமாளிக்க திட்ட அறிக்கையை உருவாக்குகிறது.
    9. ஒரு மசோதா சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் போது அது சாதாரண மசோதாவா அல்லது நிதி மசோதாவா என்று தீர்மானிக்கிறது.
    10. அமைச்சரவையின் ஒவ்வொரு அமைச்சரின் பணிகளைக் கட்டுப்படுத்தி, கண்காணித்து ஒருங்கிணைக்கின்றது.
    11. ஆண்டு வரவு செலவு திட்டம் அமைச்சரவையால் இறுதி செய்யப்படுகிறது.

மாநில சட்டமன்றம்

- இந்திய அரசியலமைப்பு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு சட்டமன்றம் ஏற்பட வகை செய்கிறது. பெரும்பாலான மாநிலங்கள் ஓரவையைக் கொண்ட சட்டமன்றங்களை மட்டும் பெற்றுள்ளன.
- சில மாநிலங்கள் ஈரவை சட்டமன்றங்களைக் கொண்டுள்ளன. (எ.கா. பீகார், கர்நாடாக, மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா மற்றும் ஜம்மு – காஷ்மீர்).
- கீழவையானது மாநில மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டது. மேலவையானது ஆசிரியர்கள், பட்டதாரிகள், மற்றும் உள்ளாட்சி உறுப்பினர்கள் ஆகியோர்களைப் பிரதிநிதிகளாகக் கொண்டது.

- தமிழகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் படி (234 உறுப்பினர்கள்) அமைச்சர்களின் எண்ணிக்கை 36 வரை இருக்கலாம். அதாவது 234 ல் 15 விழுக்காடு.

சட்டமன்றம் பேரவை (கீழவை)

- மாநில சட்டமன்றம் பிரபலமான ஓர் அவை ஆகும். இதுவே மாநில அதிகாரத்தின் உண்மையான அதிகார மையமாகும்.
- இது வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது.
- சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, மக்கள் தொகையைப் பொறுத்து மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகபட்சம் 500க்கு மிகாமலும் குறைந்த பட்சம் 60க்கு குறையாமலும் இருக்க வேண்டும்.
- சட்டமன்றத்தின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும். இருப்பினும் 5 ஆண்டுகள் முடியும் முன்னரே சட்டமன்றம் கலைக்கப்படலாம்.
- சட்ட மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அம்மாநில சட்டமன்ற கீழவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 3–ல் 1 பங்குக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- ஆனால் மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 40க்கு குறையாமல் இருக்க வேண்டும். (ஜம்மு – காஷ்மீர் தவிர) நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் காஷ்மீர் சட்ட மேலவையில் 36 உறுப்பினர்களே உள்ளனர்.
- சட்ட மேலவை உறுப்பினர்கள் மாநில சட்டமன்றத்தால் அவ்வப்போது நிறைவேற்றப்படும் சட்டங்கள் மூலம் தங்களது ஊதியம் மற்றும் படிகளைப் பெறுகின்றனர்.

சட்டமன்றத்தின் அமைப்பு

- தமிழக சட்டமன்றம் 235 உறுப்பினர்களைக் கொண்டது. இவர்களில் 234 உறுப்பினர்கள் வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- ஆங்கிலோ–இந்தியன் வகுப்பினரில் ஒருவர் ஆளுநரால் நியமனம் செய்யப்படுகிறார். அட்டவணைப்படுத்தப்பட்டோர் (தாழ்த்தப்பட்டோர்) மற்றும் பழங்குடியினருக்கு சட்டமன்றத் தேர்தலில் தனித் தொகுதிகள் ஒதுக்கப்படுகின்றன.

அமைச்சரவை மற்றும் அமைச்சரவை குழுக்கள்

- அமைச்சரவை என்ற சிறிய அமைப்பானது அமைச்சரவையின் உட்கரு ஆகும். இது காபினெட் அமைச்சர்களை மட்டும் உள்ளடக்கியது.
- இதுவே மாநில அரசின் உண்மையான அதிகார மையமாக விளங்குகிறது.
- அமைச்சரவை குழுக்கள் எனப்படும் வெவ்வேறு குழுக்கள் மூலம் காபினெட் செயலற்றுகிறது. அவற்றில் இரண்டு வகைகள் உள்ளன. அவை ஒன்று நிரந்தரமானது மற்றொன்று தற்காலிகமானது ஆகும்.

சபாநாயகர்

- சட்டமன்ற உறுப்பினர்களிடையே சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சபாநாயகர் தனது பதவியை இராஜினாமா செய்தால் சட்டமன்ற உறுப்பினராக தொடர முடியாது.
- சபாநாயகர் எந்நேரத்திலும் இராஜினாமா செய்யலாம். சட்டமன்றம் ஒரு தீர்மானத்தின் மூலம் 14 நாட்கள் அறிவிப்பு கொடுத்த பிறகு சபாநாயகரைப் பதவி நீக்கம் செய்யலாம்.
- அதற்கு முன் சபாநாயகரைப் பதவி நீக்கம் செய்யும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடக்கும் நேரத்தில் அவைக்கு வந்த பெரும்பாலான உறுப்பினர்கள் வாக்களித்து தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்.
- சட்டமன்றம் கலைக்கப்படும்பொழுது சபாநாயகர் தமது பதவியை இழக்க மாட்டார். மேலும் புதிய சட்ட மன்றத்தின் முதல் கூட்டம் வரை தனது பதவியைத் தொடர்கிறார்.
- சபாநாயகர் இல்லாதபோது அவரது பணியைத் துணை சபாநாயகர் மேற்கொள்கிறார்.

சட்ட மன்ற மேலவை (சட்ட மேலவை)

- சட்ட மேலவை என்பது மாநில சட்டமன்றத்தின் மேலவையாகும். இது ஒரு நிரந்திர அவையாகும்.
- சட்ட மேலவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை அம்மாநில சட்டமன்ற பேரவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் 3–இல் 1 பங்குக்கு மிகாமலும் குறைந்த பட்ச எண்ணிக்கை 40 க்கு குறையாமலும் இருக்க வேண்டுமென அரசியலமைப்பு சட்டப்பிரிவு 171 (1) கூறுகிறது.
- சட்டமேலமை (விதான் பரிஷத்) இந்திய மாநில சட்டமன்றங்களில் ஓர் அங்கமாக செயல்படுகிறது.

- இந்தியாவின் 29 மாநிலங்களில் 7 மாநிலங்களில் சட்டமேலவை உள்ளது.
- ஈரவை சட்டமன்றத்தில் மறைமுகத் தேர்தலால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் சட்ட மேலவையில் செயலாற்றுகின்றனர்.
- சட்ட மேலவை ஒரு நிரந்தர அவையாகும். ஏனென்றால், இதனை கலைக்க முடியாது. சட்ட மேலவை உறுப்பினர்களின் பதவி காலம் 6 ஆண்டுகள் ஆகும்.
- 1986 இல் இயற்றப்பட்ட தமிழ்நாடு சட்ட மேலவை (நீக்கம்) மசோதா மூலம் தமிழ்நாட்டில் சட்ட மேலவை நீக்கப்பட்டது. இச்சட்டம் 1986 நவம்பர் 1 அன்று நடைமுறைக்கு வந்தது.
- ஒவ்வொரு இரண்டாண்டிற்கும் மூன்றில் 1 பங்கு உறுப்பினர்கள் ஓய்வு பெறுவர். ஒருவர் சட்ட மேலவை உறுப்பினராவதற்கு அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 30 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
- தெளிவான மனநிலை உடையவராக இருத்தல் வேண்டும் பெற்ற கடனைத் திரும்ப செலுத்த முடியாதவராக இருத்தல் கூடாது மற்றும் எந்த மாநிலத்தில் போட்டியிடுகிறாரோ அம்மாநில வாக்காளர் பட்டியலில் அவரது பெயர் இடம் பெற்றிருக்க வேண்டும்.

சட்ட மேலவைக்கான தேர்தல்

- மூன்றில் 1 பங்கு உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- பன்னிரண்டில் 1 பங்கு உறுப்பினர்கள் பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- பன்னிரெண்டில் 1 பங்கு உறுப்பினர்கள் பட்டதாரி ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மூன்றில் 1 பங்கு உறுப்பினர்கள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- ஆறில் 1 பங்கு உறுப்பினர்கள் கலை, இலக்கியம், அறிவியல், சமூக சேவை, மற்றும் கூட்டுறவு இயக்கம் இவற்றில் சிறந்து விளங்குபவர்களை ஆளுநர் நேரடியாக நியமனம் செய்கிறார்.

தலைவர்

- மேலவைத் தலைவர் மேலவை கூட்டத்தைத் தலைமையேற்று நடத்துகிறார். மேலவை உறுப்பினர்களிடையே தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- தலைவர் இல்லாதபோது துணைத்தலைவர் கூட்டத்தைத் தலைமையேற்று நடத்துகிறார்.

சட்டமேலவை உருவாக்கம் அல்லது நீக்கம்

- சட்ட மேலவை உருவாக்கம் அல்லது நீக்கம் பற்றி சட்டப்பிரிவு 169 விவரிக்கிறது. இப்பிரிவின்படி, சட்டமன்றத்தின் மொத்த உறுப்பினர்கள் வாக்களித்து தீர்மானத்தை நிறைவேற்றி சட்டமேலவையை உருவாக்கவோ அல்லது நீக்கவோ நாடாளுமன்றம் ஒரு சட்டத்தின் மூலம் மேலவையை உருவாக்கும் அல்லது நீக்கும்.

சட்டமன்றத்தின் செயல்பாடுகள்

- சட்டமன்றத்தின் அதிகாரங்களும் செயல்பாடுகளும் பெரும்பாலும் நாடாளுமன்றத்தைப் பின்பற்றியே உள்ளன.

சட்டமன்ற அதிகாரங்கள்

- அரசியலமைப்பின்படி மாநிலப் பட்டியலிலுள்ள அனைத்துத் துறைகள் மீதும் சட்டமன்றம் சட்டத்தை நிறைவேற்றலாம். பொதுப்பட்டியலிலும் சட்டமன்றம் சட்டம் இயற்றலாம்.
- ஆனால் அதே சட்டத்தை மத்திய அரசு இயற்றும்பொழுது மாநில அரசின் சட்டம் செயலற்றதாகி விடும்.
- மத்திய நாடாளுமன்ற நடைமுறையைப் போன்றே மாநில சட்டமன்றத்தின் மசோதாவும் சட்டமாக நிறைவேற்றுகிறது.
- ஒவ்வொரு மசோதாவும் சட்டமன்றத்தில் மூன்று நிலைகளுக்குப் பிறகே நிறைவேறுகிறது. ஆளுநரின் ஒப்புதலுக்குப் பின்பு அம்மசோதா சட்டமாகிறது.

நிதி அதிகாரங்கள்

- சட்டமன்றம் மாநிலத்தின் நிதி நிலையைக் கட்டுப்படுத்துகிறது. சட்டமன்றக் கீழவையானது மேலவையைக் காட்டிலும் பண நடவடிக்கைகளில் அதிக அதிகாரத்தைப் பெற்றுள்ளது.
- பண மசோதா கீழவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். சட்டமன்றக் கீழவையின் அனுமதியின்றி புதிய வரிகளை விதிக்க முடியாது.

நிர்வாகத் துறையின் மீது கட்டுப்பாடுகள்

- சட்டமன்றம் நிர்வாகத் துறையைக் கட்டுப்படுத்துகிறது. அமைச்சரவையானது சட்டமன்றத்திற்குப் பொறுப்பானது.
- சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிக்க வேண்டும். அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டால் அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவர்.

பரந்த அதிகாரங்கள்

- சட்டமன்றம் ஈரவைகளைப் பெற்றிருக்கும் பொழுது மேலவையைக் காட்டிலும் சட்டமன்றக் கீழவை அதிக அதிகாரங்களுடன் விளங்குகிறது. சட்டமன்றப் பேரவை மாநில நிதிநிலையை முற்றிலும் கட்டுப்படுத்துகிறது. மேலவை நிதி சார்ந்த நடவடிக்கையில் வாக்களிக்க முடியாது.

மாநில நீதித்துறை

உயர் நீதிமன்றங்கள்

- 1862 இல் உயர் நிதிமன்றங்கள் கல்கத்தா, பம்பாய் மற்றும் சென்னையில் தோற்றுவிக்கப்பட்டன. காலப்போக்கில் பிரிட்டிஷ் இந்தியாவின் ஒவ்வோர் மாகாணமும் ஓர் உயர் நீதிமன்றத்தைக் கொண்டிருந்தது.
- 1950 க்குப் பிறகு தோற்றுவிக்கப்பட்ட உயர் நீதிமன்றங்கள் அண்டை மாநிலங்களுக்கும் உயர் நீதிமன்றமாக விளங்கியது.
- மாநில அளவில் உயர் நீதிமன்றங்களே மிக உயர்ந்த நீதிமன்றமங்களாகும். இருப்பினும் உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் உயர் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.
- இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் உயர் நீதிமன்றத்தைத் தோற்றுவிக்க வழிவகுக்கிறது.
- ஆனால் 1956 ஆம் ஆண்டு ஏழாவது திருத்தச்சட்டம், இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாநிலங்கள் அல்லது யூனியன் பிரதேசங்களுக்கென்று ஒரு பொதுவான உயர் நீதிமன்றத்தை நிறுவ நாடாளுமன்றத்திற்கு அங்கீகாரம் வழங்கியது.
- 1862 ஆம் ஆண்டு சூன் 26 ஆம் நாளில் விக்டோரிய மகாராணி வழங்கிய காப்புரிமை கடிதத்தின் மூலம் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மாகாணங்களில் உயர் நீதிமன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவற்றில் சென்னை உயர் நீதிமன்ற வளாகம் உலகிலேயே இலண்டனுக்கு அடுத்து இரண்டாவது பெரிய நீதித்துறை வளாகமாகும்.
- பஞ்சாப் , ஹரியானா மற்றும் யூனியன் பிரதேசமான சண்டிகர் ஆகிய பகுதிகளுக்குச் சண்டிகரிலுள்ள உயர்நீதிமன்றம் பொதுநீதிமன்றமாக உள்ளது.
- கவுகாத்தியிலள்ள உயர் நீதிமன்றம் ஏழு வடகிழக்கு மாநிலங்களான அஸ்ஸாம், நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், மேகாலாய, திரிபுரா மற்றும் அருணாச்சலபிரதேசம் போன்றவைகளுக்கு பொது நீதிமன்றமாக உள்ளது.
- டெல்லி ஒரு மாநிலமாக இல்லாத போதும் தனக்கென்று சொத்மாக ஓர் உயர்நீதிமன்றத்தைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு நீதிமன்றமும் தலைமை நீதிபதி மற்றும் பல நீதிபதிகளைக் கொண்டுள்ளது.
- உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும். உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை குடியரசுத் தலைவரால் தீர்மானிக்கப்படுகிறது.
- தற்போது இந்தியாவில் 29 மாநிலங்கள் (2019 சனவரியில் தோற்றுவிக்கப்பட்டு அமராவதியில் இயங்கும் ஆந்திரப்பிரதேசத்தின் புதிய உயர்நீதிமன்றத்தையும் சேர்த்து) மற்றும் 7 யூனியன் பிரதேசங்களுக்கும் சேர்த்து 25 உயர்நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

நீதிபதிகளின் நியமனம்

- சட்டப்பிரிவு 216 ன்படி ஒவ்வொரு உயர் நீதிமன்றத்திற்கும், தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகளை குடியரசுத் தலைவர் காலத்திற்கேற்றவாறு நியமனம் செய்கிறார்.

உயர்நீதிமன்ற நீதி வரையறை மற்றும் அதிகாரங்கள்

தனக்கேறிய நீதிவரையறை

- சென்னை, பம்பாய், கல்கத்தா நீதிமன்றங்கள் தங்களுக்கான நீதிவரையறை அதிகாரங்களுடன் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களையும் பெற்றுள்ளன. அதேவேளையில் மற்ற நீதிமன்றங்கள் பெரும்பாலும் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களை மட்டுமே பெற்றுள்ளன.
- முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள், உயில், திருமணம் சார்ந்த வழக்குகள் மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் ஆகியவற்றை மட்டும் நேரடியாக விசாரிக்கும் அதிகாரங்களை இவை பெற்றுள்ளன.
- மாகாண நீதிமன்றங்கள் தன் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ரூபாய் 2000 மற்றும் அதற்கு மேற்பட்ட தொகை மதிப்புடைய குற்றவியல் வழக்குகளை தனக்கே உரிய நீதிவரையறையை பயன்படுத்தி மாகாண நீதிபதிகள் விசாரிக்க முடியும்.

மேல்முறையீட்டு நீதிவரையறை

- உயர் நீதிமன்றங்கள் தங்களிடம் வரும் மேல்முறையீட்டு வழக்குகளையும் கீழ் நீதிமன்றங்களிலிருந்து வரும் மேல்முறையீட்டு வழக்குகளையும் (உரிமையியல், குற்றவியல்) விசாரிக்கின்றன.
- நாட்டின் இராணுவ தீர்ப்பாயங்களின் கீழ்வரும் ஆயுதம் சார்ந்த வழக்குகளை விசாரிக்க இவைகளுக்கு அதிகாரம் இல்லை.

பேராணை அதிகாரங்கள்

- இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 226, அடிப்படை உரிமைகளுக்காக மட்டுமின்றி மற்ற நோக்கங்களுக்காவும் பேராணைகளை வெளியிடும் அதிகாரங்களை உயர் நீதிமன்றமங்களுக்கு வழங்குகிறது.
- சட்டப்பிரிவு 32ன் கீழ் உச்ச நீதிமன்றம் வழங்கும் நீதிப்பேராணைகள், ஆணைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் போன்றே உயர் நீதிமன்றமும் அவைகளை வழங்க அதிகாரம் பெற்றுள்ளது.
- இந்த சட்டப்பிரிவுகளின் கீழ் நீதிப்பேராணைகள் வெளியிட உயர் நீதிமன்றங்களுக்கு வழங்கிய அதிகாரம் பெரியதாகும், அடிப்படையில் உரிமைகள் மீறப்பட்டால் மட்டுமே உச்ச நீதிமன்றம் இவைகளை வெளியிடுகிறது. உயர் நீதிமன்றம் இது போன்ற வழக்குகளில் மட்டுமின்றி சாதாரண சட்டமீறலுக்கும் நீதிப்பேராணைகளை வெளியிட முடியும்.
  - **ஆட்கொணர்வு நீதிப்பேராணை (Habeas corpus)–** சட்டத்திற்கு புறம்பாக ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து இது பாதுகாக்கிறது. தவறாக ஒருவர் காவலில் வைக்கப்பட்டால் நீதிமன்ற காவலில் வைத்த அதிகாரிக்கோ அரசாங்கத்திற்கோ ஆணை வழங்கி காவலில் வைக்கப்பட்டவரை நீதிமன்றத்தின் முன் கொண்டுவரச் செய்வதாகும். காவலில் வைக்கப்பட்டால் நீதிமன்ற ஆணை மூலம் விடுவிக்கப்படுவார்.
  - **கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை– (Mandamus)** மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனுதொடர்பான பணியினைச் சம்மந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும். கீழ் நீதிமன்றங்களுக்கு உயர் நீதிமன்றம் இடும் ஆணை ஆகும். ஓர் அரசு அலுவலர் அல்லது ஒரு கழகம் அல்லது மற்ற நிறுவனங்கள் பணியை விரைந்து நிறைவேற்றுமாறு கீழ் நீதிமன்றங்களுக்கு உயர் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது. இதனால் தடைப்பட்ட பணிகள் விரைந்து முடிக்கப்படுகின்றன.
  - **தடையுறுத்தும் நீதிப்பேராணை (prohibition) –** ஒரு கீழ்நீதிமன்றம் தனது, சட்ட எல்லையைத் தாண்டி செயல்படுவதைத் தடுக்கிறது.
  - **ஆவணக் கேட்பு பேராணை(certiorari) –** உயர்நீதிமன்றம், ஆவணங்களை நியாயமான பரிசீலனைக்கு தனக்கோ அல்லது உரிய அதிகாரிக்கோ அனுப்பச் செய்ய கீழ் நீதிமன்றங்களுக்கு இடும் ஆணை ஆகும். கீழ் நீதிமன்றங்களிடமிருந்து வழக்கு சம்பந்தமான ஆவணங்கள், ஆதாரங்கள், கோப்புகள் ஆகியவற்றை உயர் நீதிமன்றங்கள் கேட்டுபெறும் ஆணை இதன்மூலம் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் உறுதி செய்யப்படுகின்றன.
  - **தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (Quo – warranto)–** இப்பேராணை சட்டத்திற்குப் புறம்பாக தகாத முறையில் அரசு அலுவலகத்தைக் கைப்பற்றுவதை தடை செய்கிறது. பொதுப்பதவிக்கு தவறாக ஒருவரை இது தடுக்கிறது. இதன்படி ஒருவர் அவர் எந்த அடிப்படையில் குறிப்பிட்டப் பதவியை வகிக்கிறார் என்பதை தெளிவுபடுத்திக் கோரும் நீதிப்பேராணை ஆகும்.

மேற்பார்வை அதிகாரம்

- இராணுவ நீதிமன்றங்களைத் தவிர மற்ற அனைத்து சார்பு நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்களின் பணிகளை மேற்பார்வையிடும்அதிகாரத்தை உயர் நீதிமன்றம் பெற்றுள்ளது.
  1. கீழ் நீதிமன்றங்களில் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை திரும்ப பெறும் அதிகாரம்.
  2. பொதுச் சட்டங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட படிவங்கள் மூலம் பயிற்சி மற்றும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த ஓர் ஆணையை வெளியிடச் செய்தல்
  3. பரிந்துரைக்கப்பட்ட முறைகளில் கீழ் நீதிமன்றங்கள் புத்தகங்கள், பதவிகள், கணக்குகளைப் பராமரித்தல்.
  4. ஷெரிப் , எழுத்தாளர்கள் , அலுவலர்கள் மற்றும் சட்ட வல்லுநர்கள் ஆகியோருக்கான கட்டணத்தைச் செலுத்துல் போன்றவை குறித்துத் தீர்மானித்தல்.

கீழ் நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்துதல்

- உயர் நீதிமன்றம் கீழ் நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தவும் மேலும் மற்ற அதிகாரங்களையும் பெற்றுள்ளன.
  1. மாவட்ட நீதிபதிகளின் நியமனம் மற்றும் பதவி உயர்வு குறித்து ஆளுநரால் ஆலோசிக்கப்படுகிறது. மாவட்ட நீதிபதிகளைத் தவிர, மற்ற நீதிப்பணிகளுக்கு நியமனம் செய்வது குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்படுகிறது.
  2. உயர்நீதிமன்ற நீதிபதிகளின் பதவி, நியமனம், பதவி உயர்வு, விடுமுறை, இடமாற்றம் மற்றும் ஒழுங்கு குறித்து விவரிக்கிறது. (மாவட்ட நீதிபதிகள் நீங்கலாக)
  3. சார் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கினை உயர் நீதிமன்றம் விசாரித்து கணிசமான கேள்விகளைக் கேட்டு குறுக்கு விசாரணை செய்வதால் வழக்கு தாமாகவே முடிவுக்கு வரும் அல்லது வழக்கின் தீர்ப்புடன் மீண்டும் சார் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும்.

4. உச்ச நீதிமன்றம் இந்தியாவின் அனைத்து நீதிமன்றங்களையும் சார்நிலை நீதிமன்றங்களை தனது ஆணையினால் கட்டுப்படுத்துகின்றது.

ஆவணங்களின் பாதுகாப்புப் பெட்டகம்.

- 🕮 உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அனைத்து முடிவுகள் மற்றும் தீர்ப்புகள் அச்சடிக்கப்பட்டு சான்றாதரமாக பாதுகாக்கப்படுகின்றன.
- 🕮 எதிர்காலத்தில் எழும் கேள்விகளுக்கு தீர்வாக கடந்த கால தீர்ப்புகள் உதவுகின்றன. இதனால் உயர் நீதிமன்றம் பதிவேடுகளில் நீதிமன்றமாக செயல்படுகிறது.

நீதிப்புணராய்வு அதிகாரம்

- 🕮 நீதிப்புணராய்வு என்பது மத்திய–மாநில அரசுகள் இயற்றும் சட்டங்கள் அரசியலமைப்புக்கு உட்பட்டதா அல்லதா முரண்பட்டதா என்பதை ஆராய உயர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட ஓர் அதிகாரமாகும்.
- 🕮 நீதிப்புனராய்வு என்ற சொல் இருப்பினும் அரசியலமைப்பில் பயன்படுத்தப்படவில்லை.
- 🕮 226 மற்றும் 227 வது சட்டப்பிரிவுகள் உயர் நீதிமன்றத்தின் நீதிப்புனராய்வு அதிகாரம் பற்றி வெளிப்படையாக கூறுகிறது.
- 🕮 1976 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 42 ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் உயர் நீதிமன்ற நீதிப்புனராய்வு அதிகாரத்தைக் குறைந்தது மற்றும் தடை செய்தது.
- 🕮 இருப்பினும் 1977 ஆம் ஆண்டு 43 வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் மீண்டும் உயர் நீதிமன்றத்திற்கு நீதிப்புனராய்வு அதிகாத்தை வழங்கியது.

பன்முகைத்தன்மையை அறிவோம்

- ❖ இந்தியா ஏறத்தாழ ஐந்தாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த நாகரிகத்தின் தாயகமாக விளங்குகிறது. இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு வளங்களால் ஈர்க்கப்பட்டு உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து பல்வேறு இன மக்கள் வந்தனர். சிலர் உள்ளூர் மக்களுடன் சேர்ந்து வணிகம் செய்யவும். மற்றவர்கள் படையெடுப்பு காரணமாகவும் இந்தியாவிற்கு வருகை தந்தனர். நில வழியாகவும் கடல் வழியாகவும் பல் வேறு இன மக்கள் இந்தியாவிற்குள் இடம் பெயர்ந்தனர். ஆகையால் திராவிடர்கள், நீக்ரிட்டோக்கள், ஆரியர்கள், ஆல்பைன்கள் மற்றும் மங்கோலியர்கள் போன்றோர் நவீன இந்திய இனத்தவரின் ஒரு பகுதியாக உள்ளனர்.

- ❖ இந்தியாவில் காணப்படும் பன்முகத்தன்மையினை பின்வரும் தலைப்புகளில் காணலாம்
  - நில அமைப்புகள் மற்றும் வாழ்வியல்முறை
  - சமூகப் பன்முகத்தன்மை
  - சமூகப் பன்முகத்தன்மை
  - சமயப் பன்முகத்தன்மை
  - மொழிசார் பன்முகத்தன்மை
  - பண்பாட்டுப் பன்முகத்தன்மை

- ❖ ஒரு பகுதியின் பொருளாதார நடவடிக்கைகளை அதன் நிலவியல் மற்றும் காலநிலை கூறுகள் தான் தீர்மானிக்கின்றன.
- ❖ மேகலாயாவில் உள்ள மௌசின்ராம் அதிக மழை பொழியும் பகுதியாகும்.
- ❖ ராஜஸ்தானில் உள்ள ஜெய்சால்மார் குறைவான மழைப்பொழியும் பகுதி ஆகும்.
- ❖ இந்தியாவின் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியா 122 முக்கிய மொழிகளையும், 1599 பிற மொழிகளையும் கொண்டுள்ளது. இந்தோ—ஆரியன், திராவிடன், ஆஸ்ட்ரோ ஆஸ்டிக், சீனதிபெத்தியன் ஆகிய நான்கும் முக்கிய மொழி குடும்பமாகும், தமிழ் மொழியானது பழமையான திராவிட மொழியாகும்.

இந்தியாவில் பேசப்படும் முதல் ஐந்து மொழிகள் (2001-ன் கணக்கெடுப்பின்படி)	
மொழி	மொத்த மக்கள்தொகை சதவிகிதம்
இந்தி	41.03
வங்காளம்	8.10
தெலுங்கு	7.19
மராத்தி	6.99
தமிழ்	5.91

- இந்தியா அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையின்படி 22 மொழிகள் அலுவலக மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு இந்திய அரசால் முதல் செம்மொழியாக தமிழ் மொழி அறிவிக்கப்பட்டது. தற்போது 6 மொழிகள் செம்மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் புகழ்பெற்ற நடனங்கள்:- பண்டைய காலங்களில் நடனம் என்பது வழிபாடு மற்றும் கொண்டாட்டத்திற்கான வழியாகவும், மகிழ்ச்சி மற்றம் நன்றியை வெளிப்படுத்துவதற்கான பாவனையாகவும் கருதப்படுகிறது. இந்திய நடனங்கள் மூலம் நமது உயர்ந்த பண்பாடு வெளிப்படுகிறது.
- இந்திய தொல்லியல் துறை இதுவரைகண்டுபிடித்த கல்வெட்டுச் சான்றுகளில் 60 சதவிகிதம் தமிழ்நாட்டில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டவை ஆகும். அவற்றில் பெரும்பான்மையானவை தமிழ் மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன.

நடனத்தின் வகை	மாநிலம்
கதக்	வட இந்திய
சத்ரியா, பிகு	அசாம்
மணிப்பூரி	மணிப்பூர்
யக்ஷகானம்	கர்நாடாக
ஒடிசி	ஒடிசா
குச்சிப்புடி	ஆந்திர பிரதேசம்
கதகளி, தெய்யம், மோகினியாட்டம்	கேரளா
பரதநாட்டியம், கரகாட்டம், ஒயிலாட்டம், கும்மி, தெருக்கூத்து, பொம்மலாட்டம், புலியாட்டம், கோலாட்டம், தப்பாட்டம்.	தமிழ்நாடு
தாண்டியா, கார்பா	குஜராத்
ராசலீலா, சோலியா	உத்திரப்பிரதேசம்
பங்க்ரா	பஞ்சாப்
தும்ஹால்	ஜம்மு மற்றும் காஷ்மீர்
கல்பேலியா, கூமர்	ராஜஸ்தான்

- இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை உள்ள நாடாக விளங்குகிறது. இச்சொற்றொடரானது நமது சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருவின் "டிஸ்கவரி ஆப் இந்தியா" என்ற நூலில் இடம்பெற்றுள்ளது.
- இந்தியாவில் பல்வேறு இன மக்கள் காணப்படுவதால், இந்தியாவை "இனங்களின் அருங்காட்சியம்" என வரலாற்றாசிரியர் வி.ஏ. ஸ்மித் அவர்கள் கூறியுள்ளார்.
- எந்த ஒரு குடிமகனுக்கும் எதிராக மதம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் என்ற அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது என்று இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 15(1) அறிவுறுத்துகிறது.
- இந்தியாவில் சமத்துவமின்மை மற்றும் பாகுபாட்டிற்கான மிக முக்கிய காரணம் சாதி முறை ஆகும். ஆரம்ப காலங்களில் சமுதாயம் என்பது தொழில் அடிப்படையில் பல்வேறு குழுக்களாக பிரிக்கப்பட்டிருந்ததையே வர்ணாசிரம முறை என அறியப்பட்டது.

டாக்டர் பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கார்

- இவர் பாபா சாஹேப் என பிரபலமாக அழைக்கப்படுகிறார். இவர் இந்திய சட்ட நிபுணராகவும், பொருளாதார நிபுணராகவும், அரசியல்வாதியாகவும், சமூகச் சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார்.
- இவர் 1915இல் எம்.ஏ பட்டத்தை பெற்றார். பின்னர் 1927 இல் கொலம்பிய பல்கலைகழகத்தில் பி.எச்.டி பட்டத்தை பெற்றார். அதற்கு முன்னர் இலண்டன் பொருளாதார பள்ளியில் டி.எஸ்.சி பட்டத்தை பெற்றிருந்தார்.
- இவர் அரசியலமைப்பு நிர்ணய சபையின் வரைவு குழுவின் தலைவராக இருந்தார். எனவே, இந்திய அரசியலமைப்பின் தந்தையாக கருதப்படுகிறார்.
- இவர் சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகப் பணியாற்றினார். இவரது மறைவிற்கு பின்னர் 1990, ஆம் ஆண்டு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.

எழுத்தறிவு விகிதம்--2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு					
அதிகம்			குறைவு		
வ.எண	மாவட்டத்தின் பெயர்	விகிதம்	வ.எண்	மாவட்டத்தின் பெயர்	விகிதம்
1	கன்னியாகுமரி	91.75	1	தருமபுரி	68.54
2	சென்னை	90.18	2	அரியலூர்	71.34
3	தூத்துகுடி	86.16	3	கிருஷ்ணகிரி	71.46
4	நீலகிரி	85.20	4	விழுப்புரம்	71.88

பாலின விகிதம்-2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு தலா ஆயிரம் ஆண்களுக்கு நிகரான பெண்களின் எண்ணிக்கை					
அதிகம்			குறைவு		
வ.எண்	மாவட்டத்தின் பெயர்	பாலின விகிதம்	வ.எண்	மாவட்டத்தின் பெயர்	பாலின விகிதம்
1	நீலகிரி	1041	1	தருமபுரி	946
2	தஞ்சாவூர்	1031	2	சேலம்	954
3	நாகப்பட்டிணம்	1025	3	கிருஷ்ணகிரி	956
4	தூத்துக்குடி	1024	4	இராமநாதபுரம்	977

- ஒரு அரசியலமைப்பு என்பது நாட்டின் நிர்வாகத்தை வழிநடத்தும் விதிகள் மற்றும் விதிமுறைகளின் தொகுப்பாகும். இந்திய அரசியலமைப்பின் 14வது பிரிவு சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்கிறது. மேலும் நாட்டிற்குள் வசிக்கும் அனைவருக்கும் பாதுகாப்பினை தேவையற்ற பாகுபாட்டினையும் தடைசெய்கிறது.
- **ஏ.பி. ஜே அப்துல் கலாம் (1931-2015)** அவுல் பகீர் ஜெய்னுலாப்தீன் அப்துல் கலாம் இராமேஸ்வரத்தில் தமிழக இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்தார். இவர் இந்தியாவின் பதினோறாவது குடியரசுத் தலைவராக பணியாற்றினார். இவர் மக்களின் குடியரசுத் தலைவர் என்று அன்புடன் நினைவு கூறப்படுகிறார்.
- இவர் இந்தியாவின் மிக உயர்ந்த விருதான பாரத ரத்னா (1997) உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார். இவர் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார், அவற்றுள் புகழ் பெற்றவை இந்தியா-2020, அக்னிச்சிறகுகள், எழுட்சி தீபங்கள், தி லூமினஸ் பார்க், மிஷன் இந்தியா,
- இவரது சிறந்த பணியால் "இந்தியாவின் ஏவுகனை மனிதர்" என்ற பட்டத்தை அவருக்கு அளித்தது.
- **செல்வி செ. இளவழகி** சென்னை வியாசர்பாடியில் பகுதியில் உள்ள ஏழ்மையான குடும்பத்தை சார்ந்தவர். இவரது தந்தை ஒரு ஆட்டோ ஓட்டுநர். 2008ஆம் ஆண்டில் பிரான்சின் கேன்ஸ் நகரில் பாலைஸ் தேஸ் விழாப் போட்டிகளில் தனது முதல் கேரம் சாம்பியன் பட்டத்தை வென்றார். அதே ஆண்டில் தேசிய கேரம் சாம்பியன் போட்டியில் முந்தைய உலக சாம்பியனான ரேஷ்மி குமாரியை தோற்கடித்து வெற்றிபெற்றார்.
- **விஸ்வநாதன் ஆனந்த்:-** இவர் சென்னையில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தார் அவரது தாயார் சதுரங்க விளையாட்டில் ஆர்வம் அதிகம் கொண்டிருந்தபடியால் ஆனந்திற்கும் ஐந்து வயதிலேயே சதுரங்க விளையாட்டை கற்றுக் கொடுத்தார். அதுவே அவரது எதிர்கால வாழ்க்கையில் சதுரங்க வீரராக திகழ அடிப்படையாக அமைந்தது. (ஆனந்த் 2000, 2007, 2008, 2010, மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சதுரங்க விளையாட்டின் உலகச் சாம்பியனாக விளங்கினார்)
- தனது 14வது வயதில் உலக இளையவர் சதுரங்கப் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றார். 1988 ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் கிராண்ட் மாஸ்டரானார். நாட்டில் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கபடும் உயரிய விருதான ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதை 1991-92 ல் பெற்ற முதல் வீரராவார். 2007 ஆம் ஆண்டில் நாட்டின் இரண்டாவது உயரிய விருதான பத்ம விபூஷன் விருதினை பெற்றார்.
- **மாரியப்பன் தங்கவேலு:-** மாரியப்பன் தமிழ்நாட்டின் சேலம் மாவட்டத்தில் பிறந்தவர் இவரது தாயார் தனி நபராக இருந்து செங்கல் சூளையில் வேலை செய்தும் காய்கறிகள் விற்பனை செய்தும் நாள் ஒன்றுக்கு ருபாய் 100 ஊதியம் பெற்று இவரை வளர்த்தார். இவருக்கு விபத்து காரணமாக வலது காலில் நிரந்தர பாதிப்பினை ஏற்படுத்தியது. இத்தகைய பின்னடைவு இருந்தபோதும் பள்ளிக்கல்வியினை முடித்தார். இவர் "நான் பிற மாணவர்களைவிட வேறுபாடு கொண்டவான் என நினைத்ததில்லை" எனக் கூறுகிறார். 2016 ஆம் ஆண்டு ரியோ பாராலிம்பிக் ஆண்கள் உயரம் தாண்டுதல் டி-42 போட்டியில் 1.89 மீட்டர் உயரம் தாண்டி தங்கப் பதக்கம் வென்றார்.
- சமத்துவம் என்பது தீண்டாமையை ஒரு குற்றமாகக் காண்பதாகும். இந்திய அரசியலமைப்புச் சட்ட பிரிவு 17ன் படி இந்தியாவில் தீண்டாமை ஒழிக்கப்பட்டது எந்த வகையிலும் தீண்டாமையைப் பின்பற்றுவது தடை செய்யப்பட்டுள்ளது
- தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் மயில் சரணாலயம் உள்ளது.
- கங்கை நதியின் நீளம்---2525 கி.மீ, பிரம்மபுத்திரா நதியின் நீளம் 3848 கி.மீ நீளமுடையது என்றாலும் அது இந்தியாவின் பாயும் தொலைவு குறைவுதான்.
- நமது நாட்டின் இயற்கை தேசிய சின்னங்களாக லாக்டோ பேசில்லஸ் 2012 ஆம் ஆண்டிலும் மாம்பழம் 1950 ம் ராஜநாகமும் (ஹோ.ஃபாகஸ் ஹானா) உள்ளன.
- தமிழகத்திற்கு மாநில விலங்கு—வரையாடு, மாநிலப் பறவை- மரகதப்புறா, மாநிலப் மலர்--செங்காந்தல் மலர், மாநில மரம்--பனை மரம்
- இந்திய தேசியக் கொடியை ஆந்திராவைச் சேர்ந்த பிங்காலி வெங்கைய என்பவர் வடிவமைத்தார்.
- விடுதலை இந்தியாவின் முதல் தேசியக் கொடி தமிழ்நாட்டில் உள்ள குடியாத்தத்தில் (வேலூர்) நெய்யப்பட்டது.
- இக்கொடியை ஜவஹர்லால் நேரு அவர்கள் (15-08-1947) செங்கோட்டையில் ஏற்றினார்.
- இக்கொடி தற்போது சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டை அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

- 1932 ஆம் ஆண்டு காந்தியை விடுதலை செய்யக்கோரி நடந்த போரட்டதில் கொடிகாத்த குமரன் ஈடுபட்டு இறந்தார்.
- **தேசிய உறுதிமொழி**:- இந்தியா எனது தாய்நாடு எனத் தொடங்கும் நமது தேசிய உறுதிமொழியைப் பிதிமாரி வெங்கட் சுப்பராவ் என்பவர் தெலுங்கில் எழுதினார்.தேசிய பாடலாக வந்தே மாதரத்தை ராஜேந்திர பிரசாத் அறிவித்தார்.
- இந்தியாவின் அதிகாரபூர்வ பணத்தின் பெயர் ருபாய், 16ஆம் நூற்றாண்டில் மன்னர் ஷெர்ஷா சூரி வெளியிட்ட வெள்ளி நாணத்துக்கு ருபியா என்று பெயர் . அதுவே ருபாய் என்று மருவியுள்ளது ருபாய்க்கான சின்னத்தை 2010ல் தமிழகத்தை சேர்ந்த உதயகுமார் வடிவமைத்தார்.
- **தேசிய நாள்காட்டி:-** பேரரசர் கனிஷ்கர் காலத்தில் கி.பி. 78 சக ஆண்டு முறை தொடங்கியது. இளவேனில் கால சம பகல்--இரவு நாளான மார்ச் 22 அன்று இந்த ஆண்டு தொடங்குகிறது. லீப் ஆண்டுகளில் இது மார்ச் 21 ஆக அமையும். புிரபல வான இயற்பியலாளர் மேக்னாத் சாகா தலைமையிலான நாட்காட்டி சீரமைப்புக் குழுவின் பரிந்துரையின் பேரில் 1957 மார்ச் 22 முதல் தேசிய நாட்காட்டி ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- நாடு விடுதலைபெற்ற அன்று மகாகவி பாரதியாரின் ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டுமே என்ற பாடலை அகில இந்திய வானொலியில் பாடிய பெருமையைப் பெற்றவர் கர்நாடக இசைப் பாடகி டி.கே. பட்டம்மாள்.
- இந்தியப் குடியரசு நாளின் மூன்றாவது நாளான ஜனவரி 29 அன்று பாசறைக்கு திரும்புதல் என்ற விழா சிறப்பாக நடைபெறும் அந்நாளில் தரைப்படை கடற்படை விமானப்படைச் சேர்ந்த இசைக்குழுவினர் நிகழ்ச்சிகளை நடத்துவர். குடியரசு தலைவர் இந்நிகழ்வின் முதன்மை விருந்தினர் ஆவார். இவ்விழாவின் ஒரு பகுதியாக மாலை 6மணிக்கு குடியரசுத் தலைவர் மாளிகை மின்விளக்குகளால் அலங்கரிக்கப்படும்.
- காந்தியின் பிறந்தநாளான அக்டோபர் 02 ஐ 2007 ஆம் ஆண்டு முதல் சர்வதேச அகிம்சை தினமாக ஐ.நா கொண்டாடி வருகிறது.
- பல மதங்கள், பல மொழிகள், பல இனங்கள், பண்பாடுகளைச் சேர்ந்த மக்கள் வாழும் ஒரு நாட்டில் அனைவரையும் சமத்துவமாக நிர்வகிப்பதற்கு வலுவான , தெளிவான சட்டங்களும் வழிமுறைகளும் தேவை. அதைத்தான் அரசமைப்புச்சட்டம் என்கிறோம்.
- நமது அரசியலமைப்பு சட்டம் 1950ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26வது நாள் நடைமுறைக்கு வந்தது அதைத்தான் நாம் குடியரசு தினமாக கொண்டாடுகிறோம். இதற்கு வேறு பல காரணங்களும் உண்டு 1929 ஆம் ஆண்டு லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் முழு சுயராஜ்ஜியத்தை அடைவது என்ற முழக்கம் வலுப்பெற்றது அதனைத் தொடர்ந்து 1930 ஜனவரி 26 அன்று முழு சுதந்திர நாளாகக் கொண்டாடப்படுகிறது. அதுவே நமது குடியரசுத் தினமாக ஆனது.
- அரசமைப்புச் சட்டம் ஒரு நாட்டிற்குத் தேவையான சில அடிப்படை விதிகள், கொள்கைகளை உருவாக்கி ஆவணப்படுத்துவதோடு, தனது குடிமக்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் செயல்பாடுகளை வரையறுக்கிறது.பிறகு அந்த சட்டத்தின் துணையோடு அந்த நாடு ஆளப்படும்.
- அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் நோக்கில் இந்தியாவின் பல்வேறு பகுதிகள், அரசியல் கட்சிகளை சேர்ந்த 389 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றம் என்ற அமைப்பு 1946 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது இதன் தலைவராக முனைவர் ராஜேந்திரபிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் உறுப்பினராக நேரு, சர்தார் வல்லபாய் படேல், மௌலான ஆசாத், ராதாகிருஷ்ணன், விஜயலட்சுமி பண்டிட், சரோஜினி நாயுடு, உட்பட பலர் இந்த அமைப்பில் இடம்பெற்றிருந்தனர். இந்த அமைப்பில் 15 பெண் உறுப்பினர்கள் இருந்தனர்.
- எட்டு பேர் கொண்ட அரசைப்புச் சட்ட வரைவுக்குழு உருவாக்கப்பட்டு அதன் தலைவராக அம்பேத்கார் தேர்ந்தெடுக்கப்பட்டடார். இதற்கான ஆலோசராக பி.என் ராவ் நியமிக்கப்பட்டார். இக்குழுவின் முதல் கூட்டம் 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 09 அன்று அரசைப்புச் சட்டத்தை எழுதும் வேலைகளை தொடங்கிவிட்டன.
- அண்ணல் அம்பேத்கார் இந்திய அரசைப்பின் தந்தை என அழைக்கப்படுகிறார்.
- இக்குழுவினர் 60க்கும் மேற்பட்ட நாடுகளின் அரசைப்புச் சட்டங்களை வாசித்து அவற்றில் இருந்த சிறப்பான பகுதிகளை முன் மாதிரியாகக் கொண்டு நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கினர்.
- இந்திய அரசமைப்புச் சட்டம் இறுதி செய்யப்படுவதற்கு முன்னர் சுமார் இரண்டாயிரம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- அரசமைப்பு உருவாக்குவதற்கு 2 ஆண்டுகள் 11 மாதம் 17 நாட்கள் கடந்த நிலையில் 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் முழுமையான அரசமைப்புச் சட்டம் தயாரானது. இந்த தினம் இந்திய அரசமைப்பு தினமாக கொண்டாடப்படுகிறது.
- அரசமைப்பை உருவாக்க 64லட்சம் செலவிடப்பட்டது.
- நமது அரசமைப்பு சட்டத்தின் முகப்புரை ஒவ்வோர் இந்தியருக்கான நீதி, தன்செய்லுரிமை, சமத்துவத்தை உறுதி செய்வதோடு சகோதரத்துவத்தையும் வலியுறுத்துகிறது.
- அரசமைப்பின் சட்டத்தின் முன்னுரைதான் முகப்புரை என்று அழைக்கப்படுகிறது. அது இந்தியாவை இறையாண்மை, சமத்துவம், மதச் சார்பினமை மக்களாட்சிக் குடியரசு என்ற வரையறை செய்கிறது.
- அடிப்படை உரிமை:- ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகத்தேவையான உரிமைகளே அடிப்படை உரிமைகள் என்று அழைக்கப்படுகின்றன. இவை ஆறு வகைப்படும்
    - 1—சம உரிமை
    - 2---- சுதந்திரமாக செயலபடும் உரிமை
    - 3—சுரண்டலுக்கு கெதிரான உரிமை
    - 4------சுதந்திர சமய உரிமை
    - 5---- கலாச்சார மற்றும் கல்வி பெறும் உரிமை
    - 6---- சட்டத்தீர்வு பெறும் உரிமை

- வழிகாட்டு நெறிமுறைகள்:- அரசுகள் சட்டமியற்றும்போதும், ஆட்சி செய்யும் போதும் கவனத்தில் கொள்ள வேண்டிய சில வழிகாட்டல்களை அரசப்புச் சட்டம் வழங்கியுள்ளயுது. இவை கட்டாயமாக நடைமுறைப்படுத்தபட வேண்டியவை அல்ல என்றாலும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை.
- நமது அரசிலயல் சட்டம் உருவான போது 395 உறுப்புகள் 22 பகுதிகள் மற்றும் 8 அட்டவணைகள் இடம்பெற்றிருந்தன. தற்போது 448 உறுப்புகள் 25 பகுதிகள் மற்றும் 12 அட்டவணைகள் இடம்பெற்றுள்ளன.
- அரசமைப்புச் சட்டம் 16.09.2016 வரை 101 முறை திருத்தப்பட்டுள்ளது.
- இந்திய அரசப்புச் சட்டத்தின் உண்மைப் பிரதிகள் (இந்தி, ஆங்கிலம்) நாடாளுமன்ற நூலகத்தில் ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட பேழையில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.
- மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி-----ஆபிரகாம் லிங்கன்
- ஒரு நாட்டின் குடிமக்கள் தேர்தல் வழியில் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும் அதன்மூலம்அரசு அதிகாரத்தில் நேரடியாகப் பங்கேற்பதையும்தான் மக்களாட்சி என்கிறோம்.
- மக்களாட்சியின் பிறப்பிடம் கிரேக்கம் ஆகும்.
- மக்களாட்சி இரண்டு வகைப்படும். 1. நேரடி மக்களாட்சி 2. பிரதிநிதித்துவ மக்களாட்சி
- நேரடி மக்களாட்சியில் மக்களே சட்டங்களை உருவாக்குகின்றனர். அனைத்து சட்டத்திருத்தங்களையும் மக்கள்தான் அங்கீகரிப்பர். அரசியல்வாதிகள் நாடாளுமன்ற செயல்முறைகளனிபடி ஆட்சி செய்வர் நேரடி மக்களாட்சியை வெற்றிகரமானசெயல்படுத்தும் வரலாற்றை சுவிட்சர்லாந்து பெற்றுள்ளது.
- பிரதிநிதிதுவ மக்களாட்சி என்பது மக்கள் வாக்களித்து தனக்கென பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பார்கள். அவர்கள் சட்டமியற்றும் பணியை மேற்கொள்வார்கள். (இந்தியா, இங்கிலாந்து , அமெரிக்கா)
- பிரதிநிதிதுவ மக்களாட்சி இரண்டு வகைப்படும். 1. நாடாளுமன்ற மக்களாட்சி(இந்தியா, இங்கிலாந்து) 2. அதிபர் மக்களாட்சி (அமெரிக்கா, கனடா)
- 2007ல் ஐநா சபை செப்டம்பர் 15ஆம் நாளை உலக மக்களாட்சி தினமாக அறிவித்துள்ளது.
- உலகிலேயே முதன் முதலாக பெண்களுக்கு ஓட்டுரிமை அளித்த நாடு நியூஸிலாந்துஆகும்(1893). ஐக்கிய பேரரசில் 1918ஆம் ஆண்டும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1920 ஆம் ஆண்டுதான் பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட்டது. மகாத்மா காந்தி உட்பட அனைவரும் பெண்கள் ஓட்டுரிமைக்காக போராடிவந்தனர்.
- இந்தியக் குடிமக்களில் 79 சதவிகிதம் பேர் தங்களது நாட்டின் மக்களாட்சியின்மீது நம்பிக்கை கொண்டுள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக உலக அளவிலான இப்பட்டியலில் இந்தியாவிற்கு முதலிடம் கிடைத்துள்ளது.

உலகிலேயே பழமையான மக்களாட்சி நாடுகள்

வ.எண்	மக்களாட்சி நாடு	காலம்	அமைவிடம்	சிறப்புக் கூறுகள்
1	கிரேக்கம்	கி.மு 5	கீரிஸ்	அரசியல் தத்துவத்தின் அடித்தளம்
2	ரோம்	கி.மு 300-50	இத்தாலி ரோம்	நாகரீக வளர்ச்சியின் உலகளாவிய விரிவாக்கம்.
3	சான்மரினோஸ்	கி.பி 301	இத்தாலி	பழமையான அரசியலமைப்பு தற் போதும் நடைமுறையில் உள்ளது.
4	ஐஸ்லாந்து	கி.பி 930	திங்வேளிர்	உலகிலேயே பழமையன மற்றும் நீண்ட காலமாக செயல்பட்டுவரும் நாடாளுமன்றம்
5	மனிதத்தீவு	கி.பி 927	இங்கிலாந்து அயர்லாந்து இடையே	மன்னராட்சியின் கீழ் சுயாட்சி
6	இங்கிலாந்து	கி.பி 13	இங்கிலாந்து	1215இல் எழுதப்பட்ட மகாசாசனம்(மக்னகர்டா
7	அமெரிக்கா	கி.பி.1789	அமெரிக்க	மிகப் பழமையான மக்களாட்சிகளுள் ஒன்று

- 1688 உருவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சிதான் இந்தியாவின் மிக பழமையான உள்ளாட்சி அமைப்பாகும்
- நகர்புறத்தை மாநகராட்சி, நகராட்சி, பேருராட்சி என்றும் கிராமப்புறத்தை ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மாவட்ட ஊராட்சி என்றும் பிரித்து வைத்திருக்காங்க இவை உள்ளாட்சி அமைப்புகள் என்று அழைக்கப்படுகின்னறன.
- தமிழ்நாட்டில் முதன் முதலில் உருவாக்கப்பட்ட நகராட்சி வாலாஜபேட்டை நகராட்சி ஆகும் (வேலூர்). நகராட்சி அதிகம் உள்ள மாவட்டம் காஞ்சிபுரம்
- தமிழ்நட்டில் மாநகராட்சி அடுத்த நிலையில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையுடன் வருவாய் அதிகம் இருக்கும் ஊர்களை நகராட்சி என்று பிரித்துள்ளனர்
- நகரத்திற்கும் கிராம்திற்கும் இடைப்பட் ஊர் பேருராட்சி எனப்படும். இதன் மக்கள் தொகை பத்தாயிரம் பேர்.
- இந்தியாவில் முதன் முதலாக பேருராட்சி என்ற உள்ளாட்சி அமைப்பு தமிழ்நாட்டில் தான் அறிமுகப்படுத்தப்பட்டது.
- மாநகராட்சி---ஆணையர்.
- நகராட்சி--- நகராட்சி ஆணையர்
- பேருராட்சி—செயல் அலுவலர்
- ஊராட்சி ஒன்றியம்:- பல கிராம ஊராட்சிகள் ஒன்றினைந்து ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படுகிறது.
- இதன் நிர்வாக அலுவலர்--வட்டார வளர்ச்சி அலுவலர் (பி.டி.ஓ)
- விழுப்புரம் மாவட்டத்தில்தான் அதிகப்படியாக 22 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. நீலகிரி மற்றம் பெரம்பலூர் மாவட்டங்களை ஒவ்வொன்றிலும் 4 ஊராட்சி ஒன்றியங்கள் தான் உள்ளன.
- மாவட்ட ஊராட்சி:- ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது. 50000 மக்கள் தொகை என்ற அடிப்படையில் மாவட்டம் பல பகுதிகளாகப் பிரிக்ப்படுகின்றது.
- தேசிய ஊராட்சி தினம்---ஏப்ரல் 24
- அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் பெண்கள் பங்கேற்கும் வகையில் 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. 2011 இல் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் பெண்கள் 38 இடங்களில் வெற்றி பெற்றனர்

என்பது சிறப்பு 2016 ஆம் ஆண்டு தமிழக அரசு பெண்களுக்கு உள்ளர்சியில் 50 சதவிகித இடஒதுக்கீடு வழங்க சட்டதிருத்தம் செய்துள்ளது.

- கிராம ஊராட்சிகள்----12,524
- ஊராட்சி ஒன்றியங்கள்---385
- மாவட்ட ஊராட்சிகள்---31
- பேருராட்சிகள்---561
- நகராட்சிகள்---125
- மாநகராட்சிகள்--12

- பாதசாரிகள் கடக்கும் இடம் பாதசாரிகளுக்கு கடக்கும் பகுதி 1934 ஆம் ஆண்டு பிரிட்டனில் அமைக்கப்பட்டது. சாலைகள் புள்ளிகளால் ஆன கோடுகளால் குறிக்கப்பட்டன. நடைபாதையில் பெலிஷா பேக்கன் என்று அழைக்கப்படும் ஒளிக்கம்பங்கள் அழைக்கப்பட்டன. ஜீப்ரா கிராசிங் எனப்படும் கருப்பு வெள்ளைகளால் ஆன பட்டைகள், கருப்பு வெள்ளைகளால் ஆன பட்டைகள், கருப்பு வெள்ளைக் கோடுகளாக மாற்றம்அடைந்தன. இரண்டாம் உலகப் போருக்குப்பின் தான் ஜீப்ரா கிராசிங் உருவாக்கப்பட்டன.

அரசாங்க அமைப்புகள் மற்றும் மக்களாட்சி

- அரசாங்க அமைப்புகள்:- அதிகாரம் யாரிடம் உள்ளது என்பதைப் பொறுத்து ஒரு நாட்டின் ஆட்சி அமைகிறது அரசாங்கம் என்பது பல அமைப்புகளை உள்ளடக்கியது. ஆவை உயர் குடியாட்சி, முடியாட்சி, தனிநபர்ஆட்சி, சிறுகுழு ஆட்சி, மதகுருமார்களின் ஆட்சி, மக்களாட்சி மற்றம் குடியரசு
- உயர் குடியினரால் நடத்தப்பட்டு அமைக்கபடும் ஆட்சி:- (இங்கிலாந்து, ஸ்பெயின்)
- முடியாட்சி:-ஒரு நபர் (வழக்கமாக அரசர்) ஆல் அமைக்கப்படும் அரசாங்கமே முடியாட்சி (அரசியலமைப்பு முடியாட்சி) எனப்படும் எ.கா. பூடான், ஓமன், கத்தார்)
- தனிநபர் ஆட்சி:- முழு அதிகாரம் கொண்ட ஒரு நபரால் அமைக்கப்படும் அரசாங்கமே தனிநபர் ஆட்சி ஆகும். வடகொரியா, சவுதி அரேபியா
- சிறு குழு ஆட்சி:- மக்களின் சிறு குழு ஒன்று நாட்டையோ அமைப்பையோ கட்டுப்படுத்துவதே சிறு குழு ஆட்சி எனப்படும். எகா. முன்னாள் சோவியத் ரஷ்யா, சீனா, வெனிசுலா.
- மதகுருமார்கள் ஆட்சி:- வாடிகன்.
- மக்களாட்சி என்பது ஒரு நாட்டின் தகுதியுள்ள குடிமக்களால் வாக்களிக்கப்பட்ட தனிநபரோ அல்லது குழுவாகவோ தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் அமைக்கப்படும் அரசாங்கமே ஆகும்.
- குடியரசு என்பது மக்களிடமே அல்லது அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளிடமும் உயரிய அதிகாரம் இருக்கின்ற அரசாங்க முறையே குடியரசு எனப்படும். இவ்வகை அரசாங்கத்தில் ஒரு முடிமன்னரை காட்டிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நியமிக்கப்பட்ட குடியரசுத் தலைவர் இருப்பர். (இந்தியா, ஆஸ்திரேலியா)
- பொ.ஆ 500ம் ஆண்டு ரோம் நாட்டில் முதன் முதலில் குடியரசு என்னும் சொல் வடிவமைக்கப்பட்டது. இச்சொல் res publica எனும் லத்தீன் மொழிச் சொல்லிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் பொது விவகாரம்
- மக்களாட்சி எனும் சொல் demos மற்றும் cratia எனும் இரு கிரேக்க சொற்களிலிருந்து பெறப்பட்டதாகும் டெமாகிரஸி என்றால் மக்கள் அதிகாரம்
- உண்மையான மக்களாட்சி என்பது 20 பேர் குழுவாக அமர்ந்து கொண்டு செயல்படுத்த முடியாது இது கீழ்நிலையிலுள்ள ஒவ்வொரு கிராம மக்களால் செயல்படுத்தப்படுவதாகும் என தேப்பிதா காந்திஜி கூறியுள்ளார்.
- ஏதென்ஸ் உட்பட பண்டைய கிரேக்க நாட்டின் ஒரு சில நகர அரசுகளில் 2500 ஆண்டுகளுக்கு முன்பாகவே மக்களாட்சி முறை தோன்றியது. வேதகாலத்திற்கு முன்பாகவே இந்தியாவில் மக்களாட்சி முறை அமைப்புகள் இருந்தன.
- உள்ளாட்சி அமைப்பின் அடிப்படை அலகாக சுயாட்சி பெற்ற கிராம குழுக்கள், பண்டைக்காலத்தில் இருந்தது எனும் செய்தியை சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம் என்ற நூல் கூறுகிறது. சோழர்காலத்தில் குடவோல முறை தமிழகத்தில் இருந்தது.
- உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியாவாகும். இந்தியாவில் மக்களாட்சி பின்வரும் ஐந்து முக்கிய கொள்கைகளின் அடிப்படையில் இயங்குகிறது. அவை இறையாண்மை, சமதர்மம், மதச்சார்பின்மை, மக்களாட்சி மற்றும் குடியரசு
- 1912-13 ஆம் ஆண்டு புது தில்லியில் உள்ள இந்தியாவின் நாடாளுமன்றக் கட்டிடத்தை எட்வின் லுட்டியன்ஸ் மற்றும் ஹெர்பர்ட் பேக்கர் எனும் பிரிட்டிஷ் கட்டிடக்கலைஞர்கள் வடிவமைத்தனர். இக்கட்டிடத்தை 1921 ஆம் ஆண்டு கட்டத்தொடங்கி 1927ல் முடித்தனர்.

- சுதந்திர இந்தியாவின் முதல் தேர்தல் 1951ம் ஆண்டு அக்டோபர் 25ஆம் நாள் முதல் 1952 ஆண்டு பிப்ரவரி 21 நாள் வரை பல்வேறு கால கட்டங்களில் நடைபெற்றது. மொத்தம் இருந்த 489 இடங்களில் 364 இடங்களில் வெற்றி பெற்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஆட்சியை அமைத்தது.
- இம்பீரியல் கவுன்சில் எனும் மத்திய சட்டசபைக்கும் மாகாண சட்டசபைக்கும் தேவையான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க 1920 ஆண்டு பிரிட்டிஷ் இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதுவே இந்திய வரலாற்றின் முதல் பொதுத்தேர்தல்.
- இந்திய தேர்தல் முறை இங்கிலாந்தில் பின்பற்றும் தேர்தல் முறையை பின்பற்றுகிறது.
- இந்திய அரசியலமைப்பின் 15ஆம் பகுதியில் காணப்படும் 324 முதல் 329 வரையிலான பிரிவுகளில் கூறப்பட்டுள்ள பின்வரும் விதிமுறைக்கேற்ப நம் நாட்டின் தேர்தல் முறை அமைக்கப்பட்டிருக்கிறது.
- இந்தியாவில் தேர்தல் ஆணையம் அமைத்திட பிரிவு 324 வழிவகைச் செய்கிறது
- இந்தியாவின் ஜனவரி 25ம் நாளினை தேசிய வாக்காளர் தினமாக கொண்டாடுகிறோம்
- மின்னனு வாக்குப்பதிவு இயந்திரத்தில் யாருக்கு வாக்களித்தோம் என்ற தெரிந்து கொள்ளும் வாய்ப்பை 2014ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியது. இதை ஆங்கிலத்தில் சுருக்கமாக VVPAT (voters verified paper audit trial) என்று குறிப்பிடுகிறார்.
- இந்திய தேர்தல் விதிகள் 1961 இல் சட்டவிதி 49-0 நோட்டா பற்றி விளக்குகிறது.
- 2014 தேர்தலில் நோட்டா அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2017ல் படி இந்தியாவின் அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சிகளின் எண்ணிக்கை 7
- அழுத்தக் குழுக்கள்:- அழுத்தக் குழுக்கள் என்ற சொல் ஐக்கிய அமெரிக்க நாட்டில் உருவாக்கப்பட்டது. பொது நலன்களைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் தீவிரமாக செயல்படும் குழு அழுத்தக் குழு என்று அழைக்கப்படுகிறது. அரசின் மீது அழுத்தம் செலுத்தி அரசின் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வரும்படி நெருக்கடி தருவாதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது. அழுத்தக் குழுக்கள் நலக்குழுக்கள் அல்லது தனிப்பட்ட நலக்குழுக்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.
- 1893 ஆம் ஆண்டு ஜீன் மாதம் தென் ஆப்பிரிக்காவில் உள்ள பிரிடெரியா என்னும் இடத்தில் தொடர்வண்டியில் முதல் வகுப்பில் வெள்ளையர் அல்லாத ஒருவர் பயணம் செய்து கொண்டிருந்தார் வழியில் வண்டியில் ஏறிய வெள்ளை இனத்தவர் ஒருவரால் பீட்டர்ஸ்பேர்க் இரயில்வண்டி நிலையத்தில் இறக்கிவிடப்பட்டார்.
- ஊலகளாவிய மனித உரிமைகள் பேரறிக்கை:- வெவ்வேறு சட்ட மற்றும் பண்பாட்டுப் பிண்ணனியுடன் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து கலந்துகொண்ட பிரதிநிதிகளால் தயாரிக்கப்பட்ட உலகளாவிய மனித உரிமைகள் பேரறிக்கை மனித உரிமைகள் வரலாற்றில் ஒர மைல்கல்ஆகும். 1948 ஆம் ஆண்டு டிசம்பர்10 அன்று பாரிசில் நடைபெற்ற ஐநா பொது சபையில் நிறைவேற்றப்பட்ட (பொது தீர்மானம் 217எ) இந்தப் பேரறிக்கை அனைத்துலக நாடுகள் மற்றும் அனைத்துலக மக்களின் பொதுத்தர சாதனை ஆகும். இதில் 30 உறுப்புகள் உள்ளன.
- நெல்சன் மன்டேலா இனஒதுக்கல் கொள்கைக்கு எதிராக போராடியதால் 27 ஆண்டுகள் சிறையிடப்பட்டார். 1990ல் டி கிளார்க் அவரை விடுதலை செய்தார். மன்டேலா மற்றும் டி கிளார்க் ஆகியோரது கடும் முயற்சினால் இன ஒதுக்கல் கொள்கை ஒரு முடிவிற்கு வந்தது. 1994 ல் பல்லினப்பொதுத் தேர்தல் நடைபெற்றபொழுது மண்டேலாவின் தலைமையிலான ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் வெற்றி பெற்று அந்நாட்டின் தலைவரானார்
- மூத்த குடிமக்கள் மற்றும் பெற்றோர் நலன்கள் பராமரிப்புச் சட்டம் 2007 ஆம் ஆண்டில் சட்டமாக இயற்றப்பட்டது. இந்த சட்டம் பிள்ளைகளுக்கும் வாரிசுகளுக்கும் தங்கள் பெற்றோரை அல்லது மூத்த குடிமக்களைப் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்ளும் சட்டப்பூர்வ வேண்டுகோள் ஆகும்.
- ஐக்கிய நாடுகள் சபை 18வயது வரையுள்ள அனைவரையும் குழந்தைகள் என வரையறுக்கிறது. இது உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தில் பிரிவு 25ல் காணப்படுகிறது. இக்கொள்கைகளின் அடிப்டிடையில் ஐநா.சபை 1989 ஆம் ஆண்டு நவம்பர் 20 அன்று குழந்தைகள் உரிமைகள் பிரகடனத்தை ஏற்றக் கொண்டது.
- மலாலா நோபல் பரிசு வென்றவர் கூறுகிறார் " நான் பள்ளியை நேசித்தேன் ஆனால் அடிப்படை வாதிகள் என வசிப்பிடமாகிய ஸ்வாட் பள்ளதாக்கினை ஆக்கிரமித்த போது அனைத்தும் மாறியது.2012ல் அக்டோபரில் பள்ளியிலிருந்து வீடு திரும்பும்போது துப்பாக்கியால் சுடப்பட்டடேன் அனைத்து பெண்களும் 12வருட இலவச பாதுகாப்பான மற்றும் தரமான கல்வி பயில வேண்டும் என்பதை உறுதி செய்ய நான் ஒவ்வொரு நாளும் போராடுகிறேன் 130 மில்லியன் பெண்கள் பள்ளியில் பயிலாத இன்றைய சூழலில் நான் செய்ய வேலை அதிகமாக உள்ளது.
- POSCO-2012 சட்டம் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டமாகும். 18வயது வரையுள்ளவரை குழந்தை என வரையறுக்கிறது.. 12 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் பாலியல் வன்கொடுமைச் செய்யப்படும்போது வன்கொடுமை செய்தவருக்கு மரண தண்டனை வழங்குகிறது.
- 2018 ஏப்ரலில் இதில் திருத்தம் கொண்டுவரப்பட்டு இந்திய குற்றவியல் சட்டத்தில் கடுமையான திருத்தங்களை கொண்டு வந்தது. இதன் சிறப்பம்சம் என்னவென்றால் விதிக்கப்படும் அபராதத் தொகையானது பாதிக்கப்பட்டவரின் மருத்துவச் செலவை ஈடுகட்டும் வகையில் இருக்க வேண்டும் என்பதாகும்.

- 1098 குழந்தைகளுக்கான உதவி மையம் இலவச தொலைபேசி எண்
- பச்பன் பச்சாவ் அந்தோலன் (இளமையைக் காப்பாற்று இயக்கம்)—கைலாஷ் சத்தியார்த்தி. இந்த குழு இதுவரையில் 86,000த்திற்கும் மேலான இந்தியக் குழந்தைகளை மீட்டுள்ளனர்.
- 1998ல் உலக மக்களின் கவனத்தை குழந்தை உழைப்பு முறை மீது திசை திருப்ப 80,000 கி.மீ நீள "குழந்தை உழைப்புக்கு எதிரான உலகளாவிய அணிவகுப்பை முன்னின்று நடத்தினார்.
- தமிழ்நாடு இந்து வாரிசுரிமை சட்டம் 1989 ஐ நிறைவேற்றி மூதாதையரின் சொத்துகளில் பெண்களுக்கு சம உரிமை வழங்கியுள்ளது. மத்திய அரசு இந்து வாரிசுரிமைச் சட்டம் 2005 இல் திருத்தங்களை மேற்கொண்டது இதில் மூதாதையரின் பிரிக்கப்படாத சொத்தில் வாரிசு அடிப்படையில் பெண்களுக்கு சம உரிமையினை அளித்தது.
- இந்தியாவின் மக்கள் தொகையில் 8.6 சதவிகிதம் பழங்குடியினர் உள்ளனர்.
- தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 ஆம்ஆண்டு அக்டோபர் மாதம் இயற்றப்பட்டது. 30 நாள்களுக்குள் தகவல் அளிக்க வேண்டும்
- ஒரு மனிதனுடைய உரிமை அச்சுறுத்தப்படும்போது ஒவ்வொரு மனிதனுடைய உரிமையும் குறைக்கப்படுகிறது—ஜான் எப் கென்னடி

உள்ளாட்சி அமைப்புகள

- ரிப்பன் பிரபுவின் தீர்மானத்தின் படி 1882ஆம் ஆண்டு இந்தியாவில் உள்ளாட்சி முறை தோற்றுவிக்கப்பட்டது. எனவே இவர் ***உள்ளாட்சி முறையின் தந்தை*** என அழைக்கப்படுகிறார்.
- **1882 ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளை அறிமுகம் செய்ததன் மூலம் இந்தியர்களுக்கு சுதந்திரத்தின் சுவையை அறிமுகப்படுத்தியவர் ரிப்பன் பிரபு ஆவார்.**
- **இந்தியாவில் நிர்வாகத்தை தாராளமயம் ஆக்கும் சில நடவடிக்கைகளை ரிப்பன் மேற்கொண்டார். நிர்வாகத்தை பரவலாக்க வேண்டும் என்பதற்காகவே உள்ளாட்சி அமைப்புகளை அவர் முறைப்படுத்தினார்.**
- 1935 இந்திய அரசுச் சட்டம் மாகாணங்களில் தன்னாட்சியை அறிமுகப்படுத்தியது. இச்சட்டம் 1937இல் நடைமுறைக்கு வந்தது.
- பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் கிராமங்களிலிருந்து நகரங்கள் வரை கட்டமைக்கபட வேண்டும் என்பது காந்தியடிகளின் திட்டங்களில் ஒன்றாகும் நம் நாடு விடுதலை அடைந்து அரசமைப்புச் சட்ட உருவாக்கியபோது அரசமைப்பில் இணைக்கப்பட 40 ஆம் சட்டம் இவ்வாறு எடுத்துரைக்கின்றது. அரசு ஊராட்சி மன்றங்களை அமைப்பதற்கும் தன்னாட்சி அமைப்புக் கூறுகளாக அவை இயங்குவதற்கும் தேவைபடும் அதிகாரங்களையும் அதிகார அடைவையும் அவற்றுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
- உள்ளாட்சி அமைப்புகள் என்ற முறையின் கருத்துருவாக்கம் 1957ஆம ஆண்டு முதல் 1986ஆம் ஆண்டு வரை, நான்கு முக்கிய குழுக்களின் உருவாக்கம் மற்றம் அவற்றின் முயற்சியினால் நடைமுறைப்படுத்தப்பட்டது சமூக அபிவிருத்தி திட்டம் 1952 மற்றும் தேசிய நீட்டிப்பு சேவை 1953 ஆகியன 1957ஆம் ஆண்டின் பஞ்சாயத் ராஜ் சட்டத்திற்கு அடிப்படையாக திகழ்ந்தன.

73 மற்றும் 74 வது அரசமைப்பு திருத்தச் சட்டங்களின் (1992) சிறப்பம்சங்கள்

- **ஊராட்சி மற்றும் நகராட்சிகள் உள்ளாட்சி அமைப்பு நிறுவனங்களாகச் செயல்படும்.**
- **குடியரசு அமைப்பின் அடிப்படை அலகுகள்– வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள உரிய வயதுடையோரைக் கொண்ட கிராம சபைகள் (கிராமங்கள்) மற்றும் பகுதி குழுக்கள் (நகராட்சிகள்) ஆகியன.**
- **கிராமங்கள் இடையில் காணப்படும் வட்டாரம்/ வட்டம் / மண்டலம் மற்றும் மாவட்ட அளவில் ஊராட்சிகள் என மூன்றடுக்கு முறையில் செயல்படுகின்றன. இரண்டு மில்லியனுக்கும் குறைவான மக்கள் தொகையை உடைய சிறு மாநிலங்களில் பஞ்சாயத்துக்கள் இரண்டடுக்கு முறையில் இயங்குகின்றன.**
- **நேரடித் தேர்தலில் மூலம் அனைத்து அளவிலும் இடங்கள் நிரப்பப்படுகின்றன.**
- **அனைத்து அளவு நிலைகளில் பஞ்சாயத்து தலைவர்களுக்கான இடங்களில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு, மக்கள்தொகை விகிதாச்சார அடிப்படையில் இட ஒதுக்கீடு அளிக்கப்படும்.**
- **பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கான ஒதுக்கீட்டில் பெண்களுக்கும் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. எல்லா அளவு நிலைகளிலும் தலைவர்கள் பதவிக்கு மூன்றில் ஒரு பங்கு இடம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.**
- **ஒரே மாதிரியான ஐந்தண்டு பதவிக்காலம் மற்றும் பதவிக்காலம் நிறைவடையும் முன்பாகவே தேர்தல்கள் நடத்தப்பெற்று, புதிய அமைப்புகள் உருவாக்கப்படுதல் வேண்டும். ஆட்சி கலைக்கப்பட்டால், ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்படுதல் வேண்டும்.**

- பல்வந்தராய் மேத்த குழு—1957--மூன்று அடுக்கு பஞ்சாயத்த முறை (கிராம ஊராட்சி—பஞ்சாயத்து சமிதி—ஜில்லா பரிஷத்)
- அசோக் மேத்தா குழு—1977-78--இரண்டு அடுக்கு முறை(அரசியல் கட்சிகள் அனைத்து நிலைத் தேர்தல்களிலும் பங்குபெற வேண்டும்)
- ஜி.வி.கே ராவ் குழு(1985) திட்டக்குழுவை நியமிக்கப்படுதல் "வேரற்ற புற்கள்"
- எல்.எம். சிங்வி குழு(1986) 73 மற்றம் 74வது அரசமைப்பு திருத்தச் சட்டங்கள் 1992

1994 – தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் சிறப்பம்சங்கள்

❖ 1994 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஒரு புதிய சட்டத்தின் அடிப்படையில், புதிய பஞ்சாயத்து ராஜ் அமைப்பு செயல்படுத்தப்பட்டது. அதன் சிறப்பம்சங்களாவன

1. மூன்று அடுக்கு அமைப்பு
2. கிராம சபை
3. தேர்தல் ஆணையத்தினை நிறுவுதல்
4. நிதி ஆணையத்தினை நிறுவுதல்
5. மக்கள் தொகைக்கு ஏற்ற விகிதத்தில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு
6. பெண்களுக்கான மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு மற்றும்
7. மாவட்ட திட்டக்குழுக்களை அமைத்தல்

கிராம ஊராட்சி

❖ கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்புகள், கிராம ஊராட்சி என்று அழைக்கப்படுகின்றன. தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். (18 வயது பூர்த்தியடைந்தோர்) அவர்களது பணிக்காலம் 5 வருடங்கள் ஆகும். கிராம ஊராட்சியின் ஆய்வாளராக மாவட்ட ஆட்சியர் செயல்படுகின்றார்.

❖ ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள்தொகையைக் கொண்டுள்ள ஒவ்வொரு கிராமமும் கிராம ஊராட்சியாக உருமாறியுள்ளது.

❖ 1994 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் தெரு விளக்குகளை பராமரித்தல், சந்தைகளையும் திருவிழாக்களையும் நடத்துதல் போன்ற விருப்ப செயல்பாடுகளை உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் நடைமுறைப்படுத்தியது.

❖ மூன்றடுக்கு அமைப்பு உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்பில் கிராம ஊராட்சி மட்டுமே வரி விதிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

1. சொத்து வரி
2. தொழில் வரி
3. வீட்டு வரி
4. குடிநீர் இணைப்புக்கான கட்டணம்
5. நிலவரி
6. கடைகள் மீது விதிக்கப்படும் வரிகள்

கிராம சபை கூட்டங்கள்

✍ ஒவ்வொரு ஊராட்சியிலும், அவ்வூராட்சி அதிகார எல்லைக்கு உள்ளே வசிக்கும் மக்களே கிராம சபை உறப்பினர்களாக இருப்பர். ஊராட்சித் தலைவர் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவார். கிராம சபை கூட்டங்களில் வரவு செலவு கணக்குகளும், திட்டங்களினால் பயனடைந்தோர் பற்றியும் கலந்துறையாடப்படும்.

✍ ஒரு வருடத்திற்கு நான்கு முறை கிராம சபை கூட்டங்கள் நடத்தப்படும்.

1. சனவரி 26 – குடியரசுத் தினம்
2. மே 1 – உழைப்பாளர் தினம்
3. ஆகஸ்ட் 15 – சுதந்திர தினம்
4. அக்டோபர் 02 – காந்திர பிறந்த தினம்

ஊராட்சி ஒன்றியம்

✍ பல ஊராட்சிகள் ஒன்றிணைந்து ஊராட்சி ஒன்றியம் உருவாக்கப்படுகின்றது. மக்கள் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களை (கவுன்சிலர்) நேரடியாத் தேர்ந்தெடுக்கின்றனர்.

✍ உறுப்பினர்கள் தங்களில் ஒருவரை ஊராட்சி ஒன்றியத் தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

✍ மாவட்ட ஆட்சியர், அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட வட்டார அலுவலர் ஆகியோர் ஊராட்சி ஒன்றியத்தின் வளர்ச்சிப் பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரம் பெற்றுள்ளனர்.

மாவட்ட ஊராட்சி

- ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது. 50,000 மக்கள் தொகை என்ற அடிப்படையில் மாவட்டம் பல பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. பகுதி உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவ்வுறுப்பினர்கள் தங்களில் ஒருவரை தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர். அவர்களது பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும்.
- நகர்ப்புற உள்ளாட்சி கீழ்கண்டவாறு பிரிக்கப்பட்டுள்ளது– பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி

காந்தியின் கிராமசுயராஜ்ஜியம்

- காந்தியடிகள் கிராமப்புறங்களின் மக்களாகக் கொண்ட கிராம சுயராஜ்ஜியத்தை விரும்பினார். இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் வாழ்கிறது என்பதை உணர்ந்தார் காந்தியடிகள். சுதந்திர இந்தியாவில், கிராம குடியரசு எனும் பஞ்சாயத்துக்களை கனவு கண்டார்.
- காந்தியடிகள் பஞ்சாயத்து ராஜ் ஒரு அதிகார பகிர்வு கொண்ட அரசாக இருக்க அறிவுறுத்தினார். இந்திய அரசியலமைப்பின் அடிப்படையாக திகழும் கிராமங்கள் தங்களின் தேவைகளுக்கு தாங்களே பொறுப்பாவர்.
- எளிமையான சொற்களில் சொல்வதென்றால் காந்தியின் சுயராஜ்ய கிராமம், அடிப்படையில் சுயசார்புடையதாக இருக்கவேண்டும். வாழ்க்கைக்குத் தேவையான உணவு, தூய்மையான நீர், சுகாதாரம், வீட்டு வசதி, கல்வி மற்றும் பிற தேவைகளுக்கு என அனைத்து தேவைகளையும் ஏற்கும் அரசாங்கம் மற்றும் சுய பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்தையும் வழங்க வேண்டும்.

பேரூராட்சி

- பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாழும் பகுதி பேரூராட்சி எனப்படும். பேரூராட்சித் தலைவரும் உறுப்பினர்களும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- இவர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும். பேரூராட்சியின் நிர்வாகத்தினை மேற்கொள்ள ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்படுகிறார்.

நகராட்சி

- ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழும் பகுதி நகராட்சி எனப்படும். நகர சபைத் தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் (கவுன்சிலர்) மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களது பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகும். இந்நகராட்சியினை நிர்வாகம் செய்ய ஒரு நகராட்சி ஆணையர் அரசால் நியமிக்கப்படுகிறார்.

மாநகராட்சி

- பல இலட்சம் மக்கள்தொகை கொண்ட பெரு நகரப்பகுதிகள் மாநகராட்சி என அழைக்கப்படுகிறது. மாநகராட்சித் தலைவர் மேயர் என்று அழைக்கப்படுகிறார். மேயர் மற்றும் பிற உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள் ஆகும். இம் மாநகராட்சி ஆணையர் நிர்வாக அலுவலகர் ஆவார்.
- தமிழ்நாட்டில் 12 மாநகராட்சிகள் உள்ளன. அவை சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி,சேலம், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திருப்பூர், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல்
- இந்திய ஆட்சிப்பணி அதிகாரி ஒருவார் மாநகராட்சியின் ஆணையராக நியமிக்கப்படுகிறார்
- ❖ பெரியார் ஈ.வே இராமசாமி அவர்கள் 1917ஆம் ஆண்டில் இருந்து பல ஆண்டுகள் ஈரோடு நகராட்சியின் பெருந்தலைவராக பதவி வகித்தார். அவரது பதவிக் காலத்தில் 1919 இல் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் முறையினை பெரியார் செயல்படுத்தினார். இந்திய நகராட்சி நிர்வாகங்களின் வரலாற்றில் முதன் முறையாக இத்திட்டதினை செயல்படுத்தியவர் பெரியார் ஆவார்.

அரசாங்களின் வகைகள்

- ஒரு அரசாங்கத்தின் முக்கிய நிறுவனம் அரசு ஆகும். இந்திய அரசியலமைப்பு மற்றும் சட்டங்களுக்கு உட்பட்ட சட்டமன்ற, நிர்வாக மற்றும் நீதித்துறை அதிகாரங்களை அரசு செயல்படுத்துகிறது. அரசாங்கத்தின் உறுப்புகளாகச் சட்டமன்றம், நிர்வாகத் துறை மற்றும் நீதித்துறை அமைந்துள்ளன.
- இவ்வுறுப்புகள் அரசின் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துகின்றன. ஒற்றை ஆட்சிமுறை, கூட்டாட்சி ஆட்சி முறை, நாடாளுமன்ற ஆட்சிமுறை மற்றும் ஜனாதிபதி ஆட்சி முறை என வகைப்படுத்தப்படுகின்றன.

அரசின் உறுப்புகள்

1. சட்டமன்றம்
2. நிர்வாகம்

3. நீதித்துறை

அரசியலமைப்பின் வகைகள்

- அரசியலமைப்பின் வகைகள்
  1. எழுதப்பட்ட / எழுதப்படாத அரசியலமைப்பு
  2. கூட்டாட்சி / ஒற்றையாட்சி
  3. நெகிழும் தன்மையுடைய / நெகிழும் தன்மையற்ற

ஒற்றை ஆட்சி முறை

- ஒற்றை ஆட்சி முறை என்பது இறையாண்மை மிக்க ஓர் அரசு ஒரே நிறுவனமாக இருந்து ஆட்சி செய்வதாகும். மத்திய அரசு அதிகாரம் மிக்கதாகும். நிர்வாக அமைப்புகள் மத்திய அரசினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை மட்டுமே செயல்படுத்தும்.
- இங்கிலாந்து பிரான்ஸ், ஜப்பான், மற்றும் இலங்கை ஆகியவை ஒற்றை ஆட்சி முறைக்கான உதாரணங்களாகும்.
- ஒற்றையாட்சி முறையில் அனைத்து அதிகாரங்களும் ஒரே இடத்தில் மையப்படுத்தப்படுகின்றன. ஆனால் கூட்டாட்சி அரசு முறையில் அதிகாரமானது மத்திய அரசு மற்றும் அதன் அமைப்புப் பிரிவுகளுக்குள்ளும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஒற்றையாட்சி முறை அரசியலமைப்பிலும் அதிகாரப் பரவலாக்கம் இருக்கக்கூடும். ஆனாலும் அதனைக் கூட்டாட்சி முறை எனக் கொள்ளலாகாது.

நாடாளுமன்ற ஆட்சி முறை

- நவீன மக்களாட்சி முறைகளைப் நாடாளுமன்றப் ஆட்சி முறை அதிபர் மக்களாட்சி முறை என இருவகைகளாகப் பிரிக்கலாம்.
- நாடாளுமன்ற ஆட்சிமுறை அமைச்சரவை அரசாங்கம் அல்லது பொறுப்பு அரசாங்கம் அல்லது வெஸ்ட் மின்ஸ்டர் அரசாங்க மாதிரி எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது'. இவ்வகை ஆட்சிமுறை பிரிட்டன், ஜப்பான், கனடா, இந்தியா போன்ற நாடுகளில் காணப்படுகிறது.

நாடுகள்	நாடாளுமன்றங்களின் யெர்கள்
இஸ்ரேல்	கெனெஸட்
ஜெர்மனி	பந்தெஸ்டாக்
டென்மார்க்	போக்டிங்
நார்வே	ஸ்டார்டிங்
ஐக்கிய அமெரிக்க நாடுகள்	காங்கிரஸ்
ஜப்பான்	டயட்
பிரிட்டன்	பார்லிமென்ட்

அதிபர் மக்களாட்சி முறை

- அதிபர் மக்களாட்சி முறை என்பது சட்ட மன்றத்திற்கு பொறுப்பில்லாததாகவும் நாளுமன்றம் அற்றதாகவும் நிலைத்த நிர்வாக அற்றதாகவும் நிலைத்த நிர்வாக அமைப்பு உடையதாகவும் இருக்கும். அதிகாரப் பகிர்வு கொள்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இவ்வரசு முறை அமெரிக்கா, பிரேசில், இரஷ்யா, இலங்கை போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ளது.
- அரசின் தலைவர் என்பது ஒரு பெயரளவிற்கான பதவியாகும்.
- அதிபர் வாக்காளர் மன்றத்தினால் நான்காண்டுகளுக்கொரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- அதிபர் ஆட்சியில் அமைச்சரவையைக் ***கிச்சன் கேபினட்*** என்று அழைக்கிறார்கள்.

நாடாளுமன்ற மற்றும் அதிபர் மக்களாட்சி இடையிலான வேறுபாடுகள்

மக்களாட்சி முறை	நாடாளுமன்ற ஆட்சி முறை
குடியரசுத்தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.	பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் பிரதம மந்திரியாவர்
அதிபரே அதிகாரம் படைத்தவர்	மத்திய சட்டமன்றம் அதிகாரம் படைத்தது
அதிகாரப் பிரிவினை	அதிகாரப் பிரிவினை மையப்படுத்தப் படாமல் இருப்பது
சுதந்திரமாகச் செயல்படும் பிரிவுகள்	தனித்தனியாக சார்புடைய செயல்பாடுகளைக் கொண்ட பிரிவுகள்

மாகாணத்தின் தலைவர் அதிபர் ஆவார்	அரசின் தலைவர் – குடியரசத் தலைவர்
அரசாங்கத்தின் தலைவரும் அதிபரே	அரசாங்கத்தின் தலைவர் – பிரதம அமைச்சர்
தனிநபர் தலைமை	கூட்டுத் தலைமை
மகா சபையின் செயல்களுக்கு அதிபர் பொறுப்பை ஏற்கமாட்டார்.	கூட்டு மற்றும் தனித்தனியாக பொறுப்புகள்

இந்திய மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே உள்ள உறவு

இந்திய நாடு, இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழி முறைகளுக்கு உட்பட்டு மத்தியு மாநில அரசுகளுக்கிடையே அதிரங்களை பகிர்ந்து கொள்ளும் மாநிலங்களின் கூட்டமைப்பு ஆகும். மத்திய மாநில அரசுகளுக்கு இடையே அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப் பட்டாலும் அனைத்து விவகாரங்களிலும் முடிவெடுப்பது மத்திய அரசே ஆகும். மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயான உறவு என்பது

1. சட்ட மன்ற உறவுகள் (பிரிவுகள் 245 முதல் 255 வரை)
2. நிர்வாக உறவுகள் (பிரிவுகள் 256 முதல் 263 வரை)
3. நிதி உறவுகள் (பிரிவுகள் 268 முதல் 294 வரை)

மத்திய மாநில அரசுகள் சட்டங்கள் இயற்றும் அதிகாரம் படைத்தவை. ஆனாலும் அதிகாரங்கள் வேறுபடுகின்றன. சில குறிப்பிட்ட துறைகளுக்கு சட்டமியற்றும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் உள்ளது. இத்துறைகள் மத்தியப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. சில துறைகளுக்கு சட்டமியற்றும் அதிகாரம் மாநில அரசாங்கத்திற்கு உள்ளது. அத்துறைகளுக்கான சட்டங்களை அந்தந்த மாநில அரசுகளே இயற்றிக் கொள்ளும். இவை மாநிலப்பட்டியல் எனப்படுகிறது. சில துறைகளுக்கு மத்திய அரசும் மாநில அரசும் சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்றுள்ளன. இவை பொதுப்பட்டியல் எனப்படுகிறது.

மத்திய பட்டியல்: மத்தியப் பட்டியலில் 100 துறைகள் உள்ளடங்கியுள்ளது . வெளியுறவுத் துறைகள், பாதுகாப்பு, ஆயுதப்படைகள், தொலைதொடர்பு, தபால் மற்றும் தந்தி, மாநிலங்களுக்கிடையிலான வியாபாரம் மற்றும் வணிகம்.

மாநிலப் பட்டியல்: மாநிலப் பட்டியல் 61 துறைகளைக் கொண்டுள்ளது. மாநிலத்தின் பொது ஒழுங்கு, காவல் துறை, நீதித்துறை நிர்வாகம், சிறைத்துறை, உள்ளாட்சி அமைப்புகள், விவசாயம் போன்றவை.

பொதுப் பட்டியல்: பொதுப்பட்டியல் 52 துறைகளாக உள்ளன. குற்றவியல் மற்றும் சிவில் நடைமுறைகள், திருமணம் மற்றும் விவாகரத்து, பொருளாதாரம் மற்றும் சிறப்புத் திட்டமிடல், செய்தித்தாள், புத்தகங்கள் மற்றும் அச்சகங்கள், மக்கள் தொகை கட்டுப்பாடு ஆகியன.

மொத்த தேசிய மகிழ்ச்சி (Gross National Happiness GNH)

- மொத்த தேசிய மகிழ்ச்சி என்பது தற்போது வளர்ந்துவரும் ஓர் தத்துவமாகும். இது ஒரு குறிப்பிட்ட நாட்டில் உள்ள மொத்த மகிழ்ச்சியைக் குறிக்கும் ஒரு குறியீடு ஆகும்.
- பூட்டான் அரசின் அரசமைப்பில் இடம் பெற்றுள்ள இக்கருத்து சூலை 18, 2008 இல் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- மொத்த தேசிய மகிழ்ச்சி என்னும் பதத்தைப் பூட்டானில் நான்காம் அரசரான ஜிக்மே சிங்கியே வான்சுக் அவர்களால் 1970 இல் உருவாக்கப்பட்டது.
- மொத்த தேசிய மகிழ்ச்சி நிலையான மற்றும் சமமான சமூக பொருளாதார வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு , மற்றும் ஊக்குவிப்பு, பண்பாடு மற்றும் நல்ல ஆட்சி ஆகியவற்றை மையக் கருத்தாகக் கொண்டுள்ளது.
- இயற்கை மற்றும் பாரம்பரிய மதிப்புகளிடையே இசைவை வலியுறுத்தும் வகையில் மக்களிடையே கூட்டு மகிழ்ச்சியை ஏற்படுத்துவது அரசின் இலக்காக இருக்க வேண்டும்.

சமத்துவம்

- சுதந்திரம் மற்றும் சமத்துவம் என்பது மக்களாட்சியின் இரண்டு அடிப்படைக் கோட்பாடுகள் ஆகும்.
- அனைத்து மக்களும் சட்டத்தின் முன்பாக சமம். அனைவருக்கும் அரசியல் வாழ்வில் பங்கேற்க சமமான வாய்ப்புகள் வழங்கப்படுதல் வேண்டும்.
- குடியியல் உரிமை என்பது சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை குறிக்கிறது.
- சமத்துவம் என்பது ஒரு தனி மனிதன் அல்லது ஒரு குழு வேறுபாடு காட்டி நடத்தப்படாமல் இருத்தல் அல்லது சிறப்பாக பாதுகாக்கப்பட்ட இயல்புகளான இனம், பால், இயலாமை, சமயம் அல்லது நம்பிக்கை , பாலியல் சார்ந்த போக்கு வயது அடிப்படையில் குறைவாக நடத்தப்படாமல் இருத்தல் முதலியவற்றை உறுதி செய்தலாகும்.
- பேராசிரியர் லாஸ்கி அவர்களது கூற்றின்படி ***சமத்துவம்*** என்பது சமமாக நடத்துவது மட்டுமல்ல வெகுமதி அளிப்பதிலும் சமத்துவம் இருப்பதாகும். முதலாவதாக சமூக சிறப்புரிமை இல்லாததும் இரண்டாவதாக போதுமான வாய்ப்புகள் அனைவருக்கும் வழங்கப்படுவதாகும்.
- சட்டத்தின் ஆட்சி என்ற பதத்தை , ஏ.வி. டைசி என்ற பிரிட்டிஸ் சட்ட வல்லுநர் வாதுரைத்தார்.
- இந்தியாவில் 18 வயது பூர்த்தியடைந்த அனைவருக்கும் எவ்வித பாகுபாடும் இல்லாமல் வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது.
- 1952 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் பொதுத்தேர்தலிலேயே இந்தியாவில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது.
- ஆனால் சுவிட்சர்லாந்து நாட்டில் 1971 ஆம் ஆண்டில்தான் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது.
- இந்தியாவில் 25 வயது பூர்த்தி அடைந்த எவரும் தேர்தலில் போட்டியிடலாம்.
- பெண்களை மேம்படுத்தும் விதமாக உள்ளாட்சி அமைப்புகளில் 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.
- இந்திய அரசியலமைப்பு அதன் குடிமக்களுக்கு அரசியலமைப்பு சட்டப்பிரிவுகள் 14–18 மூலம் சமத்துவத்தை அளிக்கிறது.
- சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் அனைவருக்கும் சட்டத்தின்படி சமமான பாதுகாப்பு என்பது அரசியலமைப்பு சட்டப்பிரிவு 21 இல் மேலும் வலிமை படுத்தப்பட்டுள்ளது.
- **சட்டப்பிரிவு–14** – சட்டத்தின் முன் அனைவரும் சமம் என உத்தரவாதம் அளிக்கிறது
- **சட்டப்பிரிவு–15** – பாகுபாட்டை தடை செய்கிறது
- **சட்டப்பிரிவு–16–** பொதுவேலைவாய்ப்பில் அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்கிறது
- **சட்டப்பிரிவு–17–** தீண்டாமையை ஒழிக்கிறது
- **சட்டப்பிரிவு–18–** பட்டங்கள் அளித்து வேறுபடுத்தலை தடைசெய்கிறது

இந்தியாவில் அடிப்படை உரிமைகள்

- ஒரு மனிதனின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் தேவையான உரிமைகள் அடிப்படை உரிமைகள் எனப்படும்.
    1. சமத்துவ உரிமை
    2. சுதந்திர உரிமை
    3. சுரண்டலுக்கு எதிரான உரிமை
    4. சமய மற்றும் மனச்சான்ற சுதந்திரத்திற்கான உரிமை
    5. சிறுபான்மையினருக்கான பண்பாடு மற்றம் கல்வி உரிமைகள்
    6. அரசியலமைப்பு வழி தீர்வுகளுக்கான உரிமை
- **சமத்துவ உரிமை** – சட்டத்தின் முன் அனைவரும் சமம், சட்டத்தின் மூலம் அனைவருக்கும் சம பாதுகாப்பு என்பதே இவ்வுரிமை ஆகும். சமயம் ,இனம், பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுத்தலோ, ஒதுக்குதலோ சட்டத்திற்கு புறம்பானதாகும். அவ்வாறு நடத்தப்பட்டால் ஒருவர் நீதிமன்றத்தை அணுகலாம்.
- **சுதந்திர உரிமை–** ஆறுவகையான சுதந்திரங்கள் நமது அரசியலமைப்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.
    1. பேச்சுரிமை
    2. ஆயுதமின்றி கூடும் உரிமை
    3. சங்கங்கள் அமைக்கும் உரிமை
    4. இந்தியாவில் எந்த பகுதியிலும் வசிக்கும் உரிமை
    5. இந்தியா முழுவதும் சுதந்திரமாக நடமாளும் உரிமை
    6. எந்த தொழிலையும், வணிகத்தையும் செய்யும் உரிமை

- **சுரண்டலுக்கெதிரான உரிமை–** 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களை சுரங்கங்கள், அல்லது மற்ற அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவது சட்டப்படி குற்றமாகும். எந்த ஒப்பந்ததாரரோ, முதலாளியோ ஒரு தொழிலாளியை அவரது விருப்பத்திற்கு எதிராக ஒரு வேலையில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்த முடியாது.
- **சமயச் சுதந்திரம் மற்றும் பகுத்தறிவுக்கான உரிமை–** குடிமக்கள் தாங்கள் விரும்பிய சமயத்தினை ஏற்கவும் பின்பற்றவும் உரிமை அளிக்கிறது. குடிமக்கள் சில சமய நம்பிக்கைகளை ஏற்று பின்பற்றுவதற்கு அல்லது சமய நம்பிக்கைகளின்றி தங்கள் மனசாட்சிபடி வாழ்வதற்கு உரிமை அளிக்கப்படுகிறது.
- **பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள் –** அரசியலமைப்பு கூட்டம் பண்பாட்டினைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் உரிமையை வழங்கியுள்ளது. கல்விக்கூடங்களை அமைக்கவும், நமது பாரம்பரியம் மற்றும் பண்பாட்டைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் நமக்கு உரிமை உள்ளது. சமயச்சார்பு கல்வி அளிக்க மக்கள் மத நிறுவனங்களை நிறுவலாம். அரசு அதற்கு மானியங்களை வழங்குகின்றது. இருப்பினும், சாதி, நிற, இனம் அல்லது சமய வேறுபாட்டினைக் காரணம் கூறி யாரும் இவ்வகை நிறுவனங்களில் அனுமிதி மறுத்தல் கூடாது.
- **நீதிப்பேராணை** – நீதிப்பேராணை என்பது ஒரு செயலை செய்யவோ அல்லது அச்செயலை தடுக்கவோ, நீதிமன்றத்தால் அல்லது வேறு சட்ட அமைப்பினால் வழங்கப்படும் எழுத்துப்பூர்வமான உத்தரவு.

அரசியலமைப்பு வழி தீர்வுகளுக்கான உரிமை

- அடிப்படை உரிமைகள் அரசியலமைப்புச் சட்டத்தினால் உத்திரவாதம் தரப்பட்டவை. ஒரு குடிமகளின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகையில், அரசியலமைப்பு வழி தீர்வுகளுக்கான உரிமையின்படி அவர் நீதிமன்றத்தை அணுகலாம்.
- நீதிமன்றம் அக்குடிமகனுக்குரிய உரிமையை மீட்டளிக்குமாறு அரசுக்கு ஆணையிடுகிறது. இது நீதிப்பேராணை என்று அழைக்கப்படுகிறது.
- ஒரு செயல் அரசியலமைப்பு சட்டத்தின்படி ஏதேனும் தவறானதாக கருதப்படின் அதற்கான சரியான தீர்வுகளை அரசியலமைப்புச் சட்ட தீர்வாணைகள் வழங்குகின்றன. இவ்வாறு இவ்வுரிமை அனைத்து உரிமைகளுக்கும் பாதுகாப்பாகவும், காவலாகவும் அமைகின்றது.

அடிப்படைக் கடமைகள்

- அடிப்படைக் கடமைகள் என்பவை குடிமக்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் என்ற விதத்தில் அமைந்துள்ளன.
- 1950 சனவரி 26 முதல் நடைமுறைக்கு வந்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அடிப்படைக் கடமைகள் என்ற பகுதி இடம்பெற்றிருக்கவில்லை
- 1976 ஆம் ஆண்டு 42 வது சட்ட திருத்ததின்படி மூலம் அவை இணைக்கப்பட்டன. அரசியலமைப்பு 11 அடிப்படைக் கடமைகளைக் குறிப்பிடுகின்றது.

அரசியல் கட்சிகள்

- இந்தியா 1950 ஆம் ஆண்டு மக்களாட்சி நாடானது. துடிப்பான ஒரு மக்களாட்சி நாட்டிற்கு ஒரு வலிமையான அரசியல் கட்சி முறை அவசியமான ஒன்றாகும்.
- அரசியல் கட்சிகள் என்பவை தன்னார்வத்தோடு ஏற்படுத்தப்பட்ட தனி மனிதர்களின் அமைப்பு ஆகும்.

  எந்த ஒரு அரசியல் கட்சியும் பின்வரும் மூன்று கூறுகளை கொண்டிருக்கும்

  1. தலைவர்
  2. செயல் உறுப்பினர்
  3. தொண்டர்கள்

- அரசியல் கட்சிகள் மக்களாட்சியின் முதுகெலும்பு எனலாம். அரசியல் கட்சிகள் முறையாக அமைக்கப்பட்ட அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இல்லாமல் அரசாங்கத்தை அமைக்கும் முக்கிய காரணிகளாக இருக்கின்றன. அவை பொதுகருத்துக்களை உருவாக்குகின்றன.
- கட்சிகள் குடிமக்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் இடையே பாலமாக சேவை செய்கின்றன.

ஒரு கட்சி அங்கீகரிக்கப்படுவது எவ்வாறு எனில்

- ஐந்து ஆண்டுகளாக அரசியல் செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்க வேண்டும்.
- வேட்பாளர்கள் குறைந்தபட்சம் 6 சதவிகித ஓட்டுக்களை இறுதியாக நடைபெற்ற பொதுத்தேர்தலில் பெற்றிருத்தல் வேண்டும்.

கட்சி முறைகளின் வகைகள்

- மூன்று வகையான கட்சி முறைகள் நடைமுறையில் இருக்கின்றன

1. ஒரு கட்சி முறை
2. பல கட்சி முறை
3. இரு கட்சி முறை

- **ஒரு கட்சி முறை** – இம்முறையில் ஒரே அரசியல் கட்சி மட்டும் அரசாங்கத்தை ஏற்படுத்தும் உரிமையைக் கொண்டிருக்கும். இவ்வகையான ஒரு கட்சி முறை சீனா, வடகொரியா மற்றும் கியூபா ஆகிய நாடுகளில் நடைமுறையில் இருக்கின்றன.
- **இரு கட்சி முறை–** இம்முறையில் இரண்டு கட்சிகள் அதிகாரத்தை பங்கு கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்படிருக்கும். இவற்றில் ஒன்று ஆளும் கட்சியாகவும் மற்றொன்று எதிர்க்கட்சியாகவும் செயல்படும். இருகட்சி முறை பிரிட்டன் (தொழிலாளர் கட்சி மற்றும் பழமைவாதக் கட்சி அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி) காணப்படுகின்றன.
- **பலகட்சி முறை** – அதிகாரத்திற்கான போட்டி மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட கட்சிகளிடையே இருக்குமாயின் அது பலகட்சி முறை என அழைக்கப்படுகிறது. இம்முறை இந்தியா பிரான்ஸ், ஸ்வீடன், நார்வே உள்ளிட்ட நாடுகளில் காணப்படுகிறது.
- **இந்தியாவில் அரசியல் கட்சி முறை –** இந்தியாவில் கட்சி முறை பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிற்பகுதியில் தோன்றியது. கூட்டாட்சி அமைப்பினை பின்பற்றும் நாடுகளில் இருவகையான கட்சிகள் காணப்படுகின்றன.
- உண்மையில் இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான கட்சிகள் காணப்படுகின்றன.
- இந்தியாவில் கட்சிகள் மூன்று படிநிலையில் அமைந்துள்ளது. அவை தேசியக் கட்சிகள், மாநில கட்சிகள், பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சிகள் ஆகும்.
- ஒவ்வொரு கட்சியும் இந்திய தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.
- இந்திய தேர்தல் ஆணையம் தேர்தல்களை நடத்துவதற்கு அதிகாரம் கொண்ட ஒரு சுதந்திரமான சட்டப்படியான அரசியலமைப்பு ஆகும். இதன் தலைமைஇடம் புதுதில்லியில் உள்ளது.



- மேலே தெரிவித்த நிபந்தனைகளை பூர்த்தி செய்த கட்சிகள் அங்கீகரிக்கப்பட் கட்சிகள் என அழைக்கப்படும். அவற்றிற்கு தேர்தல் ஆணையாத்தால் சின்னம் ஒன்றும் ஒதுக்கீடு செய்யப்படும். பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சி விரும்பும் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட முடியாது இத்தகைய கட்சி தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்படும் தேர்தல் குழுவில் உள்ள ஏதேனும் ஒரு சின்னத்தை தேர்வு செய்தல் வேண்டும்.
- 1968 ஆம் ஆண்டின் தேர்தல் சின்னங்கள் ஆணையின்படி, ஒதுக்கப்பட சின்னங்கள் மற்றும் ஒதுக்கப்படாத சின்னங்கள் என்று இரண்டு வகை உள்ளது.
    - ஒதுக்கப்பட்ட சின்னம் என்பது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு மட்டுமானது என பொருள்படும்
    - ஒதுக்கப்படாத சின்னம் என்பது அங்கீகரிக்கப்படாத கட்சிகளுக்கு ஒதுக்கப்படும் சின்னம் ஆகும்.

- **ஒரு அரசியல் கட்சியை தோற்றுவிப்பது எப்படி** – இந்திய தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். குறைந்தபட்சம் நூறு உறுப்பினர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் வாக்காளர் அட்டையை கொண்டிருத்தல் வேண்டும். கட்சி அமைப்பு குறித்த ஆவணத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

பெரும்பான்மை கட்சி

- தேர்தலில் ஒரு அரசியல் கட்சியின் வேட்பாளர்கள் மற்ற கட்சிகளின் வேட்பாளர்களை விட அதிக எண்ணிக்கையில் தேர்வு பெற்று இருப்பின் அக்கட்சியானது பெரும்பான்மைக் கட்சி என அழைக்கப்படுகிறது.
- பெரும்பான்மை பெற்ற கட்சி, அரசாங்கத்தை அமைத்து ஆட்சி நடத்துகிறது. அக்கட்சி அரசு நிர்வாகத்தை நடத்த அமைச்சர்களை தேர்ந்தெடுத்து நியமிக்கிறது. அது நாட்டிற்கு சட்டம் இயற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.
- **சிறியக்கட்சி** – சிறியக் கட்சி என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கையில் குறைவான எண்ணிக்கையைக் கொண்ட கட்சி ஆகும்.
- **எதிர்க்கட்சி–** தேர்தலில் பெரும்பான்மை பெற்ற கட்சிக்கு இரண்டாவதாக அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களை கொண்ட கட்சி எதிர்கட்சி என அழைக்கப்படுகிறது.
- மக்களாட்சி வெற்றிகரமாக செயல்படுவதற்கு ஆற்றல் வாய்ந்த எதிர்கட்சி மிகவும் அவசியம் ஆகும். அது ஆளும் கட்சி போன்றே முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.
- எதிர்கட்சி ஆளுங்கட்சியின் தன்னிச்சையான போக்கினை கட்டுப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. அது அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் அறிமுகப்படுத்தப்படும் சட்ட மசோதாக்களை தீவிரமாக விமர்சிக்கும்.
- எதிர்கட்சித் தலைவர் கேபினட் அமைச்சர் அந்தஸ்தைக் கொண்டிருப்பார்.

கூட்டணி அரசாங்கம்

- பல கட்சி அமைப்பில் சில நேரங்களில் ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மையை ஒரு கட்சி பெறுவதில்லை . இது போன்ற நேர்வில் சில கட்சிகள் இணைந்து அரசாங்கத்தை அமைக்கின்றன. இது கூட்டணி அரசாங்கம் என்றழைக்கப்படுகிறது,

தேர்தல் சின்னங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம்

- தேர்தல் சின்னம் என்பது அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்டும் அங்கீகரிக்கப்பட்ட சின்னம் ஆகும். அது தேர்தலில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது.
- விலங்குகளின் சின்னங்களை வழங்குவதை தேர்தல் ஆணையம் நிறுத்தியுள்ளது. விதிவிலக்காக யானை மற்றும் சிங்கம் ஆகிய சின்னங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.
- தேசிய அளவிலான அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் சின்னம் நாடு முழுவதும் ஒன்றாக இருக்கும். இத்தகைய சின்னங்கள் வேறு எந்த கட்சிக்கும் அல்லது சுயேட்சை நபருக்கும் ஒதுக்கப்படமாட்டது.

ஜனநாயகமும் ஊடகமும்

- மக்களாட்சியில் ஊடகம் முக்கிய பங்கு வகிக்கிறது. அச்சு இயந்திரம் ஜோஹன்னஸ் குட்டன்பெர்க் என்பவரால் 1453 இல் கண்டுபிடிக்கப்பட்டது.
- மக்களிடையே ஒரு தகவலைப் பற்றி பொதுவான கருத்தின ஏற்படுத்தி விழிப்புணர்வை உருவாக்குகிறது.
- சட்டமன்றம், நிருவாகத்துறை, நீதித்துறை மற்றும் ஊடகம் ஜனநாயகத்தின் நான்கு தூண்களாக கருதப்படுகிறது. ஊடகம் மற்ற மூன்று துறை செயல்பாடுகளின் வெளிப்படைத் தன்மையை உறதி செய்கிறது.
- ஒரு ஜனநாயக நாட்டில் ஊடகம் என்பது தகவல்கள் மற்றும் அறிவை வழங்கும் மிக முக்கிய சாதனமாக செயல்படுகிறது.
- அகில இந்திய வானொலி 1956 ஆம் ஆண்டிலிருந்து ஆகாச வானி (வானிலிருந்து வரும் ஒலி) என்ற பெயரில் வானொலி ஒலிபரப்பை செய்து வருகிறது. இது 1936 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

பெண்கள் மேம்பாடு

- ஒரு ஆணுக்கான கல்வி என்பது அவருக்கு மட்டுமே பயன்படும். ஆனால் ஒரு பெண்ணுக்கு வழங்கும் கல்வியானது, ஒரு தலைமுறைக்கான கல்வியாகும்.
- பெண்களை பலவீனமா பாலினம் என்று சொல்வது அவதூறு. அது பெண் இனத்திற்கு ஆணினம் இழைத்த அநீதியாகும் என்று மகாத்மாக காந்தியடிகள் கூறியுள்ளார்.
- ஆண்பால், பெண்பால் குறித்த புரிதல்கள் மற்றும் வேறுபாடுகளில் சமூகத்தின் தாக்கம் எவ்விதம் ஆராய்வதே சமூகவியலில் பாலினம் என்பதாகும்.
- **கல்வி** ஒருவருக்கு அறிபூர்வமாகச் சிந்திக்கம் திறன் மற்றம் தனித்தன்மை வாய்ந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது.
- **பாலினப்பாகுபாடு** பாலினப்பாகுபாடு பார்க்கம் சமூகம் எக்காலத்திலும் முன்னேறுவதற்கான வாய்ப்பு அரிது

- சாதி, இன, சமய பாகுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட சமூகம், முன்னேற்றம் அடையாது.
- 40 ஆண்டுகளுக்கு முன்பே பன்னாட்டு மனித உரிமைகள் ஆணையம் ***அனைவருக்கும் கல்வி*** என்ற உரிமையை வலியுறுத்தி உள்ளது.
- நமது எதிர்காலம் பெண்களை உதாசீனப்படுத்துவோர் கையிலில்லை. அது நமது மகன்களைப் போல் பள்ளிக்குக் கல்வி கற்கச்செல்லும் நமது மகள்களின் கனவுகளில் உள்ளது அவர்களே, இல்வுலகத்தில் தாங்கிநிற்கம் வல்லமைக் கொண்டவர் என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஐக்கயி நாடுகளின் பொது சபையில், 2012 ஆம் ஆண்டு உரையாற்றும்போது கூறினார்.

<u>பெண் கல்வியின் இணையற்ற முக்கியத்துவங்கள்</u>

- **அதிகரித்த கல்வியறிவு–** உலகெங்கிலும் கல்வியறிவற்ற இளையோரில் கிட்டதட்ட 63 சதவிகிதம் பேர் பெண்கள். எனவே அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி வழங்கப்படவேண்டும் அப்போதுதான் பின்தங்கிய நாடுகளும் முன்னேற்றம் அடையும்.
- **ஆள்கடத்தல்** ஆள் கடத்தலில் அதிகம் பாதிக்கப்படுவது படிப்பறிவு இல்லாத பெண்கள் மற்றும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்களேயாகும். இளம் பெண்களுக்கு அடிப்படைத் திறன்கள் மற்றும் அவர்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதினால் ஆள் கடத்தல்கள் கணிசமாகக் குறைக்கப்படும் என்று ஆள்கடத்தல்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் இடை முகமைத் திட்டம் விளக்குகின்றது.
- **அரசியல் பிரதிநிதித்துவம்** உலகம் முழுவதும் பெண்கள் வாக்காளர்களாகவே உள்ளனர். அவர்களது அரசியல் ஈடுபாடு கட்டுப்படுத்தப்படுகிறது. குடிமைக்கல்வி மற்றும் குடிமைப் பயிற்சி அனைத்து விதமான மேம்பாடு மற்றும் முன்னேற்றத்திற்கான தடைகளை உடைக்கின்றது என்று ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கான தலைமை மற்றும் பங்கேற்பினைப் பற்றிய ஆய்வு பரிந்துரைக்கிறது.
- **வளரும் குழந்தைகள்** கல்வியறிவு பெற்ற தாய்மார்களின் குழந்தைகளின் கல்வியறிவு பெறாத தாய்மார்களின் குழந்தைகளை ஒப்பிடுகையில் இருமடங்க அதிகரித்து ஐந்து வயதுக்கு மேல் வாழ வாய்ப்புள்ளது எனறு ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கான கல்வி முனைப்பு நிறுவனம் பரிந்துரைத்துள்ளது.
- **காலம் தாழ்த்திய திருமணம்** பின்தங்கிய நாடுகளில் மூன்றில் ஒரு பெண் குழந்தைக்குப் பதினெட்டு வயதுக்குள் திருமணமாகிவிடுகிறது மற்றும் எந்த நாடுகளில் பெண் குழந்தைகள் ஏழு அல்லது அதற்கும் மேலான வருடங்கள் படிக்கிறார்களோ, அவர்களின் திருமணம் நான்கு ஆண்டுகள் வரை தள்ளிப்போகிறது என்று ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் பரிந்துரைக்கிறது.
- **வருமான சாத்தியம்** ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சாரா அமைப்பின் கூற்றுப்படி கல்வி ஒரு பெண்ணின் வருமானம் ஈட்டும் திறனை அதிகரிக்கிறது. ஒரு பெண் ஆரம்பக் கல்வி பெற்றாள் வட அந்த பெண்ணின் வருவாயில் 20 சதவீதம் வரை அதிகரிக்க உதவுகின்றது.
- **மொத்த உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துதல்** பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு கல்வி வாய்ப்புகள் வழங்கப்படும்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியானது உயருகிறது. 10 சதவிகிதம் கூடுதலாக பெண்கள் கல்வி கற்றால் மொத்த உள்நாட்டு உற்பத்தி சராசரியாக மூன்று சதவிகிதம் அதிகரிக்கிறது.
- **வறுமை குறைப்பு** பெண்களுக்குக் கல்வியில் உரிமைகள் சம வாய்ப்புகள் வழங்கப்பட்டால் அவர்களும் பொருளாதார செயல்பாடுகளில் பங்கேற்பர். இதனால் அவர்களின் வருவாய் ஈட்டும் திறன் அதிகரித்து வறுமை அளவைக் குறைக்க வழி ஏற்படம்.
- **சாவித்ரிபாய் புலே** பாரம்பரியத்தை உடைத்த முதல் பெண்கள் பள்ளியின் முதல் பெண் ஆசிரியர் ஆவார். பெண்கள் கல்வியை செயல்வடிவமாக்கிய ஜோதிராவ் புலே, சாவித்ரிபாயின் கணவர் ஆவார். இவர்கள் இருவரும் பெண்களுக்கான முதல் பள்ளியை 1848 ஆம் ஆண்டு தொடங்கினார்.

உலகின் முதன்மை பெண்மணிகள்

முதல் பெண்	பெயர்	நாடு
பிரதம மந்திரி	சிறிமாவோ பண்டாராநாயக	இலங்கை
விண்வெளி	வாலென்டினா	சோவியத் ஒன்றியம்
எவரெஸ்ட் சிகரத்தை அளவிட்டவர்	ஜன்கோ தபெ	ஜப்பான்
ஒலிம்பிக்கில் தங்கம் வென்றவர்	சார்லோட் கூப்பர்	இங்கிலாந்து

- முதல் மகளிர் பல்கலைக்கழகம் மகர்ஷிகார்வே 1916 இல் ஐந்து மாணவிகளுடன் புனேவில் எஸ்என்டிடி பல்கலைக்கழகதைத் தொடங்கினார்.
- மத்திய அமைச்சரவையில் பதவி வகித்த முதல் பெண் விஜயலட்சுமி பண்டிட்
- மத்திய வெளியுறவு அமைச்சர் பதவியை வகித்த முதல் பெண் சுஷ்மா ஸ்வராஜ்
- மாநிலத்தின் இளம் வயது அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் அவர் 25 வயதாக இருந்தபோது ஹரியானா அமைச்சரவையில் அமைச்சரானார்.
- சுதந்திர இந்தியாவின் முதல் பெண் ஆளுநர் சரோஜினி நாயுடு, ஒன்றினைந்த மாகாணங்களின் பொறுப்பாளர் ஆனார்.
- ஐக்கிய நாடுகளின் பொது சபையில் முதல் பெண் தலைவர் விஜயலட்சுமி பண்டிட் (1953)
- இந்தியாவில் முதல் பெண் பிரதமர் இந்திராகாந்தி (1966)
- முதல் பெண் காவல்துறை உயர் அதிகாரி கிரண்பேடி (1972)
- அமைத்திக்கான நோபல் பரிசு பெற்ற முதல் பெண் அன்னைதெரசா (1979)
- எரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் இந்திய பெண் பச்சேந்திரி பால் (1984)
- புக்கர் பரிசு வென்ற முதல் இந்திய பெண் அருந்ததி ராய் (1997)
- முதல் பெண் குடியரசுத் தலைவர் பிரதிபா பாடீல் (2007)
- மக்களவையின் சபாநாயகர் பதவிவகித்த முதல் பெண் சபாநாயகர் மீராகுமார் (2009)
- உச்ச நீதிமன்ற முதல் பெண் நீதிபதி மீராசாகிப் பாத்திமா பீவி
- இந்திய தேசிய காங்கிரசின் முதல் பெண் தலைவர் அன்னிபெசன்ட்
- இந்தியாவின் முதல் பெண் மாநில முதலமைச்சர் சுச்சித கிருபாளினி
- முதல் பெண் காவல்துறை இயக்குநர் காஞ்சன் சௌத்ரி பட்டாச்சாரியா
- இந்தியாவின் முதல் பெண் பாதுகாப்புத்துறை மற்றும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்

இந்தியாவில் ஆண்/பெண் கல்வியறிவு விகிதம் (1951 –2011)

வரிசை எண்.	மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆண்டு	நபர்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்/பெண் கல்வியறிவு இடைவெளி வீதம்
1.	1951	18.33	27.16	8.86	18.30
2.	1961	28.3	40.4	15.35	25.05
3.	1971	34.45	45.96	21.97	23.98
4.	1981	43.57	56.38	29.76	26.62
5.	1991	52.21	64.13	39.29	24.84
6.	2001	64.83	75.26	53.67	21.59
7.	2011	74.04	82.14	65.46	16.68

சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

- ஒரு சந்தை என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அமைப்புகள் வாங்கவதிலும் விற்பதிலும் ஈடுபடுகின்ற இடமாக அமைகின்றது. பணப்பரிவர்த்தனையில் ஈடுபடுகின்ற இரு தரப்பினரும் விற்பனையாளர் மற்றும் வாங்குபவர் என்று அழைக்கப்படுகிறார்கள்.
- ஏகபோக போட்டி என்ற சொல் பேராசிரியர் எட்வர்ட் எச்.1993 ஆம் ஆண்டில் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் சேம்பர்லின் தனது ஏகபோக போட்டியின் கோட்டுபாட்டு நூலின் குறிப்பிட்டுள்ளார்.
- ஒலிகோபோலி என்ற சொல் இரண்டு கிரேக்க சொற்களிலிருந்து பெறப்பட்டது. ஒலிகோய் என்றால் சில மற்றும் பாலி என்றால் கட்டுப்பாடு. எனவே ஒலிகோபோலி என்பது ஒரு சந்தை வடிவத்தைக் குறிக்கிறது. இதில் ஒரே மாதிரியான அல்லது வேறுபட்ட தயாரிப்புகளில் சில விற்பனையாளர்கள் உள்ளதைக் குறிக்கிறது.
- **நுகர்வோர் என்பவர் யார்–** நுகர்வோர் என்பவர் ஒரு பொருளை வாங்குதல் அல்லது ஒரு சேவையைப் பெறுவதற்காக அது அவரது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக அல்லது சுய வேலைவாய்ப்பு மூலம் தனது வாழ்வாதாரத்தை பெருக்கிகொள்பவர் ஆவார்.
- **நுகர்வோர் என்பவர்**
  1. பணம் செலுத்தியவர்
  2. வாக்குறுதி பெற்றவர்
  3. ஓரளவு பணம் செலுத்தியவர் மற்றும் ஓரளவு வாக்குறுதி பெற்றவர்
- **நுகர்வோர் இல்லாதவர் யார்–**
  1. எந்த வொரு பொருளையோ வாங்குகிறது அல்லது எந்தவொரு சேவையையோ இலவசமாகப் பெறுகின்ற போது
  2. வணிக நோக்கத்திற்காக ஒரு சேவையை அமர்த்துவது அல்லது பொருளை வாங்குவது

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986

- இந்திய நாடாளுமன்ற 1986 – ஆம் ஆண்டில் நுகர்வோரின் நலன்களைப் பாதுகாப்பதற்காக இயற்றப்பட்ட சட்டம் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் ஆகும். நுகர்வோர் குறைகளைத் தீர்ப்பதற்காக நுகர்வோர் கவுன்சில்கள் மற்றும் பிற அதிகாரிகள் நுகர்வோர் தொடர்புடையவர்களோடு நுகர்வோருக்கு உதவும் வகையில் உள்ளது. இச்சட்டம் அக்டோபர் 1986 இல் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு 1986 டிசம்பர் 24 முதல் இந்தியாவில் நடைமுறைக்கு வந்தது.

எட்டு அடிப்படையான நுகர்வோர் உரிமைகள்

1. அடிப்படைத் தேவைகளுக்கான உரிமை
2. பாதுகாப்புக்கான உரிமை
3. தகவல் அறியும் உரிமை
4. தேர்ந்தெடுக்கும் உரிமை
5. பிரதிநிதித்துவ உரிமை
6. குறைதீர்க்கும் உரிமை
7. நுகர்வோர் கல்வி மற்றும் உரிமை
8. தூய்மையான சுற்றுப்புறச் சூழலைப் பெறுவதற்கான உரிமை

- நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் ***நுகர்வோருக்கான மகா சாசனம்*** என்று அழைக்கப்படுகிறது.

நுகர்வோர் குறை தீர்க்கும் முகவர்

- தேசிய நுகர்வோர் குறை தீர் ஆணையம் மத்திய அரசால் நிறுவப்பட்டது. இவ்வாணையம் 1 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புமிக்க நுகர்வோர் குறைகளை தீர்க்க முயல்கிறது. இது மத்திய நுகர்வோர் நீதிமன்றம் ஆகும்.
- மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மாநில அரசால் நிறுவப்பட்டது. இவ்வாணையம் 1 கோடி ரூபாய்க்கும் குறைவான மதிப்புமிக்க நுகர்வோர் குறைகளை மாநில அளவிலான தீர்க்கும் நீதிமன்றமாகும்.
- மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாநில அரசால் நிறுவப்பட்டு அது மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் எனவும் அழைக்கப்படுகிறது.
- மாநில அரசாங்கம் ஒரு மாவட்டத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்ட மன்றங்களை நிறுவலாம். இது மாவட்ட அளவிலான நீதிமன்றம்மாகும். இது ரூ 20 லட்சம் மதிப்புமிக்க அளவிலான குறைகளை தீர்க்கும் மாவட்ட நீதிமன்றமாகும்.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019

- இந்திய பாராளுமன்றத்தில் ஆகஸ்ட் 2019 ஆம் ஆண்டு ஒரு மைல்கல் என்று அழைக்கப்படும். நுகர்வோர் பாதுகாப்பு மசோதா, 2019 இல் நிறைவேற்றப்பட்டது. இந்த நவீன தொழில்நுட்பகாலத்தில் நுகர்வோர்களின் குறைகளை குறித்த நேரத்திலும், பயனுள்ள நிர்வாகத்தையும், நியாயமான தீர்வையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.
- புதிய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மத்திய அரசு அறிவிக்கும் தேதியில் இருந்து நடைமுறைக்கு வரும். புதிய நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் முப்பது வருடங்களுக்கு மேலான சட்டமாகும்.
- பழைய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986– இல் மாற்றங்களை ஏற்படுத்த முற்படுகிறது.

புதிய சட்டத்தின் சிறப்பம்சங்கள்

- **இ– வணிக பரிவர்த்தனைகள்–** புதிய சட்டம் நுகர்வோர் என்ற வறையறையை விரிவுபடுத்தியுள்ளது. இணையத்தின் நேர்முகக் கட்டுப்பாட்டில் உள்ள பரிவர்த்தனைகள், மின்னணு வழிமுறைகள், தொலைநோக்கி, நேரடி விற்பனை அல்லது பலநிலை சந்தைப்படுத்தல் மூலம் எந்தவொரு பொருளையும் வாங்கும் எந்தவொரு நபரும் இப்போது அமைப்பில் உள்ளனர்.
- **பணவியல் அதிகார வரம்பை மேம்படுத்துதல்–** திருத்தப்பட்ட பணவியல் அதிகார வரம்பு– புதிய சட்டத்தி கீழ் திருத்தப்பட்ட பண வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டன. அதன்படி மாவட்ட நுகர்வோர் நீதி மன்றம் இப்போது நுகர்வோர் புகார்களை ஏற்றுக்கொள்ள முடியும்.
- அங்கு செலுத்தப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் மதிப்பு 10,000,000 ரூபாய்க்கு மிகாமல் இருக்கும், என்றால் மாநில நுகர்வோர் ஆணையம் விசாரிக்க முடியும் அதுவே 10,000,000 ரூபாய்க்கு மேல் மதிப்பு இருக்குமானால் அத்தகையவற்றை தேசிய நுகர்வோர் ஆணையம் விசாரிக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளது,
- **புகார்களை இ–தாக்கல் செய்தல்–** புதிய சட்டம் நுகர்வோருக்கு மின்னணு முறையில் புகார்களைத் தாக்கல் செய்வதற்கும் ஒளிகாட்சிக் கலந்தாய்வுக் கூடம் மூலம் வாதிகளைக் கேட்பதற்கும் அல்லது ஆய்வு செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது.
- **மத்திய நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரத்தை நிறுவுதல்** புதிய சட்டம் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் என அழைக்கப்படும். ஒரு ஒழுங்குமுறை அதிகாரத்தை நிறுவுவற்கு முன்மொழிகிறது மத்திய நுகர்வோர் பாதுகப்பு ஆணையத்திற்கு ஒரு தலைமை இயக்குநர் தலைமையில் ஒரு விசாரணைபிரிவு இருக்கும். இது நுகர்வோர் சட்ட மீறல்கள் குறித்து விசாரணை அல்லது விசாரணையை நடத்தக்கூடும்.
- **நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள்** புதிய சட்டம் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளுக்கு ஒரு குறிப்பிட்ட பரந்த வரையறையை அறிமுகப்படுத்துகிறது. இது வேறு எந்த சட்டத்தின் விதிகளின்படி வெளிப்படுத்தப்படாவிட்டால், நுகர்வோர் நம்பிக்கையுடன் வழங்கிய தனிப்பட்ட தகவல்களைப் பகிர்வதும் அடங்கும்.
- **தவறான விளம்பரத்திற்கு அபராதம்** தவறான விளம்பரத்திற்காக மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் ஒரு உற்பத்தியாளர் அல்லது ஒப்புதல் அளிப்பவருக்கு 1,000,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கலாம். மத்திய நுகர்வோர் பாதுகப்பு ஆணையம் தவறான விளம்பரத்திற்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கலாம். அடுத்தடுத் குற்றத்தில் அபராதம் 5,000,000 ரூபாய் மற்றும் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். தவறான விளம்பரத்திற்கு ஒப்புதல் அளிப்பவர் குறிப்பிட்ட தயாரிப்பு அல்லது சேவையை ஒரு வருடம் வரை ஒப்புதல் அளிப்பதை மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் தடை செய்யலாம். ஒவ்வொரு அடுத்தடுத்த குற்றத்திற்கும் தடைக்காலம் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கப்படலாம்.

இந்தியாவில் நுகர்வோர் நீதிமன்றங்கள்

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்(NCDRC)

- ஒரு தேசிய அளவிலான நீதிமன்றம் இந்தியா முழுவதற்கும் குறைதீர் ஆணையமாக செயல்படுகிறது. இழப்பீடு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இருந்தால் தேசிய ஆணையம் நுகர்வோர் நீதிமன்றங்களின் உச்ச அமைப்பாகும்.
- இவ்வகை நுகர்வோர் நிதிமன்றங்கள் மிக உயர்ந்த மேல்முறையீட்டு நீதிமன்றமாகும். தேசிய நுகர்வோர் குறைதீர் நிவாரண ஆணையம். இந்தியாவில் ஒரு பகுதியான நீதி ஆணையமாகும். இது 1986 ஆம் ஆண்டில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1988 –இல் அமைக்கப்பட்டது அதன் தலைமை அலுவலகம் புது டெல்லியில் உள்ளது. இந்த ஆணையம் அதனை இந்தியாவில் உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியின் தலைமையில் செயல்படுகிறது.

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்(SCDRC)

- மாநில அளவில் ஒரு நீதிமன்றம் செயல்படுகிறது. இழப்பீடு கோரப்பட்ட வழக்குகள் 20 லட்சதிற்கும் மேல் இருக்குமானால் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் அதனை ஏற்கிறது. மாவட்ட ஆணையத்தின் மேல்முறையீட்டு அதிகார வரம்பை மாநில ஆணையம் கொண்டுள்ளது.

மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்(DCDRC

- மாவட்ட நுகர்வோர் குறைதீர்நீதிமன்றம் இழப்பீடு 20 லட்சம் வரை விசாரிக்க அனுமதிக்கிறது. மாவட்ட அளவிலான நீதிமன்றம் மாவட்ட அளவில் செயல்படுகிறது.
- **முக்கியமான சட்டங்கள்**
  1. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986
  2. சட்ட அளவீடு சட்டம், 2009
  3. இந்திய தர நிர்ணய பணியகம் 1986
  4. அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1955
  5. கறுப்பு சந்தைப்படுத்துதல் தடுப்பு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் பராமரிப்பு பொருட்களின் சட்டம், 1980

சாலை பாதுகாப்பு

- உலகத்திலேயே, அதிகமான சாலை விபத்துகள் இந்தியாவில்தான் ஏற்படுகின்றன என்பது மிகவும் வருந்தக்கச் செய்தியாகும்.
- உலகளவில் 10 சதவிகிதம் சாலை விபத்துகளுக்கு இந்தியா பொறுப்பாகிறது. சாலை விபத்துகள், இந்திய மக்களின் வாழ்வு, வளர்ச்சி மற்றும் பொருளாதாரத்தைப் பெரிதும் அச்சுறுத்துகின்றன.

- இந்திய சட்டப்படி ஒருவர் வாகன ஓட்டுநர் உரிமம் பெறும் வயது 18 ஆகும்.
- சாலை போக்குவரத்து சட்டம், பாராளுமன்றத்தால் 1988 இல் ஏற்படுத்தப்பட்டு 1989 இல் நாடு முழுவதிற்குமாக நடைமுறைபடுத்தப்பட்டுள்ளன.
- **கார்பூலிங்** ஒவ்வொருவரும் ஒரு இடத்திற்கு வழக்கமாக மகிழுந்தில் செல்லும்போது அந்த இடத்திற்கு அதிகமான மகிழுந்து செலுத்தப்படுகிறது. இதை தவிர்க்க மகிழுந்தில் பயணப் பகிர்வு மேற்கெண்டு ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அதிக மகிழுந்து செல்வதை தடுத்தல்.
- ஒரே பகுதியிலிருந்தோ அல்லது ஒரே வழித்தடத்தில் தினந்தோறம் மகிழுந்து அல்லது இருசக்கர வாகனத்தில் செல்பவர்கள் அதே இடத்திற்கோ அல்லது அதே தடத்தில் செல்பவர்களை உடன் அழைத்துச் செல்வதே கார்பூலிங் ஆகும்.
- **ரக்ஷா பாதுகாப்பான வாகன இயக்கம்–** ரக்ஷா ஒரு தானியங்கி கருவி. இது வாகனத்தில் பொருத்தப்பட்டு வாகனம் தற்போது எங்கு உள்ளது என்பதையும், வாகனத்தின் இயந்திரத்தின் செயல்பாட்டினை கண்காணிக்கவும், வாகனத்தின் பதட்ட நிலைமையும் உடனடியாக வெளிப்படுத்துகிறது.
- **இந்திய தண்டனைச் சட்டம் 304 அ பிரிவு** – கண்மூடித்தனமாக ஓட்டுவதாலும் ஓட்டுநரின் அலட்சியம் காரணமாகவும் எற்படும் இறப்பு தொடர்பான குற்றங்களுக்கு ஓட்டுநர் மீது காவல் துறை மேற்கூறிய பிரிவின் கீழ் கிரிமினல் குற்ற வழக்கு பதிவு செய்ய நேரிடும்.

- **சேது பாரதம் –** தேசிய நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பாக மற்றும் தடையற்ற பயணம் செய்ய பாலங்களை கட்டுவதற்கான திட்டம் 2016 இல் தொடங்கப்பட்டது. அது 2019 ஆம் ஆண்டிற்குள் அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளையும், இருப்புப்பாதை குறுக்கீடு இல்லாமல் உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் 2011–2020 வரையிலான பத்தாண்டுகள் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகான பதிற்றாண்டாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் செயல்பாடுகள்

- நமது நாட்டில் மத்திய அரசு, மாநில அரசு என்ற இரண்டு வகை அரசாங்கள் நடைமுறையில் உள்ளன. இந்தியாவில் 29 மாநில அரசாங்கங்கள் செயல்படுகின்றன.
- ஒவ்வொரு மாநிலமும் தனது நிர்வாகத்தைக் கவனித்துக்கொள்ள தனக்கென ஒரு அரசைக் கொண்டுள்ளது. அந்த வகையில் ஒவ்வொரு மாநிலமும் நிர்வாகம், சட்டமன்றம் மற்றும் நீதித்துறையை கொண்டுள்ளது. மாநில நிர்வாகம் மாநில ஆளுநர் மற்றும் முதலமைச்சர் தலைமையிலான அமைச்சரவையால் மேற்கொள்ளப்படுகிறது. மாநில ஆளுநர் சட்டமன்றத்தின் ஒரு அங்கமாகத் திகழ்கிறார்.

ஆளுநர்

- மாநில அரசின் தலைவராக மாநில ஆளுநர் இருப்பார் என இந்திய அரசியலமைப்பு சட்டம் குறிப்பிடுகிறது. இந்தியக் குடியரசுத் தலைவரால் ஆளுநர் நியமிக்கப்படுகிறார். இவர் மாநில நிர்வாகத்தின் தலைவராக இருக்கிறார்.
- அவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் எனினும் அவரின் பதவிக்காலம் முடியும் முன்னரே அவரை அப்பதவியிலிருந்து குடியரசத் தலைவர் நீக்கலாம் அல்லது தானகவே தனது பதவியை ஆளுநர் ராஜினாமா செய்யலாம். ஆளுநரின் பதவிக்காலம் நீட்டிக்கப்படலாம் அல்லது வேறு மாநிலத்திற்குப் பணியிட மாற்றம் செய்யப்படலாம்.
- ஆனால் மாநில அரசாங்கம் ஆளுநரை பதவியிலருந்து நீக்க இயலாது.
- குடியரசுத் தலைவர் மாநில ஆளுநரை நியமிக்கும் போது மத்திய அமைச்சரவையின் ஆலோசனையின்படி செயல்படுகிறார். மேலும் தொடர்புடைய மாநில அரசையும் கலந்தாலோசிக்கிறார். பொதுவாக ஒருவார் ஆளுநராக அவரது சொந்த மாநிலத்தில் நியமிக்கப்படுவது இல்லை.

ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள்

- இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
- 35 வயது நிரம்பியவராகவும் இருத்தல் வேண்டும்.
- அவர் பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தில் உறுப்பினராக இருத்தல் கூடாது.
- ஆதாயம் தரும் எந்த ஒரு பதவியையும் அவர் வகித்தல் கூடாது.

ஆளுநரின் அதிகாரம் மற்றும் பணிகள்

- ஆளுநர் ஒரு மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார். மாநில அரசின் நிர்வாக அதிகாரங்கள் ஆளுநரிடம் உள்ளன. மாநில அரசாங்கத்தின் அனைத்து நிர்வாக செயல்களும் ஆளுநரின் பெயரால் மேற்கொள்ளப்படுகின்றன. ஆளுநர் முதலமைச்சரையும் அவரது ஆலோசனையின் பேரில் ஏனைய அமைச்சர்களையும் நியமிக்கிறார்.
- மாநில அரசின் தலைமை வழக்கறிஞர், மாநில அரசு பணியாளர் தேர்வாணையத்தின்தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்வதோடு சில இதர நியமனங்களையும் மேற்கொள்கிறார்.
- ஆளுநரின் அறிக்கையின் படி குடியரசு தலைவர் அரசியலமைப்புச் சட்டம் பிரிவு **356** ஐ பயன்படுத்தி ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை ஏற்படுத்துகிறார். மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்களின் வேந்தராக ஆளுநர் செயல்படுகிறார்.
- மாநில சட்டமன்ற கூட்டத்தைக் கூட்டவும், ஒத்திவைக்கவும் அதிகாரம் கொண்டுள்ளதோடு மட்டுமல்லாமல் சட்டமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளார்.
- ஆளுநரின் ஒப்புதலுக்குப் பின்னரே பண மசோதாவைச் சட்டமன்றத்தில் கொண்டுவர முடியும். சட்டமன்ற கூட்டம் நடைபெறாத போது ஆளுநர் அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்கிறார்.
- சட்டமன்றத்திற்கு ஒரு ஆங்கிலோ இந்திய உறுப்பினரை அவர்கள் போதிய அளவு பிரதிநிதித்துவம் பெறாதபோது நியமனம் செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளார். மாநில சட்ட மேலவைக்கு அறிவியல், இலக்கியம், கலை, சமூக சேவை, கூட்டுறவு இயக்கம் ஆகிய துறைகளில் சிறப்பாகப் பங்காற்றிய அறிஞர்களில் ஆறில் ஒரு பங்கு அளவிற்கு பிரதிநிதித்துவ அடிப்படையில் நியமிக்கிறார்.

- மாநில அரசாங்கத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கை ஆளுநரின் ஒப்புதலுடன் சட்டமன்றத்தில் சமர்பிக்கப்படுகிறது.
- சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பண மசோதா உள்ளிட்ட அனைத்து மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளிக்கிறார். மாநில அரசின் எதிர்பாரா செலவின நிதி ஆளுநரின் கட்டுப்பாட்டில் மட்டுமே இருக்கும்.

ஆளுநரின் நிலை

- மாநில ஆளுநர் குடியரசுத் தலைவரைப் போன்று மாநிலத்தில் பெயரளவு நிர்வாகத் தலைவராக உள்ளார். எனினும் மாநில ஆளுநர் எப்போதும் பெயரளவு தலைவராக இருப்பது இல்லை. அவர் தனது அதிகாரங்களை குறிப்பிட்ட சில நேர்வுகளில் செயல்படுத்துகிறார்.
- மத்திய அரசின் ஒரு முகவராக மாநிலத்தில் செயல்படுகிறார். எனவே இவர் மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஆகியவற்றிற்கிடையேயான உறவுகளைப் பராமரிப்பதற்குப் பொறுப்பு வாய்ந்தவர் ஆவார்.
- ஆளுநர் முக்கியமான தருணங்களில் அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்குகிறார். மாநிலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான ஆளுநரின் அறிக்கையின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் மாநிலத்தில் நெருக்கடி நிலையை அறிவிக்கிறார்.
- ஆளுநர் விரும்புரிமை அதிகாரத்தை செயல்படுத்தும் போது தன்னிச்சையான முடிவுகளை எடுக்கிறார்.
- அவர் அமைச்சரவையிடமிருந்து அரசாங்கத்தின் செயல்பாடுகள் குறித்த தகவல்களைக் கோரிப் பெறலாம்.

முதலமைச்சர்

- ஆளுநர் மாநில சட்டமன்றத்தில் பெரும்பான்மை கொண்டுள்ள கட்சியின் தலைவரை மாநில முதலமைச்சராக நியமிக்கிறார்.
- முதலமைச்சர் அமைச்சரவையின்தலைவர் ஆவார். முதலமைச்சரின் பதவிக்காலம் நிலையான ஒன்று அல்ல. அவர் சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலம் உள்ளவரை முதலமைச்சர் பதவியில் நீடிக்கலாம்.
- சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை இழக்கும்போது அவர் பதவி விலகுதல் என்பது ஒட்டுமொத்த அமைச்சரவையு பதவி விலகுதலைக் குறிக்கும்.
- முதலமைச்சர் மாநில சட்டமன்றத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். முதலமைச்சராக பதவி ஏற்கும் போது உறுப்பினராக இல்லாவிட்டால் 6 மாதத்திற்குள் சட்டமன்றத்தில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

முதலமைச்சரின் அதிகாரம் மற்றும் செயல்பாடுகள்

- முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார். மாநில அரசாங்கத்தின் பல்வேறு முக்கிய முடிவுகள் அவரது தலைமையின் கீழ் எடுக்கப்படுகின்றன.
- மாநில முதலமைச்சர், அமைச்சரவையை, உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறார். முதலமைச்சரின் ஆலோசனையின் பெயரில் அமைச்சர்களை ஆளுநர் நியமிக்கிறார்.
- பல்வேறு துறைகளை கண்காணித்து ஆலோசனை வழங்குகிறார். மேலும் அவர் பல்வேறு துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.
- முதலமைச்சர் மாநில அரசாங்கத்தின் கொள்கைகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறார். அவர் மாநில அரசின் கொள்கைகள் மக்களின் நலனுக்கு எதிராக இல்லாததை உறதி செய்கிறார். மாநில அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளில் அவரது முடிவே இறுதியாக இருக்கும்.
- மாநில அரசாங்கத்தின் உயர் பதவிகளில் நியமனம் செய்யும் முக்கிய அதிகாரத்தைக் கொண்டுள்ளார். முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையின் உயர் அதிகாரியை நியமிக்கிறார்.

மாநில சட்டமன்றம்

- இந்தியாவில் மாநிலசட்டமன்றம் என்பது ஆளுநரையும் ஒன்று அல்லது இரண்டு அவைகளையும் கொண்டிருக்கும். மேலவை என்பது சட்டமன்ற மேலவை எனவும் கீழவை என்பது சட்டமன்ற பேரவை எனவும் அழைக்கப்படுகிறது.
- ஈரவை சட்டமன்றம் கொண்ட மாநிலங்கள் உத்திரபிரதேசம், தெலுங்கானா, ஆந்திரப்பிரதேசம், பீகார், கர்நாடகம், மகாராஷ்டிரம், ஜம்மு காஷ்மீர்

சட்டமன்ற மேலவை

- ஒரு மாநிலத்தின் சட்ட மன்ற மேலவையானது நாற்பது உறுப்பினர்களுக்குக் குறையாமலும், அம்மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும் என அரசியலமைப்புச் சட்டம் குறிப்பிடுகிறது. இதன் உறுப்பினர்கள் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
    - மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள மாவட்ட பஞ்சாயத்து மற்றும் நகராட்சி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

- மேலும் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- பன்னிரண்டில் ஒரு பங்கு உறுப்பினர்கள் பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மற்றொரு பன்னிரண்டில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இடைநிலை பள்ளி ஆசிரியர்கள்,கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- ஆறில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மாநில ஆளுநரால் நியமிக்கப்படுகின்றனர்.

- சட்டமன்ற மேலவை ஒரு நிலையான அவையாகும். இதன் உறுப்பினர்கள் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஓய்வு பெறுவர்.
- அக்காலிப் பணியிடங்களுக்கு தேர்தல் நடைபெறும். உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் ஆகும். உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒருவர் இந்தியக் குடிமகனாகவும், 30 வயது நிரம்பியவராகவும் இருத்தல் வேண்டும்.
- இவர் மாநில சட்டமன்றத்திலும் அல்லது பாராளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் உறுப்பினராக இருத்தல் கூடாது.
- தலைமை அலுவலராக அவைத்தலைவர் இருப்பார். அவைத்தலைவர் இல்லாதபோது துணைத் தலைவர் அவையை நடத்தும் பொறுப்பினை கொண்டிருப்பார்.
- சட்டமன்ற மேலவையின் தலைவர் மற்றும் துணைத் தலைவரை அவையின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்றனர்.

சட்டமன்றப் பேரவை

- மாநில அரசாங்கத்தின் சட்டங்களை உருவாக்குபவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் என அழைக்கப்படுகின்றனர்.
- இவர்கள் பல்வேறு சட்டமன்ற தொகுதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சட்டமன்ற தேர்தலுக்காக, மாநிலம் பல்வேறு தொகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. இவை சட்டமன்ற தொகுதிகள் என அழைக்கப்படுகின்றன.
- ஒரு சட்டமன்ற தொகுதி ஒரு லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலிருந்தும் ஒரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

சட்டமன்ற பேரவைக்கான தேர்தல்

- சட்டமன்ற பேரவைக்கான தேர்தலில் பல்வேறு அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றன. இக்கட்சிகள் ஒவ்வொரு தொகுதிக்கும் தமது வேட்பாளர்களை நியமிக்கின்றனர்.
- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் மக்களிடம் தமக்கு வாக்களிக்குமாறு கோருகிறார். சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் ஒருவர் 25 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
- ஒருவர் ஒரே சமயத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொகுதிகளில் போட்டியிடலாம். எந்த கட்சியையும் சாராத ஒருவரும் தேர்தலில் போட்டியிடலாம்.
- அவ்வாறு போட்டியிடும் வேட்பாளர் சுயேட்சை வேட்பாளர் என அழைக்கப்படுகிறார். ஒவ்வொரு கட்சியும் தனக்கென ஒரு சின்னத்தை கொண்டிருக்கும். சுயேட்சை வேட்பாளர்களுக்கும் சின்னம் வழங்கப்படும்.
- சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒரு சட்டமன்ற தொகுதியில் வசிக்கும் 18 வயது நிரம்பிய அனைவரும் சட்டமன்ற தேர்தலில் வாக்களிக்கலாம்.
- அரசியலமைப்பின்படி ஒரு மாநில சட்டமன்றத்தில் 500 உறுப்பினர்களுக்கு மேலாகவும் 60 உறுப்பினர்களுக்கு குறைவாகவும் இருத்தல் கூடாது.
- அட்டவணைப் பிரிவினர், பழங்குடியினருக்கு சட்டமன்றத்தில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மாநில ஆளுநர் சட்டமன்றத்திற்கு ஒரு ஆங்கிலோ இந்திய உறுப்பினரை நியமனம் செய்கிறார்.
- சட்டமன்ற உறுப்பினர்கள் ஐந்தாண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால் மாநில ஆளுநர், சட்டமன்றத்தின் பதவிக்காலம் முடிவதற்கு முன்பாகவே அதனை கலைத்து புதிதாக தேர்தல் நடத்த அழைப்பு விடுக்கலாம்.
- சட்டமன்ற கூட்டத்திற்கு சபாநாயகர் தலைமை ஏற்கிறார். இவர் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். சபாநாயகர் இல்லாத நேர்வுகளில் துணை சபாநாயகர் சட்டமன்ற கூட்டத்திற்கு தலைமை ஏற்கிறார்.

மாநில அமைச்சரவை

- தேர்தலில் பெரும்பான்மை பெரும் கட்சியின் தலைவர் முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- தமிழ்நாட்டில் 234 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. 118க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற்ற கட்சி ஆளுநரால் ஆட்சி அமைக்க அழைக்கப்படுகிறது.

- முதலமைச்சர் (இவரும் ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருத்தல் வேண்டும்) அவரது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து, அமைச்சர்களை தேர்வு செய்கிறார். இவ்வாறு முதலமைச்சர் மற்றும் அவரது தலைமையிலான பல்வேறு துறை அமைச்சர்களும் கொண்ட அமைப்பு மாநில அரசாங்கம் என அழைக்கப்படுகிறது.

மாநில அரசாங்கத்தின் செயல்பாடுகள்

- சட்டமன்றத்திற்கு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அதன் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல் வேண்டும். சட்டமன்றம் ஆண்டிற்கு இரண்டு அல்லது மூன்று முறை கூடும்.
- மாநிலத்திற்கான சட்டங்களை இயற்றுவது சட்டமன்றத்தின் சட்டங்களை இயற்றுவது சட்டமன்றத்தின் முக்கிய பணி ஆகும்.
- சட்டமன்றம் மாநிலப் பட்டியல் மற்றும் மத்தியப் பட்டியலில் உள்ள துறைகள் தொடர்பாக நிலை நடைமுறையில் உள்ளபோது சட்டமன்றம் தனது சட்டமியற்றும் அதிகாரத்தைப் பயன்படுத்த இயலாது.
- மாநில சட்டமன்றம் அமைச்சரவையின் மீது கட்டுப்பாட்டினை செலுத்துகிறது. மாநில அமைச்சரவை சட்டமன்றத்திற்கு பொறுப்புற்றதாகவும் மற்றும் பதில் அளிக்கவும் கடமைப்பட்டுள்ளது.
- அமைச்சரவையின் செயல்பாடுகளில் திருப்தி ஏற்படாவிட்டால் மாநில சட்டமன்றத்தில் ஒரு நம்பிக்கை இல்லா தீர்மானத்தை இயற்றி அமைச்சரவையை நீக்கம் செய்திடலாம்.
- மாநில சட்டமன்றம் ஆனது மாநிலத்தின் நிதியைக் கட்டுப்படுத்துகிறது. நிதி மசோதாவை சட்டமன்றத்தில் மட்டுமே கொண்டுவர இயலும்.
- சட்டமன்றத்தின் அனுமதி இல்லாமல் மாநில அரசாங்கம் வரியினை விதிக்கவோ, அதிகரிக்கவோ, குறைக்கவோ,விலகிக்கொள்ளவோ இயலாது.
- சட்டமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் பங்கேற்கின்றனர்.
- மாநிலங்களவை உறப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் சட்டமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் பங்கு கொள்கின்றனர்.
- அரசியலமைப்பைத் திருத்தும் சில நேர்வுகளில் சட்டமன்றம் பங்கு வகிக்கிறது. எனவே அரசாங்கமானது சட்டத்தை உருவாக்குதல், சட்டத்தை நடைமுறைப்படுத்துதல், நீதியை உறுதி செய்தல் ஆகிய மூன்று அடிப்படை பணிகளைக் கொண்டுள்ளது.

மாநில அரசாங்கத்தின் சட்டங்கள் எவ்வாறு இயற்றப்படுகின்றன

- நாட்டு மக்களுக்காக பல்வேறு வகையான விதிகள் மற்றும் சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. சட்டங்களை நடைமுறைப்படுத்துவது மாநில அமைச்சரவையின் பணியாகும். தமிழ்நாடு சட்டமன்றம் சென்னையில் அமைந்துள்ளது.
- ஒரு மாநிலத்தில் சட்டமன்றம் மற்றும் அமைச்சரவை பொதுவாக எங்கு செயல்படுகிறதோ அதுவே மாநிலத்தின் தலைநகரம் ஆகும்.
- சட்டமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்த மாவட்ட ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வருவாய் அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், காவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மருத்துவர்கள் என பல லட்சக்கணக்கான பணியாளர்கள் மாநில அரசாங்கத்தால் பணியமர்த்தப்பட்டிருக்கின்றனர்.
- அவ்வகையான அலுவலர்களுக்கு மாநில அரசாங்கம் ஊதியம் வழங்குகிறது. இவர்கள் மாநிலஅரசாங்கம் ஊதியம் வழங்குகிறது. இவர்கள் மாநில அரசின் ஆணைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்.
- மாநில சட்டமன்றமும் சாதாரண அல்லது பண மசோதாக்களை நிறைவேற்றுவதில் பாராளுமன்றம் பின்பற்றும் நடைமுறைகளையே பின்பற்றுகிறது. சட்டமன்றபேரவை சட்டமன்ற மேலவையைக் காட்டிலும் அதிக அதிகாரம் கொண்டதாகும்.

மாநிலத்தின் நீதித்துறை

உயர்நீதிமன்றம்

- மாநிலத்தில் உயரிய நீதி அமைப்பாக உயர் நீதிமன்றம் விளங்கிறது. அரசியலமைப்பின் படி ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு உயர் நீதிமன்றம் இருக்கும்.
- எனினும் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் அல்லது யூனியன் பிரதேசங்களுக்கு பொதுவான ஒரு உயர்நீதிமன்றமும் இருக்கலாம்.
- மாநில உயர்நீதிமன்றம் ஒர தலைமை நீதிபதியையும் குடியரசுத் தலைவர் தேவைக்கு ஏற்ப அவ்வப்போது நியமனம் செய்யும் இதர நீதிபதிகளையும் கொண்டிருக்கும்.

- உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை நிலையாகவும் ஒரே மாதிரியாகவும் இருப்பதில்லை. குடியரசுத்தலைவர் ,உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியையும் மாநில ஆளுநரையும் கலந்தாலோசித்து உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியை நியமனம் செய்கிறார்.
- உயர்நீதிமன்றத்தின் நீதிபதி பின்வரும் தகுதிகளை கட்டாயம் கொண்டிருத்தல் வேண்டும்.
    - இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
    - இந்தியாவில் பத்தாண்டு காலம் நீதித்துறை அலுவலராக பணியாற்றி இருக்க வேண்டும்.
    - ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உயர் நீதிமன்றங்களில் வழக்குரைஞராக குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
- உயர்நீதிமன்ற நீதிபதி 62 வயது வரை அப்பதவியில் இருப்பார். உயர்நீதிமன்ற நீதிபதி நிரூபிக்கப்பட தவறான நடத்தை மற்றும் திறமை இன்மை ஆகியவற்றின் அடிப்படையில் உச்சநீதிமன்ற நீதிபதிகளை நீக்குவது போன்று நீக்கப்படலாம்.

உயர்நீதிமன்றத்தின் அதிகாரம் மற்றும் பணிகள்

- அடிப்படை உரிமைகள் மற்றும் இதர நோக்கங்களை வலியுறுத்த உயர்நீதிமன்றம் ஆட்கொணர்வு நீதிப் பேராணை, தகுதி முறை வினவும் நீதிப்பேராணை, தடை உறுத்தும் நீதிப்பேராணை, கட்டளையிடும் நீதிப்பேராணை மற்றும் ஆவணங்களை தாக்கல் செய்ய வலியுறுத்தும் நீதிப் பேராணை ஆகியவற்றைப் பிறப்பிக்கின்றன.
- ஒவ்வொரு உயர்நிதிமன்றமும் தனது அதிகார எல்லைக்குள் உள்ள ராணுவ நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்கள் நீங்கலாக அனைத்து சார்நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களை கண்காணிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.
- சார்நிலை நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள உள்ள ஒரு வழக்கில் அதில் சட்ட முகாந்திரம் உள்ளது என உயர்நீதிமன்றம் திருப்தியுறும் போது இவ்வழக்கினை எடுதது தானே முடிவு செய்யலாம்.
- உயர் நீதிமன்றம் மாநிலத்தில் உள்ள அனைத்து சார் நிலை நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துகிறது,
- உயர்நீதிமன்றம் உச்ச நீதிமன்றத்தைப் போலவே வழக்குகள் பற்றிய பதிவேடுகளின் ஆதாரச் சான்றாக உள்ள பதிவுறு நீதிமன்றமாக விளங்குகிறது.
- நீதி நிர்வாகத்திற்காக ஒவ்வொரு மாநிலமும் பல்வேறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டமும் மாவட்ட நீதிமன்றத்தின் எல்லைக்குள் அமைந்திருக்கும்.
- மாவட்ட நீதிபதிகள் ஆளுநரால் நியமனம் செய்யப்படுகின்றனர். மேலே தெரிவித்த அதிகாரங்களை தனது எல்லைக்குள் செயல்படுத்தும் போது நீதிமன்றம் முழு அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் கொண்டுள்ளது.
- அரசியலமைப்பின் பாதுகாப்பு என்பது நீதிமன்றங்கள் சுதந்திரமாக செயல்படுவதன் மூலம் உறுதி செய்யப்படுகிறது,

குடிமக்களும் குடியுரிமையும்.

- குடிமகள் என்ற சொல் சிவிஸ் என்னும் இலத்துன் வார்த்தையிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் பண்டைய ரோமாபுரியில் இருந்த நகர நாடுகளில் ***குடியிருப்பாளர்*** என்பதாகும்.
- ஒரு அரசால் வழங்கப்பட்ட சட்ட உரிமைகளையும், சலுகைகளையும் அனுபவிப்பவரும் , அதே வேளையில் நாட்டின் சட்டங்களை மதித்து நடப்பவரும், அவருக்கான கடமைகளை நிறைவேற்றுபவருமே அந்நாட்டின் குடிமகள் ஆவார்.
- குடியுரிமை என்பது ஒரு குடிமகள் அவர் விரும்பும் காலம் வரையில் அந்நாட்டில் சட்டப்படியாக வசிக்கும் உரிமையை வழங்குதலே ஆகும்.
- **நாட்டுரிமை மற்றும் குடியுரிமை** – பூர்வீகம், பிறப்பு மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட நாட்டினர் இயல்பாக பெறும் நிலை நாட்டுரிமை எனப்படும். சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு ஒரு நாட்டின் அரசாங்கத்தால் தனி ஒருவருக்கு வழங்கப்படுவது குடியுரிமை எனப்படும்.

குடியுரிமையின் வகைகள்

- குடியுரிமை இரண்டு வகைப்படும்.
    1. இயற்கை குடியுரிமை– பிறப்பால் இயற்கையாக பெறக்கூடிய குடியுரிமை
    2. இயல்புக் குடியுரிமை – இயல்பாக விண்ணப்பித்து பெறும் குடியுரிமை
- இந்திக் குடியுரிமைச் சட்டம், 1955 இந்தியக் குடியுரிமையை பெறுதலையும், நீக்குதலையும் பற்றிய விதிகளை இச்சட்டம் கூறுகிறது.
- இச்சட்டம் அரசியலமைப்பு சட்ட திருத்தத்தால் எட்டு முறை திருத்தப்பட்டுள்ளது. முதலில் இக்குடியுரிமைச் சட்டம் காமல்வெல்த் குடியுரிமை வழங்கியது. ஆனால் 2003 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் படி இவ்வுரிமை நீக்கப்பட்டது

குடியுரிமையை பெறுதல்

- 1955 ஆம் ஆண்டு இந்தியக் குடியுரிமைச் சட்டம் குடியுரிமை பெறுவதற்கான ஐந்து வழிமுறைகளை பரிந்துரைக்கிறது. அவைகள் பின்வருவனவாறு வகைப்படுத்தப்படுகின்றன.

1. பிறப்பால் குடியுரிமை பெறுதல்

- இக்குடியுரிமை பிறப்பிடத்தால் தீர்மானிக்கப்படுகிறது. 1950 ஜனவரி 26 முதல் 1987 சூலை வரை இந்தியாவில் பிறந்த குழந்தைகளின் பெற்றோர் எந்த நாட்டவராக இருப்பினும் அவர்கள் பிறப்பால் குடியுரிமை பெறுகின்றனர்.
- 1987 சூலை 1 மற்றும் அதற்குப் பின் இந்தியாவில் பிறக்கும் குழந்தையின் பெற்றோரில் ஒருவர் அச்சமயத்தில் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 2004 டிசம்பர் 3 மற்றும் அதற்குப் பின் இந்தியாவில் பிறந்தவர்கள் பிறப்பால் குடியுரிமை பெறுகின்றனர். அல்லது பெற்றோரில் ஒருவர் இந்தியக் குடிமகனாகவும் மற்றொருவர் சட்ட விரோதமாக இந்தியாவிற்குள் இடம்பெயர்ந்தவராக இல்லாதிருத்தல் குடியுாமை பெறுகின்றனர்.

2. வம்சாவளியால் குடியுரிமை பெறுதல்

- 1950 ஜனவரி 26 முதல் 1992 டிசம்பர் 10க்கு முன்னர் வெளிநாட்டில் பிறந்திருந்தாலும அவருடைய தந்தை இந்தியக் குடிமகனாக இருக்கும் பட்சத்தில் அவர் வம்சாவளி மூலம் இந்திய குடியுரிமைப் பெறுகிறார்.
- 1992 டிசம்பர் 10 மற்றும் அதற்கு பின்னர் வெளிநாட்டில் பிறந்தவர்களின் பெற்றோரில் எவரேனும் ஒருவர் அச்சமயத்தில் இந்திய குடிமகனாக இருந்தால் அவர் இந்தியக் குடியுரிமையைப் பெறுகிறார்.
- 2004 டிசம்பர் 3 ஆம் முதல் வெளிநாட்டில் பிறந்தவர்கள் அவர்களுடைய பிறப்பினை ஒரு வருடத்திற்கள் இந்திய தூதரகத்தில் பதிவு செய்யவில்லை எனில் இந்திய வம்சாவளிக் குடிமகனாக முடியாது.

3. பதிவு செய்தல் மூலம் குடியுரிமை பெறுதல்

- இந்தியக் வம்சாவளியைக் சார்ந்த ஒரு நபர் எந்த ஒரு நாட்டில் வசித்தாலும் அல்லது பிரிக்கப்படாத இந்தியாவிற்கு வெளிப்பகுதியில் வசிப்பவராக இருந்தாலும் பதிவு செய்தலின் மூலம் குடியுரிமை பெறலாம்.
- இந்தியக் குடிமகனை திருமணம் செய்த ஒருவர் பதிவின் மூலம் விண்ணப்பிக்கும் முன் ஏழு ஆண்டுகள் இந்தியாவில் வசித்தவராக இருத்தல் வேண்டும்.

4. இயல்புக் குடியுரிமை

- ஒருவர் விண்ணப்பிப்பதன் மூலம் மத்தியள அரசு அவருக்கு இயல்பு குடியுரிமைக்கான சான்றிதழை வழங்குகிறது.
- எந்த ஒரு நாட்டிலும் குடிமகனாக இல்லாத ஒரு இந்தியர் அவர் வசிக்கும் நாட்டின் குடிமகனாவதை தடுக்கும் பொருட்டு இயல்பு குடியுரிமை வழங்கப்படுகிறது.
- வெளிநாட்டுக் குடியுரிமையை ஒருவர் துறக்கும் பட்சத்தில் அவருக்கு இயல்பு குடியுரிமை வழங்கப்படுகிறது.
- ஒருவர் இந்தியாவில் வசிக்கும் பட்சத்தில் அல்லது இந்திய அரசுப்பணியில் இருக்கும் பட்சத்தில் (அ) ஆண்டுமுழுவதும் இந்தியாவில் தங்கியிருக்கும் பட்சத்தில் இக்குடியுரிமையை பெறுகிறார்.
- நல்ல பண்புகளையும் இந்திய அரசியலமைப்பில் எட்டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு மொழியில் (தற்போது 22 மொழிகள்) போதிய அறிவினையும் பெற்ற ஒருவர் இயல்புக் குடியுரிமையைப் பெற தகுதியுடையாராவார்.

5. பிரதேசங்களை இணைத்தல் மூலம் பெறும் குடியுரிமை

- எந்தவொரு வெளிநாட்டுப் பகுதியும் இந்தியாவுடன் இணையும் போது, இந்திய அரசு அப்பகதி மக்களை இந்திய குடிமக்களாக ஏற்றுக்கொள்கிறது. அந்த குறிப்பிட்ட நாளில் இருந்து அவர்கள் இந்திய குடிமக்களாகின்றனர்.
- உதாரணமாக பாண்டிச்சேரி இந்தியாவுடன் இணைந்த பொழுது, இந்திய அரசு அம்மக்களுக்கு 1962 இல் இந்தியக் குடியுரிமைக்கான ஆணையை வழங்கியது.

இந்தியக் குடியுரிமையை இழத்தல்

- குடியுரிமை இழப்பு பற்றிய மூன்று வழிமுறைகளை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் இரண்டாவது பகுதியின் 5 முதல் 11 வரையிலான விதிகள் குறிப்பிடுகின்றன.
- **குடியுரிமையை துறத்தல் (தானாக முன்வந்து குடியுரிமையைத் துறத்தல்)** –ஒருவர் வெளி நாட்டின் குடியுரிமையை பெறும் பட்சத்தில் அவரின் இந்தியக் குடியுரிமை அவரால் கைவிடப்படுகிறது.
- **குடியுரிமை முடிவுக்கு வருதல் (சட்டப்படி நடைபெறுதல்)** – ஓர் இந்தியக் குடிமகள் தாமாக முன்வந்து வெளிநாட்டின் குடியுரிமையை பெறும் பட்சத்தில் அவரது இந்தியக் குடியுரிமை தானாகவே முடக்கப்படுகிறது.

- **குடியுரிமை மறுத்தல் (கட்டாயமாக முடிவுக்கு வருதல்)–** மோசடி, தவறான பிரதிநிதித்துவம் அல்லது அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பாக செயல்படுதல் ஆகியவற்றின் மூலம் இந்தியக் குடியுரிமையை பெறும் ஒருவரின் குடியுரிமையை இந்திய அரசு ஓர் ஆணை மூலம் இழக்கச் செய்கிறது.



ஒற்றைக் குடியுரிமை

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் நமக்கு ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது. அதுவே இந்தியக் குடியுரிமை எனப்படுகிறது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய கூட்டாட்சி அமைப்பு கொண்டுள்ள நாடுகளில் இரட்டைக் குடியுரிமை வழங்கப்படுகிறது. (தேசிய குடியுரிமை, மற்றும் மாநில குடியுரிமை)
- முன்னுரிமை வரிசைப்படி குடியரசு தலைவர் நாட்டின் முதல் குடிமகன் ஆவார்.

இந்திய குடிமக்களின் உரிமைகளும், கடமைகளம்

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் கீழ்க்கண்ட உரிமைகளை நமக்கு வழங்குகிறது.
- அடிப்படை உரிமைகள்
- மக்களவை தேர்தலுக்கும், மாநில சட்டமன்ற தேர்தலுக்கும் வாக்களிக்கும் உரிமை

ஒரு நாட்டின் குடிமக்கள் அல்லாதவர்களை இரண்டு வகையினராக நாம் அழைக்கின்றோம்.

- **அந்நியர் –** ஒரு நாட்டில் வசிக்கும் குடிமகனாக அல்லாத அனைவரும் அந்நியர் எனப்படுவர். உதாரணம், வெளிநாட்டு சற்றுலாப் பயணிகள், வெளிநாட்டு மாணவர்கள்

- **குடியேறியவர் –** ஒரு நாட்டில் எவ்வித தடையும் இன்றி நிரந்தரமாக வசிப்பதற்கும், பணி புரிவதற்கும் உரிமை பெறும் அந்நியர் குடியேறியவர் எனப்படுகிறார்.

வெளிநாடு வாழ் இந்தியர் தினம் (பிரவாசி பாரதிய தினம்)–

- இந்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பிரவாசி பாரதிய தினம் கொண்டாடப்படுகிறது. இந்த தினம் இந்தியாவின் வளர்சிக்காக வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களின் பங்களிப்பினை பெறும் வகையில் கொண்டாடப்படுகிறது. இது மகாத்மா காந்தி தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வருகை புரிந்த தினமான ஜனவரி –9 ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.

சமயச்சார்பின்மையை புரிந்தகொள்ளுதல்

- *இந்தியா பல்வேறு நம்பிக்கைகளை சமமாக போற்றி மதிக்கப்படும் இடமாக இருப்பதோடு ஒரே தேசியக் கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கும்.*
- சமயச்சார்பின்மை என்ற சொல் லத்தீன் வார்த்தையான செகுலம் என்பதிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் காலம் அல்லது உள்ளுணர்வு காலம் ஆகும்.
- ஆங்கிலேய பத்திரிக்கை எழுத்தாளரான ஜார்ஜ் ஜேக்கப் ஹோல்யோக் என்பவர் secularism என்ற பதத்தை உருவாக்கினார்.
- *சமயம் நமக்குப் பகைமையைப் போதிக்கவில்லை, நாம் அனைவரும் இந்தியர்கள் மற்றும் இந்தியா நமது வீடு என்ற கவிஞர் இக்பாலின் எளிய வாக்கியம் சமயச்சார்பின்மை கருத்தை விளக்குகிறது.*
- அரசானது எந்த ஒரு மதத்தைச் சார்ந்த பிரிவினருக்கும் எதிராக குற்றம் சாட்டாது என்று கி.மு (பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டிலேயே அறிவித்த முதல் பேரரசர் அசோகர் ஆவார். தனது 12 வது பாறை அரசாணையில் அனைத்து மதப்பிரிவினருடன் சகிப்பு தன்மையோடு மட்டுமல்லாமல் அவர்கள் மீது மிகுந்த மரியாதைக்குரிய மனநிலையை வளர்த்துக்கொள்ளவும் தம் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.
- சமயச்சார்பற்ற நாடு என்பது ஒரு நாடு எந்தவொரு சமயத்தையும் அதிகாரபூர்வமாக ஊக்குவிக்காமல் ஒவ்வொரு சமயத்தையும் சமமாக நடத்துதல் என்பதாகும்.
- முகலாய பேரரசர் அக்பர் மதசகிப்புத் தன்மை கொள்ளையைப் பின்பற்றினார். அவருடைய ***தீன்–இலாஹி*** (தெய்வீக நம்பிக்கை) மற்றும் ***சுல்–இ–குல்*** (அனைத்து சமயத்தினரிடையே அமைதி மற்றும் நல்லிணக்கம் ஆகியவை அவரின் சமயசகிப்புத் தன்மையை எடுத்தியம்புகிறது.
- சமயச்சார்பற்ற என்ற சொல்லானது 1950 ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நமது அரசியலமைப்பில் குறிப்பிடவில்லை.
- பின்னர் 1976 ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 42 வத சட்டத் திருத்தத்தின் மூலம் முகவுரையில் சமயச்சார்பற்ற என்ற சொல் சேர்க்கப்பட்டது. (இந்திய ஒரு இறையாண்மை வாய்ந்த சமதர்ம, சமயச்சார்பற்ற, மக்களாட்சி, குடியரசு)
- நாட்டிற்கான தனி சமயம் எதுவும் இந்தியாவில் இல்லை. அரசானது எந்தவொரு சமயத்தையும் ஏற்படுத்தவோ ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு சிறப்பு ஆதரவினையோ அளிப்பதில்லை.
- இந்திய அரசியலமைப்பில் உறதியளிக்கப்பட்டுள்ள சமய சுதந்திரம் நாட்டு குடிமக்கள் மட்டுமின்றி இந்தியாவில் வாழும் வெளிநாட்டவருக்கும் வழங்கப்படுகிறது.
- இது 1954 ல் நடைபெற்ற பம்பாய் மாநிலம் – ரத்திலால் வழக்கில் மேன்மைமிக்க உச்ச நீதிமன்றத்தால் சுட்டிக்காட்டப்பட்டது.
- கஜீராஹோவில் காணப்படும் 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இந்து கோவிலில், வழக்கமான சிகரத்திற்குப் பதிலாக இந்து பாணியிலான கோபுரம், சமண விதானம், புத்த ஸ்துபி மற்றும் இஸ்லாமிய பாணியிலான குவிமாடம் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.
- சமயச்சார்பற்ற இந்திய நாடானது அனைத்து சமய விழக்களுக்கும் பொது விடுமுறை அறிவிக்கிறது.

சமயசார்பை பற்றி குறிப்பிடும் அரசியலமைப்பு பிரிவுகள்

- **பிரிவு 15 –**சமயம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடுத்துவதை தடை செய்கிறது.
- **பிரிவு 16–** பொது வேலை வாய்ப்பில் சமமான வாய்ப்பளித்தல்
- **பிரிவு 25 (1)** – எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும் பின்பற்றவும் பரப்புவும் உரிமை வழங்குகிறது.
- **பிரிவு 26–** சமய விவகாரங்களை நிர்வகிக்கும் சுதந்திரம்

- **பிரிவு 27–** எந்த வொரு குறிப்பிட்ட சமயத்தையும் ஆதரிக்க அரசானது எந்வொரு குடிமகனையும் வரிசெலுத்துமாறு வற்புறுத்தக்கூடாது.
- **பிரிவு 28–** சில கல்வி நிறுவனங்களில் மதம் சார்ந்து நடைபெறும் சமய போதனைகள் அல்லது சமய வழிபாடு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் இருக்கும் உரிமை
- **பிரிவு 29(2)–** அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பாடுபாடு காட்ட தடை
- இஸ்லாம், இந்து சமயம் உள்ளிட்ட பல்வேறு சமயங்களைச் சார்ந்த கூறுகள் அவரது கல்லறையில் இடம் பெற வேண்டுமென அக்பர் வலியுறுத்தினார்.

மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும்

- மனித உரிமைகள் என்பது இனம், பாலினம், தேசிய இனம், இனக்குழுக்களின் தன்மை, மொழி மற்றும் சமய வேறுபாடின்றி அனைத்து மனிதர்களுக்குமான இயல்பான உரிமைகள் ஆகும்.

எழுதப்பட்ட மனித உரிமை ஆவணங்களின் முன்னோடி

- **மகா சாசனம் 1215, இங்கிலாந்து** – மக்களுக்கு புதிய உரிமைகளை வழங்கியதுடன் அரசரை சட்டத்திற்கு உட்படுத்தியது.
- **உரிமை மனு 1628, இங்கிலாந்து** – மக்கள் உரிமைகளின் தொகுப்பு **ஹேபியஸ் கார்பஸ் சட்டம், 1679, இங்கிலாந்து** –மக்களின் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான சட்டம்.
- **ஆங்கில உரிமைகள் மசோதா, 1689** சில அடிப்படை சமூக / குடிமக்கள் உரிமைகளை அமைத்தல்
- **மனிதன் மற்றும் குடிமக்களின் உரிமைகள் பற்றிய பிரான்ஸ்சின் அறிவிப்பு, 1789** – சட்டத்தின் கீழ் அனைத்து குடிமக்களும் சமம் என்று கூறும் பிரான்சின் ஆவணம்.
- **அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம் மற்றும் உரிமைகள் மசோதா, 1791** – குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம்

- 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிக்கப்பட்டது.
- **மனித உரிமைகளுக்கான உலகளாவிள அறிவிப்பு** – ஐக்கிய நாடுகள் சபையின் மிகப்பெரிய சாதனைகளுன் ஒன்று மனித உரிமைகளுக்கான சட்டத்தை உருவாக்கியதாகும். இந்த இலக்குகளை அடைவதற்கான ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைக்கான ஓர் ஆணையத்தை நிறுவியது.
- எலினார் ரூஸ்வெல்ட்டின் (முன்னாள் அமெரிக்க அதிபர் பிராங்களின் டி ரூஸ்வெல்ட்டின் மனைவி) வலுவான தலைமையால் வழிநடத்தப்பட்ட ஆணையம் உலகின் கவனத்தை ஈர்த்தது.
- இறுதியாக உலக மனித உரிமைகள் அறிவிப்பு ஐ.நா பொதுச்சபையால் 1948இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அது மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைல்கல் ஆகும்.
- பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் ஐ.நா பொதுச்சபையால் 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாள் அறிவிக்கப்பட்டது. (பொதுச்சபை தீர்மானம் 217அ). இதை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10 ஆம் நாள் மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இது 1950 ஆம் ஆண்டிலிருந்து வழக்கமாக கடைபிடிக்கப்படுகிறது. இது மனித உரிமைகளின் நவீன சர்வதேச மகாசாசனம் என்றும் அழைக்கப்படுகிறது.
- ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10 ஆம் நாள் உலக மனித உரிமைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. மனித உரிமைகளை உலக அளவில் அறிவித்த பெருமை ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையையே சாரும். மனித உரிமைகள் பிரகடத்தில் 30 சட்டப்பிரிவுகள் உள்ளடங்கியுள்ளன. இந்த உரிமைகள் ஐந்து முதன்மைப் பிரிவுகளாக விரிவாக வகைப்படத்தப்பட்டுள்ளன.

தேசிய மனித உரிமைகள் ஆணையம்

- இந்தியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணையம் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் நாள் நிறுவப்பட்டது.
- இது சுதந்திரமான, சட்டப்பூர்வமான, அரசியலமைப்பு சாராத ஓர் அமைப்பாகும்.
- இதன் தலைமையகம் புதுடெல்லியில் அமைந்துள்ளது.
- தேசிய மனித உரிமைகள் ஆணையம் என்பது ஒரு தலைவரையும் பிற உறுப்பினர்களையும் உள்ளடக்கிய ஓர் அமைப்பாகும். தலைவரையும் உறுப்பினர்களையும் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். அவர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் (அ) 70 வயது வரை இதில் எது முன்னதாக வருகிறதோ அதுவரை பதவியில் நீடிப்பார்.
- தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஐந்து பிரிவுகளைக் கொண்டுள்ளது. சட்டப்பிரிவு, புலனாய்வுப் பிரிவு, ஆராய்ச்சி மற்றும் திட்டப் பிரிவு, பயிற்சி அளித்தல் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவு ஆகியனவாகும்.



மாநில மனித உரிமைகள் ஆணையம்

- தமிழ்நாட்டில் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 இல் மாநில மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது.
- இத மாநில அளவில் செயல்படுகிறது. இது ஒரு தலைவர் உட்பட மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கியது.
- இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் உள்ள மாநிலப் பட்டியல், பொதுப் பட்டியல் ஆகியவற்றில் கீழுள்ள துறைகள் தொடர்பான மனித உரிமை மீறல் தொடர்பானவைகளை மாநில மனித உரிமைகள் ஆணையம் விசாரிக்கும் (**NHRC** ஏற்கனவே விசாரிக்கும் வழக்குகளைத் தவிர)

இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவுகள்

- **பிரிவு 24** – குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடை செய்கிறது.
- **பிரிவு 39(எப்)–** ஆரோக்கியமாக குழந்தைகள் வளர வழிவகைக்செய்கிறது.
- **பிரிவு 45–** 6 வயது வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வியை வழங்க அரச முயல்கிறது.

குழந்தைக்கான உரிமைகள்

- 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் பிரிவு 1 இன்படி 18 வயதுக்குட்பட்ட அனைவரும்***குழந்தை*** எனப்படுவர். குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான மாநாட்டின் அறிக்கை 1989 ஆம் ஆண்டு நவம்பர் 20 இல் வெளியிடப்பட்டது.
- 1978 – சர்வதேச பெண்கள் ஆண்டு
- 1979– சர்வதேச குழந்தைகள் ஆண்டு என ஐ.நா. சபை அறிவித்துள்ளது.

கல்வி உரிமைச் சட்டம்

- 6 முதல் 14 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசமாக மற்றும் கட்டாயக் கல்வியை அரசு வழங்குவதற்கு சட்டப்பிரிவு 21 a வழிவகை செய்கிறது.

- **குழந்தைத் தொழிலாளர் சட்டம் (தடை மற்றும் சீரமைப்புச் சட்டம் 1986)** – இது 15 வயது பூர்த்தியடையாத எந்த ஒரு குழந்தையையும் வேலைக்கு அமர்த்த தடை செய்கிறது.
- **சிறார் நீதிச்சட்டம், 2000 (குழந்தைகளை பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல்)** – இந்தச் சட்டம் போதுமான கவனிப்பு இல்லாமல் இருக்கும் குழந்தைகளை நட்பு ரீதியில் அணுகி அவர்களை சீர்திருத்த முயற்சி மேற்கொள்கிறது.
- **போக்சோ சட்டம்,2012** பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம். குழந்தைகளின் நலனே மிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய அம்சம் எனக் கருதுகிறது.
- **1098 குழந்தைகளுக்கான உதவி மைய எண்–** இது இந்தியாவில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட 24 மணிநேர கட்டணமில்லா அவசரத் தொலைத் தொடர்பு சேவையாகும். குழந்தைத் தொழிலாளர்கள், குழந்தைத் திருமணம் மற்றும் ஏதேனம் வன்கொடுமை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.

பெண்கள் உரிமைகள்

- பெண்கள் மற்றும் சிறுமியின் உரிமைகளும் மனித உரிமைகளாகம். பெண்களுக்கு தங்களது உரிமைகளை முழுமையாகவும் சமமாகவும் அனுபவிக்கவும், அனைத்து பாகுபாடுகளிலிருந்தும் விடுபடவும் உரிமை உள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் பெண்கள் மற்றும் ஆண்கள் இருவருக்கும் சமமான உரிமைகளை உறுதிசெய்கிறது.
- 1979 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாட்டில் பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான மசோதாவை ஐ.நா பாதுகாப்பு சபை ஏற்றுக்கொண்டது. இது பெண்களுக்கான சர்வதேச உரிமைகள் மசோதா என அழைக்கப்படுகிறது.
- 1995 ஆம் ஆண்டில் பெய்ஜிங்கில் நடைபெற்ற நான்காவது உலக மகளிர் மாநாடு பெண்களின் உரிமைகளை அங்கீகரிப்பதற்கும் உலகளவில் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கமான ஒரு தளத்தை உருவாக்கியது.
- பெய்ஜீங் மாநாட்டின் இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்காக யுனிபெம் என்றழைக்கப்படும் பெண்களுக்கான ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு நிதி அமைப்பு 1995 முதல் செயல்பட்டு வருகிறது.

சட்டங்கள்	விதிகள்
இந்து விதவை மறுமணச் சட்டம், 1856	விதவைகள் மறுமணத்தை சட்டப்பூர்வமாக்கியது.
இந்து திருமணச் சட்டம், 1955	பெண்களின் திருமண வயது 21 என்று சட்டப்பூர்வமாக்கியது.
இந்து வாரிசு சட்டம், 1956	பெண்கள் தங்கள் பெற்றோர்களின் சொத்தினை மரபுவழியாக பெறுவதை உறுதிசெய்கிறது.
வரதட்சணைத் தடைச் சட்டம், 1961	வரதட்சணை என்ற பெயரில் மருமகளை மோசமாக நடத்துவதற்கு கடுமையான தண்டனை வழங்குகிறது.
பெண்களை கேலி செய்வதற்கு எதிரானச் சட்டம், 1997	பெண்களுக்கு நிவாரணம் அளிக்கிறது.
அநாகரிகமாக சித்தரித்தலுக்கெதிரான சட்டம், 1999	பத்திரிக்கைகள், செய்தித்தாள்கள் போன்றவற்றில் பெண்களை அநாகரிகமாக சித்தரித்தலைத் தடைசெய்கிறது.
தொழிற்சாலைச் சட்டம், 1948 தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், 1951 சுரங்கச் சட்டம், 1952 மகப்பேறு நலச் சட்டம், 1961	பெண் தொழிலாளர்களைப் பாதுகாக்கிறது.
வன்கொடுமை தடுப்பு சட்டம், 2005	கணவர் மற்றும் குடும்ப உறுப்பினர்களால் பெண்கள் துன்புறுத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கிறது.

பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை

- **பாதுகாப்பு அமைப்பின்ந அவசியம்–** ஒவ்வொரு நாட்டின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அதன் தேசிய பாதுகாப்பு மிகவும் அவசியமானது ஆகும். இது நாட்டின் அமைதிக்கும், முன்னேற்றத்திற்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.
- **இந்திய பாதுகாப்புச் சேவைகள்–** இந்தியக் குடியரசுத் தலைவர் நாட்டின் தலைவராகவும், நமது பாதுகாப்பு அமைப்பில் மிக உயர்ந்த பதவி நிலையையும் வகிக்கிறார். அவர் இந்திய ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதி ஆவார்.

இந்தியாவில் பாதுகாப்பு படைகளின் பிரிவுகள்

இந்தியப் ஆயுதப் படைகள் (Indian Armed Forces)

- ஆயுதப் படையானது நாட்டின் இராணுவப் படை, கடற்படை, விமானப்படை மற்றும் கடலோரக் காவல்படை ஆகியவற்றை உள்ளடக்கிய முதன்மைப் படைகள் ஆகும். அவைகள் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றன.

துணை இராணுவப் படைகள் (Paramilitary Forces)

- அசாம், ரைபில்ஸ், சிறப்பு எல்லைப்புறப் படை ஆகியன துணை இராணுவப் படைகளாகும்.

மத்திய ஆயுதக் காவல் படைகள் (Central Armed Police Forces) –

- BSF, CRPF,ITBP, CISF, SSB ஆகியன மத்திய ஆயுதக் காவல் படைகளாகும். அவைகள் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றன
- இந்திய ஆயுதப் படைகளை கௌரவிப்பதற்காக இந்திய அரசால் தேசியப் போர் நினைவுச் சின்னம் கட்டப்பட்டுள்ளது. இந்நினைவுச் சின்னம் புது டெல்லியில் உள்ள இந்திய கேட் அருகில் 40 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்திய ஆயுதப் படைகள்

இராணுவப் படை

- இந்திய இராணுவ படை என்பது நில அடிப்படையிலான ஒரு பிரிவு ஆகும். இது உலக அளவில் மிகப்பெரிய தன்னார்வு படைப்பிரிவு ஆகும்.
- இது ஜெனரல் என்றழைக்கப்படும் நான்கு நட்சத்திர அந்தஸ்து கொண்ட இராணுவப் படைத் தளபதியால் வழிநடத்தப்படுகிறது.
- இந்திய இராணுவம் ***ரெஜிமெண்ட்*** என்ற ஒரு அமைப்பு முறையைக் கொண்டது. இது செயல்பாட்டு ரீதியாகவும் புவியில் அடிப்படையிலும் எழு படைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

கடற்படை

- கடற்படையின் முதன்மை நோக்கம் நாட்டின் கடல் எல்லைகள் பாதுகாப்பதாகம். மேலும் நாட்டின் பிற ஆயுதப்படைகளுடன் இணைந்து இந்திய நிலப்பகுதி, மக்கள், கடல்சார் நலன்களுக்கு எதிரான அச்சுறுத்தல் ஆக்கிரமிப்புகளைத் தடுக்க அல்லது தோற்கடிக்கும் பணியில் ஈடுபடுகிறது.
- இது அட்மிரல் என்றழைக்கப்படும் நான்கு நட்சத்திர அந்தஸ்து கொண்ட கடற்படைத் தளபதியால் வழிநடத்தப்படுகிறது. இது மூன்று கடற்படைப் பிரிவுகளைக் கொண்டது.

விமானப்படை

- இந்திய விமானப்படை என்பது இந்திய ஆயுதப்படைகளின் வான்வெளி படை ஆகும்.
- இது ஏர் சீப் மார்ஷல் என்றழைக்கப்படும் நான்கு நட்சத்திர அந்தஸ்து கொண்ட விமானப்படை தளபதியால் வழிநடத்தப்படுகிறது. இது ஏழு படைப்பிரிவுகளை கொண்டது.

இந்தியக் கடலோரக் காவல்படை

- இந்தியக் பாராளுமன்றத்தின் 1978 ஆம் ஆண்டு கடலோர காவல்படைச் சட்டத்தினபடி, இந்தியாவின் சுதந்திர ஆயுதப் படையாக இந்தியக் கடலோரக் காவல்படை 1978 இல் நிறுவப்பட்டது. இது பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- **பீல்டு மார்ஷல்** –இது ஐந்து நட்சத்திர அந்தஸ்து கொண்ட பொது அதிகாரி பதவி. இது இந்திய இராணுவத்தின் உயர்ந்த பதவி ஆகும்.
- **சாம் மானக்ஷா** என்பவர் இந்தியாவின் முதல் பீல்டு மார்ஷல் ஆவார். கே.எம் கரியப்பா இரண்டாவது பீல்டு மார்ஷல் ஆவார்.
- இந்திய விமானப்படையில் ஐந்து நட்சத்திர அந்தஸ்து கொண்ட மார்ஷல் பதவிக்கு உயர்வு பெற்ற முதல் மற்றும் ஒரே அதிகாரி அர்ஜீன் சிங் ஆவார்.
- 1758 ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட ***மெட்ராஸ் ரெஜிமெண்ட்*** இந்திய இராணுவத்தின் மிகப்பழமையான காலாட்படை பிரிவுகளில் ஒன்றாகும். இந்த ரெஜிமண்ட் தமிழ்நாட்டின் உதகமண்டலத்தில் உள்ள வெல்லிங்டன் என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

- 1962 இல் நடந்த சீன– இந்திய போரானது இராணுவ அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதின் அவசியத்தை உணர்த்தியது. இந்திய இராணுவத்தின் அவசர ஆணையத்திற்கான அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்க பூனா மற்றும் சென்னை ஆகிய இடங்களில் ***அதிகாரிகள் பயிற்சிப் பள்ளிகள்*** நிறுவப்பட்டது. 1998 சனவரி 1 முதல் அதிகாரிகள் பயிற்சி அகாடமி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- கி.பி (பொ.ஆ) 1025 இல் தமிழ்நாட்டில் இருந்து சோழ மன்னர் முதலாம் இராஜேந்திரன் தென்கிழக்கு ஆசியாவின் கடல் சார் பகுதியயான ஸ்ரீ விஜயம் மீது தன் கடற்படையெடுப்பை தொடங்கினார். மேலும் தற்போது கேதா என்றழைக்கப்படும் கடாரம் பகுதியை வென்றார். முதலாம் இராஜேந்திர சோழனின் ஸ்ரீ விஜயத்துக்கு எதிான இந்த கடல் கடந்த படையெடுப்பு இந்திய வரலாற்றில் சிறப்பான நிகழ்வாக கருதப்படுகிறது,

துணை இராணுவ பாதுகாப்புப் படைகள்

- உள்நாட்டு பாதுகாப்பை பராமரிக்கவும், கடலோரப் பகுதியை பாதுகாக்கவும் இராணுவத்திற்கு உதவுவதற்கும் பயன்படுத்தப்படும் படைகள் துணை இராணுவப் படைகள் என்றழைக்கப்படுகின்றன.
    1. அஸ்ஸாம் ரைபிள்ஸ்
    2. சிறப்பு எல்லைப்புற படை
- **அஸ்ஸாம் ரைபிள்ஸ் –** இது அஸ்ஸாம் பகுதியில் 1835 ஆம் ஆண்டு பிரிட்டிஷாரால் உருவாக்கப்பட்டது. இது கச்சார் லெவி எனப்பட்ட குடிப்படை ஆகும். தற்போது இதில் 46 படைப்பிரிவுகள் உள்ளன. இது உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- **சிறப்பு எல்லைப்புற படை** – சிறப்பு எல்லைப்புற படை என்பது ஒரு துணை இராணுவ சிறப்புப்படை ஆகும். 1962 இல் உருவாக்கப்பட்டது. இப்படை புலனாய்வு பணியகத்தின் நேரடி மேற்பார்வையில் இருந்தது. பின்னர் இது இந்தியாவின் புலனாய்வு அமைப்பான ஆராய்சசி மற்றும் பகுப்பாய்வு பிரிவின் கீழ் செயல்பட்டு வருகிறது.

மத்திய ஆயுதக் காவல்படைகள்

- துணை இராணுவப் படையில் இருந்து பின்வரும் ஐந்து படைப்பிரிவுகள் மத்திய ஆயுதக் காவல்படையாக மறுவரையறை செய்யப்பட்டு மார்ச், 2011 முதல் உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.
    1. மத்திய ரிசர்வ் காவல் படை
    2. இந்தோ–திபெத்திய எல்லைக் காவல்
    3. எல்லை பாதுகாப்புப் படை
    4. மத்திய தொழிலக பாதுகாப்புப் படை (1969, மார்ச் 10 ஆம் நாள்)
    5. சிறப்பு சேவை பணியகம் / சாஷாஸ்திர சீமா பால்
- **முக்கிய தினங்கள்**

1.	இராணுவ தினம்	–	சனவரி 15
2.	கடலோரக் காவல்படை தினம்	–	பிப்ரவரி 1
3.	மத்திய தொழிலக பாதுகாப்புப்படை தினம்	–	மார்ச் 10
4.	விரைவு அதிரடிப்படை தினம்	–	அக்டோபர் 7
5.	விமானப்படை தினம்	–	அக்டோபர் 8
6.	கடற்படை தினம்	–	டிசம்பர் 4
7.	ஆயுதப்படைகள் கொடி தினம்	–	டிசம்பர் 7

இந்தியாவின் வெளியுறவுக் கெள்கை

- வெளியுறவுக் கொள்கை என்பது இறையான்மை கொண்ட ஒரு நாடு உலகின் மற்ற நாடுகளுடன் எவ்வாறு தொடர்பு கொள்ளும் என்பதை வரையறுக்கும் அரசியல் இலக்குகளின் தொகுப்பாகும்.
- வெறியுறவுக் அமைச்சகம் எனப்படும் இந்திய வெளிவிவகார அமைச்சரவை இந்திய அரசின் ஒரு அங்கமாக இருந்து நாட்டின் வெளியுறவுகளைப் பொறுப்பேற்று நடத்துகிறது.
- 1986 ஆம் ஆண்டு புது டெல்லியில் நிறுவப்பட்ட இந்திய வெளிநாட்டுச் சேவை பயிற்சி நிறுவனம் இந்திய வெளியுறவுச் சேவை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950

சட்டப்பிரிவு 51

- அரசு நெறிமுறையுறுத்தும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள்–
  1. சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல்
  2. நாடுகளிடையே நியாயமான மற்றும் கௌரவமான உறவுகளைப் பேணுதல்
  3. சர்வதேசக் சட்டம் மற்றும் சர்வதேச அமைப்புகளை மதித்தல்
  4. சர்வதேசப் பிரச்சனைகளை நடுவர் மன்றம் மூலம் தீர்க்க ஊக்குவித்தல்

பஞ்சசீலம்

- இந்திய (பிரதமர் –ஜவஹர்லால் நேரு) மற்றும் சீனா (பிரதமர் – சூ–யென்–லாய்) ஆகிய நாடுகளுக்கிடையே அமைதியுடன் இணங்கியிருத்தலுக்கான 5 கொள்கைகள் , 1954 ஏப்ரல் மாதம் 28 ஆம் நாள் கையெழுத்தானது. இரு அரசாங்களும் பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டன.
- சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு, இந்திய வெளியுறவுக் கொள்கையை வடிவமைப்பதில் முதன்மை சிற்பியாக இருந்தார்.
- இந்தக் கொள்கைகள் இந்தோனேசியாவில் 1955 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆப்பிரிக் – ஆசிய மாநாட்டில் கையெழுத்தான பாண்டுங் பிரகடனத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.
- நேர உலக அமைதிக்கு ஆதரவாளராக இருந்ததால் தனது கொள்கை திட்டமிடல் உலக அமைதிக்கு மிக முக்கிய இடத்தை வழங்கினார்.
- *பரந்த அளவில் அணிசேராமை என்பது இராணுவக் கூட்டணியில் இணைத்துக் கொள்ளாதது அல்ல. அதாவது பிரச்சனைகளை முடிந்தவரை இராணுவக் கண்ணோட்டத்தில் பார்க்காமல், அது சில நேரங்களில் மட்டும் ஏற்பட்டாலும் சுதந்திரமாக மற்றும் அனைத்து நாடுகளுடனும் நட்பு ரீதியிலான உறவைப் பராமரித்தல்.––.–– நேரு*
- பஞ்சசீலம் என்றழைக்கப்பட்ட அமைதிக்கான ஐந்து கொள்கைகளை அவர் அறிவித்தார். அவைகள்
  1. ஒவ்வொரு நாட்டின் எல்லையையும், இறையாண்மையையும் பரஸ்பரம் மதித்தல்
  2. பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை
  3. பரஸ்பர உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல்
  4. பரஸ்பர நலனுக்காக சமத்துவம் மற்றும் ஒத்துழைத்தல்
  5. அமைதியாக இணைந்திருத்தல்

அணிசேராமை

- அணிசேராமை என்ற சொல் 1953 இல் ஐ.நா சபையில் உரைறாயற்றிய வி.கே. கிருஷ்ணமேனன் என்பவரால் உருவாக்கப்பட்டது. அணிசேராமை என்பது இந்தியக் வெளியுறவுக் கொள்கையின் மிக முக்கிய அம்சமாக விளங்குகிறது.
-
- **அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள்–** இந்தியாவின் ஜவஹர்லால் நேரு, யுகோஸ்லாவியாவின் டிட்டோ, எகிப்தின் நாசர், இந்தோனேசியாவின் சுகர்னோ மற்றும் கானாவின் குவாமே நிக்ரூமா ஆகியோராவர்.
- பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், சீனா, பூடான், வங்காளதேசம் மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளுடன் இந்தியா பொதுவான நில எல்லைகளை பகிர்ந்து கொள்கிறது. மேலும் இலங்கையுடன் பொதுவான கடல் எல்லையையும் பகிர்ந்து கொள்கிறது,
- அணிசேரா இயக்கமானது 120 உறுப்பு நாடுகளையும் 17 நாடுகளைப் பார்வையாளராகவும் 10 சர்வதேச நிறுவனங்களையும் கொண்டுள்ளது.
- இந்தியா அணிசேரா இயக்கதில் இருந்த போதும் சோவியத் யுனியனுடன் 1971 ஆம் ஆண்டில் இந்திய –சோவியத் ஒப்பந்தத்தின் மூலம் இணைந்தது.
- பின்னர் இந்தியா ராணுவ நவீனமயமாக்கலை மேற்கொண்டது. சீனா 1964 ஆம் ஆண்டு லாப் நார் என்னுமிடத்தில் மேற்கொண்ட அணு சோதனைக்குப் பதிலடியாக இந்தியா தனது முதல் பூமிக்கடியிலான அணு சோதனைத் திட்டத்தினை 1974 இல் நடத்தியது.
- இந்தியா பின்வரும் நாடுகளுடன் எல்லைகளைப் பகிரிந்து கொண்டுபரந்த நாடாக விளங்குகிறது.
  - வடமேற்கில் – பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான்

- ☞ வடக்கில் – சீனா, நேபாளம், பூடான்
- ☞ கிழக்கில் – வங்காளதேசம்
- ☞ தூர கிழக்கில் – மியான்மர்
- ☞ தென்கிழக்கில் – இலங்கை
- ☞ தென்மேற்கில் – மாலத்தீவு

✍ **கிழக்குச் செயல்பாடு என்ற கொள்கை** – தென்கிழக்கு ஆசியா இந்தியாவின் வடகிழக்கில் இருந்து ஆரம்பமாகிறது. மியான்மர் இந்தியாவிற்கும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள நாடுகளுக்கும் பாலமாக அமைந்துள்ளது. இக்கொள்கையின் நோக்கம் ஆசியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பாதோடு, இந்தோ–பசுபிக் பகுதியில் நிலையான மற்றும் பன்முக சமநிலையை உறுதி செய்வதும் ஆகும்.

சார்க்

✍ சார்க் அமைப்பு 8 உறுப்ப நாடுகளைக் கொண்டது. அவைகள் இந்தியா, வாங்காளதேசசம், பாகிஸ்தான், நேபாளம், பூடான், இலங்கை, மாலத்தீவு மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியனவாகும்.

✍ சார்க் அமைப்பின் பேரிடர் மேலாண்மை மையம் புதுடெல்லியில் அமைக்கப்பட்டுள்ளது.

✍ இம்மையம் தெற்காசியாவில் பேரிடர் குறைப்பு மற்றும் மேலாண்மைக்கான வல்லுனர்களைக் கொண்ட அமைப்பாகும். இஸ்ரோ அமைப்பு சார்க் பிராந்தியத்திற்கான செய்தித் தொடர்பு மற்றும் வானில ஆய்விற்கான சார்க் செயற்கைக்கோளை செலுத்த உள்ளது.

பி.சி.ஐ.எம்

✍ இது வங்காளதேசம், சீனா, இந்தியா, மியான்மர் பொருளாதார போக்குவரத்து, எரிசக்தி மற்றும் தொலை தொடர்பு ஆகியவற்றில் எல்லை கடந்து ஒரு செழிப்பான பொருளாதார மண்டலத்தை உருவாக்க இக்கூட்டமைப்பு உதவுகிறது.

பிம்ஸ்டெக்

✍ இது வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார கூட்டுறவிற்கான முயற்சி ஆகும். தொழில்நுட்ப அடிப்படையில் பொருளாதார ஒத்துழைப்பு, பன்னாட்டு வர்த்தகம், வெளிநாட்டு நேரடி முதலீடு ஆகியவற்றை வலுப்படுத்தவதும் மேம்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும்.

✍ இதன் உறுப்பு நாடுகளாவன, வங்காளதேசம், இந்தியா, மியான்மர், இலங்கை, தாய்லாந்து, பூடான் மற்றும் நேபாளம்.

பி.பி.ஐ.என்

✍ பயணிகள், சரக்கு மற்றும் எரிசக்தி மேம்பாடு ஆகியவைகளின் பரிமாற்றத்திற்கான கூட்டமைப்பில் வங்காளதேசம், பூடான், இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

✍ இந்தியக் வெளியுறவுக் கொள்கை பின்வரும் பல்வேறு வகைகளில் மாற்றம் கொண்டது.

1. சீனாவுடனான நட்புறவு – கிழக்கு நோக்கு கொள்கை 1992
2. பொக்ரான் (ராஜஸ்தானில்) நடைபெற்ற இரண்டாவது அணு சோதனை 1998
3. இஸ்ரேலிடமிருந்து பாதுகாப்புத் தளவாடங்களக் கொள்முதல் செய்தலுக்கான உறவு
4. அரபு நாடுகள் மற்றும் ஈரானுடன் எரிசத்தி ஆற்றல் வள தூதரக உறவு
5. அமெரிக்காவின் அணு ஏவுகணைப் பாதுகாப்பு திட்டத்தை ஏற்றுக்கொள்ளுதல்
6. சர்வதேச அணுசக்தி நிறுவனத்தில் ஈரானுக்கு எதிராக இந்தியாவின் வாக்களிப்பு

இந்தியாவின் சர்வதேச உறவுகள்

*ஒரு மோசமான அண்டை நாடு ஒரு துரதிஷ்டம், அதுவே ஒரு நல்ல நாடாக அமையுமானால் அதைவிட ஆசீர்வாதம் வேறு இல்லை – **ஹொசாய்ட்***

*நாம் ஒருவரை முற்றிலும் சார்தோ அல்லது தனித்தோ இருக்க முடியாது. ஆனால் இவ்வுலகில் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்கிறோம் – **நேரு***

📖 இந்தியாவின் அண்டை நாடுகள்

- ⊕ மிகப்பரந்த இந்தியாவின் வட மேற்கில் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான்
- ⊕ வடக்கில் சீனா, நேபாளம், பூடான்
- ⊕ கிழக்கில் வங்காள தேசம்

- தூரக்கிழக்கில் மியான்மர்
- தென்கிழக்கில் இலங்கை, தென்மேற்கில் மாலத்தீவு போன்ற இந்தியாவிற்கு மிக அருகில் அமைந்துள்ள இரு நாடுகளும் இந்திய பெருங்கடலால் பிரிக்கப்பட்டுள்ளன.

📖 சீனாவும் ரஷ்யாவும் அதிக எண்ணிக்கையிலான அண்டை நாடுகளுடன் தனது எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன.

இந்தியாவும் ஆப்கானிஸ்தனும்

📖 இந்திய, ஆப்கானிஸ்தான் உறவு போர்த்திறம் சார்ந்த பங்களிப்பு ஒப்பந்தம் மூலம் வலிமை பெற்றுள்ளது. இந்த ஒப்பந்தம் ஆப்கானிஸ்தானின் உள்கட்டமைப்பை மறுசீரமைக்கவும், நிறுவனங்கள், வேளாண்மை, நீர், கல்வி, சுகாதாரம் மற்றும் வரியில்லமல் இந்திய சந்தையை எளிதாக அடைதல் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை நல்கவும் வழிகோலுகிறது.

📖 ஹீரட் மாகாணத்திலுள்ள சல்மா அணையைக் கட்ட இந்தியா உதவியது.

📖 ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புப் படையில் பணிரிந்து உயிரிழந்த வீரர்களின் குழந்தைகள் 500 பேருக்கு இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயில்வதற்கான உதவித்தொகையை இந்தியா அறிவித்துள்ளது.

📖 இந்திய நிறுவனங்கள் ஆப்கானிஸ்தானின் சுரங்கத் தொழிலில் முதலீடு செய்கின்றன.

📖 கந்தகாரில் இந்தியா கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தை கட்டியுள்ளது.

📖 இந்தியாவின் மகளிர் சுய வேலை வாய்ப்புச் சங்கம் நிலையான வாழ்வாதரம் மற்றும் தன்னம்பிக்கை பெறுவதற்குமான பயிற்சியை ஆப்கானிஸ்தானில் அளிக்கிறது.

இந்தியாவும் வங்காளதேசமும்

📖 வங்காளதேசத்தின் சுதந்திரத்தை அங்கீகரித்த முதல் நாடு இந்தியா ஆகும்.

📖 இந்தியாவும் வங்கதேசமும் 4,096.7 கி.மீ நீளம் கொண்ட மிக நீண்ட நிலப்பரப்பை எல்லைகயாகப் பகிர்ந்து கொள்கின்றன.

📖 அகர்தலாவிற்கும் அகவுராவிற்கும் இடையேயான ரயில் போக்குவரத்து இணைப்பிற்கான முன்மொழிவை செயல்படுத்த இந்தயா திட்டமிட்டுள்ளது.

📖 இந்தியாவின் பகுதிகளான கொல்கத்தாவில் இருந்து அகர்தலாவிற்கு டாக்காவழியாக செல்வதற்கான சாலை வழியினை BBIN –MVA (வங்கதேசம், பூடான், இந்தியா, நேபாளம் மோட்டார் வாகன ஒப்பந்தம்) ஒப்பந்தத்தின் கீர் அமைக்க இந்தியாவிற்கு வங்காளதேசம் அனுமதி வழங்கியுள்ளது.

📖 கங்கை நீரைப் பகிர்ந்து கொள்ள 1977 இல் கையெழுத்தான பராக்க ஒப்பந்தம் ஒரு வரலாற்று ஒப்பந்தமாகும்.

📖 இந்தியாவிற்கும் வங்காள தேசத்திற்கும் பொதுவானதாக உள்ள 54 நதிகளிலிருந்து அதிகபட்ச நலனைப் பெறுவதற்காக இது நாட்டுக் கூட்டு நிதி ஆணையம் செயல்படுகிறது.

📖 இந்திய அரசாங்கம் *வங்காளதேசத்திற்கான உதவி* என்ற திட்டத்தின் கீழ் கட்டடங்கள் கட்டவும், ஆய்வுக்கூடங்கள், மருந்தகங்கள் மானியம் வழங்கி உதவுகிறது.

📖 இந்திய பண்பாட்டு உறவுகளுக்கான குழுவின் மூலம் வங்காளதேச மாணவர்களுக்கு ஆண்டுதோறும் உதவித்தொகை அளிக்கப்படுவதோடு டாக்கா பல்கலைக்கழகத்தில் *தாகூர் இருக்கை* ஏற்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

📖 சிலிகுரி – பர்பதிபூர் ஆகிய இடங்களுக்கிடையே 130 கிலோ மீட்டர் நீளம் கொண்ட நட்புறவுக் குழாய் போக்குவரத்தை அமைக்கும் பணியை இரு நாடுகளும் இணைந்து தொடங்கி வைத்தன.

📖 இந்தியாவிற்குச் சொந்தமான டீன்பிகா என்ற பகுதி மேற்கு வங்காளம் மற்றும் வங்காளதேசத்திற்கு இடையேயான எல்லையில் உள்ளது. குறுகலான இப்பாதை 2011 ஆம் ஆண்டு வங்காளதேசத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டது.

இந்தியாவும் பூடானும்.

📖 பூடான் இமயமலையில் உள்ள ஒரு சிறிய அரசு ஆகும். இடி மின்னல் நிலம் என்று அறியப்படும். இது உலகின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாகும்.

📖 இந்தியா மற்றும் பூடான் இடையேயான இராஜதந்தர பிரதிநிதி ஒருவரைத் திம்புவில் நியமித்ததிலிருந்து தொடங்கியது.

📖 இந்தியா பாரத் முதல் பூடான் வரை என்ற அறியப்படும் **(B2B)** என்று அறியப்படும் இருதரப்பு வணிக உறவினை அறிவித்தது.

📖 பூடானில் ஒரு டிஜிட்டல் நூலகத்தை அமைத்தது. மதிப்புக்க நேரு – வாங்சுக் கல்வி உதவித்தொகை தகுதியும் திறமையும் கொண்ட பூடான் நாட்டினருக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மையான இந்திய கல்வி நிறுவனங்களில் கல்வி பயில வாய்ப்பு அளிக்கிறது.

📖 இந்திய அரசாங்கம் மூன்று நீர்மின்சத்தி (சுக்கா, குரிச்சி, தலா) திட்டங்களையும் பூடானில் அமைத்துள்ளது.

- குரு பத்சம்பவா எனும் புத்த துறவி இந்தியாவிலிருந்து பூடானுக்குச் சென்றார். அங்கு தனது செல்வாக்கை ஏற்படுத்தி புத்த சமயத்தைப் பரப்பியதன் மூலம் இரு நாட்டு மக்களிடையே பாரம்பரியத்தை உறுதிப்படுத்தினார்.

இந்தியாவும் சீனாவும்

- சீனவால் துவங்கி வைக்கப்பட ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பில் இந்தியாவிற்குப் பார்வையாளர் தகுதியை வழங்கியுள்ளது.
- அதேபோன்று சார்க் அமைப்பில் பார்வையாளர் தகுதி சீனாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.
- இரு நாடுகளிலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் உயர் கல்வி பயில தலா 25 மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.
- மக்மகான் எல்லைக் கோடு – இந்திய, சீனா மற்றும் பூடானில் கிழக்குப் பகுதி ஆகிய பகுதிகளுக்கு இடையேயான எல்லைக்கோடு ஆகும்.
- இது 1914 ஆம் ஆண்டில் பிரிட்டிஸ் இந்தியா, திபெத் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பிரிட்டிஷ் இந்தியாவின் சார்பில் இந்தியாவிற்கான செயலாளர் ஆர்தர் ஹென்றி மக்மகான் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இந்தியாவும் மியான்மரும்

- இந்தியா தன் இரண்டாவது மிக நீளமானது எல்லையை மியான்மர் நாட்டோடு பகிர்ந்து கொண்டுள்ளது. (1989 வரை பர்மா என அறியப்பட்டது)
- இந்தியாவின் நான்கு வடகிழக்கு மாநிலங்களான அருணாச்சல பிரதேசம், நாகலாந்து, மணிப்பூர், மிசோரம் ஆகியவை மியான்மர் நாட்டுடன் தங்கள் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன.
- இந்தியா தென்கிழக்காசியாவிற்குள் செல்வதற்கான நுழைவு வாயிலாக மியான்மர் இருக்கிறது.
- கொல்கத்தாவை மியான்மரில் உள்ள சிட்வேயுடன் இணைப்பதற்காகச் சாலை –நதி – துறைமுகம் – சரக்குப் போக்குவரத்துத் திட்டமான கலடன் பன்முக மாதிரி போக்குவரத்துத் திட்டத்தினை இந்தியா உருவாக்கி வருகிறது.
- தென்கடலில் பொருளாதாதா மண்டலத்தை உருவாக்குவதற்காகக் கொல்கத்தா நகரை ஹோசிமின் உடன் இணைக்கும் நோக்கம் கொண்ட ஒரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- மியான்மர், கம்போடியா, வியட்நாம் வழியே சாலைப்போக்குவரத்தையும் கொண்ட இத்திட்டத்தின் ஒரு பகுதியாகக் கவுகாத்தியுடன் மாண்டலேவை இணைக்கும் முதற்கட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.
- இந்திய நிறுவனங்களான எஸ்ஸார், கெயில், ஓஎன்ஜிசி, விதேஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் மியான்மரில் எரிசக்தித்துறையில் முதலீடு செய்துள்ளன.

இந்தியாவும் நேபாளமும்

- இந்தியாவின் ஐந்து மாநிலங்களான சிக்கிம், மேற்கு வங்காளம், பீகார், உத்தரப்பிரதேசம், உத்தரகாண்ட் ஆகியவை நேபாள எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன.
- நேபாளத்தின் பெரிய முதலீட்டாளராக இந்தியா திகழ்கிறது. இந்தியாவையும் காத்மண்டுவையும் இணைப்பதற்கான 204 கிலோ மீட்டர் நீளமுள்ள மகேந்திர ராஜ் மார்க் என்னும் இணைப்பை இந்தியா கட்டியுள்ளது.
- 18 ஆண்டுகளாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஒப்பந்தமான 5600 மெகாவாட் பஞ்சேஷ்வர் திட்டப்பணிகளை இந்தியா மேற்கொண்டு உள்ளது.
- நேபாள மொழியை, இந்தியா அரசியலமைப்பின் எட்டாவது அட்டவனையில் சேர்த்துள்ளது.
- சாரதா ஆற்றின் குறுக்கே ஒரு கூட்டு மின்சக்தித் திட்டம் கட்டப்பட்டு வருகிறது.
- இந்தியா மற்றும் நேபாள அரசு இரட்டை நகரங்களான காத்மாண்டு – வாரணாசி, லும்பினி – புத்தகயா மற்றும் ஜனக்பூர் – அயோத்தி ஆகிய மூன்று சகோதரி நகர் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

இந்தியாவும் பாகிஸ்தானும்.

- 1949 ஆம் ஆண்டு தீர்மாணிக்கப்பட்ட போர் நிறுத்தக் கோடு 1972 ஆம் ஆண்டிற்குப் பின்னர் எல்லைக் கட்டுப்பாடுக் கோடு என அழைக்கப்பட்டது.
- இது 1972 ஆம் ஆண்டின் சிம்லா ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லையாகும். இக்கோடு பிரிவினை செய்யப்பட்டபோது ராட்க்ளிஃப் கோடு என்று அழைக்கப்பட்டது. (ராட்க்ளிஃப் என்பவர் எல்லை ஆணையத்தின் தலைவராக இருந்தார்.) இக்கோடு தற்போது கட்டுப்பாடுக் கோடு என அழைக்கப்படுகிறது.

இந்தியாவும் இலங்கையும்

- இலங்கையின் முதலீடுகள் இந்தியாவில் சரக்கு சேவை மற்றும் தளவாடத்துறை ஆகியவற்றைத் தவிர பிராண்டிக்ஸ் (தயாரிக்கப்பட்ட ஆடை/ விசாகப்பட்டினத்தின் ஆடை நகரம்) எம்.ஏ.எஸ். ஹோல்டிங்ஸ், ஜான் கீல்ஸ், ஹேலேஸ் போன்றவற்றிலும் செய்துள்ளது.
- இந்தியாவின் நாளந்தா பல்கலைக்கழகத் திட்டத்தில் இலங்கை ஒரு பங்குதாரர் ஆகும்.
- அசோகர் புத்த மதத்தைப் பரப்புவதற்காக அவரது மகன் மகிந்தாவையும் மகள் சங்கமித்திரையையும் இலங்கைக்கு அனுப்பினார். சோழ அரசர்களான முதலாம் இராஜராஜன் மற்றும் முதலாம் ராஜேந்திரன் ஆகியோர் இலங்கையின் வடபகுதியைக் கைப்பற்றினர்.

நீதித் துறை

- ஒரு நாட்டின் நீதி அமைப்பு அனைவருக்கும் முறையான நீதி கிடைப்பதை உறுதி செய்ய திறனுடன் இருக்க வேண்டியது அவசியமாகிறது.
- **சட்டம்–** இது மக்களை ஆள்வதற்கு ஓர் அரசாங்கத்தாலோ (அ) நிறுவனத்தாலோ விதிக்கப்படும் விதிகளின் அமைப்பு ஆகும்.
- **நீதித்துறை–** சட்டப்படி, ஒரு நாட்டின் பெயரால் நீதியை வழங்குகின்ற நீதிமன்றங்களின் அமைப்பு நீதித்துறை எனப்படுகிறது.
- **ஸ்மிருதி இலக்கியங்கள்** – பண்டைய இந்தியாவில் ஸ்மிருதிகள் தனிமனிதனின் சமூகக் கடமைகளை வரையறுத்தன. அவை மனுஸ்மிருதி, நாரதஸ்மிருதி, யக்ஞவல்கிய ஸ்மிருதி போன்றவையாகும்.
- வஜ்ஜிகளிடையே குற்ற வழக்குகளை விசாரிக்கும் எட்டு குலிகாக்களைக் கொண்ட வாரியம் இருந்தது. மேல்முறையீடானது குல நீதிமன்றத்திலிருந்த கன நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டது.
- துக்ளக் ஆட்சிகாலத்தில் உரிமையியல் நடைமுறைச் சட்டங்கள் தொகுக்கப்பட்டதைக் காண முடிகிறது. இது *ஃபைகா –இ– பெரோஸ்– ஷாகி* என அழைக்கப்பட்டது. இது அரபு மொழியில் எழுதப்பட்டு பின்னர் பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.
- இது ஔரங்கசீப் காலத்தில் 1670 ஆம் ஆண்டு ஃபட்வா –இ– ஆலம்கிர் என்ற சட்ட தொகுப்பின் படி மாற்றி அமைக்கப்பட்டது.
- ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியால் மதராஸ், பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட மேயர் நீதிமன்றங்களின் காலத்தில் 1727 ஆம் ஆண்டுகளில் இந்த பொதுசட்டத்தின் (1726 ஆம் ஆண்டு சாசனச் சட்டத்தின் கீழ்) வரலாறு தொடங்குகிறது.
- ஒழுங்குமுறைச் சட்டம் 1773 உச்சநீதிமன்றம் அமைப்பதற்கு வழிவகுத்தது. உச்ச நீதிமன்றம் முதன் முதலாக கல்கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டையில் நிறுவப்பட்டது. சர் எலிஜா இம்பே என்பவர் அந்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.
- 1801 மற்றும் 1824 ஆம் ஆண்டுகளில் மதராஸ் மற்றும் பம்பாய் ஆகிய இடங்களில் உச்சநீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.
- இம்மூன்று இடங்களிலும் 1862 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றங்கள் மேற்படி இடங்களில் நிறுவப்படும் வரையில் உச்சநீதிமன்றங்களாக செயல்பட்டன.
- சிவில் வழக்குகளை தீர்ப்பதற்காக ஊரக குடிமையியல் நீதிமன்றத்தையும், குற்றவியல் வழக்குகளை தீர்ப்பதற்காக ஊரக குற்றவியல் நீதிமன்றத்தையும் வாரான் ஹேஸ்டிங்ஸ் ஏற்படுத்தினார்.
- மேல்முறையீட்டை விசாரிக்க சதர் திவானி அதாலத் (குடிமையியல் மேல் முறையீட்டு நீதிமன்றம்) சதர் நிசாமத் அதாலத் (குற்றவியல் மேல்முறையீட்டு நீதிமன்றம்) ஆகியவை இருந்தன.
- காரன்வாலிஸ் பிரபு உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதி முறையை மறுசீரமைத்தார். காரன்வாலிஸ் ஆட்சியில் மாவட்ட குற்றவியல் நீதிமன்றங்கள் நீக்கப்பட்டு, கல்கத்தா, டாக்கா, மூர்ஷிதாபாத் மற்றும் பாட்னா ஆகிய இடங்களில் மாகாண மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன.
- வில்லியம் பெண்டிங் கால ஆட்சியில் மேற்கண்ட நான்கு மாகாண மேல்முறையீட்டு நீதிமன்றங்களும் நீக்கப்பட்டன.
- கல்கத்தா உயர் நீதிமன்றம் நாட்டின் மிகப்பழமையான உயர்நீதிமன்றமாகும். இது 1862 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அதே சமயம் அலகாபாத் உயர் நீதிமன்றம் நாடடின் மிகப் பெரிய நீதிமன்றமாகும்.
- சதர் திவாணி அதாலத் மற்றும் சதர் நிசாமத் அதாலத் ஆகியன அலகாபத்தில் நிறுவப்பட்டன.
- மெக்காலே என்பவரால் அமைக்கப்பட்ட சட்ட ஆணையம் இந்திய சட்டங்களை நெறிமுறைப்படுத்தியது. இந்த ஆணையத்தின் அடிப்படையில் 1859 ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1860 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டம், மற்றும் 1861 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச்சட்டம் ஆகியவை உருவாக்கப்பட்டன.

- 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் கூட்டாட்சி நீதிமன்றங்களை உருவாக்கியது. 1949 ஆம் ஆண்டு பிரிவு கவுன்சில் நீதி வரையறை ஒழிப்பு சட்டத்தி மூலம் பிரிவு கவுன்சில் நீதிவரையறை நீக்கப்பட்டது.
- **இந்திய உச்சநீதிமன்றம் 1950 சனவரி 28 ஆம் தொடங்கப்பட்டது.**
- **இந்திய நீதிமன்றங்களின் அமைப்பு**



- அரசியலமைப்பு சட்டப்பிரிவு 145ன்படி 1966 ஆம் ஆண்டு நடைமுறை மற்றும் வழிமுறைகள் உச்சநீதிமன்ற விதிகள் ஒழுங்கப்படுத்த ஏற்படுத்தப்பட்டன.
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் நான்காவது அத்தியாயத்தின் கீழ் பகுதி **V** ன்படி ஒன்றிய நீதித்துறை என்ற பெயரிலும், அத்தியாயம் **VI** ன் கீழ் பகுதி **VI**ன் படி (மாநிலம்) துணை நீதிமன்றங்கள் என்ற பெயரிலும் நிறுவ வழிவகை செய்கிறது.
- சட்டப்பிரிவு 124 முதல் 147 வரையிலான அரசியலமைப்புச் சட்டப்பிரிவுகள் இந்திய உச்ச நீதிமன்றத்தின் அமைப்பு மற்றும் அதிகார வரம்பினை வகுத்துக் கூறுகிறது.
- ஒரு சுதந்திரமான் நீதித்துறை என்ற கருத்தை முன்மொழிந்த முதல் அரசியல் தத்துவஞானி மாண்டெஸ்கியூ ஆவார். இவர் புகழ்பெற்ற பிரெஞ்சு தத்துவ ஞானி ஆவார். சட்டமன்றம், நிர்வாகம் மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று பிரிவுகளாக அரசாங்கம் செயல்பட வேண்டும் என்ற அதிகாரப்பகிர்வு கோட்பாட்டில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார்.
- **மாவட்ட நீதிமன்றங்கள்–** மாவட்ட அளவில் சிவில் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் மாவட்ட நீதிமன்றங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- **அமர்வு நீதிமன்றங்கள்–** குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் அமர்வு நீதிமன்றங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

- **பஞ்சாயத்து நீதிமன்றங்கள்–** கிராம அளவில் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை பஞ்சாயத்து நீதிமன்றங்கள் கையாளுகிறது.
- **வருவாய் நீதிமன்றங்கள்** – வருவாய் நீதிமன்றங்கள் நில ஆவணங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கிறது. இது நில வருவாயை நிர்ணயம் செய்து நில உரிமையாளர்களிடமிருந்து அதனை வசூலிக்கிறது.
- **லோக்அதாலத் (மக்கள் நீதிமன்றங்கள்)–** விரைவான நீதியை வழங்க லோக் அதாலத் அமைக்கப்பட்டது. இது மக்கள் முன்னிலையில் மக்கள் பேசும் மொழியிலேயே பிரச்சனையை விசாரித்து தீர்வு காண்கிறது.
- ஒரு ஓய்வு பெற்ற நீதிபதி ஒரு சமூக பணியாளர், ஒரு வழக்கறிஞர் ஆகிய மூன்று நபர்கள் கொண்ட அமர்வு இதற்கு தலைமை வகிக்கும். வழக்குரைஞர்கள் இல்லாமல் வழக்குகள் பரஸ்பர ஒப்புதல் மூலம் தீர்த்து வைக்கப்படுகின்றன.
- முதல் லோக் அதாலத் 1982 ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் உள்ள ஜீனாகத்தில் நடைபெற்றது.
- **விரைவு நீதிமன்றங்கள்–** இந்நீதிமன்றங்கள் 2000 ஆம் ஆண்டில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் கீழ் நீதிமன்ற வழக்குகளை முடிவுக்கு கொண்டு வரும்நோக்கத்திற்காக தோற்றுவிக்கப்பட்டன.
- **தொலைதூர சட்ட முன்னெடுப்பு–** கிராமப்புற மக்களுக்காக சட்ட உதவி மற்றும் சேவைகள் வழங்குவதற்காக சட்டம் மற்றும் நீதி அமைச்சகம், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கூட்டு முயற்சியுடன் இது தொடங்கப்பட்டது.
- தொழில்நுட்ப இயங்கு தளமான தொலைதூர சட்ட இணைய வழியின் பொதுவான சேவை மையத்தில் காணொளிக் கலந்துரையாடல் மூலம் வழக்குரைஞர்களிடமிருந்து மக்கள் சட்ட ஆலோசனைகளைப் பெறலாம்.
- **குடும்ப நீதிமன்றங்கள்** – குடும்பம் தொடர்பான சட்ட விவகாரங்களை குடும்ப நீதிமன்றம் கையாளுகிறது. இவைகள் உரிமையியல் நீதிமன்றங்கள் ஆகும். குழந்தையின் பாதுகாப்பு, மணமுறிவு, தத்தெடுப்பு, சிறார் பிரச்சனைகள் ஆகிய குடும்பம் தொடர்பான பல்வேறு உரிமைகள், கோரிக்கைகளுக்காக இந்நீதிமன்றங்கள் பயன்படுகின்றன.
- **நடமாடும் நீதிமன்றங்கள்** – நடமாடும் நீதிமன்றங்கள் கிராமப்புற மக்களுக்கு இடர்களை தீர்க்கும் ஒன்றாய் இருக்கும். இது கிராமப்புற மக்களிடையே நீதி அமைப்பு பற்றி அதிக விழிப்புணர்வை உருவாக்கி, அவர்களது செலவைக் குறைத்து, அவர்களின் வாழிடங்களிலேயே நீதியை வழங்க வகை செய்கிறது.

நீதித்துறையின் பங்கு

நீதித்துறையின் செயல்பாட்டினை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

தகராறுகளைத் தீர்வு செய்தல்	பின்வருவனவற்றிக்கு இடையே பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான ஒரு இயக்கமுறையை நீதிமன்ற அமைப்பு வழங்குகிறது. • குடிமக்கள் • குடிமக்கள் மற்றும் அரசாங்கம் • இரண்டு மாநில அரசாங்கங்கள் • மத்திய, மாநில அரசாங்கங்கள்
நீதிமன்ற மறு ஆய்வு அதிகாரம்	நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை அமைப்பினை மீறுகிறது என நீதித்துறை நம்பும் பட்சத்தில் அச்சட்டத்தினை அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என அறிவிக்கும் அதிகாரம் நீதித்துறைக்கு உள்ளது.
சட்டத்தை நிலைநிறுத்துதல் மற்றும் அடிப்படை உரிமைகளை செயல்படுத்துதல்	ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் தனக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதாய் நம்பும்பட்சத்தில் அவர் உச்சநீதிமன்றத்தையோ அல்லது உயர் நீதிமன்றத்தையோ அணுகலாம்.

- **இ–நீதிமன்றங்கள்** – இ– நீதிமன்றங்கள் திட்டம் 2005 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி அனைத்து நீதிமன்றங்களும் கணினி மயமாக்கப்படும். நீதித்துறை சேவை மையம் இ–நீதிமன்றத்தின் ஒரு பகுதியாகும். பொதுமக்கள் மற்றும் வழகுகுறைஞர்கள் நேரடியாக வழக்கு நிலை மற்றும் அடுத்த விசாரணை தேதிகளை கட்டணமின்றி கேட்டறியலாம்.

தேசிய சட்ட சேவைகள் அதிகாரம் (NALSA)

- இது 1987 ஆம் ஆண்டு சட்ட சேவைகள் அதிகார சட்டத்தின கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இது சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு இலவச சட்ட உதவிகள் வழங்குவதோடு பிரச்சனைகளுக்கு இணக்கமான தீர்வு காண லோக் அதாலத்தை ஏற்பாடு செய்கிறது.

இந்திய உச்ச நீதிமன்றம்

- இது இந்தியாவின் மிக உயர்ந்த நீதிமன்றம் ஆகும். இது புதுடெல்லியில் அமைந்துள்ளது. இந்திய அரசியலமைப்பின்படி உச்சநீதிமன்றம் அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலராகவும், இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமாகவும் உள்ளது.
- *இந்திய உச்சநீதிமன்றம் 1950 சனவரி 28 ஆம் தொடங்கப்பட்டது.*

உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பு

அ. முதன்மை அதிகார வரம்பு

- உச்ச நீதிமன்றத்தில் மட்டுமே முதன்முறையாக தொடுக்கப்படும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது. இது மத்திய அரசிற்கும் ஒரு மாநிலம் அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையிலான பிரச்சினைகள், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கிடையிலான பிரச்சினைகள் ஆகியன முதன்மை அதிகார வரம்புக்குள் அடங்கும்.

ஆ. மேல்முறையீட்டு அதிகார வரம்பு

- உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை உச்சநீதிமன்றம் பெற்றுள்ளது. அவ்வாறான வழக்குகள் மேல்முறையீட்டுக்கு தகுதியுள்ளது என உயர்நீதிமன்றத்தால் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இ. ஆலோசனை அதிகார வரம்பு

- குடியரசுத் தலைவரால் குறிப்பிடப்படும் பொது முக்கியத்துவம் வாய்ந்த கேள்வி குறித்து ஆலோசனை வழங்கும் அதிகாரத்தினை உச்சநீதிமன்றம் பெற்றுள்ளது.

ஈ. நீதிப் பேராணை அதிகார வரம்பு

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டப்பிரிவு 32ன் படி உச்சநீதிமன்றமும் சட்டப்பிரிவு 226ன்படி உயர்நீதிமன்றமும் நீதிப் பேராணைகளை வழங்குகின்றன.

உ. ஆவண நீதிமன்றம்

- இது நீதிமன்ற நடவடிக்கைகளின் பதிவுகளை பராமரிக்கிறது மற்றும் அதன் முடிவுகள் கீழ் நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும்.

ஊ. சிறப்பு அதிகாரங்கள்

- இது கீழ் நீதிமன்றங்களின் செயல்பாட்டை கண்காணிக்கிறது

உயர்நீதிமன்றம்

- உயர்நீதிமன்றம் மாநிலங்களின் மிக உயர்ந்த நீதிமன்றமாகும். இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு உயர்நீதிமன்றம் உள்ளது. எனினும், இரண்டு அல்லது மூன்று மாநிலங்கள் தங்களுக்கென ஒரு பொதுவான நீதிமன்றத்தைக் கொண்டிருக்கின்றன. எ.கா. பஞ்சாப், ஹரியானா, மற்றும் சண்டிகர் ஆகியவை ஒரு பொதுவான நீதிமன்றத்தைக் கொண்டுள்ளன.
- உயர்நீதிமன்றம் தனக்கென முதன்மை அதிகார வரம்பு, மேல் முறையீட்டு அதிகார வரம்பு, நீதிப்பேராணை வழங்கும் அதிகார வரம்பு ஆகிய அதிகார வரம்புகளை பெற்றுள்ளது. மாநிலங்களில் உயர்நீதிமன்றத்தின் கீழ் துணை நீதிமன்றங்கள் உள்ளன.

நீதித்துறையின் சுதந்திரமான மற்றும் நடுநிலைமை செயல்பாடு

- இந்தியா போன்ற மக்களாட்சி நாடுகளில் நீதித்துறை குடிமக்களின் உரிமைகளின் பாதுகாவலனாக உள்ளது.
- *நமது நீதித்துறை நிர்வாகத்திடமிருந்து சுதந்திரமாக இருக்க வேண்டும் அதே வேளையில் திறமை மிக்கதாகவும் இருக்கவேண்டும் என்பதில் அவையில் மாறுபட்ட கருத்து இருக்கமுடியாது. மேலும் வினா என்னவென்றால் எப்படி இந்த இரண்டு நோக்கங்களையும் பாதுகாக்கமுடியும் என்பதே ஆகும்.—**டாக்டர். பி.ஆர். அம்பேத்கார்.***

வழக்கு செயல்முறை

✍ இந்தியாவில் இரண்டு வகையான சட்டப்பிரிவுகள் உள்ளன. அவை உரிமையியல் சட்டங்கள் மற்றும் குற்றவியல் சட்டங்கள் ஆகும்.

உரிமையியல் சட்டங்கள்	குற்றவியல் சட்டங்கள்
இது பணம், சொத்து மற்றும் சமூகம் தொடர்பான பிரச்சனைகளைக் கையாளுகிறது,. எகா. நிலம் தொடர்பான பிரச்சினைகள், வாடகை, திருமணம் தொடர்பான பிரச்சனைகள்.	குற்றம் என சட்டம் வரையறுக்கும் நடத்தைகள் அல்லது செயல்பாடுகளை இது விசாரிக்கிறது. எகா. திருட்டு, கொலை, பெண்களைத் துன்புறுத்துதல் ஆகியன
உரிமையியல் நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்டவர்களால் ஒரு புகார் தாக்கல் செய்யப்பட வேண்டும்.	இது வழக்கமாக காவல்துறை விசாரணையுடன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதன் மூலம் தொடங்குகிறது. அதன் பிறகு நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்படுகிறது
மனுதாரரின் கோரிக்கையின் படி பணம் செலுத்தும்படியான தண்டனைகள் வழங்கப்படுகிறது.	குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் தண்டனை வழங்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர் சிறைக்கு அனுப்பப்படுவார்.

பெரியார் பயிற்சி பட்டறை Padasalai.Net

குடிமையியல் பழையபாடப்புத்தகம் (6th to 10th)

- சமுதாயத்தின் அனைத்து முன்னேற்றங்களுக்கும் வழிவகுக்கும் அடிப்படை முதலீடு கல்வி. அதற்காகவே அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வித் திட்டத்தை செயல்படுத்திகின்றனர்.
- ஒரு சமுதாயத்தின் முன்னேற்றமும் அதன் ஒளிமயமான எதிர்காலமும் தொடக்கக் கல்வியையே சார்ந்தது
- பள்ளி சமுதாயத்தின் கல்வி முன்னேற்றத்திற்கு வழி வகுக்கிறது
- பள்ளியே சமுதாயத்தின் முன்னேற்றதின் விறைநிலம்.
- பல சமூகங்கள் ஒன்றோடு ஒன்று சார்ந்தும், சேர்ந்தும் வாழ்வது **சமுதாயம்** எனப்படும்.
- இன்பம்,துன்பம் ஆகிய உணர்வுகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டு, சேர்ந்து வாழும் மக்கள் குழு **சமுகம்** எனப்படும்.
- குடும்பம் நல்வாழ்வின் ஆதாரம், சமூகம் என்பது நிம்மதியான வாழ்வுக்கு வகை செய்கிறது.
- நகரம், மாநகரம் என்பவை அதிக மக்கள்தொகைகொண்ட பகுதிகள் ஆகும்.
- மாநகரங்களை சுற்றிலும் சுமார் 25 கிலோமீட்டர் தொலைவிற்கு அப்பால் கிராமப் பகுதிகள் தொடங்குகிறது.
- ஒவ்வொரு ஊராட்சிக்கும் கட்டமைப்பு வசதிகளை வழங்கும் **"அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்"**
- தொழிலாளர்களுடைய குழந்தைகளின் தொடக்கக் கல்வியை உறுதிசெய்வதற்கு **"அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டம்"** செயல்படுத்தப்படுகிறது.
- இடைநிலைத் கல்வியை தொடர **"அனைவருக்கும் இடைநிலைக் கல்வித்திட்டமும்"** செயல்படுகிறது.
- தமிழ்நாட்டை சேர,சோழ,பாண்டியர்கள் நாயக்கர்கள், மராட்டியர்கள் அதன்பின் ஆங்கிலேயர்கள் , போர்ச்சுகீசியர்கள்,டச்சுகாரர்கள், பிரஞ்சுக்காரர்கள் ஆட்சிசெய்தனர். ஆங்கிலேயரிடமிருந்து 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 நாள் இந்தியா விடுதலை பெற்றது,
- மக்களாட்சி என்பது மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் அரசு ஆகும். அதாவது வாக்களிக்கும் வயதை அடைந்த அனைவரும் வாக்களித்து அதன்படி தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளால் ஆளப்படுவது ஆகும். இந்த அமைப்பை தான் குடியரசு என்கிறோம்.
- அரசால் செயல்படுத்தப்படும் ஒவ்வொரு திட்டத்தின் குறைகளையும் தெரிவிக்க ஒவ்வொரு வாரம் **திங்கட்கிழமையும் மக்கள் குறை தீர்க்கும் நாளாக** என கடைபிடிக்கப்படுகிறது.
- ஊராட்சி ஒன்றியம், பேருராட்சி, மாவட்ட ஊராட்சி ஆகிய அமைப்புகள் மக்கள் பிரதிநிதிகளுடன் செயல்படுகின்றன. இந்த அமைப்பிற்கு **உள்ளாட்சி நிருவாகம்** என்று பெயர்.
- ஆங்கிலேய ஆட்சிமுறையில் ரிப்பன் பிரபு என்பவர் இந்தியாவில் உள்ளாட்சி முறையை அறிமுகப்படுத்தினார். எனவே இவர் **உள்ளாட்சி முறையின் தந்தை** எனப்படுகிறார்.
- ஊர்மன்றக் கூட்டம்: ஒவ்வொரு ஊர்மன்றக் கூட்டம் (கிராமசபை) அமைக்கப்பட்டுள்ளது. ஊராட்சி எல்லைக்குட்பட்ட மக்கள் அனைவரும் அதன் உறுப்பினர்கள். கிராமத்தின் வளர்ச்சிக்குரிய திட்டங்களுக்கு ஆண்டு வரவு செலவுத் திட்டங்களுக்கும் ஒப்புதல் பெறப்படுகிறது.
- பல கிராம ஊராட்சிகள் ஒன்றினைக்கப்பட்டு **"ஊராட்சி ஒன்றியம்"** எனப்படுகிறது.
- தேர்தல் மூலம் ஐந்தாயிரம் மக்கள் தொகைக்கு ஒரு பிரதிநிதி வீதம் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் அவர்களில் ஒருவர் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவராக உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். முழுச் சுகாதார திட்டம், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் போன்ற பல்வேறு மத்திய மாநில அரசுத் திட்டங்கள் மூலம் ஊராட்சிக்கு நிதி, மானியங்கள் கிடைக்கின்றன
- ஊர்மன்றக் கூட்டங்கள் ஆண்டுக்கு நான்கு முறை கூடுகின்றன: ஜனவரி 26 குடியரசுநாள், மே 1 தொழிலாளர் நாள், ஆகஸ்ட் 15 விடுதலை நாள், அக்டோபர் 2 மகாத்மா காந்தி பிறந்த நாள்.
- மாவட்ட ஊராட்சி: ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது. 50,000 மக்கள் தொகைக்கு ஒருவர் என்ற அடிப்படையில் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களில் ஒருவரை மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவராக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். இவரின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள்
- மாவட்டத் திட்டக்குழு: மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவரே இதன் தலைவராகவும் செயல்படுகிறார்.
- பேருராட்சி: பத்தாயிரம் மக்கள் தொகைக்கும் மேலுள்ள ஊராட்சிகள், பேருராட்சிகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன. பேருராட்சி நிருவாகத்தைச் செயல் அலுவலர் கவனித்துக் கொள்கின்றார்.
- நகராட்சி: 1 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையுள்ள பேர்கள் நகராட்சிகள் ஆகக் செயல்படுகின்றன. நகராட்சி ஆணையர் இதன் நிருவாக அலுவலர் ஆவார்.

- மாநகராட்சி: பல இலட்சம் மக்கள் தொகையும் பல்வேறு அலுவலகங்களும் அமைந்துள்ள பகுதிகளை மாநகராட்சிகள் எனச் சொல்கிறோம். மாநகராட்சியின் தலைவர் மேயர் ஆவார்.

மகளிர் குலத்திலகம் டாக்டர் முத்துலெட்சுமி

- பிறப்பு: 1886ஆம் ஆண்டு ஜீலைத் திங்கள் 30ஆம் நாள், புதுக்கோட்டை சிற்றரசில் பிறந்தார்.
- ஆண்கள் மட்டுமே படித்த புதுக்கோட்டை கல்லூரியில் முதன் முதல் இடம்பெற்ற ஒரே மாணவி இவர்தான்
- சென்னை மருத்துவக் கல்லூரியில் 1912ஆம் ஆண்டில் மருத்துவராகப் பட்டம் பெற்றார். அக்கால ஆங்கில அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர் இடம்பெற்ற சென்னைச் சட்டமன்றத்தில் நியமிக்கப் பெற்ற முதல் பெண்மணியாகவும் பின்னர் அந்த மன்றத்தின் துணைத்தலைவராகவும் செயலாற்றினார்.
- ஆடவரை போன்று மகளிருக்கும் சொத்துரிமை மற்றும் வாக்குரிமை வேண்டும் எனக் கேட்டார். அகில இந்திய மகளிர் மன்றத்தின் தலைவராக, சென்னை மாநகராட்சியின் முதல் அதிகாரியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- கொடிய புற்றுரோயால் துன்புற்று மடியும் மகளிர் வேதனையைத் துடைக்க, லண்டனில் இருந்த ராயல் புற்றுநோய் மருத்துவமனைக்குச் சென்று அங்கு வழங்கும் சிகிச்சை முறையைப் பயின்று வந்து, சென்னை அடையாரில் ஒரு புற்றுநோய் மருத்துவமனையைத் துவக்கினார்.
- விதவைத்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோர் நலன் காத்திடுவதற்கென்று, தாம்பரத்தில் அரசு உதவியுடன் மகளிர் புனர்வாழ்வு இல்லம் ஒன்றைத் துவக்க வழிசெய்தார். சிறு வயது திருமணச் சட்டத்தை கொண்டுவந்தார்.
- தேவதாசி ஒழிப்பு சட்டத்தை கொண்டுவந்தார். இதற்கு பெரியார் ஆதரவுஅளித்தார், இந்த சட்டத்தின் முக்கியத்துவத்தை திருவிக பெரியார், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களின் மூலம் எடுத்து கூறினார்.
- கைவிடப்பட்ட அபலைப் பெண்களை காத்திட 1930ஆம் ஆண்டில் அடையாற்றில் "**ஔவை இல்லம்**" அடையாற்றில் தொடங்கினார்.
- பெண்கள் எட்டாம் வகுப்பு வரை இலவசக் கல்வி வழங்க வழிவகை செய்தார். இவருக்கு 1956 மத்திய அரசு பத்மபூஷன் விருது வழங்கிப் பெருமைப்படுத்தியது,
- இவரது புகழை பரப்பும்பொருட்டு அவர் நினைவாக தாய்--சேய் நலன் காக்கும் நோக்குடன், கருவுற்ற தாய்மார்கட்கு நல்லசத்துணவு கிடைத்திட வழிசெய்ய மகப்பேருக்கு முன் மூன்று மாத்திற்கும், பின் மூன்று மாதத்திற்கும் மாதம் ஆயிரம் ருபாய் வழங்குகிறது.

இந்திய ஓர் அறிமுகம்

- இந்தியா தொழில்துறை வளர்ச்சியில் பத்தாவது இடத்திலும், விண்வெளித்துறையில் ஆறாவது இடத்திலும் உள்ளது. ஒரு கண்டத்திற்குரியா அனைத்து தட்பவெப்ப நிலைகளையும் பெற்று இருப்பதால் இந்தியா ஒரு துணைக்கண்டம் என அழைக்கப்படுகிறது.
- இந்தியா நில பரப்பளவுஅடிப்படையில் ஏழாவது மிகப்பெரிய நாடாகும், (32,87,263 சதுர கிலோமீட்டர்) மற்றும் மக்கள் தொகை அடிப்படையில் இரண்டாவது மிகப்பெரிய நாடாகும்.
- இந்தியாவிற்கு வடக்கே இமயமலையும் தெற்கே இந்தியப் பெருங்கடலும் கிழக்கே வங்கமும் தெற்கே அரபிக் கடலும் எல்லைகளாக உள்ளன. இந்தியாவின் மொத்த நில எல்லை 15,200 கி.மீ ஆகும். இந்தியாவின் கடல்எல்லை 7516.6 கி.மீ ஆகும். இந்தியா முழுவதும் வடக்கு அரைக்கோளத்தில் அமைந்துள்ளது. 8.4 –37.6 வடக்கு அட்சத்திலிருந்து 68.7—97.25 கிழக்கு தீர்க்கம் வரை இந்தியா பரவியுள்ளது. இந்திய நாடு வடக்கு தெற்காக 3214 கிமீ தொலைவும் கிழக்கு மேற்காக 2933 கிமீ தொலைவும் உள்ளது.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 1210.2 மில்லியன் மக்கள் இந்தியாவில் உள்ளனர். இதில் ஆண்கள் 623.7 மில்லியன் பெண்கள் 586.5 மில்லியன் ஆகும்.
- இந்தியாவின் மக்கள் தொகை அடர்த்தி கிலோமீட்டருக்கு 382 ஆகும். 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நாட்டின் கல்வியறிவு பெற்றோரின் விழுக்காடு 74.04 விழுக்காடாக அதிகரித்துள்ளது. இவற்றில் ஆண்கள் 82.14 விழுக்காடு ஆகும். பெண்கள் 65.46 விழுக்காடு ஆகும்
- இந்தியா உலகிலேயே மிகப்பெரிய மக்களாட்சி நாடாகும். இது இறையாண்மை சமதர்ம, மதசார்பற்ற. மக்களாட்சிக் குடியரசு நாடு. இது பாராளுமன்ற அமைப்பின்படி செயல்படுகிறது. 1950 சனவரி 26 ஆம் இந்தியாவின் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது. இந்திய அரசியலமைப்பு உலகின் மிக நீண்ட எழுதப்பட்ட அரசிலயலைப்பு ஆகும். இந்தியாவில் 29 மாநிலங்களும் 7 யுனியன் பிரதேசங்களும் உள்ளன.

மத்திய அரசு

- மத்திய அரசின் நிர்வாகத்தில் குடியரசுத்தலைவர், துணைக்குடியரத்தலைவர், பிரதமர், அமைச்சர்கள், அட்டர்னி ஜெனரல் ஆகியோர் உள்ளனர். தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவர் தலைமையில் பாராளுமன்ற அரசு அமைய வழி வகுக்கிறது.இவ்வரசு சட்ட மன்றம், நிருவாகம், நீதித்துறை என மூன்று அங்கங்களைக் கொண்டது

இந்திய நாடாளுமன்றம்

மாநிலங்கள் அவை (இராஜ்ய சபா) (250 உறுப்பினருக்கு மிகாமல்)

- 12 பேர் குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார்கள்
- 238 பேர் மாநிலங்கள் (ம) யூனியன் பிரதேசங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்

மக்களவை (லோக்சபா) (545 உறுப்பினருக்கு மிகாமல்)

- 530 பேர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்
- 13 உறுப்பினர்கள்யூனியன் பிரதேசங்களிலிருந்துமக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்
- 2ஆங்கிலோ இந்தியர்களை குடியரசுத் தலைவர் நியமனம் நியமனம் செய்கிறார்

- குடியரசுத் தலைவரே இந்தியாவின் தலைவர் ஆவார். இவர் மறைமுகத்தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். 35வயது நிரம்பிய எவரும் இந்திய குடியருசுத் தலைவராக போட்டியிட தகுதியுடையவர் ஆவார். இவர் ஏறக்குறைய மத்திய அரசின் அனைத்து உயர் அதிகாரிகளையும் நியமிக்கிறார்.
- குடியரசுத்தலைவர் வேலைசெய்ய இயலாத நிலையிலும் நிரப்பபடாமல் உள்ளபோதும் அவரது பணிகளை துணைக்குடியரசுத் தலைவர் செய்வார். இந்தியா பாராளுமன்றப் அமைப்பின் படி குடியரசுத் தலைவர் பெயரளவுத் தலைவர் ஆவார். உண்மையான அதிகாரங்கள் அனைத்தும் பிரதம அமைச்சரிடமே உள்ளது. தேர்தலில் பெரும்பாண்மை பெற்ற ஒரு வேட்பாளர் ஒருவரை குடியரசுத்தலைவர் பிரதமராக நியமிக்கிறார் அவரது ஆலோசனையின் பெயரில் அமைச்சர்களை நியமிக்கிறார்.
- மத்திய சட்டமன்றமானது நாடாளுமன்றம் எனவும் பாராளுமன்றம் எனவும் அழைக்கப்படுகிறது. இது குடியரசுத் தலைவர் மற்றும் இராஜ்யசபா , லோக்சபா என இரண்டு அவைகளை கொண்டது. லோக் சபா கீழவை என அழைக்கப்படுகிறது. இதன் உறுப்பினர்கள் வயதுவந்தோர் வாக்குரிமையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். லோக்சபாவில் உள்ள உறுப்பினர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதில் குடியரசுத்தலைவர் இரண்டு ஆங்கிலோ இந்தியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 552 ஆகும். தற்போது 543 மற்றும் இரண்டு நியமன உறுப்பினர்கள் உள்ளனர்.
- ராஜ்யசபா என்பது நாடாளுமன்றத்தின் மேலவை என அழைக்கப்படுகிறது. இதில் தற்போது 250 உறுப்பினர்கள் உள்ளனர். இந்த அவையில் உள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் ஆகும் ராஜ்யசபா நிரந்தரமானது இதை கலைக்கமுடியாது. இதில் 238 உறுப்பினர்கள் மறைமுக தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கலை பண்பாடு இலக்கியம் சமூகப் பணியில் சிறப்பாக பணிபுரியும் 12 உறுப்பினர்களை குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

மாநில அரசு

- மாநில அரசு நிர்வாகத்தில் ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள் குழு மற்றும் சட்டத்துறை தலைவர்(அட்வகேட் ஜெனரல்) ஆகியோர் உள்ளனர். தேர்தலில் வெற்றிபெற்ற கட்சித்தலைவரை முதலமைச்சராக ஆளுநர் பதவிபிரமாணம் செய்து வைக்கிறார். அவரது ஆலோசனையின்படி அமைச்சர்களை நியமிக்கிறார்.
- எல்லா மாநில சட்டமன்றமும் ஒரே சீராக அமையவில்லை. ஆந்திர, பீகார், ஜம்மு-காஷ்மீர், கர்நாடாகம், மகாராஷ்டிரம் மற்றும் உத்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் ஈரவை சட்டமன்றமும் மற்ற எல்லா மாநிலங்களிலும் ஓரவை சட்டமன்றமும் உள்ளது.

உச்ச நீதிமன்றம்

- நீதித்துறை ஒரு சுதந்திரமான அமைப்பாகும். இந்தியாவின் உச்சநீதிமன்றம் அனைத்து நீதிமன்றங்களுக்கும் தலைமையானது. உச்ச நீதி மன்றம் அரசியலமைப்பு சட்டத்தின் பாதகாவலனாக உள்ளது. இது புதுடெல்லியில் உள்ளது. தற்போது ஒரு தலைமைநீதிபதி உட்பட 31 நீதிபதிகள் உச்சநீதி மன்றத்தில் உள்ளனர். மாநிலங்களின் தலைமை நீதிமன்றம் உயர்நீதிமன்றம் ஆகும். இந்தியாவில் 24 உயர்நீதிமன்றங்கள் உள்ளன. அவற்றில் மூன்று நீதிமன்றங்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு பொதுவாக உள்ளன.

தேசியச் சின்னங்கள்

- அரசியல் நிர்ணய சபை தேசியக்கொடியை ஜீலை 22ம் நாள் 1947ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது. முதன்முதலாக ஆகஸ்ட்15 நாள் 1947ல் ஏற்றப்பட்டது.
- தேசியக்கொடி: செவ்வக வடிவம் உடையது. மூன்று நிறங்களை உடையது. அதன்மேற்பகுதி காவி நிறமும் நடுவில் வெண்மை நிறமும் கீழே கரும்பச்சைக் நிறத்தையும் கொண்டுள்ளது. அதன் நீள அகல விகிதம் 3:2. நடுவில் சாரநாத்கல்துாணில் உள்ள 24 ஆரங்களை உடைய அசோக சக்கரம் இடம்பெற்றுள்ளது. தேசியக் கொடியின் விதிமுறைகள் வேறு எந்த நாட்டுக் கொடியும் நமது கொடியின் வலது புறமோ அல்லது கொடியைவிட உயரமாகவோ பறக்கக் கூடாது. கம்பத்தின் உச்சிவரை கொடியேற்றப்பட்டிருக்க வேண்டும். கதிரவன் மறையும்முன் தேசியக் கொடியை இறக்கிவிட வேண்டும். காவி நிறம் தைரியத்தையும் தியாகத்தையும், பச்சை நிறம் செழுமையும் வளத்தையும் குறிக்கிறது. வெள்ளை நிறம் நேர்மை, அமைதி மற்றும் தூய்மையைக் குறிக்கும்.
- தேசிய கீதம்: நமது இந்திய தேசியப்பாடலை தேசியக்கவிஞர் இரவீந்திரநாத்தாகூர் இயற்றினார். வங்காள மொழியில் உள்ள இப்பாடல் ஐந்து பத்திகளைக் கொண்டது அவற்றில் முதல் பத்தியில் உள்ள பாடல்மட்டும் தேசியகீதமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- 150 ஆம் ஆண்டு சனவரி 24ஆம் நாள் நமது அரசியல் நிர்ணயசபையில் நமது தேசிய கீதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1911ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் நாள் கல்கத்தாவில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் இப்பாடல் முதன் முறையாகப் பாடப்பட்டது. இப்பாடலை பாடும் கால அளவு 52 விநாடிகள் ஆகும்.
- தேசியச்சின்னம்: நமது நாட்டு இலச்சினை அசோகரின் சாரநாத்துாணில் உள்ள சிங்கங்களின் உருவமாகும். 1950ஆம் ஆண்டு சனவரி 26 ஆம் நாள் குடியரசுத்தினத்தன்று இந்த இலச்சினை நமது இந்திய நாட்டின் இலச்சினையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதில் **சத்யமேவஜெயதே** என்னும் வார்த்தைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் பொருள் வாய்மையயே வெல்லும் என்பதாகும்.
- தேசியப்பாடல்: நமது தேசியப்பாடலான வந்தே மாதரம் ஆகும் கவிஞர் பக்கிம் சந்திர சட்டர்ஜியால் சமஸ்கிருதமொழியில் இயற்றப்பட்டது. இந்த பாடல் **ஆனந்தமடம்** என்ற புத்தகத்தில் 1882 ல் வெளியிடப்பட்டது. 1896ல் கொல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் இப்பாடல் முதல்முறையாகப் பாடப்பட்டது. இப்பாடல் முதல் முதலில் கல்கத்தாவில் பாடியவர் ரவீந்திரநாத் தாகூர்.
- தேசிய விலங்கு: வங்கப் புலி-1973 (உலகின் 70 மொத்த புலிகளின் எண்ணிக்கையில் 70 சதவிகிதம் இந்தியாவில் உள்ளது. முதலில் சிங்கம் இருந்தது.
- தேசியப் பறவை: மயில்--1963
- தேசியப் பழம்: மா
- தேசியப் ஆறு: கங்கை
- தேசியப் விளையாட்டு: ஹாக்கி
- தேசியப் மலர்: தாமரை—1950
- பாரம்பரிய தேசிய விலங்கு—யானை (2010)
- தேசிய நீர்வாழ் விலங்கு—டால்பின் (ஆற்று ஓங்கில்)--2010
- தேசியப் நாள்காட்டி: சாகா காலப்பிரிவு
- தேசியப் மரம்: ஆலமரம்--1950
- தேசிய ஆறு: கங்கை ஆறு—1963

இந்திய அரசியலமைப்பின் சிறப்பு கூறுகள்

- இங்கிலாந்தில் இருந்து அனுப்பப்பட்ட அமைச்சரவையின் தூதுக்குழுவின் பரிந்துரையின் படி இந்திய பிரதிநிதிகள் அடங்கிய அரசியல் நிர்ணயசபை ஏற்படுத்தப்பட்டது. இச்சபையின் முதல் கூட்டம் 1946ஆம் ஆண்டு டிசம்பர் 9ல் சச்சிதானந்த சின்ஹா தலைமையில் நடைபெற்றது. இவரே தற்காலிக தலைவராக தேந்தெடுக்கப்பட்டார்.
- 1946ஆம் ஆண்டு டிசம்பர் 11 ல் அரசியல் அமைப்புசபையின் நிரந்தர தலைவராக டாக்டர் இராஜேந்திரபிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இச்சபையானது சட்டம் இயற்றும் பணியை அரசியல் வரைவுக்குழுவிற்கு அளித்தது. 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 ஆம் நாள் வரைவுக்குழுவின் தலைவராக டாக்டர். பி.ஆர். அம்பேத்கார் நியமனம் செய்யப்பட்டார். இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் சிற்பி என அம்பேத்கார் அழைக்கப்பட்டார். வரைவுக்குழு 60க்கும் மேற்பட்ட நாடுகளின் சட்டங்களை ஆராய்ந்து இந்திய அரசியலமைப்பு சட்டத்தை இயற்றியது.
- அரசியலமைப்பு நிர்ணயசபை 1950 சனவரி 24ஆம் நாளில் இறுதியாக கூடியது. 1950 சனவரி 26 ஆம் நாளில் நடைமுறைக்கு வந்தது.

அரசியல் வரைவுக்குழு சட்ட வல்லுநர்கள்

- டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் (குழுத் தலைவர்)
- என். கோபால்சுவாமி ஐயங்கார்,
- அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்,
- கே.ம். முன்சி
- சையத்முகமது சாதுல்லா
- பி.எல். மிட்டர்
- என். மாதவாராவ்,
- டி.டி.கிருஷ்ணமாச்சாரி
- டி.பி. கைத்தான்

- அரசியலமைப்பு என்பது அரசியல் முறைகளின் அடிப்படைக் கோட்பாடுகளுடைய தொகுப்பாகும். இதன் அடிப்படையிலேயே நாட்டு மக்கள் ஆளப்படுகின்றனர்.
- அரசியலமைப்பை இயற்றும் பணி 2 ஆண்டுகள் 11 மாதங்கள் 18 நாள்கள் நடைபெற்றது. 11 திட்டமிட்டக் கூட்டங்கள் 114 நாட்கள் ஆயிற்று.
- 1929ஆம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற இந்தியக்தேசியக் காங்கிரஸ் மாநாட்டு தீர்மானத்தின்படி "பூரண சுயராஜ்யம்" 1930 ஆண்டு சனவரி 26 ஆம் நாள் கொண்டாடப்பட்டது. அதனை நினைவுக் கூறும் விதமாக 1950 ஜனவரி 26ம் நாள் இந்திய அரசியலமைப்புச்சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பு 22 பாகங்களையும் 12 அட்டவணைகளையும் 449 சரத்துகளையும் கொண்டது.
- இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்: முகப்புரை, இறையாண்மை, மதச்சார்பின்மை, நாடாளுமன்ற மக்களாட்சி அரசு, அடிப்படை உரிமைகள், மற்றும் கடமைகள், அரசு நெறிமுறைக்கோட்பாடுகள், வயது வந்தோர் வாக்குரிமை.
- சட்ட அறிமுகமே இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை ஆகும்.
- மக்களே அதிகாரத்தின் தோற்றுவாய்

அரசியல் கட்சிகள்

- மக்களாட்சி என்பது " மக்களால் மக்களுக்காக மக்களே ஏற்று நடத்தும் ஆட்சி" என்று கூறியவர் ஆபிரகாம் லிங்கன்.
- மக்களுக்கும் அரசுக்கும் பாலமாக செயல்படுவது—கட்சிகள்
- ஆறுமாதங்களுக்கு அல்லது ஒருவருடத்திற்கு ஒருமுறை கட்சிகளின் பொதுக்குழுக்கூட்டம் நடத்தப்பட்டு அதில் கட்சியின் தீர்மானங்களும் செயல்பாடுகளும் வரையறுக்கப்படுகின்றன.
- கட்சி முறையின் வகைகள்:

பொதுவாக கட்சிமுறைகள் மூன்று வகைப்படும் அவையாவன

1. ஒரு கட்சி முறை: ஆளும்கட்சி மட்டுமே இருக்கும். எகா. முன்னாள் சோவியத் ரஷ்யா

2. இருகட்சி முறை: இரண்டு கட்சி மட்டுமே செயல்படும், எகா. அமெரிக்கா, இங்கிலாந்து.
3. பலகட்சி முறை: பல கட்சியில் செயல்பாட்டில் இருக்கும். எகா, இந்தியா, பிரான்ஸ், இத்தாலி, இலங்கை.

- மாநில கட்சிகள்: சட்டமன்ற அல்லது நாடாளுமன்ற தேர்தலில் குறிப்பிட்ட அளவு வாக்கு சதவிகிதம் பெறும் கட்சிகளுக்கு இந்திய தேர்தல் ஆணையம் அந்தஸ்து வழங்கும்.
- தேசிய கட்சிகள்: குறைந்தது நான்கு மாநிலங்களில் மாநிலக்கட்சி அந்தஸ்து பெற்ற கட்சிகள் என ஒப்புதல் பெற்ற கட்சிகள் தேசியக் கட்சிகள் எனப்படும்.

ஐக்கிய நாடுகள் அவை

- 1939 ஆம் ஆண்டு முதல் 1945 ஆண்டு வரை நடைபெற்ற இரண்டாம் உலகப் போரில் 50 மில்லியன் மக்கள் இறப்பு. முதலாம் உலகப் போரின் முடிவில் ஏற்படுத்தப்பட்ட **"பன்னாட்டு கழகம்"** அமைதியையும் பாதுகாப்பையும் ஏற்படுத்தாத காரணத்தால் இரண்டாம் உலகப் போர் ஏற்பட்டது.
- **ஐக்கிய நாடுகள்** என்ற பெயரை அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பிராங்களின் ருஸ்வெல்ட் உருவாக்கினார்.
- ஜனவரி 1 1942 ஆம் ஆண்டு 26 நாடுகள் சேர்ந்து வாஷிங்டனில் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இது அட்லாண்டிக் சாசனம் எனப்பட்டது. இதில் முதன்முதலில் **ஐக்கிய நாடுகள்** என்ற பெயர் பயன்படுத்தப்பட்டது. இது உலகமக்களிடையே அமைதி ஏற்படுத்தப்பட்ட ஒரு கொள்கை அமைப்பாகும். 1941 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் நாள் அமெரிக்கா அதிபர் பிராங்களின் ருஸ்வெல்ட் இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் அட்லாண்டிக் கடலில் ஹெச்.எம்.எஸ் வேல்ஸ் பிரின்ஸ் என்றும் கப்பலில் பயணம் செய்யும் போது இந்தச் சாசனத்தில் கையொப்பமிட்டனர்.
- ஐக்கிய நாடுகள் அவையின் சாசனத்தை எழுவதற்கு சான்பிரான்சிஸ்கோவில் ஏப்ரல் 25 1945ல் ஒரு மாநாடு கூட்டப்பட்டது
- இதில் 50 நாடுகள் பிரதிநிதிகள் ஜீன் 26 1945ல் கையெழுத்திட்டனர். போலந்து மட்டும் பின்னர் கையெழுத்திட்டது.
- ஐக்கிய நாடுகள் அவையின் செயல்பாடுகள் 1945 அக்டோபர் 24 ல் தொடங்கின. இதன் தலைமையிடம் நியூயார்க்கின் மான்ஹாட்டன். இந்த அமைப்பில் 193 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர்
- ஐ.நாவின் கொடி ஐந்து உள்வட்டங்களும் அதன்மீது வடதுருவத்திலிருந்து பார்த்தால் தெரியக்கூடிய வகையிலான உலகப்பட தோற்றமும் அதனைச் சுற்றி ஆலிவ் இலையும் கொண்டதாக இருக்கும்.
- ஐ.நாவின் மொழி: ஆங்கிலம், பிஞ்சு, ஸ்பானிஷ், ரஷ்யன், சீனா, அரேபியம்
- ஐநா ஆறு அவைகளை கொண்டது
- பொதுப்பேரவை: மனித இனப் பாராளுமன்றம் என அழைக்கப்படுகிறது. அனைத்து அமைப்புகளிலும் மிக முக்கியமானது. இதன் பொதுக்குழு செப்டம்பர் மாதம் கூடும்.
- பொதுப்பேரவையின் தலைவராக இந்தியாவை சேர்ந்த விஜயலட்சுமி பண்டிட் 1953ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்
- பாதுகாப்பு பேரவை: ஐ.நாவின் இரண்டாவது முக்கிய அவை பாதுகாப்ப பேரவை. இது ஐநாவின் நிர்வாக அமைப்பாக விளங்குகிறது. இந்த அவை 5 நிரந்தர உறுப்பினர்களையும் 10 நிரந்தரமற்ற உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. நிரந்தரமற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 2 ஆண்டுகள் ஆகும்
- 2010 ல் இந்திய பாதுகாப்பு பேரவையில் நிரந்தரமற்ற உறுப்பினராக 2 ஆண்டுகள் தேர்வு செய்யப்பட்டது.
- பொருளாதார மற்றும் சமுக பேரவை: இப்பேரவை ஐநாவின் பொருளாதார சமுகச் செயல்பாடுகளையும் ஐநா அவையின் சிறப்பு நிறுவனத்தின் பணிகளையும் ஒருங்கிணைக்கிறது. இதன் 54 உறுப்பினர்கள் ஒவ்வொரு 3ஆண்டுக்கும் பதவி விலகுவார்கள். இப்பேரவையின் முக்கியகூட்டம் ஜீலை மாதம் கூடும்
- அறங்காவலர் பேரவை: தன்னாட்சி அதிகாரம் பெறாத 11 நாடுகளை நிர்வகிக்க 7 உறுப்பினர் கொண்ட அறங்காவலர் பேரவை அமைக்கப்பட்டது. பேரவை மேற்பார்வைசெய்த நாடுகள் தன்னாட்சி பெற உதவியது. 1994 ஆம் ஆண்டுக்குள் இந்நாடுகளனைத்தும். சுதந்திரம் அடைந்தன. இப்பணி தற்போது நிறைவுற்றதால் வருங்காலத்தில் தேவை ஏற்படும் போது இந்த அவை கூடும்.
- பன்னாட்டு நீதிமன்றம்: இது ஐநாவின் முக்கிய நீதி அமைப்பாகும். 15 நீதிபதிகள் பொதுக்குழுவாலும், பாதுகாப்பு பேரவையாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இது ஹாலந்து நாட்டில் தி ஹேக் என்ற நகரில் அமைந்துள்ளது.
- தமைமைச்செயலகம்: இந்த அமைப்பானது ஐநாவின் அனைத்து நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துகிறது.
- ஐநாவின் சிறப்பு அமைப்பான அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் மேலாணையர் அலுவலகம் அகதிகளுக்கு ஆற்றிய சேவைக்காக 1954 மற்றும் 1981 ஆண்டுகளில் நோபல் பரிசு பெற்றுள்ளது.

குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான சட்டங்களும் நலத்திட்டங்களும்

- நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே சுதந்திரப் போராட்ட தலைவர் கோபாலகிருஷ்ண கோகலே, குழந்தைகளின் கல்வி உரிமையின் முக்கியத்துவத்தை ஆங்கிலேயர் காலத்திலேயே சட்ட மன்றத்தில் எடுத்துரைத்து அதனை பெறுவதற்காக அரும்பாடுபட்டார். அவரின் கனவு 2010 ஏப்ரல் 1ஆம் நாள் கொண்டுவரப்பட்ட கல்வி உரிமைச் சட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 6 முதல் 14 வயது முடிய உள்ள குழந்தைகளுக்கு கல்வி ஓர் அடிப்படை உரிமையாக ஆக்கப்பட்டது.
- 1986 இல் நிறைவேற்றப்பட்டு, 2000 இல் மாற்றியமைத்து நடைமுறைபடுத்திய இளம் குற்றவாளிகள் நீதிச் சட்டம்.
- தாய்ப்பாலுக்கு மாற்றாக, உணவுப்புட்டிகள் மற்றும் குழந்தை உணவு திட்டம்-1992
- குழந்தைகள் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பாணைக் குழு சட்டம் 2005
- ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் (ICDS) 1975
- பணிக்கு செல்லும் தாய்மார்களின் குழந்தைகளுக்காகக் குழந்தைகள் பேணி வளர்க்கும் ராஜீவ் காந்தி குழந்தைக் காப்பகத் திட்டம் 2006ல் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் வேலைக்கு செல்லும் தாய்மார்களின் 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்காக குழந்தைகள் காப்பகத்தை ஏற்படுத்தி நடத்தி வருகிறது.
- வேலைக்கு செல்லும் குழந்தைகளுக்கான கவனிப்பும், பாதுகாப்பும்--2005
- ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது.
- 1996 ஆண்டு முதல் சாதனைக் குழந்தைகளுக்கான தேசிய விருது ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு குடியரசுத் தினத்தன்றும் 4 முதல் 15 வயதிற்குட்பட்ட குழந்தைகள் கௌரவிக்கப்படுகிறார்கள்.
- குடும்ப சொத்துக்களில் மகன்களோடு, மகள்களும் உரிமைகோர சட்டம் இடம் அளிக்கிறது. 1978 ஆண்டு உருவாக்கப்பட்ட குழந்தைத் திருமணத் தடைச் சட்டத் திருத்தம் பெண்களின் திருமண வயது 15 லிருந்து 18 ஆகவும், ஆணின் திருமண வயது 18 லிருந்து 21 ஆகவும் உயர்த்தியுள்ளது. இது குழந்தைத் திருமணத்தைத் தடைசெய்கிறது.
- 1961- வரதட்சணைத் தடைச்சட்டம் (கொடுப்பவர்களுக்கு)
- 1986- வரதட்சணைத் தடைச்சட்டம் (வாங்குபவர்களுக்கு)
- 1997- பெண்களை இகழ்தல் தடைச்சட்டம் (ஈவ்டீசிங்). 2002 மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் படி பெண்களுக்கு தொல்லை கொடுப்பதை இது தடைசெய்கிறது.
- 73 வது 74 வது அரசியல் சட்டத்திருத்தம் ஊராட்சி அமைப்புகளிலும், உள்ளூர் அமைப்புகளிலும், பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீட்டைக் கொடுத்துள்ளது.
- வேலைக்கான பயிற்சி திட்டம்(**STEP)**—1996
- சுயஉதவித் திட்டம்: சுயம்ஸிதா
- குறுகிய கால இல்லங்கள் (1996)

தேசிய ஒருமைப்பாடு

- இந்தியா பாரதம் என்றும் அழைக்கப்படுகிறது. மதங்களின் பிறப்பிடமாக இந்தியா திகழ்கிறது
- ஆரம்ப காலத்தில் ஆரியர்கள் குடியேறினார்கள் பின்பு பாரசீகர்கள்,கிரேக்கர்கள்,குஷாணர்கள், ஹீணர்கள், அரேபியர்கள், மங்கோலியர்கள்,மொகலாயர்கள், மற்றும் ஐரோப்பியர்கள் இந்தியாவிற்கு வந்து தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினார்கள் இந்திய இனங்களின் அருங்காட்சியகம் என அழைக்கப்படுகிறது.
- கலாச்சாரம் என்பது பண்பட்ட சமுதாயத்தின் வெளிப்பாடு ஆகும்.
- மக்கள் பல மொழிகள் பேசப்படுகின்றன. இந்தியா விடுதலை பெற்றதும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழியை அடிப்படையாக கொண்டு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இந்தியாவில் சுமார் 845 மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றுள் 22 மொழிகள் அரசியலமைப்புச் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- தேவநாகிரி வடிவிலான இந்தி எழுத்து இந்தியாவின் அலுவல் மொழியாக உள்ளது. ஆங்கிலம் இணைப்பு மொழியாக உள்ளது.
- இந்தியா இலக்கியங்களின் கருவூலமாகத் திகழ்கிறது. வேதங்கள், இராமயணம், மகாபாரதம், பகவத்கீதை,விவிலியம், குரான் மற்றும் திருக்குறள் போன்றவை இந்தியர்களிடையே புகழ்பெற்றுள்ளன.
- இந்தியாவில் ஒவ்வொரு சமயத்திற்கும் பல விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. ஆங்கிலேயே புத்தாண்டு அனைவரும் சமய வேறுபாடு கருதாமல் கொண்டாடி மகிழ்கின்றனர்.
- வடஇந்திய மக்கள் கோதுமையை உணவாகவும் தென்இந்திய மக்கள் அரிசியை உணவாகவும் உட்கொள்கின்றனர்

- அஜந்த எல்லோரா ஓவியங்கள் உலகப்புகழ் பெற்றவை. **காந்தாரக்கலை** இந்தியாவின் சிற்பக் கலையின் பெருமையை பறைசாற்றுகிறது.
- கர்நாடகம் மற்றும் இந்துஸ்தான் இசைப்பாணி இந்தியாவை பிறப்பிடமாகக் கொண்டவை. பரதநாட்டியம் குச்சுப்புடி, கதக், மணிப்புரி, ஒடிசி போன்றவை இந்தியாவில் புகழ்பெற்ற நாட்டியங்களாகும்.
- நவம்பர் 19 ஆம் நாளை ஒவ்வொரு ஆண்டும் தேசிய ஒருமைப்பாட்டு தினமாக கடைபிடித்து வருவதும், தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க உதவுகிறது.
- 1956 ஆம் ஆண்டு மொழி அடிப்படையில் இந்தியா பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன.
- எழுத்தறிவின்மை: எழுதவோ படிக்கவோ இயலாத நிலை-எழுத்தறிவின்மை எனப்படும். எழுத்தறிவிண்மை குழந்தை தொழிலாளர் பிரச்சனை, பெண் சிசுக் கொலை மற்றும் மக்கள் தொகை பெருக்கத்திற்கு காரணமாக அமைகிறது. எழுத்தறிவிண்மை நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தடைகல்லாக அமைகிறது.
- இந்திய அரசியலமைப்பு மக்களுக்கு கல்வி அளிப்பதை அடிப்படை உரிமையாக உத்தரவாதம் செய்கிறது. 1948-49 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக்குழு தாய் மொழி கல்வி கற்பது எழுத்தறிவு அளவினை உயர்த்தும் எனக் கூறியுள்ளது.
- 1968 ஆம் ஆண்டு கல்விக் கொள்கை நாடு முழுவதும் ஒரேமாதியான கல்வி முறையை (10+2+3) அறிமுகப்படுத்தியுள்ளது.
- 1986 ஆம் ஆண்டு தேசியக் கல்விக்கொள்கை ஆரம்பக் கல்வியை கட்டாயமாக்கியது. மேலும் முறைசார கல்விமுறையை அறிமுகப்படுத்தி மாணவர்கள் சீராக கல்விகற்க வழிவகுத்தது.
- 1992 ஆம் தேசிய கல்விக் கொள்கை **கரும்பலகைத்திட்டம்** மூலம் பள்ளிகளுக்கு அடிப்படைவசதிகள் செய்ய வழிவகை செய்ய வழிவகை செய்கிறது.
- 1991ஆம் ஆண்டு பேராசிரியர் தாவே அறிமுகப்படுத்திய குறைந்தபட்ச கற்றல் அளவு (ஆடுடு) மூலம் ஆரம்ப பள்ளிக் கல்வி வளர்ச்சி அடைந்துள்ளது
- தேசிய எழுத்தறிவு குழு, வயது வந்தோர் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தது. அனைவருக்கும் கல்வி இயக்க (ளுளுயு-2002) திட்டத்தின் மூலம் ஆரம்பக் கல்வியை உலகளாவிய அளவில் மேம்படுத்த சமுதாயத்தின் ஒத்துழைப்போடு முயற்சிகள் எடுத்து நடைமுறைப்படுத்தி வருகிறது.
- சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின் மூலம் அனைத்து குழந்தைகளுக்கும் 2010 ஆம் ஆண்டிற்குள் ஆரம்பக் கல்வி வழங்கப்பட வேண்டும்.
- மக்கள் தொகை 300க்கு மேல் உள்ள ஊர்களில் ஆரம்ப பாடசாலையை உருவாக்க வேண்டும்.
- அனைவருக்கும் கல்வி வழங்க **அனைவருக்கும் கல்வி** எனும் திட்டத்தை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது.
- 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் எழுத்தறிவு 80.33 சதவீதம். ஆண்கள் 86.81 சதவீதம், பெண்கள் 73.86 சதவீதம்.
- ஐக்கிய நாடுகள் சபை 1990 ஆம் ஆண்டினை பன்னாட்டு எழுத்தறிவு வருடமாகவும், செப்டம்பர் 8 ஆம் தேதியை உலக எழுத்தறிவு தினமாகவும் அறிவித்துள்ளது.
- தொழிற்சாலைகளில் பணிபுரியும் 14 வயதிற்கு உட்பட்டவர்கள் குழந்தைத் தொழிலாளர்கள் ஆவார்கள். உலகிலேயே இந்தியாவில்தான் அதிக குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர். 2011 ஆண்டு கணக்கெடுப்பின்படி 4.35 மில்லியன் குழந்தைதொழிலாளர்கள் உள்ளனர். இது இந்திய மக்கள் தொகையில் 0.36 சதவீதமாகும்.
- 1949 ஆம் ஆண்டு குழந்தைகள் பணி சட்டத்தின்படி குழந்தைகள் பணிபுரிய 14 வயது நிரம்பியிருக்க வேண்டும். பின்னர் இது 17 வயதாக உயர்த்தப்பட்டது. குழந்தை தொழிலாளர் சட்டத்தின்படி 12 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை தோட்ட தொழிலில் ஈடுபடுத்துவது குற்றமாகும்.
- 1986 குழந்தைதொழிலாளர் சட்டத்தின்படி சுரங்கங்களிலும் தொழிற்சாலைகளிலும் பணிபுரிய 14 வயது நிரம்பியிருக்க வேண்டும்.
- 1987 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட குழந்தைகள் தொழிலாளர்கள் கொள்கையின்படி குழந்தை தொழிலாளர் முறை ஒழிக்கப்பட்டது. இதன் மூலம் குழந்தை தொழிலாளர்களுக்கென தனிப்பள்ளிகள் உருவாக்கப்பட்டன.
- 1976 ஆம் ஆண்டு இந்தியாவின் முன்னாள் பிரதமரான இந்திராகாந்தியால் கொத்தடிமை முறை ஒழிக்கப்பட்டது
- 1829 ஆம் ஆண்டு சட்டத்தின் படி பெண்கள் உடன்கட்டை ஏறுதல் **சதி** ஒழிக்கப்பட்டது.
- 1856ஆம் ஆண்டு விதவைகள் மறுமணச்சட்டம் இயற்றப்பட்டது
- டாக்டர் முத்துலட்சுமியின் முயற்சியால் 1929ல் குழந்தை திருமணதடை சட்டமான **சாரதா சட்டம்** கொண்டுவரப்பட்டது
- 1956 ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமை சட்டத்தில் பெற்றோரின் சொத்தில் பெண்களுக்கும் சமபங்குண்டு என்று கூறியது
- 1961 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வரதட்சனை தடுப்பு சட்டத்தின் படி வரதட்சனை கேட்பது தண்டனைக்குரிய குற்றமாகும்
- 1976 ஆம் ஆண்டு இயற்றப்பட் சமஊதிய சட்டத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் ஊதியம் வழங்கப்பட வேண்டும்
- தொட்டில் குழந்தை திட்டம் (1992) பெண்சிசுக் கொயில் இருந்து பாதுகாக்கிறது

- 1978ஐ ஐநா சர்வதேச பெண்கள் ஆண்டாக அறிவித்துள்ளது.
- **வறுமை:** உலக வங்கியின் கூற்றுப்படி **"குறைந்த பட்ச வாழ்வு நிலைமையை அடைய இயலாத நிலை"** வறுமை எனப்படும்
- இந்திய மக்கள் தொகையில் 3ல் 1 பங்கு மக்கள் வறுமையில் உள்ளனர்
- வறுமைக்கான காரணங்கள்: மக்கள் தொகை பெருக்கம், மக்களின் குறைவான வருமானம், வேலையில்லா திண்டாட்டம், கல்வியறிவிண்மை.
- இந்திய அரசு வறுமையை ஒழிக்க பல வறுமை ஒழிப்பு திட்டங்கள் மற்றும் ஐந்தாண்டு திட்டங்களின் மூலம் பல ஏற்பாடுகளை செய்துவருகிறது.
- **முதலாவது ஐந்தாண்டு திட்டம் (1951-56):** விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளித்தது. உணவுப் பிரச்சனையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- **நான்காவது ஐந்தாண்டு திட்டம் (1969-74):** மக்களின் வாழ்நிலையை உயர்த்தவும் பொருட்களின் விலையை குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- **ஏழாவது ஐந்தாண்டு திட்டம் (1985-90):** உணவுப் உற்பத்தியில் தன்னிறைவு பெற்று வறுமையை போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- **பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தின்** படி தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- **ஜவஹர் ரோஜ்கர் திட்டம(1989):** வேலைவாய்ப்பில்லாதவர்களுக்கு வேலைவழங்கி வறுமையை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. கிராமபஞ்சாயத்தின் மூலம் நிதி வழங்குகிறது.
- இந்திராகாந்தி அவர்களால் கொண்டுவரப்பட்ட 20 அம்ச திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் வறுமை ஒழித்து சமுதாயத்தின் அடித்தட்டு மக்களை உயர்த்த வழிவகை செய்யப்பட்டது
- **வேலையின்மை:** பணிபுரிய விருப்பமும் உடல் தகுதியும் இருந்து வேலைகிடைக்காமல் இருப்பது
- தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம் (NREP)—1980
- கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு திட்டம் (RLEP)—1983 நிலமற்ற குடும்பங்களில் ஒருவருக்கு வருடத்திற்கு 100 நாள் வேலை வழங்குகிறது
- கிராமப்புற இளைஞர் வேலைவாய்ப்பு திட்டம் (TRYEP)—1980 இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பினை அளிக்கின்றது.
- எதிர்பாராத மக்கள் தொகை வளர்ச்சியே மக்கள் தொகை பெருக்கம் எனப்படுகிறது. இந்தியாவில் உள்ள மிகப் பெரிய பிரச்சனை மக்கள் தொகை பெருக்கம் ஆகும்.
- உலக நிலப்பரப்பில் இந்தியா 2.4 சதவீதத்தை பெற்றுள்ளது. ஆனால் உலக மொத்த மக்கள் தொகையில் இந்தியா 16.84 சதவிகிதத்தை பெற்றுள்ளது.
- உலக மக்கள் தொகை நாள்--ஜீலை 11

மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும்

- சமூகத்தில் மனிதன் சுமூக வாழத்தேவையான நிலையை உரிமை என்கிறோம்.
- பேரறிஞர் பொசாங்கோ கூற்றின்படி **உரிமைகள் என்பவை சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டு அரசால் நடைமுறைப்படுத்தப்படுவதாகும்**
- இரண்டாம் உலகப் போருக்கு பிறகு மனித உரிமைகளைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 24ஆம் நாள் ஐ.நா தினமாக கொண்டாடப்படுகிறது.
- ஐ.நா சபை 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் நாள் தோற்றுவிக்கப்பட்டது. ஐ.நா. சபையின் ஆலோசனையின் பேரில், மனித உரிமைகள் குழு அமைக்கப்பட்டது. இக்குழு மனித உரிமைகள் மசோதாவை தயாரித்து வழங்கியது, இம்மசோதா, ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாள் நிறைவேற்றப்பட்டது. இதுவே **அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்** என்று அழைக்கப்படுகிறது. இது 30 சரத்துகளை கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10 ஆம் நாள் மனித உரிமைகள் தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது
- அனைத்துலக மனித உரிமைக பிரகடனம் அனைத்து நாடுகளுக்கும் ஏற்புடையதாகும். 1966 ம் ஆண்டு ஐ.நா சபை மனித உரிமைகளைப் பாதுகாக்க இரு ஒப்பந்தங்களை உருவாக்கியது.
- 1993 ஆம் ஆண்டு வியன்னாவில் நடைபெற்ற் மனித உரிமைகள் மாநாட்டில் வெளியிடப்பட்ட, தனது பிரகடனத்தில் வியன்னா பிரகடனத்தில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதும் மேன்மையடையச் செய்வதும் பன்னாட்டு சமூகத்தின் சட்டப்பூர்வமான நோக்கமாக இருக்க வேண்டும் எனக் கூறியது. இதன்படி இந்திய தேசிய மனித உரிமை ஆணையத்தை 1993ஆம் ஆண்டு உருவாக்கியது. முாநிலங்களிலும் மனித உரிமையை பாதுகாக்க ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.

- **தேசிய மனித உரிமை ஆணையம்:** 1993 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின் படி தேசிய மனித உரிமைகள் ஆணையம் இந்தியாவில் 1993 அக்டோபர் 12ல் டெல்லியில் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாணையம் ஒரு தலைவரையும் நான்கு உறுப்பினர்களையும் கொண்டது.(1+4)
- இவ்வாணையத்தின் தலைவர் பொதுவாக ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இருப்பார்.
- ஆணையத்தின் ஓர் உறுப்பினர் உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாகவும், மற்றொரு உறுப்பினர் மாநில உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாகவும் மீதமுள்ள இரு உறுப்பினர்கள் மனித உரிமைகள் சார்ந்த செயல் அனுபவமிக்கவராக இருக்க வேண்டும். இவர்களை குடியரசுத் தலைவர் நியமனம் செய்வார்.
- தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைமையிடம் டெல்லி. குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படும் உறுப்பினர்கள் அவரின் ஆலோசனைப்பேரில் பதவிநீக்கம் செய்யலாம்.
- இந்த அமைப்பின் தலைவரின் பதவிக்காலம்: ஐந்து ஆண்டுகள் அல்லது 70 வயது. மற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 5ஆண்டுகள் ஆகும்.
- குடியரசுத் தலைவர் விரும்பினால் இவர்களை மறுநியமன்ம் செய்யலாம்.
- தேசிய மனித உரிமை ஆணையம் வாழ்வியல் நீதிமன்றத்திற்குரிய அனைத்து அதிகாராங்களையம் பெற்றுள்ளது. அரசிற்கு ஆண்டு தோறும் தனது அறிக்கையை அளிக்கிறது.
- **மாநில மனித உரிமைகள் ஆணையம்:** தமிழ்நாட்டில் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் நாள் மாநில் மனித உரிமைகள் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. இந்த அமைப்பு சென்னையில் செயல்படுகிறது. இவ்வாணையத்தின் தலைவர் பொதுவாக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருப்பார்.
- ஆணையத்தின் ஓர் உறுப்பினர் உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாகவும், மற்றொரு உறுப்பினர் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியாகவும் மீதமுள்ள இரு உறுப்பினர்கள் மனித உரிமைகள் சார்ந்த செயல் அனுபவமிக்கவராக இருக்க வேண்டும். இவர்களை ஆளுநர் நியமனம் செய்வார். இந்த அமைப்பின் உறுப்பினர்களை தேர்வு செய்யும் குழுவில் முதலமைச்சர், எதிர்கட்சி தலைவர், மாநில உள்துறை அமைச்சர் ஆகியோர் இருப்பர்
- ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாகச் செயலர் செயல்படுகிறார். இந்திய அரசியலமைப்பில் பகுதி 1 மற்றும் பகுதி 3 இல் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் மீறப்படும்போது இவ்வாணையம் விசாரணைசெய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் அளிக்கிறது
- மாநில மனித உரிமைய ஆணையத்தின் உறுப்பினர்கள் 70 வயது வரை அல்லது 5 ஆண்டுக்ள் பணியாற்றலாம்.
- **மாவட்ட மனித உரிமைகள் ஆணையம்:** மனித உரிமைகளைக் காக்க மாவட்ட அளவில் நீதிமன்றங்களை மாநில அரசாங்கம் உருவாக்கி உள்ளது. மாவட்ட அளவில் நடைபெறும் மனித உரிமைகள் மீறல்களை இந்நீதிமன்றம் விசாரணை செய்யும். இந்நீமன்றத்தில் நீதிபதியாக ஏழு ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றியவர் அல்லது அரசு வழக்கறிஞர் நியமிக்கப்படுகிறார். இந்நீதிமன்றங்கள் விரைவாக மனித உரிமைகள் மீறல்களை விசாரனை செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்க வகை செய்கிறது.
- 1856 ஆம் ஆண்டு இந்து விதவை மறுமணச்சட்டம் சட்டப்பூர்வமாக்கப்பட்டது
- 1955 ஆம் ஆண்டு இந்து திருமண்ச் சட்டத்தின்படி பெண்களின் திருமண வயது 21 ஆக நிர்ணயம் செய்துள்ளது
- 1956 ஆம் ஆண்டு இந்து வாரிசு சட்டத்தின்படி தாய் தந்தையரின் சொத்தில் பெண்களுக்கு சமஉரிமை வழங்கப்பட்டது
- 1967 ஆம் ஆண்டு தமிழக அரசு இந்துத் திருமண சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து சுயமரியாதை திருமணங்களை சட்டபூர்வமாக திருமணங்களாக அங்கிகரித்துள்ளது
- 1997 ஆம் ஆண்டு தமிழக அரசு பெண்களை கேலிசெய்வதைத் தடுக்கச் சட்டம் இயற்றியுள்ளது. மேலும் 1999 ஆம் ஆண்டு தமிழக அரசு பெண்களை இழிவுப்டுத்தும் சுவரொட்டிகள் வெளியிடுவதைத் தடைசெய்துள்ளது
- பணிபுரியும் பெண்களின் நலனைக் காக்க மத்திய அரசம் மாநில அரசம் பல்வேறு சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது
- 1948 ஆம் ஆண்டு தொழிற்கூட சட்டம்,
- 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம்
- 1952 ஆம் ஆண்டு சுரங்கச் சட்டம், ஆகியவை ஆண், பெண் வேறுபாடின்றி சமஊதியம் வழங்க வழிவகை செய்தது.
- 1961 ஆம் ஆண்டு பெண்களின் உடல் நலம் காக்க பேறுகாலப்பயன் சட்டம் இயற்றப்பட்டு மகப்பேறு காலத்தில் பணிபுரியும் பெண்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது
- மார்ச் 08 ஆம் நாள் சர்வதேச பெண்கள் தினமாக கொண்டாடப்படுகிறது
- பெண்கள உரிமையை உறுதி செய்ய 1995 ஆம் ஆண்டு சீனத் தலைநகர் பெய்ஜீங்கில் உள்ள உலகப் பெண்கள் ஒன்று கூடி **பெண்கள உரிமைகள், மனித உரிமைகளே, மனித உரிமைகள் பெண்கள் உரிமைகளே"** என முழக்கமிட்டனர்
- ஐ.நா சபை 1978 ஆம் ஆண்டைச் சர்வதேசப் பெண்கள் ஆண்டாக அறிவித்தது
- பெண்கள் நலன்காக்க இந்தியப் பெண்கள் சங்கம், ஜனநாயக மாதர் சங்கம் மற்றும் பெண்ணுரிமை இயக்கம் ஆகியவை போராடி வருகின்றனர். இவை தவிர அரசுசாரா தன்னார்வ அமைப்புகளான அரிமா சங்கம், ரோட்டரி சங்கம், இன்னர்வீல் சங்கம் போன்றவை உள்ளன

- குழந்தைகளின் நலன் காக்க இந்திய அரசியலமைப்பு கீழ்கண்ட சட்டங்களை இயற்றியுள்ளது.
- பிரிவு 39(கு) இன் படி இந்திய அரசியலமைப்பு, குழந்தைகள் சுதந்திரமாகவும் உடல் ஆரோக்கியத்துனும் வாழ வகை செய்கிறது,
- பிரிவு 45 இன் படி அரசாங்கம் எல்லாக் குழந்தைகளுக்கும் 14 வயது வரை கட்டாய இலவசக் கல்வி வழங்கிட வழிவகை செய்துள்ளது
- பிரிவு 24 இன்படி குழந்தைத் தொழிலாளர் முறை தடை செய்யப்பட்டுள்ளது
- சிறுவர்களுக்கு எதிரான அநீதிச் சட்டம் 1986 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு இளம்சிறார்கள் முறையாக பாதுகாக்கப்படவும் அவர்கள் திருந்தி வாழவும் வழி செய்துள்ளது
- ஐ.நா சபை 1979 ஆம் ஆண்டை சர்வதேச குழந்தைகள் ஆண்டாக அறிவித்துள்ளது.
- இந்தியா உலகிலேயே அதிகமான போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது நாடாகும். மூன்றுமில்லியன் கி.மீ. நீளமுள்ள சாலையில் 60 சதவிகிதம் தார்ச்சாலைகளாக உள்ளன
- சாலைப் போக்குவரத்து உதவிக்கு தொலைபேசியின் மூலம் 103 ஐத் தொடர்பு கொள்ளலாம்.
- 1989 ஆம் ஆண்டு ஜீலை 01 ஆம் தேதி, இந்தியாவில் கொண்டுவரப்பட்ட சாலைப் போக்குவரத்துச் சட்டம் வாகன ஓட்டுநர்களுக்கு ஓர் அடிப்படை வழிகாட்டியாக அமைந்துள்ளது.
- ஆண்டுதோறும் ஜனவரி முதல் மாதம் சாலைப் பாதுகாப்பு வாரமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.
- சாலைப்பாதுகாப்புக்குழு 1986ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஏற்படுத்தப்பட்டது

தமிழகத்தின் தற்கால சமூகச் சிக்கல்கள்

- தமிழகத்தில் சங்க காலத்தில் சதுர்வணா அடிப்படையில் சாதிமுறை நடைமுறையில் இல்லை. களப்பிரர்கள் ஆட்சிக்குப்பின் குறிப்பாக பல்லவர்கள், சோழர்கள் மற்றும் பாண்டியர்கள் காலத்தில் பிராமணர்கள் சமூகத்தில் உயர்நிலை அடைந்தனர். படிப்படியாக அரசர்களை வர்ண முறையை ஏற்றுக் கொள்ளச் செய்தனர். பக்தி இயக்கத்தின் மூலம் கோயில்கள் பொருளாதார காரணியாக மாறியது
- உழவர்களுக்கும் கைவினைஞர்களுக்கும் உரிமைகள் மறுக்கப்பட்டன இவர்கள் **சூத்திரர்கள்** என்றும் நிலமற்ற கூலிகள் **பஞ்சமர்கள்** என்றும் சிறுமைப்படுத்தப்பட்டனர். பிராமணர்களின் ஏகபோக ஆதிக்கம் உயர்கல்வி அரசு வேலை வாய்ப்புகள் பொது நிறுவனங்கள் மற்றும் அத்தியாவசிய சேவைகளில் காணப்படுட்டதால் பிராமணரல்லதவர்கள் ஒரு பிரமாணரல்லாதோர் இயக்கத்தை ஆரம்பிக்க காரணமாக அமைந்தது
- 1912 ஆம் ஆண்டு **சி.நடேச முதலியார்** ஒரு திராவிட விடுதியை பிராமணரல்லாத மாணவர்களுக்காகச் சென்னையில் நடத்தினார்
- பிட்டி தியாகராயசெட்டி மற்றும் டாக்டர் டி.எம்.நாயர் ஆகியோர் **தென்னிந்திய நல உரிமைச் சங்கம்** எனும் ஒரு சமூக அரசியல் இயக்கத்தை உருவாக்கினர் இந்த இயக்கம் பிராமணர் அல்லாதவர்களுக்கு அரசியல் சட்ட பாதுகாப்பு இயக்கமாக உருவெடுத்தது. இக்கட்சி இரட்டை ஆட்சிமுறையின்படி சென்னை மாகாணத்தில் ஆட்சியை கைப்பற்றி 16 ஆண்டுகள் ஆட்சி செய்தது (1921-37).
- நீதிக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் **வகுப்பு உரிமை ஆணை** மூலம் அரசு வேலை வாய்ப்பில் அந்தந்த வகுப்புகளில் மக்கள் தொகைக்கேற்ப இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. **சமஸ்கிருதம் கட்டாயம்** என்ற பிரிவை நீக்கியதன் மூலம் பிராமணரல்லாதவர்கள் மருத்து கல்லூரிகளில் சேருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது
- செல்வ வளம் மிக்க கோயில்களின் மீது இருந்து பிராமணர்களின் ஏகபோக ஆதிக்கம் **இந்து சமய அறநிலைய மசோதா** மூலம் கட்டுப்படுத்தப்பட்டது
- இந்தியாவின் முதல் பெண் டாக்டரான முத்துலட்சுமி அவர்களது அயராத உழைப்பால் **தேவதாசி** முறை ஒழிக்கப்பட்டது
- இங்கிலாந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பஞ்சமி நில சட்டத்தை பயன்படுத்தி தாழ்த்தப் பட்ட மக்களுக்கு நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. நிலமற்ற வேலையாட்களின் நிலையை உயர்த்த **மிராசுரார்ர் முறை** ஒழிக்கப்பட்டது
- முதன்முறையாக சென்னை மாகாணத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது நீதிக்கட்சியின் ஆட்சியில் சென்னை சிந்தாகிரிப் பேட்டையில் பள்ளியில் ஏழைக் குழந்தைகள் தொடர்ந்து கல்வி பெறுவதை ஊக்குவிப்பதற்காக மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- சென்னை மாநிலத்தில் தொழிற்சாலைகளை ஊக்குவிக்கவும் முறைப்படுத்தவும் தொழிற்பேட்டைகளை அறிமுகப்படுத்திய பெருமை நீதிக் கட்சியினரையேச் சாரும்.
- மகாத்மா காந்தி உள்ளிட்ட **சனாதான** ஆரவாளர்கள் தீண்டாமை மட்டும் ஒழிக்க முற்பட்டனர். ஆனால் அவர்கள் வர்ணரிசரம முறையை நியாயப்படுத்தினர். தயானந்த சரஸ்வதி (ஆரிய சமாஜ்) சாதியை வெறுக்கின்ற அதே வேளையில் வருணாசிரம முறையை நியாயப்படுத்தினர். தமிழ்நாட்டில் சித்தர், இராமலிங்க அடிகளார் மற்றும் வைகுந்தசாமி ஆகியோர்

சாதி முறையை முற்றிலும் எதிர்த்தனர். மகாராஷ்டிராவில் ஜோதிபா பூலே மற்றும் சாகு மகராஜ் கேரளாவில் ஸ்ரீ நாராயணகுரு தமிழ்நாட்டில் அயோத்திய தாச பண்டிதர் ஆகியோர் வர்ணத்தையும் சாதியையும் மறுத்தனர்

- சென்னை மாகாணத்தில் இரட்டையாட்சி சட்ட மன்றத்தில் பிராமணர் அல்லாதோருக்கு சில இடங்களை ஒதுக்கீடு செய்தது, முதல் நடவடிக்கையாகும் அரசுப் பணிகளில் விகிதாச்சார அடிப்படையில் அனைத்து சமூகப் பிரிவுகளுக்கும் இடஒதுக்கீடு
- செய்வதை உறுதி செய்யும் வகுப்புவாரி அரசாணை என்பது மற்றொரு முக்கியமான நடவடிக்கையாகும் கோயில் நுழைவுசட்டங்களுடன் சீர்த்திருத்தவாதிகள் மனநிறைவு அடைந்த போது சாதி முறையை எதிர்த்தவர்களே, ஒடுக்கப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்கள் அனைத்துப் துறைகளிலும் சமவாய்ப்பு பெற உழைத்தனர்
- சுதந்திரத்திற்கு பின் தமிழ்நாட்டில் கல்வி நிலையங்களில் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட சமுதாயத்திற்கு இட ஒதுக்கீடு செய்வதற்கு எதிராக பெறப்பட்ட நீதிமன்ற உத்தரவுகள் சமூக நீதிக்கு பெரிய சவாலாக அமைந்தன. இறுதியில் மாநில அரசகள் இடஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அரசியல் அமைப்பின் அடிப்படை உரிமைகள் பிரிவில் திருத்தம் செய்யும் முதாலவது அரசியல் சட்டதிருத்த மசோதவைப் பண்டித ஜவஹர்லால் நேரு கொண்டு வந்தார். தற்போது தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள இடஒதுக்கீடு முறை ஆதிதிராவிடர்களுக்கு 18 சதவீதமும், பழங்குடியினருக்கு 1 சதவீதமும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 சதவீதமும் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30 சதவீதமும் ஒதுக்கப்பட்டன.
- அருந்ததியருக்கும், பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கும் உள் ஒதுக்கீடு மற்றும் மகளிருக்கும் உள்ளாட்சி அமைப்புகளில் போதிய ஒதுக்கீடு சில குறிப்பிட்ட வேலைவாய்ப்புகளில் மகளிருக்கு முழு ஒதுக்கீடும் ஏற்படுத்தப்பட்டுள்ளது
- **தந்தை பெரியார்:** ஈ.வே. ராமசாமி சாதிமுறைக்கு எதிரான ஒரு தீவரமான போராளி 1924ல் கேரளாவில் வைக்கம் என்னுமிடத்தில் சூத்திரர்கள் மற்றும் பஞ்சமர்கள் என்ற தாழ்த்தப்பட்ட மக்கள் பொது தெருவின் வழியாகச் செல்ல சமமான உரிமைப் பெற போராட்டம் நடத்தினார்
- வ.வே.சு அய்யரால் நடத்தப்பட்டுவந்த சேரன்மாதேவி கருகுலத்தில் வர்ணாசிரமம் பாகுபாடு பின்பற்றப்படுவதை எதிர்த்தார். தமிழ்நாட்டில் காங்கிரஸ்கட்சியின் தலைவர் என்ற முறையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கிடைத்திடப் போராடினார்
- சுயமரியாதைப் இயக்கத்தை தோற்றுவித்தார். இந்த இயக்கம் சூத்திரர்கள் மற்றும் பஞ்சமர்களைச் சமூகப் பண்பாடு மற்றும் மத அடிமைத்தனத்தல் இருந்து விடுவித்ததையும் பெண்கள் சரிநிகர் சமான நிலையை அடைவதையும் நோக்கமாக கொண்டதாகும். சாதியை மறுத்ததுடன் சாதிமறுப்பு திருமணங்களை ஊக்குவித்தார். புரோகிதம் தவிர்த்த சுய மரியாதை திருமணங்களை ஊக்குவித்தார்
- இவர் **குடியரசு, விடுதலை,** தமிழ் இதழ்களையும் **ரிவோல்ட்** என்ற ஆங்கில இதழையும் வெளியிட்டு தன்னுடைய கொள்கைகளப் பரப்பினார். பெண்கள் உரிமைகள்காக அவர் நடத்திய போராட்டங்களால் **அவருக்கு** பெரியார் என்ற பட்டத்தை பெற்றுத் தந்தது
- 19 ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசு நிதியுதவித் திட்டம் கிராமங்களில் அதிகமான பள்ளிகளை ஏற்படுத்தியது
- காமராசரால் அறிமுகப்படுத்தப்பட்ட மதிய உணவுத் திட்டம் எம்.ஜி.ஆர் ஆட்சியில் சத்துணவுத் திட்டமாக மேம்பாடு அடைந்தது. கல்விக் கட்டணம் பட்டப்படிப்பு வரை ரத்து செய்யப்படுகிறது
- 20 நூற்றாண்டின் தொடக்கத்தில் பஞ்சமர்கள் மற்றும் சூத்திரர்கள் பொதுப்போக்குவரத்து மற்றும் பொது சிற்றுண்டிகளை பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டது
- எனவே இவர்களின் நிலையை எண்ணி ஆங்கிலேயர்கள் மற்றும் கிருஸ்த்துவ பாதிரியார்களும் மிகவும் கவலை அடைந்தனர். எனவே பெரிய மதமாற்றம் நிகழ்ந்தது. இது தயானந்த சரஸ்வதி, ஜி. சுப்பிரமணிய ஐயர், காந்தி போன்றோரின் கண்ணை திறந்தது.
- காந்தி அவர்களை இந்துக்களாக அங்கீகரித்து அவர்களுக்கு **"ஹரிஜன்கள்"** (கடவுளின் குழந்தைகள்) என்று பெயரிட்டார்.
- **ஹரிஜன்** என்ற இதழை நடத்தி அவர்களை உயர்த்துவதற்கான கொள்கைகளை காங்கிரஸ் கட்சிக்கள் கொண்டுவந்தார்
- 1938 ஆம் ஆண்டு இராஜாஜி தலைமையில் அமைந்த காங்கிரஸ் அமைச்சரவை **ஹரிஜன்கள்** இந்துக் கோயில்களுக்குள் நுழைய கோயில் நுழைவு சட்டங்களை கொண்டு வந்தது.
- மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் தாழ்த்தப்பட்டவர்கள் நுழைய வைத்தியநாத அய்யர் மற்றும் முத்துராமலிங்கத் தேவர் போன்றோர் தீவிரமாக செயல்பட்டனர்
- 2006 ல் கொண்டுவரப்பட்ட தமிழ்நாடு அர்ச்சகர் சட்டம் பிராமணல்லதவர் குறிப்பாக சூத்திரர்கள் மற்றும் பஞ்சமர்கள் கோயில்களில் அர்ச்சராக வழிவகை செய்கிறது.
- **குழந்தை தொழிலாளர்கள்:** 1978-1979 அறிக்கையின் படி **"குழந்தைத் தொழிலாளி பொதுவாக குழந்தைகளில் ஒரு பிரிவினர் ஊதியம் பெற்றோ ஊதியம் பெறாமலோ உழைப்பில் பங்கெடுத்தல்"** குழந்தை தொழிலாளர் என வரையறுக்கப்படுகிறது

- குழந்தை தொழிலாளருக்கு எதிரான அரசின் நடவடிக்கைகள்: இந்திய அரசியலமைப்பு சட்டம் 24வது பிரிவின் படி பதினான்கு வயதிற்குக் கீழ் உள்ள எந்த குழந்தையம் தொழிற்சாலை மற்றும் சுரங்கம் அல்லது பிற ஆபத்தான வேலைகளில் அமர்த்தக் கூடாது.
- குழந்தை தொழிலாளர்களை ஒழிப்பதற்காக 13 முக்கிய சட்டங்களை மத்திய அரசு இயற்றியுள்ளது.
- 1938 ஆம் ஆண்டு குழந்தை தொழிலாளர் ஒழிப்பு சட்டம்
- 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலை சட்டம்
- 1950 ஆம் ஆண்டு வணிகக் கப்பல் சட்டம்
- 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம்
- 1952 ஆம் ஆண்டு சுரங்கச் சட்டம்
- 1961 மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம்
- **திருநங்கையர்:** 1970 ஆம் ஆண்களில் **டிரான்ஸ்ஜென்டர்** குறியீட்டுச் சொல் பரவலாக வழக்கில் கையாளப்படலாயிற்று.
- 1980 ஆம் ஆண்டு **டிரான்ஸ்ஜென்டர்** என்ற சொல் அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வந்தது. இதே பிரிவினரைத் திருநங்கையர் என்று தமிழில் அழைக்கிறோம். எல்லா அரசுதிட்டங்களிலும் ஆண், பெண் போன்று திருநங்கையருக்கும் தனிபிரிவு செய்யப்பட்டுள்ளது.
- உலகிலேயே முதன் முதலாகத் திருநங்கைகளுக்கு என திருமணத்தகவல் மின்வலை சென்னையில் துவங்கப்பட்டுள்ளது.
- திருநங்கை.நெட் (Thirunangai.net) என்பது தமிழ்மொழி பேசும் திருநங்கைகளுக்கான திருமணத் தகவல் இணையதளம் ஆகும்.
- இந்தியாவில் முதன்முறையாக கடலூர் மாவட்டம் நிர்வாகம் திருநங்கைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு முன்மாதிரிக் குடியிருப்புகளை அமைக்க முன்வந்துள்ளது. திருநங்கையருக்கு, அதிகாரபூர்வமாக மூன்றாம் பாலினம் தகுதியை அளித்த ஒரே மாநிலம் தமிழகம் ஆகும்.
- கடலூர்,பண்ருட்டி,சிதம்பரம் போன்ற இடங்களில் திட்டமிடப்பட்டுள்ள முன் மாதிரி திருநங்கையர் கிராமங்கள் திருநங்கையரைக் குடியமர்த்தி, திருநங்கையருக்கான அரசினால் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள திருநங்கையர் நலவாரியத்தில் பல்வேறு நலத்திட்டங்களை தங்குதடையின்றி நிறைவேற்ற உதவியாக அமையம்
- கடலூரில் இரண்டு ஏக்கர் நிலம், வருவாய்த்துறை அதிகாரியால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இங்கு திருநங்கையர் ஒவ்வொருக்கும் 3 செண்ட் வீட்டுமனையும், அதில் 308 சதுர அடியில் வீடுகள் கட்டிக்கொள்ள கடனுதவியும் தரப்படவுள்ளன.

இந்தியாவும் உலக அமைதியும்

- இந்திய விடுதலைக்கு பிறகு உலக விவகாரங்களில் தீவிரமாகவும் தன்னிச்சையாகவும் ஈடுபட்டு வருகிறது.
- இந்திய உலக நாடுகளுக்கிடையே அமைதி ஏற்படுத்துவதில் மிக முக்கிய பங்காற்றி வருகிறது.
- இந்தியா ஒரு மாபெரும் அமைதியை உருவாக்கும் நாடு என்றழைக்கப்படுகிறது. இந்தியாவின் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு 1955ல் பாண்டுங் மாநாட்டில் அமைதிக்காக 5 அம்சக் கொள்கைகையினை வெளியிட்டார். அவை **பஞ்ச சீலம்** என அழைக்கப்பட்டது
- ஐநா பொதுச்சபையில் 1956ல் ஆயுதத் குறைப்புத் தீர்மானத்தை கொண்டு வந்த முதல் நாடு இந்தியா ஆகும்
- 1963 ஆம் ஆண்டு அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் உருவாவதற்கும் இந்தியா முக்கியப் பங்காற்றியது.
- அணிசோராக் கொள்கையை பின்பற்றியது
- அடிப்படையில் இந்திய குடியேற்றக் கொள்கைக்கு எதிரானது. இந்திய இராணுவ ஒப்பந்தங்களுக்கு எதிரானது, அடக்கு முறை மற்றும் அநீதிகளுக்கு எதிரானது. ஐநாவின் கொள்கைகளுக்கு தீவிர ஆதரவாளர்
- இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிரானது. இப்பிரச்சனையை ஐ.நா சபையில் 1946 ஆம் ஆண்டு இந்திய முதன் முதலில் எழுப்பியது. இந்திய வழங்கிய தொடர் ஆதரவு மற்றும் நெல்சன் மண்டேலாவின் தொடர் போராட்டம் காரணமாக 1990 ஆம் ஆண்டு தென்னாப்பிரிகாவின் இன ஒதுக்கல் கொள்கை (அபார்தீட்) முடிவுக்கு வந்தது. நெல்சன் மண்டேல தென்ஆப்பரிக்க காங்கிரஸ் தலைவர் ஆவார். இவர் 27 ஆண்டு சிறைவாசத்திற்கு பிறகு 1994 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்க குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்
- அமைதியை ஏற்படுத்த பிராந்தியக் கூட்டமைப்புகளை இந்திய ஏற்படுத்தியது. இதன் விளைவாக தெற்கு ஆசிய நாடுகளில் பிராந்தியக் கூட்டமைப்பு (சார்க்--**SAARC**) தோன்றியது. வங்கதேசம்,பூடனர், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை, ஆகிய ஏழு நாடுகள் உறுப்பு நாடுகளாக இடம் பெற்றுள்ளன. இதன் முதல கூட்டம் டிசம்பர் 07, 1985 ஆம் ஆண்டு வங்காளத்தில் டாக்கா நகரில் நடந்தது. இதன் முதன் தலைவராக வங்கத்தை சேர்ந்த அபுல் ஆஷான்

தேர்ந்தெடுக்கப்பட்டார். 2007 ஏப்ரல் 3இல் டெல்லியில் நடைபெற்ற சார்க் வருடாந்திர மாநாட்டில் ஆப்கானிய அதிபர் ஹமிது கர்சாய் கலந்து கொண்டார். இதில் 8வது உறுப்பு நாடாக ஆப்கானிஸ்தான் சேர்ந்தது

- இந்தியா பாகிஸ்தான் இடையே மார்ச் 16 1999ல் டெல்லி –லாகூர் போக்குவரத்து தொடங்கப்பட்டது
- 1949ஆம் ஆண்டு சீனா குடியரசைத் முதன் முதலில் அங்கீகரித்த முதல் நாடு இந்தியா. ஐநாவில் சீனா சேருவதற்கு இந்திய தனது ஆதரவைத் நல்கியது.
- இலங்கை புத்த மதத்தை அடிப்படையாக கொண்ட நாடு
- முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் பெருமுயற்சியால் பாகிஸ்தானிடமிருந்து 1971 ஆம் ஆண்டு வங்காளதேசம் பிரிந்து தனி நாடாகியது. 1972 ஆம் ஆண்டு இவ்விரு நாடுகளுக்கிடையே நட்புறவு, ஒத்துழைப்பு மற்றும் அமைதி பராமரிப்பிற்கான 25 வருட ஒப்பந்த ஒன்று டாக்கா நகரில் செய்து கொள்ளப்பட்டது. கங்கை நீரைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக ஏற்பட்ட பராக்கா அணை கட்டும் பிரச்சனைக்கு அமைதியான முறையில் தீர்வு காணப்பட்டது.
- 1956 ஆம் ஆண்டு எகிப்து அதிபர் நாசர் சூயஸ் கால்வாயை தேசிய மயமாக்கினார்
- 1960 ஆம் ஆண்டு இங்கு உள்நாட்டுப்போர் வெடித்தது. இதனைத் தொடர்ந்து படைத்தளபதி K.A.S. இராஜா தலைமையில் இந்திய அமைதிப்படை காங்கோவிற்கு அனுப்பப்பட்டு அங்கு அமைதி நிலைநாட்டப்பட்டது

அரசியல் கட்சிகள்

- மக்கள் ஒரு கூட்டமைப்பாக செயல்பட்டு தேர்தலில் பங்கேற்றல்.
- ஆட்சியமைக்கும் அதிகாரத்தை பெறச்செய்யும் அமைப்பு அரசியல் கட்சி ஆகும்
- ஆரசியல் கட்சியானது தலைவர் செயல் உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் ஆகிய மூன்று அமைப்புகளைக் கொண்டு செயல்படுகிறது.
- அரசியல் கட்சியானது படிநிலை நிர்வாக அமைப்பைக் கொண்டுள்ளது
- கட்சியின் உயர்நிலைப் பகுதி தலைவர் பதவியாகும்
- தலைவருக்கு உதவிட செயலர் மற்றும் பொருளாளர் உள்ளனர்
- இவர்களுடன் கட்சிப்பணி செய்திட செயற்குழு உள்ளது
- செயற்குழு அவ்வப்போது கூடி பிரச்சனைகளை விவாதித்து கலந்துரையாடி முக்கிய முடிவுகளை எடுக்கின்றது
- கட்சியின் பொதுக்குழு கூடி கூட்டம் ஆறு மாதத்திற்கு ஒரு முறை அல்லது வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும் அதில் கடசியின் தீர்மானங்களும் செயல்பாடுகளும் வரையறுக்கப்படுகின்றன
- வாக்காளர்கிடம் தங்கள் கட்சிக்கொள்கைகளையும் திட்டங்களையும் முன்வைக்கப்படுகின்றன.
- சட்டங்கள் உருவாக்குவதில் தீர்மானிக்கும் பங்கு வகிக்கின்றன
- ஆட்சி அதிகாரங்களில் பங்குபெறுவதில் தங்கள் நோக்கமாக கொண்டிருக்கின்றன
- **கட்சி முறையில் வகைகள்:- 1) ஒரு கட்சி ஆட்சி முறை 2) பல கட்சி முறை 3) இரு கட்சி முறை**
- இந்திய அரசியல் கட்சி முறைகள்: 1) தேசியக் கட்சி 2) மாநிலக் கட்சி
- **தேசியக் கட்சி:** இந்தியத் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டு "நாடாளுமன்றத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் 6 சதவீதம் வாக்குகளை பெறும் கட்சிகள் தேசிய கட்சிகள் எனப்படும் (காங்கிரஸ், பா.ஜ.கா, சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ்வாதி)
- **மாநிலக் கட்சிகள்:** மாநில சட்டசபை தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் 6 சதவிகிதம் பெற்று குறைந்த பட்சம் 2 இடங்களை கைப்பற்றும் கட்சிகள் மாநிலக் கட்சிகள் எனப்படும். (அதிமுக, திமுக)
- **தேர்தல் முறை:-** 1) நேரடித் தேர்தல் முறை 2) மறைமுகத் தேர்தல் முறை
- **தேர்தல் ஆணையம்:** இந்திய அரசியலமைப்பு சட்டத்தால உருவாக்கப்பட்டது. இது ஒரு சுதந்திரமான அமைப்பு நாடாளுமன்றம் சட்டமன்றம் குடியரசுத் தலைவர் துணைகுடியரசுத் தலைவர் தேர்தல் ஆகியவற்றை நடத்துகிறது
- தலைமையிடம் புதுடெல்லியில் அமைந்துள்ளது. **நிர்வாசன் சதன்** என்றும் அழைக்கப்படும்
- இது மூன்று நபர்களை உடையது. பதவிக்காலம் 6 ஆண்டுகள் தலைமைத் தேர்தல் ஆணையர் உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு இணையான அதிகாரம் பெற்றவர் ஆவார்
- இதன் பணிகள் அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளிப்பது. அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளருக்கும் சின்னங்களை ஒதுக்குதல் ஆகும்
- ✓ தகவல் அறியும் உரிமைச்சட்டம் பாராளுமன்றத்தில் அக்டோபர் 12 2005 ல் நிறைவேற்றப்பட்டது

நுகர்வோர் உரிமை

- ✓ உலக நுகர்வோர் தினம் மார்ச் 15ம் நாள் கொண்டாடப்படுகிறது
- ✓ டிசம்பர் 24ம் தேதி இந்திய தேசிய நுகர்வோர் தினமாக அனுசரிக்கப்படுகிறது
- ✓ நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை நுகர்வோர் மகாசாகனம் என்றழைக்கப்படுகிறது
- ✓ நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 இயற்றப்பட்டது. (consumer protection act) copra
- ✓ ரால.்ப் நாடார் எனபவர் நுகர்வோர் இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படுகிறார்
- ✓ நுகர்வோரின் நீதிமன்றங்கள் தேசிய அளவில் தேசிய நுகர்வோர் கழகம் (டெல்லி) மாநில அளவில் மாநில நுகர்வோர் கமிஷன், மாவட்ட அளவில் மாவட்ட அமைப்பு
- ✓ பொருட்களின் தரத்தை குறிக்கும் குறியீடு **BIS** மற்றும் அக்மார்க்
- ✓ தொழில்சாந்த மற்றும் நுகர்வோர் பொருட்கள் மீது **BIS** முத்திரையும் விவசாயம் சார்ந்த பொருட்கள் மீது **AGMARK** முத்திரையும் பொறிக்கப்படுகிறது.
- ✓ உலக அளவில் பொருட்களின் தரத்தை அறிய **ISO** (உலக தர அமைப்பு)
- ✓ **ISO** 1947 ஆம் ஆண்டு ஜெனிவாவில் துவங்கப்பட்டது
- ✓ **CAC** 1963 ஆம் ஆண்டு இத்தாலியில் ரோம் நகரில் நிறுவப்பட்டது **(CAC-Codex Alimentatior Commission)**
- ✓ உணவுப் பொருள்கள் சம்மந்தப்பட்ட உலகத்தரத்தினை அறிந்து கொள்ள உதவுவது **(AC)**
- ✓ **தமிழ்நாடு நுகர்வோர் கவசம்** என்ற மாத இதழ் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு உண்டாக்கப்படுகிறது.
- ✓ லோக் அதலாத் என்னும் மக்கள் நீதிமன்றங்கள் 1987 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

பெரியார் பயிற்சி பட்டறை
Padasalai.Net

இந்திய அரசியலமைப்பு சரத்துகள் மற்றும் சட்ட திருத்தங்கள்

சரத்து 1- இந்தியா அல்லது பாரதம் பல மாநிலங்களின் ஒன்றியம் என்கிறது.

சரத்து 2- புதிய மாநிலங்களை இணைக்க உருவாக்க பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

சரத்து 3- பாராளுமன்றம் ஒரு மாநிலத்தை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களாக பிரிக்கவோ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களை ஒன்றாக இணைக்கவோ அதிகாரம் படைத்தது.

சரத்து 4- சரத்து 2 மற்றும் சரத்து 3 ல் நிறைவேற்றப்படும் சட்டங்களை சட்ட திருத்தங்களாக கருத முடியாது.

சரத்து 5- அரசியல் அமைப்பின் தொடக்க காலத்திலிருந்த குடியுரிமை

சரத்து 6- பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு குடியேறிவர்களின் குடியுரிமை

சரத்து 7- பாகிஸ்தானிற்கு இடம் பெயர்ந்தவர்களின் குடியுரிமை

சரத்து 8- இந்தியாவிற்கு வெளியே வசித்து வரும் வம்சாவளியினரின் குடியுரிமை

சரத்து 9- அயல்நாட்டு குடியுரிமை தன்னிச்சையாக வேண்டி பெறும் நபர்கள் இந்திய குடிமக்கள் ஆக மாட்டார்கள்.

சரத்து 10- குடியுரிமை தொடர்ச்சி

சரத்து 11- நாடாளுமன்ற சட்டத்தால் குடியுரிமையை ஒழுங்குபடுத்துதல்

சரத்து 12- THE STATE என்ற வார்த்தையின் விளக்கமளிக்கிறது

சரத்து 13- (அ) சட்டத்திருத்தம் என்பது சட்டம் கிடையாது. எனவே இதை எதிர்த்து வழக்கு தொடர முடியாது.

(ஆ) உயர்நீதிமன்றத்திற்கு நீதிப்புணராய்வு அதிகாரம் உண்டு என்பதை உறுதிசெய்கிறது.

(இ) அடிப்படை உரிமைகளை பாதிக்கும் வகையில் இந்திய பாராளுமன்றம் அல்லது மாநில சட்டமன்றம் இயற்றும் சட்டங்கள் செல்லாது என்று கூறுகிறது.

சரத்து 14- சட்டத்தின் முன் அனைவரும் சமம்

சரத்து 15- சமயம், சாதி, பால், இனம், மற்றும் நிறம் அடிப்படையில் எவரையும் வேறுபடுத்தக்கூடாது

சரத்து 16- பொதுப்பணி மற்றும் வேலைவாய்ப்பு நியமனங்களில் சமவாய்ப்பு அளித்தல்

சரத்து 17- தீண்டாமை ஒழிப்பு

சரத்து 18- அரசு அனுமதி இன்றி பெறும் பட்டங்களை தடைச்செய்தல்

சரத்து 19- சுதந்திர உரிமைக்கு உத்திரவாதம் குடிமக்களுக்கு அளிக்கப்பட வேண்டும்

1. பேச்சு உரிமை
2. ஆயுதமின்றி கூட்டம் கூடும் உரிமை
3. சங்கங்கள் மற்றும் கழகங்கள் ஏற்படுத்தும் உரிமை
4. இந்தியாவின் எந்த பகுதிக்கும் செல்லும் உரிமை
5. இந்தியாவின் எந்த பகுதியிலும் வாழும் உரிமை
6. ஒருவர் எந்த தொழிலையும் செய்யும் உரிமை

சரத்து 20- ஒருவரைத் தகுந்த காரணமின்றி மேலும் ஒரே குற்றத்திற்காக ஒருமுறைக்கு மேல் தண்டிக்க கூடாது

சரத்து 21- தனி மனித வாழ்வு மற்றும் தனி மனித சுதந்திரத்தை உறுதி செய்கிறது

சரத்து 21A- 6 வயதிலிருந்து 14 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் இலவச கட்டாயக் கல்வி அளிக்க வேண்டும். (86 வது சட்ட திருத்தம் 2002) இந்தியாவில் 01-04-2010) அன்று இச்சட்டம் நடைமுறைக்கு வந்தது.

சரத்து 22- எவரையும் விசாரணையின்றி கைது செய்யக்கூடாது. மேலும் மக்களை விசாரணையின்றி கைது செய்யப்படும் போது பாதுகாப்பு அளிப்பதோடு அல்லாமல் கைது செய்வதற்கான காரணத்தைத் தெரிவிக்கும்படி கேட்கவும் உரிமை அளிக்கிறது. சட்ட வல்லுநர்களை கலந்தாலோசிக்கவும் கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் கிரிமினல் வழக்குகளில் நீதிபதி முன் ஆஜர்படுத்தவும் உரிமை அளிக்கிறது.

சரத்து 23- ஒருவரை கட்டாயமாகவோ அல்லது ஊதியமின்றியோ வேலை செய்ய வைத்தல் கூடாது அடிமை முறையில் பெண்களையோ, குழந்தைகளையோ மாற்றுத்திறன் உடையவர்களையோ மனித வியாபாரத்திற்கு தவறான முறையில் பயன்படுத்தக் கூடாது.

சரத்து 24- 14 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளை தொழிலாளர்களாக தொழிற்சாலை மற்றும் சுரங்கத்

தொழில் அல்லது பாதுகாப்பற்ற பணிகளில் ஈடுபடுத்துவதைத் தடை செய்கிறது

சரத்து 25- விரும்பிய மதத்தைப் பின்பற்றி பரப்புவதற்காக சுதந்திரம் உண்டு

சரத்து 26- மதச்சார்பான நிறுவனங்களை நிறுவவும், நடத்தவும் தருமப்பணிகளை மேற்கொள்ளவும் உறுதியளிக்கிறது.

சரத்து 27- குறிப்பிட்ட சமயத்தின் பராமரிப்பிற்கும், வரி செலுத்துவதற்கும், விலக்களிக்கும் உரிமை

சரத்து 28- கல்வி நிறுவனங்களில் எந்தவிதமான சமயப்போதனைகளையோ அல்லது வழிபாட்டையோ மத நிறுவனங்களைத் தவிர அரசு நிதிபெறும் கல்வி நிறுவனங்கள் பின்பற்றக் கூடாது

சரத்து 29- சிறுபான்மையினர் மொழி எழுத்துப், பண்பாட்டைப் பாதுகாக்கிறது.

சரத்து 30- சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை நிறுவவும் மற்றும் நிர்வகிக்கவும் உரிமை அளிக்கிறது

சரத்து 31- நீக்கம்

சரத்து 32- அரசியலமைப்புக்கு உட்பட்டு தீர்வுகாணும் உரிமை

சரத்து 33- Armed forces, police forces or Intelligence Organisation (போன்றவற்றில் பணிபுரிபவர்கள் தங்கள் பணியினை செய்யும் பொருட்டு) இவர்களுக்கு உண்டான அடிப்படை உரிமைகளை மாற்றி அமைக்க பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு

சரத்து 34- Martial Law அமலில் உள்ள எந்த ஒரு பகுதியிலும் அடிப்படை உரிமைகளின் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள்

சரத்து 35- அடிப்படை உரிமைகள் மீது சட்டமியற்றுதல் தொடர்பானது

சரத்து 36- பகுதி 4 ல் உள்ள விளக்கம்

சரத்து 37- அரசு நெறிமுறை கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பானது

சரத்து 38- நீதி, சமுகம், பொருளாதார அரசியல் ரீதியிலான சமுதாய அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு பொது நலத்தை மேம்படுத்த அரசு முனையும் என்று கூறுகிறது. (44 சட்ட திருத்தம் 1978)

சரத்து 39- (அ) வாழ தேவையான ஆதரங்கள் (42வது –சட்ட திருத்தம் 1976)
(ஆ) பொதுநலம் காக்கும் இயற்கை வழங்கல் பகிர்வு
(இ) சொத்து குவிப்பிற்கு எதிர்ப்பு
(ஈ) ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சமஊதியம்
(உ) உழைப்பவர் உடல் நலம் மற்றும் நல்வாழ்வு, பாதுகாப்பு குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள்
(ஊ) குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சி குழந்தைகள் மற்றும் இளையோர் மீது போதிய கவனம் செலுத்துதல்

சரத்து 39A சம நீதி மற்றும் வறியவர்களுக்கு இலவச சட்ட உதவி

சரத்து 40- கிராம பஞ்சாயத்து (73-சட்ட திருத்தம் 1992)

சரத்து 41- வேலைவாய்ப்புகள் ஏற்படுத்துதல், கல்வி அளித்தல், முதியோர், நோய்வாய்ப்பட்டோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுதல், உணர்வுபூர்வமாண நிலையில் மனித நேயத்தை கட்டி காத்தல்

சரத்து 42- நியாயமான, மனிதாபிமான பணிச்சூழல் மற்றும் மகப்பேறு விடுப்பு போன்ற உதவிகள் செய்தல்

சரத்து 43- அரசு கிராமக் கைவினைஞர்களை ஊக்குவிக்க வேண்டும்

சரத்து 43A- நிர்வாகத்தில் பணியாளர்கள் பங்குபெற வைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

சரத்து 43B- கூட்டுறவு சங்கங்களை மேம்படுத்துதல் (97-சட்ட திருத்தம் 2011)

சரத்து 44- குடிமக்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான சட்டம்

சரத்து 45- 14 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் இலவச கட்டாயக் கல்வி அளிக்க வழிவகுக்கிறது

சரத்து 46- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் நலிவடைந்த பிரிவினருக்கு கல்வி மற்றும் பொருளாதார வசதிகளை மேம்படுத்துதல்.

சரத்து 47- ஊட்டசத்து மற்றும் வாழ்கைத் தரத்தை உயர்த்துதல் பொது நலன்களை மேம்படுத்துதல் மதுபானம் மற்றும் ஊறுவிளைவிக்கும் மருந்துகளையும் தடை செய்ய முயல வேண்டும்

சரத்து 48- வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ச்சிக்காக நவீன முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும்

சரத்து 48A- சுற்றுச்சூழல் , வனங்கள், மற்றும் வனவிலங்குளை பாதுகாத்து அவற்றை மேம்படுத்த வேண்டும்

சரத்து 49- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்கள், இடங்கள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றை பாதுகாக்க வேண்டும்

பெரியார் பயிற்சி பட்டறை

சரத்து 50- நிர்வாகத் துறையிலிருந்து நீதித் துறையை பிரித்தல்

சரத்து 51- சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பு நாடுகளுக்கிடையே கௌரவமான உறவுகளை நிலைப் படுத்துதல், சர்வதேச ஒப்பந்தங்களை மதித்தல், சர்வதேச பிரச்சனைகளுக்கு பேச்சுவார்த்தை முலம் தீர்வு காணுவதை ஊக்கப்படுத்த வேண்டும்

சரத்து 51A- அடிப்படை கடமைகள் (ஸ்வரன் சிங் கமிட்டி, 42-சட்ட திருத்தம் 1976)

சரத்து 52- இந்திய குடியரசுத் தலைவர்

சரத்து 53- முப்படைகளின் தலைவர் குடியரசுத் தலைவர்

சரத்து 54- குடியரசுத் தலைவரின் தேர்தல்

சரத்து 55- குடியரசுத் தலைவரின் தேர்தல் நடத்தப்படும் முறை

சரத்து 56- குடியரசுத் தலைவரின் பதவிக்காலம்

சரத்து 57- ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கபடலாம்

சரத்து 58- குடியரசுத் தலைவருக்கான தகுதிகள்

சரத்து 59- குடியரசுத் தலைவருக்கான நிபந்தனைகள்

சரத்து 60- குடியரசுத் தலைவரின் பதவிப்பிரமாணம்

சரத்து 61- குடியரசுத் தலைவரின் பதவி நீக்கம்

சரத்து 62- குடியரசுத் தலைவர் பதவி காலியாக உள்ள நிலைகள்

சரத்து 63- துணைக்குடியரசுத் தலைவர்

சரத்து 64- துணைக்குடியரசுத் தலைவர் மாநிலங்களவைக்கு பதவி வழித் தலைவர்.

சரத்து 65- குடியரசுத்தலைவர் இல்லாத போது அல்லது அவர் தனது பணியினை செய்ய இயலாத போது துணைக்குடியரசுத் தலைவர் குடியரசுத் தலைவராக பணியை ஆற்றுவார்

சரத்து 66- துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல்

சரத்து 67- துணைக்குடியரசுத் தலைவரின் பதவிக்காலம்

சரத்து 68- துணைக்குடியரசுத் தலைவரின் காலியிடத்தை நிரப்ப வேண்டிய கடமைகள்

சரத்து 69- துணைக்குடியரசுத் தலைவர் பதவிப்பிரமாணம்

சரத்து 70- மற்ற அவசரகாலங்களில் குடியரசுத் தலைவர் ஆற்ற வேண்டிய கடமைகள்

சரத்து 71- குடியரசுத் தலைவர் அல்லது துணைக்குடியரசுத் தலைவர் தேர்தலுடன் தொடர்பானது

சரத்து 72- குடியரசுத் தலைவரின் மன்னிக்கும் அதிகாரம்

சரத்து 73- மத்திய அரசின் நிர்வாக அதிகாரத்தை விரிவுபடுத்துதல்

சரத்து 74- குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை வழங்க ஒரு அமைச்சரவை இருக்க வேண்டும்

சரத்து 75- (1) குடியரசுத் தலைவர் பிரதமரையும் பிற அமைச்சர்களையும் பிரதமரின் ஆலோசனையின் பேரில் நியமனம் செய்கிறார்

(2) அமைச்சர்கள் குடியரசுத்தலைவர் விரும்பும் வரை பதவி வகிப்பார்கள்

(3) அமைச்சர்கள் கூட்டுப் பொறுப்பாக நாடாளுமன்றத்திற்கு கட்டுப்பட்டவர்கள்

சரத்து 76- இந்தியாவின் தலைமை வழக்கறிஞர் - அட்டார்னி ஜெனரல் பற்றியது.

சரத்து 77- அரசின் அனைத்து பணிகளும் குடியரசுத் தலைவர் பெயரிலேயே நடைபெறும்

சரத்து 78- பிரதமர் குடியரசுத் தலைவருக்கும், அமைச்சர்களுக்கும் இடையே பாலமாக செயல்படுவார் மற்றும் பிரதமரின் கடமைகள்

சரத்து 79- பாராளுமன்றம் (குடியரசுத் தலைவர், இராஜ்யசபா, லோக்சபா)

சரத்து 80- இராஜ்யசபா பற்றி கூறுகிறது

சரத்து 81- மக்களவை (லோக்சபா) பற்றி கூறுகிறது

சரத்து 82- ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்குப் பிறகும் சட்டமன்ற தொகுதிகள் மற்றும் பாராளுமன்ற தொகுதிகள் ஆகியவற்றை மாற்றியமைக்க வகை செய்கிறது

சரத்து 83- பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவி காலம்

சரத்து 84- பாராளுமன்ற உறுப்பினரின் தகுதிகள்

சரத்து 85- பாராளுமன்ற கூட்டு கூட்டத்தை கூட்டவும், முடித்து வைக்கவும் மக்களவையை கலைக்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு

சரத்து 86- இரு அவைகளுக்கும் செய்தி அனுப்புவது மற்றும் உரையாற்றுவது தொடர்பான குடியரசு தலைவரின் உரிமை.

சரத்து 87- குடியரசுத் தலைவரால் நிகழ்த்தப்படும் சிறப்புரை

சரத்து 88- அமைச்சர் மற்றும் அட்டார்னி ஜெனரலின் உரிமைகள்

சரத்து 89- ராஜ்ய சபா தலைவர் மற்றும் துணைத்தலைவரை பற்றி கூறுகிறது

அரியலூர் பயிற்சி மையம்

சரத்து 90- ராஜ்ய சபா தலைவர் மற்றும் துணைத்தலைவர் பதவி நீக்க முறை, பதவி காலியான நிலை
சரத்து 91- ராஜ்ய சபாவின் துணைத்தலைவரின் அதிகாரம்
சரத்து 92- ராஜ்யசபையின தலைவர் அல்லது துணைத்தலைவரின் மீது பதவி நீக்கத் தீர்மானம் நடைமுறையில் இருக்கும்போது அவர்களால் ராஜ்ய சபாவிற்கு தலைமை தாங்க முடியாது
சரத்து 93- மக்களவை தலைவர் மற்றும் துணைத்தலைவரை பற்றிக் கூறுகிறது
சரத்து 94- சபாநாயகர் மற்றும் துணைசபாநாயகர் பதவி நீக்க முறை, பதவி காலியான நிலை.
சரத்து 95- மக்களவை சபாநாயகர் பதவி காலியாக உள்ளபோது துணை சபாநாயகர் தலைமை தாங்குவார்.
சரத்து 96- லோக்சபா தலைவர் மீது பதவி நீக்கத் தீர்மானம் நடைமுறையில் இருக்கும்போது அவர்களால் லோக்சபாவிற்கு தலைமை தாங்க முடியாது
சரத்து 97- ராஜ்யசபா தலைவர், மற்றும் துணைத்தலைவர், மக்களவை சபாநாயகர் மற்றும் மக்களவை துணைத் சபாநாயகர் ஆகியோரின் சம்பளம் படிகள்
சரத்து 98- பாராளுமன்ற தலைமைச் செயலகம்
சரத்து 99- பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிப்பிராமாணம்
சரத்து 100- பாராளுமன்றம் அல்லது மாநில சட்டமன்றம் செயல்பாடுகள் நடைபெற தேவைப்படும் குறைந்தபட்ச உறுப்பினர்கள் (பத்தில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இருக்க வேண்டும்)
சரத்து 101- பாராளுமன்ற உறுப்பினர் பதவி காலியாக உள்ள நிலைகள்
சரத்து 102- பாராளுமன்ற உறுப்பினர்களின் தகுதியிழப்பு
சரத்து 103- பாராளுமன்ற உறுப்பினர்களின் தகுதி நீக்கங்கள் பற்றிய கேள்விகள் மீதான முடிவு
சரத்து 104- சரத்து 99 ன் படி பதவிப் பிராமாணம் மேற்கொள்ளும் முன்னரோ அல்லது தகுதியில்லாத போதோ அல்லது தகுதி நீக்கம் செய்யப்பட்ட பின்னரோ அவையில் கலந்து கொள்வது மற்றும் வாக்கெடுப்பில் பங்குபெறுவதற்கு விதிக்கப்படும் அபராதம் தொடர்பானது.
சரத்து 105- பாராளுமன்ற அவைகள் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் கமிட்டிகளின் அதிகாரங்கள், சலுகைகள்
சரத்து 106- பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் மற்றும் இதர படிகள்
சரத்து 107- மசோதாக்களை அறிமுகப்படுத்தும் மற்றும் நிறைவேற்றும் முறைகள்
சரத்து 108- மசோதா தாக்கல் செய்யும் போது ஏதேனும் ஒரு அவை ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் இரு அவைகளின் கூட்டு கூட்டத்தை கூட்ட குடியரசு தலைவர் ஆணையிடலாம். இரு அவைகளின் கூட்டு கூட்டத்திற்கு தலைமை தாங்குபவர் மக்களவை சபாநாயகர்.
சரத்து 109- பணமசோதாக்களை நிறைவேற்றும் சிறப்பு வழிமுறை
சரத்து 110- பணமசோதா என்பதற்கான விளக்கம்
சரத்து 111- மசோதாக்களுக்கு குடியரசுத்தலைவர் இசைவு தெரிவிப்பது
சரத்து 112- வருடாந்திர நிதிநிலை அறிக்கை
சரத்து 113- பாராளுமன்றத்தின் மதிப்பிடுகள் தொடர்பான நடைமுறை
சரத்து 114- மத்திய அரசின் ஒதுக்கீடு மசோதாக்கள்
சரத்து 115- கூடுதல் மற்றும் அதிகமான ஒதுக்கீடுகள்
சரத்து 116- votes on account, votes of credit and exceptional grants
சரத்து 117- நிதி மசோதாக்களின் சிறப்பு வழிமுறை
சரத்து 118- செயல்படுத்தும் வழிமுறைகள்
சரத்து 119- பாராளுமன்றத்தின் நிதிவிவகாரம் தொடர்பான சட்டவிதிமுறை ஒழுங்கு
சரத்து 120- பாராளுமன்றத்தில் பயன்படுத்த வேண்டிய மொழிகள்
சரத்து 121- பாராளுமன்ற விவாதத்தின் மீதான தடை
சரத்து 122- பாராளுமன்றத்தின் செயல்முறைகளில் நீதிமன்றம் தலையிடக் கூடாது.
சரத்து 123- குடியரசுத் தலைவரின் அவசரச் சட்டம்
சரத்து 124- உச்ச நீதி மன்றத்தைப் பற்றிக் கூறுகிறது
சரத்து 124(2) உச்ச நீதிமன்ற நீதிபதி ராஜீனாமா கடிதத்தை குடியரசு தலைவரிடம் அளித்தல்
சரத்து 124(3) உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் தகுதிகள்
சரத்து 124(4) உச்ச நீதிமன்ற நீதிபதிகளை பதவி நீக்கம் செய்ய வேண்டுமானால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் வாக்கு அளித்தால் பதவி நீக்கம் செய்யலாம்
சரத்து 124(5) உச்ச நீதிமன்ற நீதிபதியை பதவி இழக்கும் முறையை பாராளுமன்றம் மாற்றிக் கொள்ளலாம்
சரத்து 125- உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளம்
சரத்து 126- Acting chief justice- குடியரசு தலைவர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி இல்லாதபோது பிற நீதிபதிகளில் ஒருவரை தலைமை நீதிபதியாக தற்காலிகமாக நியமிப்பது

சரத்து 127- உச்சநீதிமன்றம் செயல்பட தேவையான குறைந்த பட்ச நீதிபதிகளின் எண்ணிக்கை இல்லாத போது உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்யப்படுவது
சரத்து 128- ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவரை தற்காலிகமாக பணிபுரிய அழைத்தல்
சரத்து 129- உச்சநீதிமன்ற ஒரு பதிவுறு நீதிமன்றம்
சரத்து 130- உச்சநீதிமன்ற இருப்பிடம்
சரத்து 131- உச்சநீதிமன்றத்தின் முதல் விசாரணை அதிகாரம்
சரத்து 132- உச்சநீதிமன்றத்தின் மேல் முறையீட்டு அதிகாரம்
சரத்து 133- சிவில் வழக்குகளில் உச்சநீதிமன்ற மேல் முறையீட்டு அதிகாரம்
சரத்து 134- குற்றவியல் வழக்குகளில் உச்சநீதிமன்ற மேல் முறையீட்டு அதிகாரம்
சரத்து 135- உச்சநீதிமன்றத்தின் செயல் எல்லை மற்றும் அதிகாரம்
சரத்து 136- special leave to appeal by the supreme court
சரத்து 137- மத்திய அல்லது மாநில சட்ட மன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் அரசியலமைப்புக்கு உட்பட்டதா இல்லையா என்று உச்ச நீதிமன்றம் ஆய்வு செய்கிறது
சரத்து 138- உச்சநீதிமன்றம் செயல் எல்லையை விரிவுபடுத்துவது
சரத்து 139- உச்சநீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணைகள் மீது கலந்து ஆலோசித்தல்
சரத்து 139(1) பிற நீதிமன்ற வழக்குகளை தன்வசம் மாற்றிக்கொள்ள உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு
சரத்து 140- உச்சநீதிமன்றத்தின் கூடுதல் அதிகாரங்கள்
சரத்து 141- உச்சநீதிமன்ற தீர்ப்பு இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்
சரத்து 142- உச்சநீதிமன்ற ஆணைகளை செயல் படுத்துதல்
சரத்து 143- குடியரசு தலைவர் உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனைகளை பெறலாம். ஆனால் குடியரசுத்தலைவர் அதன்படி நடக்கதேவையில்லை
சரத்து 144- உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு இந்தியர்கள் அனைவரும் (மதித்து) கட்டுப்பட வேண்டும்
சரத்து 145- நீதிமன்ற விதிகள்
சரத்து 146- உச்சநீதி மன்றத்தின் செலவினங்கள் மற்றும் பணியாளர்கள்
சரத்து 147- விளக்கங்கள்
சரத்து 148- CAG – Comptroller and Auditor General of India
சரத்து 149- தணிக்கைத்துறை தலைவரின் அதிகாரங்களும் கடமைகளும்
சரத்து 150- மத்திய மற்றும் மாநிலங்களின் கணக்குகளின் படிவம்
சரத்து 151- தணிக்கையாளரின் அறிக்கை
சரத்து 152- மாநிலத்திற்கான விளக்கம்
சரத்து 153- ஆளுநர் பற்றி கூறுகிறது
சரத்து 154- மாநில நிர்வாகம் பற்றி கூறுகிறது
சரத்து 155- ஆளுநர் குடியரசு தலைவரால் நியமிக்கப்படுகிறார்
சரத்து 156- ஆளுநர் பதவிக்காலம்
சரத்து 157- ஆளுநரின் தகுதிகள்
சரத்து 158- ஆளுநருக்கான நிபந்தனைகள்
சரத்து 159- ஆளுநர் பதவி பிரமாணம்
சரத்து 160- சில அவசர நிலைகளில் ஆளுநரின் செயல்பாடுகள்
சரத்து 161- குற்றவாளிகளின் தண்டனையை குறைக்கும் அதிகாரம்
சரத்து 162- மாநில நிர்வாக அதிகாரத்தை விரிவுபடுத்துதல்
சரத்து 163- மாநில சட்டமன்றம் மற்றும் அமைச்சர் குழு பற்றி கூறுகிறது
சரத்து 164- முதலமைச்சர் பற்றி கூறுகிறது
சரத்து 165- மாநில அட்வகேட் ஜெனரல் பற்றி கூறுகிறது
சரத்து 166- ஒரு மாநில அரசாங்கம் செயல்படும் விதம்
சரத்து 167- முதலமைச்சரின் கடமைகள்
சரத்து 168- மாநிலங்களில் சட்ட மன்ற அமைப்பு
சரத்து 169- மாநில சட்ட மன்ற மேலவை உருவாக்குவது அல்லது நீக்குவது
சரத்து 170- மாநில சட்டமன்ற கீழவை
சரத்து 171- மாநில சட்டமன்ற மேலவை
சரத்து 172- சட்டமன்றத்தின் பதவிக்காலம்
சரத்து 173- சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதிகள்

சரத்து 174- சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் தகுதிகள்

சரத்து 175- மாநில சட்டமன்றத்தில் உரையாற்ற மற்றும் அவைகளுக்கு செய்திகள் அனுப்ப ஆளுநருக்கு உரிமை உண்டு

சரத்து 176- ஆளுநரின் சிறப்புரை

சரத்து 177- மாநில சட்ட மன்ற அவைகளில் உறுப்பினர்கள் மற்றும் அட்வகேட் ஜெனரல் ஆகியோரின் உரிமை

சரத்து 178- மாநில சட்ட மன்ற சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் பற்றி கூறுகிறது

சரத்து 179- மாநில சட்ட மன்ற சபாநாயகர், துணை சபாநாயகர் ஆகியோரின் ராஜினாமா, பதவிகாலியாக உள்ள நிலை, பதவி நீக்க முறைகள்

சரத்து 180- மாநில சட்டசபையின் துணை சபாநாயகரின் அதிகாரம் அல்லது சபாநாயகருக்கு பதிலாக நியமிக்கப்படும் நபரின் அதிகாரம்

சரத்து 181- மாநில சட்ட மன்ற கீழவை சபாநாயகர் அல்லது துணை சபாநாயகர் மீது பதவி நீக்க தீர்மானம் நடைமுறையிலிருக்கும் போது அவர்களால் தலைமை தாங்க முடியாது

சரத்து 182- மாநில சட்ட மன்ற மேலவைத் தலைவர் மற்றும் துணை தலைவர் பற்றி கூறுகிறது

சரத்து 183- மாநில சட்ட மன்ற மேலவையின் தலைவர் மற்றும் துணைதலைவர் ஆகியோரின் ராஜினாமா, பதவி காலியாக உள்ள நிலைகள், பதவி நீக்க முறைகள்

சரத்து 184- மாநிலசட்டமன்ற மேலவையின் துணைதலைவரின் அதிகாரம் அல்லது தலைவருக்கு பதிலாக நியமிக்கப்படும் நபரின் அதிகாரம்

சரத்து 185- மாநில சட்டமன்ற மேலவையின் தலைவர் மற்றும் துணைதலைவர் ஆகியோரின் பதவி நீக்க தீர்மானம் நடைமுறையில் இருக்கும் போது அவர்களால் தலைமை தாங்க முடியாது

சரத்து 186- மாநில சட்ட மன்ற சபாநாயகர், துணைசபாநாயகர், மேலவைத் தலைவர் மற்றும் துணை தலைவர் ஆகியோரின் சம்பளம் மற்றும் படிகள்

சரத்து 187- சட்டமன்ற செயலகம்

சரத்து 188- மாநில சட்ட மன்ற உறுப்பினர்களின் பதவிப் பிரமாணம்

சரத்து 189- voting in houses, power of houses to act not withstanding vacancies and quorum

சரத்து 190- vacation of seats

சரத்து 191- சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியிழப்பு முறைகள்

சரத்து 192- சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியிழப்பு முறைகளின் கேள்விகளின் மீதான முடிவு

சரத்து 193- தகுதியில்லாத போது அல்லது தகுதி நீக்கம் செய்யப்பட்ட பின்பு அல்லது சரத்து 188ன் படி பதவிப் பிரமாணம் மேற்கொள்ளாமல் அவையில் பங்குபெறுவது வாக்கெடுப்பில் கலந்துகொள்வது போன்றவற்றிற்கான அபராதம்

சரத்து 194- மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற அவைகள், குழுக்கள் போன்றவற்றின் அதிகாரங்கள் மற்றும் சலுகைகள்

சரத்து 195- மாநில சட்ட மன்ற உறுப்பினர்களின் சம்பளம் மற்றும் படிகள்

சரத்து 196- மாநில சட்ட மன்றங்களில் மசோதாக்கள் அறிமுகப்படுத்தும் முறை மற்றும் நிறைவேற்றும் முறை

சரத்து 197- பணமசோதா தவிர பிற மசோதாக்கள் மீதான மாநில சட்டமன்ற மேலவையின் அதிகாரங்கள்

சரத்து 198- மாநில சட்ட மன்றங்களில் பணமசோதாக்கள் தாக்கல் செய்யப்படும். மாநில சட்டமன்ற கீழவையில் மட்டுமே பணமசோதா தாக்கல் செய்யமுடியும். மேலவையில் 14 நாட்கள் வரை நிறுத்தி வைக்கலாம்

சரத்து 199- பணமசோதா என்பதற்கான விளக்கம்

சரத்து 200- மசோதாக்களுக்கு ஆளுநர் இசைவு தெரிவிப்பது

சரத்து 201- குடியரசுத்தலைவரின் சம்மதம் பெறவேண்டிய மசோதாக்கள்

சரத்து 202- மாநிலத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கை

சரத்து 203- மாநில மதிப்பீடுகள் தொடர்பான சட்டமியற்றல் நடைமுறை

சரத்து 204- மாநில ஒதுக்கீடு மசோதாக்கள்

சரத்து 205- மாநிலத்திற்கான கூடுதல் மற்றும் அதிகப்படியான ஒதுக்கீடுகள்

சரத்து 206- Votes on account, votes of credit and exceptional grants

சரத்து 207- மாநில நிதி விவகாரங்கள் தொடர்பான சட்ட விதிமுறைகள்

சரத்து 208- செயல்படுத்துதல் தொடர்பான சட்ட விதிமுறைகள்

சரத்து 209- மாநில நிதி விவகாரங்கள் தொடர்பான சட்ட விதிமுறைகள்

சரத்து 210- மாநில சட்டமன்றத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய மொழி

சரத்து 211- மாநில சட்டமியற்றல் தொடர்பான விவாதத்தின் மீது கட்டுப்பாடு
சரத்து 212- மாநில சட்ட மன்ற நடவடிக்கைகளை நீதிமன்றம் விசாரணை செய்யக்கூடாது
சரத்து 213- ஆளுநரின் அவசரச் சட்டம்
சரத்து 214- உயர் நீதிமன்றம் பற்றி கூறுகிறது
சரத்து 215- உயர் நீதிமன்றம் ஒரு ஆவண நீதிமன்றம்
சரத்து 216- Constitution of High Courts
சரத்து 217- உயர்நீதிமன்ற நீதிபதிகளின் நியமனம் மற்றும் பதவிகாலம். உயர்நீதிமன்ற நீதிபதி தனது பதவி விலகல் கடிதத்தை குடியரசுத் தலைவரிடம் சமர்பிக்க வேண்டும்
சரத்து 218- application of certain provisions relating to supreme court to High Courts
சரத்து 219- உயர்நீதிமன்ற நீதிபதிகளின் பதவிபிரமாணம்
சரத்து 220- நிரந்தர உயர்நீதிமன்ற நீதிபதியான பின் வழக்கறிஞராக வாதாட தடை
சரத்து 221- உயர்நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளம் பாராளுமன்றம் நிர்ணயிக்கிறது
சரத்து 222- ஒரு உயர்நீதிமன்றத்திலிருந்து மற்றொரு உயர்நீதிமன்றத்திற்கு ஒரு நீதிபதியை இடமாற்றம்செய்தல்
சரத்து 223- Acting chief justice of high court
சரத்து 224- உயர்நீதிமன்றத்தில் கூடுதல் மற்றும் பொறுப்பு நீதிபதிகள் நியமனம்
சரத்து 225- உயர்நீதிமன்ற அதிகார எல்லைகள்
சரத்து 226- உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணைகள் வழங்கும் அதிகாரம்
சரத்து 227- உயர்நீதிமன்றம் தன் கீழுள்ள நீதிமன்றங்களின் செயல்பாடுகளையும் கண்காணிக்கும் அதிகாரம் உடையது.
சரத்து 228- உயர்நீதிமனறம்தன் கீழுள்ள நீதிமன்றங்களின்சில வழக்குகளை தன்வசம் மாற்றிக்கொள்ளஅதிகாரம் உடையது
சரத்து 229- உயர்நீதிமன்ற செலவினங்கள் மற்றும் பணியாளர்கள்
சரத்து 230- உயர்நீதிமன்ற அதிகார எல்லைகள் மத்திய ஆட்சிப்பகுதிக்கும் விரிவுபடுத்தல்
சரத்து 231- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஒரு பொதுவான உயர்நீதிமன்றம் அமைப்பது
சரத்து 232- நீக்கம்
சரத்து 233- மாவட்ட நீதிபதிகளை ஆளுநர் நியமனம் செய்கிறார்
சரத்து 234- மாவட்ட நீதிபதிகள் தவிர பிற நீதிமன்ற பணியாளர்கள் நியமணம்
சரத்து 235- சார்பு நீதிமன்றங்களின் மீதான கட்டுப்பாடுகள்
சரத்து 236- சார்பு நீதிமன்றங்கள் தொடர்பான விளக்கங்கள்
சரத்து 237- Application of the provisions of this chapter to certain or classes or magistrates
சரத்து 238- நீக்கம்
சரத்து 239- மத்திய ஆட்சிப்பகுதிகளின் நிர்வாகம்
சரத்து 240- சில மத்திய ஆட்சி பகுதிகளில் ஒழுங்கு முறைகளை நடைமுறைப்படுத்த குடியரசு தலைவருக்கு அதிகாரம்
சரத்து 241- மத்திய ஆட்சி பகுதியில் உயர்நீதிமன்றம் அமைக்க பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு அல்லது பக்கத்தில் உள்ள மாநிலங்களில் இணைத்துக் கொள்ளலாம்.
சரத்து 242- நீக்கம்
சரத்து 243(A) பஞ்சாயத்து ராஜ் பற்றி கூறுகிறது
சரத்து 243(B) ஒரு பஞ்சாயத்தின் அமைப்பு பற்றி கூறுகிறது
சரத்து 243(C) கட்டமைப்பு
சரத்து 243(D) இடஒதுக்கீடு
சரத்து 243(E) பதவிக்காலம்
சரத்து 243(F) உறுப்பினரின் தகுதியின்மை
சரத்து 243(G) அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள்
சரத்து 243(H) வரி விதிக்கும் நிதிகள் மற்றும் நிதிகள்
சரத்து 243(I) மாநில நிதிக்குழு
சரத்து 243(J) கணக்குகளின் தணிக்கை
சரத்து 243(K) தேர்தல்
சரத்து 243(L) யூனியன் பிரதேசங்கள் பொருத்தக்கூடிய தன்மை
சரத்து 243(M) சில பரப்பிடங்களுக்கு பொருந்தாது

பெரியார் பயிற்சி பட்டறை

சரத்து 243(N) தற்போது பஞ்சாயத்து விதிகளின் தொடர்ச்சி
சரத்து 243(O) பஞ்சாயத்து தேர்தல் தொடர்பான விவகாரங்களில் நீதிமன்றம் தலையிட தடை
சரத்து 243(Q) நகராட்சி அமைப்பு பற்றி கூறுகிறது
சரத்து 243(R) நகராட்சியின் கட்டமைப்பு
சரத்து 243(S) வார்டு குழு
சரத்து 243(T) இட ஒதுக்கீடு
சரத்து 243(U) பதவிக்காலம்
சரத்து 243(V) உறுப்பினர்களின் தகுதியின்மை
சரத்து 243(W) அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள்
சரத்து 243(X) வரிவிதிக்கும் அதிகாரம்
சரத்து 243(Y) மாநில நிதிக்குழு
சரத்து 243(Z) கணக்குகளின் தணிக்கை
சரத்து 243(ZA) தேர்தல்
சரத்து 243(ZB) யூனியன் பிரதேசங்களுக்கு பொருந்தக்கூடிய தன்மை
சரத்து 243(ZC) சில பரப்பிடங்களுக்கு பொருந்தாது
சரத்து 243(ZD) மாவட்ட திட்டக்குழு
சரத்து 243(ZE) பெருநகர திட்டக்குழு
சரத்து 243(ZF) தற்போதைய நகராட்சி விதிகளின் தொடர்ச்சி
சரத்து 243(ZG) தேர்தல் தொடர்பான விவகாரங்களில் நீதிமன்றங்கள் தலையிட தடை
சரத்து 243- (ZG)- 243(ZT) Co-operative societies (கூட்டுறவுக் சங்கங்கள்)
சரத்து 244- பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் பகுதி நிர்வாகம்
சரத்து 244 A அசாமிலுள்ள ஒரு சில பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கென ஒரு தன்னிச்சையான தனி உள்ளுர் சட்ட மன்ற அமைப்பு அல்லது அமைச்சரவை குழு அல்லது இரண்டும் சேர்ந்த அமைப்பு ஏற்படுத்துதல்
சரத்து 245- பாரளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்களின் விரிவு
சரத்து 246- பட்டியல் பற்றி கூறுகிறது
சரத்து 247- மத்திய மாநில உறவுகள் தொடர்பாக சில கூடுதல் நீதிமன்றங்களை நிறுவ பாராளுமன்றத்திற்கு அதிகாரம்
சரத்து 248- எஞ்சிய அதிகாரங்கள்
சரத்து 250- நெருக்கடி நிலை அமலில் உள்ள போது மாநில பட்டியலில் சட்டம் இயற்ற பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது
சரத்து 251- விதி 249 மற்றும் விதி 250ன் கீழ் இயற்றப்பட்ட பாராளுமன்ற சட்டங்களுக்கும் மாநில சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டங்களுக்கும் இடையே உள்ள மாறுபட்ட நிலை
சரத்து 252- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் ஒரு சில விவகாரங்களில் சட்டம் இயற்ற பாராளுமன்றத்திற்கு வேண்டுகோள் விடுக்கலாம். மற்ற மாநிலங்களும் இதுபோன்ற விவகாரத்தில் இதனை பின்பற்றலாம்
சரத்து 253- சர்வதேச ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தத சட்டம் இயற்றுதல்.
சரத்து 254- பாரளுமன்ற சட்டங்களும் மாநில சட்டமன்ற சட்டங்களுக்கும் இடையிலான மாறுபட்ட நிலை
சரத்து 255- Requirements as no recommendations and previous sanctions to be regarded as matters of procedure only. கடமைகள் பரிந்துரைகள் முன் ஒப்பளிப்புகள் ஆகியவை குறித்த வேண்டுகோள்கள் நடைமுறை செயல்பாடுகள் மட்டுமே கருதப்படுவது.
சரத்து 256- மத்திய மற்றும் மாநில அரசுகளின் கடமைகள்
சரத்து 257- சில விவகாரங்களில் மத்திய அரசு மாநிலங்களை கட்டுப்படுத்துதல்
சரத்து 258- சில விவகாரங்களில் மாநிலங்களுக்கு அரசுக்கு மத்திய அரசாங்கம் அதிகாரம் அளிப்பது
சரத்து 258A சில நடவடிக்கைகளை மத்திய அரசிடம் ஒப்படைக்க மாநில அரசுகளுக்கு அதிகாரம் உண்டு
சரத்து 259- நீக்கம்
சரத்து 260- இந்தியாவிற்கு வெளியில் உள்ள மத்திய ஆட்சி பகுதிகள் மீதான மத்திய அரசின் அதிகாரங்கள்
சரத்து 261- பொதுச்சட்டங்கள், ஆவணங்கள் மற்றும் நீதிமன்ற செயல்முறைகள்
சரத்து 262- மாநிலங்களுக்கிடையே நதி நீர்ப்பிரச்சினைக்கு தீர்வு காணல்.

சரத்து 263- INTER-STATE COUNCILS மாநில மறுசீரமைப்பு சட்டம் 1956ன்படி அமைத்தல்
சரத்து 264- விளக்கங்கள்
சரத்து 265- சட்டத்திற்கு புறம்பான வகையில் வரிகளை விதிக்கக் கூடாது.
சரத்து 266- Consolidated Funds இந்திய மற்றும் மாநிலங்களின் தொகுப்பு நிதி
சரத்து 267- Contigency fund எதிர்பாராத செலவு நிதி
சரத்து 268- மத்திய அரசால் விதிக்கப்பட்டு மாநில அரசால் வசூலிக்கப்படும் கட்டணங்கள்
சரத்து 268A- சேவை வரி
சரத்து 269- மத்திய அரசால் விதிக்கப்பட்டு மத்திய அரசு வசூலிக்கப்படும் வரிகள் ஆனால் மாநிலத்திற்கு சார்ந்தவை
சரத்து 270- மத்திய மற்றும் மாநிலங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படும் வரிகள்
சரத்து 271- மத்திய அரசின் காரியங்களுக்கு விதிக்கப்படும் சில கட்டணம் மற்றும் வரிகளின் அபாராத தொகை
சரத்து 272- நீக்கம்
சரத்து 273- சணல் மற்றும் சணல் பொருட்களின் மீதான ஏற்றுமதி கட்டணத்திற்கு ஈடாக வழங்கப்படும் ஒதுக்கீடு
சரத்து 274- வரி விதிப்பு தொடர்பான மசோதாக்களை தாக்கல் செய்யும் முன்குடியரசுதலைவரின் முன் அனுமதி பெற வேண்டும்
சரத்து 275- மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்கு மானியம்
சரத்து 276- வியாபாரங்கள் பங்குதொகை மற்றும் வேலைக்கு அமர்த்தல் ஆகியவற்றின் மீதான வரிகள்
சரத்து 277- சேமிப்புகள்
சரத்து 278- நீக்கம்
சரத்து 279- நிகர வருமான கணக்கீடுகள் மற்றும் பல.
சரத்து 280- நிதி ஆணையம்
சரத்து 281- நிதி ஆணையத்தின் பரிந்துரைகள்
சரத்து 282- பொது நலன் கருதி மத்திய அல்லது மாநில அரசால் அதன் வருவாய்க்கும் மேல் செய்யத்தக்க செலவு
சரத்து 283- தொகுப்பு நிதியங்கள் வைப்பு நிதியங்கள் பொதுக்கணக்குகளில் வரவு வைக்கப்பட்ட பணங்கள் ஆகியவற்றினை பராமரிப்பது முதலியன
சரத்து 284- பொதுப்பணியாளர்கள் மற்றும் நீதிமன்றங்களால் பெறப்படும் வைப்புகள் மற்றும் பிற பணங்கள் பராமரிப்பு
சரத்து 285- மத்திய அரசின் சொத்துக்கு மாநில அரசு வரிவிதிப்பிலிருந்து விலக்கு
சரத்து 286- பண்டங்களின் விற்பனை அல்லது வாங்குதலின் மீது வரி விதிப்பது தொடர்பான கட்டுப்பாடுகள்
சரத்து 287- மின்சாரத்தின் மீதான வரிகளுக்கு விலக்கு
சரத்து 288- சில நோ்வுகளின் நீர் அல்லது மின்சாரத்துக்கு மாநிலம்வரி விதிப்பதிலிருந்து விலக்கு
சரத்து 289- ஒரு மாநில சொத்திற்கும் வருவாய்க்கும் மத்திய அரசின் வரி விதிப்பிலிருந்து விலக்கு
சரத்து 290- சில செலவுகள் மற்றும் ஓய்வூதியங்கள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் சரிகட்டுவது
சரத்து 290A சில தேவஸ்தான நிதியங்களுக்கு ஆண்டுமுறை செலுத்துகை.
சரத்து 291- நீக்கம்
சரத்து 292- இந்திய அரசால் வாங்கப்படும் கடன்
சரத்து 293- மாநில அரசுகளால் வாங்கப்படும் கடன்
சரத்து 294- சில நோ்வுகளில் சொத்து, உடைமைகள், உரிமைகள், கடமைப்பொறுப்புகள் ஆகியவற்றுக்கு வாரிசுரிமை
சரத்து 295- பிற நோ்வுகளில் சொத்து, உடைமைகள், உரிமைகள், கடமைப்பொறுப்புகள் ஆகியவற்றுக்கு வாரிசுரிமை
சரத்து 296- வாரிசுரிமை இல்லாதால் அரசுப் பொருளாகவோ உரிமையில்லாப் பொருளாகவோ வந்தடையும் சொத்து
சரத்து 297- இந்திய கடல் எல்லைக்குள் அல்லது கண்டத்திட்டினுள் கிடைக்கும் மதிப்புமிகு பொருட்களும் பொருளாதார மண்டலங்களின் பிரத்தியேக வளங்களும் மத்திய அரசைச் சேரும்
சரத்து 298- வாணிகம் முதலானவற்றைச் செய்ய அதிகாரம்
சரத்து 299- ஒப்பந்தங்கள்
சரத்து 300- உரிமை வழக்குகள் மற்றும் நடவடிக்கைகள்
சரத்து 300A சட்டத்தின் அதிகாரமல்லாமல் எவருடைய சொத்தினையும் பறிக்கப்படுதல் கூடாது

பெரியார் பயிற்சி பட்டறை

சரத்து 301- வர்த்தகம், வாணிகம் அல்லது போக்குவரத்து தொடர்பான சுதந்திரம்
சரத்து 302- வர்த்தகம், வாணிகம் அல்லது போக்குவரத்து தொடர்பான கட்டுப்பாடுகள் விதிக்க பாராளுமன்றத்திற்கு அதிகாரம்
சரத்து 303- வர்த்தகம், வாணிகம் அல்லது போக்குவரத்து தொடர்பான வகையில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் சட்டமியற்றும் வரையறைகள்
சரத்து 304- மாநிலங்களுக்கு இடையே வர்த்தகம், வாணிகம் அல்லது போக்குவரத்து தொடர்பான வரையறைகள். குடியரசு தலைவரின் முன் அனுமதி பெற்ற பின்னரே மாநில சட்டமன்றத்தில் வியாபாரம் மற்றும் வணிக சுதந்திரத்தின் மீது கட்டுப்பாடு விதிக்கும் மசோதாக்களை நிறுத்தி வைக்க அறிவுறுத்தலாம்
சரத்து 305- தற்போதுள்ள சட்டங்களுக்கும் மாநில அரசின் தனிமுழு உரிமைகளுக்கு வகை செய்யும் சட்டங்களுக்கும் காப்புரை.
சரத்து 306- நீக்கம்
சரத்து 307- 301 முதல் 304 வரை உள்ள உறுப்புகளுடைய நோக்கங்களின் நிறைவேற்றத்திற்காக அதிகார நிறுவுதல்
சரத்து 308- விளக்கங்கள்
சரத்து 309- மத்திய அல்லது மாநிலஅரசில் பணிபுரிய ஆள்தேர்வு செய்யப்படுதல் மற்றும் பணிபுரிபவர்களுக்கான நிபந்தனைகள்.
சரத்து 310- மத்திய அல்லது மாநில அரசில் பணிபுரியும் நபர்களின் பதவிக்காலம்
சரத்து 311- மத்திய மற்றும் மாநிலத்தில் ஆட்சித்துறை பணியிலிருந்து நபர்களை வெளியேற்றுதல் நீக்குதல் அல்லது படித்தரத்தைக் குறைத்தல்
சரத்து 312- All India Service ஐ.ஏ.ஸ் மற்றும் ஐ.பி.ஸ் போன்ற இந்திய ஆட்சி பணிகளை உருவாக்க ராஜ்ய சபாவிற்கு மட்டுமே அதிகாரம் உள்ளது.
சரத்து 312A சில பணிகளிலுள்ள அலுவலர்களுக்கான நிபந்தனைகளை மாற்றியமைக்க அல்லது திரும்ப பெற பாராளுமன்றத்திற்கு அதிகாரம்
சரத்து 313- இடைக்கால வரைமுறைகள்
சரத்து 314- நீக்கம்
சரத்து 315- மத்திய மற்றும் மாநிலங்களுக்கான அரசு பணியாளர் தேர்வாணையங்கள்
சரத்து 316- அரசு பணியாளர் தேர்வாணைய உறுப்பினர்கள் நியமனம் மற்றும் பதவிக்காலம்
சரத்து 317- அரசு பணியாளர் தேர்வாணைய உறுப்பினர்
சரத்து 318- அரசு பணியாளர் தேர்வாணைய உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பான கட்டுப்பாடுகள் விதிக்கும் அதிகாரம்
சரத்து 319- அரசு பணியாளர் தேர்வாணைய உறுப்பினர்கள் பதவிக்காலம் முடிந்த பின்னர் வேறு பணிகளுக்கு நியமனம் செய்ய தடை
சரத்து 320- அரசு பணியாளர் தேர்வாணையங்களின் செயல்பாடுகள்
சரத்து 321- அரசு பணியாளர் தேர்வாணையங்களின் செயல்பாடுகள் விரிவாக்க அதிகாரம்
சரத்து 322- அரசு பணியாளர் தேர்வாணையங்களின் செலவுகள்
சரத்து 323- அரசு பணியாளர் தேர்வாணையங்களின் அறிக்கைகள்
சரத்து 323A நிர்வாக தீர்ப்பாயங்கள் **only for public service matters.**
Administrative Tribunals Act 1985
சரத்து 323B பிற விஷயங்கள்
சரத்து 324- தேர்தல் கண்காணிப்பு நெறிப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தும் அதிகாரம் தேர்தல் ஆணையம்
சரத்து 325- எந்த ஒரு நபரும் சமயம், இனம், சாதி மற்றும் பாலினம் ஆகியவற்றை காரணம் காட்டி தன்னை சிறப்பு வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும் எனக் கோர தகுதியுடையவர் அல்லர்
சரத்து 326- மக்களவைக்கும் மாநில சட்டமன்ற பேரவைகளுக்கும் தேர்தல்களை வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் நடத்துதல்
சரத்து 327- சட்டமன்றங்களுக்கு தேர்தல்களைப் பொறுத்தவரை வரைமுறை செய்ய பாராளுமன்றத்திற்கு அதிகாரம்
சரத்து 328- மாநில சட்டமன்ற தேர்தலகளைப் பொறுத்தவரை வரைமுறை செய்ய அந்த சட்டமன்றத்திற்கு அதிகாரம்
சரத்து 329- தேர்தல் செயல்பாடுகளில் நீதிமன்றங்கள் தலையிட தடை

பெரியார் பயிற்சி பட்டறை

சரத்து 330- மக்களவையில் பட்டியல் மரபினர் மற்றும் பழங்குடி மரபினருக்கான இட ஒதுக்கீடு
சரத்து 331- மக்களவையில் ஆங்கிலோ - இந்திய இனத்தவருக்கான பிரதிநிதிகள்
சரத்து 332- மாநில சட்டமன்ற பேரவையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட உறுப்பினர் பதவியிடங்கள்
சரத்து 333- மாநில சட்டமன்ற பேரவையில் ஆங்கிலோ-இந்தியர்களுக்கு ஒதுக்கப்பட்ட உறுப்பினர் பதவியிடம்
சரத்து 334- இட ஒதுக்கீடுகள் மற்றும் சிறப்பு இட ஒதுக்கீடுகள் 60 ஆண்டுகளுக்கு பின்னர் முடிவுக்கு வருதல்
சரத்து 335- பணிகளுக்கும் பணியிட அமைவுகளுக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கோரும் உரிமைகள். நிர்வாகத்தில் திறம்பட செயல்பட பொதுபணிகளில் பணியாட்கள் நியமனம் செய்யும் போது SC/ST யினரை கருத்தில் கொள்ள வேண்டும்
சரத்து 336- ஆங்கிலோ-இந்திய சமுகத்தினருக்கு சில பணிகளில் சிறப்பு வரைமுறைகள்
சரத்து 337- ஆங்கிலோ-இந்திய சமுகத்தினருக்கு கல்வி தொடர்பான மானியங்களுக்கு சிறப்பு வரைமுறைகள்
சரத்து 338- ஆதிதிராவிடருக்கான தேசிய ஆணையம்
சரத்து 338A பழங்குடியினருக்கான தேசிய ஆணையம்
சரத்து 339- ஆதிதிராவிடர் பகுதிகளின் நிர்வாகம் மற்றும் பழங்குடியினர் நலன் ஆகியவற்றின் மீதான மத்திய அரசின் கட்டுப்பாடு
சரத்து 340- பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நிலைகளை ஆராய தேசிய ஆணையம்
சரத்து 341- ஆதிதிராவிடர்
சரத்து 342- பழங்குடியினர்
சரத்து 343- மத்திய அரசின் அலுவல் மொழி
சரத்து 344- அலுவலக மொழிக்கான பாராளுமன்ற மொழி ஆணையமும் மொழிக்குழுவும்
சரத்து 345- அலுவலக மொழி அல்லது மாநிலத்திற்கான மொழிகள்
சரத்து 346- ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்கும் இடையே அல்லது ஒரு மாநிலத்திற்கும் மத்திய அரசுக்கும் இடையே செய்தித் தொடர்புக்கு அலுவல் மொழிகள்
சரத்து 347- ஒரு மாநிலத்தின் மக்கள் தொகையினருள் ஒரு பகுதியினரால் பேசப்படும் மொழி தொடர்பான வரை முறைகள். ஒரு மாநிலத்தின் குறிப்பிடத்தக்க அளவு மக்கள் தொகை உள்ள பகுதியில் பேசப்படும் மொழிக்கு குடியரசுத் தலைவர் அங்கீகாரம் அளிக்கலாம்
சரத்து 348- உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம், சட்டங்கள் மற்றும் மசோதாக்கள் ஆகியவற்றில் பயன்படுத்த வேண்டிய மொழி.
சரத்து 349- மொழி தொடர்பான சில சட்டங்களை சட்டமாக்குவதற்கு நடைமுறை
சரத்து 350- எந்த ஒரு நபரும் தனது குறையை தெரிவிக்க அவர் தாய்மொழியில் ஒரு பிரதியை அமைத்துக் கொள்ளலாம்
சரத்து 350A சிறுபான்மையினர் இன குழந்தைகளின் தொடக்க கல்வியை அவரவர் தாய்மொழி வழி கற்க மாநில அரசும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கடமையாகும்
சரத்து 351- இந்திய மக்களிடையே இந்தி மொழியை பரப்புவது மத்திய அரசின் கடமை
சரத்து 352- அவசர நிலை பிரகடனம் (தேசிய)
சரத்து 353- அவசர நிலை பிரகடனம் அமலுக்க வருதல்
சரத்து 354- அவசர நிலை பிரகடனம் அமலில் உள்ள போது வருவாய்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான வழிமுறைகள்
சரத்து 355- வெளிநாட்டு ஆக்கிரமிப்பு மற்றும் உள்நாட்டு குழப்பம் ஆகியவற்றுக்கு எதிராக மாநிலங்களுக்கு பாதுகாப்பு அளிப்பது மத்திய அரசின் கடமை
சரத்து 356- மாநில அவசர நிலை
சரத்து 357- சரத்து 356ன் கீழ் அறிவிக்கப்பட்ட மாநிலஅவசர நிலையின் போது சட்டமியற்றும் அதிகாரங்களை செயல்படுத்தல்
சரத்து 358- நெருக்கடி நிலைகளின் போது சரத்து 19ன் கீழ் கூறப்பட்ட உரிமைகள் தற்காலிகமாக நிறுத்தம்
சரத்து 359- நெருக்கடி நிலைகளின் போது பகுதி 3ல் கூறப்பட்ட அடிப்படை உரிமைகள் தற்காலிகமாக நிறுத்தம்
சரத்து 360- நிதி நெருக்கடி
சரத்து 361- குடியரசுத்தலைவர், ஆளுநர்கள் மற்றும் இராஜபிரமுகர்கள் ஆகியோருக்கு காப்பு
சரத்து 361A நாடாளுமன்றம், மாநில சட்டமன்றங்களின் நடவடிக்கைகளின் வெளியீட்டுக்குக் காப்பளிப்பு
சரத்து 362- நீக்கம்
சரத்து 363- சில உடன்படிக்கைகள் உடன்பாடுகள் முதலியனவற்றினின்றும் எழும் சச்சரவுகளின் நீதிமன்றங்கள்

தலையிட தடை.

சரத்து 363A இந்திய குறுநில அரசர்களுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் முடிவு மற்றும் மன்னர் மானியம் ஒழிப்பு

சரத்து 364- பெரிய துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் குறித்த சிறப்பு வகைவகைகள்

சரத்து 365- மத்திய அரசு வகுக்கும் ஆணைகளை மாநில அரசு நிறைவேற்ற தவறுவதால் ஏற்படும் விளைவு

சரத்து 366- பொருள் வரையறைகள்

சரத்து 367- விளக்கங்கள்

சரத்து 368- அரசியலமைப்பு சட்டத்தை திருத்தவும் அதற்கான நடைமுறைகளைவகுக்கவும் நாடாளுமன்றத்திற்கு அதிகாரம்

சரத்து 369- மாநில பட்டியலிலுள்ள சில விஷயங்களைப் பொருத்தவரை அவை பொது பட்டியலில் உள்ள விஷயங்களாக இருந்து போலாவே சட்டங்களை இயற்ற நாடாளுமன்றத்திற்கு தற்காலிக அதிகாரம்

சரத்து 370- ஜம்மு காஷ்மீர் சிறப்பு அதிகாரம்

சரத்து 371- மகாராஷ்டிரம் மற்றும் குஜராத்திற்கு சிறப்பு வழிவகைகள்

சரத்து 371A நாகாலாந்து மாநிலத்திற்கான சிறப்பு வழிவகைகள்

சரத்து 371B அசாம் மாநிலத்திற்கான சிறப்பு வழிவகைகள்

சரத்து 371C மணிப்பூர் மாநிலத்திற்கான சிறப்பு வழிவகைகள்

சரத்து 371D ஆந்திர மாநிலத்திற்கான சிறப்பு வழிவகைகள்

சரத்து 371E ஆந்திர மாநிலத்திற்கு மத்திய பல்கலைக்கழகம் அமைத்தல்

சரத்து 371F சிக்கிம் மாநிலத்திற்கு சிறப்பு வழிவகைகள்

சரத்து 371G மிசோரம் மாநிலத்திற்கு சிறப்பு வழிவகைகள்

சரத்து 371H அருணாச்சல பிரதேச மாநிலத்திற்கான சிறப்பு வழிவகைகள்

சரத்து 371I கோவா மாநிலத்திற்கான சிறப்பு வழிவகைகள்

சரத்து 372- தற்போது நிலவிவரும் சட்டங்கள் தொடர்தல் மற்றும் அவற்றின் தழுவமைவு

சரத்து 373- சில நேர்வுகளில் தடுப்புக்காவலில் உள்ளவர்களைப் பொருத்தவரை ஆணையிடுவதற்கு குடியரசுத்தலைவரின் அதிகாரம்

சரத்து 374- Provisions as to judges of the federal court and proceeding pending in the federal court or before his majesty in council

சரத்து 375- நீதிமன்றங்களும் அதிகார அமைப்புகளும் அலுவலர்களும் அரசமைப்பு வகைமுறைகளுக்கு உட்பட்டு தொடர்ந்து அலுவலக பணியாற்றுதல்

சரத்து 376- உயர்நீதிமன்ற நீதிபதிகள் குறித்த வரைமுறைகள்

சரத்து 377- இந்திய தலைமை கணக்காய்வர் குறித்த வரைமுறைகள்

சரத்து 378- அரசுப்பணியாளர் தேர்வாணையர்கள் குறித்த வரைமுறைகள்

சரத்து 378A ஆந்திர பிரதேச சட்டமன்ற பேரவையின் காலவரை குறித்த வரைமுறைகள்

சரத்து 379 லிருந்து 391 வரை நீக்கம்

சரத்து 392- இடர்பாடுகளை நீக்குவதற்கு குடியரசுத்தலைவரின் அதிகாரம்

சரத்து 393- குறு தலைப்பு

சரத்து 394- தொடக்கம்

சரத்து 394A இந்தி மொழியில் உள்ள அதிகார உரிமைப்படியான வாசகம்

சரத்து 395- நீக்கம்

பெரியார் பயிற்சி பட்டறை

சட்ட திருத்தங்கள்

திருத்தம்	ஆண்டு	விவரங்கள்
1	1951	ஜமின்தாரி ஒழிப்பு, நில உச்சவரம்பு சட்டம். 9வது அட்டவணை சேர்ககப்பட்டது வெளிநாடுகளுடன் பேச்சுரிமை, கருத்துப் பரிமாற்றம் மற்றும் எந்தப் பணியும் மேற்கொள்வது போன்றவற்றிற்கு கட்டுப்பாடுகள் விதிக்க அரசுக்கு அனுமதி
2	1952	மக்கள் தொகை கணக்கீட்டை அடிப்படையாக கொண்டு மாநிலங்களின் பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை
3	1954	பருத்தி சணல் மற்றும் கால்நடை தீவனம் போன்றவற்றை மத்திய அரசு கொள்முதல் செய்யும் பட்டியலில் சேர்க்கப்பட்டது. பொது பட்டியலில் உள்ள 7வது அட்டவணையில் 33வது பிரிவை சரத்து 369க்கு மாற்றம் செய்யப்பட்டது
4	1955	பொது நலத்திற்கு எந்த நிலத்தையும் அரசு எடுத்துக்கொள்ளும்
5	1955	மத்திய அரசின் சட்டங்களை மாநில அரசின் பகுதிகளையோ அல்லது எல்லைகளையோ பாதிக்கும் வகையில் அமையும்போது சம்மந்தப்பட்ட மாநில அரசுகள் தங்களது கருத்துகளை தெரிவிக்க கால அவகாசம் ஒதுக்க குடியரசு தலைவருக்கு அதிகாரம் உண்டு
6	1956	மாநிலங்களுக்கிடையே பொருட்கள் விற்பனை செய்யும் போது அதன் மீதான வரியானது பொது பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது
7	1956	மொழிவாரி மாநிலங்கள் உருவாக்க இத்திருத்தம் வகை செய்தது (6 யுனியன் மற்றும் 14 மாநிலங்கள்) ஒரே நபர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் ஆளுநராக இருக்கலாம்
8	1959	SC/ST பிரிவினருக்கு சிறப்பு ஒதுக்கீட்டு சலுகைகள் மற்றும் லோக்சபை மற்றும் மாநில சட்டமன்ற கீழவை ஆகியவற்றில் ஆங்கிலோ இந்தியருக்கான நியமனங்கள் மேலும் பத்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. (1960-1970)
9	1960	இந்திய-பாகிஸ்தான் இடையில் சில குறிப்பிட்ட பகுதிகள் மாற்றியமைக்கும் அமைப்புகள் சம்மந்தமான ஒப்பந்தங்கள்.
10	1961	தாத்ரா நாகர்வேலி யூனியன் பிரதேசம் இணைப்பு
11	1961	துணை குடியரசு தலைவர் வாக்காளர் கல்லூரி
12	1962	கோவா, டையு, டாமன் இந்தியாவில் இணைப்பு
13	1962	நாகலாந்து இந்தியாவின் 16 மாநிலமாக்கியது
14	1962	பாராளுமன்றத்திற்கு மத்திய ஆட்சிப் பகுதியில் சட்டசபையில் உருவாக்க சட்ட அதிகாரம் வழங்கப்பட்டது. பாண்டிசேரி மத்திய ஆட்சிபகுதியானது
15	1963	உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயது அதிகரிப்பு. சரத்து 226ன் படி உயர்நீதிமன்றம் நீதிப்பேராணைகளை வழங்க கூடுதல் அதிகாரம்
16	1963	தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்த அடிப்படை உரிமைகள் மீது சட்டமியற்ற அரசுக்கு அதிகாரம்

பெரியார் பயிற்சி பட்டறை

17	1964	தனிநபரின் உரிமையில் அடிப்படையில் இருக்கும் சொத்துக்கள் மாநில அரசால் எடுத்துக்கொள்ளப்படும்போது அதற்கான ஈட்டுத்தொகை சந்தை விலையின்படி தனிநபருக்கு கொடுக்கப்படவேண்டும்
18	1966	பஞ்சாபி மொழிபேசும் பகுதி பஞ்சாப் என்றும் இந்திமொழி பேசும் பகுதி ஹரியான என்றும் பஞ்சாப் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஸ்டேட் என்று குறிப்படும் போது அது மாநிலம் மற்றும் மத்திய ஆட்சிப் பகுதி இரண்டையும் குறிக்கும்
19	1966	தேர்தல் கமிஷன் பணிகள் தெளிவாக்கப்பட்டன
20	1966	முறையற்ற வகையில் நியமிக்கப்பட்ட மாவட்ட நீதிபதிகளின் சிலரின் நியமனத்தை முறைபடுத்தியது
21	1967	சிந்தி மொழி எட்டாவது அட்டவணையில் 15வது மொழியாக சேர்க்கப்பட்டது
22	1969	அஸ்சாம் மாநிலத்திற்குள் மேகலாயா என்ற மாநிலத்ததை அமைக்க பாராளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது
23	1969	SC/ST பிரிவினருக்கு சிறப்பு ஒதுக்கீட்டு சலுகைகள் மற்றும் லோக்சபை மற்றும் மாநில சட்டமன்ற கீழவை ஆகியவற்றின் ஆங்கிலோ இந்தியருக்கான நியமனங்கள் மேலும் பத்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
24	1971	அரசியலமைப்புச் எந்த பகுதியையும் திருத்தவும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது
25	1971	வங்கி தேசியமயமாக்கல் வழக்கில் சரத்து 31ல் compensation என்ற வார்த்தைக்கு பதிலாக அமௌன்ட் என வார்த்தை சேர்க்கப்பட்டது
26	1971	மன்னர் மான்யம் ஒழிக்கப்பட்டது
27	1971	மிசோரம் மற்றும் அருணாச்சலப்பிரதேசம் தனி மத்திய ஆட்சிப் பகுதிகளாக உருவாக்கப்பட்டது
28	1972	இந்தியன் சிவில் சர்வீஸ் உறுப்பினர்கள் விடுப்பு ஓய்வு ஊதியம் போன்ற சலுகைகள் நீக்கப்பட்டது
29	1972	9வது அட்டவணையில் திருத்தம் செய்யப்பட்டு நிலசீர்திருத்தங்கள் மீதான இரண்டு கேரள சட்டங்கள் சேர்க்கப்பட்டது
30	1972	உச்சநீதிமன்றத்திற்கு மேல்முறையீட்டு செய்யும் தகுதி வரையறுக்கப்பட்டது
31	1973	பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 525யிலிருந்து 545ஆக உயர்த்தப்பட்டது மத்திய ஆட்சிப் பகுதி பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 25யிலிருந்து 20 ஆக குறைக்கப்பட்டது
32	1973	ஆந்திராவில் 6 அம்ச திட்டம் செயல்படுத்தப்பட்டது ஆந்திராவில் மத்திய பல்கலைக்கழகம் நிறுவ பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது
33	1974	பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் ராஜினாமா செய்யும் முறைப்பற்றி விளக்குகிறது

34	1974	பல்வேறு மாநிலங்களில் இயற்றப்பட்ட 20 நிலச்சீர்திருத்த சட்டங்கள் 9வது அட்டவணையில் சேர்க்கப்பட்டன.
35	1974	சிக்கிம் இந்தியாவின் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டது
36	1975	சிக்கிம் இந்தியாவின் 22வது மாநிலமாக அங்கீரிக்கப்பட்டது
37	1975	அருணாச்சலபிரதேசத்தில் தனியாக சட்டமன்ற கீழவை மற்றும் மேலவை உருவாக்க வகை செய்யப்பட்டத
38	1975	சரத்து 113,213,289,352,356, 360 திருத்தப்பட்டன. குடியரசுத் தலைவர் அவசரகால சட்டம் மற்றும் அவசரநிலை பிரகடனம் நீதிமன்றங்களின் விசாரணைக்கு அப்பாற்பட்டது என அறிவிக்கப்பட்டடது
39	1975	குடியரசுத் தலைவர், துணைக்குடியரசுத் தலைவர், பிரதமர், சபாநாயகரின் தேர்வு நீதிமன்றத்திற்கு அப்பாற்பட்டது

40	1976	இந்திய கடல் எல்லையில் உள்ள அனைத்து நிலம் மற்றும் தாதுக்கள் மத்திய அரசிற்கு சொந்தம்
41	1976	மாநில தேர்வாணையக்குழு உறுப்பினர்களின் உச்ச வயது 60லிருந்து 62 ஆக மாற்றப்பட்டது
42	1976	குட்டி அரசியலமைப்பு மக்களவையின் பதவி காலம் 5 ஆண்டிலிருந்து 6 ஆண்டாக உயர்த்தப்பட்டது. மாநில பட்டியலிருந்து காடுகள், மக்கள் தொகை கல்வி போன்ற துறைகள் பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளன.
43	1977	மத்திய மாநிலத்தில் உண்டாகும் எந்த சட்டத்தை குறித்தும் விசாரிக்கும் உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. தேச விரோத சக்திகளுக்கு எதிராக பாராளுமன்றம் சில சட்டங்களை பிறப்பிக்கவும் உரிமை வழங்கப்பட்டது
44	1978	மக்களவை காலம் 5 ஆண்டிலிருந்து 6ஆண்டாக உயர்த்தியது நீக்கம் செய்யப்பட்டது
45	1980	SC/ST பிரிவினருக்கு சிறப்பு ஒதுக்கீட்டு சலுகைகள் மற்றும் லோக்சபை மற்றும் மாநில சட்டமன்ற கீழவை ஆகியவற்றின் ஆங்கிலோ இந்தியருக்கான நியமனங்கள் மேலும் பத்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
46	1982	மாநிலங்களுக்கு இடையே நடக்கும் வியாபாரத்தில் கிடைக்கும் வரிபணம், அந்தந்தமாநிலங்களுக்கே கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது
47	1984	14 நிலச் சீர்திருத்தம் சட்டங்கள் 9வது அட்டவணையில் சேர்ககப்பட்டுள்ளன.
48	1984	சரத்து 356ன் படி குடியரசுத் தலைவர் ஆட்சி ஒரு மாநிலத்தில் ஒரு வருடத்திற்கு மேல் நீடிக்க முடியாது
49	1984	6வது அட்டவணையில் கூறப்பட்டவை திரிபுரா பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கும் பொருந்தும்
50	1984	சரத்து 33ல் ஆயுதமேன்றி பணிபுரியவோர்க்கு பகுதி 3ல் சொல்லப்பட்ட அடிப்படை உரிமைகளை குறைக்கவோ அல்லது நீக்கவோ பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது
51	1984	பிரிவு 330,332 அஸ்ஸாம், நாகாலாந்து, மேகலாயா, அருணாசலப் பிரதேசம், மிசோரம் ஆகிய மாநிலங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் பழங்குடியினருக்கு பாராளுமன்ற சட்டமன்ற தொகுதிகளில் அதிகாரம் வழங்கப்பட்டது
52	1985	கட்சி தாவல் தடைச் சட்டம்
53	1986	மிசோரம் முழு மாநில அந்தஸ்து பெற்றது
54	1986	உச்ச நீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் சம்பள நிர்ணய திருத்தம்
55	1986	அருணாச்சலபிரதேசம் முழு மாநில அந்தஸ்து பெற்றது
56	1987	கோவா முழு மாநில அந்தஸ்து பெறவகை செய்கிறது
57	1987	சரத்து 332ல் திருத்தம் செய்யப்பட்டு அருணாச்சலப் பிரதேசம், நாகலாந்து, மிசோரம், மற்றும் மேகாலாய மாநிலங்களில் உள்ள பழங்குடியினருக்கு சிறப்பு சலுகைகள்.
58	1987	அரசியலமைப்பு அதிகாரப்புர்வ ஹிந்தி மொழியைபெயர்ப்பை வெளியிட குடியரசுத்தலைவருக்கு அதிகாரம் அளிக்கிறது
59	1988	பஞ்சாப் மாநிலத்தின் மீது நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்த அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது
60	1988	மாநில அரசுக்கு தொழில் வரி உச்சவரம்பை ஒரு நபருக்கு ஒரு ஆண்டுக்கு ருபாய் 250லிருந்து 2500 உயர்த்த அதிகாரம்
61	1989	வாக்களிக்கும் வயது 21லிருந்து 18ஆக குறைக்கப்பட்டது

62	1989	SC/ST பிரிவினருக்கு சிறப்பு ஒதுக்கீட்டு சலுகைகள் மற்றும் லோக்சபை மற்றும் மாநில சட்டமன்ற கீழவை ஆகியவற்றின் ஆங்கிலோ இந்தியருக்கான நியமனங்கள் மேலும் பத்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
63	1989	59வது சட்டதிருத்தத்தின்படி பஞ்சாப் மாநிலத்தின் மீது சுமத்தப்பட்ட அவசரநிலை நீக்கப்பட்டது
64	1990	குடியரசுத் தவைர் ஆட்சி பஞ்சாப் மாநிலத்தில் 3 ½ ஆண்டுகளுக்கு மேல் நீடிக்கக்கூடாது
65	1990	பட்டியல் மற்றும் பழங்குடியினர் தேசியக் குழு அமைக்கப்பட்டடது
66	1990	நிலச் சீர்திருத்தம் சட்டங்கள் அரசியலமைப்பின் 9வது அட்டவணையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன, இதனால் இச்சட்டங்களை பரிசீலிக்கும் உரிமையை நீதிமன்றங்கள் இழக்கின்றன
67	1990	குடியரசுத் தலைவர் ஆட்சி பஞ்சாப் மாநிலத்தில் 4 ஆண்டுகளுக்கு மேல் நீடிக்க பட கூடாது
68	1991	குடியரசுத் தலைவர் ஆட்சி பஞ்சாப் மாநிலத்தில் 5 ஆண்டுகளுக்கு மேல் நீடிக்க பட கூடாது
69	1991	டெல்லியை தேசிய தலைநகர் ஆட்சிப் பகுதியாக அறிவித்தது
70	1992	சரத்து 54,55ல், ஸ்டேட் என்பதில் தேசிய தலைநகர் பகுதி மற்றும் பாண்டிசேரி யூனியன் பிரதேசம் ஆகியவை அடங்கும்
71	1992	கொங்கனி, மணிப்பூரி, நேபாளி, மொழிகளை தேசிய மொழியாக அறிவித்துள்ளது

.

72	1992	பழங்குடியினர் மற்றும் மலைசாதியினரின் எண்ணிக்கையின் அடிப்படையில் பஞ்சாயத்து தேர்தல் ரிசர்வ் தொகுதி ஒதுக்குவது பெண்களுக்கு தனிதொகுதி குறித்து
73	1992	பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் பற்றி கூறுவது
74	1992	நகராட்சி அமைப்புகள் பற்றி கூறுவது
75	1994	வீட்டுவாடகை சம்மந்தப்பட்ட பிரச்சனைகளை தீர்க்க தீர்ப்பாயங்களை அமைத்தல்
76	1994	தமிழ்நாட்டில் பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பழங்குடியினர்களுக்கு 69 சதவீதம் இடஒதுக்கீடு அளிப்பது
77	1995	SC/ST பிரிவினருக்கு மேம்படுத்த மாநில பணியிடங்களில் சாதகமான இட ஒதுக்கீடு
78	1995	9வது அட்டவணையில் 27 நிலச்சீர்திருத்த சட்டங்கள் சேர்க்கப்பட்டன
79	1999	SC/ST பிரிவினருக்கு சிறப்பு ஒதுக்கீட்டு சலுகைகள் மற்றும் லோக்சபை மற்றும் மாநில சட்டமன்ற கீழவை ஆகியவற்றின் ஆங்கிலோ இந்தியருக்கான நியமனங்கள் மேலும் பத்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
80	2000	மைய மாநில அரசுகளுக்கிடையே வரிகளை பகிர்வது தொடர்பாக
81	2000	SC/ST பிரிவினர் பற்றியது
82	2000	சரத்து 335 படி SC/ST பிரிவினருக்கு குறைந்தபட்ச மதிப்பெண் தளர்த்தல்
84	2000	சத்தீஸ்கர், உத்தராஞ்சல், ஜார்கண்ட, மாநிலங்கள் உருவாக்கம்
86	2002	நாடு முழுவதும் உள்ள 6வயது முதல்14 வயது வரை உள்ள அனைவருக்கும்

பெரியார் பயிற்சி பட்டறை

		கட்டாயக்கல்வி
87	2003	சரத்து 81,82,170, 330 ல் தொடர்புள்ள 1991 மக்கள் தொகை புள்ளிவிவரங்களுக்கு பதிலாக 2001 மக்கள் தொகை புள்ளிவிவரங்கள் சேர்க்கப்பட்டன
88	2003	பழங்குடியினருக்கென தனி தேசிய ஆணையம் அமைக்கப்பட்டது.
89	2003	சரத்து 268A சேர்க்கப்பட்டது (சேவை வரி)
90	2003	கட்சி தாவல் தடைசட்டம் மேலும் வலுஊட்டுவதற்கு மாநிலங்கள் மற்றும் பாராளுமன்ற அமைச்சரவையின் எண்ணிக்கையை 10 சதவீதம் குறைக்கவும் வழிசெய்கிறது
91	2003	அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை மத்திய மறறும் மாநில அரசுகளில் 15 சதவீதத்திற்கு மேல் இருக்கக் கூடாது
92	2004	அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் போடோ, டோங்கிரி, மைதிலி, சாந்தலி, ஆகிய மொழிகள் சேர்க்கப்பட்டன
93	2006	SC, ST, OBC வகுப்பினருக்கு உயர்கல்வி அளிக்க வகை செய்கிறது

94	2006	புதியதாக உருவாக்கப்பட்ட ஜார்கண்ட் மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களுக்கு பழங்குடியினர் நல அமைச்சர் ஒருவர் நியமானம்
95	2010	SC/ST பிரிவினருக்கு சிறப்பு ஒதுக்கீட்டு சலுகைகள் மற்றும் லோக்சபை மற்றும் மாநில சட்டமன்ற கீழவை ஆகியவற்றின் ஆங்கிலோ இந்தியருக்கான நியமனங்கள் மேலும் பத்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
96	2011	ஓடியா மொழியானது ஒரியா என மாற்றப்பட்டுள்ளது
97	2012	கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க வழிவகை செய்கிறது
98	2013	கர்நாடக மாநில ஆளுநருக்கு ஹைதராபாத் மற்றும் கர்நாடக மாநில பகுதிகளில் வளர்ச்சி பணிகளை மேற்கொள்ள அனுமதி அளித்தல். (சரத்து 371J சேர்ப்பு)
99	2015	நீதிபதிகள் தேர்வாணையம் அமைக்க வழிவகுக்கிறது. (National judicial appointment commission)
100	2015	வங்தேசத்துடன் எல்லை மறுவரையறை செய்ய வழிவகுக்கிறது
101	2017	**சரக்கு மற்றும் சேவை** வரி 2017 ஜூலை 1ல் அறிமுகம். (Goods and Service Tax)

பெரியார் பயிற்சி பட்டறை

இந்திய அரசியலமைப்பின் அட்டவணைகள்

வ.எண்	அட்டவணை	விவரங்கள்
1.	முதலாவது அட்டவணை	மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் விவரம் மற்றும் அவற்றின் எல்லை பட்டியலை கொண்டுள்ளது.
2.	இரண்டாவது அட்டவணை	குடியரசுத் தலைவர், மாநில ஆளுநர்கள், லோக்சபா, ராஜ்யசபா சபாநாயகர்மற்றும் துணைத் தலைவர், மாநில சட்டமன்ற சபாநாயகர் மற்றும துணைத் தலைவர், உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரது சிறப்பு உரிமைகள் மற்றும் ஊதிய படிகள் விவரங்களை கொண்டுள்ளது.
3.	மூன்றாவது அட்டவணை	பதவி பிரமாணம் மற்றும் உறுதிமொழிகள்
4.	நான்காவது அட்டவணை	மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் மாநிலங்களவையில் (ராஜ்யசபா சபா) எண்ணிக்கை
5.	ஐந்தாவது அட்டவணை	தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரின் நிர்வாகம் மற்றும் கட்டுப்பாடு விதிகளை கொண்டுள்ளது.
6.	ஆறாவது அட்டவணை	அசாம் மேகலாய, திரிபுரா மற்றும் மிசோரம் மாநிலங்களில் உள்ள பழங்குடியினர் பகுதிகளின் நிர்வாக விதிகளை கொண்டுள்ளது.
7.	ஏழாவது அட்டவணை	மத்திய, மாநில அரசு அதிகார பட்டியல் மற்றும் பொது பட்டியலை கொண்டுள்ளது.
8.	எட்டவாது அட்டவணை	அங்கீகரிக்கப்பட்ட அலுவலக மொழிகளின் பட்டியலை கொண்டுள்ளது.
9.	ஒன்பாதவது அட்டவணை	நில சீர்திருத்தம் மற்றும ஜாமீன்தாரி ஒழிப்பு சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறையின் விதிகளை கொண்டுள்ளது.
10.	பத்தாவது அட்டவணை	கட்சி தாவல் மற்றும் தகுதியிழப்ப போன்ற விதிகளை கொண்டுள்ளது.
11	பதினோராவது அட்டவனை	பஞ்சாயத்துகளின் அதிகாரம் மற்றும் பொறுப்புகளை உள்ளடக்கியது.
12	பனிரெண்டாவது அட்டவணை	நகராட்சிகளின் அதிகாரம் மற்றும் பொறுப்புகளை உள்ளடக்கியது.

இந்திய அரசியலமைப்பின் பகுதிகள்

பகுதி	விவரங்கள்	சரத்துகள்
I	இந்திய ஒன்றியம் மற்றும் அதன் மாநிலங்கள்	1 லிருந்து 4 வரை
I I	குடியுரிமை	5 லிருந்து 11 வரை
I I I	அடிப்படை உரிமைகள்	12 லிருந்து 35 வரை
IV	அரசு நெறிமுறைப்படுத்தும் கோட்பாடு	36 லிருந்து 51 வரை
IV-A	அடிப்படை கடமைகள்	51– **A** (42 வது சட்டத்திருத்தம் மூலம் 1976ல் சேர்க்கப்பட்டது)
V	மத்திய அரசு	52 லிருந்து 151 வரை
VI	மாநில அரசு	152 லிருந்து 237வரை
VII	நீக்கப்பட்டது	7வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் மூலம் 1956 ல் நீக்கப்பட்டது
VIII	யூனியன் பிரதேசங்கள்	239 லிருந்து 242
IX	பஞ்சாயத்துராஜ்	243 லிருந்து 243– **O**
IX-A	நகராட்சிகள்	243 –**P** லிருந்து 243-ZG
IX-B	கூட்டுறவு சங்கங்கள்	243 – ZH லிருந்து 243-ZT
X	பட்டியல் மற்றும் பழங்குடியினர் பகுதிகள்	244 லிருந்து 244– **A**
XI	மத்திய மாநில அரசுகளின் உறவுகள்	245 லிருந்து 263

XII	நிதி மற்றும் சொத்து தொடர்பான ஒப்பந்தங்கள்	264 லிருந்து 300– **A**
XIII	வாணிபம் , வியாபாரம் மற்றும் இந்திய பிரதேசங்களுக்குள் நடக்கும் பரிமாற்றம்.	301 லிருந்து 307 வரை
XIV	மத்திய மாநில அரசுகளின் கீழ் பணிகள்	308 லிருந்து 314
XIV- A	தீர்ப்பாயங்கள்	323– **A** லிருந்து 323– **B**
XV	தேர்தல்கள்	324 லிருந்து 329– **A**
XVI	தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆங்கிலோ இந்தியர்கள் போன்ற சில பிரிவினருக்கான சிறப்பு விதிகள்	330 லிருந்து 342
XVII	அலுவலக மொழி	343 லிருந்து 351
XVIII	நெருக்கடிகால நிலைகள்	352 லிருந்து 360 வரை
XIX	மற்றவை	361 லிருந்து 367
XX	அரசியலமைப்பு திருத்தங்கள்	368
XXI	தற்காலிக மாற்றக்கூடிய மற்றும் சிறப்பு விதிகள்	369 லிருந்து 392
XXII	குறுகிய பட்டம் , தொடக்கம் இந்தியில் உள்ள அதிகாரமளிக்கும் மூல வாக்கியம் மற்றும் நீக்கப்பட்டவை	393 லிருந்து 395

Padasalai.Net

பெரியார் பயிற்சி பட்டறை
Padasalai.Net